தமிழ் மொழிபெயர்ப்புகள்:

மலையாளத்திலிருந்து தமிழுக்குச் செய்யப்பட்ட மொழிபெயர்ப்புகள் பற்றிய சிறப்பாய்வு

TAMIL TRANSLATIONS:

STUDY WITH SPECIAL REFERENCE TO WORKS FROM MALAYALAM

தே. தேவதாஸ்

D. DEVADAS

ஆய்வு நெறியாளர்

பேராசிரியர் டாக்டர் கி. நாச்சிமுத்து, எம்.ஏ., பிஎச்.டி.
தமிழ்த்துறை, காரியவட்டம்

SUPERVISING TEACHER

Prof. Dr.K. NACHIMUTHU, M.A., Ph.D.,
DEPARTMENT OF TAMIL, KARYAVATTOM

கேரளப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையின் வழி

பிஎச்.டி. பட்டத்திற்காக அளிக்கப்பட்ட ஆய்வேடு, ஜூலை 1993

THESIS SUBMITTED FOR THE DEGREE OF DOCTOR OF PHILOSOPHY
THROUGH THE DEPARTMENT OF TAMIL, UNIVERSITY OF KERALA

KARYAVATTOM, JULY. 1993

DR. K. NACHIMUTHU, M.A., Ph.D.
Professor.

Department of Tamil,
University of Kerala,
Karyavattom,
Thiruvananthapuram 695 581.

CERTIFICATE

This is to certify that the thesis entitled "Tamil Translations: Study with Special Reference to Works from Malayalam" herewith submitted by Mr. D. Devadas, for his Ph.D., degree is an authentic record of research carried out by him under my supervision and guidance in the Department of Tamil, University of Kerala, Karyavattom and that the Thesis has not previously formed the basis for the award of any Degree, Diploma, Associateship, Fellowship or other similar title. The thesis represents entirely an independent work on the part of the candidate but for the general guidance offered by me.

K Nachimuthu

Karyavattom,
22.07.1993

(DR. K. NACHIMUTHU)
SUPERVISING TEACHER

D. DEVADAS,
Research Scholar,
Department of Tamil,
University of Kerala
Karyavattom,
Thiruvananthapuram 695 581

DECLARATION

I hereby declare that this thesis "Tamil Translations: Study with Special Reference to Works from Malayalam" has not previously formed the basis for the award of any Degree, Diploma, Associateship, Fellowship or other similar title or recognition.

Devadas
(D. DEVADAS)

Karyavattom
22.07.1993

நன்றியுரை

"தமிழ் மொழிபெயர்ப்புகள்: மலையாளத்திலிருந்து தமிழுக்குச் செய்யப்பட்ட மொழிபெயர்ப்புகள் பற்றிய சிறப்பாய்வு" என்ற தலைப்பில் நான் மேற்கொண்ட இவ்வாய்வுக்கு மேற்பார்வையாளராயிருந்து பல்லாற்றானும் எனக்கு அறிவுரை வழங்கி நெறிப்படுத்தியும் ஆய்வுக்கான நூல்கள் பலவற்றை வழங்கியும் உதவிய மதிப்பிற்கும் வணக்கத்திற்கும் உரிய பேராசிரியர் பெருந்தகை டாக்டர் சி. நாச்சிமுத்து, எம்.ஏ., பி எச்.டி. அவர்களுக்கு முதற்கண் என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கேரளப்பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் தலைவர் டாக்டர் இல. குளோறியா சுந்தரமதி எம்.ஏ., பிஎச்.டி. அவர்களுக்கும் நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். நான் இவ்வாய்வுக்காக தமிழ்த்துறையில் சேர்ந்த காலத்தில் துறையின் தலைமைப்பொறுப்பில் இருந்தவரும், தற்போது வார்சா பல்கலைக்கழகத்தில் (போலந்து) சிறப்புப்பேராசிரியராகப் பணிபுரிபவருமான டாக்டர் க. சுப்பிரமணியம் எம்.ஏ., பிஎச்.டி. அவர்களுக்கும் என் நன்றி உரியது.

துறையில் நடைபெற்ற கலந்தாய்வரங்குகளில் நான் ஆய்வுக்கட்டுரைகளையும், நூல்களின் மதிப்புரைகளையும் வழங்கியபோது அவைகுறித்த திறனாய்வுக் கருத்துக்களைக் கூறி ஆய்வைச் செம்மையாகச் செய்யத் தூண்டியவர்களில் என்னுடைய ஆய்வு நெறியாளர் டாக்டர் சி. நாச்சிமுத்து அவர்களும், துறைத்தலைவர் டாக்டர் இல. குளோறிய சுந்தரமதி அவர்களும் பெரும்பங்கு வகித்துள்ளனர். அன்னார்களுக்கு மீண்டும் என் நன்றியைக் கூறிக்கொள்வதோடு மேலும் அப்பணியைச் செம்மையுறச் செய்த தமிழ்த்துறைப்பேராசிரியர்களான டாக்டர் சி. சுப்பிரமணிய பிள்ளை, எம்.ஏ.,பி எச்.டி., டாக்டர் பி. நசீமுதீன் எம்.ஏ., பிஎச்.டி. ஆகியவர்களுக்கும் என்னுடன் ஆய்வு செய்துவரும் ஆய்வாளர்களுக்கும் நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளேன்.

இவ்வாய்வை மேற்கொள்ளும் நோக்கில் எனக்கு மொழியியலைக் கற்பித்த மொழியியல்துறைப் பேராசிரியர்களான டாக்டர் வி.ஆர். பிரபோதசந்திரன் நாயர் (மொழிபெயர்ப்பியல்), டாக்டர் ஏ.பி. ஆண்ருஸ்குட்டி (தொடரியல்), டாக்டர் பலிக்கர் (ஒலியியல்), டாக்டர் இராதாகிருஉஷ்ணன் (ஒலியனியல், அகராதியியல்) ஆகியவர்களும் என் நன்றிக்கு உரியவர்களாவர்.

கோயம்புத்தூரில் நடைபெற்ற மொழிபெயர்ப்பியல் பற்றிய பட்டறை வகுப்பில் என்னையும் பங்குபெறச்செய்து பயிற்சி நல்கிய சி.ஐ.ஐ.எல். (மைசூர்), சி.ஆர்.எஸ்.டி.சி. (கோயம்புத்தூர்), பாரதியார் பல்கலைக்கழகம் (கோயம்புத்தூர்) ஆகிய நிறுவனங்களுக்கும் என் மனமார்ந்த நன்றி உரித்தாகுக.

கேரளப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த தமிழ், மலையாளம், சமஸ்கிருதம் மொழியியல் ஆகிய துறைகளுடைய நூலகங்களிலிருந்தும் பொது நூலகத்திலிருந்தும் மற்றும் திருவனந்தபுரம் பொதுநூலகம், பிரிட்டீஸ் கவுன்சில் நூலகம் (திருவனந்தபுரம்), திராவிட மொழியியல் கழக நூலகம் (திருவனந்தபுரம்), சென்னை பல்கலைக்கழக நூலகம், தமிழ்ப் பல்கலைக்கழக நூலகம் (தஞ்சாவூர்), சாகித்திய அக்காடமி நூலகம் (புதுடில்லி) போன்றவற்றிலிருந்தும் ஆய்வுக்கான நூல்களும் தரவுகளும் திரட்டப்பட்டன. எனவே இந்நூலகங்களிடமும் அவற்றின் பொறுப்பாளர்களிடமும் நன்றியுடையவனாவேன்.

ஆய்வின்போது மலையாளமொழிசார்ந்த ஐயங்களை அகற்றிய டாக்டர் சேதுகுமார் (ஆய்வு உதவியாளர், கேரளவியல் ஆய்வுத்துறை, கேரளப்பல்கலைக்கழகம், திருவனந்தபுரம்), திரு. ரெஜி (ஆய்வாளர், மலையாளமொழித்துறை, கேரளப்பல்கலைக்கழகம் திருவனந்தபுரம்) ஆகியவர்களுக்கும், சமஸ்கிருத மொழி சார்ந்த ஐயங்களை அகற்றிய திரு. உண்ணிக்கிருஉஷ்ணன் (ஆய்வாளர், சமஸ்கிருதத் துறை, கேரளப்பல்கலைக்கழகம், திருவனந்தபுரம்) என்பவருக்கும் என் உளமார்ந்த நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

இவ்வாய்வின்பொருட்டு மொழிபெயர்ப்பியலைச் சார்ந்த கருத்துக்களை .. வழங்கிய டாக்டர் சோமசேகரன் நாயர் (பதிப்பாசிரியர், மலையாள

அகராதித்துறை, கேரளப்பல்கலைக்கழகம், திருவனந்தபுரம்), டாக்டர் இந்திரா மனுவேல் (பேராசிரியர், பிஷப் ஈபர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி), கவிமாமணி நெல்லை சு. முத்து (அறிவியலாளர், விக்கிரம சாராபாய் விண் ஆய்வு மையம், தும்பா, திருவனந்தபுரம்), ஆசியவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி.

நான் கேரளபல்கலைக்கழகத்தில் ஆய்வு செய்யுமாறு ஆற்றுப்படுத்திய டாக்டர் கேசவராஜ் (பேராசிரியர், செயின்ட் சேவியர் கல்லூரி, பாளையம் கோட்டை), டாக்டர் சிந்திக்கையாள் கேசவராஜ் (பேராசிரியர், நே.நி. சிறிஸ்தவக் கல்லூரி, மார்த்தாண்டம்) ஆசியவர்களுக்கும் நான் ஆய்வில் ஈடுபடுமாறு தூண்டிய பேராசிரியர் சி. ஜேசுராஜ் (நே.நி. சிறிஸ்தவக் கல்லூரி, மார்த்தாண்டம்) அவர்களுக்கும் என்றென்றைக்கும் என் நன்றி உரியது.

மேலும் ஆய்வு செய்த காலத்தில் பல்லாற்றாலும் உதவிய பல்துறை நண்பர்களான டாக்டர் ஐசக்சாமுவேல் நாயகம் (தமிழ்), டாக்டர் ஜஸ்டஸ் (வரலாறு), திரு. சுரேஷ்சிங் (கணிதவியல்), திரு. சௌந்தர்ராஜன் (வணிகவியல்), திரு. சேம்ராஜ் (சமூகவியல்), திரு. விஷ்ணுகுமார் (தமிழ்), திரு. செல்வகுமார் (தமிழ்), திரு. ஐசக் அருள்தாஸ் (தமிழ்), திரு. மனோ (தமிழ்), திரு. மைக்கிள்ராஜ் (பொருளியல்) ஆசியவர்களுக்கும் ஆய்வேட்டை தட்டச்சு செய்துதந்த திருமதி. பூமதிநாகப்பன் (மேலாளர், த அருமனை இன்ஸ்டிட்டியூட் ஆஃப் காமர்ஸ்) அவர்களுக்கும் என் நன்றி உரியது.

இவண்,

தே. தேவதாஸ்
(ஆய்வாளர்)

SYNOPSIS

TAMIL TRANSLATIONS : STUDY WITH SPECIAL REFERENCE TO WORKS FROM MALAYALAM

Candidate : D. DEVADAS,
RESEARCH SCHOLAR,
DEPARTMENT OF TAMIL,
UNIVERSITY OF KERALA, KARIAVATTOM,
THIRUVANANTHAPURAM - 695 581.

Supervising Teacher : DR. K. NACHIMUTHU,
PROFESSOR,
DEPARTMENT OF TAMIL,
UNIVERSITY OF KERALA,
KARYAVATTOM 695 581,
THIRUVANANTHAPURAM.

The study aims at an evaluation of the Tamil translations of Malayalam works for the first time. The study consists of introduction, body of the thesis, conclusion and appendices.

Introductory chapter describes the methodology and the main focus of the study.

The body of the thesis is divided into three parts.

Part-I

First part consists on two chapters namely:
1) Theory of Translation, and 2) History of Tamil Translation.

1) The Theory of Translation

This chapter describes definitions and types of translations. Theories of translation's found in traditional Tamil grammars and in Applied Linguistics are described in detail.

The quality of translation, the steps in translating a text like analysis, transfer and restructuring and problems of translations, untranslatable units, testing procedures of translation and qualities of good translators, etc. are discussed in detail in this chapter.

2) History of Tamil Translations

In this chapter the history of translations from other languages to Tamil and Tamil to other languages is given. The chapter also deals with the development and changes in the approach to translations in different periods in Tamil language, theoretical works on translation like books, articles and studies in Tamil language, importance of dictionaries in Tamil translations, the role played by individuals and institutions like book publishing houses, service organizations, universities, Radio and Television, Cinema and publishing houses of journals in developing the field of Tamil Translations and the impact of translations on the development of the Tamil language in its structure and content. It is found that the translation activities among the Indian languages are very negligible compared to the one found between English and Indian languages. This sorry state of affairs is to be changed by concerte efforts. Encouragements to translations among Indian languages and from non-English world languages should be provided. Preparation of bilingual dictionaries with Tamil as a source and target language and writing of grammars of other languages in Tamil should be done at the academic level. Encouragements to publication of translated works, awarding prizes to translators, popularisation of classics in other languages through Tamil translations are some of the means recommended to develop the field of translation in Tamil. ..

Part-II

Second part of the thesis consists of a chapter on Malayalam and Tamil.

Malayalam and Tamil

This chapter describes the relationship of Malayalam and Tamil and a brief sketch of the contrastive grammar of Malayalam and Tamil. It is noted that the structural differences between Malayalam and Tamil is not so great and will not pose major problems. But the semantic variations of cognate forms and the peculiar usages of Sanskrit loans in Malayalam are some of the areas about which the translator is to be careful.

Part-III

The third part of the study is divided into three chapters namely: 1) Translation of Poetry, 2) Translation of Fiction, and 3) Translation of non-fiction.

1) Translation of Poetry:

In this chapter the Tamil translation of Malayalam poetry under different headings like ancient poetry, modern poetry, folksongs, devotional songs and cinema songs are evaluated with suitable examples of comparisons of the originals and translations. The structure of meter, mode of versification, figures of speech, implied meaning, style, etc. of the original and translation are compared and a few generalisations formulated. The use of footnotes and the limitations in poetry translations are also noted. It is found that the poetry translations from Malayalam to Tamil are not as many as it is expected. However, the available translations are good. There should be more activity in this area especially concerning modern poetry. The ancient

poetry in Malayalam may be easily introduced in Tamil through transliterations with commentary and notes.

2) Translation of Fiction

In this chapter the Tamil translation of Malayalam fictions such as novels, short stories and dramas are evaluated with suitable examples of comparisons of the originals and translations. This chapter also discusses the selection and use of appropriate dialects and style and the use of foot-notes in translations. The study reveals that relatively a good number of classics in the field of fiction has been translated satisfactorily into Tamil. Of late there is a slowing down which should be arrested. Compared to novels in book form, more short stories from Malayalam appear in Tamil through the efforts of literary magazines.

3) Translation of Non-fiction

In this chapter the Tamil translation of non-fiction Malayalam works is evaluated. Works on grammar, criticism, history, religion, etc. are some of the important non-fiction discourses discussed here with suitable examples. The chapter also describes the methods of coining technical terms in Tamil, style of non-fiction translations, quality of foot-notes in non-fiction translation and limitations of translation into Tamil of non-fiction works from Malayalam. Translation in the field of non-fiction from Malayalam to Tamil is restricted to works on language, literature and to some miscellaneous topics. Here too instead of books, articles are found in more number translated into Tamil through the efforts of magazines. It is desirable that the trend may be continued with due emphasis on works on literary criticism, folklore, etc.

..

The conclusions of the study and the recommendations are presented in the last chapter.

The study in this dissertation is able to survey, evaluate and identify the problems and propose solutions in the field of translations from Malayalam to Tamil. Basing the study a translation manual for workers in this field could now be prepared.

(1) A bibliography of about 90 works from Malayalam to Tamil, (2) a list of technical terms pertaining to translations, and (3) a select general bibliography are provided as appendices at the end.

ஆய்வுச்சுருக்கம்

தமிழ் மொழிபெயர்ப்புகள்: மலையாளத்திலிருந்து தமிழுக்குச் செய்யப்பட்ட மொழிபெயர்ப்புகள் பற்றிய சிறப்பாய்வு

ஆய்வாளர் : தே. தேவதாஸ்,
ஆய்வுமாணவர்,
தமிழ்த்துறை,
கேரளப் பல்கலைக்கழகம்,
காரியவட்டம்,
திருவனந்தபுரம் 695 581.

ஆய்வுநெறியாளர் : டாக்டர் சி. நாச்சிமுத்து,
பேராசிரியர்,
தமிழ்த்துறை,
கேரளப் பல்கலைக்கழகம்,
காரியவட்டம்,
திருவனந்தபுரம் 695 581.

"தமிழ் மொழிபெயர்ப்புகள்: மலையாளத்திலிருந்து தமிழுக்குச் செய்யப்பட்ட மொழிபெயர்ப்புகள் பற்றிய சிறப்பாய்வு" என்ற தலைப்பில் அமைந்த இவ்வாய்வு முன்னுரை, உடல்பகுதி, முடிவுரை, பின்னிணைப்புகள் ஆகியனவற்றை உள்ளடக்கியது.

முன்னுரை ஆய்வுமுறைகளையும் ஆய்வின் தன்மைகளையும் விளக்குகிறது.

ஆய்வேட்டின் உடல்பகுதி மூன்றாகப் பகுக்கப்பட்டுள்ளது.

பகுதி-1

முதல் பகுதி 1. மொழிபெயர்ப்புக் கோட்பாடுகள், 2. தமிழ் மொழிபெயர்ப்பின் வரலாறு ஆகிய இரண்டு இயல்களைக் கொண்டது.

1. மொழிபெயர்ப்புக் கோட்பாடுகள்

இவ்வியல் மொழிபெயர்ப்பு குறித்த வரையறைகளையும், மொழிபெயர்ப்பின் வகைகளையும் விளக்கிச் செல்கிறது. தொடர்ந்து மொழிபெயர்ப்புக் கொள்கைகள் தமிழிலுள்ள மரபிலக்கண நூல்களையும், பயன்படுமொழியியலையும் (Applied Linguistics) அடிப்படையாகக்கொண்டு விரிவாகத் தரப்பட்டுள்ளன. மேலும் மொழிபெயர்ப்பின் தன்மைகள், மொழிபெயர்ப்பின் படிநிலைகள், மொழிபெயர்ப்பின் சிக்கல்கள், மொழிபெயர்க்க இயலாத கூறுகள், மொழிபெயர்ப்பைச் சோதிக்கும் முறைகள், மொழிபெயர்ப்பாளரின் இயல்புகள் போன்றவையும் இவ்வியலில்

விரிவாகத் தரப்பட்டுள்ளன.

2. தமிழ் மொழிபெயர்ப்பின் வரலாறு

இவ்வியல் தமிழ் மொழிபெயர்ப்பின் வரலாற்றைப் பிறமொழிகளிலிருந்து தமிழுக்கு, தமிழிலிருந்து பிறமொழிகளுக்கு என இருவேறு நிலைகளில் விளக்கிச் செல்கிறது. தொடர்ந்து தமிழ்மொழியில் மொழிபெயர்ப்பு அணுகுமுறையின் வளர்ச்சி, மாற்றங்கள் போன்றன வெவ்வேறு காலநிலைகளை ஒட்டி விளக்கப் பட்டுள்ளன. மேலும் தமிழ் மொழிபெயர்ப்பைப் பற்றி விளக்கும் நூல்கள், கட்டுரைகள், ஆய்வுகள் போன்றனவும், தமிழ் மொழிபெயர்ப்பில் அகராதிகளின் பங்கு, மொழிபெயர்ப்புப்பணியில் ஈடுபட்டுள்ள தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள், மொழிபெயர்ப்புகளின் தாக்கத்தால் தமிழ் மொழியின் அமைப்பிலும் உள்ளடக் கத்திலும் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் போன்றன பற்றிய விளக்கங்களும் இடம்பெற் றுள்ளன. பொதுவாக இந்திய மொழிகளுக்கிடையே நடைபெறும் மொழி பெயர்ப்புப்பணி குறைவாக உள்ளமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்நிலை தவிர்க்கப்பட ஆங்கிலம் தவிர்த்த மேனாட்டு மொழிகளிலிருந்தும், பிற இந்திய மொழிகளிலிருந்தும் மொழிபெயர்ப்புகளைக் கொண்டுவர வழிமுறைகள் தரப் பட்டுள்ளன. மேலும் தமிழை தருமொழியாகவும் பெறுமொழியாகவும் கொண்டு இருமொழி மற்றும் பல்மொழி அகராதிகளைத் தயாரித்தல், பிறமொழிகளின் இலக்கணத்தை தமிழில் வெளியிடல் போன்றனவும், மொழிபெயர்ப்புகளை வெளி யிடப்பதிப்பகங்கள் முன்வரல், மொழிபெயர்ப்பாளருக்கு பரிசுகள், பட்டங்கள் வழங்குதல், பிறமொழிகளிலுள்ள சிறந்த படைப்புகளைத் தமிழில் வெளியிட ஆர்வங்காட்டுதல் முதலானவையும் தமிழ் மொழிபெயர்ப்பின் வளர்ச்சிக்கு உதவும் நோக்கில் பரிந்துரைகளாகத் தரப்பட்டுள்ளன.

பகுதி-2

ஆய்வேட்டின் இரண்டாம்பகுதி 'மலையாளமும் தமிழும்' என்ற இயலைக் கொண்டது.

மலையாளமும் தமிழும்

இவ்வியல் மலையாளத்திற்கும் தமிழுக்கும் உரிய தொடர்பையும், முரணிலக்கணத்தையும் சுருக்கமாக விளக்கிச் செல்கிறது. பொதுவாக மலையாளத்திற்கும் தமிழுக்கும் இடையில் குறைந்த அளவில் காணப்படும் வடிவவேறுபாடுகள் மொழிபெயர்ப்பில் அதிக சிக்கல்களை உருவாக்காவிட்டாலும் இனச் சொற்களிடையே காணப்படும் பொருட்சிக்கல்களிலும் மலையாளமொழியில் காணப்படும் சமஸ்கிருத கடன் சொற்களிலும் மொழிபெயர்ப்பாளர் அதிக கவனஞ் செலுத்த வேண்டும் என்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பகுதி-3

இவ்வாய்வின் மூன்றாம் பகுதி 1. கவிதை மொழிபெயர்ப்புகள், 2. புனைகதை மொழிபெயர்ப்புகள், 3. புனைகதையல்லாத உரைநடை மொழிபெயர்ப்புகள் என்ற இயல்களைக் கொண்டது.

1. கவிதை மொழிபெயர்ப்புகள்

இவ்வியலில் மலையாளத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட மரபுக்கவிதைகள், கட்டற்ற கவிதைகள், நாட்டுப்புறப்பாடல்கள், பக்திப் பாடல்கள், போன்றவை மூலத்துடன் ஒப்பிட்டு மதிப்பிடப்பட்டுள்ளன. மேலும் யாப்பமைப்பு, தொடை, அணி, குறிப்புப்பொருள், நடை போன்றவையும் விளக்கப்பட்டுள்ளன. கவிதை மொழிபெயர்ப்பில் பயன்படுத்தப்பட்டுள்ள அடிக்குறிப்புகள், மொழிபெயர்ப்புகளில் காணலாகும் குறைகள் போன்றவையும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. மலையாளத்திலிருந்து தமிழுக்குச் செய்யப்பட்ட கவிதை மொழிபெயர்ப்புகள் பெரும்பாலும் மூலத்திற்குச் சமமானவையாக உள்ளன. ஆனால் தமிழில் மொழிபெயர்ப்புப்பணி மிகப்பின்தங்கிய நிலையில்

இருப்பதால் தமிழ்க்கவிதை இலக்கிய வளர்ச்சிக்கு உதவும் நோக்கில் பண்டைக் காலம் தொடங்கி தற்காலம் வரை பரவலாகப் பலகவிதைகளை மொழி பெயர்ப்பதின் இன்றியமையாமை வலியுறுத்தப்பட்டுள்ளது. மேலும் மலையாளத் திலுள்ள தொடக்ககால கவிதைகளை ஒலிபெயர்த்தல் மற்றும் கடின சொற்க ளுக்குக் குறிப்பெழுதுதல் போன்ற முறைகளைப் பயன்படுத்தி தமிழில் அறிமுகப் படுத்துதல் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

3. <u>புனைகதை மொழிபெயர்ப்புகள்</u>

இவ்வியலில் மலையாளத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட புனை கதைகளான நாவல், சிறுகதை, நாடகம் போன்றவை மூலத்துடனான ஒப்பீடு களின் வாயிலாக மதிப்பிடப்பட்டுள்ளன. மேலும் மொழிபெயர்ப்புகளில் காண லாகும் பேச்சுமொழிபற்றியும், நடைவேறுபாடுகள்பற்றியும் மொழிபெயர்ப்பாளர் கள் பயன்படுத்தியுள்ள அடிக்குறிப்புகள் பற்றியும் விளக்கிச் செல்லும் நோக்கி லும் இவ்வியல் அமைந்துள்ளது. புனைகதை மொழிபெயர்ப்புகளைப் பொறுத்த மட்டில் தொடக்ககாலத்தில் நாவல்களும் பிற்காலத்தில் ஆங்காங்கே ஒருசில சிறுகதைகளும் தமிழ்வடிவம் பெற்றவையாய் உள்ளன. இவற்றில் சிறுகதைகள் மிகுதியும் இதழ்களில் வெளிவந்தவையாகவே உள்ளன. மேலும் தற்காலத் திலுள்ள சிறந்த நாவல்கள் எதுவும் மொழிபெயர்க்கப்படவில்லை. எனவே புனைகதை இலக்கிய மொழிபெயர்ப்பில் அதிக கவனஞ்செலுத்துவது தமிழில் புனைகதை இலக்கிய வளர்ச்சிக்கு உதவுவதாய் அமையும் என்பது வலியுறுத்தப் பட்டுள்ளது.

3. <u>புனைகதையல்லாத உரைநடை மொழிபெயர்ப்புகள்</u>

இவ்வியலில் மலையாளத்திலிருந்து தமிழில் செய்யப்பட்ட புனைகதையல்லாத உரைநடை மொழிபெயர்ப்புகளாக இலக்கணம், திறனாய்வு, வரலாறு, சமயம் ..

போன்றவை தொகுக்கப்பட்டு மதிப்பிடப்பட்டுள்ளன. மேலும் மலையாளம்-தமிழ் மொழிபெயர்ப்பில் கலைச்சொற்கள் உருவாக்கப்பட்டுள்ள விதம், நடையமைப்பு, அடிக்குறிப்புகள் மூலவடிவத்தை விளக்கும் பாங்கு, மொழி பெயர்ப்பின்போது ஏற்பட்டுள்ள குறைகள் போன்றவையும் விளக்கப்பட்டுள்ளன. புனைகதையல்லாத உரைநடை இலக்கிய மொழிபெயர்ப்பும் பிற இலக்கிய வகைகளைப்போலவே பரவலாகச் செய்யப்படவில்லை. இக்குறைவை நிறைவு செய்ய திறனாய்வு போன்ற துறைகளில் கவனஞ் செலுத்துவது இன்றியமையாத ஒன்றாகும்.

முடிவுரைப் பகுதியில் ஆய்வின்மூலம் பெற்ற முடிவுகளும் தமிழில் மொழிபெயர்ப்பைச் செய்வதற்கான பரிந்துரைகளும் தரப்பட்டுள்ளன.

இவ்வாய்வு மலையாளம்-தமிழ் மொழிபெயர்ப்புகளைத் தொகுத்தல், மதிப்பீடு செய்தல், மொழிபெயர்ப்புச் சிக்கல்களைக் கண்டறிந்து அவற்றிற்குத் தீர்வுகாணுதல் போன்ற தன்மைகளைப் பெற்றதாய் உள்ளது. இவ்வாய்வை அடிப்படையாகக் கொண்டு மலையாளம்-தமிழ் மொழிபெயர்ப்புக்கையேடு ஒன்றையும் தயாரிக்கலாம்.

ஆய்வேட்டின் பின்னிணைப்புப் பகுதியில் மலையாளத்திலிருந்து தமிழில் செய்யப்பட்ட மொழிபெயர்ப்புகளின் பட்டியல், ஆய்வேட்டில் பயன்படுத்தப்பட்டுள்ள மொழிபெயர்ப்பியல் சார்பான கலைச்சொற்களின் பட்டியல், ஆய்வுக்குத் துணை நின்ற நூல்களின் பட்டியல் போன்றவை சேர்க்கப்பட்டுள்ளன.

..

ஒலிபெயர்ப்புத்திட்டம்

1. உயிர்

வ. எண்	மலையாளம்	ஆங்கிலம்	தமிழ் (1)	தமிழ் (2)	வ. எண்.	மலையாளம்	ஆங்கிலம்	தமிழ் (1)	தமிழ் (2)
1	അ	a	அ	அ	9	എ	e	எ	எ
2	ആ	aa	ஆ	ஆ	10	ഏ	ee	ஏ	ஏ
3	ഇ	i	இ	இ	11	ഐ	ai	ஐ	ஐ
4	ഈ	ii	ஈ	ஈ	12	ഒ	o	ஒ	ஒ
5	ഉ	u	உ	உ	13	ഓ	oo	ஓ	ஓ
6	ഊ	uu	ஊ	ஊ	14	ഔ	au	ஔ	ஔ
7	ഋ	ṛ	இரு	இரு (ரு)	15	അം	am	அம்	அம்
8	ഌ	ṇ	இலு	இலு (லு)	16	അഃ	ak	அக்	அக்

2. மெய்

வ. எண்.	மலையாளம்	ஆங்கிலம்	தமிழ் (1)	தமிழ் (2)	வ. எண்.	மலையாளம்	ஆங்கிலம்	தமிழ் (1)	தமிழ் (2)
1	ക	k	க	$க^{1}$ (க)	20	ന	n(n̲)	ந (ன)	ந (ன)
2	ഖ	kh	"	$க^{2}$	21	പ	p	ப	$ப^{1}$ (ப)
3	ഗ	g	"	$க^{3}$	22	ഫ	ph	"	$ப^{2}$
4	ഘ	gh	"	$க^{4}$	23	ബ	b	"	$ப^{3}$
5	ങ	ṅ	ங	ங	24	ഭ	bh	"	$ப^{4}$
6	ച	c	ச	$ச^{1}$ (ச)	25	മ	m	ம	ம
7	ഛ	ch	"	$ச^{2}$	26	യ	y	ய	ய
8	ജ	j	" (ஜ)	$ச^{3}$ (ஜ)	27	ര	r	ர	ர
9	ഝ	jh	"	$ச^{4}$	28	ല	l	ல	ல
10	ഞ	ñ	ஞ	ஞ	29	വ	v	வ	வ
11	ട	ṭ	ட	$ட^{1}$ (ட)	30	ശ	ś	ச	$ச^{5}$
12	ഠ	ṭh	"	$ட^{2}$	31	ഷ	ṣ	" (ஷ)	$ச^{6}$ (ஷ)
13	ഡ	ḍ	"	$ட^{3}$	32	സ	s	" (ஸ)	$ச^{7}$ (ஸ)
14	ഢ	ḍh	"	$ட^{4}$	33	ഹ	h	க (ஹ)	$க^{5}$ (ஹ)
15	ണ	ṇ	ண	ண	34	ള	l	ள	ள
16	ത	t	த	$த^{1}$ (த)	35	ഴ	l̲	ழ	ழ
17	ഥ	th	"	$த^{2}$	36	റ	r̲	ற	ற
18	ദ	d	"	$த^{3}$	37	ക്ഷ	kṣ	க்ஷ	க்ஷ
19	ധ	dh	"	$த^{4}$	38	ശ്രീ	sr̲i	ஸ்ரீ	ஸ்ரீ

சுருக்க விளக்கம்

அகத்.	...	அகத்திணையியல்
அகம்.	...	அகநானூறு
உ.ஆ.	...	உரையாசிரியர்
எச்.	...	எச்சவியல்
என்.பி.எஸ்.	...	நேஷனல் புக்ஸ்டால்
கலி.	...	கலித்தொகை
காம.	...	காமசூத்திரம்
கு.உ.	...	குறிப்புரை
குறள்.	...	திருக்குறள்
சிறுபாண்.	...	சிறுபாணாற்றுப்படை
சீவக.	...	சீவகசிந்தாமணி
சொல்.	...	சொல்லதிகாரம்
தொ.ஆ.	...	தொகுப்பாசிரியர்
தொல்.	...	தொல்காப்பியம்
நன்.	...	நன்னூல்
நூற்.	...	நூற்பா
ப.	...	பக்கம்
ப.ஆ.	...	பதிப்பாசிரியர்
ப.ஆசி.	...	பதிப்பாசிரியர்கள்
பக்.	...	பக்கங்கள்
பதிற்.	...	பதிற்றுப்பத்து
புறம்.	...	புறநானூறு
பெரு.	...	பெரும்பாணாற்றுப்படை
பொரு.	...	பொருநராற்றுப்படை
மதுரை.	...	மதுரைக்காஞ்சி

மநு.	...	மநுதர்மம்
மேலது.	...	மேற்சொல்லப்பட்டது
மொ.பெ.ஆ.	...	மொழிபெயர்ப்பு ஆசிரியர்
மொ.பெ.ஆசி.	...	மொழிபெயர்ப்பு ஆசிரியர்கள்
வி.உ.	...	விற்பனை உரிமை
வெ.ஆ.	...	வெளியீட்டாசிரியர்
CIIL	...	Central Institute of Indian Languages
D.L.A.	...	Dravidian Linguistic Association
ed.	...	Edited
etal	...	et alii (and others)
P	...	Page
PP.	...	Pages
Tr	...	Translator
Vol.	...	Volume

உள்ளுறை

0. முன்னுரை

0. ஒரு மொழியியல் இயல்ற செய்திகளை மற்றொரு மொழியில் மாற்றித்தர மொழிபெயர்ப்பு உதவுகிறது. பொதுவாக தனிநபர் ஒருவர் உலகிலுள்ள அனைத்து மொழிகளையும் கற்றுக்கொள்வதென்பது இயலாத ஒன்று. எனவே பிறமொழிக் கருத்துக்களைத் தனக்குத் தெரிந்த மொழிவழி அறிந்து கொள்ள மொழிபெயர்ப்பு உதவுகிறது. பண்டைக்காலத்திலிருந்து தற்காலம் வரை பல்வேறு மொழிகளிடையே மொழிபெயர்ப்புப்பணி நடைபெற்று வந்துள்ளது. ஆனால் இப்பணி தேவைக்கேற்பப் பரவலாக நடைபெறவில்லை எனலாம். மேலும் மொழிபெயர்ப்பு மற்றும் மொழிபெயர்ப்புச் சிக்கல்களைக் குறித்த நூல்களும், கட்டுரைகளும், ஆய்வுகளும் குறைவாகவே உள்ளன. தமிழிலும் மொழிபெயர்ப்புப் பணி இங்கொன்றும் அங்கொன்றுமாக நடைபெறுகிறதே அன்றி அதுவும் திட்டமிட்ட நிலையில் செய்யப்படவில்லை (உலக அளவில் விவிலியம், காரல்மார்க்ஸ் போன்றவர்களின் பொதுவுடைமைச் சித்தாந்த நூல்கள் தவிர பிற எதுவும் திட்டமிட்ட நிலையில் மொழிபெயர்க்கப்படாமலே உள்ளன). எனவே தமிழில் மொழிபெயர்ப்புப் பணிகள், முறைகள், சிக்கல்கள் முதலியவற்றை மதிப்பீடு செய்யும் நோக்கில் மலையாளம் - தமிழ் மொழிபெயர்ப்புகளை அடிப்படையாகக் கொண்டதாக இவ்வாய்வு மேற் கொள்ளப்பட்டுள்ளது.

1. ஆய்வுத்தலைப்பு

ஆய்வுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைப்பு "தமிழ் மொழிபெயர்ப்புகள்: மலையாளத்திலிருந்து தமிழுக்குச் செய்யப்பட்ட மொழிபெயர்ப்புகள் பற்றிய சிறப்பாய்வு (TAMIL TRANSLATIONS: STUDY WITH SPECIAL REFERENCE TO WORKS FROM MALAYALAM)" என்பது.

2. ஆய்வு முன்னோடிகள்

தமிழில் மொழிபெயர்ப்புப்பணி வடமொழியை மையமாகக்கொண்டு பழங்காலத்திலேயே நடைபெற்று வந்துள்ளது. மேலும் மொழிபெயர்ப்பு

குறித்த கருத்துக்களும் இலக்கண நூல்களில் இடம்பெற்றுள்ளன. இருப்பினும் மொழிபெயர்ப்பைச் செய்கின்றமை குறித்த சரியான விளக்கங்கள் எதுவும் உருவாக்கப்படவில்லை. மேனாட்டாரின் வருகைக்குப் பிறகு மொழிபெயர்ப்பு பற்றிய எண்ணம் வலுப்பெறத் தொடங்கியது. தொடர்ந்து ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்ப்பதைப் பற்றிய நூல்களையும் கட்டுரைகளையும் பலர் எழுதியுள்ளனர். ஆனால் தமிழ் மொழிபெயர்ப்பின் எல்லை பிற இந்திய மொழிகளோடோ தமிழின் அண்டை மொழிகளோடோ போதிய அளவு விரிவுபடாமல் காணப்படுவதால் அவற்றிலிருந்து மொழிபெயர்ப்பு செய்வது பற்றிய நூல்களும் கட்டுரைகளும் எழுதப்படவில்லை. மலையாளத்திலிருந்து 89திற்கும் மேற்பட்ட படைப்புகள் தமிழ்வடிவம் பெற்றிருப்பினும் பா. ஆனந்தகுமாரின் "குஞ்ஞுண்ணிக்கவிதைகள் மொழிபெயர்ப்பில் சில சிக்கல்கள் - ஒரு விவாதம்" என்ற கட்டுரையையும் (பார்க்க. பா. ஆனந்தகுமார், குஞ்ஞுண்ணிக் கவிதைகள், பக்.97-114) இதழ்களில் வெளிவந்த ஒருசில கருத்துக்களையும் தவிர நூல்கள் மற்றும் கட்டுரைகள் எதுவும் இப்பொருளில் வெளிவரவில்லை. மேலும் தமிழில் மொழிபெயர்ப்பு பற்றி செய்துள்ள ஆய்வுகளும் ஆங்கிலம் போன்ற மேனாட்டு மொழிகளை அடிப்படையாகக்கொண்டவையாகும். எனவே இவ்வாய்வின் முன்னோடிகளாகக் குறிப்பிட்டுச் சொல்லத் தக்க எதுவும் இல்லை எனலாம்.

3. ஆய்வின் குறிக்கோள்

மலையாளத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட நூல்கள் பற்றியச் செய்திகள் சிவகாமியின் 'மொழிபெயர்ப்பு நூற்றொகை', கேரளசாகித்ய அக்காடமியின் 'Bibliography of Malayalam Works Translated into other Languages' ஆகிய நூற்றொகைகளில் இடம்பெற்றுள்ளன. மேலும் ச.வே. சுப்பிரமணியத்தின் (1983) 'திராவிடமொழி இலக்கியங்கள்-அறிமுகம்' என்ற நூலில் காணப்படும் மொழிபெயர்ப்பு இலக்கியம் என்ற கட்டுரையும்

மலையாளத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட நூல்கள் குறித்த செய்திகளைத் தருகின்றது. ஆனால் இவற்றில் சில விடுபாடுகளும் உள்ளன. இருப்பினும் இவற்றிற்குப் பின்வந்த மொழிபெயர்ப்புகளை யாரும் தொகுக்கவில்லை. மேலும் மொழிபெயர்ப்புகளின் வகைப்பாடு, மதிப்பீடுகள், சிக்கல்கள், தீர்வுகள் போன்றவைபற்றிய ஆய்வுகளையும் யாரும் இதுவரை செய்யவில்லை. இந்நிலையில் மொழிபெயர்ப்புகளைத் தொகுத்து வகைப் படுத்துதல், அவற்றின் தரத்தை மதிப்பீடு செய்தல், சிக்கல்களை இனங் கண்டு தீர்வு கூறல் முதலியவைவற்றைக் கருத்தில்கொண்டு இவ்வாய்வு மேற்கொள் ளப்பட்டுள்ளது.

4. ஆய்வு எல்லை

மலையாளத்திலிருந்து தமிழில் செய்யப்பட்ட மொழிபெயர்ப்புகளில் நூல்வடிவில் வெளிவந்தவற்றையும், இதழ்களில் வெளிவந்தவற்றையும் அடிப்ப டையாகக்கொண்டு இவ்வாய்வு செய்யப்பட்டுள்ளது. மொழிபெயர்ப்புகளை வெளியிடுவதில் இதழ்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. ஆனால் அவற்றைத் தொகுப்பதிலுள்ள சிக்கல்களைக் கருத்தில் கொண்டு பெரும்பான்மை நூல் வடிவில் வெளிவந்தவற்றையும் சிறுபான்மை இதழ்களில் வெளிவந்தவற்றையும் அடிப்படையாகக்கொண்டதாக இவ்வாய்வு அமைந்துள்ளது.

5. சான்றாதாரங்கள்

இவ்வாய்வுக்கு முதன்மை ஆதாரங்களாக மலையாளத்திலிருந்து தமிழில் செய்யப்பட்ட மொழிபெயர்ப்புகள் கொள்ளப்பட்டுள்ளன. துணைமை ஆதாரங்களாக மொழிபெயர்ப்புக்கொள்கைபற்றிய நூல்கள், கட்டுரைகள், ஆய்வுகள் போன்றவையும், சார்பாதாரங்களாக நாற்றொகைகள், அகராதிகள் போன்றவையும் அமைந்துள்ளன. மேற்குறிப்பிட்டுள்ள முதன்மை,

தலைமை, சார்பு ஆகிய சான்றாதாரங்களில் முதன்மைச் சான்றாதாரங்களான மொழிபெயர்ப்புகளைத் தொகுப்பதில் சிக்கல்கள் உள்ளன. ஏனெனில் சில மொழிபெயர்ப்புகள் மூல ஆசிரியர்பெயர், மூலநூலின்பெயர், மூலமொழி, மொழிபெயர்ப்பாளர்பெயர், மொழிபெயர்ப்பின் தன்மை (நேரடி மொழி பெயர்ப்பு, சுருக்கம், தழுவல் போன்றன), நூல்சார்ந்த இலக்கியவகை, பதிப்புவிவரம் போன்ற செய்திகள் எதுவுமின்றி காணப்படுகின்றன. இத்தகையன வற்றை பிரித்தறிவது சிரமத்தை ஏற்படுத்தும். மேலும் சில மொழிபெயர்ப்பு களின் தலைப்புகளை மொழிபெயர்ப்பாளர் தாமாக அமைத்திருப்பினும் மூல நூலின் தலைப்புப் பற்றிய குறிப்பு இன்றி காணப்படும். மற்றும் சிலமொழி பெயர்ப்புகள் மொழிபெயர்ப்பாளரின் பெயரின்றி மூல ஆசிரியரின் பெயரிலேயே அமைந்திருக்கும். இத்தகையனவற்றை இனங்கண்டு தொகுப்பது சற்று கடினமான ஒன்றாகும். இதனால் சிலவேளைகளில் இத்தகைய மொழிபெயர்ப்புகள் தொகுப்புக்களில் இடம்பெறாமல் விடுபட்டுப்போகவும் ஏதுவாகின்றன.

6. ஆய்வு அணுகுமுறை

இவ்வாய்வு மொழியியல் நோக்கிலான ஒப்பீடு மற்றும் விளக்கவியல் அணுகுமுறைகளை அடிப்படையாகக் கொண்டது.

7. ஆய்வுரையமைப்பு

மொழிபெயர்ப்புபற்றிய இவ்வாய்வின் முன்னுரை, முடிவுரை நீங்கலான ஆறு இயல்களில் முதல் இரண்டு இயல்களும் செய்தித்தொகுப்புகளாகவும், மூன்றாவது இயல் ஒப்பீட்டை அடிப்படையாகக்கொண்டு மலையாளம், தமிழ் ஆகிய மொழிகள் ஒன்றையொன்று வேறுபடுவதை வரையறுப்பதாகவும், நான்கு ஐந்து, ஆறு ஆகிய இயல்கள் ஒப்பீட்டு நோக்கிலான மதிப்பீடுகளாகவும் உள்ளன. மேலும் இவ்வியல்கள் ஒவ்வொன்றும் தனித்தனியே முன்னுரை, தொகுப்புரை ஆகிய பகுதிகளைக் கொண்டுள்ளன. மலையாளமொழியில்

அமைந்த பகுதிகளை ஆய்வுரையில் எடுத்தாள்கிற வசதிக்காக அவை தமிழ் எழுத்துக்களில் ஒலிபெயர்த்து தரப்பட்டுள்ளன (இவற்றின் ஒலிபெயர்ப்பு முறைகளை முன்தரப்பட்டுள்ள ஒலிபெயர்ப்புத்திட்டம் விளக்குகிறது). மேலும் அவற்றின் பொருளும் அடைப்புக்குறியினுள் இடம்பெறுமாறு அமைக்கப்பட்டுள்ளன. ஆய்வுரைப்பகுதியில் விளக்கப்படங்கள், கிளைப்படங்கள், அட்டவணைகள் போன்றவையும் சேர்க்கப்பட்டுள்ளன. ஆய்வேட்டில் அடிக்குறிப்புகள், கருத்து அல்லது பகுதிகள் எடுத்தாளப்பட்ட இடத்திலேயே ஆசிரியர், நூல், பக்கம் (சான்றாக, சு. சண்முகவேலாயுதம், மொழிபெயர்ப்பியல் பக்.1-14) என்ற அளவிலும், சுருக்கத்திற்காக ஆசிரியர், நூல்வெளிவந்த ஆண்டு, பக்கம் (சான்றாக, குமாரனாசான், 1988:66) என்ற அளவிலும் தரப்பட்டுள்ளன. மேலும் மொழிபெயர்ப்பு நூல்கள் மொழிபெயர்ப்பாளர் பெயர், ஆண்டு, பக்கம் (சான்றாக, நெல்லை சு. முத்து, 1992:24) எனவும் அடிக்குறிப்பில் அமைக்கப்பட்டுள்ளன. ஆய்வுரையில் பார்வைக்காக இவ்வாய்வேட்டிலிருந்து சுட்டப்பட்டுள்ள இடங்கள் (Cross References) 1:6, 4:3:1:2 என்பன போன்று இயல் எண் மற்றும் உட்பிரிவு எண்கள் ஆகியவற்றால் குறிக்கப்பட்டுள்ளன.

8. ஆய்வேட்டின் அமைப்பு

ஆய்வேடு முன்னுரை, உடல், முடிவுரை, பின்னிணைப்பு என்ற பொதுவமைப்பைப் பெற்றுள்ளது.

1. முன்னுரை

முன்னுரைப்பகுதி ஆய்வையும் அதன் தன்மைகளையும் அறிமுகப்படுத்தும் நோக்கில் அமைந்துள்ளது.

2. உடல்

ஆய்வேட்டின் உடல்பகுதி மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதில் முதல்பகுதி இரண்டு இயல்களைக்கொண்டதாகவும், இரண்டாம்பகுதி ஓர் இயலை மட்டும் கொண்டதாகவும் மூன்றாம் பகுதி மூன்று இயல்களைக்கொண்டதாகவும் அமைந்துள்ளது.

1. பகுதி-ஒன்று

முதல்பகுதி மொழிபெயர்ப்பு பற்றிய அறிமுகநோக்கில் அமைந்துள்ளது. இதில் 'மொழிபெயர்ப்புக்கோட்பாடுகள்' என்ற முதலாம் இயலும், 'தமிழ் மொழிபெயர்ப்பின் வரலாறு' என்ற இரண்டாம் இயலும் இடம்பெற்றுள்ளன.

1. இயல் - ஒன்று

மொழிபெயர்ப்புக் கோட்பாடுகள்

இவ்வியல் மொழிபெயர்ப்பு குறித்த வரையறைகளைப் பற்றியும், மொழிபெயர்ப்பின் வகைகளைப் பற்றியும் விளக்கிச்செல்கிறது. தொடர்ந்து மொழிபெயர்ப்புக் கொள்கைகள் தமிழிலுள்ள மரபிலக்கண நூல்களையும், மேனாட்டாரின் மொழியியல் நோக்கிலான கருத்துக்களையும் அடிப்படையாகக் கொண்டு விளக்கப்பட்டுள்ளன. மேலும் மொழிபெயர்ப்பின் நோக்கம், மொழிபெயர்ப்பின் பயன், மொழிபெயர்ப்பின் பணிகள், மொழிபெயர்ப்பைச் செய்யவேண்டிய முறைகள், மொழிபெயர்ப்பின் முன்னுரிமை, மொழிபெயர்ப்பு இணைகள், மொழிபெயர்ப்பின் நடையமைப்பு, மொழிபெயர்ப்பின் அளவு, மொழிபெயர்க்காமல் ஒலிபெயர்த்து அமைக்கவேண்டிய பகுதிகள் போன்றன மொழிபெயர்ப்பு அமையவேண்டிய தன்மைகளின் அடிப்படையிலும், மொழிபெயர்ப்பின் செயல்முறைகள் பகுப்பாய்வு (Analysis), மாற்றுதல் (Transfer), மறுவடிவாக்கம்(Restructuring)என்ற மூன்று படிநிலைகளின் அடிப்படையிலும் விளக்கப்பட்டுள்ளன. மட்டுமல்லாமல் இவற்றோடு மொழிபெயர்ப்புச் சிக்கல்கள், மொழிபெயர்க்க இயலாத கூறுகள், மொழிபெயர்ப்பைச் சோதிக்கும் முறைகள், மொழிபெயர்ப்பாளர் பெற்றிருக்கவேண்டிய சிறப்புப் பண்புகள் போன்றன பற்றிய விளக்கங்களும் இடம்பெற்றுள்ளன.

2. இயல் - இரண்டு

தமிழ் மொழிபெயர்ப்பின் வரலாறு

இவ்வியலில் பிறமொழிகளிலிருந்து தமிழில் செய்யப்பட்ட மொழி பெயர்ப்புகள், தமிழிலிருந்து பிற மொழிகளில் செய்யப்பட்ட மொழிபெயர்ப்புகள் என மொழிபெயர்ப்புநூல்களின் வரலாறு தரப்பட்டுள்ளது. தொடர்ந்து தமிழ்மொழிபெயர்ப்பின் அணுகுமுறையில் காலந்தோறும் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், தமிழ் மொழிபெயர்ப்பு குறித்த நூல்கள், கட்டுரைகள், ஆய்வுகள் பற்றிய விளக்கங்கள் மற்றும் மதிப்பீடுகள், பிறமொழிச் சொற்களுக்கு இணையாகத்தமிழ்ச் சொற்களையும், தமிழ்ச்சொற்களுக்கு இணையாக பிறமொழிச் சொற்களையும் கொண்ட பொதுச்சொல் மற்றும் கலைச்சொல் அகராதிகள் பற்றிய விளக்கங்கள் போன்றன இடம்பெற்றுள்ளன. மேலும் தமிழ்மொழி பெயர்ப்புப் பணியில் ஈடுபட்டுள்ள பதிப்பகங்கள், தொண்டுமற்றும் பொது நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், வானொலி மற்றும் தொலைக்காட்சி நிலையங்கள், திரைப்படத்தயாரிப்பகங்கள், இதழ் வெளியீட்டகங்கள் போன்றவை பற்றியும், பிறமொழிகளின் தாக்கத்தின் காரணமாகத் தமிழில் எழுத்து, சொல், தொடர் போன்ற நிலைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் பற்றியும் விளக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

2. பகுதி-இரண்டு

இரண்டாம் பகுதி மலையாளம், தமிழ் ஆகிய மொழிகளை ஒப்பிட்டு வேற்றுமைகாணும் நோக்கில் அமைந்துள்ளது. இதில் 'மலையாளமும் தமிழும்' என்ற மூன்றாவது இயல் இடம்பெற்றுள்ளது.

1. இயல் - மூன்று

மலையாளமும் தமிழும்

இவ்வியலில் வரலாற்றுப்பின்புலம் என்ற பகுதி திராவிட மொழிகள் பற்றியும், மலையாளத்திற்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பு பற்றியும் வரலாற்று நோக்கில் விளக்கிச் செல்கிறது. மேலும் மலையாளம் தமிழிலிருந்து வேறுபடு சின்றமையை விளக்கும் நோக்கில் முரணிலக்கணம் (Contrastive Grammar) என்ற பகுதி சுருக்கமாக அமைக்கப்பட்டுள்ளது.

3. பகுதி-மூன்று

மூன்றாம் பகுதி மலையாளத்திலிருந்து தமிழில் செய்யப்பட்டுள்ள மொழி பெயர்ப்புகளை மதிப்பீடு செய்யும் நோக்கில் அமைந்துள்ளது. இதில் 'கவிதை மொழிபெயர்ப்புகள்' என்ற நான்காம் இயலும், 'புனைகதை மொழிபெயர்ப் புகள்' என்ற ஐந்தாம் இயலும், 'புனைகதையல்லாத உரைநடைமொழிபெயர்ப் புகள்' என்ற ஆறாம் இயலும் இடம்பெற்றுள்ளன.

1. இயல் - நான்கு

கவிதை மொழிபெயர்ப்புகள்

மலையாளத்திலிருந்து தமிழில் செய்யப்பட்ட கவிதை மொழிபெயர்ப்புகளை இவ்வியல் மரபுக்கவிதைகள், கட்டற்ற கவிதைகள், நாட்டுப்புறப்பாடல்கள், பக்திப்பாடல்கள், திரைப்படப்பாடல்கள் என முதலில் வகைப்படுத்தியுள்ளது. தொடர்ந்து மதிப்பீட்டுப்பகுதியில் இவ்வகைப்பாட்டிலிருந்து சிறந்ததும் முக்கியமானதுமான மொழிபெயர்ப்புகள் தேர்வு செய்யப்பட்டு அவற்றின் பகுதிகள் மூலவடிவத்தோடு ஒப்பிடப்பட்டு மொழிபெயர்ப்பின் தரம் சோதிக்கப் பட்டுள்ளது. மேலும் கவிதைகளுக்கான யாப்புவடிவம் மொழிபெயர்ப்பின்போது

பெற்றுள்ள வேறுபாடுகள், குறிப்புப்பொருள், மொழிநடை ஆகியவை மூலத்திலிருந்து மொழிபெயர்ப்பில் பெற்றுள்ள மாற்றங்கள் தருமொழிவடிவத்தைச் சரியாகச் செய்வதற்காக கையாளப்பட்டுள்ள அடிக்குறிப்புகள், கருத்து சேர்ப்பு, கருத்து நீக்கம், தவறாகத்தருதல் ஆகிய நிலைகளில் மொழிபெயர்ப்புகள் பெற்றுள்ள குறைகள் போன்றவையும் இவ்வியலில் விளக்கம் பெற்றுள்ளன.

2. இயல் - ஐந்து

புனைகதை மொழிபெயர்ப்புகள்

இவ்வியலில் மலையாளத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட புனைகதைகள்-நாவல், சிறுகதை, நாடகம், வசனகவிதை அமைப்பிலான புனைகதைகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன. தொடர்ந்து மதிப்பீட்டுப்பகுதியில் சிறந்த மொழிபெயர்ப்புகளின் பகுதிகள் தேர்வுசெய்யப்பட்டு அவை மூலவடிவத்தோடு ஒப்பிட்டுக்காட்டப்பட்டுள்ளன. மேலும் மொழிபெயர்ப்பின்போது மூலவடிவத்தில் காணப்படும் பேச்சுமொழி, குறிப்புப்பொருள் போன்றன அடைந்துள்ள மாற்றங்கள், மொழிபெயர்ப்பின் நடையமைப்பு மூலவடிவத்திலிருந்து வேறுபடும் விதம், அடிக்குறிப்புகளைப் பயன்படுத்தி மூலவடிவத்தை விளக்கும் பாங்கு, கருத்துக்களைச் சேர்த்தல், கருத்துக்களை நீக்குதல், மூலவடிவத்தைத் தவறுபடத்தருதல் ஆகிய நிலைகளில் மொழிபெயர்ப்புகளிடையே காணப்படும் குறைகள் போன்றவையும் இவ்வியலில் விளக்கம் பெற்றுள்ளன.

3. இயல் - ஆறு

புனைகதையல்லாத உரைநடை மொழிபெயர்ப்புகள்

இவ்வியலில் மலையாளத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட புனைகதையல்லாத உரைநடை மொழிபெயர்ப்புகள்-இலக்கணம், திறனாய்வு, வரலாறு, சமயம் போன்றனவாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. தொடர்ந்து சிறந்த மொழிபெயர்ப்புகளின் பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவை

மூலவடிவத்தோடு ஒப்பிட்டுக்காட்டப்பட்டுள்ளன. மேலும் மொழிபெயர்ப்பின் போது தருமொழி வடிவத்தின் சிறப்புச்சொற்கள் மற்றும் மொழிநடை போன்றன பெறுமொழிவடிவத்தில் மாற்றப்பட்டவிதம், கருத்துக்களை மிகுதியாகச்சேர்த்தல், கருத்துக்களை நீக்குதல், தவறுபட மொழிபெயர்த்திருத்தல் என மொழி பெயர்ப்புகளில் ஏற்பட்டுள்ள குறைகள் போன்றனவும் இவ்வியலில் விளக்கப்பட்டுள்ளன.

3. முடிவுரை

முடிவுரையில் ஆய்வின்மூலம் பெற்ற முடிவுகளும், தமிழில் மொழிபெயர்ப்புப் பணியை வளர்ப்பதற்கான பரிந்துரைகளும் தரப்பட்டுள்ளன.

4. பின்னிணைப்பு

இவ்வாய்வேட்டின் பின்னிணைப்பு மூன்று பகுதிகளாக அமைந்துள்ளது. அவை,

1. மலையாளத்திலிருந்து தமிழுக்குச் செய்யப்பட்ட மொழிபெயர்ப்புகளின் பட்டியல்

2. ஆய்வேட்டில் பயன்படுத்தப்பட்டுள்ள கலைச்சொற்களின் பட்டியல்

3. துணை நூல் பட்டியல் என்பன.

1. மலையாளத்திலிருந்து தமிழுக்குச் செய்யப்பட்ட மொழிபெயர்ப்புகளின் பட்டியல்

இப்பகுதி மலையாளம்-தமிழ் மொழிபெயர்ப்புகளை காலவரிசைப்படி தொகுத்துத்தரும் நோக்கில் அமைந்துள்ளது. ஆனால் இதழ்களின் வாயிலாக வெளிவந்த மொழிபெயர்ப்புகள் மிகுதியாகக் காணப்படுவதால் அவற்றில் மாதிரிக்காக சிலவற்றை மட்டுமே தருவதாக மொழிபெயர்ப்புகளின் பட்டியல் அமைக்கப்பட்டுள்ளது.

..

2. ஆய்வேட்டில் பயன்படுத்தப்பட்டுள்ள கலைச்சொற்களின் பட்டியல்

இப்பகுதி ஆய்வேட்டில் இடம் பெற்றுள்ள மொழிபெயர்ப்பியல் சார்ந்த கலைச்சொற்களை அகரவரிசைப்படி ஆங்கிலம்-தமிழ், தமிழ்-ஆங்கிலம் என்ற இருநிலைகளில் தருவதாக அமைந்துள்ளது.

3. துணைநூல்களின் பட்டியல்

இப்பகுதி ஆய்வுக்குத் துணைநின்ற நூல்கள், கட்டுரைகள் முதலானவை குறித்த செய்திகளை அவைசார்ந்த மொழிகளின் அடிப்படையில் தமிழ், மலையாளம், ஆங்கிலம் என ஆசிரியர் பெயர் அகரவரிசைப்படி தருவதாக அமைந்துள்ளது.

0

முன்னுரை

பகுதி - ஒன்று

இயல் – ஒன்று

மொழிபெயர்ப்புக் கோட்பாடுகள்

1. மொழிபெயர்ப்புக் கோட்பாடுகள்

0. 'மொழிபெயர்ப்பு' என்ற தமிழ்ச் சொல் 'மொழி', 'பெயர்ப்பு' ஆகிய சொற்களின் தொகுதியாக அமைந்துள்ளது. இதில் 'பெயர்ப்பு' என்பது கருத்திலுடைய மொழியைப் பெயர்த்தல் என்ற பொருளைக் கொண்டது. மேலும் மொழிபெயர்ப்பைக் குறிக்கும் பிற சொற்களாக மொழிமாற்றுதல், மொழியாக்கம், பரிபாடை, (வடமொழி), தர்ஜுமா (அரபி) போன்றன தமிழிலும், விவர்த்தனம், தர்ஜுமா, பரிபாஷா, பாஷாந்தரணம், பாஷாந்தரீகரணம், அனுவாதம் (மீண்டும் சொல்லுதல்) போன்றன மலையாளத்திலும் வழக்கு பெற்றுள்ளன. பொதுவாக மொழிபெயர்ப்பு எப்போது தொடங்கியது என்று திட்டவட்டமாகக் கூறமுடியாது. ஏனெனில் மொழிபெயர்ப்பு என்பது பல்வேறு மொழிகளின் தோற்றத்தோடு தொடர்புடையது. எனவே ஒரு மொழியைப்பேசும் மக்கள் தங்கள் கருத்துக்களை மற்றொரு மொழியைப் பேசும் மக்களோடு பரிமாறிக்கொள்ளத் தொடங்கியபோது மொழிபெயர்ப்பும் தோன்றியிருக்கவேண்டும் என்று இதன் தோற்றம் பற்றி ஊகிக்கலாம். இவ்வாறு பேச்சு மொழியில் கருத்துப்பரிமாற்றத்திற்காகப் பயன்பட்ட மொழிபெயர்ப்பு பிற்காலத்தில் இலக்கியங்களை மொழிமாற்றிக் கொள்ளவும் உதவிற்று. இப்படி மொழிபெயர்ப்பு நூல்கள் உருவாகிய காலத்தை கிடைக்கின்ற மொழி பெயர்ப்பு நூல்களை வைத்து ஒருவாறு தீர்மானிக்கலாம். இலக்கிய வரலாற்றின் அடிப்படையில் முதல் மொழிபெயர்ப்பாக ஹோமருடைய ஒடிசிக்கு கி.மு.250-இல் கிரேக்கத்திலிருந்து இலத்தீனுக்கு ஆன்ட்ரோனிக்கஸ் செய்த மொழிபெயர்ப்பைக் குறிப்பிடலாம். இவ்வாறு பண்டைக்காலத்திருந்தே தொடங்கிவிட்ட மொழிபெயர்ப்பு முயற்சிகள் உலக மொழிகள் பலவற்றிலும் பேரளவில் நடந்துவருகின்றன. தமிழிலும் இப்பணி மிகப்பழங்காலத்திலிருந்தே

நடந்துவந்ததை தொல்காப்பியக் குறிப்பின் வாயிலாக அறிந்து கொள்ளலாம். இவ்வாறு பண்டைக்காலம் முதலே செய்யப்பட்டுவந்த மொழிபெயர்ப்புப் பணியோடு அதனைச் செய்கின்ற முறை குறித்த எண்ணங்களும் உருப்பெறத்தொடங்கின. இவற்றைத் தமிழில் தொல்காப்பியர் முதலான இலக்கண நூலாரும் மேனாட்டில் மொழியியலாரும் நூற்பாக்கள், கட்டுரைகள், நூல்கள் போன்றவைகளாக அமைத்துத்தந்துள்ளனர். தற்காலத்தில் மொழிபெயர்ப்பு பயன்படுமொழியியலின் (Applied Linguistics) ஒருபிரிவாக வளர்ந்துள்ளதோடு இயந்திரங்களைப் பயன்படுத்தி அதனை மனிதன் செய்வதைவிடப் பன்மடங்கு வேகத்தில் செய்யும் நிலையும் தோன்றியுள்ளது. இவற்றை எல்லாம் உள்ளடக்கி மொழிபெயர்ப்புக் கோட்பாடுகளையும் கொள்கைகளையும் இவ்வியல் 1. மொழிபெயர்ப்பு குறித்த விளக்கங்கள், 2. மொழிபெயர்ப்பின் வகைகள், 3. மொழிபெயர்ப்புக் கொள்கைகள், 4. மொழிபெயர்ப்பின் தன்மைகள், 5. மொழிபெயர்ப்பின் படிநிலைகள், 6. மொழிபெயர்ப்புச் சிக்கல்கள், 7. மொழிபெயர்க்க இயலாத கூறுகள், 8. மொழிபெயர்ப்பைச்சோதிக்கும் முறைகள், 9. மொழிபெயர்ப்பாளரின் இயல்புகள் என்ற தலைப்புகளின் கீழ் சற்று விரிவாக விளக்கிச் செல்லும் நோக்கில் அமைந்துள்ளது.

1. மொழிபெயர்ப்பு குறித்த விளக்கங்கள்

'மொழிபெயர்ப்பு' என்பது ஒரு மொழியிலுள்ள செய்திகளை மற்றொரு மொழியில் மாற்றுவதை அடிப்படையாகக் கொண்டது. எனவே இதில் இரண்டு மொழிகள் ஈடுபடுத்தப்படுகின்றன. அதாவது முதல்மொழியிலுள்ள செய்திகள் இரண்டாவது மொழியில் மாற்றப்படுகின்றன எனலாம். எனவே முதலாவது மொழியை மூலமொழி அல்லது தருமொழி (Source Language) என்றும் இரண்டாவது மொழியை இலக்குமொழி அல்லது பெறுமொழி (Target Language) என்றும் அழைக்கலாம். இதனைப் பின்வருமாறு படத்தில் காட்டலாம்.

விளக்கப்பட எண்.1:1, மொழிபெயர்ப்பில் ஈடுபடுத்தப்படும் மொழிகள்

மொழி 1 (தருமொழி அல்லது மூலமொழி)	மாற்றம் →	மொழி 2 (இலக்குமொழி அல்லது பெறுமொழி)

மொழிபெயர்ப்பு பற்றி அறிஞர்களிடையே வெவ்வேறு விதமான கருத்துக்கள் நிலவுகின்றன. இவற்றை 1. பொதுவானவை, 2. மொழிபெயர்ப்பின் இயல்பினை விளக்குபவை, 3. மொழிபெயர்ப்பு இவ்வாறுதான் அமையவேண்டும் என்ற எதிர்பார்ப்புகளை அடிப்படையாகக் கொண்டவை, 4. மொழியியலார் குறிப்பிடுபவை என வகைப்படுத்தி விளக்கலாம் (பார்க்க, சு. சண்முக வேலாயுதம், மொழிபெயர்ப்பியல், பக்.1-14).

1. பொதுவானவை

மொழிபெயர்ப்பு பற்றியப் பொதுவான கருத்துக்களில் "மொழிபெயர்ப்பு என்பது மொழிகளுக்குள்ளே போடும் பாலத்திற்கு ஒப்பானதாகும்" என ஸ்ரீராமதேசிகன் குறிப்பிடுவதும் (1981:74), "ஒரு மொழியின் கண்ணுள்ள சில அறிவார்ந்த இன்பியல் மரபுகளை மற்றொரு மொழிக்கு மாற்றுவதே மொழி பெயர்ப்பின் நோக்கமாகும்" என ஆண்டன்பப்போவிக் (1970:78) குறிப்பிடுவதும், "ஒரு மொழியின் கண்ணுள்ள செய்தியை வேறொரு மொழியில் பொருள் வேறுபாடின்றிச்சுவையும் தன்மையும் குன்றாமல் அப்படியே மாற்றுவது மொழி பெயர்ப்பாகும்" என மு. கோவிந்தராசன் (1980:213) குறிப்பிடுவதும்

இங்கு சுட்டிக்காட்டத்தக்கன. இவற்றிலிருந்து மொழிபெயர்ப்பு மொழிகளுக்கிடையே இணைப்பை ஏற்படுத்தும் நோக்கிலமைந்த பாலமாகவும், சிறந்த செய்திகளை ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்குத் தரும் நோக்கிலமைந்த கருத்துப்பரிமாற்றக் கருவியாகவும் உள்ளது எனலாம்.

2. மொழிபெயர்ப்பின் இயல்பினை விளக்குபவை

மொழிபெயர்ப்பின் இயல்பை, தென்புலோலியூர் மு. கணபதிப்பிள்ளை (1967:11) "மொழிபெயர்ப்பு எனப்படுவது ஒரு மொழியிலிருந்து இன்னொரு மொழிக்குச் சொல்லுக்குச் சொல்லாகப் பெயர்த்து அடுக்கி வைப்பதன்று. வாக்கியங்களிலுள்ள சொற்களுக்கு மற்றமொழிகளிலிருந்து நேரான சொற்களைப்பெய்து வாக்கியங்களாக்கி அமைத்து விடுவதுமன்று. உண்மையில் பெயர்த்து எழுதப்படவேண்டியது பொருளேயாகும். எடுத்துக் கொண்ட பொருளின் கருத்தும் நுட்பமும் நயமும் தோன்ற ஏற்றவாறு கூட்டியும் குறைத்தும் சுருக்கியும் விரித்தும் பெயர்த்தும் அமைப்பதே மொழிபெயர்ப்பாகும்" என விளக்கியுள்ளார். ஐசோடார் பிஞ்சக் (1977:38) "மூலத்திற்குச் சமமான பெறுமொழி இணைகளைக் கண்டறியும் செயல்முறையே மொழிபெயர்ப்பு "என விளக்கம் தந்துள்ளார். மேலும் லான்பின்லே (1971:2) "மூலத்தோடு நான் ஏதாவது கூட்டியோ குறைத்தோ மொழிபெயர்த்தால் அது மொழிபெயர்ப்பு என்று கொள்ளப்படாமல் சுருக்கம், தழுவல் என்றே அழைக்கப்படும்" என்றும், தியோடர் சேவரி (1968) "மூலநூல் நேரடியாகவும், மறைமுகமாகவும் சரளமாகவும், மகிழ்ச்சியாகவும், சோம்பலாகவும், கம்பீரமாகவும், கம்பீரமற்றும் காணப்படும். ஆனால் மொழிபெயர்ப்பு என்பது மொழிபெயர்ப்பாளனின் திறனைப்பொறுத்து இதில்

ஏதாவது ஒன்றாக அமையும்" என்றும் குறிப்பிட்டுள்ளனவும் இங்கு சுட்டிக் காட்டத்தக்கன. இவ்விளக்கங்களிலிருந்து வடிவத்தைவிட பொருளுக்கு முன்னுரிமை கொடுத்து மொழிபெயர்ப்பை அமைக்கவேண்டும் என்றும், கூட்டல், குறைத்தல் ஏதுமின்றி மூலத்திற்கு சமமான அளவில் மொழிபெயர்ப்பு அமையவேண்டும் என்றும், அவ்வாறு அமையாவிட்டால் அது மொழிபெயர்ப்பு என்ற தகுதியை இழந்துவிடும் என்றும் அறிந்துகொள்ளலாம்.

3. மொழிபெயர்ப்பு அமையவேண்டிய முறைகுறித்த எதிர்பார்ப்புகளை அடிப்படையாகக் கொண்டவை

மொழிபெயர்ப்பு அமையவேண்டிய முறை குறித்த எதிர்பார்ப்புகளை மு. கோவிந்தராசன் "மூலநூலில் உள்ள ஆற்றொழுக்கான நடை அந்த நடையில் உள்ள எளிமை, இனிமை, கம்பீரம், பொருள்வளம் முதலியன கூடிய மட்டும் மொழிபெயர்ப்பில்இருக்கவேண்டும் (1980:217) என்றும், "மொழிபெயர்ப்பு அறிஞர்களுக்கு மட்டுமல்லாமல் சாதாரண மக்களுக்கும் புரியக்கூடியதாய் இருக்கவேண்டும் (1980:226) என்றும் குறிப்பிட்டுள்ளார். உட்உறவ்ஸ்லெ "மூலப்படைப்பைப்போன்று மொழிபெயர்ப்பும் எளிமையாக அமையவேண்டும்" (1968:43) என்றும், "மூலநூல் எந்த அளவுக்கு அதன் வாசகர்களைப் பாதித்ததோ அந்த அளவுக்கு மொழிபெயர்ப்பும் அதன் வாசகர்களைப் பாதிப்படையச் செய்யவேண்டும்" (1968:44) என்றும் Art of Translation என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். மேலும் மு. கணபதிபிள்ளை (1967:11) "மொழிபெயர்ப்பு மூலநூலின் உணர்வினை அப்படியே பிரதிபலிப்பதோடு மூலத்திலிருப்பதை கூட்டாமலும் மற்றும் குறைக்காமலும் இருக்கவேண்டும்" என குறிப்பிட்டுள்ளதும் இங்கு சுட்டிக் காட்டத்தக்கது. இவற்றிலிருந்து மொழிபெயர்ப்பு மூலத்தின் கருத்தை

மட்டுமல்லாமல் அதில் காணப்படும் உணர்வோட்டத்தை (Effect) மீட்டுத்தர வேண்டும் என்பது வலியுறுத்தப்படுவதை அறிந்து கொள்ளலாம்.

4. மொழியியலார் குறிப்பிடுபவை

மொழிபெயர்ப்பு பற்றி மொழியியலார் பல்வேறு விதமான கருத்துக்களைத் தந்துள்ளனர். அவற்றில் கேட்போர்டு (1969:20) ஒரு மொழியிலுள்ள கருத்துக்களை அதற்குச் சமமானதாக மற்றொரு மொழியில் மாற்றுவது மொழிபெயர்ப்பாகும்" எனவும், நைடா, சார்லஸ்டாபர் ஆகியவர்கள் (1982:12) "தருமொழிச் செய்தியை அதற்குச் சமமான இணைகளால் கருத்தும் நடையும் குன்றாமல் பெறுமொழியில் அவ்வாறே மீட்டுத்தருவது மொழிபெயர்ப்பாகும்" எனவும், சூசன்பெசன்ட் (1980:13) "ஒருவகை மொழிக்குறிகளில் காணப்படும் கருத்தை மற்றொரு வகை மொழிக்குறிகளில் மாற்றுவது மொழிபெயர்ப்பாகும்" எனவும் குறிப்பிட்டுள்ளதைச் சுட்டிக்காட்டலாம். இங்கு கருத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து மொழிபெயர்ப்பை அமைப்பதில் மொழியியலாரிடையே ஒற்றுமை நிலவுகிறது. ஆனால் நைடா, சார்லஸ் டாபர் ஆகியவர்கள் மொழிபெயர்ப்பின் போது தருமொழிவடிவத்தின் நடையையும் கவனிக்கவேண்டும் என குறிப்பிட்டிருப்பதும் இங்கு எடுத்துச்சொல்லத்தக்கதாகும்.

2. மொழிபெயர்ப்பின் வகைகள்

மொழிபெயர்ப்பு என்பது பல்வேறு வகை வேறுபாடுகளைக்கொண்ட ஒன்றாகத்திகழ்கின்றது. இதனைத் தருமொழிவடிவம் பெறுகின்ற மாற்றத்தின் தன்மையைப்பொறுத்து 1. ஒருமொழிக்குள்ளே செய்யப்படும் மொழிபெயர்ப்பு 2. ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்குச் செய்யப்படும் மொழிபெயர்ப்பு

3. மொழியைக் குறியீடுகளாக மாற்றும் மொழிபெயர்ப்பு (பார்க்க. ரோமன் ஜேக்கப்சன், 1959:232), 4. மொழியைச் செயல்கூறுக ளாகவும், ஒலி, ஒலிப்பதிவுகளாகவும் மாற்றும் மொழிபெயர்ப்பு எனப் பொதுநோக்கில் வகைப்படுத்தலாம்.

1. ஒருமொழிக்குள்ளே செய்யப்படும் மொழிபெயர்ப்பு(Intralingual Translation

தருமொழிவடிவத்தை அதேமொழியில் கருத்தளவில் வேறுபாடின்றி மாற்றிய மைத்தலை ஒருமொழிக்குள்ளே செய்யப்படும் மொழிபெயர்ப்பு எனலாம். இவ்வகை மொழிபெயர்ப்பை 1. மூலவடிவத்தின் இலக்கியவகையை மாற்றிய மைத்தல், 2. மூலவடிவத்தின் நடையை மாற்றியமைத்தல் என இருவேறு நிலை களில் அமைக்கலாம்.

1. மூலவடிவத்தின் இலக்கிய வகையை மாற்றியமைத்தல்

மூலவடிவம் காப்பியம், பாடல், நாவல், சிறுகதை, நாடகம், கட்டுரை போன்ற இலக்கியவகைகளில் ஏதாவது ஒன்றைச்சார்ந்ததாக அமைந்திருக்க அதனை அதேமொழியில் மற்றொரு இலக்கிய வகையைச் சார்ந்ததாக மாற்றி யமைத்தலை இவ்வகையில் அடக்கலாம். சான்றாக ஜெயகாந்தன் 'அக்கினிபிரவேசம்' என்ற சிறுகதையை 'சிலநேரங்களில் சிலமனிதர்கள்' என்ற தலைப்பில் நாவலாக மாற்றி எழுதியுள்ளதையும், மலையாளத்தில் சி.வி. இராமன்பிள்ளை தன்னுடைய நாவலான மார்த்தாண்டவர்மாவை நாடகமாக மாற்றியுள்ளதையும் குறிப்பிடலாம்.

2. மூலவடிவத்தின் நடையை மாற்றியமைத்தல்

மூலவடிவம் பழங்கால நடை, தற்கால நடை, பேச்சுநடை, இலக்கிய நடை, கருத்துவிளக்கநடை, கவிதை நடை போன்ற நடைவகைகளில்

ஏதாவது ஒன்றைப் பெற்றதாக அமைந்திருக்க அதனை அதே மொழியின் மற்றொரு நடையில் மாற்றியமைத்தலை இவ்வகையில் அடக்கலாம். சான்றாக, காக்கைப் பாடினியார் நச்செள்ளையார் இயற்றியுள்ள புறம் 278-ஆம் பாடலை மு. கருணாநிதி (1977) "குடிசைதான்! ஒருபுறத்தில் . . . . . . .அவன் நாக்கெங்கே" என்ற கவிதையில் அதன் பழங்கால நடையமைப்பை மாற்றி சமகால நடையில் சற்று விரிவாக அமைத்துள்ளதைக் குறிப்பிடலாம் (பார்க்க, கலைஞரின் கவிதைகள், பக்.6-8).

2. ஒருமொழியிலிருந்து மற்றொரு மொழிக்குச் செய்யப்படும் மொழிபெயர்ப்பு

(Interlingual Translation)

ஒருமொழியிலுள்ள செய்திகளை மற்றொரு மொழிக்கு மாற்றியமைப் பதை அடிப்படையாகக் கொண்ட இவ்வகையைப் பொதுவாக அனைவரும் மொழிபெயர்ப்பு என ஒப்புக்கொள்கின்றனர். இது செய்கின்ற முறையைப் பொறுத்தும், தேவையைப் பொறுத்தும் பல்வேறு வகை வேறுபாடுகளைக் கொண்டுள்ளது. இத்தகைய வகை வேறுபாடுகளை 1. ஆண்ட்ரோ லெபிவெரெ செய்துள்ள வகைப்பாடு, 2. சண்முகவேலாயுதம் செய்துள்ள வகைப்பாடு, 3. சிவசண்முகம், தயாளன் ஆகியவர்கள் செய்துள்ள வகைப்பாடு, 4. கேட்ஃபோர்டு செய்துள்ள வகைப்பாடு, 5. இலக்கியவகையின் அடிப்படையிலான வகைப்பாடு என்பனபோன்று பகுத்து விளக்கலாம்.

1. ஆண்ட்ரோ லெபிவெரெ செய்துள்ள வகைப்பாடு

ஆண்ட்ரோலெபிவெரெ என்பவர் 1. ஒலிபெயர்ப்பு, 2. கவிதைக்கு உரைநடை மொழிபெயர்ப்பு, 3. எதுகைமோனை மொழிபெயர்ப்பு, 4. மொழிமாற்றி விளக்குதல் (பார்க்க. சிவசண்முகம் சி, தயாளன் வே மொழிபெயர்ப்பியல், பக்.33-34) என வகைப்படுத்தியுள்ளார்.

1. ஒலிபெயர்ப்பு (Transliteration)

தருமொழிவடிவத்தின் மொழியை மாற்றியமைக்காமல் அதன் ஒலிகளை மட்டும் பெறுமொழி ஒலிகளாக மாற்றியமைத்தலை ஒலிபெயர்ப்பு எனலாம். பொதுவாக இம்முறையைப் பயன்படுத்தி தருமொழிவடிவத்தின் பெயர்கள் மற்றும் சிறப்புச் சொற்களை மொழிமாற்றிக் கொள்கின்றனர். மேலும் ஒருமொழியைப் பேசத்தெரிந்த எழுதத்தெரியாத நிலையில் தமக்குத்தெரிந்த எழுத்துவழி,பேசத் தெரிந்த மொழி நூல்களைப் பெயர்த்து எழுதிவைத்துக்கொள்வதும் வழக்கத்தில் உள்ளது. வடமொழி நூல்களை தமிழ் முதலிய எழுத்துக்களில் எழுதிவாசிப்பதை இதற்குக் காட்டாகக் கூறலாம். ஆந்திரம், கர்நாடகம், கேரளம் போன்ற மாநிலங்களில் வாழும் தமிழர் நாலாயிரத்திவ்ய பிரபந்தம், நாட்டுக்கதைப்பாடல் போன்றவற்றை அவ்வம் மாநில மொழி எழுத்துக்களில் எழுதிவைத்துக்கொள்வதையும் இங்கு சுட்டிக்காட்டலாம். திரு. நாராயணகுரு அவர்கள் தமிழில் எழுதிய தேவாரப்பாடல்களை கேரளமக்கள் மலையாள எழுத்தில் எழுதிவாசித்து வருவதும் இங்கு நினைவு கூறத்தக்கது. கிரேக்க நாடகமொன்றில் கன்னடமொழி வசனங்கள் காணப்படுவதும், தெலுங்கிலுள்ள பண்டிதராத்திய சரித்திரத்தில் (கி.பி.13) தமிழ்ப்பாடல் தெலுங்கு எழுத்தில் இடம்பெற்றிருப்பதும் ஒலி பெயர்ப்புக்கு வேறுவகைக்காட்டுகளாகும். தற்காலத்தில் தமிழ்நூல்களை ஒலிபெயர்ப்பின்மூலம் ரோமன் எழுத்தில் மாற்றுகின்ற பணியும் நடைபெற்றுவருகிறது. இதற்குச் சான்றாக தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள 'A Computer Analysis of Thirukkural'என்ற நூலைச் சுட்டிக்காட்டலாம்.

2. கவிதைக்கு உரைநடை மொழிபெயர்ப்பு (Poetry into Prose)

கவிதையை உரைநடை வடிவில் மொழிபெயர்ப்பதை இவ்வகையில் அடக்கலாம். ஆனால் இவ்வாறு மொழிபெயர்க்கும்போது மூலவடிவத்திலுள்ள

கருத்துக்களில் மாற்றம் ஏற்படாமல் இருக்க மொழிபெயர்ப்பாளர் கவனஞ் செலுத்துவது இன்றியமையாத ஒன்றாகும். இவ்வகை மொழிபெயர்ப்புக்குச் சான்றாக,

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு" (குறள்-1)

என்பதை எம்.எஸ். பூரணலிங்கம் பிள்ளை, " All letters begin with A. This word has the Supreme Being as its first "

என உரைநடையில் மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம்.

3. எதுகை மோனை மொழிபெயர்ப்பு (Rhymed Translation)

தருமொழிக் கவிதையிலுள்ள எதுகை, மோனை, இயைபு போன்ற தொடை நயங்கள் பெறுமொழிவடிவத்திலும் அமையுமாறு மொழிபெயர்ப்பை அமைப்பது எதுகை, மோனை மொழிபெயர்ப்பாகும். இவ்வகை மொழிபெயர்ப்பு ஓசையை அடிப் படையாகக்கொண்டது. சான்றாக,

"மங்ஙும் திஙஜ்வாலமேலே - பொடி
பொங்கி வானில் புகபோலெ"

என்ற குமாரனாசானின் (1988:53) செய்யுளை

"செங்கதிர்ச் சூரியன் மேலே - புழுதி
பொங்கிமு ழும்புகை போலே"

என நெல்லை சு.முத்து (1992:34) மூலவடிவத்தில் உள்ள எதுகை, இயைபு ஆகிய தொடைகள் பெறுமொழிவடிவத்திலும் அமையுமாறு ஓசை குன்றாது மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம்.

4. மொழிமாற்றி விளக்குதல் (Interpretation)

மூலமொழிவடிவத்திலுள்ள கருத்துக்களைவிளக்கும் நோக்கில் பெறுமொழி வடிவத்தை அமைப்பது மொழிமாற்றி விளக்குதலாகும். மொழிமாற்றிவிளக்கும் முறை மிகுதியும் மேடைப்பேச்சுகளை உடனுக்குடன் மொழிபெயர்க்கப் பயன்படுத்தப்படுகிறது.

2. சண்முகவேலாயுதம் செய்துள்ள வகைப்பாடு

சு. சண்முகவேலாயுதம் (1985:15-26) மொழிபெயர்ப்பை 1. சொல்லுக்குச்சொல் மொழிபெயர்த்தல், 2. விரிவான மொழிபெயர்ப்பு, 3. சரியான மொழிபெயர்ப்பு, 4. சுருக்கமான மொழிபெயர்ப்பு, 5. தழுவல், 6. மொழியாக்கம் என வகைப்படுத்தியுள்ளார். இவற்றைப் பின்வருமாறு விளக்கலாம்.

1. சொல்லுக்குச் சொல் மொழிபெயர்ப்பு (Literal Translation)

தருமொழிவடிவத்தை சொல்லுக்குச்சொல் அப்படியே மொழிபெயர்த்தலை இவ்வகையில் அடக்கலாம். ஆனால் இவ்வகை மொழிபெயர்ப்பு சில வேளைகளில் தெளிவின்மையை ஏற்படுத்தவும் செய்யும். சான்றாக, காரூர் நீலகண்டபிள்ளை யின் (1978:489) 'மோதிரம்' என்ற சிறுகதையில் "எங்கோட்டு போகுந்ந வழியோ' குஞ்சுநாயர் சோதிச்சு. வல்லேடத்தும் போகுந்ந வழி வேணோ" என காணப்படும் பகுதியை டி. தேவதாஸ், சி. நாச்சிமுத்து (1992:59) ஆகியவர்கள் "எங்கு போகிறவழியோ! குஞ்சுநாயர் கேட்டார், எனக்கு எங்காவது போகிற வழிவேணுமா" என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதை "எங்க போறீங்க! குஞ்சுநாயர் கேட்டார். நான் எங்கபோக" என மொழிபெயர்த்திருந்தால் சற்றுத்தெளிவாக அமைந்திருக்கும்.

2. விரிவான மொழிபெயர்ப்பு (Amplification)

விரிவான மொழிபெயர்ப்பு என்பது மூலமொழியிலுள்ள கருத்துக்களின் மொழிபெயர்ப்புகளோடு அவை தொடர்பான பிற செய்திகளையும் பெற்று அமைவதாகும்.

3. சரியான மொழிபெயர்ப்பு (Close or Accurate Translation)

தருமொழி வடிவத்தின் செய்திகள் எதுவும் விட்டுப்போகாமலும், பெறுமொழி வாசகர்களுக்குப் புரியத்தக்க விதத்திலும் அமைக்கப்பட்ட மொழி பெயர்ப்பை இவ்வகையில் அடக்கலாம். சான்றாக,

"தரிகு நீ
பீதசாயந்தனத்தின்றெ நகரமே,
நின்றெ வைத்யுதாலிம்கனம்"

என்ற பாலச்சந்திரன் சுள்ளிக்காடின் (1990:109) வரிகளை

"தருக நீ
மஞ்சள் அந்தியுடைய நகரமே
நின் மின்சார ஆலிங்கனம்"

என வி.எஸ். அனில்குமார், பாரதிபுத்திரன் (1991:17) ஆசியவர்கள் மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம்.

4. சுருக்கமான மொழிபெயர்ப்பு (Abridgment)

தருமொழிவடிவத்திலுள்ள அனைத்துச்செய்திகளையும் பெறுமொழிவடிவத்தில் கொண்டு வராமல் சிலவற்றை நீக்கிவிட்டு மொழிபெயர்ப்பை அமைப்பது சுருக்கமான மொழிபெயர்ப்பாகும். சான்றாக, எஸ்.கே. பொற்றக்காடின்

'ஒரு தேசத்தின்கதை' என்ற நாவலுக்கு ஸ்ரீபிரகாஊ் செய்துள்ள மொழி பெயர்ப்பைக் (மஞ்சரி, மார்ச்.1984) குறிப்பிடலாம்.

5. தழுவல்(Adaptation)

தருமொழி வடிவத்தின் கருத்தை வாங்கிக்கொண்டு அதில் சிலவற்றைக் கூட்டியும், சிலவற்றைக் குறைத்தும் ஒன்றிற்குப் பதிலாக மற்றொன்றை அமைத்தும் பெறுமொழிவடிவத்தை அமைத்தலை இவ்வகையில் அடக்கலாம். சான்றாக, லார்டு லிட்டன் எழுதிய 'த ஸீக்ரெட்வே' என்ற நூலைத் தழுவி பேராசிரியர் சுந்தரம்பிள்ளை 'மனோன்மணியம்' என்னும் நாடகத்தை அமைத்துள்ளதைக்குறிப்பிடலாம்.

6. மொழியாக்கம் (Transcreation)

தருமொழிக் கருத்துக்களைப் பெறுமொழியின் மாற்றிணைகளால் அவை மேம்படும்படியாக அமைத்தலை மொழியாக்கம் எனலாம். சான்றாக, உமர்கய்யாமின் ருபையாத்திலுள்ள

"Here with a loaf of bread, beneath the bough
A flask of wine, a book of verse and thou
Beside me singing in the wilderness
And wilderness is paradise"

என்ற இப்பகுதியை

"வெயிற்கேற்ற நிழலுண்டு, வீசுந் தென்றல் காற்றுண்டு
கையில் கம்பன் கவியுண்டு, கலசம் நிறைய மதுவுண்டு
தெய்வகீதம் பலவுண்டு, தெரிந்துபாட நீயுண்டு
வையந்தருமிவ் வளமின்றி வாழும் சொர்க்கம் வேறுண்டோ?"

எனக் கவிமணி மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதில் 'a book of verse' என்பதைக் 'கம்பன் கவி' என மொழிபெயர்த்திருப்பது குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

3, சிவசண்முகம், தயாளன் ஆசியவர்கள் செய்துள்ள வகைப்பாடு

சி. சிவசண்முகம், வே. தயாளன் ஆசியவர்கள் (1989: 39-53) மொழிபெயர்ப்பை, 1. குழந்தைகளுக்கான மொழிபெயர்ப்பு, 2. திரைப்பட வசனங்களின் மொழி_பெயர்ப்பு, 3. சமயநூல்களின் மொழிபெயர்ப்பு, 4. அறிவியல் மொழிபெயர்ப்பு என வகைப்படுத்தியுள்ளனர்.

1. குழந்தைகளுக்கான மொழிபெயர்ப்பு

குழந்தைகளைக் கருத்தில் கொண்டு செய்யப்படும் மொழிபெயர்ப்பு எளிமையானதாகவும் நயம் உடையதாகவும் இருக்கவேண்டும். இங்கு மொழி பெயர்ப்பாளர் மூலநூலாசிரியருக்கு துரோகம் விளைவிக்கக்கூடாது என்பதை விட குழந்தைகள் எவ்வாறு புரிந்துகொள்வார்கள் என்பதிலேயே கவனத்தை மிகுதியாகச் செலுத்தவேண்டும்.

2. திரைப்பட வசனங்களின் மொழிபெயர்ப்பு

திரைப்பட வசனங்களின் மொழிபெயர்ப்பு சொல்லுக்குச்சொல் என்றில்லாமல் மூலவடிவத்தில் காணப்படும் வசனங்களின் மொத்தக் கருத்தின் அடிப்படையில் அதன் உணர்ச்சியை (Effect) மீட்டுத்தருவதாக அமையவேண்டும்.

3. சமயநூல்களின் மொழிபெயர்ப்பு

சமயநூல்களின் மொழிபெயர்ப்பு குறைத்தல், கூட்டல், ஒன்றிற்குப் பதிலாக மற்றொன்றை அமைத்தல் போன்ற நிலைகளின்றி மூலத்திற்குச் சமமான அளவில் அமையவேண்டும். ஆனால் இங்கு மொழிபெயர்ப்பாளர் அதைப்பயன் படுத்துகின்ற மக்களைக் கருத்தில் கொண்டு அதன் நடையைச் செப்பம் செய்ய வேண்டும்.

4. அறிவியல் மொழிபெயர்ப்புகள்

அறிவியல், தொழில்நுட்பம் ஆகிய துறைகளின் வளர்ச்சி உலக அளவில் மிகப்பரவலான நிலையில் உள்ளது. எனவே அவைசார்ந்த இலக்கியங்களின் மொழிபெயர்ப்புகளும் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளன. அறிவியல், தொழில்நுட்ப இலக்கியங்களில் உணர்ச்சி மற்றும் மொழிக்கூறுகளுக்குச் சிறப்பு இல்லை. ஆதலால் மொழிபெயர்ப்பாளர்கள் தருமொழி வடிவத்தில் கருத்தைப் பெறுமொழியில் மாற்றித் தந்தால் போதுமானது. ஆனால் அறிவியல், தொழில் நுட்ப இலக்கிய மொழிபெயர்ப்பாளர்கள் அவ்வத்துறையறிவு மிகுந்தவர்களாக இருந்தால்தான் அவர்களால் தரமான மொழிபெயர்ப்புகளை உருவாக்க முடியும். மேலும் அறிவியல் தொழில் நுட்ப இலக்கியங்களின் மொழிபெயர்ப்பில் குறியீடுகள், கலைச்சொற்கள் போன்றவை சிக்கல்களை உருவாக்குகின்றன. இவற்றில் குறியீடுகளை அவ்வாறே உலகளாவிய நிலையில் ஏற்றுக்கொள்ளப்பட்டபடியும், கலைச்சொற்களை 1. ஒலிபெயர்த்தல், 2. கலவை வடிவாக்குதல், 3. கடன் மொழிபெயர்ப்பாக்குதல், 4. கருத்துப்பெயர்ப்பு செய்தல் போன்ற நிலைகளின் படியும் அமைக்கலாம்.

1. ஒலிபெயர்த்தல் (Transliteration)

தருமொழிச்சொற்களைப் பெறுமொழி எழுத்துக்களால் அப்படியே எழுதுவது ஒலிபெயர்ப்பாகும். கலைச்சொல் படைப்பின்போது ஒலிபெயர்க்க வேண்டிய சொற்களாக 1. மொழிபெயர்ப்பில் சரியான சொல் அகப்படாதன (சுவிச், மீட்டர்), 2. பொருள்கள் அவற்றைக் கண்டுபிடித்த நாடு அல்லது கண்டுபிடித்த அறிஞர் போன்ற பெயர்களால் அறியப்படுவன (ஓல்ட், வாட், டீசல், டயர்), 3. சுருக்கெழுத்துக்களால் அறியப்படுவன (லேசர், யுனஸ்கோ, எய்ட்ஸ்), 4. தமிழில் பிறமொழிச்சொல் என்ற வேறுபாடின்றி வழங்கப்படுவன (சிமெண்ட், பல்பு, லாரி, கார்) போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

2. கலவை வடிவாக்குதல் (Loan Blend)

தருமொழிச்சொல்லின் ஒருபகுதியை ஒலிபெயர்த்தும் மற்றொரு பகுதியை மொழிபெயர்த்தும் பெறுமொழிச் சொல்லை அமைத்தலை இவ்வகையில் அடக்கலாம். சான்றாக Vulcanization வல்கனைற்றுச் செய்தல் (ஒலிபெயர்ப்பு - மொழிபெயர்ப்பு), Leadacetate ஈய வசற்றேற்று (மொழிபெயர்ப்பு-ஒலி பெயர்ப்பு) போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

3. கடன் மொழிபெயர்ப்பாக்குதல் (Loan Translation)

தருமொழிச்சொல்லில் மொழியைமட்டும் மாற்றிப் பெறுமொழிவடிவத்தை அமைத்தலை இவ்வகையில் அடக்கலாம். சான்றாக Fifth Colum - ஐந்தாம்படை, Crocodile tears - முதலைக் கண்ணீர், Aciddye - அமிலச்சாயம், Eye drop - கண்சொட்டு போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

4. கருத்துப்பெயர்ப்புசெய்தல்(Loan Creation)

சொல்லை அப்படியே நேருக்குநேர் மொழிபெயர்க்காமல் அதன் கருத்தின் அடிப்படையில் பெறுமொழிச்சொல்லை அமைத்தலை இவ்வகையில் அடக்கலாம். சான்றாக Life Cycle-வாழ்க்கைவரலாறு, Lamp black - சுடர்கரி போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

கெட்ஃபோர்டு செய்துள்ள வகைப்பாடு

ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்குச் செய்யப்படும் மொழிபெயர்ப்பின் வகைகளாக 1. முழுமையான மொழிபெயர்ப்பு, 2. பகுதி மொழிபெயர்ப்பு, 3. மொத்த மொழிபெயர்ப்பு, 4. வரையறுக்கப்பட்ட மொழிபெயர்ப்பு, 5. ஒலியன்களின் மொழிபெயர்ப்பு, 6. எழுத்துப்பெயர்ப்பு, 7. இலக்கண மொழிபெயர்ப்பு, 8. சொற்களின் மொழிபெயர்ப்பு,

9. கட்டுடைய மொழிபெயர்ப்பு, 10. கட்டற்ற மொழிபெயர்ப்பு போன்ற வற்றைக் கேட்ஃபோர்டு (1969:20-26) சுட்டிக் காட்டியுள்ளார்.

1. முழுமையான மொழிபெயர்ப்பு(Full Translation)

தருமொழிவடிவத்தின், ஒலியன், எழுத்து, சொல், இலக்கணம் போன்ற அனைத்துப் பகுதிகளையும் பெறுமொழியில் மாற்றியமைப்பது முழுமையான மொழி பெயர்ப்பாகும்.

2. பகுதி மொழிபெயர்ப்பு (Partial Translation)

தருமொழிவடிவத்தின் ஒலியன், எழுத்து, சொல், இலக்கணம் போன்ற கூறுகளில் சிலவற்றை நீக்கிவிட்டுச் சிலவற்றை மட்டும் மொழிபெயர்ப்பது பகுதி மொழி பெயர்ப்பாகும்.

3. மொத்த மொழிபெயர்ப்பு (Total Translation)

தருமொழிவடிவத்தின் ஒலியன், எழுத்து, சொல், இலக்கணம் போன்ற அனைத்தையும் பெறுமொழிக்கேற்ற அமைப்பில் மாற்றி அமைப்பது மொத்த மொழிபெயர்ப்பாகும். இதில் தருமொழியின் ஒலியன், எழுத்து ஆகியவை பெறு மொழியில் தருமொழிக்குச் சமமற்றதாக அமையும்.

4. வரையறுக்கப்பட்ட மொழிபெயர்ப்பு (Restricted Translation)

தருமொழிவடிவத்தின் ஒலியன், எழுத்து, சொல், இலக்கணம் போன்றவற்றில் எவையேனும் ஒன்றைமட்டும் மொழிபெயர்ப்பது வரையறுக்கப்பட்ட மொழிபெயர்ப் பாகும்.

5. ஒலியன்களின் மொழிபெயர்ப்பு (Phonological Translation)

தருமொழி ஒலியன்களை அதற்குச் சமமான பெறுமொழி ஒலியன்களாக மாற்றியமைப்பது ஒலியன்களின் மொழிபெயர்ப்பாகும்.

6. எழுத்துப்பெயர்ப்பு (Graphological Translation)

தருமொழி எழுத்துக்களைப் பெறுமொழி எழுத்துக்களாக மாற்றியமைப்பது எழுத்துப்பெயர்ப்பாகும்.

7. இலக்கண மொழிபெயர்ப்பு (Grammatical Translation)

தருமொழிவடிவத்தின் இலக்கணத்தைப் பெறுமொழி இலக்கணமாக மாற்றி யமைப்பது இலக்கண மொழிபெயர்ப்பாகும்.

8. சொற்களின் மொழிபெயர்ப்பு (Lexical Translation)

தருமொழி வடிவத்திலுள்ள சொற்களைப் பெறுமொழிச் சொற்களாக மாற்றியமைப்பது சொற்களின் மொழிபெயர்ப்பாகும்.

9. கட்டுடைய மொழிபெயர்ப்பு(Rank-bound Translation)

தருமொழிவடிவத்தின் சொல், தொடர் போன்றவற்றிற்குச் சமமான சொல், தொடர் போன்ற வடிவ இணைகளைத் தேர்வு செய்து பெறுமொழி வடிவத்தை அமைப்பது கட்டுடைய மொழிபெயர்ப்பாகும்.

10. கட்டற்ற மொழிபெயர்ப்பு (Rank-free Translation)

தருமொழிவடிவத்தின் சொல், தொடர் போன்றவற்றிற்குச் சமமற்ற சொல், தொடர் போன்ற இணைகளால் பெறுமொழி வடிவத்தை அமைப்பது கட்டற்ற மொழிபெயர்ப்பாகும்.

கேட்போர்டு சுட்டிக்காட்டியுள்ள இவ்வகைகள் மிகுதியும் மொழிபெயர்ப்பைப் புரிந்துகொள்ளும் நோக்கில்அவரால் வரையறை செய்துகொள்ளப்பட்டவை ஆகும்.

5. இலக்கிய வகையின் அடிப்படையிலான வகைப்பாடு

மொழிபெயர்ப்பை இலக்கிய வகையின் அடிப்படையில் 1. கவிதை மொழிபெயர்ப்பு, 2. புனைகதை மொழிபெயர்ப்பு, 3. அறிவுத்துறை சார்ந்த மொழிபெயர்ப்பு என வகைப்படுத்தலாம்.

1. கவிதை மொழிபெயர்ப்பு

கவிதைகளை மொழிபெயர்ப்பதென்பது பிற இலக்கியவகைகளை மொழி பெயர்ப்பதை விடவும் சற்றுக் கடினமான பணியாகும். தமிழில் யாப்பு இலக்கணம் கவிதையின் உறுப்புகளை எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என வகைப்படுத்துகின்றது. இவற்றை மொழிபெயர்ப்பில் கொண்டுவர முடியாது. ஆனால் ஓரின மொழிகளிடையே (Cognate Language) செய்யப்படும் மொழி பெயர்ப்புகளில் இத்தகைய வடிவக்கூறுகளுக்கான இணைகளை பெறுமொழியில் ஓரளவுக்குத் தேர்வுசெய்ய முடியும். மேலும் உவமை, உருவகம் போன்ற அணிகள், உள்ளுறை, இறைச்சி, படிமம், குறிப்பு போன்ற பொருட்கூறுகள் முதலானவையும் மொழிபெயர்ப்பில் சிக்கல்களை விளைவிக்கின்றன. இதனால் மூலக்கவிதையை அதன் மொத்தக்கருத்தின் அடிப்படையிலும் அது கொண்டுள்ள உணர்வோட்டத்தின் அடிப்படையிலும் மொழிபெயர்க்கவேண்டும்.

2. புனைகதை மொழிபெயர்ப்பு

புனைகதைகள் கதை அல்லது கருத்தை மையப்பொருளாகக் கொண்டிருக்கும். எனவே அதன் ஓட்டத்தை அடிப்படையாகக்கொண்டு மொழிபெயர்ப்பை அமைக்க வேண்டும். புனைகதைகளில் உள்ள சொற்களுக்கும் அவற்றின் பொருளுக்கும் சிலவேளைகளில் தொடர்பற்ற தன்மை காணப்படும். இவ்விடங்களில் சொற்களை நோக்காது உரைக்கோவைகளை (Discourse) நோக்கி மொழிபெயர்ப்பை அமைக்கவேண்டும்.

3. அறிவுத்துறை சார்ந்த இலக்கியங்களின் மொழிபெயர்ப்பு

அறிவுத்துறை சார்ந்த இலக்கியங்களில் பெரும்பாலும் சொல்லுக்கும் அது தரவிரும்பும் பொருளுக்கும் தொடர்பு காணப்படும். எனவே பிற இலக்கிய வகைகளை மொழிபெயர்ப்பதைவிடவும் இவ்வகை இலக்கியங்களை மொழிபெயர்ப்பது எளிது. ஆனால் இவ்வகை இலக்கியங்களில் கலைச்சொற்கள் (Technical Terms) மிகுதியும் சிக்கல்களை விளைவிக்கின்றன. இவற்றை 1. ஒலிபெயர்த்தல்,

2. கலவை வடிவாக்குதல், 3. கடன் மொழிபெயர்ப்பாக்குதல், 4. கருத்துப் பெயர்ப்பு செய்தல் போன்ற நிலைகளின்படி சரிசெய்யலாம் (மேலும் விளக்கங்களுக்கு ஆய்வேட்டில் 1:2:4 என்ற பகுதியைப் பார்க்கவும்).

ஒருமொழியிலிருந்து மற்றொரு மொழிக்குச் செய்யப்படும் மொழிபெயர்ப்பின் வகை வேறுபாடுகளை ஆல்ட்ரோலெபிவெரே தன்மை, பொருள் ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டும், சண்முகவேலாயுதம் தன்மை, அளவை ஆகியவற்றை ஒட்டியும், கேட்ஃபோர்டு தன்மை, அளவை ஆகியவற்றைச்சார்ந்தும் அமைத்துள்ளனர். மேலும் இலக்கிய வகையின் அடிப்படையிலான பாகுபாடு உரைக்கோவையை ஒட்டியதாகவும் அமைந்துள்ளது எனலாம்.

3. <u>மொழியைக் குறியீடுகளாக மாற்றும் மொழிபெயர்ப்பு (Inter Semiotic Translation)</u>

தருமொழிவடிவத்தை ஓவியம், சிற்பம் போன்றவைகளாக மாற்றுவதை இவ்வகையில் அடக்கலாம். சான்றுகளாக புராணக்கதைகளை ஓவியம் மற்றும் சிற்பங்களாக கோவில் சுவர்களிலும் (பெரியபுராணம் தாராசுரம் கோவிலில் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளது), பாறைகளிலும் அமைத்துள்ளமையைக் குறிப்பிடலாம்.

4. <u>மொழியைச் செயல்கூறுகளாகவும், ஒலி, ஒலிப்பதிவுகளாகவும் மாற்றும் மொழிபெயர்ப்பு</u>

இவ்வகை மொழிபெயர்ப்பில் 1. மொழியைச்செயல் கூறுகளாக்கல், 2. மொழியை ஒலிப்பதிவுகளாக்கல், 3. மொழியை ஒலிப்பதிவுகளாக்கல் என்ற வகை வேறுபாடுகள் உள்ளன. இவை மிகுதியும் நாடகம், திரைப்படம், நிகழ்ச்சித்தொகுப்புகள் (Documentary) போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டன.

1. <u>செயல்கூறுகளாக்கல்</u>

தருமொழிவடிவச் செய்தி நடிப்பின்மூலம் செயல்கூறுகளாக நாடகவடிவில் பெறப்படுதலை இவ்வகையில் அடக்கலாம்.

2. ஒலிப்பதிவுகளாக்கல்

தருமொழிவடிவச் செய்தியை ஒலிக்கூறுகளாக்கி தட்டுகளிலும் நாடாக்களிலும் பதிவு செய்தலை இவ்வகையில் அடக்கலாம்.

3. ஒளிப்பதிவுகளாக்கல்

தருமொழிவடிவச் செய்தியை நடிப்பின் மூலமான செயல்கூறுகளாக்கி அவற்றை ஒளிப்படச்சுருள்களில் பதிவு செய்தலை இவ்வகையில் அடக்கலாம். இவ்வாறான ஒளிப்பதிவு முறையைப் பயன்படுத்தி திரைப்படங்கள், அறிவுத்துறைகளைச் சார்ந்த செய்திகள் போன்றவை சேகரிக்கப்படுகின்றன.

கிளைப்பட எண் 1:1, மொழிபெயர்ப்பின் வகைகள்

மொழிபெயர்ப்புகள்

- 1. ஒருமொழிக்குள்ளே செய்யப்படும் மொழிபெயர்ப்பு
    - 1.1.1. மூலவடிவத்தின் இலக்கியவகையை மாற்றியமைத்தல்
    - 1.2. மூலவடிவத்தின் நடையைமாற்றியமைத்தல்
- 2. ஒருமொழியிலிருந்து மற்றொருமொழிக்கு செய்யப்படும் மொழிபெயர்ப்பு
    - 2.1. ஆண்ட்ரோலெபிவெரெ செய்துள்ளவகைப்பாடு
        - 2.1.1 ஒலிபெயர்ப்பு
        - 2.1.2 கவிதைக்குஉரைநடை மொழிபெயர்ப்பு
        - 2.1.3 எதுகைமோனை மொழிபெயர்ப்பு
        - 2.1.4 மொழிமாற்றி விளக்குதல்
    - 2.2 சண்முகவேலாயுதம் செய்துள்ளவகைப்பாடு
        - 2.2.1 சொல்லுக்குச்சொல் மொழிபெயர்த்தல்
        - 2.2.2. விரிவான மொழிபெயர்ப்பு
        - 2.2.3. சரியான மொழிபெயர்ப்பு
        - 2.2.4. சுருக்கமான மொழிபெயர்ப்பு
        - 2.2.5 தழுவல்
        - 2.2.6 மொழியாக்கம்
    - 2.3. சிவசண்முகம், தயாளன் ஆகியவர்கள்செய் துள்ள வகைப்பாடு
        - 2.3.1 குழந்தைகளுக்கான மொழிபெயர்ப்பு
        - 2.3.2 திரைப்படவசனங்களின் மொழிபெயர்ப்பு
        - 2.3.3 சமயநூல்களின் மொழிபெயர்ப்பு
        - 2.3.4 அறிவியல்மொழிபெயர்ப்பு
    - 2.4. கேட்ஃபோர்டு செய்துள்ளவகைப்பாடு
        - 2.4.1. முழுமையான மொழிபெயர்ப்பு
        - 2.4.2. பகுதிமொழிபெயர்ப்பு
        - 2.4.3. மொத்த மொழிபெயர்ப்பு
        - 2.4.4. வரையறுக்கப்பட்டமொழிபெயர்ப்பு
        - 2.4.5. ஒலியன்களின் மொழிபெயர்ப்பு
        - 2.4.6. எழுத்துப்பெயர்ப்பு
        - 2.4.7. இலக்கணமொழிபெயர்ப்பு
        - 2.4.8. சொற்களின் மொழிபெயர்ப்பு
        - 2.4.9. கட்டுடைய மொழிபெயர்ப்பு
        - 2.4.10 கட்டற்ற மொழிபெயர்ப்பு
    - 2.5 இலக்கியவகையின் அடிப்படையிலான வகைப்பாடு
        - 2.5.1 கவிதைமொழி பெயர்ப்பு
        - 2.5.2 புனைகதைமொழி பெயர்ப்பு
        - 2.5.3 அறிவுத்துறை சார்ந்தமொழி பெயர்ப்பு
- 3. மொழியைக்குறியீடுகளாக மாற்றும் மொழிபெயர்ப்பு
    - 3. 1. தருமொழிச்செய்தியை ஓவியமாக்கல்
    - 3. 2. தருமொழிச்செய்தியைச் சிற்பமாக்கல்
- 4. மொழியைச்செயல் கூறுகளாகவும் ஒலி, ஒளி பதிவுகளாகவும் மாற்றும் மொழி பெயர்ப்பு
    - 4.1. செயல்கூறுகளாக்கல்
    - 4.2. ஒலிப்பதிவுகளாக்கல்
    - 4.3. ஒளிப்பதிவுகளாக்கல்

3: மொழிபெயர்ப்புக் கொள்கைகள்

மொழிபெயர்ப்புக் கொள்கைகளைத் 1. தமிழில் காணப்படுபவை, 2. மேனாட்டு மொழிகளில் காணப்படுபவை என வகைப்படுத்தலாம்.

1. தமிழில் காணப்படுபவை

தமிழில் மொழிபெயர்ப்பைக் கொள்கை நோக்கில் அணுகிய மரபிலக்கண நூலார்களில் தொல்காப்பியர் முன்னோடியாகத் திகழ்கின்றார். தொடர்ந்து வீரசோழியம், நேமிநாதம், நன்னூல், பிரயோகவிவேகம், இலக்கண விளக்கம், இலக்கணக்கொத்து, தொன்னூல் விளக்கம், முத்துவீரியம் போன்ற இலக்கண நூலாசிரியர்களும் இப்பணியைச் செய்துள்ளனர். இவர்கள் மொழிபெயர்ப்பு பற்றிக்கூறியுள்ள கருத்துக்களை 1. எழுத்துப்பெயர்ப்புப் பற்றியவை, 2. சொற்பெயர்ப்பு பற்றியவை, 3. மணிப்பிரவாள நடைபற்றியவை, 4. மொழியாக்கம் பற்றியவை என வகைப்படுத்தி விளக்கலாம்.

1. எழுத்துப்பெயர்ப்புப் பற்றியவை

எழுத்துப்பெயர்ப்பைத் தமிழ் இலக்கண நூல்கள் வடமொழி தமிழாக்க நோக்கில் சமஸ்கிருதச் சிறப்பெழுத்துக்கள், தமிழ் எழுத்து இணைகள் என்ற அடிப்படையில் விளக்குகின்றன. இவற்றை வீரசோழியம் (10-12), நேமிநாதம் (10,11), நன்னூல் (146, 147), முத்துவீரியம் (11,14-33) போன்ற இலக்கண நூல்களின் அடிப்படையில் பின்வருமாறு அட்டவணைப்படுத்தலாம்.

அட்டவணை என்.1:1,சமஸ்கிருதச் சிறப்பெழுத்துக்களுக்குச்சமமான தமிழ் எழுத்திணைகள்

1	2	3	4
எழுத்துவகை	சமஸ்கிருதச்சிறப் பெழுத்துக்கள்	சமஸ்கிருதசிறப்பெ முத்துக்களுக்கான தமிழ் எழுத்து இணைகள்	எடுத்துக்காட்டுகள்
உயிர்	ரு	இ, இரு	திட்டி, மிருகம்
	ரு	-	-
	லு	-	-
	லூ	-	-
	அம்	-	-
	அக்	-	-
மெய்	க[2]	க	நகம்
	ச[2]	ச	சலவாதி
	ட[2]	ட	பீடம்
	த[2]	த	தலம்
	ப[2]	ப	பலம்
	க[3]	க	நாகம்
	ச[3] (ஜ)	ச	விசயம்
	ட[3]	ட	பீடை
	த[3]	த	தினம்
	ப[3]	ப	பந்தம்
	க[4]	க	மேகம்
	ச[4]	ச	சருக்கரை
	ட[4]	ட	திடம்

1	2	3	4
	த^{4}	த	தரை
	ப^{4}	ப	பாரம்
	ச^{5}	ச,ய	சாலை, மயானம்
	ச^{6} (ஷ)	ச,ட	சட்டி, இடபம்
	ச^{7} (ஸ)	ச,த	சித்தி, வாதனை
	க^{5} (ஹ)	அ,க	அரன், மோகம்
	க்ஷ	கக	அக்கரம்
	ஜ்ஞ	–	–
	ச^{5} றா	–	–

இதிலிருந்து சமஸ்கிருதச் சிறப்பெழுத்துக்களிலான சொற்களைத் தமிழினி ஒலிப்பு முறைக்கேற்ப திரிபு வடிவங்களாக ஒலிபெயர்க்கும் வழக்கம் நடைமுறையிலிருந்ததையும் அதை இலக்கண நூலார் ஏற்று விதிகளை அமைத்துள்ளதையும் அறிந்துகொள்ள முடியும்.

2. சொற்பெயர்ப்புப் பற்றியவை

சொற்பெயர்ப்பு பற்றிய இலக்கணவிதிகள் தொல்காப்பியம் (எச்.5,6), நன்னூல் (274), பிரயோகவிவேகம், இலக்கணவிளக்கம் (175), இலக்கணக் கொத்து (87-88), முத்துவீரியம் போன்ற நூல்களில் காணப்படுகின்றன. இவற்றின் அடிப்படையில் சொற்பெயர்ப்பை 1. வடமொழிச்சொற்கள் தமிழில் வழங்கும் முறை, 2. சந்தி, 3. மெய்ம்மயக்கம் என வகைப்படுத்தி விளக்கலாம்.

1. வடமொழிச்சொற்கள் தமிழில் வழங்கும் முறை

வடமொழிச்சொற்களைத் தமிழில் வழங்கவேண்டுமானால் அவற்றிலுள்ள வடமொழி ஒலிகளை நீக்கிவிட்டு தமிழ் ஒலிகளால் எழுதவேண்டும் என்றும் (தொல்.எச்.5), அவ்வாறு எழுதும்போது அவை சிதைவு பெற்றதாய் அமைந்தாலும் வடமொழியோடு இயைபுபெற்றதாய் அமையக்கூடாது (தொல். எச்.6) என்றும் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார் (இங்கு வடமொழி என்பது சமஸ்கிருதத்தோடு பிராகிருதத்தையும் குறித்திருக்கலாம்). நன்னூல், பிரயோகவிவேகம், இலக்கணவிளக்கம், இலக்கணக்கொத்து போன்ற நூல்கள் தற்சமம் (வடமொழிக்கும் தமிழுக்கும் உரிய பொதுவெழுத்தால் அமைவது), தற்பவம் (வடமொழிக்கு மட்டுமுரிய சிறப்பெழுத்து திரிந்த எழுத்தால் அமைவது) என்ற நிலைகளில் வடசொற்கள் தமிழில் வழங்குவதைக் குறிப்பிடுகின்றன. மேலும் இலக்கணக் கொத்து, முத்துவீரியம் ஆகியன 'பொதுவெழுத்துள்ளும் பொதுவாய்த்திரிந்தும் (மாலா-மாலை), தமிழ்ச் சிறப்பெழுத்தான ற,ன,ழ,எ,ஒ என்னும் ஐந்தாகத்திரிந்தும் (அத்புதம் - அற்புதம், சிவ-சிவன், அமிர்தம் - அமிழ்தம், தைவம் - தெய்வம், கொங்கணம்-கோங்கணம்), மொழி முதல் இடை, கடை என்னும் மூவிடத்தும் தோன்றல் (லோக-உலகம்), தத்வம்-தத்துவம், வாக்-வாக்கு), திரிதல் (ரிஉஷபம்-இடபம், விஉஷம்-விடம், பாஉஷா-பாடை) கெடுதல் (ஸ்பரிசம்-பரிசம், முக்த்தி-முத்தி, தநூஸ்-தநு) என்ற விகாரங்களைப் பெற்றும், ரகரத்திற்கு முன் அ,இ,உ ஆகிய குறில்கள் மிகுந்தும் (அரங்கம், இராமன், உரோமம்), லகரத்திற்கு முன் இகரம் மற்றும் உகரம் பெற்றும் (இலாபம், உலகம்) யகரத்திற்கு முன் இகரம் பெற்றும் (இயக்கன்), இரண்டெழுத்துக்கள் இணைந்து ஒரெழுத்தாய் வருவனவற்றில் ய, ர, ல ஆகியனவற்றின் முன்நிற்கும் எழுத்தின் மீது இகரமும் (வாக்கியம், சத்திரம், அமிலம்)மகரவ சரங்களுக்குமுன் நிற்கும் .

எழுத்தின் மீது உகரமும் (பதுமம், பக்குவம்), ரகரத்திற்குப்பின் உகரமும் (கருப்பம், தருமம்) வருவதையும் குறிப்பிடுகின்றன.

தமிழில் வடமொழிச்சொற்கள் தற்சமம், தற்பவம் என வழங்கியது போலவே பிற திராவிட மொழிகளிலும் வழக்கு பெற்றுள்ளன. அவற்றில் தற்சமம், தற்பவம் என்ற பெயரில் தெலுங்கு மொழியிலும், சமசமஸ்கிருதா (தற்சமம்), அபபிரம்சா (தற்பவம்) என்ற பெயரில் கன்னட மொழியிலும், சமஸ்கிருத ருபா (தற்சமம்), சமஸ்கிருதபவா (தற்பவம்) என்ற பெயரில் மலையாள மொழியிலும் (லீலாதிலகத்தின் அடிப்படையில்) காணப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது (பார்க்க, செ.வை. சண்முகம், மலையாள மொழியின் முதல் இலக்கணம், 1992:145-157).

வடமொழியிலுள்ள பெயர்களைத் தமிழில் வழங்கும்போது ஒலிபெயர்க்காமல் மொழிபெயர்த்து வழங்கும் முறையும் இருந்தது. குருகொடு பெயர் பெற்ற வரை (பரிபாடல், 9:5) என கிரௌஞ்சமும், வயக்குறு மண்டிலம் வடமொழிப் பெயர்பெற்ற முகத்தவன் (கலித்தொகை, 25:1-2) என திரிதராட்டிரனும், குருதிக்கண்ணன் என ரக்தாட்சனும் (கம்பராமாயணம்) தமிழில் வழங்கப்பட்டதை இதற்குச் சான்றாக்கலாம்.

2. சந்தி

வடமொழிச் சொற்களைத்தமிழில் பெயர்க்கும்போது வடமொழிச்சந்திகளையும் பின்பற்றவேண்டிய தேவை ஏற்படுகின்றது. இவ்வடிப்படையில் தமிழில் காணப்படும் வடமொழிச்சந்திகளை 1. தீர்க்க சந்தி (பத+அம்புஜம் = பதாம்புஜம், கங்கா + அம்ருதம் = கங்காம்ருதம், கவி + இந்திரன் = கவீந்திரன், மகீ + இந்திரன் = மகீந்திரன், குரு + உதயம் = குருதயம், சுயம்பூ+உபதேசம் = சுயம்புபதேசம்),

2. குணசந்தி (தேவ + இந்திரன் = தேவேந்திரன், ரமா + ஈசன் = ரமேசன், சூர்ய + உதயம் = சூர்யோதயம், கங்கா + உற்பத்தி = கங்கோற்பத்தி),

3. விருத்திசந்தி (சர்வ + ஐச்வர்யம் = சர்வைச்வர்யம், தேவதா + ஐக்யம் = தேவதைக்யம், திவ்ய + ஔஷதம் = திவ்யௌஷதம், மகா + ஔஷதி = மகௌஷதி) என வகைப்படுத்தலாம் (பார்க்க, மு.வீ.மொ. 34-44). திருக்குறளில் ஆதி பகவன் என்ற சொல்லாட்சி வடமொழிப்புணர்ச்சியை ஒட்டி அமைந்தது என்றும், தமிழ்ப்புணர்ச்சியை ஒட்டியதாயின் 'ஆதிப் பகவன்' என்றிருக்கவேண்டும் என்றும் பரிமேலழகர் குறிப்பிடுவதும் மேற்கண்ட கருத்தை வலியுறுத்துவதாக உள்ளது.

3. <u>மெய்ம்மயக்கம்</u>

வடமொழியின் தாக்கத்தால் தமிழில் புதிய மெய்ம்மயக்கங்களும் ஏற்பட்டுள்ளன. இதற்குச் சான்றாக சூன்யம் (ன்,ய்), நஷ்டம் (ஷ், ட்), ஷஷ்ணம் (ஷ்,ண்), நமஸ்காரம் (ஸ், க்), ஆஸ்ரமம் (ஸ், ர்), சரஸ்வதி (ஸ்,வ்), வர்ணம் (ர், ண்), யவ்வனம் (வ்,வ்), ரகஷ்யம் (ஷ், ய்), லக்ஷ்யம் (க்ஷ்ய்) போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

3. <u>மணிப்பிரவாளநடை பற்றியவை</u>

கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டளவில் வடமொழியின் தாக்கத்தால் தமிழில் மணிப்பிரவாளம் என்ற புதிய நடைதோன்றியது. இந்நடை வடமொழிச்சொற்களை தற்சமம், தற்பவம் என்ற நிலைகளில் ஒலிபெயர்த்துத் தருவதாக அமைந்தது. மேலும் மணிப்பிரவாளகாலத்தில் வடமொழிச்சொற்களுக்குத் தமிழ் இணைகளைத் தேடுவதைவிட அவற்றை ஒலிபெயர்த்து அமைத்தலே பெரிதும் விரும்பப்பட்டது. இதனால் ஜ,ஷ, ஸ, ஹ, க்ஷ, ஸ்ரீ போன்ற வடமொழி எழுத்துக்கள் தமிழ்

நெடுங்கணக்குடன் சேர்க்கப்பட்டன. தமிழில் ஆழ்வார்களின் பாடல்களுக்கு எழுந்த உரைகள் மிகுதியும் மணிப்பிரவாளநடையில் அமைந்தனவாகும். தமிழைப் போன்றே மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய திராவிட மொழிகளிலும் மணிப்பிரவாள நடையின் செல்வாக்கு காணப்படுகிறது. அவற்றில் மலையாளத்தின் தொடக்ககால இலக்கியங்கள் பல மணிப்பிரவாள நடையில் அமைந்தவையாகும் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. மேலும் மலையாளத்தின் முதல் இலக்கண நூலாகக்கருதப்படும் லீலாதிலகம் மணிப்பிரவாள மொழியின் இலக்கணத்தைக் கூறுகின்றது. தமிழிலும் பிற்கால இலக்கணநூல்கள் மிகுதியும் வடமொழிச்சொற்கள் தமிழில் வழங்கும் முறைபற்றி விளக்குவதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

4. மொழியாக்கம் பற்றியவை

தொல்காப்பியர் நூல்களை முதல், வழி என இரண்டாகப்பிரித்து மொழி பெயர்ப்பை வழிநூல்களின் வகைகளில் ஒன்றாகச்சேர்த்துள்ளார்.

"தொகுத்தல் விரித்தல் தொகை விரிமொழிபெயர்த்து
அதர்ப்பட யாத்தலொடு அனை மரபினவே" (தொல்,பொரு.652)

என்பது அவர் தரும் நூற்பா.

இதில் தொகுத்தல், விரித்தல், தொகைவிரித்தல் ஆகியன ஒரு மொழிக்குள்ளே செய்யப்படும் மொழிபெயர்ப்பாகவோ (Intralingual Translation), ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்குச் செய்யப்படும் மொழிபெயர்ப்பாகவோ (Interlingual Translation)இருக்கலாம். இதற்கு நூற்பாவில் விளக்கம் எதுவும் இல்லை. ஆனால் பேராசிரியர் "மொழிபெயர்த்தென்பது பிற பாடையாற் செய்யப்பட்ட பொருளினைத் தமிழ்நூலாகச் செய்வது. அதுவும் தமிழ் நூலுள் வழி நூற்கு மரபாம் என்றவாறு. அதர்ப்பட என்பது நெறிப்பட வென்றவாறு. நெறிப்படுதலென்பது அவ்வாறு மொழிபெயர்த்துச் செய்யுங்கால் அது

கிடந்தவாற்றானே செய்யப்படும். தொகுத்தும், விரித்தும், தொகை விரியாகவும் செய்ததினாற் பயமில்லைத் தமிழர்க்கும் ஆரியர்க்கும் என்பது. மொழிபெயர்த்தெனவே பொருள் பிறழாமை பெற்றாம் .....வேதப் பொருண்மையும், ஆகமப்பொருண்மையும், நியாயநூற் பொருண்மையும் பற்றித் தமிழ்ப் படுக்குங்கால் அவற்றிற்கும் இதுவே இலக்கணமென்றற்கு மொழிபெயர்த்த லையும் இவற்றுட் கூறினான்" என உரை எழுதியுள்ளார்.


இங்கு, 'மொழிபெயர்ப்பைத் தொகுத்தும், விரித்தும், தொகை விரியாகவும் செய்வதினால் பயனில்லை என்ற கருத்துக் காணப்படுவதால் அவ்வாறு செய்யப்பட்ட மொழிபெயர்ப்புகளும் இருந்திருக்கக்கூடும் என ஊகிக்க ஏதுவாகிறது. பொதுவாக, படைப்பிலக்கியத்தில் இத்தகைய விலகிய நிலையி லான மொழிபெயர்ப்புகள் பல இருந்திருக்கின்றன. இராமாயணம், பாரதம் போன்ற நூல்கள் நேரடி மொழிபெயர்ப்பாக இல்லாமல் அமைந்திருப்பதும் இக்கருத்திற்கு வலுவைத்தருகிறது. ஆனால் வேதம், ஆகமம், நியாயம், தர்க்கம் போன்ற துறைகளைச் சார்ந்த நூல்களை இவ்வாறு அமைக்காமல் நேரடியாக மொழிபெயர்த்தலையே அனைவரும் விரும்பினர். ஸ்ரீபட்டனார் பகவத்கீதையை (13ம் நூற்றாண்டு) நேரடி மொழிபெயர்ப்பாக அமைத்திருப்பது இதற்குச் சான்றாகும்.

தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ள முதல் மற்றும் வழிநூல்களோடு நன்னூலார் சார்புநூல் என்ற வகையை அறிமுகப்படுத்தி "முதல் மற்றும் வழிநூல்களுடைய பொருள் முடிவு ஒருவாறு ஒத்தும் பிறவெல்லாம் மாறுபட்டும் அமைவது (நன்.8)" என விளக்கம் தந்துள்ளார். மேலும் 'தன்கருத்தை நிலைநிறுத்தப் பிறன் கருத்தை மறுக்கும்' எதிர் நூல் வகை ஒன்றும் காணப்படுகிறது. இதற்குச்

சான்றாக நீலகேசி என்ற சமணசமய நூல் குண்டலகேசி என்ற பௌத்த நூலுக்கு எதிராக அமைந்துள்ளதையும், வைத்திய நாத தேசிகரின் 'இலக்கணவிளக்கம்' என்ற நூலுக்கு எதிராக 'இலக்கண விளக்கச்சூறாவளி' என்ற தலைப்பில் திறனாய்வுநோக்கிலான மறுப்புரையை சிவஞான முனிவர் இயற்றியுள்ளதும், கம்பராமாயணத்திற்கு எதிராக 'கீமாயணம்' என்ற நூலைப் பெரியாரும், இராவணகாவியத்தைப் புலவர் குழந்தையும் இயற்றி யுள்ளமையையும் குறிப்பிடலாம்.

இவற்றிலிருந்து இலக்கண நூலார் கருத்தளவில் மாற்றமின்றி ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழியில் செய்தலை மட்டுமே மொழிபெயர்ப்பாகக் கருதினர் எனலாம். ஆனால் தொகுத்தல், விரித்தல், தொகை விரித்தல் ஆகிய வழிநூல்களோடு சார்பு மற்றும் எதிர் நூல்களும் ஒரு மொழிக்குள்ளே செய்யப்பட்டதாகவோ, ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்குச் செய்யப் பட்டதாகவோ காணப்படுவதனால் அவற்றையும் மொழிபெயர்ப்பின் வகைகளாகச் சேர்க்க இடமுள்ளது. இதனைப் பின்வருமாறு படத்தில் காட்டலாம்.

விளக்கப்படம் 1:2, மொழியாக்கமும் நூல்வகைப்பாடும்



(படத்தில் நேர்கோடு நேரடித் தொடர்புள்ள பகுதிகளையும் விடுகோடு நேரடித் தொடர்பற்றப்பகுதிகளையும் குறிக்கும். மேலும் எதிர் நூல் முதல், வழி, சார்பு ஆகிய நூல் வகைகளுக்குப் பொதுவாக அமையலாம் என்பதின் அடிப்படையில் விடுகோட்டின் மூலம் காட்டப்பட்டுள்ளது. நூல்வகைகள் ஒரு மொழிக்குள்ளே செய்யப்படும் மொழிபெயர்ப்பாகவோ, ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்குச் செய்யப்படும் மொழிபெயர்ப்பாகவோ அமைவதால் அவை பகர அடைப்பின் மூலம் காட்டப்பட்டுள்ளன). பாவலரேறு ச. பாலசுந்தரம் தம் தொன்னூலில் (இது மரபு நோக்கிலான தற்கால இலக்கண நூலாகும்),

"யாதொரு மொழிக்கண் உள இலக் கியத்தைப்
பொருள்திரி யாமல் பிறிதொரு மொழிக்கண்
மாற்றியமைத்தலை மொழிபெயர்ப் பென்ப"

(தொன்னூல், இலக்கியப்படலம், நூற்:27)

என மொழிபெயர்ப்பு குறித்தும்,

"எடுத்த இலக்கியம் எழுதிய காலம்
இடம்சமு தாயம் அரசியற் சூழல்
விளைவுமுற் றோர்ந்ததன் தேவை நன் குறிந்து
மூலமொழிப் புலவன் முன்னிய பயன்சுவை
எழுப்பும் உணர்ச்சி யாப்பியல் தேர்ந்து அவை
பழிப்பிலவாகப் பன்னுங் காலை
அம்மொழிமரபும் சொல்வகை இயல்பும்
கலைப்பண்பாடும் கற்பனை வழக்கும்
மலைவற நோக்கியச் சுவையும் பயனும்
நிலைபெறு நெறியான சொற்குச் சொல்லெனும்

முறை கருதாமல் மொழிப்பமை கருத்தும்

மெய்ப்பாட்டுணர்வும் மேவரப் பெயர்க்கும்

மொழியியல் மரபதன் முன்னோர் பயின்ற

வழிநனி கடைபிடித்து உரையினை உரையினும்

பாவினை ஏற்புறு பாவினும் அன்றி

மாற்றியும் இசைநலம் கமழப் பெயர்த்தலும்

பெயர்த்தற் கொவ்வாக் கலைக்குறி யீட்டுச்

சொற்களை ஒலிபெயர்த்துள்ளவா றமைத்தலும்

மொழிமுறைக் கேற்பத் திரித்துக் கொள்ளலும்

நயமுற விளக்கி வரைதலும் பிறவும்

உயிர்ப்பமை மொழிபெயர்ப் பிலக்கணமென்ப"

(தொன்னூல், இலக்கியப்படலம், நூற்:28)

என மொழிபெயர்ப்பு முறைமை குறித்தும்,

"ஒரு மொழிக் கருத்தினைப் பிறிதொரு மொழியான்

புரையற வழங்குதல் மொழிபெயர்ப்புரையே"

(தொன்னூல், இலக்கியபடலம், நூற்:542)

என மொழிபெயர்ப்புரை குறித்தும் மொழியியல் நோக்கிலான கருத்துக்களைக்கொண்ட நூற்பாக்களைச் சேர்த்திருப்பதும் இங்கு சுட்டிக்காட்டத் தக்கதாகும்.

2. மேனாட்டு மொழிகளில் காணப்படுபவை

தமிழில் மரபிலக்கண நூலார் மொழிபெயர்ப்பைக் கொள்கைநோக்கில் அணுகியது போலவே மேனாட்டில் மொழியியலாரும் மொழிபெயர்ப்பைக் கொள்கைநோக்கில் அணுகியுள்ளனர். இத்தகைய கொள்கை நூல்கள் மிகுதியும் ஆங்கிலம், ஜெர்மன் போன்ற மொழிகளில் காணப்படுகின்றன. இவற்றை

1. மூலத்தின் வடிவத்தையும் கருத்தையும் அடிப்படையாகக் கொண்டவை, 2. பெறுமொழிவாசகனின் உணர்வு வெளிப்பாட்டை அடிப்படையாகக்கொண்டவை, 3. மொழிபெயர்ப்பு பற்றிய ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டவை, 4. இயந்திர மொழிபெயர்ப்பை அடிப்படையாகக் கொண்டவை என வகைப்படுத்தி விளக்கலாம்.

1. மூலத்தின் வடிவத்தையும் கருத்தையும் அடிப்படையாகக் கொண்டவை

மொழிபெயர்ப்புப் பற்றிய தொடக்க காலக் கொள்கைகள் மிகுதியும் மூலத்தின் வடிவத்தையும் கருத்தையும் பேணும் நோக்கில் அமைந்தவை ஆகும். இவற்றை அவை தோன்றிய நூற்றாண்டுகளின்அடிப்படையில் பின்வருமாறு வகைப் படுத்தி விளக்கலாம்.

பதினாறாம் நூற்றாண்டு

மேல்நாட்டில் மொழிபெயர்ப்பை மொழியியலின் அடிப்படையிலான கொள்கை நோக்கில் அணுகும் நிலை பதினாறாம் நூற்றாண்டில் தோன்றிற்று. ஹோமருடைய படைப்புகளை மொழிபெயர்த்த ஜார்ஜ் சாப்மேன் தருமொழி வடிவத்தின் கருத்துக்கள் அனைத்தையும் மொழிபெயர்ப்பாளர் கவனத்தில் கொள்ளவேண்டும் என்ற டோலட்டின் கருத்துக்களை அடிப்படையாகக்கொண்டு 1. சொல்லுக்குச் சொல் மொழிபெயர்ப்பு அமைதலைத் தவிர்த்தல், 2. தருமொழி வடிவத்தில் காணப்படும் உணர்ச்சியைப் பெறுமொழி வாசகர்களும் பெறும்படியாக மொழிபெயர்ப்பைஅமைத்தல், 3. தருமொழிவடிவத்தில்காணப் படும் கருத்தும் பொருளும் தெளிவுபடும் நோக்கிலும், நெகிழ்வாக இல்லாமல் மூலத்திற்கு சமமாகவும் மொழிபெயர்ப்பை அமைத்தல் போன்ற விளக்கங் களைத் தந்துள்ளார் (சி. சிவசண்முகம், வே. தயாளன், மொழிபெயர்ப்பியல், பக்.19-20).

பதினேழாம் நூற்றாண்டு

பதினேழாம் நூற்றாண்டில் மொழிபெயர்ப்புக் கொள்கையில் மாற்றங்கள் ஏற்பட்டன. இதற்கு டெஸ்கார்ட்ஸ் என்பவர் காரணமாக அமைந்தார். 1625 மற்றும் 1660 ஆகிய ஆண்டுகளில் பிரெஞ்சு நாட்டினரும் மொழிபெயர்ப்பில் சில மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளனர். இவர்கள் பிரெஞ்சு நூல்கள் பலவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தனர். இவர்கள் மொழிபெயர்ப்புப் பணியைப் போலச்செய்தலாகவும் கருதினர். மேலும் சர் ஜான் டென்காம் மொழிபெயர்ப்பு ஒரு கலையாகவும் அதேவேளையில் விறுவிறுப்புக்கொண்டதாகவும் இருக்கவேண்டும் என்றும், மொழிபெயர்ப்பாளரும் மூல ஆசிரியரும் சமமானவர் என்றும், மூல ஆசிரியரின் கருத்திலிருந்து சிறிதும் மாறுபடாமல் அதைப்பெறுமொழியில் மாற்ற வல்லவரே மொழிபெயர்ப்பாளர் என்றும் குறிப்பிட்டுள்ளார். ஆபிரகாம் கௌலி தருமொழி ஆசிரியர் சொல்லியுள்ள முறையிலிருந்து சிறிதும் மாறுபடாத அளவில் மொழிபெயர்ப்பு அமையவேண்டும் என்று விளக்கியுள்ளார். ஜான் டிரைடன் ஓவிட்ஸ் எபிஸ்றில்ஸ் என்ற நூலின் முகவுரையில் 1. சொல்லுக்குச் சொல், தொடருக்குத் தொடர் என்ற அளவில் ஒரு மொழியிலிருந்து பிறிதொருமொழியில் மாற்றியமைப்பது, 2. பொருள் சரியாக இருக்க அமைப்பினை மாற்றுவது, 3. மூலமொழியில் படித்ததை மொழிபெயர்ப்பில் கொண்டுவர முயல்வது எனத் தந்துள்ள விளக்கங்களும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கன (சி.சிவசண்முகம், வே. தயாளன், மொழிபெயர்ப்பியல், பக்.20-21).

பதினெட்டாம் நூற்றாண்டு

மொழிபெயர்ப்பாளர் ஒரு பெயின்ட்டராகவோ, இமிட்டேட்டராகவோ (போலச்செய்பவர்) இருக்கவேண்டும் என்ற கொள்கை பதினெட்டாம் நூற்றாண்டில் தோன்றியது. மேலும் தருமொழிவடிவத்தில் உள்ள விறுவிறுப்பு பெறுமொழி வடிவத்திலும் காணப்படவேண்டும் என்ற கருத்தும் பதினெட்டாம் நூற்றாண்டில் உருப்பெற்

றதாகும். அலெக்சாண்டர் பிரேசரின் (1791) மொழிபெயர்ப்புக் கொள்கைகள் என்ற நூலில் 1. மொழிபெயர்ப்பு என்பது மூலமொழியில் உள்ள கருத்துக்களை வரைபடம் போன்று விளக்கவேண்டும், 2. மொழிநடை, எழுதிச்சென்றுள்ள முறை போன்றவை எல்லாம் தருமொழி வடிவத்தில் அமைந்துள்ளது போலவே பெறுமொழிவடிவத்திலும் அமையவேண்டும், 3. தருமொழி வடிவத்தின் அனைத்துக்கூறுகளையும் பெற்றதாகப் பெறுமொழிவடிவம் அமையவேண்டும் எனக்காணப்படும் கருத்துக்களும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கன (சி. சிவசண்முகம், வே. தயாளன், மொழிபெயர்ப்பியல், பக்.21-22).

பத்தொன்பதாம் நூற்றாண்டு

பத்தொன்பதாம் நூற்றாண்டில் மொழிபெயர்ப்பைப் பற்றி அமைந்த விளக்கங்கள் மிகுதியும் ஏற்கனவே உள்ள விளக்கங்களை அடியொற்றி அமைந்தவை ஆகும். 1809இல் ஜெர்மன் இலக்கியங்கள் பல ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப் பட்டன. இச்சூழ்நிலையில் மொழிபெயர்ப்பு படைப்புத்திறன் (Creative Skill) கொண்டதா, இயந்திரத்திறன் (Mechanical Skill) கொண்டதா என்பன போன்ற பல வினாக்கள் எழுந்தன. இச்சூழலில் மொழிபெயர்ப்புப் பணியில் ஈடுபாடு கொண்டிருந்த நியூமேன் 'மொழிபெயர்ப்பாளர் தருமொழிவடிவத்திலுள்ள சிறப்பு அம்சங்களை எந்த அளவுக்குப் பெறுமொழியில் சொல்லமுடியுமோ அந்த அளவுக்குச் சொல்லவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் மாத்யூ அர்னால்டு 'ஹோமருடைய மொழிபெயர்ப்புகள்' என்னும் தலைப்பில் செய்துள்ள சொற்பொழிவில் தருமொழிவடிவத்தைப் படிக்கும்போது தருமொழி வாசகர்களுக்கு ஏற்படும் விளைவை பெறுமொழிவடிவத்தைப் படிக்கும்போது பெறுமொழிவாசகர்களுக்கு ஏற்பட வேண்டும் என்றும், மொழிபெயர்ப்பில் தருமொழிவடிவத்தின் பண்பாடு இடம்பெற வேண்டும் என்றும், மொழிபெயர்ப்பாளர் தன் திறமைக்கும் நடைக்கும் குறைந்த அளவிலும், மூல ஆசிரியரின் திறமைக்கும் நடைக்கும் அதிக அளவிலும் சிறப்பு கொடுக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார் (சி. சிவசண்முகம், வே. தயாளன், மொழிபெயர்ப்பியல், பக்.22-23).

இருபதாம் நூற்றாண்டு

இருபதாம் நூற்றாண்டில் மொழிபெயர்ப்பு உலகளாவிய நிலையில் பல மொழிகளிலும் செய்யப்பட்டு வருகிறது. எனவே மொழிபெயர்ப்பு பற்றிய கொள்கைகளும் பல்வேறு மொழிகளில் எழுதப்பட்டு வருகின்றன. 1931இல் டெய்லரின் என்பவர் மொழிபெயர்ப்பு பற்றியக் கொள்கைகளையும், மொழிபெயர்ப்பு முறைகளையும் விளக்கும் நோக்கில் சொற்பொழிவொன்றை நிகழ்த்தியுள்ளார். தொடர்ந்து மொழிபெயர்ப்பின் நெறிமுறைகளையும் கொள்கைகளையும் விளக்குவனவாக நூல்களும், கட்டுரைகளும் எழுதப்பட்டுள்ளன. அவற்றில் கேட்ஃபோர்டு (Linguistic Theory of Translation), நைடா, சார்லஸ்டாபர் (The Theory and Practice of Translation), ஏ.சி. பார்ட்ரிஜ் (English Biblical Translation), நைடா (Language structure and translation), ஜோர்ஜ் ஸ்டெய்னர் (After Babl: Aspects of Language and Translation), உறவுஸ் (Model for Translation QualityAssessment), சுசன் பெஸன்ட் (Translation Studies) போன்றவர்களின் படைப்புகள் குறிப்பிடத்தக்கவையாக உள்ளன. இவை மிகுதியும் வடிவத்தைவிட கருத்துக்குச் சிறப்புக் கொடுத்து மொழிபெயர்ப்பை அமைக்கும் நோக்கில் அமைந்துள்ளன.

மூலத்தின் வடிவத்தையும் கருத்தையும் மொழிபெயர்ப்பில் கொண்டு வருதல் பற்றிய கொள்கைகள் மிகுதியும் ஒருமைப்பட்டதாக இல்லாமல் காணப்படுகின்றன எனலாம். எனவே இவற்றைத் தியோடர் சேவரி,

1. மொழிபெயர்ப்பு மூலநூலின் சொற்களை அப்படியே தரவேண்டும். மொழிபெயர்ப்பு மூலநூலின் கருத்துக்களை அப்படியே தரவேண்டும்.

2. மொழிபெயர்ப்பு படிப்பதற்கு மூலநூலைப் போலவே இருக்க வேண்டும். மொழிபெயர்ப்பு படிப்பதற்கு மொழிபெயர்ப்பு போலவே இருக்கவேண்டும்.

3. மொழிபெயர்ப்பு மூலநூலின் மொழிநடையைப் பிரதிபலிக்கவேண்டும். மொழிபெயர்ப்பு மொழிபெயர்ப்பாளரின் மொழிநடையைப் பிரதிபலிக்கவேண்டும்.

4. மொழிபெயர்ப்பு படிப்பதற்கு மூலநூலின் காலத்தைச் சார்ந்ததைப் போல் இருக்கவேண்டும். மொழிபெயர்ப்பு படிப்பதற்கு மொழிபெயர்ப்பாளரின் காலத்தைச் சார்ந்ததைப்போல் இருக்கவேண்டும்.

5. மொழிபெயர்ப்பில் மூலநூலைக்கூட்டவோ குறைக்கவோ செய்யலாம். மொழிபெயர்ப்பின் மூலநூலைக் கூட்டவோ குறைக்கவோ கூடாது.

6. செய்யுள் மொழிபெயர்ப்பு உரை நடையில்தான் இருக்கவேண்டும். செய்யுள் மொழிபெயர்ப்பு செய்யுளில் தான் இருக்கவேண்டும். என எதிரெதிர் கோட்பாடுகளாக வகுத்துக்காட்டியிருப்பதும் (பார்க்க, வை சச்சிதானந்தன், ஒப்பிலக்கியம் - ஓர் அறிமுகம், ப.179) இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

2. <u>பெறுமொழிவாசகனின் உணர்வு வெளிப்பாட்டை அடிப்படையாகக் கொண்டவை</u>

பெறுமொழிவாசகனின் உணர்வு வெளிப்பாட்டை அடிப்படையாகக்கொண்ட கொள்கைகள் வடிவம், கருத்து ஆகியவைவற்றில் மட்டும் மொழிபெயர்ப்பு ஒத்திருந்தால் போதாது என்றும், தருமொழிவடிவத்தைப் படிக்கின்றவர்கள் பெறுகின்ற உணர்வு வெளிப்பாட்டை (Response) பெறுமொழிவடிவத்தைப் படிக்கின்றவர்களும் பெறவேண்டும் என்றும் குறிப்பிடுகின்றன. இத்தகைய கொள்கைகளை நைடா, சார்லஸ் டாபர் (1969) ஆகியவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். மொழிபெயர்ப்பு மூலமொழிவாசகன் பெறுகின்ற உணர்வு வெளிப்பாட்டைத் தருவதாக அமைய சொற்களை விடச்சூழலுக்கும், நேரினைகளைவிட மாற்றிணைகளுக்கும், எழுத்துமொழியை விட பேச்சுமொழிக்கும், பழங்கால வழக்கைவிடச்சமகால வழக்கிற்கும் முன்னுரிமை பெற்றுத் திகழவேண்டும்.

3. மொழிபெயர்ப்பு பற்றிய ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டவை

மொழிபெயர்ப்பு குறித்த ஆய்வு முடிவுகளை நூல்களாகவும் கட்டுரைகளாகவும் ஆய்வாளர்கள் பலர் எழுதியுள்ளனர். அவர்களில் தால்மி சிவான் (1978:235-272) என்பவர் மொழிபெயர்ப்பை அடிப்படையாகக் கொண்ட தன் கட்டுரையில் மொழிகளிடையே காணப்படும் 1. சொற்பொருட்பரப்பை வெவ்வேறு வகையில் பாகுபடுத்தி அமைத்துக்கொள்ளல், 2. ஒரு மொழியை நோக்க இன்னொரு மொழியில் சொல்வளம் குறைந்திருத்தல், 3. தம் சொல்லமைப்பால் வேறு மொழியில் உணர்த்துவதை வெளிப்படுத்த இயலாமற் போதல்" ஆகிய மூவகைச் சொல்லாக்கங்களைச் (Lexicalisations) சுட்டிக்காட்டி அவற்றில் முதல் வகையே மொழிபெயர்ப்பின்போது அதிக சிக்கல்களை விளைவிக்கும் என்று குறிப்பிட்டுள்ளார். இதற்குரிய காரணங்களாக 1. வாக்கிய அமைப்பு, 2. வினைப்பாகுபாடு, 3. வேற்றுமையமைப்பு, 4. பால் இயைபு மற்றும் பொருத்தம் போன்றவற்றில் தருமொழிக்கும் பெறுமொழிக்கும் இடையே போதுமான அமைப்புகள் இருப்பினும் அவை வழங்குவதிலுள்ள கட்டுப்பாடுகளால் சிக்கல்கள் மிகுவதை எடுத்துக்காட்டியுள்ளார். எனவே, மொழிபெயர்ப்பாளன் சொல், வாக்கியம் ஆகியவற்றின் எல்லைகளைக்கடந்து உரைக்கோவையை நோக்கி மொழிபெயர்ப்பை அமைக்கவேண்டும் என்பது அவர் தரும் கருத்தாகும். மேலும் ஆர். கூப்பர் (1978:307-325) என்பவர் "Montague's Theory of Translation and Transformational Syntax" என்ற கட்டுரையில் மாற்றிலக்கணத்தொடரியல் ஆராய்ச்சியைச்சார்ந்த ஒரு கருத்து நிலையாக த்திகழும் மாண்டேகுவின் கொள்கை இயற்கை மொழிகளைத்தத்துவ தருக்கமுறையில் அமைந்த அமைப்புமொழி (Formal Language)நிலையில் குறியீடுகளாக மாற்றி ஆய்வதோடு, அவற்றிற்கிடையிலான பொதுமைகளைக்காண முயல்கிறது என்று குறிப்பிட்டுள்ளார். தொடர்ந்து மாண்டேகுவின் ஆய்வில் ஒரு மொழியமைப்பை இன்னொரு மொழியமைப்பாக மாற்றுதல் (Paraphrase)

பொழிப்புரையாக்கமும் (Intralingual) தருக்கப்பொருண்மைக் குறியீடுக ளாக்கும் குறியீட்டியல் மொழிபெயர்ப்பும் (Intersemiotic Translation) முக்கிய இடம் பெறுகின்றன என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

4. இயந்திர மொழிபெயர்ப்பைஅடிப்படையாகக்கொண்டவை

மொழிபெயர்ப்பை இயந்திரங்களைப் பயன்படுத்தி மனிதனைவிடப் பன்மடங்கு வேகத்தில் செய்யவேண்டும் என்ற எண்ணம் இருபதாம் நூற்றாண்டில் ஏற்பட்டது. இதன் பயனாக இயந்திரமொழிபெயர்ப்பு உருவாயிற்று. தற்காலத்தில் இயந்திர மொழிபெயர்ப்பு 1. மனித உதவியுடன் செயல்படும் இயந்திர மொழிபெயர்ப்பு (Human Assisted Machine Translation), 2. கணிப்பொறி உதவியுடன் நடைபெறும் மனித மொழிபெயர்ப்பு(Computer Assisted Human Translation), 3. கணிப்பொறி தானாகவே செய்யும் இயந்திர மொழிபெயர்ப்பு (Pure Machine Translation) என மூன்று நிலைகளில் அமைந்துள்ளது. இவற்றில் மூன்றாவது நிலையான 'கணிப்பொறி தானாகவே செய்யும் இயந்திர மொழிபெயர்ப்பு' இன்னும் சோதனையிலேயே உள்ளது. தமிழிலும் இயந்திர மொழிபெயர்ப்புப்பணி ஆரம்பமாகியுள்ளது. அதன் முதல் கட்டமாக ரஷ்ய மொழியிலிருந்து தமிழ்ப் படுத்துதலைத் தஞ்சைத்தமிழ்ப் பல்கலைக்கழகம் செய்துவருகிறது.

இவற்றைக் கருத்தில்கொண்டு தமிழ் மற்றும் மேனாட்டு மொழிகளில் காணப்படும் மொழிபெயர்ப்பு முறை மற்றும் கொள்கைகளில் தன்மைகளைப் பின் வருமாறு அட்டவணைப்படுத்தலாம்.

அட்டவணை எண்.1:2, மொழிபெயர்ப்பு முறையும் கொள்கைகளும் தமிழிலும் மேனாட்டு மொழிகளிலும்

1 காலம்	2 தமிழ்மொழியில்	3 மேனாட்டுமொழிகளில்
பண்டைக்காலம்	1. பிறமொழிச்சொற்களையும் கருத்துக்களையும் தேவைக் கேற்ப கடனாகப்பயன்படுத்துதல்	1. கருத்துக்கும் நடைக்கும் முக்கியத்துவம்கொடுத்து மொழிபெயர்ப்பை அமைத்தல்
இடைக்காலம்	2. படைப்பிலக்கியங்களை தொகுத்தல், விரித்தல், தொகை விரித்தல், சார்ந்தமைத்தல்போன்ற நிலைகளிலும் வேதம், ஆகமம், நியாயம், தர்க்கம்போன்ற பிறதுறை இலக்கியங்களை நேரடிப் பெயர்ப்பாகவும் அமைத்தல்	
தற்காலம்	3. படைப்பிலக்கியம் மற்றும் பிற துறை இலக்கியங்களையும் நேரடி மொழி பெயர்ப்பாக அமைத்தல்	2. பெறுமொழிவாசகர்களின் உணர்வு வெளிப்பாட்டைக் கருத்தில் கொண்டுமொழி பெயர்ப்பை அமைத்தல்.

4. மொழிபெயர்ப்பின் தன்மைகள்

பிறமொழியிலுள்ள கருத்துக்களை அம்மொழி அறியாதவர்களுக்குத் தரும் நோக்கில் மொழிபெயர்ப்பு அமைகின்றது. எனவே சமகாலச் சொற்கள், கருத்தை நேரடியாகச் சுட்டும் சொற்கள், பெறுமொழிக்கேற்ற வாக்கியம் மற்றும் உரைக்கோவை அமைப்பு போன்றவற்றை மொழிபெயர்ப்பு பெற்றிருப்பது நலம், மேலும் தேவையான இடங்களில் விளக்கங்கள் அடிக்குறிப்புகள் போன்றவற்றைப் பெற்றமைவது நல்ல மொழிபெயர்ப்புக்கு அறிகுறியாகும். இவற்றின் அடிப்படையில் மொழிபெயர்ப்பின் தன்மைகளைப் பின்வருமாறு வகைப்படுத்தி விளக்கலாம்.

1. மொழிபெயர்ப்பின் நோக்கம்

மொழிபெயர்ப்பின் நோக்கங்களை 1 கருத்துவளர்ச்சிக்கு உதவுதல், 2. அறிவுவளர்ச்சிக்கு உதவுதல், 3. ஒருவரையொருவர் புரிந்துகொள்வதற்கு உதவுதல் என எஸ். சிவகாமி தன் மொழிபெயர்ப்பு நூற்றொகையில் குறிப்பிட்டுள்ளார். ஆன்டன் பப்போவிக் (1970:78) அறிவுசார்ந்த உண்மைகளை ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்கு மாற்றித்தருவதை மொழிபெயர்ப்பின் நோக்கமாக மொழிபெயர்ப்பின் இயல்புகள் (The Nature of Translation) என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். பொதுவாக, மொழிபெயர்ப்பு 1. நாடுகளுக்கிடையே நல்லெண்ணத்தினையும்,கூட்டுறவினையும் வளர்ப்பது, 2. சிறந்த படைப்புகளைப் பிறமொழி வாசகர்களுக்கு அறிமுகப்படுத்துவது, 3. தருமொழி மக்களின் பண்பாட்டைப் பெறுமொழி வாசகர்களுக்கு இனங்காட்டுவது, 4. அறிவியல் மற்றும் தொழில் நுட்பச்செய்திகளைப் பரவச்செய்வது, 5. மக்களிடையே ஒருமைப்பாட்டுணர்வை வளர்ப்பது, 6. மொழிகளின் தரத்தையும் இயல்பையும் அளவிட்டு அவற்றை

வளர்ச்சிப்பாதையை நோக்கிச் செலுத்துவது போன்ற நோக்கங்களைக் கொண்டதாக அமைகிறது எனலாம்.

2. மொழிபெயர்ப்பின் பயன்

மொழிபெயர்ப்பின் பயன் என்பது அதன் நோக்கத்தை நிறைவேற்றித் தரும்வகையில் அமைகின்றது. பொதுவாக மொழிபெயர்ப்பைப் பயன்படுத்துகின்றவர்களை

1. மூலமொழி அறியாதவர்கள். ஆனால் மூலமொழியிலுள்ள இலக்கியத்தின் மீது பற்றுக்கொண்டவர்கள்.

2. மூலமொழியினைக் கற்றுக்கொள்வதோடு அதிலுள்ள இலக்கியங்களை மொழிபெயர்ப்புகளின் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகின்றவர்கள்.

3. மூலமொழியினைக் கற்று, தற்போது மறந்துவிட்டவர்கள்.

4. மூலமொழியினை நன்கு கற்றறிந்தவர்கள். இன்னும் அதனை அறிந்து கொள்ள விரும்புகின்றவர்கள்.

என வகைப்படுத்தலாம். எனவே மொழிபெயர்ப்பு இத்தகைய பலதரப்பட்ட வாசகர்களின் தேவைகளை நிறைவேற்றித்தரும் நோக்கில் அமைவதையே அதன் தலைசிறந்த பயனாகக்கருதமுடியும். மேலும் 1. ஒப்பிலக்கிய ஆராய்ச்சிக்கு உதவுதல், 2. பிறமொழி இலக்கியத்தைப்பற்றிய அறிவைத் தருதல், 3. பல்வேறு துறைசார்ந்த நூல்களையும் அறிஞர்களையும் பற்றி அறிந்துகொள்ள உதவுதல், 4. மொழிவளர்ச்சிக்கு உதவுதல், 5. பண்பாட்டுரீதியான கலப்பை ஏற்படுத்தி உலக ஒருமைப்பாட்டிற்கு வழிவகுத்தல் போன்றவற்றையும் மொழிபெயர்ப்பின் பயன்களாகக் கொள்ளலாம்.

3. மொழிபெயர்ப்பின் பணிகள்

மொழிபெயர்ப்பின் பணிகளை நைடா மற்றும் சார்லஸ்டாபர் ஆகியவர்கள் 1 செய்தி தரும்பணி, 2. உணர்வூட்டும் பணி, 3. செயல் தூண்டும்பணி என வகைப்படுத்தியுள்ளனர்.

1. செய்தித்தரும்பணி (Informative Function)

தருமொழிவடிவத்திலுள்ள செய்திகளை அப்படியே பெறுமொழியில் மாற்றித்தருதலைச் செய்திதரும்பணி எனலாம். இங்கு தருமொழி செய்தியைக் கூட்டவோ குறைக்கவோ செய்தால் பெறுமொழிவடிவம் நேரடி மொழிபெயர்ப்பு என்ற நிலையிலிருந்து விலகிவிடுகிறது.

2. உணர்வூட்டும் பணி (Expressive Function)

தருமொழிவடிவம் தருமொழிவாசகர்களின் உள்ளத்தில் ஏற்படுத்திய உணர்வுகளை மொழிபெயர்ப்பும்பெறுமொழிவாசகர்களின் உள்ளத்தில் ஏற்படுத்தலை உணர்வூட்டும் பணி எனலாம். மொழிபெயர்ப்பு உணர்வூட்டும் தன்மையிலிருந்து விலகினால் அது சுவையற்றதாகக் காணப்படும். எனவே மொழிபெயர்ப்பு உணர்வோட்டம் பெற்றதாக அமைய மொழிபெயர்ப்பாளர் நேரிணைகளைவிடவும் மாற்றிணைகளைப் பயன்படுத்தவேண்டும்.

3. செயல்தூண்டும் பணி (Imperative Function)

தருமொழிவடிவம் எந்த அளவுக்கு அதன் வாசகர்களைத் தூண்டுவதாய் அமையுமோ அந்த அளவுக்கு மொழிபெயர்ப்பும் அதன் வாசகர்களைத் தூண்டுவதாய் அமையவேண்டும். இதையே செயல் தூண்டும் பணி எனக்குறிப்பிடலாம்.

4. மொழிபெயர்ப்பின் நெறிமுறைகள்

மொழிபெயர்ப்பு பற்றிய நெறிமுறைகள் காலத்திற்கேற்ப மாற்றம் பெற்றுள்ளன. பழங்காலத்தில் மூலத்தின் வடிவத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப் பட்டது. எனவே மூலவடிவத்திலுள்ள எதுகை, மோனை, சந்த அமைப்பு, சொல்நயங்கள் போன்றவற்றை மொழிபெயர்ப்பாளர் பெறுமொழியில் எப்படிக் கொண்டுவருகிறார் என்பதின் அடிப்படையில் மொழிபெயர்ப்பின் வெற்றிதோல் விகள் தீர்மானிக்கப்பட்டன. ஆனால் புதிய முறைப்படி செய்தியைப் பெறுபவ ரின் உணர்வு வெளிப்பாடு (Response) மட்டுமே முக்கியத்துவம் பெற்றுள்ளது. எனவே மொழிபெயர்ப்பின்போது தருமொழி வடிவத்தின் சொற்கூறுகளை மொழி பெயர்ப்பாளர் பெறுமொழியில் கொண்டுவரவேண்டிய தேவை எதுவும் இல்லை. மூலத்தின் கருத்தையும் அது தாங்கிநிற்கின்ற உணர்வையும் மொழிபெயர்ப்பின்மூலம் மாற்றித்தருவதையே அனைவரும் விரும்புகின்றனர்.

1. பெறுமொழியின் தனித்தன்மை

மொழிபெயர்ப்பு சரியாக அமையப் பெறுமொழியைப் பற்றிய மொழி பெயர்ப்பாளரின் மனப்பாங்கு அதன் தனித்தன்மைகளை மதிக்கத்தக்கதாக அமைய வேண்டும். பொதுவாக, ஒவ்வொரு மொழியும் அதற்கே உரிய சில தனித்தன் மைகளால் (Genius)மற்றொரு மொழியிலிருந்து வேறுபடுகின்றது. இத்தகைய தனித்தன்மைகள் சொல்லமைப்பு, தொடரமைப்பு, தொடர்களை இணைக்கும்முறை, உரைக்கோவை அமைப்பு, கவிதை, கட்டுரை, உரையாடல் போன்றவற்றில் காணப்படும் உரைக்கோவைகளின் அமைப்பு, பழமொழி, மரபுத்தொடர் (Idioms) போன்றவற்றின் வடிவமைப்பு ஆகியனவற்றில் காணப்படுகின்றன. மேலும் ஒவ் வொரு மொழியும் அதன் பண்பாட்டு எல்லைக்குள் மிகுதியான சொற்களைக் கொண்டவையாகவும் அமைந்து அதனைத் தாய்மொழியாகக் கொண்டவர்களின் தேவைகளை நிறைவு செய்கின்றது. இதனை மொழிபெயர்ப்பாளர் கருத்தில்

கொண்டு தேவையான இடங்களில் தகுமாற்றங்களின் (Adjustment) மூலம் மொழிபெயர்ப்பைச் செய்து கொள்வது பொருத்தமாக அமையும்.

2. நல்லமொழிபெயர்ப்பு

இயல்பான நல்ல மொழிபெயர்ப்பென்பது ஒரு மொழிபெயர்ப்புப்போல் தோன்றும்படி அமையக்கூடாது என்ற கருத்தும் உண்டு. ஆனால் இக்கருத்து மொழி யமைப்பிற்கு மட்டுமே ஏற்றது எனக் கொள்வது பொருத்தமானது. ஏனெனில் தரு மொழிவடிவத்திலுள்ள பெயர்களையும் நிகழ்ச்சிகளையும் பெறுமொழிக்கேற்ப மாற்றியமைப்பதென்பது விரும்பத்தக்கதல்ல. இங்கு பண்பாட்டு மொழிபெயர்ப்பு (Cultural Translation) தேவையற்றது. எனவே மொழிபெயர்ப் பென்பது பண்பாட்டு மொழிபெயர்ப்பாக இல்லாமல் மொழியமைப்பு மொழி பெயர்ப்பாக (Linguistic Translation)அமைவது ஏற்றுக்கொள்ளத்தக்கது.

3. மொழிநடை

மொழிபெயர்ப்பின்போது கருத்திற்கு கொடுக்கப்படும் சிறப்பு மொழிக்குக் கொடுக்கப்படுவதில்லை. ஆனால் கவிதையை உரைநடையாகவோ அல்லது உரைநடையைக் கவிதையாகவோ மொழிபெயர்ப்பதை நேரடி மொழிபெயர்ப்பு என ஒத்துக்கொள்ளவேண்டியதில்லை. மேலும் கலிங்கத்துப்பரணியைப் பிறிதொரு மொழியில் மொழிபெயர்த்தால் அதில் காணப்படும் துள்ளல் ஓசையும் அம்மொழி பெயர்ப்பில் இடம்பெற்றுவந்தாலே அது முழுமை பெற்றதாகக் கருதப்படும். இருப்பினும் இத்தகைய நடைநலக்கூறுகள், மோனை, எதுகை, இயைபு, போன்றவை, இரட்டுறமொழிதல், மடக்கு, அடுக்குத்தொடர், இரட்டைக்கிளவி முதலிய சொற்கூறுகள் போன்றவற்றை மொழிபெயர்ப்பில் கொண்டுவருவதென்பது இயலாத ஒன்று. எனவே இத்தகைய வடிவக்கூறுகளைப்பற்றி மொழிபெயர்ப்பாளர் கவலையுறாது கருத்தளவில் மாற்றமின்றிப் பெறுமொழிக்கேற்ற வடிவக்கூறுகளைப் படைத்து மொழிபெயர்ப்பை அமைப்பதையே சிறப்பாகக் கருதமுடியும்.

5. மொழிபெயர்ப்பின் முன்னுரிமை

மொழிபெயர்ப்பு பெறுமொழிக்கேற்ற அமைப்பைப் பெற்றதாக அமைய பெற்றிருக்கவேண்டிய முன்னுரிமைகளை நைடா மற்றும் சார்லஸ் டாபர் ஆசியவர்கள்,

1. சொல்லளவில் ஒத்துப்போவதைவிட சூழல் (Context)அடிப்படையில் ஒத்துப்போவதற்கு முன்னுரிமை

2. நேரிணைகளைப் பயன்படுத்துவதை விட மாற்றிணைகளைப் பயன்படுத்துவதற்கு முன்னுரிமை

3. எழுத்து மொழியைவிட பேச்சு மொழியைப் பயன்படுத்துவதற்கு முன்னுரிமை

4. மரபுச் சொற்களைவிட அதைப் பயன்படுத்தபோகும் வாசகர்களின் சொற்களுக்கு முன்னுரிமை என வகைப்படுத்தியுள்ளனர்.

1. சொல்லைவிட சூழலுக்கு முன்னுரிமை

பெரும்பாலான சொற்கள் பொருளைச் (Meaning) சுட்டாமல் பொருட் பரப்பை (Area of meaning) விளக்குவனவாக உள்ளன. சான்றாக Save me, Save money,Save waterஆகிய தொடர்களில் ' Save ' என்பது குறிப்பிட்ட ஒரு பொருளை மட்டும் குறிக்காமல் தொடரில் வரும் சூழலைப் பொறுத்து மாறுபாடடைகின்றது. எனவே இதனை என்னைக் காப்பாற்று, பணத்தைச் சேமி, தண்ணீரை மிச்சப்படுத்து என அதன் பொருட்பரப்பின் அடிப்படையில் மொழி பெயர்க்க வேண்டும்.

2. நேரிணைகளைவிட மாற்றிணைகளுக்கு முன்னுரிமை

மொழிபெயர்ப்பின்போது நேரிணைகளைவிடவும் (Formal Correspondence) மாற்றிணைகளைப் (Dynamic Equivalence) பயன்படுத்தினால் அதனைப்

பெறுமொழிவாசகர்கள் எளிதில் புரிந்துகொள்ள முடியும். சான்றாக, "அத்தேகம் ஆனகேறி நடந்நு" என்பதை "அவர் யானை ஏறி நடந்தார்" என சொல்லுக்குச் சொல் மொழிபெயர்க்காமல் "அவர் யானைமீது சவாரிசெய்து கொண்டிருந்தார்" என மொழிபெயர்ப்பது மூலத்தைப் பிரதிபலிப்பதாய் அமையும்.

3. <u>எழுத்துமொழியைவிடப் பேச்சுமொழிக்கு முன்னுரிமை</u>

எழுத்துமொழியில் கருத்தை உணர்வதற்கும், பொருளை வேறுபடுத்திக்காட்டுவதற்கும் அடிக்கோடிடுதல், தலைப்பெழுத்துக்களையும் சாய்வெழுத்துக்களையும் பயன்படுத்துதல், பத்திகளைத் தனியாக அமைத்தல் போன்ற உத்திகள் கையாளப் படுகின்றன. ஆனால் பேச்சுமொழியில் இத்தகைய உத்திகளைப் பயன்படுத்த முடியாதாகையால் சொல்லவேண்டிய கருத்தைச் சற்றுத்தெளிவாக விளக்கவேண்டிய தேவை ஏற்படும். இவ்வகை உத்தியை மொழிபெயர்ப்பிலும் கையாண்டால் வாசகர்களின் புரிதல் திறன் மிகுதிப்படும்.

4. <u>மரபுச்சொற்களைவிட வாசகர்களின் வழக்குச் சொற்களுக்கு முன்னுரிமை</u>

மொழிகளில் உள்ள மரபுச்சொற்கள் பல சமகால வாசகர்களின் வழக்கில் காணப்படுவதில்லை. எனவே அவற்றை மொழிபெயர்ப்பில் பயன்படுத்தினால் வாசகர்களின் புரிதல்திறன் மிகவும் குறைவுபடும். மேலும் சமகால வாசகர்கள் மரபுச்சொற்களாலான நூல்களை ஒதுக்கிவிடவும் கூடும்.

6. <u>மொழிபெயர்ப்பு இணைகள்</u>

தருமொழி வடிவத்திலுள்ள சொல், தொடர் போன்றவற்றைப் பதிலீடு செய்யக்கூடிய பெறுமொழிக்கூறுகளை மொழிபெயர்ப்பு இணைகள் (Translation Equivalence) எனலாம். மொழிபெயர்ப்பு இணைகளை 1. நேரிணைகள், 2. மாற்றிணைகள், 3. விளக்கமுறையில் அமைந்த இணைகள் என வகைப்படுத்தலாம்.

1. நேரிணைகள் (Formal Correspondence)

தருமொழி வடிவத்திலுள்ள சொல், தொடர் போன்றவற்றிற்கு இணையான பெறுமொழி வழக்குகளை நேரிணைகள் எனலாம். ஆனால் நேரிணைகள் தருமொழியின் ஒரு சொல் உணர்த்துவதை பெறுமொழியின் ஒரு சொல்லோ அல்லது பல சொற்களோ உணர்த்தும் நோக்கிலும் அமையலாம். இவ்வடிப்படையில் நேரிணைகளை 1. ஒன்றிற்கு - ஒன்று ('அவள் ஒரு கத எழுதி' என்பதை 'அவள் ஒரு கதை எழுதினாள்' என மொழிபெயர்த்தல்), 2. ஒன்றிற்கு-பல ('சந்திரிக' என்பதை 'நிலவின் ஒளி' என மொழிபெயர்த்தல்), 3. பலவற்றிற்குப் பல ('அத்தேகம் ஆன கேறி நடந்நு' என்பதை 'அந்த மனிதர் யானைமீது ஏறி சவாரிசெய்து கொண்டிருந்தார்' என மொழிபெயர்த்தல்), 4. பலவற்றிற்கு ஒன்று ('அவன் வந்நு' என்பதை 'வந்தான்' எனச்செறிவு செய்து மொழி பெயர்த்தல்) என வரிசைப்படுத்தலாம்.

2. மாற்றிணைகள் (Dynamic Equivalence)

தருமொழிவடிவத்தை அப்படியே பதிலீடு செய்யமுடியாத இடத்தும், பொருட்தெளிவின்மை ஏற்படுகின்ற இடத்தும், நேரிணைகளை விடவும் மாற்றிணைகளைப் பயன்படுத்தி பெறுமொழி வடிவத்தை அமைப்பது சிறப்பு. பொதுவாக சிறப்பு வழக்குகள் (Idioms),உருவகங்கள், குறிப்புப்பொருள்கள் ஆகியவற்றை மொழிபெயர்க்கும் போதும், தருமொழிக்கே உரிய தனிப்பட்ட மொழிக்கூறுகள், கலாசாரக்கூறுகள், உரையாடல் அமைப்புகள் ஆகியவற்றை மொழிபெயர்க்கும்போதும் நேரிணைகளைவிடவும் மாற்றிணைகளைப் பயன்படுத்தினால் மொழிபெயர்ப்பு தெளிவுடையதாக அமையும். சான்றாக,

"வார்திங்கள்த் தாலமெடுத்த வஸந்தரா
வேதோ வெஞ்சாறொந்நு பூசிய்க்கயால்
ஸ்ரீலகலேல ஜில்லய்க்கொரு தூமுத்து
மாலயாய் மின்னி நெயில் பட்டணம்"

(வள்ளத்தோள், 1990:42)

என வள்ளத்தோளின் 'மக்தலனமரியம்' என்ற குறுங்காவியத்தில் இடம்பெற்றுள்ள இச்செய்யுளை

"திங்கள் எனும் தட்டெடுத்துத் திகழ்வசந்த நல்லிரவு
பொங்கிவரும் பொன்னிறத்துப் புதுச்சாறு பூசிடவும்
செழுமிய கலேல எனும் சீமையினுக் கிணையில்லா
அழகிய முத்தார மென அணிசெய்யுமே நெயின் நகரம்"

(துறைவன், 1987:1)

என துறைவன் மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதில் "வார்திங்கள் தாலம்" என்பதை "திங்கள் எனும் தட்டு" எனவும், "வஸந்தரா" என்பதை "திகழ்வசந்த நல்லிரவு" எனவும், "ஏதோ வெஞ்சாறு" என்பதை "பொங்கிவரும் பொன்னிறத்துப் புதுச்சாறு" எனவும், "ஸ்ரீலகலேல ஜில்லக்கு" என்பதை "செழுமிய கலேல எனும் சீமையினுக்கு" எனவும், "ஒரு தூமுத்துமால" என்பதை "இணையில்லா அழகிய முத்தாரம்" எனவும், "மின்னி" என்பதை "அணிசெய்யும்" எனவும் மாற்றிணைகளைப்பயன்படுத்தியுள்ளார்.

3. விளக்கமுறையில் அமைந்த இணைகள் (Descriptive Equivalences)

தருமொழிச் சொல்லுக்கு சமமான சொல் பெறுமொழியில் இல்லாதபோது அதனை கருத்தை அடிப்படையாகக்கொண்டு சற்று விளக்கமாக அமைத்தலை இவ்வகையில் அடக்கலாம். சானறாக, 'அகிம்சை' என்பதற்கு Non Violence என ஆங்கிலத்தில் இணைகொள்வதைக் குறிப்பிடலாம். மேலும் Switch என்பதற்கு வைத்யுதி ஆகமனநிகமன இயந்றம் (மின்சாரத்தைச் செலுத்தல் மற்றும் நிறுத்தல் செய்யும் கருவி) என மலையாளத்தில் விளக்கப்பதிலி இருப்பதைச் சுட்டிக் காட்டலாம்.

7. மொழிபெயர்ப்பின் நடை


மொழிபெயர்ப்பு கருத்தளவில் மட்டுமன்றி நடையமைப்பிலும் தருமொழி வடிவத்தைப் பிரதிபலிப்பதாய் அமையவேண்டும் என்பதின் அடிப்படையில் தருமொழியின் பழங்கால நடையில் அமைந்த நூல் ஒன்றைப் பெறுமொழியில் அதற்குச்சமமான பழங்கால நடையில் மொழிபெயர்த்தால் அது சமகால வாசகர்களுக்குப் புரியாமல் போகவும் செய்யும். எனவே மொழிபெயர்ப்பு கருத்தளவில் மூலவடிவத்தை ஒத்தும், நடையளவில் பெறுமொழியின் சமகால வழக்கை ஒத்தும் அமைவது சிறப்பு. ஆனால் சமகால வழக்கை ஒத்து அமையும் மொழி பெயர்ப்பில் தருமொழிவடிவத்தின் சிறப்பியல்புகள் சில இழந்துவிடுவதும் உண்டு. ஆதலால் மொழிபெயர்ப்பின் நடையமைப்பை அதன் வாசகர்களைக் கருத்தில் கொண்டு மொழிபெயர்ப்பாளர் தீர்மானிப்பது நல்லது. பொதுவாக மொழிபெயர்ப்பின் நடையமைப்பை அதன் தன்மையின் அடிப்படையில்

1. எளிதில் புரியக்கூடிய சொல் மற்றும் வடிவக்கூறுகள் (Lexical and formal Features Designed for Efficiency)

2. சிறப்பாற்றலை உருவாக்கக்கூடிய சொல் மற்றும் வடிவக்கூறுகள் (Lexical and Formal Features Designed for Special Effects)

என வகைப்படுத்தலாம். மொழிபெயர்ப்புகளில் காணப்படும் புரிதல் மற்றும் சிறப்பாற்றல் ஆகிய இவ்விரு பண்புகளும் ஒன்றற்கொன்று முரணாக உள்ளதால் எளிதில் புரியும் மொழிபெயர்ப்பில் சிறப்பாற்றலைத் தரும் கூறுகள் இன்றியும், சிறப்பாற்றலைத்தரும் மொழிபெயர்ப்பில் எளிதில் புரியும் கூறுகள் இன்றியும் அமையும்.

விளக்கப்படம் எண் 1:3, எளிதில் புரிதல் மற்றும் சிறப்பாற்றலைத்தருதல் ஆகிய நடைக்கூறுகளின் தன்மை



1. எளிதில் புரியக்கூடிய சொல் மற்றும் வடிவக்கூறுகள்

மொழிபெயர்ப்பை எளிதில் புரிந்துகொள்ள உதவும் நடைக்கூறுகளை 1. சொல், 2. தொடர், என வகைப்படுத்தலாம்.

1. சொல்

2. தெரிந்த சொற்கள்

மொழிபெயர்ப்பில் தெரிந்த சொற்களைப் பயன்படுத்துவதால் புரிதல் திறனை மிகுதிப்படுத்த முடியும். சான்றாக குருதி, உதிரம், இரத்தம் ஆகிய சொற்களில் 'இரத்தம்' மற்ற இருசொற்களைவிடவும் சமகால வாசகர்களிடம் அறிமுகப்பட்டதாகும்.

2. பொருளோடு நேரடித்தொடர்புடைய சொற்கள்

பொருளை (Object) நேரடியாகச்சுட்டும் சொற்களைக் கொண்டதாக அமையும் மொழிபெயர்ப்பு வாசகர்களை எளிதில் புரிந்து கொள்ளச்செய்யும். சான்றாக கரி, யானை, ஆகிய சொற்களில் யானை என்பது 'கரி' என்ற சொல்லைவிடவும் துதிக்கையை உடைய விலங்கை நேரடியாகச்சுட்டுகிறது.

3. சமகால சொற்கள்

மொழிபெயர்ப்பில் வழக்கிறந்த அல்லது பழங்கால சொற்களை விடவும் சமகாலச்சொற்கள் காணப்பட்டால் புரிதல்திறன் மிகுதிப்படும். சான்றாக, காலதர், ஜன்னல் ஆகிய சொற்களில் 'ஜன்னல்' சமகால வழக்கைப்பெற்றதும் அனைவருக்கும் தெரிந்ததுமாகும்.

4. பொதுக்கலாச்சாரச்சூழலில் சிறப்புச்சொற்கள்

பொதுகலாச்சார சூழல் சார்ந்த மொழிபெயர்ப்புகளில் பொதுச்சொற்களைவிடவும் சிறப்புச்சொற்களைப் பயன்படுத்தினால் புரிதல்திறன் மிகுதிப்படும். சான்றாக 'பழம் சாப்பிட்டான்' என்பதைவிட 'திராட்சை (கொடிமுந்திரி) சாப்பிட்டான்' என்னும்போது 'திராட்சை' என்ற சிறப்புச்சொல் சாப்பிட்ட பழத்தின் வகையைப் புரிந்துகொள்ள உதவுகிறது.

5. அறிவுத்துறை சார்ந்தவைவற்றில் பொதுச்சொற்கள்

அறிவுத்துறை சார்ந்தவற்றில் சிறப்புச்சொற்களைவிடவும் பொதுச் சொற்களைப் பயன்படுத்துவதின் மூலம் மொழிபெயர்ப்பை சாதாரணமக்களும் புரிந்துகொள்ள முடியும். சான்றாக அமிலம் (Acid), ஃபார்மிக் அமிலம் (Formic Acid) ஆகியவைவற்றில் அமிலம் (Acid) என்பதை அனைவரும் எளிதில் புரிந்துகொள்வர்.

6. கருத்தின் மையப்பொருளை விளக்கும் சொற்கள்

தருமொழிவடிவத்தின் உட்பொருளை விளக்கும் நோக்கிலான சொற்களை மொழிபெயர்ப்பில் பயன்படுத்தினால் அதனை எளிதில் அனைவரும் புரிந்துகொள்ளலாம். சான்றாக 'தலைக்கு சுகமில்லாதவன்', 'பைத்தியக்காரன்' ஆகியவைவற்றில் 'பைத்தியக்காரன்' என்பது கருத்தின் மையப்பொருளை நேரடியாகத் தருகின்றது.

2. தொடர்

1. வாக்கியங்களுக்கிடையிலான தொடர்பைக்காட்டுதல்

மொழிபெயர்ப்பில் வாக்கியங்களுக்கிடையிலான தொடர்பை மேலும், ஆகவே, எனவே போன்ற சொற்களால் காட்டினால் கருத்தை எளிதில் புரிந்து கொள்ள முடியும். சான்றாக, "மொழி குறியீடுகளாலானது. ஒரு மொழியின்

குறியீடுகள் ஒரு குறிப்பிட்ட வடிவமைப்பில் இயங்குகின்றன" என்பதை "மொழி குறியீடுகளாலானது எனவே ஒரு மொழியின் குறியீடுகள் ஒரு குறிப்பிட்ட வடிவமைப்பில் இயங்குகின்றன" என 'எனவே' என்ற சொல்லைச்சேர்த்து அமைத்தால் வாக்கியங்களுக்கு இடையிலான பொருள் தொடர்பை எளிதில் புரிந்துகொள்ளமுடியும்.

2. துணைவாக்கியங்களுக்கிடையிலான தொடர்பைக்காட்டுதல்

துணைவாக்கியங்களின் இடையிலுள்ள தொடர்பை ஆனால், அல்லது, ஏனென்றால் போன்ற சொற்களால் காட்டுதலை இவ்வகையில்அடக்கலாம். சான்றாக, 'நோய் ஒன்றுமில்லெ, நடக்க கொஞ்சம் சிரமம்' என்பதை 'நோய் ஒண்ணு மில்லே ஆனால் நடக்க கொஞ்சம் சிரமம்' என அமைத்தலைக் குறிப்பிடலாம்.

3. சிறிய வாக்கியங்களைப் பயன்படுத்துதல்

நீளமான வாக்கியங்களைவிடவும் சிறிய வாக்கியங்கள் பொருளை எளிதில் புரிந்துகொள்ளச் செய்கின்றன. சான்றாக, "தற்காலத்தில் சம்புக்களைப் படிப்பவர்கள் மிகச்சிலரேயாயினும் மலையாளக்கவிதையின் வளர்ச்சிக்கு அவை பெருமளவு துணை செய்திருக்கின்றன என்பதை மறப்பதற்கில்லையே' என்பதை 'தற்காலத்தில் சம்புகளைப் படிப்பவர்கள் மிகச்சிலரே. ஆயினும் மலையாளக்கு விதையின் வளர்ச்சிக்கு அவை பெருமளவு துணை செய்திருக்கின்றன. இதனை மறப்பதற்கில்லை' என அமைத்தல்.

4. பங்குபெறுபவர் பற்றியக் குறிப்புகளை வெளிப்படையாகக்காட்டுதல்

நிகழ்ச்சியில் பங்குபெற்று வருபவர் பற்றியச் செய்திகளை வாக்கியங்களில் வெளிப்படையாகக்காட்டுதல் புரிதலை மிகுவிக்கும். சான்றாக 'நல்லவேளையாக வந்து சேர்ந்தான்' என்பதை 'நல்லவேளையாக அவன் (இராமன்) வந்து சேர்ந்தான்' என 'அவன்' என்ற குறிப்பையோ அல்லது அவ்விடத்தில் வருபவர் பெயரையோ சேர்த்து மொழிபெயர்ப்பை அமைத்தல்.

5. எளிய அமைப்புடைய வாக்கியங்கள்

எளிய அமைப்புடைய வாக்கியங்களைப் பயன்படுத்தினால் மொழிபெயர்ப்பை எளிதில் புரிந்துகொள்ளமுடியும். சான்றாக, 'ஞானத்திலே சிறந்த பாரதநாட்டை வழிபடு தெய்வமாகப் போற்றிவளர்த்தவர் வள்ளத்தோள்' என்பதை "பாரதநாடு ஞானத்திலே சிறந்தது. இதனை வழிபடு தெய்வமாக வள்ளத்தோள் போற்றி வளர்த்து வந்தார்" என அமைத்தலைக் குறிப்பிடலாம்.

6. துணைவாக்கியங்களைப் பிரித்து எழுதல்

முதன்மைவாக்கியமும் துணைவாக்கியமும் இணைந்த நிலையில் காணப்பட்டால் அதனைப்பிரித்து தனியாக அமைத்தல் மொழிபெயர்ப்பை எளிதில் புரிந்துகொள்ள வழிவகுக்கும். சான்றாக, 'ஆசான், வள்ளத்தோள், உள்ளூர் ஆகிய மூவருக்குப்பிறகு மலையாளக்கவிதை ஸ்தம்பித்துவிட்டது என்பதுதான் பரக்க நிலவிவரும் கருத்து' என்பதை "ஆசான், வள்ளத்தோள், உள்ளூர் ஆகிய மூவருக்குப்பிறகு மலையாளக்கவிதை ஸ்தம்பித்துவிட்டது. இதுதான் பரக்க நிலவிவரும் கருத்து' என அமைத்தல்.

2. சிறப்பாற்றலை உருவாக்கக்கூடிய சொல் மற்றும் வடிவக்கூறுகள்

மொழிபெயர்ப்பு சிறப்பாற்றலைப் பெற்றதாக அமைய உதவும் நடைக் கூறுகளை 1. சொல், 2. தொடர் என வகைப்படுத்தலாம்.

1. சொல்

2. பொதுவழக்கில் இல்லாத சொற்கள்

சாதாரண வழக்கில் இல்லாத சொற்களை மொழிபெயர்ப்பில் பயன்படுத்தினால் அது சிறப்பாற்றலைப் பெற்றதாக அமைகிறது. சான்றாக தரு, மரம் ஆகிய .

சொற்களில் 'தரு' என்பது பொதுவழக்கில் அருசியும், விண்ணுலகத்தொடர்பு பெற்றதுபோன்ற உணர்வை ஏற்படுத்துவதாகவும் அமைதலைக் குறிப்பிடலாம்.

2. வழக்கிறந்த சொற்கள்

மொழிபெயர்ப்பில் வழக்கிறந்த சொற்கள் காணப்பட்டால் அது சிறப் பாற்றலுடன் திகழும். சான்றாக, 'புயல்' என்பது 'மழை' என்ற பொருளில் பழைய இலக்கியங்களில் உள்ளது. இச்சொல்லைத் தற்காலத்தில் பயன்படுத்தினால் Cyclone என்ற பொருளைத்தந்து மருட்சியை ஏற்படுத்தும்.

3. பொதுக்கலாச்சாரச் சூழலில் பொது சொற்கள்

பொதுக்கலாச்சார சூழல் சார்ந்த மொழிபெயர்ப்புகளில் சிறப்புச்சொற் களைவிடவும் பொதுச்சொற்களைப் பயன்படுத்தினால் பொருள் மருட்சி ஏற்படும். சான்றாக, 'பால்குடித்தான்', 'பால்சாப்பிட்டான்' ஆகியவைவற்றில் திரவ நிலையிலான உணவை உட்கொள்ளுதலைக்குறிக்கும் 'குடித்தான்' என்ற சொல்லுக்குப் பதிலாக 'சாப்பிட்டான்' என்ற பொதுச்சொல்லைப் பயன்படுத்துதலைக் குறிப் பிடலாம்.

4. சுற்றிவளைத்துச்சொல்ல உதவும் சொற்கள்

கருத்தை நேரடியாக வெளிப்படுத்தாமல் சுற்றிவளைத்து மறைமுகமாக வெளிப்படுத்தினால் அது சிறப்பாற்றலைத் தருவதாக அமையும். சான்றாக 'அவன் இறந்தான்' என்பதை 'அவன் இறைவனடி சேர்ந்தான்' எனல் (இதனை இலக்கண நூலார் தகுதிவழக்கு என குறிப்பர்).

5. அணிவழக்குகள்

அணிவழக்குகளைப் பயன்படுத்தி மொழிபெயர்ப்பை அமைத்தால் அது சிறப்பாற்றலுடன் திகழும். சான்றாக, முகத்தைக் குறிக்க, 'தாமரை முகம்' என்ற தொடரைப் பயன்படுத்தினால் 'அழகியதும் மென்மையானதுமான முகம்' என்ற பொருளைக்கொண்ட நிழலோட்டம் வாசகரின் உள்ளத்தில் ஏற்படும்.

6. இருபொருள்படும் நோக்கிலான சொற்கள்

இருபொருள் தரும் நோக்கிலான சொற்கள் சிறப்பாற்றலைத் தருவனவாக அமையும். சான்றாக 'மதிதோன்றிற்று' என்பது 'புத்திவந்தது', 'நிலவு வந்தது' ஆகிய இருவேறு பொருளைத் தருவதால் 'மதி' என்ற சொல்லைப் பயன்படுத்துவதின் மூலம் சிறப்பாற்றலை உருவாக்கமுடியும்.

7. விலக்குச்சொற்களைத் தவிர்த்தல்

விலக்குச்சொற்களைத் தவிர்த்து மொழிபெயர்ப்பை அமைத்தால் அது வாசகரின் உள்ளத்தில் உணர்வோட்டங்களை ஏற்படுத்தும். சான்றாக 'அவன் அவளோடு இராத்தங்கினான்' என்பது அதன் விளைவுக்கு நேராக வாசகரின் உள்ளத்தைத் தூண்டிவிடும் தன்மை பெற்றிருப்பதைக் குறிப்பிடலாம்.

2. தொடர்

1. இணைப்புச் சொல்லின்றி வாக்கியங்களை அடுக்குதல்

வாக்கியங்களையும் துணைவாக்கியங்களையும் இணைப்புசொல்லின்றிப்பொருட் தொடர்பின் அடிப்படையில் அடுக்குதலை இவ்வகையில் அடக்கலாம். சான்றாக, "ஆங்கில நாடகங்களை நேரடியாக மொழிபெயர்த்தோ அல்லது வழி விலகாது பின்பற்றியோ இயற்றப்பட்ட நாடகங்கள் பல அக்காலத்தில் தோன்றின" என்பதை "ஆங்கில நாடகங்களை நேரடியாக மொழிபெயர்த்தோ வழிவிலகாது

பின்பற்றியோ இயற்றப்பட்ட நாடகங்கள் பல அக்காலத்தில் தோன்றின" என 'அல்லது' 'அவற்றை' ஆகிய சொற்களைத்தவிர்த்து அமைத்தலைச் சுட்டிக்காட்டலாம்.

2. நீண்ட மற்றும் கலவை வாக்கியங்கள்

மொழிபெயர்ப்பில் நீண்டதும் கலவை அமைப்புடையதுமான வாக்கியங்கள் சிறப்பாற்றலை ஏற்படுத்தும். சான்றாக, "வாரியர் எழுதியது மிகச்சிறியதொரு நூல்தான். மலையாள இலக்கியத்துக்கு அச்சிறு பனுவலே பெரியதொரு ஆக்கமாகும்" என்பதை "வாரியார் மிகச்சிறியதொரு நூலைத்தான் எழுதினாலும் மலையாள இலக்கியத்துக்கு அச்சிறுபனுவலே பெரியதொரு ஆக்கமாகும்" என நீண்ட மற்றும் கலவை அமைப்பில் அமைத்தலைக் குறிப்பிடலாம்.

3. கருத்தை முரண்பாடுள்ள தொடரமைப்பால் சொல்லுதல்

மூலவடிவத்தின் கருத்தை நேரடியாகச்சொல்வதற்குப் பதிலாக முரண்பாடுள்ள தொடரமைப்பைக் கையாண்டு வெளிப்படுத்தலை இவ்வகையில் அடக்கலாம். சான்றாக, 'அவன் தந்நில்ல (அவன் தரவில்லை)' என்பதை 'அவன் தர மறுத்தான்' என மொழிபெயர்த்தலைக் குறிப்பிடலாம்.

4. தொடைகளைக் கையாளுதல்

தருமொழிவடிவச் செய்தியை பெறுமொழியில் ஒலியியைபு, சந்தநயம், எதுகை, மோனை போன்ற தொடை நயங்களுடன் தருதலை இவ்வகையில் அடக்கலாம். சான்றாக, 'அவன் நல்லவண்ணம் படிச்சு (அவன் நன்றாகப் படித்தான்)' என்பதை 'அவன் கசடறக்கற்றான்' என மொழிபெயர்த்தலைச் (இதில் ககரம் மோனைத்தொடையாக வந்துள்ளது) சுட்டிக்காட்டலாம்.

8. மொழிபெயர்ப்பின் அளவு

மொழிபெயர்ப்பு இணைகள் என்பன எப்போதும் ஒன்றுக்கு ஒன்று என்றில்லாமல் சில சொற்களுக்குப் பல சொற்களாகவோ, பல சொற்களுக்கு சில சொற்களாகவோ அமைவதால் மொழிபெயர்ப்பின் மொத்தவடிவத்திலும் வேறுபாடுகள் ஏற்படுகின்றன. இவற்றை அடிப்படையாகக்கொண்டு மொழிபெயர்ப்பின் அளவுவேறுபாட்டை 1. விரிவாக்கங்கள், 2. செறிவாக்கங்கள் என வகைப்படுத்தி விளக்கலாம்.

1. விரிவாக்கங்கள் (Expansions)

தருமொழி வடிவத்தைக்காட்டிலும் பெறுமொழி வடிவத்தை விரிவாக அமைத்தலை 1. நிகழ்ச்சியில் பங்கேற்பவரைக் குறிப்பிடுதல், 2. சொல்லவேண்டியக் கருத்தை வெளிப்படையாகச்சொல்லுதல், 3. சிறப்புச்சொல்லுடன் பொதுச்சொல்லைப்பயன்படுத்துதல், 4. விளக்கப்பதிலிகளைப் பயன்படுத்துதல் என வகைப்படுத்தி விளக்கலாம்.

1. நிகழ்ச்சியில் பங்கேற்பவரைக் குறிப்பிடுதல் (Identification of the Participants in events)

தருமொழிவடிவத்தில் தொக்குநிற்கும் பங்குபெறுபவர் பற்றிய செய்தியைச் சேர்த்து மொழிபெயர்ப்பை அமைத்தலை இவ்வகையில் அடக்கலாம். சான்றாக, "ஓர்த்தில்லேலும் ஈ கடப்புறத்திருந்நு ஞான் பாடும்" (தகழி, 1986:119) என்பதை "நீ என்னை மறந்துபுட்டாலும் நான் எண்ணைக்கும் இந்தக் கடற்கரையிலே உட்கார்ந்து பாடிக்கிட்டிருப்பேன்" (சுந்தரராமசாமி, 1987:153) என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதில் 'ஓர்த்தில்லேலும்' என்பதுடன் மறைந்து நிற்கும் எழுவாயான "நீ என்னை" என்பதையும் சேர்த்து பெறுமொழி வடிவத்தை அமைத்துள்ளார்.

2. சொல்லவேண்டிய கருத்தை வெளிப்படையாகச் சொல்லுதல்

தருமொழிவடிவத்தில் குறிப்பாகச் சொல்லியுள்ள செய்தியை வெளிப்படையான நிலையில் சற்று விளக்கமாக பெறுமொழிவடிவத்தில் அமைத்தலை இவ்வகையில் அடக்கலாம். சான்றாக, "வாஸவதத்தா க்யயாய வாரசுந்தரி - மதுரா வாஸிகளிலறியாதில்லிவளெயாரும்" (குமாரனாசான், 1990:25) எனக் கருணை என்ற குறுங்காவியத்தில் இடம்பெற்றுள்ள இப்பகுதியை "வாஸவதத்தை என்னும் பேர் கொண்டவள் அழகி மடமாதிவளை மாமதுரை ஊரில் மிகத்தேசுடையாள் என்பது அன்றி வேசி விலைமாதெனவே செப்ப அறியாதவர்கள் இல்லை" (இராமகோபிநாதன், 1990:90) என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதில் "மதுரா வாசிகளிலறியாதில்லிவளெ யாரும்" என்பதை "மாமதுரை ஊரில் மிகத்தேசுடையாள் என்பது அன்றி வேசி விலை மாதெனவே செப்ப அறியாதவர்கள் இல்லை" என அதன் உட்கருத்தை வெளிப்படையாக்கிப் பெறுமொழிவடிவத்தை அமைத்துள்ளார்.

3. சிறப்புச் சொல்லுடன் பொதுச்சொல்லைப் பயன்படுத்தல்

தருமொழிவடிவத்திலுள்ள சிறப்புச்சொல்லுடன் பொதுச்சொல்லையும் சேர்த்துப்பெறுமொழிவடிவத்தை அமைத்தலை இவ்வகையில் அடக்கலாம். சான்றாக, "ஜெருசலேம்" என்பதை "எருசலேம் நகரம்" என 'நகரம்' என்ற பொதுச்சொல்லையும் சேர்த்து மொழிபெயர்த்தலைக் குறிப்பிடலாம்.

4. விளக்கப்பதிலிகளைப் பயன்படுத்தல் (Descriptive substitutes)

தருமொழிச்சொற்களை நேரடி இணைகளால் மொழிபெயர்க்காமல் அவற்றின் கருத்தின் அடிப்படையில் சற்று விளக்கமான நிலையில் மொழிபெயர்த்தலை இவ்வகையில் அடக்கலாம். சான்றாக, Synagoque (ஆசரிப்புக்கூடாரம்) என்பதை 'The worship house of theJews' என மொழிபெயர்த்தலைக் குறிப்பிடலாம்.

2. செறிவாக்கங்கள் (Reductions)

தருமொழிவடிவத்தைக் கருத்தடிப்படையில் மாற்றமின்றி சுருக்கமாக அமைத்தல் செறிவாக்கமாகும். இதனை 1. பெயருக்குப்பதில் சுட்டுப்பெயரைப் பயன்படுத்துதல், 2. நடையைச் சுருக்குதல் என வகைப்படுத்தி விளக்கலாம்.

1. பெயருக்குப் பதில் சுட்டுப்பெயரைப் பயன்படுத்துதல்

தருமொழிவடிவத்தில் காணப்படும் பெயர்களுக்குப் பதிலாகச் சுட்டுப் பெயர்களைப் பயன்படுத்தி பெறுமொழிவடிவத்தைச் செறிவாக்குதலை இவ்வகையில் அடக்கலாம். சான்றாக, "கறத்தம்ம போயாலு பின்னே கறத்தம்ம என்னை ஓர்க்குமோ? பரீக்குட்டியுடெ ஆத்மார்த்தமாய சம்சயமாயிருந்நு அது" (தகழி, 1986:119) என்பதை "நீ போயுட்டா அப்புறம் உனக்கு என் ஞாபகம் இருக்குமா? அவன் மனத்தில் உண்மையிலேயே எழுந்த சந்தேகம் அது" (சுந்தரராமசாமி, 1987: 153) என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிட லாம். இதில் மொழிபெயர்ப்பாளர் 'கறத்தம்ம' என முதலில் வந்துள்ளதை 'நீ' எனவும், இரண்டாம் முறை வந்துள்ளதை 'உனக்கு' எனவும், பரீக்குட்டி' என்பதை 'அவன்' எனவும் சுட்டுப்பெயர்களைப் பயன்படுத்தி மொழிபெயர்ப்பை அமைத்துள்ளார்.

2. நடையைச் சுருக்குதல்

தருமொழிவடிவத்தின் நடையமைப்பை விடவும் பெறுமொழிவடிவத்தின் நடையமைப்பைச் செறிவாக அமைத்தலை இவ்வகையில்அடக்கலாம். சான்றாக, "மலய்யடிவாரம் முழுவன் இவன்றெ குதிர வண்டியுடெ சுடலின்னடியிலெவிடெயோ நிந்நு முளய்க்குந்ந ஜலதரம்கத்தின்றெ சப்தம் படர்ந்நு கயறுந்நு" (சச்சிதானந்தன், 1988:289) என்பதை "இவனுடைய குதிரை வண்டியின் கீழிருந்து மலையடிவாரம்.

முழுவதும் ஜலதரங்க இசை பரவுகிறது" (சுகுமாரன், 1990:61) என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதில் "இவன்றெ குதிரவண்டியுடெ குடலின்னடியிலெவிடெயோ நிந்நு முளய்க்குந்ந" என்பதை "இவனுடைய குதிரை வண்டியின் கீழிருந்து" எனவும், "ஜலதரம்கத்தின்றெ சப்தம் படர்ந்நு கயறுந்நு" என்பதை "ஜலதரங்க இசை பரவுகிறது" எனவும் மொழிபெயர்ப்பாளர் நடையைச் சுருக்கியுள்ளார்.

9. மொழிபெயர்க்கக்கூடாதன

மொழிபெயர்ப்பின்போது பெறுமொழியில் மொழிமாற்றியமைக்காமல் ஒலிபெயர்த்து அமைக்க வேண்டிய நிலையிலான பகுதிகளும் தருமொழிவடிவத்தில் இடம் பெற்றிருக்கும். இத்தகையக் கூறுகளை 'மொழிபெயர்க்கக்கூடாதன' எனலாம். இதற்குச் சான்றாக விவிலிய மொழிபெயர்ப்புகளில் காணப்படும் எபிரேயம், கிரேக்கம், அரமேயிக் போன்ற மொழிகளிலுள்ள சொற்கள் மற்றும் தொடர்களாக ஆமென் (அப்படியே ஆகுக), அல்லேலூயா (கடவுளே உனக்குத் துதி), ரபீ (யூதர்களின் வேத ஆகமங்களைக் கற்றுத் தேறியவர், போதகர் என்ற பொருள்களைக்கொண்ட இச்சொல்லைப் பயன்படுத்தி இயேசுநாதரை நாத்தான்வேல் என்பவன் அழைத்ததாகக்குறிப்பு உள்ளது), ஏலி ஏலி லாமா சபக்தானி ('என் கடவுளே என் கடவுளே ஏன் என்னைக்கைவிட்டீர்' என்னும் பொருள் படும் இத்தொடரை இயேசுநாதர் சிலுவையில் தொங்கியபோது சத்தமிட்டுச் சொன்னதாக விவிலியம் குறிப்பிடுகின்றது) போன்றவற்றைச் சுட்டிக் காட்டலாம். குமாரனாசானின் சண்டாலபிக்சுகியில் புத்த சமயத்தினரின் தாரக மந்திரமாக இடம்பெற்றுள்ள

"புத்தம் சரணம் கச்சாமி - புத்த
தர்மம் சரணம் கச்சாமி"


(குமாரனாசான், 1988:55)

என்ற பகுதியை இராமகோபிநாதனும் (1990:75), நெல்லை சு. முத்துவும் (1992:35) அவ்வாறே ஒலிபெயர்த்து அமைத்துள்ளதையும் இங்கு எடுத்துக்காட்டலாம். இவற்றை அடிப்படையாகக்கொண்டு சமயத்தொடர்பான மந்திரங்கள் (ஓம் நமச்சிவாய, நமோ நாராயண), குறிப்பிட்ட நபர்களின்முக்கியமான பேச்சுக்கள் போன்றவைவற்றை மொழிபெயர்க்கக் கூடாதவையாகக் கொள்ளலாம். மேலும் இடப்பெயர்கள், ஆட்பெயர்கள் (Personal names) போன்றவும் மொழிபெயர்க்கக் கூடாதவற்றின் பட்டியலில் அடங்கும்.

5. மொழிபெயர்ப்பின் படிநிலைகள்

ஒரு மொழியில் சொல்லப்பட்ட கருத்துகளை மற்றொரு மொழியில் சொல்ல மொழிபெயர்ப்பு பயன்படுகிறது. பொதுவாக மொழிபெயர்ப்புப்பணி மனிதனால் செய்யப்படுவது (Human Translation), இயந்திரங்களால் செய்யப்படுவது (Machine Translation)என இருவேறு நிலைகளில் நடைபெறுகின்றது. இவற்றில் மனிதன் செய்கின்ற மொழிபெயர்ப்புப் பணிக்கு மூளை நிலைக்களனாக அமைகிறது. இதன் அடிப்படையில் நைடா, சார்லஸ் டாபர் ஆகியவர்கள் இப்பணி 1. பகுப்பாய்வு (Analysis),2. மாற்றுதல் (Transfer), 3. மறு வடிவாக்குதல் (Restructuring) என மூன்று படிநிலைகளைப் பெற்றமைவதாகக் கருதுகின்றனர். இதனைப் பின்வருமாறு படத்தில் காட்டலாம்.

விளக்கப்பட எண்.1:4, மொழிபெயர்ப்பின் படிநிலைகள்



1. பகுப்பாய்வு (Analysis)

பகுப்பாய்வு என்பது தருமொழிவடிவத்தின் இலக்கண அமைப்பின் அடிப்படையில்

அதன் மையப்பொருளைக் கண்டறிதலாகும். இதனை 1. தருமொழிவடிவத்தின் சொற்கள் மற்றும் சொற்சேர்க்கைகள் ஆகியவற்றிற்கிடையிலான பொருளுறவைக் கண்டறிதல், 2. தருமொழிவடிவத்திலுள்ள சொற்களின் சுட்டுப்பொருளைக் கண்டறிதல், 3. தருமொழிவடிவத்தின் குறிப்புப்பொருளைக் கண்டறிதல் என வகைப்படுத்தலாம்.

1. சொற்கள், சொற்சேர்க்கைகள் ஆகியவற்றிற்கிடையிலான பொருளுறவைக் கண்டறிதல்

தருமொழிவடிவத்தின் சொற்கள் மற்றும் சொற்சேர்க்கைகளின் பொருளுறவைக்காணுதலை 1. இலக்கண உறவைக்காணுதல், 2. சூழலை ஆய்தல், 3. கருத்தொடராக்குதல் என வகைப்படுத்தலாம்.

1. இலக்கண உறவைக்காணுதல்

மொழியின் இலக்கண அமைப்பிற்குப் பொருள் உண்டு. சான்றாக, 'நாய் குழந்தையைக் கடித்தது', 'குழந்தை நாயைக்கடித்தது' ஆகிய தொடர்களில் சம அளவிலான சொற்கள் உள்ளன. ஆனால்இவை வந்துள்ள இலக்கண அமைப்பைப் பொறுத்து ஒன்றற்கொன்று முரணான பொருளைத் தருகின்றன. இங்கு முதல் தொடரிலுள்ள எழுவாய் இரண்டாம் தொடரில் செயப்படுபொருளாகவும், முதல் தொடரிலுள்ள செயப்படுபொருள் இரண்டாம் தொடரில் எழுவாயாகவும் உள்ளன. இவ்வடிப்படையில் இலக்கண உறவைக் காணுதலை 1. சொற்களின் வரிசைமுறை, 2. எழுவாய் பயனிலைப் பொருத்தம், 3. வெவ்வேறு வித பொருள்படும் ஒரே இலக்கண அமைப்பு, 4. ஒரே பொருள்தரும் வெவ்வேறு வித இலக்கண அமைப்புகள் போன்ற நிலைகளில் வகைப்படுத்தி விளக்கலாம்.

1. சொற்களின் வரிசைமுறை

சொற்களின் வரிசைமுறையில் ஆங்கிலம் எழுவாய், பயனிலை, செயல்படுபொருள் என்ற அமைப்பிலும் (Rama killed Ravana), தமிழ், மலையாளம் ஆகியவை

எழுவாய் செயல்படுபொருள், பயனிலை என்ற அமைப்பிலும் (இராமன் இராவணனைக் கொன்றான், ராமன் ராவணனெ கொந்நு) உள்ளன. எனவே ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கவேண்டுமானால் ஆங்கிலத்தின் தொடரமைப்பு முறையை தமிழின் தொடரமைப்பிற்கேற்ப மாற்றியமைக்க வேண்டும். ஆனால் மலையாளத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கும்போது இத்தகைய சிக்கல் எதுவும் இல்லை. மேலும் தொடரமைப்பில் ஆங்கிலம் இறுக்கமாகவும், தமிழ், மலையாளம் ஆகியவை நெகிழ்ச்சியாகவும் உள்ளன.

2. எழுவாய் பயனிலைப் பொருத்தம்

தமிழ், ஜெர்மன் போன்ற மொழிகளில் எழுவாய்க்கும் பயனிலைக்கும் பொருத்தம் காணப்படும். ஆனால் ஆங்கிலம், மலையாளம் போன்ற மொழிகளில் இத்தகைய பொருத்தம் காணப்படுவதில்லை. சான்றாக, 'ராமன் வந்நு' என்ற தொடரில் எழுவாய், பயனிலை ஆகியவை மட்டுமே உள்ளன. இதில் திணை, பால், எண், இடம் ஆகியனவற்றை எழுவாயைக்கொண்டே அறியமுடியும். தமிழில் இதே பொருளைத்தரும் வாக்கியமான 'இராமன் வந்தான்' என்பதில் 'வந்தான்' என்ற பயனிலையைக்கொண்டு திணை, பால், எண், இடம் ஆகியனவற்றை அறியமுடியும். இதில் 'வந்தவர் யார்' என்பதைக் குறிக்கமட்டுமே எழுவாய் பயன்படுகிறது. எனவே ஆங்கிலம், மலையாளம் போன்ற மொழிகளில் இத்தகைய பொருத்தமற்றுக் காணப்படும் பகுதிகளைத் தமிழில் மொழிபெயர்க்கும்போது தமிழ்மொழியமைப்பிற்கேற்ப (எழுவாய், பயனிலை ஆகியனவற்றை) பொருத்தமுற அமைக்கவேண்டும்.

3. வெவ்வேறு பொருள்படும் ஒரே இலக்கண அமைப்பு

ஒரேவித இலக்கணஅமைப்பு வெவ்வேறு விதப்பொருளைத்தரும் நோக்கிலும் மொழிகளில் இடம்பெற்றுவரும். சான்றாக, பெயரெச்ச அமைப்பிலான

1. 'படிச்சஸ்த்ரீ (படித்த பெண்)' என்பது 'பெண் படித்தாள் (எழுவாய் - வினை)' எனவும், 2. 'அவள் படிச்சகோளேஜ் (அவள் படித்த கல்லூரி)' என்பது 'அவள் கல்லூரியில் படித்தாள் (இடம்-வினை)' எனவும், 3. 'அவள் படிச்ச நோவல் (அவள் படித்த நாவல்)' என்பது 'அவள் நாவலைப்படித்தாள் (செய்யப்படுபொருள்-வினை)' எனவும், 4. 'அவள் எழுதிய பேனா (அவள் எழுதிய பென்)' என்பது 'அவள் பேனாவால் எழுதினாள் (கருவி-வினை)' எனவும் வெவ்வேறு விதப்பொருள் தருவதைக் குறிப்பிடலாம். எனவே மொழிபெயர்ப்பாளர் இத்தகைய பொருள் வேறுபாட்டைக் கண்டறிந்து மொழிபெயர்ப்பை அமைக்கவேண்டும்.

4. ஒரே பொருள்தரும் வெவ்வேறு வித இலக்கண அமைப்பு

வெவ்வேறுவித இலக்கண அமைப்புகள் ஒரேவிதப் பொருளைத் தருவனவாகவும் உள்ளன. சான்றாக, ராமன் ராவணனை கொந்நு (இராமன் இராவணனைக் கொன்றான்), ராவணன் ராமனால் கொல்லப்பட்டு (இராவணன் இராமனால் கொல்லப்பட்டான்) ஆகிய வாக்கியங்களில் முதல்வாக்கியம் செய்வினையாகவும், இரண்டாவது வாக்கியம் செயப்பாட்டு வினையாகவும் காணப்பட்டாலும் இவை இரண்டும் 'இராமன் இராவணனைக் கொன்ற செய்தியைக் குறிப்பிடுவனவாக உள்ளன. எனவே வாக்கியங்கள் வெவ்வேறு வித இலக்கண அமைப்பைக் கொண்டிருந்தாலும் அவற்றின் பொருளை கண்டறிந்து மொழிபெயர்ப்பை அமைக்க வேண்டும்.

2. சூழலை ஆய்தல்

மொழிபெயர்ப்பின் போது தொடர்களில் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ள சூழலை அறிந்து அவற்றின் அடிப்படையில் அதன் பொருளைத் தீர்மானிப்பது இன்றியமையாத ஒன்றாகும். சான்றாக, காரூரின் 'மோதிரம்' என்பது காரூருடைய மோதிரமா அல்லது காரூர் எழுதிய மோதிரம் என்ற தலைப்பைக் கொண்ட சிறுகதையா என்பதை அதன் சூழலை அடிப்படையாகக்கொண்டே

தீர்மானிக்கமுடியும். எனவே மொழிபெயர்ப்பின்போது சொற்கள் மட்டுமல்ல அவை பயன்படுத்தப்பட்டுள்ள சூழலும் பொருளைத் தீர்மானிப்பதில் இன்றியமையாத இடத்தை வகிக்கின்றன என்பதை அறிந்து கொள்ளலாம்.

3. கருத்தொடராக்குதல்

தொடர்கள் புறநிலையில் வெவ்வேறு வடிவங்களைப் பெற்றவையாகக் காணப்பட்டாலும் அவை அகநிலையில் (அதாவது கருத்தளவில்) ஒன்றுபட்டவையாகத் திகழ்கின்றன. சான்றாக, 'ராமன் ராவணனெ கொந்து (இராமன் இராவணனைக் கொன்றான்) என்ற செய்வினை அமைப்பிலான தொடரிலும், 'ராவணன் ராமனால் கொல்லப்பெட்டு (இராவணன் இராமனால் கொல்லப் பட்டான்), 'ராமனால் கொல்லப்பெட்ட ராவணன் (இராமனால் கொல்லப் பட்ட இராவணன்)' போன்ற செயப்பாட்டுவினை அமைப்பினாலான தொடர் களிலும் 'இராமன் இராவணனைக் கொன்றான்' என்ற நிகழ்ச்சி இடம்பெற் றுள்ளது. எனவே இங்கு செயப்பாட்டுவினை அமைப்பினாலான தொடர்களுக்கு கருவாக்கியமாக (Kernal Sentence) செய்வினை அமைப்பினாலான தொடர்களைக் கொள்ளலாம். இவ்வாறு வாக்கியங்களைப் புறநிலையிலிருந்து அவற்றின் கருவாக்கியங்களைக் கண்டறிந்து தருமொழி, பெறுமொழி ஆகியவற்றின் கருவாக்கியங்களுக்கிடையே முதற்கட்ட மொழிபெயர்ப்பை நிகழ்த்திவிட்டு பின் அவற்றை தருமொழி வடிவத்திற்கிணையான பெறுமொழியின் புறவடிவமாக மாற்றி மொழிபெயர்ப்பை அமைப்பது எளிமையையும் தெளிவையும் தரும்.

2. சொற்களின் சுட்டுப்பொருளைக்கண்டறிதல்

தருமொழிவடிவத்தின் சுட்டுப்பொருளை (Referential Meaning) 1. தொடரமைப்பால் பொருள் குறிக்கப்படுதல், 2. பொருண்மைக் குறியீட்டால் பொருள் சுட்டப்படுதல், 3. வெவ்வேறு சொற்களுக்கிடையிலான பொருளுறவால் அறிதல், 4. சொற்களின் பொருள்களுக்கிடையிலான அடுக்குறவால் அறிதல், என வகைப்படுத்தி விளக்கலாம்.

1, தொடரமைப்பால் பொருள் குறிக்கப்படுதல்

சொற்களின் பொருளை அவை தொடரமைப்பில் எவ்வாறு பயன்படுத்தப் பட்டுள்ளன என்பதன் அடிப்படையில் அறிதலை இவ்வகையில் அடக்கலாம். சான்றாக, அவன் ஒரு படி இறங்கி (அவன் ஒருபடி இறங்கினான்)- அவன் நல்லவண்ணம் படிச்சு (அவன் நன்றாகப் படித்தான்), அவன் ஒரு அடி நடந்நு (அவன் ஓர் அடி நடந்தான்) - அவன் என்னெ அடிச்சு (அவன் என்னை அடித்தான்) ஆகிய தொடர்களில் படி, அடி என்பன முதலில் பெயராகவும் பிறகு வினையாகவும் வந்துள்ளன. எனவே இவை தொடர்களில் பயன்படுத்தப்பட்டுள்ள முறைகளைக் கொண்டு மட்டுமே இவற்றின் பொருள் வேறுபாடுகளை அறிந்துகொள்ளமுடியும்.

2. பொருண்மைக் குறியீட்டால் பொருள் சுட்டப்படுதல்

சொற்கள் சுட்டும் பொருளை அறிந்துகொள்ள அவற்றின் பொருண்மைக் குறியீட்டையும் கருத்தில் கொள்ளுதலை இவ்வகையில்அடக்கலாம். சான்றாக வண்டி இளகி (வண்டி புறப்பட்டது), வயிறு இளகி (வயிறு ஓடியது) ஆகிய தொடர்களில் 'இளகி' என்ற சொல்லின் பொருளை அதன் பொருண்மைக் குறியீடாக உள்ள வண்டி, வயிறு ஆகிய எழுவாய்களைக் கொண்டு மட்டுமே தீர்மானிக்க முடியும்.

3. வெவ்வேறு சொற்களுக் கிடையிலான பொருளுறவால் அறிதல்

சொற்கள் சுட்டும் பொருளை அதோடு தொடர்புடைய வெவ்வேறு சொற்கள் தரும் பொருள் உறவால் அறிதலை இவ்வகையில் அடக்கலாம். சான்றாக நடக்குக (நடத்தல்), ஓடுக (ஓடுதல்), சாடுக (குதித்தல்) ஆகிய சொற்களுக்கிடையிலான பொருள் வேறுபாடுகளைப் பின்வருமாறு அட்டவணைப்படுத் தலாம்.

அட்டவணை எண்.1:3, வெவ்வேறு சொற்களுக்கிடையிலான பொருளுறவை அறிதல்

1 எண்	2 சொல்	3 பொருள்கூறு	4 பொருள்கூறு	5 பொருள்கூறு	6 பொருள்கூறு
1	நடக்குக (நடத்தல்)	இடம்பெயர்தலை அடிப்படையாக கொண்டது	கால்களா லானது	இரண்டுகால்களும் ஒன்றற்கொன்று முரணான நிலையில் மெதுவாக இயங் குவது	ஒருவேளையில் ஒருகால்மட்டும் நிலத்தில் பதிகிறது
2	ஓடுக (ஓடுதல்)	"	"	இரண்டுகால்களும் ஒன்றற்கொன்று முரணான நிலையில் விரைவாக இயங் குவது	"
3	சாடுக (குதித்தல்)	"	"	இரண்டுகால்களும் ஒருசேர மெதுவாக வோ விரைவாக வோ இயங்குவது	ஒருவேளையில் இரண்டு கால்களும் ஒருசேர நிலத்தில் பதிவது

இவற்றில் இடம்பெயர்தலை அடிப்படையாகக் கொண்டது, கால்களாலானது ஆகிய பொருட்கூறுகள் அனைத்திற்கும் பொதுவானதாகவும் பிற அனைத்தும் அவற்றின் சிறப்புத் தன்மைகளுக்கேற்ப வேறுபடுவதாகவும் உள்ளன.

4. சொற்களின் பொருள்களுக்கிடையிலான அடுக்குறவால் அறிதல்

சொற்கள் சுட்டும் பொருளை அவற்றின் அடுக்குறவின்(Heirarchical Relation) பயனால் அறிதலை இவ்வகையில்அடக்கலாம். சான்றாக பழம், வாழப்பழம் (வாழைப்பழம்) ஆகிய சொற்களில் 'பழம்' என்பது பொதுச்சொல்லாகக் காணப்பட்டாலும் 'அவன் ஒரு பழம் திந்து(அவன் ஒரு பழம் சாப்பிட்டான்)' என்னும்போது அது வாழைப்பழத்தையும் குறிக்கின்றது. இவ்வாறு சொற்கள் அவற்றின் அடுக்குறவால் பொருள் தருதலையும் கருத்தில் கொள்வது இன்றியமையாத தாக உள்ளது.

3. குறிப்புப் பொருளைக் கண்டறிதல்

சொற்களின் குறிப்புப் பொருளை (Connotative Meaning) 1. சொற்களோடு தொடர்பு கொண்டுள்ள மக்கள், 2. சொற்களைப் பயன் படுத்தும் சூழல்கள், 3. சொற்களின் மொழிசார்பான அம்சங்கள் ஆகியவைவற்றைக் கொண்டு அறிந்து கொள்ளலாம்.

1. சொற்களோடு தொடர்புள்ள மக்கள்

சொற்கள் அவற்றைப் பயன்படுத்தும் மக்களைப் பற்றியதான குறிப்பைத் தாங்கி நிற்கின்றன. சான்றாக, வாப்பா (அப்பா), உம்மா (அம்மா), காக்கா (அண்ணன்) போன்ற சொற்களை இஸ்லாமியர் மட்டுமே பயன்படுத்துவதால் அவை இஸ்லாமியரைப்பற்றியக் குறிப்பைத் தாங்கிநிற்கின்றன. இவற்றைப் போலவே மேடிச்சு (வாங்கினேன்), மொட்ட (முட்டை) போன்ற சொற்களைக் கேட்டமாத்திரத்திலே அவை கேரளத்தில் வசிக்கும் சிரியன் கிறிஸ்தவர்களின் வழக்குகள் என்பதை அறிந்துகொள்ள முடியும். மேலும் சகாவு (தோழர்) என்ற சொல் மலையாளத்தில் பொதுவுடைமை வாதிகளைக் குறிப்பதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

2. சொற்களைப்பயன்படுத்தும் சூழல்கள்

சொற்களைப்பயன்படுத்துகின்ற சூழல்கள் அவற்றிற்கு வேறுபட்ட குறிப்புப் பொருள்களைத்தருகின்றன. சான்றாக, 'வெள்ளம் (தண்ணீர்)' என்ற சொல் மதுக்கடையில் அல்லது மது அருந்துகின்றவர்களிடம் போதை தரும் பானத்தைக் குறிப்பதைச் சுட்டிக்காட்டலாம்.

3. சொற்களின் மொழியைச் சார்ந்த அம்சங்கள்

சொற்களை உச்சரிக்கும் முறை, அவற்றின் உரைக்கோவை அமைப்பு

போன்றவற்றாலும் குறிப்புப்பொருளை அறிந்துகொள்ளலாம். சான்றாக 'நீ பரீக்ஷயில் விஜயிக்கும் (நீ தேர்வில் வெற்றிபெறுவாய்)' என்பது பொதுவாக நேரடிப்பொருளைத் தருகின்றது. இதனை சற்று அழுத்தமாக உச்சரித்தால் 'நீ தேர்வில் வெற்றிபெறமாட்டாய்' என்ற எதிர்மறைப்பொருளும் கிடைக்கின்றது. இதன் அடிப்படையில் சொற்கள் மட்டுமல்லாமல் அதன் மொழியைச் சார்ந்த பிற கூறுகளும் பொருளைத் தீர்மானிப்பதில் பங்குவகிப்பதை அறிந்துகொள்ளலாம் (மேலும் 'தபு' என்பதைப் படுத்துக்கூற நீ சாவெனத் தன் வினையாம். எடுத்துக்கூற நீ ஒன்றினைச் சாவப்பண்ணெனப் பிறவினையாம் என நச்சினார்க்கினியர் குறிப்பிடுவதும் (தொல்.எழுத்து.76) இங்கு சுட்டிக்காட்டத்தக்கதாகும்).

2. மாற்றுதல் (Transfer)

மொழிபெயர்ப்பின்போது இலக்கணம் மற்றும் பொருட்பகுப்பாய்வுக்கு அடுத்தபடியாக மாற்றுதல் நடைபெறுகின்றது. மொழிபெயர்ப்பாளரின் மூளையில் மட்டுமே நடைபெறும் இப்பணியின்மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்ட தருமொழிவடிவம் பெறுமொழிவடிவமாக்கப்படுகிறது. மாற்றுதலை 1. பொருளைத்தகுந்தவாறு அமைத்துக்கொள்ளுதல் 2. வடிவத்தைத் தகுந்தவாறு அமைத்துக்கொள்ளுதல் என வகைப்படுத்தி விளக்கலாம்.

1. பொருளைத் தகுந்தவாறு அமைத்துக்கொள்ளுதல்

மொழிபெயர்ப்பின்போது தருமொழிவடிவத்தின் பொருளில் விடுபாடு ஏதுமின்றி அதனைப் பெறுமொழிக்கேற்ப அமைத்தலை இவ்வகையில் அடக்கலாம். ஆனால் சிறப்புவழக்குகள் (Idioms), உருவகங்கள் (Figurative meanings), சொற்பொருளின் மையக்கூறுகள் (Central Components of meanings), பொது மற்றும் தனிப்பொருள்கள் (Generic and Specific meanings), மிகுசொல்வழக்குகள் (Pleonastic Expressions), சிறப்புச்சூத்திரங்கள் (Special formulas) சூழலை அடிப்படையாகக்கொண்ட கட்டுப்பாடுகளைப் பெற்ற வடிவங்கள் (Provision for contextual conditioning) போன்றவற்றை அப்படியே பெறுமொழியில் கொண்டு வரமுடியாமல் போவதும்

உண்டு. எனவே அவற்றைப் பெறுமொழியில்அவற்றுக்குச் சமமாக வழங்கும் இணைகளைக்கொண்டு மொழிபெயர்க்கவேண்டும். சான்றாக, அம்பாடி நாராயணப் பொதுவாளின் (1990:20) 'நீறித்தெளிஞ்ஞ கூறு' என்ற சிறுகதையில் 'ஓணம் வந்நாலும் உண்ணி பிறந்நாலும் கோரனு கும்பிளில் கஞ்ஞி (ஓணம் வந்தாலும் குழந்தை பிறந்தாலும் புலையனுக்கு தொன்னையில் கஞ்சி)' எனக் காணப்படும் மரபுத்தொடரை புஉஷ்பவேணி கோவி (1990:17) 'ராமன் ஆண்டாலும் ராவணன் ஆண்டாலும் ஏழைக்கு கஞ்சி சட்டியிலேதான்' என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம்.

2. வடிவத்தைத் தகுந்தவாறு அமைத்துக்கொள்ளுதல்

மூலத்தின் வடிவக்கூறுகளை அப்படியே பெறுமொழியில் மாற்றினால் மொழிபெயர்ப்பு தெளிவற்றதாகவும் புரிந்துகொள்ள சிரமத்தை ஏற்படுத்துவதாகவும் அமையும். எனவே தருமொழியிலுள்ள எழுத்து, சொல், தொடர் உரைக்கோவை போன்ற வடிவக்கூறுகளைப் பெறுமொழிக்கேற்ற அமைப்பினதாக மாற்றியமைப்பது இன்றியமையாததாகும். (மேலும், இவைகுறித்த விளக்கங்களுக்கு ஆய்வேட்டில் 1:6 என்ற பகுதியைப் பார்க்கவும்)

3. மறுவடிவாக்கம் (Restructuring)

தருமொழிச்செய்தியைப் பெறுமொழியின் இயல்புக்கேற்ற நடையில் அமைத்தலை மறுவடிவாக்கம் எனலாம். இது மாற்றுதலுக்கடுத்தபடியாக நடைபெறுகின்றது. மறுவடிவாக்கத்தை 1. தருமொழிச்செய்தி மறுவடிவாக்கப் படவேண்டிய பெறுமொழியின் நடை அல்லது கிளை மொழியைத் தீர்மானித்தல், 2. இந்நடை அல்லது கிளை மொழிகளின் சிறப்பியல்புகளைத் தீர்மானித்தல், 3. இந்நடை அல்லது கிளைமொழியில்மறுவடிவாக்கம் செய்ய எத்தகைய உத்திகளைக் கையாளவேண்டும் என்பதைத் தீர்மானித்தல் என்ற அடிப்படைகளில் விளக்கலாம்.

1. தருமொழிச் செய்தி மறுவடிவாக்கப்படவேண்டிய பெறுமொழியின் நடை அல்லது கிளைமொழியைத் தீர்மானித்தல்

மொழிகள் ஒவ்வொன்றும் அவற்றின் உள்ளமைப்பில் சில வேறுபாடுகளைப் பெற்றுள்ளன. இத்தகைய வேறுபாடுகளை 1. காலத்தை அடிப்படையாகக் கொண்டவை (இராமசரித கால மலையாளம், தற்காலமலையளம் போன்றன), 2. வட்டார வழக்குகளை அடிப்படையாகக்கொண்டவை (வடக்கன் மலையாளம், தெக்கன் மலையாளம் போன்றன), 3. சமுதாயங்களை அடிப்படையாகக் கொண்டவை (மீனவர்களின் மலையாளம், இஸ்லாமியரின் மலையாளம் போன்றன), 4. சூழலை அடிப்படையாகக்கொண்டவை (பேச்சுவழக்கு, எழுத்துவழக்கு போன்றன), 5. உரைக்கோவையை அடிப்படையாகக்கொண்டவை (அறிவியல் இலக்கிய வழக்கு, புனைக்கதை இலக்கிய வழக்கு போன்றன) முதலான நிலைகளில்வகைப்படுத்தலாம். ஆனால் மொழியமைப்பு நிலையில் இத்தகைய வேறுபாடுடன் காணப்படும் தருமொழிச்செய்தியைப் பெறுமொழியில் அதற்குச் சமமான நிலையில் மறுவடிவாக்கவேண்டிய நடை அல்லது கிளைமொழியை மொழிபெயர்ப்பாளர் தீர்மானிப்பது மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். சான்றாக, வைக்கம் முகமது பஷீரின் கதாபாத்திரங்கள் பேசும் மலையாள முஸ்லீம்களின் வட்டார வழக்கை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த ஆஷர் அதனை ஸ்காட்டிஷ் கொச்சை ஆங்கிலமாக மாற்றியிருப்பதைக் குறிப்பிடலாம் (யு.ஆர். அனந்தமூர்த்தி கூறிய இக்கருத்தை 'கதா கருத்தரங்கு-பதிவுகள்' என்ற செய்தித்தொகுப்புக் கட்டுரையில் ஜெயமோகன் தந்துள்ளார். பார்க்க, சுபமங்களா, பிப்.1983:69).

2. தருமொழிச்செய்தி மறுவடிவாக்கப்படவேண்டிய பெறுமொழியின் நடை அல்லது கிளைமொழியின் சிறப்பியல்புகளைத் தீர்மானித்தல்

மொழிகளில் காணப்படும் நடை மற்றும் கிளை மொழிகள் ஒவ்வொன்றும் சில தனித்தன்மைகளைப் பெற்றுள்ளன. இத்தகைய தனித்தன்மைகள் அவற்றை

மற்றொரு நடை அல்லது கிளைமொழியிலிருந்து வேறுபடுத்திக்காட்டுகின்றன. குறிப்பாக மீனவர்களின் மலையாளம் பொதுமலையாளத்தை விடவும் சற்று நீட்டியும் ('எடி' என்பதை 'ஏடி' என வழங்குதல்), திரித்தும் ('கறுத்தம்ம' என்பதை 'கறத்தம்ம' எனவும், 'வலயும்' என்பதை 'வலேம்' எனவும் வழங்குதல்) பேசப்படும். இத்தகைய நடையில் அமைந்த படைப்பை தமிழில் அதைப்போன்று நீட்டியும், திரித்தும் வழங்கும் நடையில் மொழிபெயர்ப்பது பொருத்தமானது (இதற்குச் சான்றாக தகழியின் செம்மீன் என்ற நாவலுக்குச் சுந்தரராமசாமி செய்துள்ள மொழிபெயர்ப்பைக் குறிப்பிடலாம். இதனை தமிழக மீனவர்களின் பேச்சுவழக்கிலேயே மொழிபெயர்த்திருந்தால் இன்னும் பொருத்தமாக அமைந்திருக்கும். ஆனால் அதனை மீனவர்களின் வழக்கை அறிந்திராத தமிழ் வாசகர்களால் எளிதில் புரிந்து கொள்ள முடியாமல் போவதற்கும் ஏதுவாகும். எனவே செம்மீன் என்ற நாவலுக்கு சுந்தரராமசாமி செய்துள்ள மொழிபெயர்ப்பின் நடை அல்லது கிளைமொழியைப் பொருத்தமானதாகக் கொள்ளவேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது). இதன் அடிப்படையில் மொழிபெயர்ப்பாளர் தருமொழியின் நடை அல்லது கிளைமொழிக்கு இணையான பெறுமொழியின் நடை அல்லது கிளைமொழியைத் தீர்மானிப்பதில் கவனத்துடன் செயல்படவேண்டும் எனலாம்.

3. <u>தருமொழிச் செய்தியைப் பெறுமொழியில் அதற்குச் சமமான நடை அல்லது கிளைமொழியில் மறுவடிவாக்கம் செய்ய கையாளவேண்டிய உத்திகளைத் தீர்மானித்தல்</u>

தருமொழிச் செய்தியைப் பெறுமொழியில் மாற்றம் செய்ய 1. சரியான சொற்களைத் தேர்ந்தெடுத்தல், 2. நிகழ்ச்சிகளின் அமைப்பைச் சரியாகவும் பொருத்தமாகவும் பின்னுதல், 3. வாசகர்களைக் கருத்தில் கொண்டு அவர்களுக்காக பெறுமொழிவடிவத்தைத் தயாரித்தல், 4. ஒரேமாதிரியான வாசகர்களுக்கும் வெவ்வேறு விதமான பாதிப்புகளை ஏற்படுத்தும் நோக்கில் மொழிபெயர்ப்பை அமைத்தல், 5. வெவ்வேறு வித வாசகர்களைக்கருத்தில் கொண்டு அவர்கள்

அனைவருக்குக்கும் பொருந்தும் நோக்கில் மொழிபெயர்ப்பை அமைத்தல், 6. மொழிபெயர்ப்பை வாசித்துப்புரிதலை சோதித்தல், 7. நடையமைப்பில் திருத்தங்களை ஏற்படுத்தி பொருத்தமுற அமையச்செய்தல் போன்ற உத்திமுறைகளைக் கையாள்வது மொழிபெயர்ப்பைத் தரமானதாக மாற்றியமைக்க உதவும்.

6. மொழிபெயர்ப்புச் சிக்கல்கள்

ஒவ்வொரு மொழியும் வடிவநிலையில் சில தனித்தன்மைகளைப் பெற்றுள்ளன. ஒரு மொழியின் வடிவச்சிறப்பை மற்றொரு மொழியில் காண்பது அரிது. எனவே மொழிபெயர்ப்பாளர் தருமொழிச்செய்தியைப் பெறுமொழியில்மாற்றும்போது சில சிக்கல்களை நேரிடவேண்டியுள்ளது. இத்தகையச் சிக்கல்களை மலையாளத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்தலைக் கருத்தில் கொண்டு 1 எழுத்து, 2. சொல், 3. தொடர், 4. உரைக்கோவை என்ற அடிப்படையில் வகைப்படுத்தி விளக்கலாம்.

1. எழுத்து

தருமொழியின் சிறப்பெழுத்துக்களிலான செய்தியைப் பெறுமொழியில் மாற்றுவதின் அடிப்படையில் எழுத்துநிலையிலான மொழிபெயர்ப்புச் சிக்கல்களை விளக்கலாம். இவற்றை எழுத்துவகைகள், தமிழைவிட மலையாளத்தில் மிகுதியாகக் காணப்படும் எழுத்துக்கள், தமிழ் எழுத்து இணைகள், எடுத்துக்காட்டுகள் என அட்டவணைப்படுத்தலாம்.

அட்டவணை எண். 1:4, மலையாளச் சிறப்பெழுத்துக்களுக்கு இணையான தமிழ் எழுத்திணைகள்

1	2	3	4
எழுத்துவகைகள்	தமிழைவிட மலையாளத்தில் மிகுதியாக உள்ளஎழுத்துக்கள்	தமிழ்எழுத்து இணைகள்	எடுத்துக்காட்டுகள்
உயிர்	ரு	ரு	திருப்பாதம்
	லு	லு	சிலுப்தம்
	அம்	அம்	முகம்
	அக்	அக்	துக்கம்
மெய்	க^{2}	க	காதி
	ச^{2}	ச	சத்திரபதி
	ட^{2}	ட	கடினம்
	த^{2}	த	கதை
	ப^{2}	ப	பலம்
	க^{3}	க	கந்தம்
	ச^{3}	ச (ஜ)	சலம் (ஜலம்)
	ட^{3}	ட	டஜன்
	த^{3}	த	தசரதன்
	ப^{3}	ப	பந்தம்
	க^{4}	க	கடிகாரம்
	ச^{4}	ச	சருக்கரை
	ட^{4}	ட	திடம்
	த^{4}	த	தனம்
	ப^{4}	ப	பாகம்
	ச^{5}	ச	சிவன்

1	2	3	4
	ச^{6}	ச(ஷ)	பாசை (பாஷை)
	ச^{7}	ச(ஸ)	சாகித்தியம் (ஸாகித்தியம்)
	க^{5}	க(ஹ)	கரி (ஹரி)

மலையாளத்தில் சிறப்பெழுத்துக்களாலான சொற்களைத் தமிழில் ஒலிபெயர்க்க வடமொழி தமிழாக்க முறையை மேற்கொள்ளலாம் (இம்முறை குறித்த விளக்கங்களுக்கு ஆய்வேட்டில் 1:3:1, 1:3:2 ஆகிய பகுதிகளைப் பார்க்கவும்).

சொல்

தருமொழியின் சொற்களைப் பெறுமொழியோடு ஒப்பீட்டு நோக்கில் சிறப்புச்சொற்கள், பொதுச்சொற்கள் என வகைப்படுத்தலாம் (சிறப்புச் சொற்கள் மற்றும் பொதுச்சொற்களின் எண்ணிக்கையானது தருமொழியும் பெறு மொழியும் கொண்டுள்ள உறவின் அடிப்படையில் வேறுபடுகிறது). இவற்றில் தருமொழியின் சிறப்புச்சொற்களைப் பெறுமொழியின் பொருள் இணைகளாலும் (பொருள் இணைகள் இல்லாதவற்றை ஒலிபெயர்த்தும்), பொதுச்சொற்களை வடிவ இணைகளாலும் (இங்கு பொருள் இணைகளைப் பயன்படுத்துவதும் தவறில்லை) மொழிபெயர்க்கலாம். இங்கு பொதுச்சொற்கள் இனச்சொற்களாகவோ (Cognates) பிறமொழிகளிலிருந்து கடனாகப் பெற்றவையாகவோ அமையும். இவ்வடிப்படையில் மலையாளத்திலுள்ள தமிழுக்குப் பொதுவான சொற்களை 1. வல்லினமாக்கல், 2. பல்லினமாக்கல், 3. நெட்டெழுத்தாக்கல், 4. பால்வேறுபாட்டுருபனைச்சேர்த்தல், 5. பழைய வழக்குகளை நீக்குதல்,

6. உறுப்புச்சேர்த்தல் போன்ற தகுமாற்றங்களைச்செய்து தமிழில் மொழி பெயர்க்கலாம் (இவை தமிழ்ச்சொற்கள் மலையாளம் ஆதலைக் காட்ட ஏ.ஆர். இராஜராஜவர்மா குறிப்பிடும் மாற்றங்களை அடிப்படையாகக்கொண்டன. பார்க்க. ஏ.ஆர். இராஜராஜவர்மா, 1988:18-41).

1. வல்லினமாக்கல்

மலையாளத்தில் மெல்லின எழுத்துக்களைப் பெற்றுவரும் சொற்களைத் தமிழில் வல்லின எழுத்துக்களைக்கொண்டு மொழிமாற்றலாம். சான்றாக மாங்ஙா-மாங்காய் (ங்ங-ங்க்), பஞ்ஞி-பஞ்சு (ஞ்ஞ்-ஞ்ச்), கொந்நு-கொன்று (ந்நு-ன்று), சிம்முக-சிம்புக (ம்ம்-ம்ப்), வந்நான்-வந்தான் (ந்ந்-ந்த்), கந்நு-கன்று (ந்ந்-ன்று) என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

2. பல்லினமாக்கல்

மலையாளத்தில் அன்ன ஒலியைப்பெற்றுவரும் சொற்களைத் தமிழில் பல்லின எழுத்துக்களால் மொழிமாற்றலாம். சான்றாக, அலஞ்ஞான்-அலைந்தான் (ஞ்ஞ்-ந்த்), பிடிச்சான்-பிடித்தான் (ச்ச-த்த்), வாய்ச்சு-வாய்த்து (ய்ச்-ய்த்), அஞ்சு-ஐந்து (ஞ்ச்-ந்த்), ஞெருக்கம்-நெருக்கம் (ஞ்-ந்), ஞான்-நான் (ஞ்-ந்) போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

3. நெட்டெழுத்தாக்கல்

மலையாளத்தில் குற்றுயிர்களைப் பெற்றுவரும் சொற்களை நெட்டுயிர்களைக் கொண்டு தமிழ்ப்படுத்தலாம். சான்றாக, தல-தலை (அ-ஐ), போலெ-போலே (எ-ஏ) போன்றவற்றைக்குறிப்பிடலாம்.

4. பால்வேறுபாட்டுருபனைச் சேர்த்தல்

மலையாள வினைச்சொற்கள் பால்வேறுபாடு காட்டும் உருபன்களைப் பெற்று

வருவதில்லை. இவற்றைத் தமிழ்ப்படுத்தும்போது பால்வேறுபாடு காட்டும் உருபனைச் சேர்த்து அமைக்கவேண்டும். சான்றாக, ஞான் வந்நு-நான்வந்தேன்(ஏன்), நீ வந்நு-நீவந்தாய்(ஆய்), அவன் வந்நு-அவன் வந்தான் (ஆன்), அவள் வந்நு-அவள் வந்தாள் (ஆள்), அது வந்நு-அது வந்தது(அது), அவ வந்நு-அவை வந்தன (அன) போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

5. பழையவழக்குகளை நீக்குதல்

பழங்காலத் தமிழிலுள்ள உருபன்கள் இடம் பெற்றுவரும் மலையாளச் சொற்களை அவ்வுருபன்களை நீக்கி சமகால வழக்கிற்கேற்ப தமிழில் மொழிபெயர்க்கவேண்டும். சான்றாக, குளிக்கான் வந்நு, வாயிக்கான் வந்நு ஆகியவற்றில் 'ஆன்' ஈற்று வினையெச்சங்களை நீக்கி குளிக்கவந்தார், வாசிக்க வந்தார் எனவும், வருவின், கேள்ப்பின், செய்யுவின் போன்ற சொற்களில் முன்னிலைப் பன்மையைக் காட்டும் 'இன்' விகுதியை நீக்கி வாரும் (வாருங்கள்), கேளும் (கேளுங்கள்), செய்யும் (செய்யுங்கள்) எனவும் மொழிபெயர்த்தலைக் குறிப்பிடலாம்.

6. உருப்புச்சேர்த்தல்

உருபன்களும் ஒலிகளும் குறைந்துவரும் மலையாளச் சொற்களை தமிழ் வழக்கிற்கேற்ப அவற்றைச் சேர்த்து மொழிபெயர்த்தலை இவ்வகையில் அடக்கலாம். சான்றாக அவனு, இவனு போன்ற சொற்களிலுள்ள 'உ'விற்கு பதிலாக 'க்கு' சேர்த்து அவனுக்கு, இவனுக்கு எனவும், 'அவன்றெ' என்பதிலுள்ள 'றெ'யை நீக்கி அதற்குப்பதிலாக 'உடைய' சேர்த்து 'அவனுடைய' எனவும், வேணும், வேணம் என்பனவற்றிலுள்ள 'ணும்', 'அணம்' ஆகியவற்றிற்கு பதிலாக 'டும்' சேர்த்து 'வேண்டும்' எனவும் மொழிபெயர்த்தலைக் குறிப்பிடலாம்.

3. தொடர்

தருமொழிச் செய்தியைப் பெறுமொழியில் மாற்றும்போது தருமொழியின் தொடரமைப்பையும் பெறுமொழிக்கேற்ப மாற்றியமைக்க வேண்டும். மலையாளமும் தமிழும் சமமான தொடரமைப்பைக்கொண்டவை. இருப்பினும் மொழிபெயர்ப்பின்போது ஒருசில மாற்றங்களைச் செய்யவேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இவற்றைப் பின்வருமாறு வகைப்படுத்தி விளக்கலாம்.

1. செயப்படுபொருளைச் செய்தருபோல அமைத்தல்

செயப்படுபொருளைப் பெற்று வரும் வாக்கியங்களைச் செய்தது போன்ற அமைப்பில் மொழிபெயர்த்தலை இவ்வகையில் அடக்கலாம். சான்றாக 'ஞான் முடி வெட்டிச்சு (நான் முடி வெட்டுவித்தேன்)' என்பதை 'நான் முடிவெட்டினேன்' எனவும், 'ஆப்ரகாம் ஈசாக்கினெ ஜனிப்பிச்சு (ஆபிரகாம் ஈசாக்கைப் பிறப்பித்தான்)' என்பதை 'ஆபிரகாம் ஈசாக்கைப் பெற்றான் (மத்தேயு, 1:2) எனவும் அமைத்தலைக் குறிப்பிடலாம்.

2. தொடரில் சொல்வரும் சூழலின் அடிப்படையில் பொருள்கொள்ளல்

தருமொழித்தொடரில் சொல்வரும் சூழலின் அடிப்படையில் பொருள்கொண்டு பெறுமொழித் தொடரை அமைத்தலை இவ்வகையில் அடக்கலாம். சான்றாக 'ஞான் அவிடெ எத்தி', 'அவன் இவிடெ எத்தி' என்ற தொடர்களிலுள்ள 'எத்தி' என்ற வினைமுற்றை, வரும் சூழலின் அடிப்படையில் 'போனேன்', 'வந்தான்' என பொருள் கொண்டு 'நான் அங்கே போனேன்' எனவும், 'அவன் இங்கே வந்தான்' எனவும் மொழிபெயர்ப்பை அமைக்கவேண்டும்.

4. உரைக்கோவை

மொழிபெயர்ப்பைப் பெறுமொழிக்கேற்ப அமைக்க உரைக்கோவை நிலையிலும் சிலமாற்றங்களைச் செய்யவேண்டிய தேவை ஏற்படுகின்றது. மலையாளத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கும்போது உரைக்கோவை நிலையில் செய்யவேண்டிய மாற்றங்களை 1. திணை, 2. பால், 3. எண், 4. இடம் என்ற நிலைகளில் விளக்கலாம்.

1. திணை

உயர்திணையைச் சார்ந்த அவன், அவள் போன்ற சொற்களை மலையாளத்தில் அஃறிணை உயிரிகளைக் குறிக்கவும் பயன்படுத்துகின்றனர். இவற்றைத் தமிழில் 'அது' என மாற்றிமொழிபெயர்த்தலை இவ்வகையில் அடக்கலாம். சான்றாக, "கொலகொம்பனாய ஓரான. சவிட்டி அரச்சும் குத்தியும் அவன் ஒந்நுரண்டு ஆனக்காரெ கொந்நிட்டுண்டு. அவன்றெ வாலிலெ ஒரு பூடயாகுந்து மோஉஷ்டிக் கேண்டது" (பஉஷீர், 1970:7) என்பதில் யானையைக் குறிக்க 'அவன்' என்ற பதிற்பெயர் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதை 'அது' என்ற அஃறிணைப் பதிற்

பெயராக்சி "கொலை செய்யும் தந்தங்களுள்ள ஒரு யானை. மிதித்துத் தேய்த்தும் குத்தியும் அது ஒன்றிரண்டு யானைப் பாகரைக் கொன்றிருக்கிறது. அதன் வாலில் இருந்து ஒருமயிரத்தான் திருடவேண்டும்" என மொழிபெயர்த்தலைக் குறிப்பிடலாம்.

2. பால்

பெண்பாலைக் குறிக்கும் சொல் ஆண்பாலைக்குறிக்கும் நோக்கில் மலையாளத்தில் பயன்படுவதை தமிழுக்கேற்ப மொழிபெயர்த்தலை இவ்வகையில் அடக்கலாம். சான்றாக 'பெண் குட்டிகளும் ஆண்குட்டிகளும் ஸ்கூளில் போகுந்நு' என்பதில் 'குட்டி' என்ற பெண்பால் சொல் (இது தமிழில் அஃறிணை இளமைப்பெயராக வழங்கும்) 'ஆண்குட்டிகள்' என்பதில் ஆண்பாலைக் குறிக்கவும் பயன்பட்டுள்ளது. இதனை 'சிறுவர்கள்' என மாற்றி 'சிறுமியர்களும் சிறுவர்களும் பள்ளிக்குச் செல்கிறார்கள்' என மொழிபெயர்ப்பை அமைக்கவேண்டும்.

3. எண்

ஒருமை எண் மலையாளத்தில் பன்மையைக் குறிப்பதாக வழங்குவதை தமிழில் பன்மையாக மாற்றி மொழிபெயர்த்தலை இவ்வகையில் அடக்கலாம். சான்றாக, "யகோவயுடெ நாமம் வாழ்த்தப் பெடட்டே! நீ அனாதியாயும் சாஸ்வதமாயும் தெய்வமாகுந்நு. நீ மர்த்யனெ பொடியிலேக்கு சேருமாறாக்குந்நு" (பாறப்புறத்து, 1986:114) என்பதில் 'நீ' என்ற சொல்லை 'நீர்' என உயர்வுப் பன்மையாக்சி "கர்த்தரின் திருநாமம் வாழ்க. ஆண்டவரே! நீரே என்றென்றைக்கும் தேவனாயிருக்கிறீர். நீர்மனுஷரை நீர்த்தூளியாக்கி மனுப்புத்திரரே திரும்புங்கள் என்கிறீர்" (கே. நாராயணன், 1978:109) என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம்.

4. இடம்

முன்னிலையை மலையாளத்தில் படர்க்கைச் சொல்லால் குறிப்பதை தமிழில் முன்னிலைச் சொற்களால் மாற்றி மொழிபெயர்ப்பதை இவ்வகையில் அடக்கலாம். சான்றாக, "கறத்தம்ம போயாலு பின்னெ கறத்தம்ம என்ன ஓர்க்குமோ" (தகழி, 1988:119) என்பதை "நீ போயுட்டா அப்புறம் உனக்கு என் ஞாபகம் இருக்குமா" (சுந்தரராமசாமி, 1987: 153) என மொழி பெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதில் 'கறத்தம்ம' எனப் படர்க்கையாக வருவதை நீ, உனக்கு என முன்னிலைச் சுட்டுகளாக மாற்றி மொழிபெயர்ப்பை அமைத்துள்ளார் மொழிபெயர்ப்பாசிரியர்.

7. மொழிபெயர்க்க இயலாத கூறுகள்

மொழிபெயர்ப்பின் மூலம் தருமொழியின் அனைத்துப் பகுதிகளையும் பெறு மொழியின் இணைகளால் பதிலீடுசெய்ய முடியாமல் போவதும் உண்டு. இவ்வாறு பதிலீடு செய்ய முடியாத கூறுகளை மொழிபெயர்க்க இயலாத கூறுகள் (Untranslatable Units) எனலாம். Effability என்ற கொள்கைப்படி எந்த ஒரு கருத்தையும் எந்த ஒரு மொழியின் வாயிலாகவும் அவ்வாறே வெளிப்படுத்தமுடியும் (பார்க்க, எம்.எஸ். திருமலை, Language in Science, P.3). ஆனால் மொழிகள் அதன் பண்பாட்டு எல்லைக்குள் பெற்றுள்ள சிறப்புக்கூறுகளை மற்றொரு மொழி பெற்றிருக்க வாய்ப்பில்லை. எனவே நேரிணைகளால் மொழி பெயர்க்க முடியாதவற்றை மாற்றிணைகளைப் பயன்படுத்தி மொழிபெயர்க்க வேண்டும் என்றும், மாற்றிணைகள் விளக்க முறையில் அமைந்த இணைகளாகக்கூட (Descriptive Equivalents) இருப்பதில் தவறில்லை என்றும் இக்கொள்கையின் அடிப்படையில் விளக்கம் தரலாம். இங்கு மொழிபெயர்க்க இயலாத கூறுகள் என்பன நேரிணைகளால் மொழிமாற்ற முடியாதனவற்றைச் சுட்டுகின்றன. இவற்றை

1. மொழிக்கூறுகள், 2. பண்பாட்டுக்கூறுகள் என வகைப்படுத்தி விளக்கலாம் (பார்க்க. J.C. Catford, A Linguistic Theory of Translation, PP.94-103).

1. மொழிக்கூறுகள் (Linguistic Untranslatable units)

மொழிபெயர்க்க இயலாத மொழிக்கூறுகளை 1. வெவ்வேறு இலக்கணக் கூறுபெற்ற ஒரே சொல்வடிவம் (Shared Exponence), 2. பலபொருள் ஒருசொல் (Polysemy), 3. தொடை நயங்கள், 4. சிலேடைகள் என வகைப்படுத்தலாம்.

1. வெவ்வேறு இலக்கணக்கூறுபெற்ற ஒரே சொல்வடிவம் (shared Exponence)

வெவ்வேறு இலக்கணக்கூறுபெற்றதாகக் காணப்படும் தருமொழிச் சொல்லைப் பெறுமொழியில் அதைப்போன்ற வெவ்வேறு இலக்கணக்கூறுபெற்ற ஒரே சொல்லாக மொழிமாற்ற முடியாமல் போவதும் உண்டு. சான்றாக மலையாளம், தமிழ் ஆகியமொழிகளில் 'அடி' என்ற சொல் பெயராக வரும்போது Foot, Step, Bottom, Root part, Line of a Verse போன்ற பொருள்களையும், வினையாக வரும்போது beat, hit, drive, make sound by striking, ring, blow, pump, print, stitch போன்ற பொருள்களையும், 'இடி' என்ற சொல் பெயராக வரும்போது Thunder, lightning போன்ற பொருள்களையும், வினையாக வரும்போது Collapse, demolish போன்ற பொருள்களையும், 'படி' என்ற சொல் பெயராக வரும்போது step, staircase, stage போன்ற பொருள்களையும், வினையாக வரும்போது be covered with, be straightened, be firmly pressed, read, study போன்ற பொருள்களையும் தருவதைக் குறிப்பிடலாம். ஆனால் அடி, இடி, படி ஆகிய இச்சொற்கள் பெயர், வினை ஆகிய நிலைகளில் தருகின்ற இப்பொருள் வேறுபாடுகளை ஒருசேரக்கொண்ட சொல்வடிவமாக ஆங்கிலத்தில் மொழிமாற்ற முடியாது. எனவே இவற்றை நேரிணைகளால் மொழிபெயர்க்க இயலாத கூறுகளில் அடக்கலாம்.

2. பலபொருள் ஒருசொல் (Polysemy)

தருமொழியில் உள்ள பலபொருள் ஒரு சொல்லைப் பெறுமொழியில் அதற்குச் சமமான பலபொருள் ஒரு சொல்லாக மொழிமாற்ற முடியாமல் போவதும் உண்டு. சான்றாக 'சேட்டன்' என்ற மலையாள சொல். அண்ணன், அத்தான் ஆகிய பொருள்களைக் கொண்டது. இதனை அண்ணனையும் அத்தானையும் ஒரு சேரக்குறிக்கும் சொல்லாக தமிழில் மொழிபெயர்க்க முடியாது. மேலும் 'மதி' என்பது பெயராக வரும்போது அறிவு, நிலவு ஆகியப் பொருள்களைத் தருகின்றது. இதனை அவ்வாறே அறிவு, நிலவு ஆகிய பொருள்களைக் கொண்ட ஒரு சொல்லாக ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க இயலாமல்அமைவதும் இவ்வகையின் பாற்பட்டதாகும்.

3. தொடை நயங்கள்

தருமொழிவடிவத்தில் காணப்படும் மோனை, எதுகை போன்ற தொடைகளை பெறுமொழியில் மொழிமாற்ற இயலாமல் போவதும் உண்டு. சான்றாக,

"ஊந்டாம்கமாம் தர்ம்ம மாக்கம் - பால
கூஉந்டதயெந்நி தரிச்சு" (குமாரனாசான், 1988:49)

என்பதற்கு நெல்லை சு. முத்து

"எண்குணத் தர்மநன் மார்க்கம் - கன்னி
பண்படக் கற்றனள் ஆக்கம்" (நெல்லை சு. முத்து, 1992:30)

என செய்துள்ள மொழிபெயர்ப்பில் 'ஊந்டாம்கம்,' 'கூஉந்டத' என்ற சொற்களில் காணப்படும் ஊகர எதுகையை 'எண்குண' 'பண்பட' என்ற சொற்களில் ணகர எதுகையாக மாற்றி மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். பொதுவாக மூலவடிவத்திற்கு சமமான வடிவ இணைகளைப் பெறுமொழியில் தேர்வுசெய்து மொழிபெயர்த்தால் தொடைநயங்களை அப்படியே கொண்டு வரலாம் (மலையாளம், தமிழ் போன்ற ஓரின மொழிகளில் இம்முறையைச் சில

வேளைகளில் நடைமுறைப்படுத்த முடியும்). ஆனால் தருமொழிவடிவத்தைப் பெறுமொழியின் பொருள் இணைகளால் மொழிமாற்ற வேண்டிய இடங்களில் மாற்றுத்தொடைகள் மூலமும், தொடைகள் இன்றியும், புதிதாகத் தொடை களைச் சேர்த்தும் பெறுமொழிவடிவத்தை அமைக்கவேண்டிய நிலை ஏற்படும் (தொடைகளின் மொழிபெயர்ப்பு குறித்த விளக்கங்களுக்கு 4.6 என்ற பகுதி யைப் பார்க்கவும்).

4. சிலேடைகள்

தருமொழியில் சிலேடையாக அமைந்த சொற்கள் தருகின்ற இருவேறுபட்ட பொருள்களை பெறுமொழியில் அதுபோன்ற இருவேறுபட்ட பொருளைத்தரும் தனிச்சொற்களால் மொழிபெயர்க்க முடியாது. சான்றாக 'இரவியும் புரவலனும் தம் செங்கரங்களால் இரவு தீர்ப்பர்' என்பதில் 'சூரியன் தன் சிவந்த கிரணங்களால் இரவுப்பொழுதைப் போக்குவான்' என்றும், 'புரவலன் தன் சிவந்த கைகளால் இரத்தலைப் போக்குவான்' என்றும் 'இரவு' என்னும் சொல் இராப் பொழுது, இரப்பு ஆகிய இருவேறுபட்ட பொருள்களைத் தருகின்றது. இதனை ஆங்கிலத்தில் Night, Begging ஆகிய இருவேறு பொருள்களைத்தரும் தனிச்சொல் லாக மொழிபெயர்க்கமுடியாது. எனவே மொழிபெயர்ப்பின்போது சிலேடை இழக்கப்படுகிறது எனலாம். ஆனால் மொழிபெயர்ப்பாளர் தருமொழிவடிவம் தருகின்ற இருவேறுபட்ட பொருள்களை சற்று விளக்கமாக எழுதிக்காட்டினால் அதனைப் பெறுமொழிவாசகர்களும் புரிந்துகொள்ளமுடியும்.

2. பண்பாட்டுக் கூறுகள்(Cultural Untranslatable units)

தருமொழி வடிவத்தில் உள்ள பண்பாட்டுக் கூறுகளைக் குறிப்பிடும் சொற் களைப் பெறுமொழியில் அவ்வாறே மொழிபெயர்க்கமுடியாது. சான்றாக, நம்பூதிரிகள் நாயர் வகுப்பைச்சேர்ந்த பெண்களைத் தாலிகட்டாது புடவையை மட்டும் கொடுத்துத் திருமணம் செய்தலைப் 'புடவ கொடுக்கல்' என மலையாளத்தில் குறிப்பிடுகின்றனர். இதனைத் தமிழில் 'புடவைக்கொடுத்தல்'

அல்லது 'சேலை கொடுத்தல்' என மொழிபெயர்க்கலாம். ஆனால்இம்மொழி பெயர்ப்பால் தமிழ்வாசகர்கள் எதையும் புரிந்துகொள்ள முடியாது. எனவே இத்தகைய பண்பாட்டு அடிப்படையிலான கூறுகளை அடிக்குறிப்புகளின் மூலம் விளக்குவது புரிதலை மிகுவிப்பதாக அமையும்.

8. மொழிபெயர்ப்பைச்சோதிக்கும் முறைகள்

மொழிபெயர்ப்பின் தன்மையை மதிப்பீடு செய்வதற்காக அதனைச் சோதித்தறிவது மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். இதற்காக 1. குளோஸ் முறை, 2. இருவேறு மொழிபெயர்ப்புகளால் வாசகரின் புரிதலைக்கேட்டறிதல், 3. உள்ளடக்கத்தை விளக்குதல், 4. மொழிபெயர்ப்பை உரக்கப்படித்தல், 5. மொழிபெயர்ப்பின் மாதிரியை வெளியிடல் போன்ற சோதனை முறைகள் உள்ளன. இவற்றில் குளோஸ்முறை எளிதானதாகவும், பரவலாக அனைவராலும் மேற்கொள்ளப்படுவதாகவும் உள்ளது (பார்க்க E.A. Nida, Charles R. Tabar, The Theory and Practice of Translation, PP. 168-173).

1.குளோஸ்முறை(Cloze Technique)

குளோஸ் முறைப்படி மொழிபெயர்ப்பின் ஒரு பகுதி எடுத்துக்கொள்ளப்பட்டு அப்பகுதியிலுள்ள தொடர்கள் ஒவ்வொன்றிலும் ஐந்தாவதாக வரும் சொற்கள் நீக்கப்பட்டு வெற்றிடமாகக் காணப்படும். இப்பகுதி வாசகர்களிடம் கொடுக்கப் பட்டு அவர்கள் பொருத்தமாகக் கருதும் சொற்களால் நிரப்பித்தரும்படி கேட்கப் படும். இங்கு வாசகர்கள் எந்த அளவுக்கு வெற்றிடங்களை நிரப்புவதில் வெற்றிபெறுகிறார்களோ அந்த அளவைப் பொறுத்து அப்பகுதி புரிந்துகொள்வதற்கு எளிதாக உள்ளது என்பது தீர்மானிக்கப்படும். இச்சோதனையை ஐந்தாவது சொல்லை நீக்குவதற்கு பதிலாக ஆறாவது, ஏழாவது, எட்டாவது, ஒன்பதாவது, பத்தாவது சொற்களைக் கூட நீக்கிச் செய்யலாம். மேலும் குளோஸ்முறையை

எழுத்துமொழி மூலமாக இவ்வாறு செய்வதற்குப்பதில் தொடர்களை வாசித்து வெற்றிடங்களில் எந்த சொற்கள் வரும் என்பதைக் கேட்டறிந்தும்செய்யலாம். ஆனால் குளோஸ்முறையின்படி வாசகர்களுக்கு அறிமுகமில்லாத மொழிபெயர்ப்பின் பகுதிகளை மட்டுமே கொடுத்துச்சோதனை செய்வதன் மூலமே நல்ல முடிவுகள் கிடைக்கும். இம்முடிவுகள் ஒப்பீட்டுநோக்கில் அமைய ஒன்றிற்கு பல மொழி பெயர்ப்புகளைத்தயாரித்து சோதனையை மேற்கொள்வது அவசியமாகிறது. இம்முறையின்மூலம் மொழிபெயர்ப்பின் தன்மையோடு தொடரமைப்பு, பொருட்பொருத்தம், பண்பாட்டுப் பின்புலம் போன்றவை பொருத்தமுறை அமைதலையும் அறிந்துகொள்ளமுடியும். மேலும் மொழியியற் கூறுகளில் எவை எந்த அளவுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதை எண்ணிக் கணக்கிட்டு அதனை மூலத்தோடு ஒப்பிட்டு நோக்கி மொழிபெயர்ப்பின் தன்மையைப் புரிந்துகொள்ளவும் இம்முறை உதவுகிறது. இதற்காக மொழிபெயர்ப்பில் பயன்படுத்தப்பட்டுள்ள தொடர்வகைகளை அடிப்படையாகக்கொண்ட எண்ணிக்கை (செய்வினைத்தொடர்கள், செயபாட்டுவினைத் தொடர்கள், வினாத்தொடர்கள் போன்றன), தொடர்களில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்களின் எண்ணிக்கை போன்றன ஆதாரங்களாகின்றன. இத்தகைய எண்ணிக்கை அடிப்படையிலான மதிப்பீட்டின்படி மொழிபெயர்ப்பு மூலத்திலிருந்து பத்து விழுக்காட்டிற்கு அதிகமான வேறுபாடு கொண்டிருந்தால் செயற்கைத் தன்மையுடன் அமைய வாய்ப்பு உள்ளது.

2. <u>இருவேறு மொழிபெயர்ப்புகளால் வாசகரின் புரிதலைக் கேட்டறிதல்</u>

(<u>Reactions to Alternatives</u>)

ஒரு பகுதிக்கு இருவேறு மொழிபெயர்ப்புகளைத் தயாரித்து அதனை வாசகர்களிடம் படித்துக்காட்டி புரிதலைக் கண்டறிய இம்முறை உதவும். இச்சோதனைமூலம் வாசகர்களால் எளிதில் புரிந்துகொள்ள முடிவதாகத் தெரியவரும் மொழிபெயர்ப்புத் தரமானதாக அமைய வாய்ப்புகள் உள்ளன. சிலவேளைகளில் இரண்டு மொழி பெயர்ப்புகளும் ஒன்றுபோலவே உள்ளன என வாசகர் பதிலளிப்பின் மொழி

பெயர்ப்புகளைக் கல்வியறிவு இல்லாதவர்களிடம் படித்துக்காட்டிச் சோதனையை மேற்கொள்ளவேண்டும். ஆனால் இவ்வகைச் சோதனையை மொழிபெயர்ப்பாளர் நேரடியாகச்செய்யாமல் மூன்றாம் நபரைக் கொண்டு செய்வித்தால் தகவலாளி களிடமிருந்து உண்மையான மதிப்பீடுகளைப் பெறமுடியும்.

3. உள்ளடக்கத்தை விளக்குதல் (Explaining the Contents)

மொழிபெயர்ப்பின் ஒரு பகுதியை யாரிடமாவது கொடுத்து வேறு ஒரு வரிடம் படித்துக்காட்டச் சொல்லவேண்டும். இவ்வாறு படித்துக்காட்டப்பட்ட பகுதியைக் கேட்டவர் அதனைக் கேட்காத மற்றொருவரிடம் விவரித்துச் சொல்லுமாறு செய்யவேண்டும். இவ்வாறு சொல்லும்போது 1. மொழிபெயர்ப்பில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்களுக்குப் பதில் இவர் வேறு எந்த சொற்களைப் பயன்படுத்துகிறார், 2. எந்த அளவுக்கு மிகைக்கூறல் நடைபெறுகிறது, 3. எந்த அளவுக்கு பொருள்மாற்றங்கள் மற்றும் தொடரமைப்பு மாற்றங்கள் நடைபெறுகின்றன போன்றவற்றைக் கவனித்து மொழிபெயர்ப்பை எந்த அளவுக்குப் புரிந்துள்ளார் என்பதையும் எங்கெங்கு மாற்றங்களைச் செய்யவேண்டும் என்பதையும் தீர்மானிக்கவேண்டும்.

4. மொழிபெயர்ப்பை உரக்கப்படித்தல் (Reading the text aloud)

மொழிபெயர்ப்பை வாசகர்களிடம் கொடுத்து உரக்கப்படிக்குமாறு செய்து அதனைச்சோதிப்பது இவ்வகை முறையாகும். இச்சோதனையின்போது அதனைப் படிப்பவர் எங்கெல்லாம் தடுமாறுகிறார், தயங்குகிறார், ஒரு இலக்கணக்கூறுக்குப் பதில் மற்றொரு இலக்கணக்கூறைப் பயன்படுத்துகிறார், ஒரு சொல்லுக்குப்பதில் மற்றொரு சொல்லைப் பயன்படுத்துகிறார் என்பதை அறிந்து கொள்ளமுடியும். ஆனால் வாசிக்கும் பழக்கம் இன்மையும் இத்தகைய தடுமாற்றங்களை ஏற்படுத்துமாகையால் குறிப்பிட்ட ஒரு பகுதியை பல்வேறு வாசகர்களிடம் வாசிக்கக் கொடுத்து ஒன்றிற்கு மேற்பட்டோர் தடுமாறிய இடங்களைக் கண்டறிந்து மொழிபெயர்ப்பைச் சரிசெய்து கொள்ளலாம்.

5. மொழிபெயர்ப்பின் மாதிரியை வெளியிடல் (Publication of Sample material)

மொழிபெயர்ப்பின் மாதிரிவடிவங்களை வெளியிட்டு அது மக்களால் எந்த அளவுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதை தெரிந்துகொள்வதும் மொழிப் பெயர்ப்பின் தன்மையைச் சோதிக்க உதவும். ஆனால் பலவேளைகளில் மக்களின் வரவேற்பு என்பது மொழிபெயர்ப்பின் தன்மையை மட்டும் சார்ந்திராமல் நியாயமான விலை, சான்றுக்குறிப்புகள் (படங்கள் போன்றன), கவர்ச்சியான அமைப்பு, வடிவமுறை (தவணைமுறை, சிறப்புத்தள்ளுபடி போன்றன), பயன் படுத்தப்பட்டுள்ள தாளின்தரம் போன்றவற்றையும் சார்ந்திருக்கின்றன. எனவே மொழிபெயர்ப்பு நூல் எந்த அளவுக்கு வாங்கப்படுகிறது என்பதைவிட எந்த அளவுக்குப் படிக்கப்படுகிறது அல்லது புரிந்துகொள்ளப்படுகிறது என்பதே அதன் தரத்தை அறிந்துகொள்ள உதவும்.

பொதுவாக மொழிபெயர்ப்பை வடிவ இணைகளைவிடவும் மாற்றிணைகளைப் பயன்படுத்தி கருத்தில் மாற்றமின்றி மிகைகள், நீக்கங்கள், ஒருபுறச்சாய்வுகள் அற்றதாகவும் தருமொழியின் கருத்தை பெறுமொழிக்கேற்ற நடையமைப்பில் தருவதாகவும் அமைப்பது சிறப்பாகும். எனவே மொழிபெயர்ப்பின் தரத்தை மதிப்பிட 1. தருமொழிச்செய்தியைப் பெறுமொழியில் தருகின்றவிதம், 2. அதைப் புரிந்துகொள்வதின் எளிமை, 3. அதனுடன் வாசகர்கள் கொண்டுள்ள ஈடுபாடு போன்றவற்றைக் கருத்தில் கொள்வது உதவியாக அமையும்.

9. மொழிபெயர்ப்பாளரின் இயல்புகள்

ஒருமொழியில் அமைந்த செய்திகளை மற்றொரு மொழியில் மாற்றித் தருகின்றவர்கள் மொழிபெயர்ப்பாளர்கள் என்ற பெயரால் அறியப்படுகின்றனர். மொழிபெயர்ப்பாளர்களின் பணி அறிவுத்துறைகளின் வளர்ச்சிக்கு மிகவும் பயன் தருவதாக உள்ளதால் மொழிபெயர்ப்பாளர்களை 'அனைத்துலக அறிவு இணைப் பாளர்கள்' என சோவியத் கவிஞர் புஷ்கின் குறிப்பிட்டுள்ளார். ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில் மொழிபெயர்ப்பாளர்கள் 'துவிபாஷிகள் (இருமொழியாளர்கள்)' என்ற பெயரால் அறியப்பட்டதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

1. மொழிபெயர்ப்பாளரின் பணிகள்

மொழிபெயர்ப்பாளர் கருத்தின் மொழியை மாற்றி மற்றொரு மொழியில் அமைக்கும் பணியைச்செய்கின்றார். ஆனால் இப்பணி அவ்வளவு எளிய ஒன்றல்ல. இது தாமாக ஒரு நூலைப் படைப்பதைவிடக் கடினமானதாகும். ஏனெனில் மொழிபெயர்ப்பாளர் தருமொழிச்செய்தியை நன்றாக விளங்கிக்கொண்டு அதனைப் பெறுமொழி வாசகர்களுக்கு விளங்குமாறு செய்யவேண்டும். இதற்காக மொழிபெயர்ப்பாளர் தருமொழி பெறுமொழி ஆகியனவற்றில் மிகுந்த பயிற்சி பெற்றிருப்பது அவசியமாகிறது.

2. மொழிபெயர்ப்பாளரின் பண்புகள்

மொழிபெயர்ப்பாளர் தருமொழி பெறுமொழி ஆகியவற்றில் சமமான அளவு பயிற்சி பெற்றிருக்கவேண்டும். மூலபாடத்தின் இயல்பு, அதன் காலம் போன்றவற்றை நுட்பமாக அறிந்திருப்பதோடு அது மொழிபெயர்க்கப்பட எத்தகைய உத்திகளைப் பெறுமொழியில் கையாளவேண்டும் என்பதையும் நன்றாக அறிந்திருக்கவேண்டும். மேலும் மொழிபெயர்ப்பாளன் மொழிபெயர்க்கப்படும் நூல்சார்ந்த துறையறிவு மிகுதியாகப் பெற்றிருக்கவேண்டும். குறிப்பாக, கவிதையை மொழிபெயர்ப்பவன் ஒரு கவிஞனாகவோ, பிற படைப்பிலக்கியங்களை மொழிபெயர்ப்பவன் ஒரு படைப்பிலக்கிய ஆசிரியனாகவோ, அறிவுத்துறை சார்ந்த நூல்களை மொழிபெயர்ப்பவன் அத்துறையில் துறை போகிய வல்லுநனாகவோ இருப்பது விரும்பத்தக்கதாகும். பொதுவாக, மொழிபெயர்ப்பாளன் படைப்பாற்றல் (Creative Mind) பெற்றவனாகக் காணப்பட்டால் மொழியமைப்பு, உணர்வோட்டம் போன்ற நிலைகளிலும் மூலத்திற்குச் சமமான பெறுமொழிவடிவத்தை உருவாக்கித்தரமுடியும். மேலும் மொழிப்பெயர்ப்பாளன் தருமொழி,பெறுமொழி ஆகியனவற்றின் தனித்தன்மை சார்ந்த இயல்புகளில் நடுவு

நிலைமை வகிப்பவனாகவும் ஒரு புறச் சாய்வு அற்றவனாகவும் இருப்பதோடு பெறுமொழியின் வளர்ச்சிப்பாதையில் அக்கரை கொண்டவனாகவும் காணப்படுவது தரமான மொழிபெயர்ப்புகளை உருவாக்க வழிவகுக்கும்.

3. மொழிபெயர்ப்பாளரின் வகைகள்

மொழிபெயர்ப்பாளர்கள் பலவகைப்பட்டவர்களாகவும், பல நிலைகளில் செயல்படுகிறவர்களாகவும் உள்ளனர். அவர்களை 1. படைப்பிலக்கிய மொழி பெயர்ப்பாளர்கள், 2. அறிவியல்தொழில்நுட்ப துறைகளைச் சார்ந்த மொழி பெயர்ப்பாளர்கள், 3. தகவல் தொடர்பு நிறுவனங்களில் பணிபுரியும் மொழி பெயர்ப்பாளர்கள், 4. மேடைப்பேச்சு மொழிபெயர்ப்பாளர்கள், 5. பட்டயம் பெற்ற மொழிபெயர்ப்பாளர்கள், 6. சமயத்துறை சார்ந்த மொழிபெயர்ப்பாளர்கள் (பார்க்க, மு. வளர்மதி, 1987:40) என வகைப்படுத்தலாம்.

1. படைப்பிலக்கிய மொழிபெயர்ப்பாளர்கள்

கவிதை, நாவல், சிறுகதை, நாடகம் போன்ற தொழில்நுட்பம் சாராத இலக்கியங்களை மொழிபெயர்க்கின்றவர்களை இவ்வகையில் அடக்கலாம். இவ்வகை மொழிபெயர்ப்பாளர்களில் பலரும் சுயமாக மொழிபெயர்ப்புப்பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் ஆவர். இவர்களில் சிலர் மட்டுமே அரசு சார்ந்த படைப் பிலக்கிய வெளியீட்டகங்களில் (சாகித்திய அக்காடமி, நேஷனல் புக் டிரஸ்ட் போன்றன) பணிசெய்து வருகின்றனர்.

2. அறிவியல் தொழில்நுட்பத்துறைகளைச் சார்ந்த மொழிபெயர்ப்பாளர்கள்

அறிவியல் தொழில்நுட்ப இலக்கிய மொழிபெயர்ப்புகள் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளமையால் இத்துறை சார்ந்த இலக்கியங்களை மிகுதியான நபர்கள் மொழிபெயர்ப்பு செய்துவருகின்றனர். அறிவியல் இலக்கிய மொழிபெயர்ப்புப்பணி ஆங்கிலம், ஜெர்மன், பிரெஞ்சு, ருசியன், சீனம், சப்பானியம் போன்ற மொழிகளில் மிகப்பரவலாக நடைபெற்றுவருகிறது. தமிழைப் பொறுத்தமட்டில்

மந்தமாக நடைபெற்றுவருகின்ற இப்பணியில் சுயமாக மொழிபெயர்ப்புச்செய்யும் மொழிபெயர்ப்பாளர்கள் சிலர் ஈடுபட்டுள்ளனர். மேலும் தமிழ்நாட்டுப்பாட நூல் நிறுவனம் (தமிழ் வெளியீட்டுக் கழகம்) இப்பணியை ஓரளவு செய்துவருகின்றது.

3. தகவல் தொடர்பு நிறுவனங்களில் பணிபுரியும் மொழிபெயர்ப்பாளர்கள்

வானொலி, தொலைக்காட்சி நிறுவனங்கள், இதழ் வெளியீட்டகங்கள், திரைப்படத்துறை போன்றவற்றில் மொழிபெயர்ப்புப்பணி செய்து வருபவர்கள் மிகுதியும் உடனுக்குடன் செய்திகளை மொழிபெயர்க்கின்றவர்களாக உள்ளனர். இவர்கள் செய்யும் பணிக்கான ஊதியத்தையும் அவ்வப்போது பெற்றுவருகின்றனர்.

4. மேடைப்பேச்சு மொழிபெயர்ப்பாளர்கள்

முக்கியமான நபர்களின் மேடைப்பேச்சுகளை அம்மேடையிலேயே உடனுக்கு உடன் செய்கின்ற மொழிபெயர்ப்பாளர்கள் இவ்வகையினர் ஆவர். இவர்கள் Interpreter என்ற பெயரால் அறியப்படுகின்றனர். இவர்களின் பணி சற்று கடினமானதும் மிகக்கவனமாகச் செயல்படத்தக்கதும் ஆகும்.

5. பட்டயம் பெற்ற மொழிபெயர்ப்பாளர்கள்

அரசு அல்லது அரசு சார்பற்ற நிறுவனங்களில் மொழிபெயர்ப்புப் பயிற்சி பெற்று மொழிபெயர்ப்பாளர்கள் என்ற பட்டயம் பெற்றவர்களாக (Certified Translator) இவர்கள் உள்ளனர்.

6. சமயத்துறைசார்ந்த மொழிபெயர்ப்பாளர்கள்

சமயநூல்களையும், சமயஞ்சார்ந்த செய்திகளையும் மொழிபெயர்ப்பதில் மிகுதியான மொழிபெயர்ப்பாளர்கள் ஈடுபட்டுள்ளனர். அவர்களில் விவிலியமொழி பெயர்ப்பில்மட்டும் சுமார் 3000பேர் ஈடுபட்டுள்ளதாக நைடா (1982:1) குறிப்பிட்டுள்ளார். இவர்கள் கிறிஸ்தவ சமயஞ்சார்ந்த நிறுவனங்களைச் சார்ந்தும், சுயமாகவும் மொழிபெயர்ப்பைச் செய்கின்றனர்.

4. மொழிபெயர்ப்பை அமைக்கும் முறை

மொழிபெயர்ப்பை வாசகர்கள் எளிதில் புரிந்துகொள்ள அதனை மொழிபெயர்ப்பாளர் அமைக்கவேண்டிய முறைகளைப் பின்வருமாறு விளக்கலாம்.

1. எளிமை

மொழிபெயர்ப்பு பெற்றிருக்கவேண்டியச் சிறப்புப் பண்புகளில் எளிமை மிகவும் முக்கியமான தொன்றாகும். சமகாலச் சொற்கள், நேரடிச்சொற்கள், எளிய வாக்கிய அமைப்பு போன்றன மொழிபெயர்ப்பை எளிதில் புரிந்துகொள்ளச் செய்கின்றன.

2. தெளிவு

மொழிபெயர்ப்பு தெளிவாக அமையப்பெறுமொழியின் இயல்பை அறிந்து அதற்கேற்ற சொற்களையும் வாக்கிய அமைப்பையும் பயன்படுத்தவேண்டும். ஆங்கிலத்தில் செயப்பாட்டுவினையமைப்பிலான வாக்கியங்கள் மிகுதியாகப்பயன் படுத்தப்படுகின்றன. இத்தகைய இடங்களை தமிழில் மொழிபெயர்க்கும்போது தேவையற்ற இடங்களில் செயப்பாட்டு வினையமைப்பைத் தவிர்ப்பது நல்லது. மேலும் ஒவ்வொரு கருத்துக்களையும் தனியாக அறிந்துகொள்வதற்காக வாக்கிய அமைப்பில் மாற்றங்களைச் செய்துகொள்வதோடு கருத்தடிப்படையிலான நிறுத் தங்களும் பெற்றுவருமாறு சொல், தொடர், உரைக்கோவை போன்றவற்றை அமைப்பது நல்லது. மொழிபெயர்ப்பின்போது சொற்களை நேரடியாகப் பொருள்கொள்ளாமல் அது தொடர்களிலும் உரைக்கோவைகளிலும் வருகின்ற உறவின் அடிப்படையில் அதன் உட்பொருளைக் கண்டறிந்து பெறுமொழிவடிவத்தை அமைக்கவேண்டும்.

3. விளக்கங்கள்

ஒவ்வொரு மொழியும் சில தனித்தன்மைகளைப் பெற்றுள்ளன. இத்தகைய தனித்தன்மைகளை மொழிபெயர்க்கும்போது அதைப் பெறுமொழிக்கேற்ப மாற்றக்

கூடாத இடங்களில் அடிக்குறிப்புக்களையோ, விளக்கப்பதிலிகளையோ பயன் படுத்திக்கொள்வது நல்லது. மேலும் தருமொழிவடிவத்திலுள்ள சிறப்புக்கலாச் சாரக்கூறுகளையும் அதன் உட்பொருளைக் குறிக்கும் நோக்கிலான விளக்கங்க ளைப்பயன்படுத்தி தெளிவுபடுத்தவேண்டும்.

4. முன்னுரை எழுதல்

மொழிபெயர்ப்புநூலில் மூலஆசிரியர், மூலமொழி, மூலநூல் போன்றவை குறித்த முன்னுரையை மொழிபெயர்ப்பாளர் எழுதவேண்டும். மேலும் அந்நூலின் மொழிபெயர்ப்பின்போது ஏற்பட்ட சிக்கல்கள் குறித்தும் சுருக்கமாகச் சொல் லிச்செல்வது வாசகர்களுக்கு உதவியாக அமையும்.

தொகுப்புரை

மொழிபெயர்ப்புக் கோட்பாடுகளை அடிப்படையாகக்கொண்டு பின்வருவன வற்றைத் தெரிந்துகொள்ளலாம்.

1. மொழிபெயர்ப்பு குறித்த விளக்கங்களை அடிப்படையாகக்கொண்டு பெறுமொழிவடிவம் மூலத்தின் வடிவம், கருத்து ஆகியனவற்றோடு அதன் இயல்பையும் உணர்வோட்டத்தையும் மீட்டுத்தரும் நோக்கில் அமையவேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

2. மொழிபெயர்ப்பின் வகைவேறுபாடுகளான ஒரு மொழிக்குள்ளே செய்யப்படுவது, ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழியில் செய்யப்படுவது, மொழியைக் குறியீடுகளாக மாற்றியமைப்பது, மொழியைச் செயல்கூறுகள், மற்றும் ஒலி, ஒளி பதிவுகளாக மாற்றியமைப்பது போன்றவையும் அவற்றின் உட்பிரிவுகளும் மொழிபெயர்ப்பாளர்கள் செய்கின்ற முறையைப்பொறுத்தும், மொழிபெயர்ப்பின் தேவையைப் பொறுத்தும் அமைபவையாகும்.

3. மொழிபெயர்ப்புக் கொள்கைகளை உருவாக்கும்பணி தமிழிலும் பிற மேனாட்டு மொழிகளிலும் நடந்துள்ளன. தமிழில் இதனை மரபிலக்கண நூலாரும் மேனாட்டில் மொழியிலாரும் செய்துள்ளனர். பொதுவாக, தமிழ்மொழியில் காணப்படும் இக்கோட்பாடுகள் பண்டைக்காலத்தில் பிறமொழிச்சொற்களையும் கருத்துக்களையும் தேவைக்கேற்பக் கடனாகப்பயன்படுத்துதலை அடிப்படையாகக் கொண்டும், இடைக்காலத்தில் படைப்பிலக்கியங்களை தொகுத்தல், விரித்தல், தொகை விரித்தல் சார்ந்தமைத்தல் போன்ற நிலைகளிலும், வேதம், ஆகமம் நியாயம், தர்க்கம் போன்ற துறைவகைகளைச்சார்ந்த இலக்கியங்களை நேரடிப் பெயர்ப்பாக அமைத்தலை அடிப்படையாகக்கொண்டும், தற்காலத்தில் அனைத்துத் துறைகளைச்சார்ந்த இலக்கியங்களையும் நேரடிப்பெயர்ப்பாக அமைத்தலை அடிப் படையாகக்கொண்டும் திகழ்கின்றன. ஆனால் மொழிபெயர்ப்புக் கொள்கைகள் மேனாட்டுமொழிகளில் கருத்துக்கும் நடைக்கும் சிறப்பு கொடுத்து மொழிபெயர்ப்பை அமைக்கும் நிலையின் அடிப்படையில் பண்டைக்காலத்திலும், பெறுமொழிவாசகர்களின் உணர்வு வெளிப்பாட்டைக் கருத்தில் கொண்டு மொழிபெயர்ப்பை அமைக்கும் நிலையின் அடிப்படையில் தற்காலத்திலும் அமைந்தவையாய் உள்ளன.

4. மொழிபெயர்ப்பு கருத்துவளர்ச்சி அறிவு வளர்ச்சி, பிறரைப்புரிந்து கொள்ளுதல், ஒப்பிலக்கிய ஆராய்ச்சி, பிறமொழி இலக்கிய அறிவைத்தரல், மொழி வளர்ச்சி, உலக ஒருமைப்பாடு போன்றவற்றிற்கு உதவுதலைத்தனது நோக்கமும் பயனுமாகக்கொண்டது. மேலும் அதன் பணிகளாக செய்திகளைத்தருதல், உணர் வூட்டுதல் செயல்தூண்டுதல் போன்றவையும் உள்ளன. மொழிபெயர்ப்பை எளிதில் புரிவதற்காகச் சொல்லைவிட சூழலுக்கும், நேரிணைகளைவிட மாற்றிணைகளுக்கும், எழுத்துமொழியைவிட பேச்சுமொழிக்கும், மரபுச்சொற்களைவிடச் சமகாலச் சொற்களுக்கும் முன்னுரிமை கொடுத்து அமைக்கவேண்டும். பொதுவாக மொழி பெயர்ப்பு என்பது எளிதில் புரியக்கூடியதாக மட்டுமல்லாமல் மூலத்தில் காணப்படும் சிறப்பாற்றலையும் மீட்டுத்தருவதாய் அமையவேண்டும். கருத்தை வெளிப்படுத்துவதில்

மொழிகளிடையே எழுத்து, சொல், தொடர் போன்ற நிலைகளில் அளவு வேறு பாடுகள் உள்ளன. இத்தகைய அளவுவேறுபாடுகளை விரிவாக்கம், செறிவாக்கம் என வகைப்படுத்தலாம். மேலும் மொழிபெயர்ப்பின்போது ஒலிபெயர்த்து மட்டுமே அமைக்கவேண்டிய பகுதிகளும் உள்ளன. இவற்றையும் மொழிபெயர்ப்பாளர் கவனத்தில் கொள்வது அவசியமாகிறது.

5. மொழிபெயர்ப்பின் செயல்முறைகளைப் பகுப்பாய்வு, மாற்றுதல், மறுவடிவாக்கம் என மூன்று படிநிலைகளாக வகைப்படுத்தி விளக்கலாம். இவ்வகைப்பாடு மொழிபெயர்ப்பைத் திட்டமிட்ட நிலையில் விளக்கிச்செல்ல உதவுகிறது.

6. மொழிபெயர்ப்பின்போது எழுத்து, சொல், தொடர், உரைக்கோவை போன்ற நிலைகளில் வடிவத்தை அடிப்படையாகக்கொண்ட சிக்கல்கள் எழுகின்றன. இத்தகையச் சிக்கல்களை மூலத்தின் கருத்தை அடிப்படையாகக்கொண்ட பெறுமொழியின் வடிவ இணைகளால் தீர்க்கவேண்டும்.

7. நேரிணைகளால் மொழிபெயர்க்க இயலாதனவாகச்சில மொழிக்கூறுகள், பண்பாட்டுக்கூறுகள் போன்றவை உள்ளன. இத்தகைய மொழிக்கூறுகளை பெறுமொழிக்கேற்ற மொழிக்கூறுகளாலும், பண்பாட்டுக்கூறுகளை விளக்கங்களின் வாயிலாகவும் பெறுமொழியில் மாற்றியமைக்கவேண்டும்.

8. மூலத்தின் வடிவத்தைவிட அதன் கருத்தையும், மூலத்திற்கு இணையாக மொழிபெயர்ப்பைப் புரிந்துகொள்ளுதலையும், மூலத்தில் பொதிந்து நிற்கும் உணர்வு மொழிபெயர்ப்பில் கொண்டுவரப்பட்டவிதத்தையும் அறியும் நோக்கில் சோதனைகளை மேற்கொள்வது அதன் தரத்தை மதிப்பீடு செய்ய உதவும்.

9. மொழிபெயர்ப்பாளர் தருமொழி பெறுமொழி ஆகியனவற்றில் நிரம்பிய அறிவும், மொழிபெயர்க்கும் நூல்சார்ந்த துறையறிவும் பெற்றிருப்பது தரமான மொழிபெயர்ப்புகளை உருவாக்க வழிவகுக்கும்.

இயல் - இரண்டு

தமிழ் மொழிபெயர்ப்பின் வரலாறு

2. தமிழ் மொழிபெயர்ப்பின் வரலாறு

0. தமிழில் மொழிபெயர்ப்புப்பணி எப்போது தொடங்கியது என்று திட்ட வட்டமாகக் கூறமுடியாது. ஏனெனில் தமிழின் முதல் இலக்கணமாகக் கருதப் படும் தொல்காப்பியத்தில் 'மொழிபெயர்த்து அதர்ப்பட யாத்தல்' என்ற குறிப்பு மட்டுமே காணப்படுகிறது. மேலும் சங்க இலக்கியத்தில் முண்டா, பாலி, சமஸ்கிருதம் போன்ற மொழிகளிலுள்ள சொற்களும் ஒருசில கருத்துக்களும் அங்காங்கே காணப்படுகிறதேயன்றி அவற்றில் மொழிபெயர்ப்பாக அமைந்த பகுதிகள் எதுவும் இடம்பெறவில்லை. எனவே பண்டைக்காலத்திலிருந்தே தமிழில் மொழிபெயர்ப்புப்பணி நடைபெற்று வந்திருக்கிறது என்றும், அவ்வாறு உருவாக்கப்பட்ட மொழிபெயர்ப்புகள் பலவும் அழிந்திருக்கலாம் என்றும் கருத மட்டுமே முடிகிறது. சங்கம் மருவிய காலத்திலிருந்து பிராகிருதம், பாலி, சமஸ்கிருதம் போன்ற மொழிகளிலுள்ள நூல்கள் பல தமிழ்வடிவம் பெற்றன. இஸ்லாமியர், கிறிஸ்தவர் ஆகியவர்களுடைய வருகையைத் தொடர்ந்தும் பல்வேறு மொழிகளிலுள்ள நூல்கள் தமிழ் வடிவம் பெற்றன. மேலும் மேனாட்டா ரின் வருகையால் மொழிபெயர்ப்பின் அணுகுமுறையும் மாற்றங்களைப் பெற்றது. தற்காலத்தில் படைப்பிலக்கியங்களுடன் அறிவியல் மற்றும் தொழில் நுட்பம் சார்ந்த இலக்கியங்களை மொழிபெயர்த்தல், கலைச்சொற்கள் மற்றும் மொழிபெயர்ப்புக் கோட்பாடுகளை உருவாக்குதல், கணிப்பொறியைப் பயன்படுத்தி மொழிபெயர்ப்புப் பணியை விரைவு படுத்தல் போன்றவைகளும் நடந்தவாறு உள்ளன. இவற்றோடு பிறமொழித்தொடர்பு மற்றும் மொழிபெயர்ப்பு ஆகியவற்றின் காரணமாக பிறமொழி களிலுள்ள கருத்துக்களும், படைப்புகளும்தமிழ்வடிவம் பெற்றதோடு தமிழ்மொழியின் அமைப்பிலும் சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு தமிழ் மொழிபெயர்ப்பின் வரலாற்றை 1. தமிழில் மொழிபெயர்ப்புகள்,

2. தமிழ்மொழிபெயர்ப்பின் அணுகுமுறைகள், 3. தமிழ்மொழிபெயர்ப்பு குறித்த நூல்கள், கட்டுரைகள், ஆய்வுகள், 4. தமிழ்மொழிபெயர்ப்புகளும் அகராதிகளும், 5. தமிழில் மொழிபெயர்ப்பாளர்கள், 6. தமிழ்மொழிபெயர்ப்புப்பணி செய்யும் நிறுவனங்கள், 7. மொழிபெயர்ப்புகளால் தமிழின் அமைப்பில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் என வகைப்படுத்தி விளக்குவதாக இவ்வியல் அமைந்துள்ளது.

1. தமிழில் மொழிபெயர்ப்புகள்

தமிழ் மிகப்பழங்காலத்திலிருந்தே பிற மொழிகளோடு தொடர்புகொண்டுள்ளது. எனவே பழங்காலம் முதலே பிறமொழிக் கருத்துக்களும், நூல்களும் தமிழ்வடிவம் பெற்றுவந்தன. மேலும் தமிழ் பிறமொழிகளோடு கொண்டிருந்த தொடர்பின் காரணமாகத் தமிழ் நூல்கள் பலவும் பிறமொழிகளில்மாற்றப்பட்டுள்ளன. இவற்றை 1. பிறமொழிகளிலிருந்து தமிழுக்கு வந்தவை, 2. தமிழிலிருந்து பிறமொழிகளுக்குச் சென்றவை என வகைப்படுத்தி விளக்கலாம்.

1. பிறமொழிகளிலிருந்து தமிழுக்கு வந்தவை

பிறமொழிகளிலிருந்து தமிழ்வடிவம் பெற்றுள்ள கருத்துக்களையும், நூல்களையும் அவை மொழிமாற்றம் பெற்றுள்ள தன்மையின் அடிப்படையில் 1. பண்டைக்கால மொழிபெயர்ப்புகள், 2. இடைக்கால மொழிபெயர்ப்புகள், 3. தற்கால மொழிபெயர்ப்புகள் என வகைப்படுத்தி விளக்கலாம்.

1. பண்டைக்கால மொழிபெயர்ப்புகள்

பிறமொழிகளில் குறிப்பாக மலையாளம், கன்னடம், தெலுங்கு போன்றவற்றில் மொழிபெயர்ப்புகளே முதல் இலக்கியங்களாகச் சிறப்பு பெற்றுள்ளன. ஆனால் தமிழில் சங்க இலக்கியம், நீதி இலக்கியம் போன்ற முதல் இலக்கியங்களின் தொகுப்புக்களில் மொழிபெயர்ப்புகளாக அமைந்துள்ள பகுதிகள் இல்லை எனலாம்.

எனினும் அவற்றில் இராமாயணம், மகாபாரதம் ஆகியவற்றின் கதைக்குறிப்புகளும், மனுதர்மம், காமசூத்திரம், தம்மபதம், ஸ்மிருதிகள் போன்றவற்றிலுள்ள கருத்துக்களும் ஆங்காங்கே இடம் பெற்றுள்ளன. இவற்றைப் 1. பிறமொழிக் கதைப்பொருள்களின் தாக்கம், 2. நீதிக் கருத்துக்களின் தாக்கம் என வகைப்படுத்தி விளக்கலாம்.

1. பிறமொழிக் கதைப் பொருள்களின் தாக்கம்

சமஸ்கிருதத்திலுள்ள காப்பியக்கதைகளான இராமாயணம், மகாபாரதம் ஆகியவைவற்றின் தாக்கம் சங்க இலக்கியத்தில் ஆங்காங்கே காணப்படுகிறது. சான்றாக, இராமன் தனுக்கோடியில் மந்திராலோசனை செய்த நிகழ்ச்சி அகநானூற்றிலும் (அகம்.70: 13-17), கலன்காண் படலச் செய்தி புறநானூற்றிலும் (புறம். 378:18-21), இலங்கையைக் குறிக்கும் செய்தி சிறுபாணாற்றுப்படையிலும் (சிறுபாண். 119, 120), அகத்தியர் இராவணனை கந்தர்வத்தால் பிணித்த கதை நிகழ்ச்சி மதுரைக் காஞ்சியிலும் (மதுரைக். 40-42) இடம் பெற்றுள்ளதைச் சுட்டிக்காட்டலாம். மேலும் பாரதப்போர் பற்றியும், அப்போரின் போது தமிழ் மன்னர்கள் பாண்டவர், கௌரவர் ஆகிய இருதிறப்படைகளுக்கும் பெருஞ்சோறு கொடுத்தது பற்றியும் அகநானூறு (233), புறநானூறு (புறம்.2:13-16), கலித்தொகை (கலி. 25:1-4), பதிற்றுப்பத்து (பதிற். 14), சிறுபாணாற்றுப்படை (சிறுபாண். 238-241), பெரும்பாணாற்றுப் படை (பெரும்பாண். 415-417) ஆகிய நூல்களில் குறிப்புகள் காணப்படுவதும் இங்கு எடுத்துக்காட்டத்தக்கதாகும். இவற்றிலிருந்து இராமாயணம், மகாபாரதம் ஆகியவற்றிலுள்ள கதைகள் வாய்வழியாகவோ, அல்லது எழுத்துவடிவிலான நூல்களாக வோ தமிழகத்தில் வழங்கியிருந்தன என்பதை அறிந்துகொள்ளமுடியும். மேலும் பரிபாடலில் புராணக்கதைகளின் பகுதிகளும், சாங்கியம் முதலிய தத்துவக் கருத்துக் களும் காணப்படுவதையும் இங்கு சுட்டிக்காட்டலாம்.

2. நீதிக்கருத்துக்களின் தாக்கம்

சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய நீதி இலக்கியங்களில் வடமொழியிலுள்ள நீதிக்கருத்துக்களின் தாக்கம் ஆங்காங்கே காணப்படுகிறது என்ற கருத்து வழக்கிலுள்ளது. சான்றுகளாக, நால்வகை ஆச்சிரமங்களில் உள்ளாரில் இல்லறத்தான் ஏனைய மூவருக்கும் துணையாவான் (குறள்.41) என்ற திருக்குறள் கருத்து மனுதர்மத்தில் (மனு.3:78) இடம் பெற்றதென்பும், பஞ்சமகாயக்ஞங்கள் (குறள்.43) பற்றிய திருக்குறள் கருத்து மனுதர்மத்திலும் (மனு. 3:72), பாரதத்திலும் (வன.314:59-60) இடம் பெற்றதென்றும், நீத்தாரது பெருமைபற்றியக் குறள்கருத்து (குறள்.27) சாங்கிய காரிகையில் (22) இடம் பெற்றதென்றும், காமநுகர்ச்சி பற்றியக் குறள்கருத்து (குறள்.1101) வாத்சாயனாரின் காமசூத்திரத்தில் (காம. 1,2,11) இடம் பெற்றதென்றும் எஸ். வையாபுரிப்பிள்ளை (1991:43-46) குறிப்பிடுவதைச் சுட்டிக்காட்டலாம். மேலும் வடமொழியிலுள்ள சுக்ரஸ்மிருதியின் தொகுப்பாக ஆசாரக்கோவை அமைந்துள்ளதென்றும், ஏலாதியில் 'துவாதசபுத்திரர்கள்' என வடமொழியில் பிரபலமாக வழங்கியவர்களின் பெயர்கள் காணப்படுகிறதென்றும் எஸ். வையாபுரிப்பிள்ளை (1989:385,388-389) குறிப்பிடுவதும் இங்கு எடுத்துக்காட்டத்தக்கது.

2. இடைக்கால மொழிபெயர்ப்புகள்

சங்கம் மருவிய காலத்திற்குப்பிறகு பைசாசம், பாலி, சமஸ்கிருதம் போன்ற மொழிகளிலுள்ள நூல்களும் பிற்காலத்தில் மேனாட்டு மொழிகளிலுள்ள நூல்களும் தமிழ்வடிவம் பெற்றுள்ளன. இவற்றைச் 1. சமயம் சார்ந்தவை, 2. சமயஞ்சாராதவை என வகைப்படுத்தி விளக்கலாம்.

1. சமயஞ்சார்ந்தவை

பிறமொழிகளிலிருந்து தமிழ்வடிவம் பெற்ற சமயஞ்சார்ந்த நூல்களை அவற்றின் சமயங்களின் அடிப்படையில் 1. சமணசமயஞ்சார்ந்தவை, 2. புத்த சமயஞ்சார்ந்தவை, 3. சைவசமயஞ்சார்ந்தவை, 4. வைணவசமயஞ்சார்ந்தவை, 5. இஸ்லாமிய சமயஞ்சார்ந்தவை, 6. கிறிஸ்தவ சமயஞ்சார்ந்தவை என வகைப்படுத்தி விளக்கலாம். இவை மிகுதியும் தொகுத்தல், விரித்தல், தொகை விரித்தல், சார்ந்தமைத்தல் என்ற அடிப்படையில் மொழிமாற்றப்பட்டவை ஆகும்.

1. சமணசமயஞ்சார்ந்தவை

சமண சமயத்தைச் சார்ந்த தமிழ் நூல்கள் பல பைசாசம், சமஸ்கிருதம் போன்ற மொழிகளிலுள்ள படைப்புகளை மூலமாகக்கொண்டுள்ளன. அவற்றில் சிலவற்றைப் பின்வருமாறு அட்டவணைப்படுத்தலாம்.

அட்டவணை எண்.2:1, சமணசமயம் சார்ந்த தமிழ் மொழிபெயர்ப்புகள்

1	2	3	4	5	6
வ. எண்.	நூலின்பெயர்	ஆசிரியர்	மூலவடிவம்	மூலமொழி	மூலஆசிரியர்
1	சீவகசிந்தாமணி	திருத்தக்கதேவர்	ஸ்ரீபுராணம் ஜீவாதாரசம்பு	சமஸ்கிருதம்	-
2.	வளையாபதி	-	வைசிகபுராணத்தில் இடம்பெற்றுள்ளது	-	-
3	நாககுமாரகாவியம்	-		-	-
4	யசோதரா காவியம்	-	யசோதராசரித்ர	சமஸ்கிருதம்	-
5	சூளாமணி	தோலாமொழித் தேவர்	இது ஸ்ரீபுராணத்தில் திவிட்டன், விசயன் ஆகியவர்களின் கதையை விளக்கும் பகுதியாகும்	-	-

1	2	3	4	5	6
6	பெருங்கதை	கொங்குவேளிர்	பைசாசம் எனப் படும் பிராகிருத மொழியில் குணாட் டியார் கி.பி. இரண்டாம் நூற் றாண்டில் இயற்றிய பிரகத்கதா என்ற நூலுக்கு துர்விநீதன் செய்த சமஸ்கிருத மொழிபெயர்ப்பைத் தழுவி அமைக்கப்பட் டது.	சமஸ்கிருதம்	துர்விநீதன்
7	நீலகேசி	-	-	-	-

2, புத்த சமயஞ்சார்ந்தவை

புத்த சமயக்கருத்துக்கள் அடங்கிய தமிழ் நூல்கள் பாலிமொழியிலுள்ள படைப்புகளை மூலமாகக்கொண்டுள்ளன. அவற்றில் சிறப்பானவற்றைப் பின்வருமாறு அட்டவணைப்படுத்தலாம்.

அட்டவணை எண். 2:2, புத்தசமயம் சார்ந்த தமிழ் மொழிபெயர்ப்புகள்

1	2	3	4	5	6
1	மணிமேகலை	சீத்தலைச்சாத்த னார்	சாவகநாட்டு அரசனான பூமிச் சந்திரன் மற்றும் ஆபுத்திரன் ஆகிய வர்களைப்பற்றி பாலிமொழியில் வழங்கும் கதைகளை ஒன்றாக இணைத்த நிலையில் ஆபுத்திரன் திறன் அறிவித்தகாதை, ஆபுத்திரன் நாடு அடைந்த காதை, ஆபுத்திரனோடு மணி பல்லவம் அடைந்தகாதை ஆகியவை அமைக்கப் பட்டுள்ளன.	-	-

1	2	3	4	5	6
2	குண்டலகேசி	நாதகுத்தனார்	இக்கதை தேரிகாதை என்ற நூலில் உள்ளது	பாலி	-

3. சைவ சமயஞ் சார்ந்தவை

சைவசமயம் சார்ந்த தமிழ் மொழிபெயர்ப்பு நூல்கள் சமஸ்கிருத மொழியை மூலமாகக்கொண்டுள்ளன. இவற்றில் சிறப்பானவற்றைப் பின்வருமாறு அட்டவணைப்படுத்தலாம்.

அட்டவணை எண். 2:3, சைவசமயஞ்சார்ந்த தமிழ் மொழிபெயர்ப்புகள்

1	2	3	4	5	6
வ. எண்.	நூலின்பெயர்	ஆசிரியர்	மூலவடிவம்	மூலமொழி	மூலஆசிரியர்
1.	இலிங்கபுராணம்	வரகுணராமர்	லிங்கபுராணம்	சமஸ்கிருதம்	-
2.	வாயுசங்கிதை	"	வாயுசங்கிதை	"	-
3.	அம்பிகைமாலை	"	"	"	-
4.	பிரமோத்தர காண்டம்	"	சமஸ்கிருதத்திலுள்ள கந்தபுராணத்தின் மூன்றாம் பகுதியாகிய பிரமாண்ட புராணத்தில் பிரமோத்தரகாண்டம் இடம்பெற்றுள்ளது.	"	
5.	காசிக்காண்டம்	அதிவீரராமர்	காந்தம் என்ற சிவ புராணத்தின் சங்கரம் என்ற பிரிவில் இடம் பெற்றது.	"	-

1	2	3	4	5	6
6.	கூர்மபுராணம்	அதிவீரராமர்	கூர்மபுராணம்	சமஸ்கிருதம்	–
7.	இலிங்கபுராணம்	"	லிங்கபுராணம்	"	–
8.	மாகபுராணம்	"	பத்மபுராணத்தில் மாக (மாசி) மாதம் தீர்த்தமாடுவதின் சிறப்பைக் கூறும் பகுதியாகும்.	"	–
9.	திருப்பரங்கிரி புராணம்	நிரம்ப அழகியதேசிகர்	சமஸ்கிருதக் காந்தத்தில் தல மான்மியம் கூறும் பகுதியில் உள்ளது	"	–
10.	திருவையாற்றுப்புராணம்	"	பிரம்மகைவர்த்த புராணத்தில் இடம் பெற்றுள்ளது	"	–
11.	சிவமகாபுராணம்	புராணத்திருமலைநாதர்	–	–	–
12.	வாயுசங்கிதை	குலசேகரவரகுணராமர்	சிவமகாபுராணத்தில் இடம்பெற்றுள்ளது	சமஸ்கிருதம்	–
13.	சிவதருமொத்திரம்	மறைஞானசம்பந்தர்	–	"	–
14.	சௌந்தர்யலகரி	வீரைகவிராசபண்டிதர்	சௌந்தர்யலகரி	"	ஆதிசங்கரர்

4. வைணவ சமயம் சார்ந்தவை

வைணவ சமயத்தைச் சார்ந்த புராணங்களும், இராமாயணம், மகாபாரதம், பகவத்கீதை போன்ற நூல்களும் சமஸ்கிருத மூலங்களிலிருந்து தமிழில் மொழி மாற்றப்பட்டுள்ளன.

1. புராணங்கள்

தொடக்கால புராணங்களில் ஒன்றான பாகவதத்தைச் செவ்வை சூடுவார் 'பாகவதபுராணம்' எனவும், நெல்லி அருளாளதாசர் 'புராணப்பாகவதம்' எனவும் மொழிபெயர்த்துள்ளனர். மேலும் வடமலையப்பரின் மொழிபெயர்ப்பாக மத்ஸியபுராணம் (மச்சபுராணம்) தமிழ்வடிவம் பெற்றுள்ளது.

2. இராமாயணம்

வால்மீகி இராமாயணத்தின் தழுவல்களாக தமிழில் இராமாயண மொழி பெயர்ப்புகள் பல காணப்படுகின்றன. கம்பர் வடமொழியில் வால்மீகியின் இராமாயணத்தைத் தழுவி 'இராமாயண வெண்பா' என்ற நூலை இயற்றி யுள்ளார் (இந்நூலிலுள்ள ஐந்து செய்யுள்கள் மட்டுமே புறத்திரட்டின் வாயி லாக தற்பொழுது கிடைத்துள்ளன). மேலும் கம்பர் வால்மீகி ராமாயணத்தின் தழுவலாக கம்பராமாயணத்தை அமைத்துள்ளார். வேங்கடகிருஷ்ணையர் என்பவர் வால்மீகி (சமஸ்கிருதம்), துளசிதாசர் (இந்தி), கம்பர் (தமிழ்) ஆகியவர்களின் இராமாயணங்களைத் தழுவி 'இராமகாவியம்' என்ற கதம்ப இலக்கியத்தைப் படைத்துள்ளார். வடமொழி இராமாயணத்தின் தாக்கத்தால் சார்புநூல்கள் பல தமிழில் எழுந்துள்ளன. அவற்றில் குணாதித்தன் சேய் (15ஆம் நூற்றாண்டு) என்பவரின் இராமாயணவெண்பா, தக்கை ராமாயணம் எனப்படும் கோகுலராமா யணம், அகவல், வெண்பா, கீர்த்தனை போன்ற வடிவங்களில் வந்துள்ள இராமா யண நூல்கள், இராமாயண ஓடம், இராமாயண ஏலப்பாட்டு, இராமாயண சிந்து போன்ற நாட்டுப்புற இலக்கிய வடிவங்கள், சீர்காழி அருணாசலக் கவிராய ரின் இராமநாடகக் கீர்த்தனை முதலியன குறிப்பிடத்தக்கவை ஆகும்.

3. மகாபாரதம்

சமஸ்கிருதத்திலுள்ள மகாபாரதத்தை முழுமையாகவோ அல்லது அதன் பகுதி ஒன்றை மட்டுமோ தழுவல்முறையில் விளக்குவனவாக தமிழில் நூல்கள் பல தோன்றியுள்ளன. அவற்றில் சின்னமனூர் செப்பேட்டிலுள்ள 'மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்' என்ற குறிப்பின்மூலம் அறியலாகும் மகாபாரதத்தைப் பற்றியும், அகநானூறு, புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை ஆகிய நூல்களுக்கு பாயிரங்களைப் பாடிய பெருந்தேவனாரின் பாரதத்தைப் பற்றியும், தெள்ளாறெறிந்த நந்திவர்மன் காலத்தில் (கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு) இயற்றப்பட்ட 'பாரதவெண்பா' என்ற நூலைப் பற்றியும் (இந்நூலில் உள்ள சில செய்யுள்கள் கிடைத்துள்ளன), கி.பி.13ஆம் நூற்றாண்டைச்சார்ந்த அருளிலை விசாகனின் பாரதத்தைப் பற்றியும் (இக்குறிப்பு மூன்றாம் குலோத்துங்கனின் திருவாலங்காட்டுக் கல்வெட்டில் காணப்படுகிறது) தற்காலத்தில் வேறு எதுவும் தெரிந்துகொள்ளமுடியவில்லை. கி.பி.17ஆம் நூற்றாண்டில் வில்லிபுத்தூரார் வியாசபாரதத்தைதழுவி வில்லிபாரதத்தை அமைத்துள்ளார். இந்நூலை கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டைச் சார்ந்த அஉஷ்டவதான அரங்கநாதக் கவிராயர் விருத்தப்பாக்களால் முழுமைபெறச்செய்துள்ளார். நல்லாப்பிள்ளை என்னும் புலவர் (பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில்) ஏழாயிரத்திற்கும் மேற்பட்ட செய்யுள்களால் மகாபாரதத்தைத் தமிழ்ப்படுத்தியுள்ளார். மகாபாரதத்தில் ஆரண்ய பருவத்தில் காணப்படும் நளனின் வரலாற்றை அடிப்படையாகக்கொண்டு 'நைஷதம்' என்ற தலைப்பில் உறர்ஷ சக்ரவர்த்தி இயற்றியுள்ள வடமொழி நூலை அதிவீரராம பாண்டியர் 'நைடதம்' என மொழிபெயர்த்துள்ளார். மேலும் புழேந்திப்புலவர் நளன் சரிதத்தை 'நளவெண்பா' என்னும் தலைப்பில் தனிநூலாக அமைத்துள்ளார். குசேலனைப் பற்றியக் கதையை கன்னட நூலைத்தழுவி தேவராசபிள்ளை 'குசேலோபாக்கியானம்' என்னும் தலைப்பில் கண்டகாவிய

மாக அமைத்துள்ளார். ஐயம்பெருமாள் சிவந்த கவிராயரின் புரூரவசரிதை, பாரதியாரின் பாஞ்சாலிசபதம் போன்றவையும் மகாபாரதத்தின் கிளைக் கதைகளாய் அமைந்து தனிநூல் வடிவம் பெற்றவையாகும்.

4. பகவத்கீதை

மகாபாரதத்தின் பகுதியாகக் கருதப்படும் பகவத்கீதை தமிழில், நாற்பத்தெட்டிற்கும் மேற்பட்ட மொழிபெயர்ப்புகளைப் பெற்றுள்ளது. அவற்றில் ஆளவந்தார் (கீதார்த்தசங்கிரகம்), ஸ்ரீபட்டர் (பகவத்கீதை-பரமார்த்த தரிசனம்), எச். பவர் (பகவத்கீதை-ஆங்கிலமொழிபெயர்ப்புடன்), எஸ்.முத்து ஐயர் (பகவத்கீதை வெண்பா), சுத்தானந்தபாரதி (கீதாயோகம்), சுப்பிரமணிய பாரதி (பகவத்கீதை) போன்றவர்களின் மொழிபெயர்ப்புகள் குறிப்பிடத்தக்கவையாய் உள்ளன. பொதுவாக பகவத்கீதை மொழிபெயர்ப்புகள் மூலத்தை அப்படியே பிரதிபலிப்பவையாகவும் சுருக்கம், தழுவல், வியாக்கியானம், தெளிவுரை போன்ற நிலைகளில் அமைந்தவையாகவும், மூலத்தின் ஒரு பகுதிக்கு மட்டும் பெயர்ப்பாக அமைந்தவையாகவும் உள்ளன. மேலும் சில தமிழ்ச் செய்யுள்களாக அமைக்கப்பட்டதாகவும் காணப்படுகின்றன.

5. இஸ்லாமியச் சமயம் சார்ந்தவை

குரானில் அடங்கிய போதனைகளையும், நபிகளின் வரலாற்றையும் விளக்கும் நோக்கில் இஸ்லாமியக் கவிஞர்கள் நூல்கள் பலவற்றை இயற்றியுள்ளனர். பதினேழாம் நூற்றாண்டைச் சார்ந்த உமறுப்புலவர் முகமது நபியின் வரலாற்றைச் சீறாபுராணம் எனப்பெருங்காப்பியமாகப் படைத்துள்ளார். சேகனாப்புலவர்

'நபி இபுறாகீம் வரலாறு' என்ற காவியத்தையும், சவ்வாதுப்புலவர் மதீனத்தந்தாதி, முகைதீன் ஆண்டவர் பிள்ளைத்தமிழ் என்ற சிற்றிலக்கியங்களையும் இயற்றியுள்ளனர். செய்யது முகைதீன் கவிராயர் முகைதீன் ஆண்டவர் பிள்ளைத்தமிழ், முகைதீன் பிள்ளைத்தமிழ் ஆகிய நூல்களைப் படைத்துள்ளார். வண்ணக்களஞ்சியப்புலவர் சுலைமான் நபியின் கதையைக் கூறும், 'இராசநாயகம்' என்ற காப்பியத்தையும், கவிகளஞ்சியப்புலவர் 'நபி அவதார அம்மானை' என்ற நூலையும், பிச்சை இபுறாசிம்புலவர் 'திரு மதீனத்தந்தாதி' என்ற நூலையும் இயற்றியுள்ளனர். இஸ்லாமியரின் சமயநூலான குரானை 1879இல் உறரீப் முகமது அல்உறஉறரி என்பவர் மொழிபெயர்த்துள்ளார். மேலும் இஸ்லாமியரின் தமிழ் மொழிபெயர்ப்புகள் மிகவும் காலத்தால் பிந்தியவையாக உள்ளன. எனவே இஸ்லாமியர் மொழிபெயர்த்தலை விடவும் சார்பு நூல்களைப் படைப்பதிலேயே முதலில் ஆர்வம் காட்டியுள்ளனர் என ஊகிக்கலாம்.

6. <u>கிறிஸ்தவச் சமயஞ்சார்ந்தவை</u>

கிறிஸ்தவச் சமயஞ்சார்ந்த நூல்களுக்கு மேல்நாட்டுப் பாதிரிகளும், தமிழக கிறிஸ்தவர்களும் செய்துள்ள தமிழ்வடிவங்களை 1. நேரடி மொழிபெயர்ப்புகள், 2. சார்பு நூல்கள் என வகைப்படுத்தலாம்.

1. <u>நேரடி மொழிபெயர்ப்புகள்</u>

வாஸ்கோடகாமா 1498இல் கோழிக்கோட்டுக்கு வந்ததைத் தொடர்ந்து போர்ச்சுக்கீசியரின் ஆதிக்கம் படிப்படியாக நிலைபெறத் தொடங்கியது. 1577இல் கொன்சல்வெஸ் தமிழ் அச்செழுத்துக்களை கொல்லத்தில் வார்ப்பித்தார். தொடர்ந்து கொல்லம், கொச்சி, புன்னைக் காயல் போன்ற இடங்களில்

போர்ச்சுக்கீசியர் அச்சகங்களை நிறுவினர். 1546இல் சமயப்பிரச்சாரத்திற்காக வந்த ஆன்டிரிக்ஸ் போர்ச்சுக்கீசியத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்ட நூல்களில் மூன்று தற்பொழுது கிடைத்துள்ளன. அவற்றில் காலத்தால் பழமையானதாக 'தம்பிரான் வணக்கம்' என்ற நூல் உள்ளது. பதினாறு பக்கங்களைக்கொண்ட இந்நூல் 21.10.1578ஆம் ஆண்டு கொல்லத்தில் அச்சாகியுள்ளது. தமிழில் அமைந்த முதல் ஐரோப்பிய மொழிபெயர்ப்பு நூலாகவும், முதலில் அச்சடிக்கப்பட்ட நூலாகவும், கருதத்தக்க பெருமை இதற்கு உண்டு. 1579இல் வெளிவந்த 'கிறீசித்தியானி வணக்கம்' என்ற நூல் இரண்டாவது ஐரோப்பிய மொழிபெயர்ப்பு நூலாகவும், அச்சடிக்கப்பட்ட நூலாகவும் கொள்ளத்தக்கது. 122 பக்கங்களைக்கொண்ட இந்நூல் கொச்சியில் அச்சிடப்பட்டுள்ளது. மூன்றாவது ஐரோப்பிய மொழிபெயர்ப்பு நூலாகவும் அச்சடிக்கப்பட்ட நூலாகவும் அமைந்தது 'பிளாஸ்சான்க்டோரம்' ஆகும். 660 பக்கங்களைக்கொண்ட இந்நூல் புன்னைக்காயலில் அச்சாகியிருக்கலாம் எனக்கருதப்படுகிறது. இந்நூலுக்கு ஆன்டிரிக்ஸ் வைத்தபெயர் கிடைக்கவில்லை. இதனை 1967இல் சே.ச. இராசாமாணிக்கம் அடியார் வரலாறு என்ற தலைப்பில் மறுபதிப்புசெய்துள்ளார் (சரோஜினி பாக்கியமுத்து, 1990:30-31). டச்சுக்காரர்கள் 1603, 1606 ஆகிய ஆண்டுகளில் கோவாவின் மீது படையெடுத்து போர்ச்சுக்கீசியருக்குப் பெருத்தச் சேதத்தை ஏற்படுத்தினர். மேலும் 1638இல் அவர்கள் இலங்கையிலிருந்து போர்ச்சுக்கீசியர்களை விரட்டியடிக்கத்தொடங்கி 1650இல் அதைச் செய்துமுடித்தனர். இதனால் போர்ச்சுக்கீசியரின் செல்வாக்கு வீழ்ச்சியுற்றதோடு அவர்களின் அச்சகங்கள் அனைத்தும் அழிந்துபோயின. தொடர்ந்து சீர்திருத்தச்சபையாரின் செல்வாக்கு வலுப்பெறத்தொடங்கியது. இவர்கள் முதல் முயற்சியாக விவிலியத்தை மொழிபெயர்க்கத் தொடங்கினர். 1706ஆம் ஆண்டு சமயப்பணிக்காகத் தரங்கம்பாடிக்கு வந்த சீகன்பால்க்கு நற்செய்தி நூல்கள் நான்கையும், அப்போஸ்தலர் நடபடிகளையும் 'அஞ்சுவேதபொஸ்தகம்' என்னும் தலைப்பில்

மொழிபெயர்த்து 1715இல் வெளியிட்டார். தொடர்ந்து பழையஏற்பாட்டுப் பகுதிகள், ஜெபபுஸ்தகம், தியானபுஸ்தகம் ஆகியவை சீகன்பால்க்கின் மொழிபெயர்ப்பில் வெளிவந்தன. விவிலிய மொழிபெயர்ப்பு மற்றும் விவிலியத் திற்குச் செய்துள்ள பழைய மொழிபெயர்ப்புகளைத் திருத்துதல் ஆகியன பப்ரீஉஷியஸ், இரேனியஸ், பெர்சிவல், பவர், எல்.பி. லார்சன், மோனகன் போன்றவர்களால் செய்யப்பட்டுள்ளன. மேலும் சட்டாம்பிள்ளை என அழைக்கப் படும் அருமைநாயகம் பழைய ஏற்பாட்டு ஆகமங்களை 1870இல் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார். கொச்சை வழக்குக் கலந்த நிலையில் இப்பெயர்ப்பு உள்ளது. இதில் சங்கீதங்கள் அனைத்தும் கர்நாடக மெட்டுடன் பாடல்களாக மாற்றப்பட் டுள்ளன. அருள்திரு ஞானப்பிரகாசம் செய்த வேதாகம மொழிபெயர்ப்பு 1932ல் கல்கத்தா ஒய்.எம்.சி.எ. அச்சகத்தில் வெளிவந்துள்ளது. 1950களில் அருள்திரு எஸ்.டி. ஜெபஞானம் மார்க்கின் நற்செய்தி நூலை மொழிபெயர்த்து வெளியிட் டுள்ளார். 1977இல் சுவிசேஷ ஊழிய நூல்நிலையத்தார் 'ஜீவனுள்ள தேவனின் மீட்பின் செய்தி ஒரு முகவுரை' என்ற தலைப்பில் புதிய ஏற்பாட்டை மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார். இது லிவிங்பைபிளுக்குரிய தமிழ்ப்பெயர்ப்பாகும். இயேசு சபையார் தமிழகத்திற்கு சீர்திருத்தச்சபையாருக்கு முன்பே வந்திருந்தாலும் அவர்கள் விவிலிய மொழிபெயர்ப்பில் சற்றுப் பின்தங்கிய நிலையிலேயே உள்ளனர். பாரிசில் உள்ள அன்னிய வேதபோதக சபையின் முயற்சியால் இயேசுசபையாரின் முதல் விவிலியமொழிபெயர்ப்பு 1857இல் பாண்டிச்சேரியிலிருந்து வெளிவந்தது. இப்பெயர்ப்பை தமிழகத்தின் வடபகுதியினர் பயன்படுத்தினர். திரிங்கால் இயேசு சபையினர் 1891இல் வெளியிட்ட மொழிபெயர்ப்பை தமிழகத்தின் தென்பகுதியினர் பயன்படுத்தினர். 1904இல் 'பொத்தாரோ' என்ற பழைய ஏற்பாடு இரண்டு பகுதிகளாக வெளிவந்தது. இவை அனைத்தும் இலத்தீனிலிருந்து மொழிபெயர்க்கப் பட்டவை ஆகும். இயேசுசபையைச் சார்ந்த தமிழ் இலக்கியக் கழகம் புதிய ஏற்பாட்டை 1970இல் கிரேக்கத்திலிருந்து மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளது.

கிறிஸ்தவக் காப்பியங்களுக்கான நேரடி மொழிபெயர்ப்புகளை ஜான் பனியனின் 'பில்கிரிமிஸ் புரோகிரஸ்' என்ற நூலுக்கு சாமுவேல் பவுல் 'மோட்ச பிரயாணம்' என்ற தலைப்பிலும், ஜான் மில்ட்டனின் 'பாரடைஸ் லாஸ்ட்' என்ற நூலுக்கு சாமுவேல் யோவான் ஐயர் (1880) 'பாரதீசு உத்தியான நாசம்' என்னும் தலைப்பிலும் செய்துள்ளனர்.

2. சார்பு நூல்கள்

கிறிஸ்தவ சமயப் போதனைகளையும், விவிலியக்கதைகளையும் கொண்ட சார்புநூல்கள் பலவற்றைக் கிறிஸ்தவக் கவிஞர்கள் இயற்றியுள்ளனர். அவர்களில் வீரமா முனிவர் ஜோசப், இயேசுநாதர் ஆகியவர்களின் வரலாற்றைத் 'தேம்பாவணி' எனப் பெருங்காப்பியமாகப் படைத்துள்ளார். மேலும் வேதநாயகம்பிள்ளை 'தேவமாதா அந்தாதி' என்ற நூலையும், வேதநாயக சாஸ்திரி 'பெத்லகேம் குறவஞ்சி' என்ற நூலையும், எச்.எ. கிருஷ்ணபிள்ளை இரட்சண்ணிய யாத்திரீகம், இரட்சண்ணிய சமய நிர்யணம், இரட்சண்ணிய மனோகரம், இரட்சண்ணியக் குறள் ஆகிய நூல்களையும் இயற்றியுள்ளனர். இவற்றில் 'இரட்சண்ணிய யாத்திரீகம்' ஜான்பனியனின் 'பில்கிரிம்ஸ் புரோகிரஸ்' என்ற நூலைத் தழுவி அமைக்கப்பட்டதாகும்.

2. சமயஞ்சாராதவை

பிறமொழிகளிலிருந்து தமிழ்வடிவம் பெற்ற சமயஞ்சாராத நூல்களாக 1. கதை இலக்கியம், 2. இலக்கணம், 3. சோதிடம், 4. மருத்துவம், 5. சிற்பம் முதலான துறைகளைச் சார்ந்தவற்றைக் குறிப்பிடலாம்.

1. கதை இலக்கியம்

கதை இலக்கிய வகைகளில் ஈசாப் நீதிக்கதைகளுக்கு இ. இராமசந்திர ஐயர் (1908), ஏ. திருவேங்கடம்பிள்ளை (1853), எஸ்.எம். நடேசசாஸ்திரி (1961), அ. சுப்பிரமணியபாரதி (1930), எம்.ஆர். அப்பாத்துரை,

அ.லெ. நடராஜன் (1969) போன்றவர்களும், கதாசரிதசாகரத்திற்கு காசிக நந்த ஞானாசார்ய சுவாமிகள் (1942), பி. வேங்கடராமசாஸ்திரி (1905) போன்றவர்களும், பஞ்சதந்திரகதைகளுக்கு தாண்டவராயமுதலியார் (1825), எஸ். ருத்திரபதி (1951), கே.எஸ். வேங்கடசுப்பையா (1957), நா.ரா. நாச்சியப்பன் (1963), வெ. நீ. தட்சணாமூர்த்தி (1963), எஸ். லீலா (1970), அ.லெ. நடராஜன் (1975) போன்றவர்களும் மொழிபெயர்ப்பு களைச் செய்துள்ளனர். மேலும் கதையிலக்கிய மொழிபெயர்ப்பு நாவல், சிறுகதை, நாடகம் என பல்வேறு நிலைகளில் வளர்ச்சிபெற்றுவருகிறது.

2. இலக்கணம்

இலக்கண நூல்கள் பல வடமொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட் டுள்ளன. அவற்றில் வீரசோழியத்தின் அலங்காரப்படலத்தை புத்தமித்திரனார் வடமொழியில் தண்டி எழுதிய காவியதர்சனத்தைத் தழுவி அமைத்துள்ளார். இதை காவியதர்சத்திற்கு வந்த முதல் மொழிபெயர்ப்பாகக் கருதலாம். மேலும் வடமொழியில் தண்டி இயற்றிய காவியதர்சத்தை தமிழில் தண்டி என்பவர் 'தண்டியலங்காரம்' என மொழிபெயர்ப்பு செய்துள்ளார் (தண்டியலங்காரம் மொழிபெயர்ப்பு நூல் அல்ல என்ற கருத்தும் வழக்கில் உள்ளது). 'சந்திரலோகம்' என்ற வடமொழி இலக்கணநூலை (இதனை காளிதாசர் இயற்றினார் என்றும் ஜயதேவர் இயற்றினார் என்றும் இருவேறு கருத்துக்கள் உள்ளன) திருத்தணிகை விசாகப் பெருமாளையர் உரைநடையாக மொழிபெயர்த்துள்ளார் (இம்மொழி பெயர்ப்பில் எடுத்துக்காட்டுகள் பாடல்களின் வடிவில் உள்ளன). இந்நூல் 'அணியிலக் கண வசனம்' என அழைக்கப்படுகிறது. இதனை மு. இராகவையங்காரின் தந்தையான முத்துசாமி ஐயங்கார் நூற்பா வடிவில் மாற்றியமைத்துள்ளார். வடமொழி சந்திராலோகத்திற்கு அப்பையதீட்சிதர் (கி.பி.1520-1593) உரை எழுதினார். அவ்வுரை நூலுக்கு 'குவலயானந்தம்' எனப்பெயரிட்டு வழங்கினார். இதனை எட்டையபுரம் அரசவை வடமொழிப்புலவர் சங்கரநாராயணசாஸ்திரியார் (1889) தமிழில் மொழிபெயர்த்தார் (இதற்கு இன்னொரு மொழிபெயர்ப்பை

மாணிக்கவாசகர் என்பவர் செய்துள்ளார் என்ற கருத்தும் நிலவுகிறது). அதனை அவ்வரசவைக் கவிஞர் முகவூர் மீனாட்சி சுந்தரலிங்கக் கவிராயர் செய்யுள் வடிவில் மாற்றியுள்ளார். சீனிவாசராகவாசாரியார் (19ஆம் நூற்றாண்டு) காவியதர்சத்தின் பொருளணியை மட்டும் 'தண்டியலங்காரசாரம்' என்னும் தலைப்பில் வசன நடையாக மொழிபெயர்த்துள்ளார். 'தொன்யலோகம்' என்ற நூலை பி.எஸ். சுப்பிரமணியசாஸ்திரி (1944) 'தொனிவிளக்கு' என்ற தலைப்பில் மொழி பெயர்த்துள்ளார். 'ஔசித்திய விசாரசர்ச்சை' என்ற வடமொழி நூலுக்கு மு.கு. ஜகந்நாதராஜா செய்துள்ள மொழிபெயர்ப்பும் இங்குக் குறிப்பிடத்தக்க தாகும்.

3. சோதிடம் முதலியன

சோதிட நூல்களில் ஆதிசங்கரரின் மானூரிபாகவம் (1913), யோக பாவம் ஆகியவையும், சத்யாச்சாரியாரின் ஜாதபஞ்ச சித்தாந்தம் (ஸ்ரீனிவாசாச சாரியார்) என்பதும் குறிப்பிடத்தக்க மொழிபெயர்ப்புகளாக உள்ளன. மேலும் வரதாசாரியாரின் மொழிபெயர்ப்பில் வந்துள்ள புருஉஷஸ்திரி ஸாமுத்திரிகம் (1892) என்ற நூலும், வரலுங்கராமனின் மொழிபெயர்ப்பில் 'கொக்கோகம்' என்ற தலைப்பில் வந்துள்ள நூலும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கன.

4. மருத்துவம்

மருத்துவத்துறையைச் சார்ந்தனவாக ஏ. குப்புசாமி ஐயரின் (1883) மொழிபெயர்ப்பில் வந்துள்ள 'ஆயுர்வேத சார சங்கிரகம்' என்ற நூலும், அகத்தியரின் வைத்தியகாவியம் (1882), அகத்தியர் வைத்தியம் (1871) ஆகிய நூல்களும், சுப்பிரமணியபண்டிதரின் மொழிபெயர்ப்பில் ஸ்ரீகண்டமாமுனிவரின்

'ஜீவரக்ஷாமிர்தம்' என்ற நூலும், அண்மைக்கால மொழிபெயர்ப்பான அஷ்டாங்கஹிருதயம்' என்ற ஆயுர்வேதநூலும் குறிப்பிடத்தக்கன. மேலும் சித்தமருத்துவம், மற்றும் ஆயுர்வேதம் சார்ந்த நூல்கள் பல தமிழ்வடிவம் பெற்றுள்ளதோடு, இலங்கையில் மருத்துவக்கல்லூரி ஆசிரியராய்ப் பணியமர்ந்த (1848) சாமுவேல் பிஷ்கிரீன் முதலாகப் பல்வேறு அறிஞர்கள் மேனாட்டு மருத்துவநூல்கள் பலவற்றைத் தமிழ்ப்படுத்தியுள்ளதும் இங்கு சுட்டிக்காட்டத் தக்கது.

5. சிற்பம்போன்ற கலைகள்

வடமொழியிலிருந்து சிற்பம் போன்ற கலைநூல்கள் பலவும் தமிழ்வடிவம் பெற்றுள்ளன. அவற்றில் கே.எல். சுப்பிரமணிய சாஸ்திரியின் மொழிபெயர்ப்பில் காஸ்யபாவின் சிற்பநூல் ஒன்று 'ஸ்ரீகாஸ்யபா சில்பசாஸ்திரம்' என்னும் தலைப்பில் வெளிவந்துள்ளது. சிற்பரத்தினம், மயமதம் போன்ற நூல்களைத் தஞ்சை சரஸ்வதிமகால் நூல்நிலையத்தினர் வெளியிட்டுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. மேலும் கனவு குறித்து பிருகஸ்பதி என்பவர் வடமொழியில் எழுதியுள்ள நூலைக் கணபுரத்தேவன் 'கனாநூல்' என மொழிபெயர்த்துள்ளதும் இங்கு சுட்டிக்காட்டத் தக்கது.

3. தற்கால மொழிபெயர்ப்புகள்

மேனாட்டாரின் வருகைக்குப் பிறகு மொழிபெயர்ப்பு முறையில் படிப்படியாக மாற்றம் நிகழத்தொடங்கியது. அதாவது மேனாட்டவர்கள் மூலத்தின் மொழியை மட்டும் மாற்றி அதற்குச் சமமான அளவில் மொழிபெயர்ப்பை அமைக்கும் முறையின் அடிப்படையில் தமிழர்களும் படைப்பிலக்கியங்களோடு பிறதுறை இலக்கியங்களையும் மொழிபெயர்த்தனர் (தமிழில் படைப்பிலக்கியங்களை தொகுத்தல், விரித்தல், தொகைவிரித்தல், சார்ந்தமைத்தல் போன்ற முறைகளிலும், பிறதுறை

இலக்கியங்களை நேரடி மொழிபெயர்ப்பாகவும் தமிழ்ப்படுத்தும் வழக்கம் நடைமுறையில் இருந்தது). இவ்வாறு தமிழ்வடிவம் பெற்றனவாகச்சுமார் 42 மொழிகளிலிருந்து 4234 நூல்கள் குறித்த விவரங்களை எஸ். சிவகாமி (1983) தந்துள்ளார். இவற்றை 1. வெளிநாட்டு மொழிகளிலிருந்து வந்தவை, 2. வட இந்திய மொழிகளிலிருந்து வந்தவை, 3. பிற திராவிடமொழிகளிலிருந்து வந்தவை என வகைப்படுத்தி விளக்கலாம்.

1. வெளிநாட்டு மொழிகளிலிருந்து வந்தவை

வெளிநாட்டு மொழிகளிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள நூல்களை சிவகாமியின் மொழிபெயர்ப்பு நூற்றொகையின் அடிப்படையில் பின்வருமாறு அட்டவணைப்படுத்தலாம்.

அட்டவணை எண். 2:4, வெளிநாட்டுமொழிகளிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட நூல்கள்

வரிசை எண்	இலக்கியவகை	அரபு	ஆங்கிலம்	ஆப்பிரிக்கன்	இத்தாலி	உக்ரைன்	எபிரேயம்	கிரீக்	கிரேக்கம்	சிற்வாணம்	சிங்களம்	சீனம்	சுவீடிஷ்	ஜப்பானீஷ்	ஜெர்மன்	துருக்கி	நார்வே	பல்கேரியன்	பாரசீகம்	பிரெஞ்சு	பிலோரஸ்	போலிஷ்	மெக்ஸிகன்	யுக்கஸ்லேவியன்	ரஷ்யன்	லத்தீன்	வியட்னாமிஸ்	ஸ்பானீஷ்
1	செய்யுள்	9	55	-	-	-	-	-	4	1	2	1	-	-	5	-	-	1	5	-	-	1	-	-	5	4	-	-
2	புதினம்	1	210	1	1	-	-	-	1	-	2	1	1	3	9	-	-	-	1	35	-	-	1	-	52	-	-	2
3	சிறுகதை	14	41	-	3	1	-	-	11	-	1	1	1	2	2	1	-	-	4	5	-	-	-	1	37	-	-	-
4	நாடகம்	-	122	-	-	-	-	-	5	-	-	-	-	-	2	-	6	-	-	4	-	-	-	-	3	-	-	-
5	இலக்கியம் பொது	-	54	-	1	-	-	2	2	-	1	2	-	1	6	-	2	-	-	25	1	-	-	-	47	-	-	-
6	வாழ்க்கை வரலாறு	6	106	-	-	-	-	-	1	-	-	-	-	-	1	-	-	-	2	2	-	-	-	-	6	-	-	-
7	தன்வரலாறு	-	11	-	-	-	-	-	-	-	-	-	-	-	1	-	-	-	-	-	-	-	-	-	4	-	-	-
8	பயணஇலக்கியம்	-	10	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	1	-	-	-	-	-	-	-	-	-	-	-
9	கடிதம்	-	11	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	1	1	-	-	-	-	6	-	-	-
10	சொற்பொழிவு	-	37	-	-	-	-	-	1	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-
11	கட்டுரை	-	4	-	1	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	5	-	-	-
12	தொகுப்பு	4	13	-	1	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-

அட்டவணை எண். 2:4, வெளிநாட்டுமொழிகளிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட நூல்கள்

வரிசை எண்	இலக்கியவகை	அரபு	ஆங்கிலம்	ஆப்ரிக்கன்	இத்தாலி	உக்ரைன்	எபிரேயம்	கிர்கிஸ்	கிரேக்கம்	கீர்வாணம்	சிங்களம்	சீனம்	சுவீடிஷ்	ஜப்பானீஷ்	ஜெர்மன்	துருக்கி	நார்வே	பல்கேரியன்	பாரசீகம்	பிரெஞ்சு	பிலோரஸ்	போலிஷ்	மெக்ஸிகன்	யூக்கஸ்லோவேகியன்	ரஷ்யன்	லத்தீன்	வியட்னாமீஸ்	ஸ்பானிஷ்
1	செய்யுள்	9	55	-	-	-	-	-	4	1	2	1	-	-	5	-	-	1	5	-	-	1	-	-	5	4	-	-
2	புதினம்	1	210	1	1	-	-	-	1	-	2	1	1	3	9	-	-	-	1	35	-	-	1	-	52	-	-	2
3	சிறுகதை	14	41	-	3	1	-	-	11	-	1	1	1	2	2	1	-	-	4	5	-	-	-	1	37	-	-	-
4	நாடகம்	-	122	-	-	-	-	-	5	-	-	-	-	-	2	-	6	-	-	4	-	-	-	-	3	-	-	-
5	இலக்கியம் பொது	-	54	-	1	-	-	2	2	-	1	2	-	1	6	-	2	-	-	25	1	-	-	-	47	-	-	-
6	வாழ்க்கை வரலாறு	6	106	-	-	-	-	-	1	-	-	-	-	-	1	-	-	-	2	2	-	-	-	-	6	-	-	-
7	தன்வரலாறு	-	11	-	-	-	-	-	-	-	-	-	-	-	1	-	-	-	-	-	-	-	-	-	4	-	-	-
8	பயணஇலக்கியம்	-	10	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	1	-	-	-	-	-	-	-	-	-	-	-
9	கடிதம்	-	11	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	1	1	-	-	-	-	6	-	-	-
10	சொற்பொழிவு	-	37	-	-	-	-	-	1	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-
11	கட்டுரை	-	4	-	1	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	5	-	-	-
12	தொகுப்பு	4	13	-	1	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-

1	2	3	4	5	6	7	8	9	10	11	12	13	14	15	16	17	18	19	20	21	22	23	24	25	26	27	28	29
13	இலக்கணம், மொழியியல்	-	9	-	-	-	-	-	1	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-
14	இந்து சமயம்	-	16	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	1	-	-
15	இஸ்லாமிய சமயம்	38	1	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	5	-	-	-	-	-	-	-	-	-
16	கிறிஸ்தவ சமயம்	1	74	-	-	-	3	-	9	-	-	-	2	-	9	-	-	-	-	2	-	-	-	-	-	5	-	-
17	சமயம்பொது	-	15	-	-	-	-	-	1	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	2	-	-	-
18	தத்துவம்	-	16	-	-	-	-	-	3	-	-	-	-	-	1	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-
19	அறிவியல்	-	92	-	-	-	-	-	-	-	-	-	-	-	2	-	-	-	-	-	-	-	-	-	31	-	-	-
20	மருத்துவம்	-	17	-	-	-	-	-	-	-	-	-	-	-	1	-	-	-	1	-	-	-	-	-	2	-	-	-
21	உளவியல்	-	11	-	-	-	-	-	-	-	1	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-
22	தர்க்கம்	-	1	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	1	-	-	-
23	வரலாறு	-	67	-	-	-	-	-	2	-	-	1	-	-	1	-	-	-	-	1	-	-	-	-	7	-	-	-
24	அரசியல்	-	83	-	-	-	-	-	3	-	-	-	-	-	-	-	-	-	-	2	-	-	-	-	48	-	1	1
25	சட்டம்	-	22	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-
26	பொருளியல்	-	35	-	-	-	-	-	-	-	-	-	-	-	6	-	-	-	-	1	-	-	-	-	4	-	-	-

1	2	3	4	5	6	7	8	9	10	11	12	13	14	15	16	17	18	19	20	21	22	23	24	25	26	27	28	29
27	தொழில்	-	25	-	-	-	-	-	-	-	1	-	-	-	-	-	-	-	1	-	-	-	-	-	-	-	-	-
28	விவசாயம்	-	3	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-
29	புவியியல்	-	14	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	2	-	-	-
30	சமூகவியல்	-	23	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	2	-	-	-	-	8	-	-	-
31	கல்வி	-	10	-	2	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	2	-	-	-
32	கூட்டுறவு	-	5	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-
33	கலைகள்	-	4	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	2	-	-	-
34	சோதிடம்	-	3	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-
35	யோகம்	-	2	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-
36	விளையாட்டு	-	5	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-
37	எஞ்சியன	1	14	-	1	-	-	-	-	-	-	-	-	-	-	-	1	-	-	2	-	-	-	-	10	-	-	-

1. ஆங்கிலம்

பிறமொழிகளிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டவற்றில் மிகுதியான நூல்கள் ஆங்கிலத்தை மூலமாகக்கொண்டவை ஆகும். இவை கவிதை, நாவல், சிறுகதை, நாடகம், வாழ்க்கை வரலாறு, தன் வரலாறு, பயணஇலக்கியம், கடிதம், சொற்பொழிவு, கட்டுரை, தொகுப்பு நூல்கள், இலக்கணம், மொழியியல், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் மற்றும் பொதுவான சமயநூல்கள், தத்துவம், அறிவியல், மருத்துவம், உளவியல், தர்க்கம், வரலாறு, அரசியல், சட்டம், பொருளியல், தொழில், விவசாயம், புவியியல், சமூகவியல், கல்வி, கூட்டுறவு, கலைகள், சோதிடம், யோகம், விளையாட்டு, போன்ற துறைகளைச் சார்ந்தவையாக உள்ளன. ஜான்மில்ட்டன் (பாரடைஸ் லாஸ்ட், பாரடைஸ் ரீ கெய்ண்ட்), தாமஸ்கிரே (த எலிஜி ரிட்டன் இன் எ கன்ட்ரி சர்ச்யார்டு), ஜான்பனியன் (பில்கிரிம்ஸ் புரோகிரஸ்), மாதவையா (தமிழக ஆங்கில எழுத்தாளரான இவரின் சத்தியானந்தா, கிளாரிந்தா போன்ற ஆங்கில நாவல்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன), ஆஸ்கார் ஒயில்ட் (ஆஸ்கார் ஒயில்ட்டின் சிறந்த சிறுகதைகள்), எட்கார் ஆலன்போ (எட்கார் ஆலன்போவின்கதைகள்), ஷேக்ஸ்பியர் (ஒதல்லோ, டெம்பஸ்ட், கிங்லியர், மாக்பெத், மர்ச்சென்ட் ஆப் வெனிஸ், ஜூலியசீசர், கிங்ஜான்) முதலான படைப்பிலக்கிய ஆசிரியர்களுடைய நூல்களும், பெர்னார்ட்ஷா (கில்பெர்ட் கீத் செஸ் டர்சன்), மார்க்கோபோலோ (மாரிஸ்காலிஸ்), விவேகானந்தா (ரோமன் ரோலண்ட்), புத்தர் (ரியிஸ்தாவிட்ஸ்) போன்றவர்களைப் பற்றிய நூல்களும், பெஞ்சமின் பிராங்கிளின் (பெஞ்சமின் பிராங்கிளினின் தன்வரலாறு), காந்தி (எக்ஸ்பெரிமெண்ட் ஆப் ட்ருத்), நேரு (ஜவகர்லால் நேருவின் சுயசரிதை) முதலியவர்களின் சுயசரிதைகளும், விவேகானந்தர் (எழுமின் விழிமின்), இராதாகிருஷ்ணன் (இராதாகிருஷ்ணன்

பேருரைகள்), சுந்தர்சிங் (சுந்தர்சிங் என்பவரின் பேருரைகள்) போன்றவர்களின் சொற்பொழிவுகளும் இவற்றில் அடங்கும். ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்ப்பு செய்தவர்களில் கவிமணி (ஆசிய ஜோதி), சரோஜினி பாக்கியமுத்து (சத்தியானந்தா, சிளாரிந்தா), செ. ஜேசுதாசன் (முதற்கனி), தி.ஆர். அருணாசலம் (எட்கார் ஆலன்போவின் கதைகள்), பி.எஸ்.வரதராஜ் ஐயர் (புத்தன்பிரான்), வெ.ப. சுப்பிரமணிய முதலியார் (கோம்பிவிருத்தம்), பெ.நா. அப்புசாமி (காலயந்திரம், லிட்டன் ஜான்சன் வரலாறு) போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

2. ருசியமொழி

ஆங்கிலத்திற்கு அடுத்தபடியாக ருசியமொழியிலிருந்து மிகுதியான நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இவற்றில் மார்ஸிம் கார்க்கி (தாய்), லியோடால்ஸ்டாய் (அன்னாகரினினா), அந்தோன் சேகவ் (அந்தோன் சேகவ் சிறுகதைகளும் குறுநாவல்களும்), புஉக்கின் (புஉக்கின் கதைகள்) போன்றவர்களின் படைப்பிலக்கியங்கள், மார்க்ஸ் (அடிமைநாடுகள் பற்றி), லெனின் (உட்டோபியன் சோசலிசமும் விஞ்ஞான சோசலிஸமும்), பிரெஸ்னவ் (கம்யூனிசப் பாதையில் ஒரு மைல்கல்) போன்றவர்களின் அரசியல் நூல்கள் முதலியன குறிப்பிடத்தக்கன. ருசியமொழி நூல்களைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர்களில் கே.ஆர். கண்ணன் (பொருளாதார தன்னுணர்ச்சிவாதம் பற்றிய ஒரு பண்புரை), பூ. சோமசுந்தரம் (சோவியத் இன்மொழிச் சிறுகதைகள்), ரகுநாதன் (அக்கினிப் பரீட்சை, தந்தையின் காதலி) போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

3. பிறமொழிகள்

மேலும் பிரெஞ்சு மொழியிலிருந்து நாவல்களும், அரபு மொழியிலிருந்து இஸ்லாமிய சமய நூல்களும், ஜெர்மன் மொழியிலிருந்து நாவல்

மற்றும் கிறிஸ்தவசமய நூல்களும், கிரேக்க மொழியிலிருந்து கதைகள், விவிலியம் மற்றும் கிறிஸ்தவ சமய நூல்களும், இலத்தீன் மொழியிலிருந்து கவிதை மற்றும் கிறிஸ்தவ சமய நூல்களும் மிகுதியாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

2. வட இந்திய மொழிகளிலிருந்து வந்தவை

வட இந்திய மொழிகளிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள நூல்களை சிவகாமியின் மொழிபெயர்ப்பு நூற்றொகையின் அடிப்படையில் பின்வருமாறு அட்டவணைப்படுத்தலாம்.

அட்டவணை எண். 2:5, வடஇந்திய மொழிகளிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட நூல்கள்

1	2	3	4	5	6	7	8	9	10	11	12	13	14
வரிசை எண்	இலக்கிய வகை	அஸ்ஸாமி	இந்தி	உருது	ஒரியா	குஜராத்தி	சமஸ்கிருதம்	சௌராஷ்ட்ரம்	பஞ்சாபி	பாலி	பிராகிருதம்	மராத்தி	வங்காளம்
1.	கவிதை		12			1	598				2	11	13
2.	நாவல்	2	18	6	3	6	2		1			15	96
3.	சிறுகதை		13	3		4	20		1	1		14	26
4,	நாடகம்		4			1	83					1	11
5.	இலக்கியம்பொது		10	4		2	6			1		15	50

1	2	3	4	5	6	7	8	9	10	11	12	13	14
6.	வாழ்க்கைவரலாறு		12	3		5	4					2	1
7.	தன்வரலாறு		2			4							1
8.	பயணஇலக்கியம்		1			1							2
9.	கடிதம்					1							2
10.	சொற்பொழிவு					1						1	
11.	கட்டுரை											1	3
12.	தொகுப்பு		1				1		1			1	
13.	இலக்கணம், மொழியியல்						4						
14.	இந்துசமயம்		2				18						1
15.	இஸ்லாமியசமயம்		7	10									
16.	கிறிஸ்தவசமயம்			1									
17.	சமயம்-பொது		7	2			3				3		1
18.	தத்துவம்		4				28						
19.	அறிவியல்		1				2						
20.	மருத்துவம்						5					3	
21.	தர்க்கம்		1				8						
22.	வரலாறு		1				2					1	1
23.	அரசியல்		5			1						1	
24.	தொழில்		2									2	
25.	சமூகவியல்												1
26.	கல்வி		2										
27.	கலைகள்						5					1	
28.	சோதிடம்						16						
29.	யோகம்		1										
30.	எஞ்சியன		10	2		4	12	1					1

1. சமஸ்கிருதம்

இவற்றில் சமஸ்கிருத மொழியிலிருந்துதான் மிகுதியான நூல்கள் தமிழ்வடிவம் பெற்றுள்ளன. இவை கவிதை, நாவல், சிறுகதை, நாடகம், வாழ்க்கைவரலாறு, இலக்கணம், சமயம், தத்துவம், அறிவியல், மருத்துவம், தர்க்கம், வரலாறு, கலை, சோதிடம் போன்ற துறைகளைச்சார்ந்தவையாக உள்ளன. இவற்றிலும் கவிதை நூல்களின் மொழிபெயர்ப்புதான் மிகுதியாகக் காணப்படுகின்றன. இவை பெரும்பான்மையும் இராமாயணம், மகாபாரதம், மற்றும் புராணங்களை மூலமாகக் கொண்டவை ஆகும். சமஸ்கிருதத்திலிருந்து தமிழில் மொழிபெயர்ப்பு செய்துள்ளவர்களில் நித்தியானந்தசுவாமி (அத்வைதரசமஞ்சரி), கே. நாராயண சாஸ்திரி (சிவானந்தலகரி), பெரியவாச்சான்பிள்ளை (ஆளவந்தார் ஸ்தோத்திரம், வால்மீகிராமாயண தனி சுலோகம்), கிருபானந்தவாரியார் (ஸ்ரீமகாபாரதம்) போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

2. வங்காளி

அடுத்ததாக வங்காள மொழியிலிருந்து மிகுதியான நூல்கள் தமிழ்வடிவம் பெற்றுள்ளன. இதில் நாவல்களின் எண்ணிக்கை மிகுதியாகக் காணப்படுகிறது. வங்காள மொழியிலிருந்து தமிழில் அறிமுகமான சிறந்த படைப்பாளர்களாக பங்கிம் சந்திரர் (அந்தப்புர ரகசியம் அல்லது இராஜேஸ்வரி, கபால குண்டலா, சஞ்சல குமாரி, கிருஉஷ்ணகாந்தன் உயில்), சரத்சந்திரர் (அண்ணன் தம்பி, உடைந்த உள்ளம், கணவன்), ரவீந்திர நாத்தாகூர் (பூந்தோட்டம், மாயாவிநோதி, மூவர் போன்ற நாவல்கள், காதற்பரிசு, கீதாஞ்சலி போன்ற கவிதைத்தொகுப்புகள், மகாமாயா, மானபங்கம் போன்ற சிறுகதைத்தொகுப்புக்கள் முதலியன குறிப்பிடத்தக்கன) போன்றவர்களைச் சான்றாகக் காட்டலாம். வங்காள மொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்ப்பு செய்தவர்களில் த.நா. குமாரஸ்வாமி (அக்கினி, கபாலகுண்டல, ஆரோக்கிய நிகேதனம், கமலினி) அ.கி. ஜயராமன் (கமலாவின் கணவன், கனவு முடியவில்லை), ஆர். ஷண்முகசுந்தரம் (மேகத்திரை, புதுமணப்பெண்) போன்றவர்கள் சிறப்பித்துச்சொல்லத்தக்கவர்களாவர்.

3. பிறமொழிகள்

மேலும் வட இந்திய மொழிகளில் இந்தி, மராத்தி ஆகியவற்றிலிருந்து மிகுதியான நூல்கள் வந்துள்ளன. இவற்றில் துளசிதாசர் (இராமாயணம்), சுதர்சன் (அருவிக்கரை ஆசிரமம், இருநண்பர்கள்), ராகுலசாங்கிருத்தியாயன் (சிந்துமுதல் கங்கைவரை, ராஜஸ்தானத்து அந்தப்புரங்கள்) போன்ற இந்திமொழி ஆசிரியர்களின் படைப்புகளும், காண்டேகர் (இரு துருவங்கள், புயலும் படகும், வெறும் கோவில்), சுமதி தேவி தன்வாடே (புயலும் ஒளியும்) போன்ற மராத்திமொழி ஆசிரியர்களின் படைப்புகளும் குறிப்பிடத்தக்கன. இந்திமொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்ப்புச்செய்தவர்களில் சௌரி (பிரேம்சந்த் சிறுகதைகள், ஏழாவது குதிரை), சரஸ்வதிராம்னாத் (தர்பாரிராகம்) போன்றவர்களும், மராத்தியிலிருந்து தமிழில் மொழிபெயர்ப்பு செய்தவர்களில் ஸ்ரீனிவாசாசார்யா (கிரௌஞ்ச வதம், இருதுருவங்கள்), சரஸ்வதிராம் நாத் (புயலும் ஒளியும்) போன்றவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள்.

3. பிற திராவிட மொழிகளிலிருந்து வந்தவை

கன்னடம், தெலுங்கு, மலையாளம், ஆகிய திராவிட மொழிகளிலிருந்து தமிழில் மொழிபெயர்ப்பாகியுள்ள நூல்களை சிவகாமியின் மொழிபெயர்ப்பு நூற்றொகையின் அடிப்படையில் பின் வருமாறு அட்டவணைப்படுத்தலாம் (இவற்றில் மலையாளத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டவை குறித்த விவரங்கள் சிவகாமியின் நூற்றொகையையும், ஆய்வாளர் ஆய்வுக்காகத் திரட்டிய தகவல்களையும் அடிப்படையாகக்கொண்டன).

அட்டவணை எண். 2:6, திராவிட மொழிகளிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட நூல்கள்

1	2	3	4	5
வரிசை எண்	இலக்கியவகை	கன்னடம்	தெலுங்கு	மலையாளம்
1.	கவிதை	2	25	11
2.	நாவல்	10	11	40
3.	சிறுகதை	3	9	7
4.	நாடகம்	2	4	3
5.	இலக்கியம்பொது	1	2	1
6.	வாழ்க்கைவரலாறு	1	2	2
7.	தன்வரலாறு	–	1	2
8.	சொற்பொழிவு	–	1	–
9.	கட்டுரை	1	–	1
10.	தொகுப்பு	2	–	2
11.	இலக்கணம், மொழியியல்	–	–	3
12.	இந்துசமயம்	1	1	1
13.	இஸ்லாமியசமயம்	–	–	1
14.	கிறிஸ்தவசமயம்	–	1	2
15.	சமயம்பொது	–	2	4
16.	தத்துவம்	–	2	–
17.	அறிவியல்	1	5	2
18.	மருத்துவம்	–	–	1
19.	வரலாறு	–	–	2
20.	இலக்கியவரலாறு	–	–	1

1	2	3	4	5
21.	தொழில்	-	-	1
22.	சோதிடம்	-	-	1
23.	எஞ்சியன	1	5	1
		25	71	89

1. கன்னடம்

கன்னடத்திலிருந்து மொழிபெயர்ப்பானவைகளில் நாவல்கள் மிகுதியாக உள்ளன. இவற்றில் சிவராமகரந்த் (மண்ணும் மனிதரும், பாட்டியின் கனவுகள்), இனாம்தார் (சொப்பன மாளிகை), கிரீஷ் கர்னாட் (பலிபீடம்), ஆனந்தமூர்த்தி (சம்ஸ்காரா) போன்றவர்களின் படைப்புகள் குறிப்பிடத்தக்கவை. கன்னடத்திலிருந்து தமிழில் நூல்களை மொழிபெயர்ப்பு செய்தவர்களில் முக்கியமானவர்களாக சித்தலிங்கய்ய (வசவண்ணர் வாக்கமுது, பாட்டியின் கனவுகள்), பாவண்ணன் (பலிபீடம்), சதாசிவம் (சம்ஸ்காரா), சீதாதேவி (பூனைக்கண், சாந்தலை) போன்றவர்களைக் குறிப்பிடலாம்.

2. தெலுங்கு

தெலுங்கிலிருந்து தமிழில் மொழிபெயர்ப்பானவைகளில் கவிதை நூல்கள் மிகுதியாகக்காணப்படுகின்றன. இவற்றில் வேமன்னர் (வேமன்னபத்தியம், வேமன்ன நீதிவெண்பா), சேஷய்யர் (நரசிம்ஹசதகம்) போன்றவர்களுடைய படைப்புகளைக் குறிப்பிடலாம். தெலுங்கிலிருந்து தமிழில் மொழிபெயர்ப்பு செய்தவர்களில் கன்னைய நாயுடு (நரசிம்ஹசதகம்), இளம்பாரதி (அனல்காற்று, அடுத்தவீடு) போன்றவர்களைக்குறிப்பிடலாம்.

3. மலையாளம்

மலையாளத்திலிருந்து 1992 வரை ஏறத்தாழ 89 நூல்கள் தமிழ்வடிவம் பெற்றுள்ளன. இவை கவிதை, புனைகதை, புனைவற்ற உரைநடை நூல்கள் என வெவ்வேறு இலக்கியங்களைச் சார்ந்தன. கவிதைகளில் வள்ளத்தோள் (வள்ளத்தோள் கவிதைகள்), குமாரனாசான் (குமாரனாசான் மூன்றுகவிதைகள்), உள்ளூர் பரமேசுவர ஐயர் (செவியினுக்கனி), சச்சிதானந்தன் (இரத்தசாட்சிகள்), குஞ்ஞுண்ணி (குஞ்ஞுண்ணிக்கவிதைகள்) போன்றவர்களும், புனைகதை ஆசிரியர்களில் சந்துமேனோன் (இந்துலேகா), கேசவதேவ் (சாக்கடையிலிருந்து), தகழிசிவசங்கரபிள்ளை (இரண்டுபடி, செம்மீன்), வைக்கம் முகமதுபஷீர் (எங்கள் தாத்தாவுக்கு ஒரு யானை இருந்தது, மதில்கள்), எஸ்.கெ. பொற்றக்காடு (சங்கமம்), இடசேரி கோவிந்தன்நாயர் (கூட்டுப்பண்ணை) போன்றவர்களும், புனைவற்ற உரைநடை நூலாசிரியர்களில் ஏ.ஆர். இராஜராஜவர்மா (கேரளபாணினீயம்), இளங்குளம் குஞ்ஞன்பிள்ளை (பண்டைய கேரளம்), பி.கெ. பரமேசுவரன் நாயர் (மலையாள இலக்கிய வரலாறு), கே.பி. கேசவமேனோன் (கடந்த காலம்) போன்றவர் களும் குறிப்பிடத்தக்கவர்கள். மலையாளம்-தமிழ் மொழிபெயர்ப்பாளர்களில் துறைவன் (வள்ளத்தோள் கவிதைகள்), இராமகோபிநாதன் (குமாரனாசான் மூன்று கவிதைகள், மலையாள இலக்கிய வரலாறு), டி. ராமலிங்கம்பிள்ளை (இரண்டுபடி), சுந்தரராமசாமி (செம்மீன்), மா. இளையபெருமாள் (லீலாதிலகம், கேரளபாணினீயம்) சி. நாச்சிமுத்து (மலையாள மொழி இலக்கணம் - சொற்றொடர் காண்டம்), நீலபத்மநாபன் (தற்கால மலையாள இலக்கியம்), சி.ஏ. பாலன் (நூறு பூக்கள் மலரும், குஞ்ஞாலி மரைக்காார்), மணவை முஸ்தபா (காலம்), ஜெயமோகன் (தற்கால மலையாளக்கவிதைகள்), இளங்கம்பன் (வீழ்ந்தமலர்), தமிழவன் (மலையாள நாட்டுப்புறப்பாடல்கள்) போன்றவர்களைக் குறிப்பிடலாம் (மேலும் விளக்கங்களுக்கு ஆய்வேட்டில் 4,5,6 ஆகிய இயல்களைப்பார்க்கவும்).

2. தமிழிலிருந்து பிறமொழிகளுக்குச் சென்றவை

தமிழ்நூல்கள் பல பிறமொழிகளில் மொழிபெயர்ப்பாகியுள்ளன. அவற்றில் 29 மொழிகளிலாக மொத்தம் 730 நூல்கள் குறித்த விவரங்களை எஸ்.சிவகாமி (1983) மொழிபெயர்ப்பு நூற்றொகையில் தந்துள்ளார். இவற்றை 1. வெளி நாட்டு மொழிகளுக்குச் சென்றவை, 2. வட இந்திய மொழிகளுக்குச்சென்றவை, 3. பிறதிராவிட மொழிகளுக்குச் சென்றவை என வகைப்படுத்தலாம்.

1. வெளிநாட்டு மொழிகளுக்குச்சென்றவை

தமிழிலிருந்து வெளிநாட்டு மொழிகளில் மொழிபெயர்ப்பாகியுள்ள நூல்களை சிவகாமியின் மொழிபெயர்ப்பு நூற்றொகையின் அடிப்படையில் பின்வருமாறு அட்டவணைப்படுத்தலாம்.

அட்டவணை எண்.2:7, வெளிநாட்டு மொழிகளுக்குச் சென்ற தமிழ்நூல்களின் எண்ணிக்கை

வரிசை எண்	மொழி	மொழிபெயர்ப்புகளின் எண்ணிக்கை
1.	ஆங்கிலம்	310
2.	சிங்களம்	10
3.	சிந்தி	6
4.	சீனம்	1
55	செக்கஸ்சுலோவேகியன்	5
6.	ஜெர்மன்	13
7.	டச்சு	1
8.	பர்மி	1
9.	பிஜி	1
10.	பிரெஞ்சு	35
11.	பின்லிஸ்	1
12.	போலிஷ்	1

1	2	3
13.	மலாய்	3
14.	ரஷ்யன்	7
15.	லத்தீன்	4
16.	ஸ்வீடிஷ்	1

1. ஆங்கிலம்

இவ்வட்டவணையின் அடிப்படையில் தமிழ்நூல்கள் பிறமொழிகள் அனைத்தையும் விட ஆங்கிலத்தில்தான் மிகுதியாக மொழிபெயர்ப்பாகியுள்ளதை அறிந்து கொள்ள முடியும். இம்மொழியில் திருக்குறளுக்கு மட்டும் ஏறத்தாழ 49 மொழி பெயர்ப்புகள் காணப்படுகின்றன. மேலும் சங்க இலக்கியம், பக்தி இலக்கியம் போன்றவற்றிற்கும் ஆங்கில மொழிபெயர்ப்புகள் பல உள்ளன. தமிழ்நூல்களை ஆங்கிலத்திற்கு மொழிபெயர்த்தவர்களில் ஜி.யு. போப் (திருக்குறள்), ஜே.வி. செல்லையா (பத்துப்பாட்டு), ஏ.கே. இராமானுஜம் (இன்டீரியர் லான்ட் ஸ்கேப், பொயம்ஸ் ஆப் லவ் அன்ட் வார்) போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்களாக உள்ளனர்.

2. பிற ஐரோப்பியமொழிகள்

தொடர்ந்து பிரெஞ்சு, ஜெர்மனி ஆகிய மொழிகளில் தமிழ்நூல்கள் மிகுதியாக மொழிபெயர்ப்பாகியுள்ளன. அவற்றில்ஜெர்மன் மொழியில் சீகன்பால்க் ஐயரின் மொழிபெயர்ப்பில் நீதிவெண்பா, கொன்றைவேந்தன், உலகநீதி ஆகிய நூல்கள் சென்றுள்ளன. மேலும் இலத்தீன் மொழியில் வீரமா முனிவரின்

மொழிபெயர்ப்பில் அவர் எழுதிய செந்தமிழ் இலக்கணம், கொடுந்தமிழ் இலக்கணம் ஆகிய நூல்களோடு திருக்குறளும் (இந்நூல்களே மேனாட்டு மொழியில் மாற்றப்பட்ட தமிழ் நூல்களில் முதலாவதாகக் கருதத்தக்கன வாகும்), செக்கஸ்லோவேகிய மொழியில் கமல்சுலபிலின் மொழிபெயர்ப்பில் திருக்குறள், சிலப்பதிகாரம், போன்ற நூல்களும் குறிப்பிடத்தக்க மொழி பெயர்ப்புகளாக உள்ளன.

2. வடஇந்திய மொழிகளுக்குச் சென்றவை

தமிழிலிருந்து வட இந்திய மொழிகளில் மொழிபெயர்ப்பாகியுள்ள நூல்களை சிவகாமியின் மொழிபெயர்ப்பு நூற்றொகையின் அடிப்படையில் பின்வருமாறு அட்டவணைப்படுத்தலாம்.

அட்டவணை எண்.2:8, வட இந்திய மொழிகளுக்குச் சென்ற தமிழ் நூல்கள்

1	2	3
வரிசை எண்	மொழி	மொழிபெயர்ப்புகளின் எண்ணிக்கை
1	அஸ்ஸாமி	5
2	இந்தி	54
3	உருது	5
4	ஒரியா	2
5	குஜராத்தி	13
6	சமஸ்கிருதம்	40
7	சௌராஷ்டிரம்	2
8	பஞ்சாபி	1
9	மராத்தி	7
10	வங்காளி	10

1. இந்தி

இவற்றில் இந்திமொழியில்தான் மிகுதியான நூல்கள் மொழிபெயர்ப்பாகியுள்ளன. திருக்குறள் இந்தியில் ஐந்து மொழிபெயர்ப்புகளைப் பெற்றுளது. மேலும் சிலப்பதிகாரம், கம்பராமாயணம், திருப்பாவை போன்ற செய்யுள் நூல்களும், கமலம்பாள் சரித்திரம் (ராஜம் ஐயர்), அலையோசை (கல்கி), சித்திரப்பாவை (அகிலன்) போன்ற நாவல்களும் குறிப்பிடத்தக்க மொழிபெயர்ப்புகளாகத் திகழ்கின்றன. தமிழ் நூல்களை இந்தியில் அறிமுகப்படுத்தியவர்களில் எம்.ஜி. வெங்கடேசன் (சிலப்பதிகாரம்), சோமசுந்தரம் (கள்வனின் காதலி), கே.எம். சிவசர்மா (கமலம்பாள் சரித்திரம்) போன்றவர்கள் சிறப்பித்துச் சொல்லத்தக்கவர்களாக உள்ளனர்.

2. சமஸ்கிருதம்

இந்திக்கு அடுத்தபடியாக சமஸ்கிருத மொழியில் மிகுதியான தமிழ் நூல்கள் மொழிபெயர்ப்பாகியுள்ளன. அவற்றில் பரிபாடல், பத்துப்பாட்டு, திருக்குறள், நாலடியார், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, சிலப்பதிகாரம், கம்பராமாயணம், திருவாய்மொழி, நாலாயிரத்திவ்ய பிரபந்தம் போன்றன குறிப்பிடத்தக்கன. தமிழ்நூல்களை சமஸ்கிருத மொழியில் அறிமுகப்படுத்தியவர்களில் சங்கரசுப்பிரமணிய சாஸ்திரி (திருக்குறள்), ஸ்ரீராமதேசிகன் (பத்துப்பாட்டு, திருக்குறள், சிலப்பதிகாரம், கம்பராமாயணம்) போன்றவர்கள் சிறப்பித்துச் சொல்லத்தக்கவர்கள் ஆவர்.

3. பிற திராவிட மொழிகளுக்குச் சென்றவை

தமிழிலிருந்து கன்னடம், தெலுங்கு, மலையாளம், ஆகிய திராவிட மொழிகளில் மொழிபெயர்ப்பாகியுள்ள நூல்களை சிவகாமியின் மொழிபெயர்ப்பு நூற்றொகையின் அடிப்படையில் பின்வருமாறு அட்டவணைப்படுத்தலாம்.

அட்டவணை எண்.2:9, திராவிட மொழிகளுக்குச் சென்ற தமிழ்நூல்கள்

வரிசை எண்	மொழி	மொழிபெயர்ப்புகளின் எண்ணிக்கை
1	கன்னடம்	30
2	தெலுங்கு	58
3	மலையாளம்	103

1. கன்னடம்

தமிழிலிருந்து கன்னடத்தில் மொழிபெயர்க்கப்பட்டவற்றில் திருக்குறள், நான்மணிக்கடிகை, கம்பராமாயணம், பெரியபுராணம், திருப்பல்லாண்டு, திருவாய்மொழி ஆகிய செய்யுள் நூல்களும், பார்த்திபன் கனவு (கல்கி), பெண் (அகிலன்) போன்ற நாவல்களும் குறிப்பிடத்தக்கன. தமிழ் நூல்களைக்கன்னடத்தில் அறிமுகப்படுத்திய மொழிபெயர்ப்பாளர்களாக ஏ.என். ஸ்ரீனிவாச ஐயங்கார் (திருப்பாவை, திருவாய்மொழி), ஜி.பி. ராஜரத்னம் (திருப்பல்லாண்டு), குண்டப்பா (திருக்குறள்), நரசிம்மஐயங்கார் (நெஞ்சின் அலைகள்) போன்றவர்களைக் குறிப்பிடலாம்.

2. தெலுங்கு

தெலுங்குமொழி தமிழிலிருந்துபெற்ற நூல்களில் குறிஞ்சிப்பாட்டு, திருக்குறள், திருவாசகம், திருவருட்பா, திருப்பாவை, திருவாய்மொழி, சிறிய திருமடல், பெரியதிருமடல், கலிங்கத்துப்பரணி போன்றன குறிப்பிடத் தக்கவை ஆகும். மேலும் தமிழ் நூல்களைத் தெலுங்கில் அறிமுகப்படுத்திய மொழிபெயர்ப்பாளர்களாக மு.கு. ஜகந்நாதராஜா (குறிஞ்சிப்பாட்டு), இராமானுஜாசாரி (திருவாய்மொழி), மதபூஉஷி கோபாலாசாரியலு (பெருமாள்திருமொழி, திருப்பள்ளி யெழுச்சி), பலகும்மி பத்மராஜு (உலகம் குழுசியது) போன்றவர்களைச் சுட்டிக்காட்டலாம்.

3. மலையாளம்

மலையாளத்தில் தமிழிலிருந்து மொழிபெயர்ப்பாகியுள்ளவற்றில் பதிற் றுப்பத்து, திருக்குறள், சிலப்பதிகாரம், நாலடியார், ஆத்திசூடி, கம்பரா மாயணம், திருமந்திரம், ஒழிவில் ஒடுக்கம் போன்ற செய்யுள் நூல்களும், பார்த்திபன் கனவு (கல்கி), பெண் (அகிலன்), உன்னைப்போல் ஒருவன் (ஜெயகாந்தன்) போன்ற நாவல்களும் குறிப்பிடத்தக்கன. தொல்காப்பியம், நன்னூல், வீரசோழியம் ஆகிய இலக்கண நூல்களை மா. இளையபெருமாள் மலையாளத்தில் அறிமுகப்படுத்தியுள்ளார். திருக்குறளை 1595இல் இராமவர்ம கவிராயர் மலையாளத்தில் மொழிபெயர்த்து அறிமுகப்படுத்தியுள்ளார். மேலும் இந்நூலுக்கு மலையாளத்தில் பதினொன்றுக்கும் மேலான மொழிபெயர்ப்புகள் காணப்படுகின்றன. தமிழ் நூல்களை மலையாளத்தில் மொழிபெயர்த்து அறி முகப்படுத்தியவர்களாக ஆர். நாராயணப்பணிக்கர் (பதிற்றுப்பத்து), கெ. பரமேசுவரன்பிள்ளை (திருக்குறள்), எஸ்.கே. நாயர் (கம்பராமாயணம்) சி.ஏ. பாலன் (மோகமுள், அகல்விளக்கு, உன்னைப்போல் ஒருவன், பாரீசுக்குப்போ,

சினேகிதி, அம்மாவந்தாள்) போன்றவர்களைக் குறிப்பிடலாம். மலையாளத்திலிருந்து தமிழுக்கு, தமிழிலிருந்த மலையாளத்திற்கு என்ற இருவேறு நிலைகளிலான மொழிபெயர்ப்புப்பணியில் மலையாளத்திலிருந்து தமிழுக்கான பணி சற்று பின்தங்கிய நிலையில் இருப்பதை மொழிபெயர்ப்புகளின் எண்ணிக்கை வேறுபாடுகளை அடிப்படையாகக்கொண்டு அறிந்துகொள்ளலாம். இதைச் சரிசெய்வதற்கு தமிழர்கள் மொழிபெயர்ப்புப்பணியில் ஆர்வம் காட்டுவது அவசியமானதாக உள்ளது.

2. தமிழ்மொழிபெயர்ப்பின் அணுகுமுறைகள்

தமிழ் மொழிபெயர்ப்பின் அணுகுமுறையில் காலத்திற்கேற்ப வேறுபாடுகள் காணப்படுகின்றன. இவற்றை 1 மரபு நோக்கிலான அணுகுமுறை, 2. உரையாசிரியர்களின் அணுகுமுறைகள், 3. தற்கால அணுகுமுறை என வகைப்படுத்தி விளக்கலாம்.

1. மரபு நோக்கிலான அணுகுமுறை

தமிழில் மொழிபெயர்ப்புப்பணி பண்டைக்காலத்திலிருந்தே நடைபெற்று வந்திருக்கிறது என்பதற்கு தொல்காப்பியத்திலுள்ள 'மொழிபெயர்த்து அதர்ப்பட யாத்தல் (தொல். மரபு.99) என்ற தொடர் சான்று பகருகிறது. ஆனால் சங்க இலக்கியம், நீதி இலக்கியம் போன்றவற்றில் பிறமொழிச்சொற்கள் மற்றும் கருத்துக்களின் தாக்கம் ஆங்காங்கே காணப்படுகிறதேயன்றி மொழி பெயர்ப்பாக எந்த நூலும் அமையவில்லை (இதில் அசாரக்கோவையை மொழிபெயர்ப்புக்குச் சான்றாக இலக்கணவிளக்கப்பாட்டியலின் உரை குறிப்பிடுகிறது). எனவே பண்டைக்கால மொழிபெயர்ப்பின் தன்மைபற்றித் தெரிந்துகொள்ள

முடியவில்லை. சங்கம் மருவிய காலத்தைத் தொடர்ந்து பிராகிருதம், பாலி, சமஸ்கிருதம் போன்ற மொழிகளிலுள்ள நூல்கள் பல தமிழ்வடிவம் பெற்றுள்ளன (இது குறித்த விளக்கத்திற்கு ஆய்வேட்டில் 2:1 என்ற பகுதியைப்பார்க்கவும்). இவை வழிநூல், சார்பு நூல், எதிர்நூல் என்ற கோட்பாடுகளின் அடிப்படையில் தொகுத்தல் (சுருக்குதல்), விரித்தல் (விளக்கமாக அமைத்தல்), தொகை விரித்தல் (சுருக்கியும் விரித்தும் அமைத்தல்), மொழிபெயர்த்தல் (ஒரு மொழியிலமைந்த படைப்புகளை மற்றொரு மொழியில் மாற்றுதல்) போன்ற முறைகளில் அமைந்தவை ஆகும் (மேலும் விளக்கங்களுக்கு ஆய்வேட்டில் 1:3:4 என்ற பகுதியைப் பார்க்கவும்).

2) உரையாசிரியர்கள் மேற்கொண்ட அணுகுமுறைகள்

உரையாசிரியர்கள் ஒரு மொழிக்குள்ளே செய்யப்படும் மொழிபெயர்ப்பு (Intralingual Translation) என்ற அடிப்படையில் பழந்தமிழ் நூல்களுக்கு உரை எழுதியுள்ளனர் (இவர்களின் உரையமைப்பு குறித்த விளக்கங்களுக்கு மு.வை. அரவிந்தனின் உரையாசிரியர்கள், இரா. மோகன், நெல்லை ந. சொக்கலிங்கம் ஆகியவர்களின் 'உரைமரபுகள்' போன்ற நூல்களைப் பார்க்கவும்). பொதுவாக உரைகள் பாடம், கருத்து, சொல்வகை, சொற்பொருள், தொகுத்துரை, உதாரணம், வினா, விடை, விசேடம் (சூத்திரத்தின் பொருளன்றி ஆண்டைக்கு வேண்டுவன தந்துரைத்தல்), விரிவு (வேற்றுமை முதலியன தொக்கு நின்றவற்றை விவரிக்க வேண்டின் விரித்துரைத்தல்), அதிகாரம் (எடுத்துக் கொண்ட அதிகாரம் இதுவாதலின் இச்சூத்திரத்ததிகரித்த பொருள் இதுவென அவ்வதிகாரத்தோடு பொருந்த உரைக்கவேண்டுழி உரைத்தல்), துணிவு (ஐயுறக்கிடந்துழி இதற்கு இதுவே பொருளென உரைத்தல்), பயன், ஆசிரியவசனம் போன்ற தன்மைகளைப் பெற்றதாகக் (நன்.நூற்.21) காணப்படும். மேலும் உரைகளின் தன்மையைப் பொறுத்து அவற்றைக் காண்டிகை (நன். நூற். 22), விருத்தி (நன். நூற்.23) எனவும் வகைப்படுத்தலாம். இருப்பினும் உரையாசிரியர்கள்

அவர்களுக்கே உரித்தான சில அணுகுமுறைகளின் அடிப்படையில் உரைகளை அமைத்துள்ளனர். அவர்களில் உ.வே. சாமிநாதையரின் உரையணுகு முறையாக 1. பழைய உரையைத்தழுவி செய்யுள் தொடரைப் பொருட் பொருத்தமுற ஒழுங்குபடுத்தல், 2. பொழிப்புரையைப் பதவுரையாக மாற்றுதல், 3. திரிசொற்கள் இருந்த இடத்தில் இயற்சொற்களைப் பெய்தல், 4. குறிப்புரை அமைத்து முக்கிய இடங்களில் பொருள் விளக்கத்துடன் ஒப்புமைப்பகுதிகள் மூலம் கருத்தைத் தெளிவு படுத்தல் (பார்க்க, கி. நாச்சிமுத்து, 1986:36) போன்றவற்றைக் குறிப்பிடலாம். 'ஒரு மொழிக்குள்ளே செய்யப்படும் மொழிபெயர்ப்பு' என்ற இவ்வணுகுமுறையின் அடிப்படையில் இராமாயணம், மகாபாரதம், பகவத்கீதை போன்ற வடமொழி நூல்களிலுள்ள சுலோகங்களை வடமொழி எழுத்துக்களிலான பாடமாகக் கொண்டு அவற்றிற்கு தமிழில் ஒரு கால மொழியிலிருந்து மற்றொரு கால மொழிக்குச் செய்யப்படும் மொழி பெயர்ப்பாக (Interlingual Translation)எழுதியுள்ள விளக்கவுரைகளை உரையாசிரியர்களின் உரையணுகுமுறையின் படிநிலை வளர்ச்சியாகக் கருதவும் இடமுள்ளது (இவ்வகை மொழிபெயர்ப்பு தமிழில் மட்டுமல்லாமல் பிற மொழிகள் பலவற்றிலும் பரவலாகக் காணப்படுகிறது).

3) தற்கால அணுகுமுறை

மேனாட்டவர்களின் வருகையைத் தொடர்ந்து மொழிபெயர்ப்பு முறையிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. அதாவது மேனாட்டவர்கள் மூலத்தின் மொழியை மட்டும் மாற்றி மொழிபெயர்ப்பை அமைக்கும் முறையை அறிமுகப்படுத்தினர். ஆனால் இவ்வணுகுமுறை தமிழுக்குப் புதிதாக வந்த ஒன்றல்ல. இருப்பினும் நியாயம், தர்க்கம் போன்ற படைப்பிலக்கியம் அல்லாத பிறதுறை நூல்களை மட்டுமே மொழிபெயர்க்கப் பயன்படுத்தப்பட்ட இவ்வணுகுமுறை படைப்பிலக்கியங்களையும் மொழிபெயர்க்கும் நோக்கில் விரிவுபடுத்தப்பட்டது. எனவே

மூலத்தின் மொழியை மட்டும் மாற்றி மொழிபெயர்ப்பை அமைக்கும் இவ்வணுகு முறையைப் பயன்படுத்தி தற்காலத்தில் மிகுதியான நூல்கள் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன.

3. தமிழ் மொழிபெயர்ப்பு குறித்த நூல்கள், கட்டுரைகள், ஆய்வுகள்

தமிழில் மொழிபெயர்ப்புப் பணியோடு அது பற்றிய விவரங்களைத் தொகுத்தல், மொழிபெயர்ப்புக் கொள்கைகளை உருவாக்குதல், மொழி பெயர்ப்பு குறித்து ஆய்வு செய்தல் போன்றவைகளும் நடந்துள்ளன. இவற்றை 1. நூற்றொகைகள், 2. கொள்கைபற்றியப் படைப்புகள், 3. ஆய்வுகள் என வகைப்படுத்தி விளக்கலாம்.

1. நூற்றொகைகள்

தமிழில் மொழிபெயர்ப்புகள் குறித்த செய்திகளைத் தருவனவாக வை. சச்சிதானந்தன், எம். சண்முகம்பிள்ளை (Shakespeare in Tamil Translation: A Critical,Bibliography), எஸ். சிவகாமி (மொழிபெயர்ப்புநூற்றொகை) ஆகியவர்களின் தொகுப்புகள் உள்ளன. மேலும் கேரள சாகித்திய அக்காடமியின் வெளியீட்டில் வந்துள்ள Bibliography of Malayalam Works Translated into other Languages என்ற தொகுப்பும் மலையாளத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டனவாக 34 நூல்களைக் குறிப்பிடுகின்றது. இவற்றில் ச. சிவகாமியின் 'மொழிபெயர்ப்பு நூற்றொகை' சிறப்பித்துச் சொல்லப்படவேண்டிய ஒன்றாகும்.

1. ச. சிவகாமி (1983)

சிவகாமியின் மொழிபெயர்ப்புநூற்றொகை பிறமொழிகளிலிருந்து தமிழுக்கு

வந்தவை, தமிழிலிருந்து பிறமொழிகளுக்குச் சென்றவை என்ற அடிப்படையில் மொழிபெயர்ப்புகள் குறித்த விவரங்களைத் தந்துள்ளது. இந்நூலில் 'மொழிபெயர்ப்பு ஒரு பார்வை', 'தமிழில் மொழிபெயர்ப்பு' ஆகிய கட்டுரைகளையும் தொகுப்பாசிரியர் சேர்த்துள்ளார். இவற்றில் 'மொழிபெயர்ப்பு ஒரு பார்வை' என்ற கட்டுரை மேனாட்டார் கருத்துக்களின் அடிப்படையில் மொழிபெயர்ப்பைப் பொதுப்பட அணுகுவதாக உள்ளது. 'தமிழில் மொழிபெயர்ப்பு' என்ற கட்டுரை பிறமொழிகளிலிருந்து தமிழில் வந்தவை, தமிழிலிருந்து பிறமொழிகளுக்குச் சென்றவை என இருவேறு நிலைகளில் மொழிபெயர்ப்பு நூல்களை மதிப்பீடு செய்துள்ளது.

2. கொள்கைபற்றிய படைப்புகள்

மொழிபெயர்ப்புக் கொள்கை பற்றியப் படைப்புகளை 1. பிற மொழிகளிலிருந்து தமிழில் மொழிபெயர்ப்பதைப் பற்றியன, 2. தமிழிலிருந்து பிற மொழிகளில் மொழிபெயர்ப்பதைப் பற்றியன என வகைப்படுத்தி விளக்கலாம்.

1. பிறமொழிகளிலிருந்து தமிழில் மொழிபெயர்ப்பதைப் பற்றியன

மொழிபெயர்ப்புபற்றிய கொள்கைகளையும், பிறமொழிகளிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கும்போது ஏற்படுகின்ற சிக்கல்களையும் விளக்கும் நோக்கிலான நூல்களையும் கட்டுரைகளையும் 1. பொதுநோக்கில் அமைவன, 2. துறைசார்பு உடையன, 3. கலைச்சொல்லாக்கம் பற்றியன, 4. கணினி மொழிபெயர்ப்பை விளக்குவன என வகைப்படுத்தி விளக்கலாம்.

1. பொதுநோக்கில் அமைவன

பொதுநோக்கில் மொழிபெயர்ப்பை விளக்கும் படைப்புகளை 1. நூல்கள், 2. கட்டுரைகள் என வகைப்படுத்தலாம். இவை மிகுதியும் சமயம் மற்றும் மொழி போன்றவற்றை அடிப்படையாகக்கொண்டவை ஆகும்.

1. நூல்கள்

மொழிபெயர்ப்பை பொதுநோக்கில் விளக்குவனவாக இரேனியஸ் (An Essay on the Principles of Translating the Holy Scriptures with critical remarks on various passages, Particularly in Reference to the Tamil Language), ஜே.டி. (வேதபிரசித்த விவர்த்தாந்தம்), ஆல்பர்ட் மதவேல் (Translation into Tamil of Extra Biblical Names), தென்புலோலியூர் மு. கணபதிப்பிள்ளை (மொழிபெயர்ப்பும் சொல்லாக்கமும்), மு. கோவிந்தராசன் (மொழித்திறன்களும் சில சிக்கல்களும்), சு. சண்முக வேலாயுதம் (மொழிபெயர்ப்பியல்), சாயபு மரைக்காயர், நா. இளங்கோ (மொழிப்பயிற்சியும் மொழிபெயர்ப்பும்), மு. வளர்மதி (மொழிபெயர்ப்புக்கலை), சி. சிவசண்முகம், வே. தயாளன் (மொழிபெயர்ப்பியல்), சரோஜினி பாக்கியமுத்து (விவிலியமும் தமிழும்), வீ. சந்திரன் (மொழிபெயர்ப்பு மரபுகள்), சேதுமணிமணியன் (மொழிபெயர்ப்பியல் கோட்பாடுகளும் உத்திகளும்), சா. அமிர்தம் (திருமறை மொழியாக்கங்கள் தேவையா) போன்றவர்களின் நூல்களைக் குறிப்பிடலாம். இவற்றில் இரேனியஸ் (1827), சு. சண்முக வேலாயுதம் (1985), மு. வளர்மதி (1987), சி. சிவசண்முகம், வே. தயாளன் (1989), சேதுமணிமணியன் (1990), சரோஜினி பாக்கியமுத்து (1990) போன்றவர்களின் நூல்கள் சிறப்பித்துச் சொல்லத்தக்கவை ஆகும்.

1. இரேனியஸ் (1827)

இரேனியஸ் பாதிரியாரின் 'An Essay on the Principles of Translating the Holy Scriptures with Critical remarks on various Passages particularly in Reference to the Tamil Language' என்ற நூல் தமிழில் மொழிபெயர்ப்பதைப்பற்றி விளக்கும் முதல் நூலாகக் காணப் படுகிறது. இது 59 பக்கங்களைக்கொண்டது. இதில் விவிலியத்தைத் தமிழில் மொழிபெயர்ப்பது பற்றிய நான்கு கோட்பாடுகள் காணப்படுகின்றன. அவை,

1. மூலமொழியிலிருந்து இலக்குமொழிக்கு மொழிபெயர்ப்பு நிகழவேண்டும்

2. மொழிபெயர்ப்பைச் சொல்வழிப்பட்டதாய் (Literal) அமைக்கக்கூடாது

3. கற்றவர், கல்லாதவர் ஆகியவர்களின் மொழிகளுக்கிடையே மிகுந்த வேறுபாடுகள் காணப்பட்டால் மொழிபெயர்ப்பை அவற்றில் ஒரு சாராரின் நடையைப் பின்பற்றுவதாய் அமைக்காமல் இருசாராருக்கும் இடைப்பட்ட நிலையில் செய்தல்வேண்டும்

4. பழைய விவிலியங்களில் தெளிவில்லாமலும் தவறாகவும் இருக்கும் பகுதிகளைத் திருத்துவதற்குப் போதிய ஆதாரங்கள் இருப்பின் புதிய மொழி பெயர்ப்பில் தெளிவில்லாதவற்றைத் தெளிவாகவும் தவறானவற்றைத் திருத்தியும் வெளியிடவேண்டும் என்பன (சரோஜினி பாக்கியமுத்து, 1990: 107-137), இவற்றின் முதல் மூன்று கொள்கைகளும் மொழிபெயர்ப்பைப் பொதுப்பட அணுகுவ தாயும், நான்காவது கொள்கை விவிலிய மொழிபெயர்ப்பை மட்டும் மையமிட்ட தாகவும் உள்ளன.

2. சு. சன்முகவேலாயுதம் (1985)

சன்முக வேலாயுதத்தின் 'மொழிபெயர்ப்பியல்' என்ற நூல் மொழி பெயர்ப்பைப்பற்றிய அறிமுகக் கல்விக்கு உதவுவதாக உள்ளது. இது மிகுதியும்

ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கும்போது ஏற்படுகின்ற சிக்கல்களைப் பற்றி விளக்குகின்றது.

3. மு. வளர்மதி (1987)

மு. வளர்மதியின் 'மொழிபெயர்ப்புக்கலை' என்ற நூல் மொழிபெயர்ப்புப்பிரச்சனைகளைப் பொதுப்படையாக விளக்குகிறது. இதில் மொழிபெயர்ப்பின் இன்றியமையாமை, மொழிபெயர்ப்பின் தன்மைகள், மொழிபெயர்ப்பாளர் இயல்புகள், தமிழ் மொழிபெயர்ப்பின் தொடக்கால நிலை, தற்காலநிலை, மொழிபெயர்ப்பு உத்திகள், ஒலிபெயர்ப்பு, அறிவியல் கலைச்சொல்லாக்கம், பத்திரிகை மொழிபெயர்ப்பு, வானொலி மொழிபெயர்ப்பு, கவிதை மொழிபெயர்ப்பு எனப் பல்வேறு நிலைகளிலான விளக்கங்கள் காணப்படுகின்றன. ஆங்கிலத்திலிருந்து தமிழிலும், தமிழிலிருந்து ஆங்கிலத்திலும் மொழிபெயர்ப்பு செய்யும்போது ஏற்படுகின்ற சிக்கல்களை விளக்குவதாக இந்நூல் திகழ்கிறது. இதுவும் மொழி பெயர்ப்பு பற்றிய ஆரம்ப கல்விக்கு உதவியாக அமையும்.

4. சி. சிவசண்முகம், வே.தயாளன்(1989)

சி. சிவசண்முகம், வே. தயாளன் ஆகியவர்களின் இணைந்த முயற்சியாக 'மொழிபெயர்ப்பியல்' என்ற நூல் அமைந்துள்ளது. இது மொழியியல் நோக்கில் மொழிபெயர்ப்பை நைடா, சார்லஸ் டாபர் (The Theory and Practice of Translation), கேட்ஃபோர்டு (A Linguistic Theory of Translation), சூசன் பெசனட் (Translation Studies) போன்றவர்களின் நூல்களை அடியொற்றி விளக்குகிறது. தமிழில் மொழிபெயர்ப்பு பற்றியக் கல்விக்கு இந்நூல் மிகவும் பயன்படுவதாக உள்ளது.

5. சேதுமணிமணியன் (1990)

மொழிபெயர்ப்பை மொழியியல் நோக்கில் விளக்குவதாகசேதுமணி மணியனின் 'மொழிபெயர்ப்பியல் கோட்பாடுகளும் உத்திகளும்' என்ற நூல் அமைந்துள்ளது. இது நைடா மற்றும் சார்லஸ்டாபர் ஆகியவர்களின் 'மொழிபெயர்ப்புக்கொள்கையும் பயிற்சியும்' என்ற நூலைத் தழுவி ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்ப்பதிலுள்ள சிக்கல்களை விளக்குகிறது. மொழிபெயர்ப்பைக் கருத்துவழிப்பட்டதாக அமைத்தலை இந்நூல் வலியுறுத்துகிறது.

6. சரோஜினி பாக்கியமுத்து (1990)

சரோஜினி பாக்கியமுத்துவின் 'விவிலியமும் தமிழும்' என்ற நூல் விவிலியம் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட வரலாற்றை விளக்கமாகத்தருகிறது. இரேனியஸ் பாதிரியாரின் (1827) மொழிபெயர்ப்புக் கொள்கைப்பற்றிய நூல்குறித்த விளக்கங்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. மேலும் ஜே.டி. (முழுப்பெயர் தெரியவில்லை) என்பவரின் வேத பிரசித்த விவர்த்தாந்தம் (1888) என்ற நூல் பற்றிய குறிப்பும் இந்நூலில் (ப.244) காணப்படுகிறது.

2. கட்டுரைகள்

மொழிபெயர்ப்பைப் பொதுநோக்கில் விளக்குவனவாக க.நா. சுப்பிரமணியம் (சுதந்திரத்திற்குப் பிறகு மொழிபெயர்ப்புகள்), கு. செல்வச்சந்திரன் (மொழிபெயர்ப்பும் தனித்தமிழ்ச் சொற்களும்), எஸ். மகராஜன் (மொழிபெயர்ப்பது எப்படி), ருத்ர. துளசிதாஸ் (மொழிபெயர்ப்பு வெளியீடுகள்), ரா. சௌரிராஜன் (மொழிபெயர்ப்புக் கட்டுரை எழுவது எப்படி?), டி. பாக்கியமுத்து(Early Prose Translation in Tamil), ஔவை நடராஜன் (மொழியும் பெயர்ப்பும்), கா. சிவத்தம்பி (மொழி

பெயர்ப்பும் உலகப் பண்பாடும்), ச.வே. சுப்பிரமணியன் (மொழிபெயர்ப்பு இலக்கியம்), பெ. நா. அப்புசாமி (பாரதியின் மொழியாக்கத்திறன்), சு. சண்முகவேலாயுதம் (மொழிபெயர்ப்பு இலக்கியம்), வை. சச்சிதானந்தன் (மொழிபெயர்ப்பு), மணவை முஸ்தபா (மொழிபெயர்ப்பு நுட்பங்கள்), கு. பரமசிவம் (மொழிபெயர்ப்பின் பங்கும் பாங்கும்), பழனி. அரங்கசாமி (தமிழில் ஷேக்ஸ்பியர் மொழிபெயர்ப்புகள்), பா. ஆனந்தகுமார் (குஞ்ஞுண்ணிக் கவிதைகள் மொழிபெயர்ப்பில் சில சிக்கல்கள் ஒரு விவாதம்), இரா. மோகன் (மொழிபெயர்ப்பின் அடிப்படைகள்) போன்றவர்களின் கட்டுரைகளைக் குறிப்பிடலாம். இவற்றில் ச.வே. சுப்பிரமணியன் (1983), வை. சச்சிதானந்தன் (1985), பா. ஆனந்தகுமார் (1990) போன்றவர் களின் கட்டுரைகள் சிறப்பித்துச்சொல்லத்தக்கவை ஆகும்.

1. ச.வே. சுப்பிரமணியன் (1983)

ச.வே. சுப்பிரமணியனின் 'திராவிடமொழி இலக்கியங்கள்' என்ற நூலின் இறுதியில் 'மொழிபெயர்ப்பு இலக்கியம்' என்ற பகுதி அமைந்துள்ளது. இதில் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய திராவிட மொழிகள் தம்முள் மொழிபெயர்ப்பு செய்தவை, வடமொழியிலிருந்து மொழிபெயர்ப்பு செய்தவை, எஞ்சிய பிறமொழிகளிலிருந்து திராவிடமொழிகளுக்கு வந்தவை, திராவிட மொழிகளிலிருந்து பிறமொழிகளுக்குச் சென்றவை என மொழிபெயர்ப்பு நூல்கள் குறித்த மதிப்பீடு அமைந்துள்ளது.

2. பெ.நா. அப்புசாமி (1983)

பெ.நா. அப்புசாமியின் 'பாரதியின் மொழியாக்கத்திறன்' என்ற கட்டுரை 'சிந்தனைப்பண்ணையில் பாரதி' என்ற தொகுப்பு நூலில் இடம்பெற்றுள்ளது. இக்கட்டுரை பாரதியின் பிறமொழியறிவு, வடமொழி மற்றும் ஆங்கிலக் கவிதைகளைத் தமிழாக்கியமை போன்றவற்றை விளக்குவதோடு, மொழிபெயர்ப்பின் இன்றியமையாமையைச் சமகாலத்தேவையின் அடிப்படையில் அணுகுவதாகவும் உள்ளது.

3. வை. சச்சிதானந்தன் (1985)

வை. சச்சிதானந்தனின் ஒப்பிலக்கியம் ஓர் அறிமுகம் என்ற நூலில் 'மொழிபெயர்ப்பு' என்ற கட்டுரை காணப்படுகிறது. இது மொழிபெயர்ப்பை மேனாட்டார் தந்துள்ள விளக்கங்களை அடிப்படையாகக்கொண்டு விரித்துரைக்கிறது.

4. பா. ஆனந்தகுமார் (1990)

பா. ஆனந்தகுமார் 'குஞ்ஞுண்ணிக் கவிதைகள்' என்ற மொழிபெயர்ப்பு நூலின் இறுதியில் 'குஞ்ஞுண்ணிக் கவிதைகள் மொழிபெயர்ப்பில் சில சிக்கல்கள் ஒருவிவாதம்' என்ற கட்டுரையைச் சேர்த்துள்ளார். இது மலையாளத்திலிருந்து தமிழில் குறிப்பாகக் கட்டற்ற கவிதைகளை மொழிபெயர்க்கும்போது ஏற்படுகின்ற சிக்கல்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

2. துறைசார்பு உடையன

தாய்மொழி வழிக்கல்வி, தமிழை ஆட்சிமொழியாக்குதல் போன்ற காரணங்களை முன்னிட்டுப் பிற துறைசார்ந்த இலக்கியங்களைத் தமிழில் மொழிபெயர்க்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் அறிவியல், தொழில் நுட்பம் மற்றும் கலைத்துறைகளைச் சார்ந்த இலக்கியங்களை மொழிபெயர்ப்பதிலுள்ள சிக்கல்களை உள்ளடக்கியனவான 1. அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் தமிழ், 2. சட்டத்தமிழ், 3. ஆட்சி மற்றும் பணித்துறைத்தமிழ் போன்ற தலைப்புகளில் அமைந்த நூல்களும் கட்டுரைகளும் எழுதப்பட்டுள்ளன.

1. அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தமிழ்

அறிவியல் மற்றும் தொழில் நுட்பச் செய்திகளைத் தமிழாக்கும் நோக்கங்களையும், அவற்றில் ஏற்படுகின்ற மொழிநிலையிலான சிக்கல்களையும் உள்ளடக்கியனவாக இரா. கணேசன் (அறிவியல் தமிழாக்க முறைகள்), ஜி.ஆர். தாமோதரன் (அறிவியல் தமிழ்), இராம. சுந்தரம் (தமிழ்வழி அறிவியல்), வா.செ. குழந்தைசாமி (அறிவியல் தமிழ்) போன்றவர்கள் நூல்களையும்,

பெ.நா. அப்புசாமி (தமிழில் விஞ்ஞானம்), ஜி.ஆர். தாமோதரன் (அறிவியல் தமிழாக்கம்), மணவை முஸ்தபா (அறிவியல் மொழிபெயர்ப்பு), செ.வை. சண்முகம் (அறிவியல் தமிழ்ப்பாடம்), என். ஸ்ரீனிவாசன் (இந்த நூற்றாண்டில் வெளியான அறிவியல் நூல்கள்), அ. பாண்டுரங்கன் (அறிவியல் தமிழ்), இரா. விசயராகவன் (தமிழ்வழி அறிவியல் – சில சிந்தனைகள்), முத்துசண்முகம் (அறிவியல் தமிழ்), டி. பத்மநாபன் (அறிவியல் தமிழ்), சி. கருணாகரன், வ. ஜெயா (அறிவியல் தமிழ் உரைக்கோவை அமைப்பும் நிலைபேறாக்கமும்), இராம. இருசு (அறிவியல் செய்திப் பரிமாற்றம்) போன்றவர்கள் கட்டுரைகளையும் எழுதியுள்ளனர். இவற்றில் வா.செ. குழந்தை சாமியின் (1985) அறிவியல்தமிழ் என்ற நூல் சிறப்பித்துச் சொல்லத்தக்க ஒன்றாகும்.

1. வா.செ. குழந்தைசாமி (1985)

தாய்மொழி வழிக் கல்வியின் இன்றியமையாமையைக் கருத்தில் கொண்டு அறிவியல் செய்திகளையும் தமிழ் வழியாகக் கற்பிக்கவேண்டும் என்ற நோக்கிலும், தமிழ் மொழியைக் கருவிகளில் (கணிப்போன்றன) பயன்படுத்துவதற்காகவும் சில வழிமுறைகளை வகுப்பதாக 'அறிவியல் தமிழ்' என்ற நூல் அமைந்துள்ளது. இந்நூலில் தமிழின் பழைமை, தற்கால நிலை, எதிர்காலத்தேவை ஆகியவை பரந்த பார்வையுடனும், தொலைநோக்குடனும் அணுகப்பட்டுள்ளன. மேலும் தமிழின் எழுத்துவடிவத்தைச் சீர்திருத்துதல், ரோமன் வரிவடிவை துணைவரிவடிவமாகத் தமிழில் பயன்படுத்துதல் போன்றவையும் இந்நூலில் விளக்கமாகப் பேசப் பட்டுள்ளன.

2. சட்டத்தமிழ்

சட்டநூல்களைத் தமிழில் மொழிபெயர்க்கும்போது ஏற்படுகின்ற சிக்கல் களை விளக்குவனவாக மா. சண்முக சுப்பிரமணியத்தின் (1974) சட்டத்தமிழ் என்ற நூலும், கு. செல்வச்சந்திரன் (தமிழில் சட்டமொழி பெயர்ப்பிலுள்ள சிக்கல்கள்), அ. சிதம்பரம் (Aspects of Translation of Laws into Indian Languages), எஸ். மகாராஜன் (Some Problems of Law Translation into the Indian Languages) போன்றவர்களுடைய கட்டுரைகளும் வெளிவந்துள்ளன.

3. ஆட்சி மற்றும் பணித்துறைத் தமிழ்

ஆட்சி மற்றும் பணித்துறைகளில் கருத்துப்பரிமாற்ற மொழியாகத் தமிழைத் பயன்படுத்துவதிலுள்ள சிக்கல்களை விளக்குவனவாக சி. இராமலிங்கனார் (ஆட்சித்துறைத்தமிழ்), துரை சுந்தரேசன் (தமிழ் ஆட்சிமொழி ஒரு வரலாற்று நோக்கு), த. பெரியாண்டவன் (ஆட்சித்தமிழ்) போன்றவர்களின் நூல்களும், து. அரங்கநாதன் (அலுவலகங்களில் தமிழ்), ஔவை.து. நடராஜன் (Problems in Official Translation), மகேஸ்வரி பாலகிருஷ்ணன் (Problems of Official Translation), சி. இராமலிங்கனார் (ஆட்சித்தமிழ்) போன்ற வர்களின் கட்டுரைகளும் வெளிவந்துள்ளன.

3. கலைச் சொல்லாக்கம் பற்றியன

தருமொழியிலுள்ள துறை சார்ந்த சொற்களைப் பெறுமொழியில் அவற்றின் இயல்பு குன்றாமல் மாற்றுதலை அடிப்படையாகக்கொண்ட சிக்கல்களை உள்ளடக்கிக் கலைசொல்லாக்க் கோட்பாடுகள் உருவாக்கப்படுகின்றன. தமிழ்மொழி (இந்திய மொழிகள் அனைத்தும்) அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் பிற கலைத்துறைகளைச் சார்ந்த இலக்கியங்களுக்காக பெரும்பாலும் ஆங்கில மொழியைச் சார்ந்திருக்கின் றது. எனவே துறை சார்ந்த இலக்கியங்களை மொழிபெயர்ப்பவர்கள் அத்துறை

சார்ந்த சொற்களையும் பெருமொழியில் கொண்டுவரவேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது. கலைச்சொல்லாக்கம் பற்றி இராதா செல்லப்பன் (கலைச்சொல்லாக்கம்) நூல் ஒன்றையும், கணபதிப்பிள்ளை நவசோதி (இலங்கை இந்தியத் தமிழ்க் கலைச்சொல்லாக்க முறைகளும் அடிப்படை வேறுபாடுகளும்), இராம. சுந்தரம் (தமிழில் கலைச்சொல்லாக்க முயற்சிகள்), இராதா செல்லப்பன் (கலைச்சொல்லாக்க முயற்சி-இதுவரை), கே. கண்ணபிரான் (அறிவியல் கலைச்சொல்லாக்கம் - வேதியல் துறை), அ. கதிரேசன் (அறிவியல் கலைச்சொல்லாக்கம் மருத்துவத்துறையில் இற்றைநிலை வளர்ச்சி), சு. நரேந்திரன் (கலைச்சொல்லாக்கம்-மருத்துவம்), கொடுமுடி ச. சண்முகம் (கலைச்சொல்லாக்கம் - சில சிந்தனைகள்), எஸ்.எஸ். நாகராஜன் (அறிவியல் கலைச்சொல்லாக்கம் வேளாண்மைத்துறையில் இற்றைநிலை வளர்ச்சி), கு. செகதீசன் (அறிவியல் கலைச்சொல்லாக்கம் மீன்வளத்துறையில் இற்றைநிலை வளர்ச்சி), த.செ. பாண்டியன், எ. செயக்குமார் (அறிவியல் கலைச்சொல் லாக்கம் உயிரியல் துறையில் இற்றைநிலை), செ.வை. சண்முகம் (கலைச் சொல்லாக்கமும் தரப்பாடும்), க.ப. அறவாணன் (மானுடவியல் மொழிபெயர்ப்புச் சொற்களை அகரவரிசைப் படுத்தும்போது நேரும் சிக்கல்கள்), இரா. சந்தானம், கு. செகதீசன், வி.அ. மாணிக்கம் (மீன்வளக் கலைச்சொல் லாக்கம் சில நெறிமுறைகள்), சி. உமாராணி (The Technical Terms of Chemistry in Tamil), கதிர். விசுவலிங்கம் (பொறியியல் துறையில் கலைச்சொல்லாக்கம்), எஸ். சுந்தரசீனிவாசன் (சொல்லாக்கம்), க.ரா. பாலசுப்பிரமணியன் (கலைச்சொற்கள்), பா. இறையரசன் (தமிழும் கலைச்சொல்லாக்கமும்) போன்றவர்கள் கட்டுரைகளையும் எழுதியுள்ளனர். மேலும் கலைச்சொற்களை ஒலிபெயர்த்து அமைத்தல் பற்றி ச. அகத்தியலிங்கம், செ.வை. சண்முகம் (தமிழில் ஒலிபெயர்ப்பு), இராதா செல்லப்பன் (கலைச்சொல் ஒலிபெயர்ப்பில் மெய்ம்மயக்கங்கள்), கா. மீனாட்சி சுந்தரம்

(தமிழ்மொழிபெயர்ப்பில் ஒலிபெயர்ப்பு தேவையா?), கொடுமுடி.ச. சண்முகம் (ஒலிபெயர்ப்பு சில சிந்தனைகள்), தமிழப்பன் (எழுத்துப்பெயர்ப்பு), பொற்கோ (தமிழுக்கு ரோமன் எழுத்துக்கள் பயன்பட்டமுறை, ரோமன் வடிவத்தமிழ் ஒலிபெயர்ப்பில் தரப்படுத்தம்), ரா. விஜயராகவன் (தமிழுக்கு ரோமன் வரிவடிவம்) போன்றவர்களும் கட்டுரைகளை எழுதியுள்ளனர். இவற்றில் இராதா செல்லப்பனின் (1985) 'கலைச்சொல்லாக்கம்' என்ற நூல் சிறப்பித்துச் சொல்லப்படவேண்டிய ஒன்றாகும்.

1. இராதா செல்லப்பன் (1985)

கலைச்சொல்லாக்கம் பற்றி இராதா செல்லப்பன் எழுதியுள்ள நூலில் கலைச்சொற்களை உருவாக்கி தரப்படுத்துதல் பற்றிய யூஜின் ஊஸ்டரின் கருத்துக்கள், தமிழில் கலைச்சொல்லாக்கம் பற்றியக் கோட்பாடுகளை உருவாக்குதல் குறித்த விளக்கங்கள், கலைச்சொல்லாக்க முறைகள், கலைச்சொற்களை உருவாக்குவதிலுள்ள சிக்கல்கள், இலங்கையில் சாமுவேல் கிறீன் (1847 முதல்) முயற்சியால் நடந்த கலைச்சொல்லாக்கம் மற்றும் அறிவியல் தமிழாக்க முயற்சிகள் போன்றவை குறித்த விளக்கங்கள் இடம்பெற்றுள்ளன.

4. கணினி மொழிபெயர்ப்பை விளக்குவன

கணினியைப் பயன்படுத்தி தமிழ் மொழிபெயர்ப்பைச் செய்வது குறித்து எஸ். நம்பெருமாள் (Application of Programming Languages for Processing Natural Languages with Special Reference to English and Tamil), கே.சி. செல்லமுத்து, கே. ரங்கன், கே.முருகேசன் (Tamil University Machine Translation System, Russian - Tamil) போன்றவர்கள் நூல்களையும், கே.சி. செல்லமுத்து (கணிப்பொறிவழி மொழி பெயர்ப்பு, கணிப்பொறிவழி மொழிபெயர்ப்பில் செயற்கை நுண்ணறிவாற்றலின்

பங்கு), பெ.சி. கணேசு சுந்தரம் (உரோமன் எழுத்தில் எழுதப்பட்ட தமிழைக் கணிப்பொறியைக் கொண்டு எப்படித் தன்னியக்கமுறையில் தமிழ் எழுத்தில் எழுத வைப்பது?), வி.அய். சுப்பிரமணியம் (கணிப்பொறியும் மொழிபெயர்ப்பும்) போன்றவர்கள் கட்டுரைகளையும் எழுதியுள்ளனர்.

2. தமிழிலிருந்து பிறமொழிகளில் மொழிபெயர்ப்பதைப் பற்றியன

தமிழ் நூல்களை மேனாட்டு மொழிகளில் பெயர்த்து அறிமுகப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் பரவலாகக் காணப்படுகிறது. இதன் அடிப்படையில் ஆங்கிலம் போன்ற மொழிகளில் பெயர்க்கும்போது ஏற்படுகின்ற சிக்கல்களைக் கருத்தில் கொண்டு ஜே.ஆர். மார் (The Translation of Cankam Literature), டி. எட்வர்டு வில்லியம்ஸ் (Some Problems in Translation: Tamil-English Situation), ஜே. பார்த்தசாரதி (The concept of faithfulness to the Translation of Sangham poetry into English), மா. இராமலிங்கம் (தமிழ்ச்செவ்வியல் இலக்கியங்கள் - மொழிபெயர்ப்பு), செ. இராஜேஸ்வரி (திருக்குறள் மொழிபெயர்ப்பில் சமயப்பின்னணி), சிவனார் (கன்னடத்தில் திருக்குறள்) போன்றவர்கள் கட்டுரைகளை எழுதியுள்ளனர். ஆனால் தமிழர்கள் பிறமொழிகளில் தமிழ் நூல்களை மொழிபெயர்த்து அறிமுகப்படுத்துவதுடன் பிறமொழிகளிலுள்ள அறிவுச்செல்வங்களை தமிழில் கொண்டுவந்து தமிழை வளப்படுத்த முனைந்து ஈடுபட வேண்டும் என்று சி. நாச்சிமுத்து (குஞ்ஞுண்ணியின் கவிதைகளுக்கு பா. ஆனந்தகுமார் செய்துள்ள மொழிபெயர்ப்புக்கு சி. நாச்சிமுத்து வழங்கியுள்ள முன்னுரைப் பகுதியைப் பார்க்கவும்) கருத்துரைப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. மேலும் தாய்மொழியிலிருந்து வேற்றுமொழிக்கு மொழிபெயர்ப்பதைவிட வேற்றுமொழியிலிருந்து தாய்மொழிக்கு மொழிபெயர்ப்பதே

எளிதானதும் பொருத்தமானதும் ஆகும் என்று குஉந்வந்த்சிங் கருத்துரைப்பதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது (பார்க்க, The Hindu, Daily Newspaper, 7-3-1993:X).

3. ஆய்வுகள்

தற்காலத்தில் தமிழ் மொழிபெயர்ப்பு குறித்த ஆய்வுகள் பல நடந்துள்ளன. அவற்றில் எம்.பில். பட்டத்திற்காக இரா. அங்கயற்கண்ணி (சிலப்பதிகார ஆங்கில மொழிபெயர்ப்புகள்), வே. சசிகலா (தினமணியில் செய்திமொழிபெயர்ப்பு), அ. டேனியல் (வேதாகம மொழிபெயர்ப்பில் லுத்தரன் சபையாரின் பங்கு), பா. கார்த்திக்கேயன் (மொழிபெயர்ப்புத் திறனாய்வு- எட்வின் அர்னால்டும் கவிமணியும்) போன்றவர்களும், பிஎச்.டி. பட்டத்திற்காக இராதாசெல்லப்பன் (அறிவியல் தமிழாக்கம்), வெ. இராமசாமி (மொழிபெயர்ப்புச் சிக்கல்களும் தீர்வுகளும்), இராஜேஸ்வரி (தமிழ்-ஆங்கில மொழிபெயர்ப்புச் சிக்கல்களும் தீர்வுகளும்), எஸ். காந்தி (தமிழ்-ஆங்கில கவிதை மொழிபெயர்ப்புகள்), விசுவாசம் (விவிலிய மொழிபெயர்ப்புகள்) போன்றவர்களும் ஆய்வுகளைச் செய்துள்ளனர். இவ்வாய்வுகள் மொழிபெயர்ப்புகளை மதிப்பீடு செய்வதாகவும், மொழிபெயர்ப்புச் சிக்கல்களுக்குத் தீர்வுகாண்பதாகவும் உள்ளன. இருப்பினும் ஒட்டுமொத்தமாக நோக்கினால் மொழிபெயர்ப்பு குறித்த ஆய்வுகள் போதிய அளவில் நடைபெற வில்லை என்பதையே இவை காட்டுகின்றன. எனவே, மொழிபெயர்ப்புத்துறையின் முழுமையாகக் கவனஞ்செலுத்துவதின் மூலமே இக்குறையை நிறைவு செய்யமுடியும்.

4. தமிழ் மொழிபெயர்ப்புகளும் அகராதிகளும்

தமிழில் நிகண்டுகள் என்ற பெயரில் பழங்காலத்திலேயே அகராதிகள் பல உருவாக்கப்பட்டன. ஆனால் அவை தமிழ்ச்சொற்களுக்கு இணையாக

வடமொழிச் சொற்களையும், வடமொழிச்சொற்களுக்கு இணையாக தமிழ்ச் சொற்களையும் விரவிய நிலையில் பரியாயங்களைக் கொண்ட ஒரு மொழி அகராதிகளாகவே அமைந்திருந்தன. மேனாட்டாரின் வருகையைத்தொடர்ந்து பிறமொழிகளைக் கற்கவேண்டிய தேவை அதிகரித்தது. எனவே மேனாட்டுப் பாணியிலான அகராதிகள் பலவற்றைத் தொகுக்கவேண்டியது அவசியமாயிற்று. இதனால் இருமொழி, பலமொழி அகராதிகள் பல அவ்வாறு தொகுக்கப்படலாயின. இவ்வகை அகராதிகள் மொழிக்கல்விக்கு மட்டுமல்லாமல் மொழிபெயர்த்தலுக்கும் பயன்படுவதைக் கருத்தில்கொண்டு தமிழிலுள்ள இருமொழி, மும்மொழி முதலான பலமொழி அகராதிகளை 1. பொதுச்சொல் அகராதிகள், 2. கலைச்சொல் அகராதிகள் என்ற அடிப்படையில் வகைப்படுத்தி விளக்கலாம்.

1. பொதுச்சொல் அகராதிகள்

மொழியின் பொதுவழக்கில்அனைவராலும் பயன்படுத்தப்படும் சொற்களைத் தொகுத்து செய்யப்பட்ட அகராதிகள் பொதுச்சொல் அகராதிகளாகும். இவற்றை 1. பிறமொழிச்சொற்களுக்கு இணையாகத் தமிழ்ச் சொற்களைத் தருபவை, 2. தமிழ்ச் சொற்களுக்கு இணையாகப் பிறமொழிச் சொற்களைத் தருபவை என வகைப்படுத்தலாம்.

1. பிறமொழிச் சொற்களுக்கு இணையாக தமிழ்ச் சொற்களைத் தருபவை

பிறமொழிச் சொற்களுக்கு இணையாகத் தமிழ்ச்சொற்களைத் தேர்வுசெய்து அமைக்கப்பட்ட அகராதிகள் இருமொழி, மும்மொழி, நான்மொழி என்ற அளவில் உள்ளன. அவற்றை அ. தாமோதரனின் 'Tamil Dictionaries: A Bibliography' என்ற தொகுப்பின் அடிப்படையில் பின்வருமாறு அட்டவணைப்படுத்தலாம்.

அட்டவணை என்.2:10, பிறமொழிச் சொற்களுக்கு இணையாகத் தமிழ்ச் சொற்களைத் தரும் அகராதிகள்

1	2	3	4	5	6	7
வரிசை என்	அகராதிக வின்வகை	மொழி-1 (தருமொழி)	மொழி-2 (இணைமொழி)	மொழி3 (இணை மொழி)	மொழி4 (இணை மொழி)	அகராதிகளின் மொத்த எண்ணிக்கை
1	இருமொழி அகராதி	அரபு	தமிழ்	-	-	2
	"	ஆங்கிலம்	"	-	-	55
	"	பிரெஞ்சு	"	-	-	10
	"	இந்தி	"	-	-	1
	"	மலாய்	"	-	-	2
	"	மராத்தி	"	-	-	1
	"	போர்ச்சுகீசியம்	"	-	-	1
	"	ருசியன்	"	-	-	1
	"	சமஸ்கிருதம்	"	-	-	12
	"	தெலுங்கு	"	-	-	1
2.	மும்மொழி அகராதி	பிரெஞ்சு	"	தெலுங்கு	-	1
	"	லத்தீன்	பிரெஞ்சு	தமிழ்	-	1
	"	மலாய்	தமிழ்	ஆங்கிலம்	-	1
	"	போர்ச்சுகீசியம்	லத்தீன்	தமிழ்	-	1
3.	நான்மொழி அகராதி	ஆங்கிலம்	மலையாளம்	இந்தி	தமிழ்	1

2. தமிழ்ச் சொற்களுக்கு இணையாகப் பிறமொழிச் சொற்களைத் தருபவை

தமிழ்ச் சொற்களுக்கு இணையாகப் பிறமொழிச் சொற்களைத் தேர்வு செய்து அமைக்கப்பட்ட அகராதிகள் இருமொழி, நான்மொழி என்ற அளவில் உள்ளன. அவற்றை அ. தாமோதரனின் 'தமிழ் அகராதிகள்: ஒரு நாற்றொகை' என்ற தொகுப்பின் அடிப்படையில் பின்வருமாறு அட்டவணைப்படுத்தலாம்.

அட்டவணை எண். 2:11, தமிழ்ச்சொற்களுக்கு இணையாகப் பிறமொழிச் சொற்களைத் தரும் அகராதிகள்

1	2	3	4	5	6	7
வரிசை எண்	அகராதிகளின்வகை	மொழி-1 (தருமொழி)	மொழி-2 (இணைமொழி)	மொழி-3 (இணைமொழி)	மொழி-4 (இணைமொழி)	அகராதிகளின் மொத்த எண்ணிக்கை
1.	இருமொழி அகராதி	தமிழ்	பார்சியம்	-	-	1
	"	"	ஆங்கிலம்	-	-	17
	"	"	பிரெஞ்சு	-	-	7
	"	"	இந்தி	-	-	1
	"	"	சப்பானியம்	-	-	1
	"	"	லத்தீன்	-	-	4
	"	"	மராத்தி	-	-	1
	"	"	போர்ச்சுகீசியம்	-	-	7
	"	"	ருசியன்	-	-	1
	"	"	சமஸ்கிருதம்	-	-	1
	"	"	சிங்களம்	-	-	2
	"	"	தெலுங்கு	-	-	1
2.	நான்மொழி அகராதி	"	இந்துஸ்தானி	பார்சியம்	ஆங்கிலம்	1

2. கலைச்சொல் அகராதிகள்

துறைசார்ந்த சொற்களை மட்டும் தொகுத்து செய்யப்பட்ட அகராதிகள் கலைச்சொல் அகராதிகளாகும். இத்தகைய அகராதிகள் கலைச்சொற்களின் பொருளை அறிந்துகொள்வதற்கும், துறைசார்ந்த நூல்களை மொழிபெயர்க்கவும் உதவுகின்றன. கலைச்சொல் அகராதிகளை 1. பிறமொழி கலைச்சொற்களுக்கு இணையாக தமிழ்ச் சொற்களைக் கொண்டவை, 2. தமிழ்க்கலைச்சொற்களுக்கு இணையாகப் பிறமொழிச் சொற்களைக் கொண்டவை என வகைப்படுத்தலாம்.

1. பிறமொழி கலைச்சொற்களுக்கு இணையாகத் தமிழ்ச்சொற்களைக்கொண்டவை

பிறமொழிகளிலுள்ள கலைச்சொற்களுக்கு இணையாகத் தமிழ்ச்சொற்களைத் தேர்வு செய்து அமைக்கப்பட்ட கலைச்சொல்அகராதிகள் இரண்டுமொழி, மூன்றுமொழி, நான்குமொழி, ஐந்துமொழி, ஆறுமொழி, ஏழுமொழி, பதின்மூன்றுமொழி என்ற அளவில் உள்ளன. அவற்றை அ. தாமோதரனின் "தமிழ் அகராதிகள்: ஒரு நூற்றொகை" என்ற தொகுப்பின் அடிப்படையில் பின்வருமாறு அட்டவணைப்படுத்தலாம்.

அட்டவணை 2:12, பிறமொழிக் கலைச்சொற்களுக்கு இணையாகத் தமிழ்ச்சொற்களைக்கொண்ட அகராதிகள்

1	2	3	4	5	6	7	8	9	10	11	12	13	14	15	16	17
வரிசை எண்	அகராதி வகை	அகராதி சார்ந்த துறை	மொழி 1	மொழி 2	மொழி 3	மொழி 4	மொழி 5	மொழி 6	மொழி 7	மொழி 8	மொழி 9	மொழி 10	மொழி 11	மொழி 12	மொழி 13	அகராதிகளின் எண்ணிக்கை
1.	இருமொழி அகராதி	இயற்பியல்	ஆங்கிலம்	தமிழ்												2
	"	இஸ்லாமிய சமயம்	அரபி	"												1
	"	உயிரியல்	ஆங்கிலம்	"												1
	"	உளவியல்	"	"												1
	"	கணிதம்	"	"												1
	"	கல்வி	"	"												1
	"	கிறிஸ்தவ சமயம்	"	"												3
	"	சட்டம்	"	"												2
	"	தத்துவம்	"	"												1
	"	தர்க்கம்	"	"												1
	"	தாவரவியல்	"	"												1
	"	புவியியல்	"	"												2
	"	புள்ளியியல்	"	"												2
	"	பொதுப் பராமரிப்பு	"	"												58
	"	பொருளியல்	"	"												1
	"	மருத்துவம்	"	"												3

1	2	3	4	5	6	7	8	9	10	11	12	13	14	15	16	17
	"	வரலாறு	ஆங்கிலம்	தமிழ்												1
	"	வானவியல்	"	"												1
	"	விலங்கியல்	"	"												1
	"	வேதியியல்	"	"												2
2	மூன்று மொழி அகராதி	தத்துவம்	சமஸ்கிருதம்	பாலி	தமிழ்											1
3	நான்கு மொழி அகராதி	சுற்றாய் வியல்	கன்னடம்	மலையாளம்	"	தெலுங்கு										1
	"	மருத்துவம்	சமஸ்கிருதம்	பாலி	எழு	தமிழ்										1
4	ஐந்து மொழி அகராதி	"	ஆங்கிலம்	லத்தீன்	கன்னடம்	தெலுங்கு	தமிழ்									1
5	ஆறுமொழி அகராதி	"	சமஸ்கிருதம்	பெங்காலி	இந்தி	மராத்தி	"	ஆங்கிலம்								1
6	ஏழுமொழி அகராதி	தாவரவியல்	ஆங்கிலம்	கன்னடம்	"	"	குஜராத்தி	தெலுங்கு	தமிழ்							1
7	பதின்மூன்றுமொழியகராதி	பொதுப் பராமரிப்பு	அரபி	பெர்சியன்	இந்துஸ்தானி	சமஸ்கிருதம்	இந்தி	பெங்காலி	ஒரியா	மராத்தி	குஜராத்தி	தெலுங்கு	கன்னடம்	தமிழ்	மலையாளம்	1

2. தமிழ்க் கலைச்சொற்களுக்கு இணையாகப் பிறமொழிச்சொற்களைக் கொண்டவை

தமிழில் அமைந்துள்ள கலைச்சொற்களுக்கு இணையாக பிறமொழிச் சொற்களை தேர்வுசெய்து அமைக்கப்பட்ட கலைச்சொல் அகராதிகள் இரண்டுமொழி, மூன்றுமொழி, ஆறுமொழி என்ற அளவில் உள்ளன. அவற்றை அ. தாமோதரனின் தமிழ் அகராதிகள்- ஒரு நூற்றொகை என்ற தொகுப்பின் அடிப்படையில் பின்வருமாறு அட்டவணைப்படுத்தலாம்.

அட்டவணை எண். 2:13, தமிழ்க் கலைச்சொற்களுக்கு இணையாகப் பிறமொழிச் சொற்களைக் கொண்ட அகராதிகள்

1	2	3	4	5	6	7	8	9	10
வ. எண்.	அகராதிவகை	அகராதி சார்ந்த துறை	மொழி 1	மொழி 2	மொழி 3	மொழி 4	மொழி 5	மொழி 6	அகராதிகளின்எண்ணிக்கை
1.	இருமொழி அகராதி	கிறிஸ்தவசமயம்	தமிழ்	ஆங்கிலம்					2
	"	பொதுபராமரிப்பு	"	"					1
	"	மருத்துவம்	"	"					2
	"	"	"	சிங்களம்					1
2	மூன்றுமொழிஅகராதி	"	"	ஆங்கிலம்	லத்தீன்				1
	"	"	"	மோரிஉந்	தெலுங்கு				1
3	ஆறுமொழி அகராதி	தாவரவியல்	"	தெலுங்கு	மலையாளம்	கன்னடம்	துளு	ஒரியா	1
	"	வேளாண்மை	"	"	"	"	இந்துஸ்தானி	"	1

மேலும் தமிழில் தொகுக்கப்பட்டுள்ள கலைச்சொல் அகராதிகள் பற்றியக் குறிப்புகளை திருமதி இராதாசெல்லப்பன் கலைச்சொல்லாக்கம் என்ற நூலில் திரட்டித் தந்துள்ளார். அவற்றைப் பின்வருமாறு அட்டவணைப்படுத்தலாம்.

அட்டவணை எண் 2:14, தமிழில் கலைச்சொல் அகராதிகள்

1	2	3	4
வரிசை எண்	கலைச்சொல் அகராதிசார்ந்த துறை	கலைச்சொல் அகராதிகளின் எண்ணிக்கை	கலைச்சொல் அகராதிகளில் காணப்படும் சொற்களின் எண்ணிக்கை (ஏறத்தாழ)
1.	ஆட்சியியல்	14	31000
2.	இயற்பியல்	10	20000
3.	உயிரியல்	9	4000
4.	உளவியல்	3	3000
5.	கணிதவியல்	8	10000
6.	சட்டவியல்	5	7000
7.	சமூகவியல்	4	11000
8.	தாவரவியல்	7	1000
9.	புவியியல்	9	6000
10.	புள்ளியியல்	6	4000
11.	பொருளியல்	3	3500
12.	பொறியியல்	22	35000
13.	மருத்துவவியல்	31	15000
14.	வணிகவியல்	5	2000

1	2	3	4
15.	வரலாறு	6	10000
16.	வானவியல்	1	324
17.	வேதியியல்	9	6000
18.	வேளாண்மை	2	4500
19.	எஞ்சியதுறைகள்	84	71000

பிற மொழிகளிலிருந்து தமிழுக்கும், தமிழிலிருந்து பிறமொழிகளுக்குமாக உருவாக்கப்பட்ட அகராதிகளில் ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கும், தமிழிலிருந்து ஆங்கிலத்திற்குமான அகராதிகள் தான் மிகுதியாக உள்ளன. எனவே அகராதிகளைத் தொகுக்கும் பணியை ஆங்கிலம் தவிர்த்த பிற மொழிகளை குறிப்பாக இந்திய மொழிகளை நோக்கி விரிவுபடுத்தவேண்டும். இன்னும் குறிப்பாக இத்தகைய விரிவாக்கம் தமிழின் அண்டை மொழிகளான மலையாளம், கன்னடம், தெலுங்கு போன்றவற்றை நோக்கியதாக அமையவேண்டும். மேலும் தற்போது பயன்பாட்டிலுள்ள அகராதிகள் மொழிபெயர்ப்புக்கு உதவும் நோக்கில்அமையவில்லை. எனவே எந்த மொழியிலிருந்து மொழிபெயர்க்கிறார்களோ அந்த மொழியில் உள்ள ஒரு மொழி அகராதிகளைப் (Monolingual Dictionaries) பயன்படுத்தும் நிலையே நீடித்து வருகிறது. இதனால் மொழிபெயர்ப்புகளை தரமானதாக அமைக்க இயலாமை ஏற்படுகிறது. இந்நிலை மாற தருமொழிச் சொல், தருமொழிச்சொல்லின் கருத்துவிளக்கம், தருமொழிச்சொல்லின்

கருத்துவிளக்கத்திற்கான மொழிபெயர்ப்பு, தருமொழிச்சொல்லுக்கு இணையான (மரபுவழக்கு) பெறுமொழிச்சொல் அல்லது அதன் நேரடி மொழிபெயர்ப்பு, தருமொழிச் சொல்வழக்கு பெற்றுவரும் முறையைக் காட்டும் சான்றுத்தொடர்கள், சான்றுத்தொடர்களுக்குப் பெறுமொழியில் செய்யப்பட்டுள்ள கருத்துப் பெயர்ப்பு அல்லது சொற்பெயர்ப்பு ஆகியவைவற்றைக்கொண்ட புதிய அகராதிகளைத் தொகுத்தல் (விளக்கத்திற்கு சி. நாச்சிமுத்து மற்றும் டி. தேவதாஸ் ஆகியவர்களின்" English-Tamil Dictionaries; Meaning Equivalance and Translatability" என்ற கட்டுரையைப் பார்க்கவும்) தமிழில் மொழி பெயர்ப்பை திறம்படச் செய்வதற்கு உதவிபுரியும். மேலும் கலைச்சொல் அகராதிகளை உருவாக்கும் பணியை இன்னும் விரிவுபடுத்துவதோடு, கலைச்சொற்களைத் தரப்படுத்திக்கொள்வதும் மொழிபெயர்ப்பைச் சீர்மைபெறச் செய்ய வழிவகுக்கும்.

5. தமிழில் மொழிபெயர்ப்பாளர்கள்

தமிழில் மொழிபெயர்ப்பு என்பது மிகப்பழங்காலத்திலிருந்தே தொடர்ந்து நடைபெற்றுவருகிறது. இப்பணியில் பலர் ஈடுபட்டுள்ளனர். இவர்களை எண்ணிக் கணக்கிடுவது அரிய ஒன்றாகும். ஏனெனில் மொழிபெயர்ப்புகள் பல சுவடி நிலையிலும், இதழ்களில் மட்டும் வெளிவந்தனவாகவும் உள்ளன. மேலும் நூல் வடிவம் பெற்றவைகூட மூலமொழி, மொழிபெயர்ப்பாளர் பெயர் போன்ற குறிப்புகள் எதுவும் இன்றி காணப்படுகின்றன. பொதுவாக மொழிபெயர்ப்பாளர்களை 1. பிறமொழிகளிலிருந்து தமிழில் மொழிபெயர்ப்பு செய்தவர்கள், 2. தமிழிலிருந்து பிறமொழிகளில் மொழிபெயர்ப்பு செய்தவர்கள் என வகைப்பாடு செய்யலாம்.

1. பிறமொழிகளிலிருந்து தமிழில் மொழிபெயர்ப்பு செய்தவர்கள்

தமிழில் சுமார் 42 மொழிகளிலிருந்து நூல்கள் பல மொழிபெயர்ப்பாகியுள்ளன. இப்பணியை ஏறத்தாழ 3100பேர் செய்துள்ளனர் (இவ்வெண்ணிக்கைகள் சிவகாமியின் மொழிபெயர்ப்பு நூற்றொகையின் அடிப்படையில் இங்கு தரப்பட்டுள்ளன). இவர்களில் முக்கியமான மொழிபெயர்ப்பாளர்கள் பற்றியக் குறிப்புகளைப் பின்வருமாறு அட்டவணைப்படுத்தலாம்.

அட்டவணை எண். 2:15, பிறமொழிகளிலிருந்து தமிழில் மொழிபெயர்ப்பு செய்தவர்கள்

வ.எண்	மொழிபெயர்ப்பாளர்பெயர்	மொழிபெயர்ப்பின் தலைப்பு	இலக்கியவகை	மொழி
1.	குணங்குடிமஸ்தான் சாகிப்பு	ஞானப்புதையல் அரபி முனா சாத்து	கவிதை	அரபு
2.	அ.லெ.நடராஜன்	ஆயிரத்துஓர்இரவுகள் என்ற அரபிக்கதைகள்	சிறுகதை	"
3.	செ. ஜேசுதாசன்	முதற்கனி	கவிதை	ஆங்கிலம்
4.	ஆரனிகுப்புசாமி	ஆய்உஷா	நாவல்	"
5.	தி.ஆர். அருணாசலம்	எட்கார் ஆலன்போ கதைகள்	சிறுகதை	"
6.	பம்மல்சம்பந்தமுதலியார்	விரும்பிய விதமே	நாடகம்	"
7.	சி. ஸ்ரீனிவாசன்	அன்னையின்குரல்	நாவல்	ஆப்பிரிக்கன்
8.	நா. தர்மராசன்	இத்தாலியக்கதைகள்	சிறுகதை	இத்தாலி
9.	எம். மாணிக்கம்	உக்ரேனியக்கதைகள்	"	உக்ரைன்
10.	பைபின் சொசைட்டி	பழையஏற்பாடும் புதிய ஏற்பாடும் அடங்கிய பரிசுத்தவேதாகமம்	கிறிஸ்தவம்	எபிரேயம்
11.	தா. பாண்டியன்	என் முதல் ஆசிரியர்	இலக்கியம் பொது	கிரீக்கிஸ்

1	2	3	4	5
12.	அ.லெ. நடராஜன்	ஈசாப் நீதிக்கதைகள்	சிறுகதை	கிரேக்கம்
13.	சிவானந்தமூர்த்தி நாயனார்	சொரூபலக்ஷணா விருத்தி	செய்யுள்	சிற்வாணம்
14.	சோ. நடராஜன்	பூவைவிடுதூது	செய்யுள்	சிங்களம்
15.	எஸ். சிவசேகரன்	மாசேத்துங்கவிதைகள்	"	சீனம்
16.	கா. அப்பாத்துரை	கல்மனிதன்	சிறுகதை	சுவீடிஉந்
17.	"	துன்பக்கேணி	நாவல்	சப்பானிஉந்
18.	க. கணபதிப்பிள்ளை	பூஞ்சோலை	"	செர்மன்
19.	சின்னத்தம்பிப்பிள்ளை	ஸ்தீரிமாச்சரியம் என்னும் துருக்கிக் கதைகள்	சிறுகதை	துருக்கி
20.	கா. திரவியம்	இப்செனு-இருநாடக ங்கள்	நாடகம்	நார்வே
21.	எம்.இராஜமாணிக்கம்	பல்கேரியக்கவிதைகள்	கவிதை	பல்கேரியன்
22.	பி.எம். உறவி	இக்பால் கவி அமுதம்	"	பாரசீகம்
23.	ஜே. ஜான்துரைராஜ்	ஆகாசப்பிரயாணம்	நாவல்	பிரெஞ்சு
24.	பாண்டியன், தி. பொன்னிவளவன்	அருவிமகள்	இலக்கியம் பொது	பிலோரஸ்
25.	உமாதேவி	போலிஉந்பக்திஇலக் கியத்தொகுப்பு	கவிதை	போலிஉந்
26.	சி. ஸ்ரீனிவாசன்	அன்புப்பிடியில் இருவர்	நாவல்	மெக்ஸிகன்
27.	தம்பிசீனிவாசன்	யூக்கஸ்லாவியச்சிறு கதைகள்	சிறுகதை	யூக்கஸ்லேவே சியன்
28.	ரகுநாதன்	அக்கினிப்பரீட்சை	நாவல்	ரஉந்யன்
29.	கே. ராமநாதன்	நீதியின் மரணம்	சிறுகதை	"

1	2	3	4	5
30.	என். வானமாமலை	குடும்ப இன்பம்	இலக்கியம் பொது	ரஷ்யன்
31.	சான்டியாகோஜயர்	சேசுநாதருடைய திரு இதயக்கீர்த் தன சங்கீதம்	கவிதை	லத்தீன்
32.	-	லெனினும் லெனினி சமும்	அரசியல்	வியட்நாமீஸ்
33.	க.வ.முத்தையா	டான் குவிக் சோட்	நாவல்	ஸ்பானிஷ்
34.	துளசிஜயராமன்	கங்கைப்பருந்தின் சிறகுகள்	"	அஸ்லாம்
35.	சௌரி	ஏழாவது குதிரை	"	இந்தி
36.	எஸ். அப்துல்வகாப்	இறைநம்பிக்கைவாழ் வின் அடிப்படை	இஸ்லாம்	உருது
37.	எம்.வி. வெங்கட்ராம்	நீலமலை	நாவல்	ஒரியா
38.	சரஸ்வதிராம்நாத்	ஜெயசோம்நாத்	"	குஜராத்தி
39.	நித்தியானந்தசுவாமி கள்	அத்வைதரசமஞ்சரி	கவிதை	சமஸ்கிருதம்
40.	சிற்றம்பலதேசிகள்	இராமாயணத்து உத்தரகாண்டக் கதை	"	"
41.	பண்டிதமணி மு. கதிரேசன்செட்டியார்	கௌடலீயம்	அரசியல்	"
42.	ம. பெருமாளய்யங்கார்	சௌராஷ்ட் பவள்ஞுக்வேறா யெ பொகுஞுவாஸ் பொஸ்தொவ	-	சௌராஷ்டிரம்
43.	துளசிஜெயராமன்	வெண்குருதி	நாவல்	பஞ்சாபி

1	2	3	4	5
44.	சுர்க்காதாஸ்	போதிசத்வகதைகள்	சிறுகதை	பாலி
45.	தியாகராஜ சாமி	அமார் விரதமாஸ் மியம்	கவிதை	பிராகிருதம்
46.	வேங்கடதாசர்	ஸ்ரீமகாபக்தவிஜயம்	"	மராத்தி
47.	ஆர். சண்முக சுந்தரம்	பைரவி	நாவல்	"
48.	பாவலர்பேகன்	காதல்பரிசு	கவிதை	வங்காளம்
49.	த.நா. குமார சாமி	அக்கினி	நாவல்	"
50.	எம். சித்தலிங் கையா	அழிந்தபிறகு	"	கன்னடம்
51.	இளம்பாரதி	அலைகாற்று	கவிதை	தெலுங்கு
52.	இறைவன்	வள்ளத்தோள்கவிதைகள்	"	மலையாளம்
53.	சி.ஏ, பாலன்	நூறுபூக்கள் மலரும்	நாவல்	"
54.	ம. இளையபெரு மாள்	கேரளபாணினீயம்	இலக்கணம்	"

2. தமிழிலிருந்து பிறமொழிகளில் மொழிபெயர்ப்புசெய்தவர்கள்

தமிழிலிருந்து சுமார் 29 மொழிகளில் நூல்கள் பல மொழிபெயர்ப்பாகி யுள்ளன. இப்பணியை ஏறத்தாழ 435 பேர் செய்துள்ளனர் (இவ்வெண்ணிக்கைகள் சிவகாமியின் மொழிபெயர்ப்பு நூற்றொகையின் அடிப்படையில் இங்கு தரப் பட்டுள்ளன). இவர்களில் முக்கியமான மொழிபெயர்ப்பாளர்கள் பற்றியக் குறிப் புகளை பின்வருமாறு அட்டவணைப்படுத்தலாம்.

அட்டவணை என்.2:16, தமிழிலிருந்து பிறமொழிகளுக்கு மொழிபெயர்ப்பு செய்தவர்கள்

1	2	3	4	5
வ. என்.	மொழிபெயர்ப்பாளர் பெயர்	மொழிபெயர்ப்பின் தலைப்பு	இலக்கியவகை	மொழி
1.	ஜே.வி.செல்லையா	பத்துப்பாட்டு	கவிதை	ஆங்கிலம்
2.	ஜி.யு. போப்	திருக்குறள்	"	"
3.	ஏ.கே. ராமானுஜம்	குறுந்தொகை	"	"
4.	எம்.மிசிகெமி கோவோகதா	திருக்குறள்	"	சிங்களம்
5.	தரசந்த்கைரா	வியாசர்விருந்து	கட்டுரை	சிந்தி
6.	சேங்க்சி	திருக்குறள்	கவிதை	சீனம்
7.	கமல் வி. சுவலபெல்	பஞ்சும் பசியும்	நாவல்	செக்கஸ்சுலோவேகியன்
8.	கிராபே	நன்னூல்	இலக்கணம்	ஜெர்மன்
9.	டி.கத்	திருக்குறள்	கவிதை	டச்சு
10.	யு. மயோதன்த்	"	"	பர்மி
11.	எஸ்.எல். பெர்விக்	"	"	பிஜி
12.	ஜூலியன் வின்சன்	சீவகசிந்தாமணி	"	பிரெஞ்சு
13.	பென்டிட் ஆல்டோ	குறள்	"	பின்னிஸ்
14.	வான்டினோவஸ்கேவ் உமாதேவி	"	"	போலிஷ்
15.	அலிப்பாசாஜுசை	அபிராமிஅந்தாதி	"	மலாய்
16.	ஏ.எம். பதிகோரஸ் கிஜி	திருவிளையாடற் புராணம்	"	ருசியன்

1	2	3	4	5
17	வீரமாமுனிவர்	திருக்குறள்	கவிதை	லத்தீன்
18	பிரேகோம்யக்கே	"	"	ஸ்வீடிஷ்
19.	தவுர்கரிஜ்ஜன்	அலையோசை	நாவல்	அசாமி
20	கஸ்தூ ரிரங்கச்சார்யா	திருப்பாவை	கவிதை	இந்தி
21	சரஸ்வதிராமநாதன்	பெண்	நாவல்	"
22	முகமத் யூசுப்கோகன்	குறள்	கவிதை	உருது
23	கேமகந்தமிஸ்ரா	தமிழ்சிறுகதைகள் (எம்.பி.சோம சுந்தரம்தொகுப்பு)	சிறுகதை	ஒரியா
24	நவ்நிட்மெட்ராசி	பொன்மலர்	நாவல்	குஜராத்தி
25	எஸ்.என். ஸ்ரீராம தேசிகன்	பரிபாடல்	கவிதை	சமஸ்கிருதம்
26	வெங்கடேசசெட்டியார்	திருவாய்மொழி	"	"
27	எஸ்.எஸ்.ராம்	திருக்குறள்	"	சௌராஷ்டிரம்
28	அமிர்தாபிரிதம்	தமிழ்ச்சிறுகதைகள் (எம்.பி.சோமசுந்தரம் தொகுப்பு)	சிறுகதை	பஞ்சாபி
29	மகாதேவசாஸ்திரி ஜோசி	சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி	கவிதை	மராத்தி
30	இராமானுஜதாஸ்	திருவாய்மொழி	"	வங்காளி
31	எல். குண்டப்பா	என் சரிதம்	கட்டுரை	கன்னடம்
32	ஜெகநாதராஜு	குறிஞ்சிப்பாட்டு	கவிதை	தெலுங்கு
33	பி.எஸ். ரெட்டி	கம்பராமாயணம்	"	"

1	2	3	4	5
34	வி.ஆர். பரமேஸ்வரன்பிள்ளை	புறநானூறு	கவிதை	மலையாளம்
35	கோபாலகுறுப்பு	திருக்குறள்	"	"
36	நாராயணன்நாயர்	மணிமேகலை	"	"
37	சி.ஏ, பாலன்	பாரீசுக்குப்போ	நாவல்	"
38	"	அம்மாவந்தாள்	"	"
39	மா. இளையபெருமாள்	தொல்காப்பியம்	இலக்கணம்	"

தமிழ்மொழிபெயர்ப்பாளர்களில் சிலர் பிறமொழி நூல்களைத் தமிழிலும் தமிழ் நூல்களைப் பிறமொழிகளிலும் மொழிபெயர்த்துள்ளனர். இவர்களில் மா. இளையபெருமாள், சி.ஏ. பாலன், நீலபத்மநாபன் போன்றவர்கள் மலையாள நூல்களைத் தமிழிலும், தமிழ் நூல்களை மலையாளத்திலும் மொழி பெயர்த்துள்ளவர்களில் குறிப்பிடத்தக்கவர்களாவர். பொதுவாக இவர்களின் முயற்சியை வரவேற்கத்தக்க ஒன்றாகக் கருதலாம். ஆனால் தற்காலத்தைப் பொறுத்தமட்டில் பிறமொழிகளிலிருந்து நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்து அறிமுகப்படுத்துவதைவிடத் தமிழ் நூல்களைப் பிறமொழிகளில் மொழிபெயர்த்து அறிமுகப்படுத்துவதில் தமிழ் மொழிபெயர்ப்பாளர்கள் ஆர்வம் காட்டிவருகிறார்கள். இந்த நிலை மாறி பிறமொழிகளிலிருந்து தமிழில் மொழிபெயர்ப்பதை தமிழ் மொழிபெயர்ப்பாளர்கள் தலையாய நோக்கமாகக் கொள்வது தமிழ்இலக்கியவளர்ச்சிக்கு உறுதுணையாக அமையும்.

6. தமிழில் மொழிபெயர்ப்புப் பணிசெய்யும் நிறுவனங்கள்

தமிழ்மொழிபெயர்ப்புப் பணியில் பல்வேறு நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன. அவற்றைப் 1. பதிப்பகங்கள், 2. தொண்டு மற்றும் பொது நிறுவனங்கள், 3. பல்கலைக்கழகங்கள், 4. வானொலி மற்றும் தொலைக்காட்சி நிலையங்கள், 5. திரைப்படத் தயாரிப்பகங்கள், 6. இதழ்வெளியீட்டலுவலகங்கள் என வகைப்படுத்தலாம்.

1. பதிப்பகங்கள்

பிறமொழிகளிலிருந்து நூல்களை தமிழில் மொழிபெயர்த்து வெளியிடுவதில் பதிப்பகங்கள் பல ஈடுபட்டுள்ளன. இவற்றை 1. அரசுத்துறைகளைச் சார்ந்தவை, 2. தனியார் துறைகளைச்சார்ந்தவை என வகைப்படுத்தலாம்.

1. அரசுத்துறைகளைச் சார்ந்தவை

தமிழ் மொழிபெயர்ப்பில் ஈடுபட்டுள்ள அரசு சார்ந்த பதிப்பகங்களை 1. மத்திய அரசைச்சார்ந்தவை, 2. மாநில அரசைச்சார்ந்தவை என வகைப்படுத்தலாம்.

1. மத்திய அரசைச் சார்ந்தவை

மத்திய அரசைச் சார்ந்த பதிப்பகங்களாக சாகித்திய அக்காடமி, நேஷனல் புக்டிரஸ்ட் ஆகியவை செயல்பட்டு வருகின்றன. இவை இந்திய மக்களுக்கிடையே பண்பாட்டு அடிப்படையிலான உறவை ஏற்படுத்தும் நோக்கில் பல்வேறு மொழிகளுக்கிடையே மொழிபெயர்ப்பைச் செய்வதின் படி நிலையாகப்பிற இந்திய மொழிகளிலிருந்து தமிழிலும், தமிழிலிருந்து பிற இந்தியமொழிகளுக்கும் நூல்களை அறிமுகம் செய்துவருகின்றன.

2. மாநில அரசைச் சார்ந்தவை

தமிழில் மொழிபெயர்ப்புச் செய்துவரும் மாநில அரசு நிறுவனமாக தமிழ் வெளியீட்டுக்கழகம் (Bureau of Tamil Publication) உள்ளது. இது 1962இல் தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்டது. இதன் வாயிலாக 35 திற்கும் மேற்பட்ட பிறமொழி நூல்கள் தமிழில் அறிமுக மாகியுள்ளன. தற்பொழுது இது தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் என்ற

பெயரில் அறியப்பட்டு வருகிறது.

2. தனியார் துறைகளைச்சார்ந்தவை

தமிழ் மொழிபெயர்ப்புப் பணியில் தனியார் துறைகளைச் சார்ந்த பதிப்பகங்களான பாரிநிலையம் (சென்னை), பாரதிபதிப்பகம் (சென்னை), குயிலன் பதிப்பகம் (சென்னை), மணிமேகலைப்பிரசுரம் (சென்னை), தமிழ்ப்புத்தகாலயம்(சென்னை), நர்மதா பதிப்பகம் (சென்னை), வாசகர்வட்டம் (சென்னை), சென்னைபுக்ஸ், அன்னம் வெளியீடு (சிவகங்கை), மீட்சிபுக்ஸ் (ஊட்டி), கிரியாவெளியீடு (சென்னை), நியூசெஞ்சுரிபுக் உறவுஸ், சைவசித்தாந்தநூற்பதிப்புகழகம் போன்றவை ஈடுபட்டுள்ளன. இவை வெவ்வேறு மொழிகளிலிருந்து பல்வேறு வகையிலான நூல்களின் மொழிபெயர்ப்பு களைத் தமிழில் வெளியிட்டுவருகின்றன.

2. தொண்டு மற்றும் பொது நிறுவனங்கள்

தொண்டு மற்றும் பொதுநிறுவனங்களான இராமகிருஉஷ்ணாமிஉஷன், நாராயணகுருகுலம், சித்தசமாஜ், இந்தியவேதாகமச் சங்கம் (பெங்களூர்), விவேகானந்தாகேந்திரம், முஸ்லீம் சொசைட்டி, மக்கள் கலாச்சாரக்கழகம் (இடது சாரிகளின் அமைப்பு), கிறிஸ்தவ இலக்கியச் சங்கம் (சி.எல்.எஸ்) போன்றவைகள் சமயம், அரசியல் மற்றும் கலை ஆகிய வகைகளைச் சார்ந்த இலக்கியங்களைத் தமிழில் மொழிபெயர்த்து அறிமுகப்படுத்துவதில் முனைப்புகாட்டி வருகின்றன.

3. பல்கலைக்கழகங்கள்

நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்து அறிமுகப்படுத்துவதில் சென்னைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைப்பல்கலைக்கழகம், தஞ்சைத் தமிழ்ப்

பல்கலைக்கழகம் ஆகியவை முன்னிலையில் உள்ளன. மேலும் கலைச்சொல் வங்கி ஒன்றை நிறுவி அறிவியல் நூல்களை மொழிபெயர்ப்பதின் ஒரு பகுதியாக கலைச்சொற்களின் தமிழ்ப்பெயர்ப்புகளைச் சேகரிக்கும் பணியைத் தமிழ்ப்பல் கலைக்கழகம் செய்துவருகின்றது. மட்டுமல்லாமல் கணிப்பொறிமூலம் தமிழில் மொழிபெயர்ப்பைச் செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதோடு மொழி பெயர்ப்புக்குத் தனித்துறையையும் நிறுவியுள்ளது. அண்ணாமலைப்பல்கலைக்கழகத்தில் மொழிபெயர்ப்பு முதுகலைப்பட்டமாகக் நடத்தப்படுகிறது. திருவிதாங்கூர் பல்கலைக்கழகம் (இன்றைய கேரளப்பல்கலைக்கழகம்) சுவாதித்திருநாள் மகாராஜா, கேரளபாணியம், மலையாள மொழி இலக்கணம் ஆகியநூல்களின் தமிழ்மொழிபெயர்ப்புகளை வெளியிட்டுள்ளது.

4. வானொலி மற்றும் தொலைக்காட்சி நிலையங்கள்

வானொலி, தொலைக்காட்சி நிலையங்களிலிருந்து செய்திகள், சொற்பொழிவுகள் போன்றவற்றின் தமிழ்ப்பெயர்ப்புகள் ஒலி, ஒளி பரப்புகளின் வாயிலாக வெளியிடப்படுவதோடு பிற மொழிகளில் உள்ள நாடகம் மற்றும் தொடர்நிகழ்ச்சிகள், விளம்பரங்கள் போன்றவற்றின் தமிழ்வடிவங்களும் வெளியிடப்படுகின்றன.

5. திரைப்படத்தயாரிப்பகங்கள்

திரைப்படத் தயாரிப்பகங்களும் மொழிபெயர்ப்புப் பணியில் ஈடுபட்டுள்ளன. இவை மிகுதியும் மொழிமாற்றுதல் (Dubbing), கருத்துக்குறிப்பிடுதல் (Subtitiling) ஆகிய உத்திகளின் வாயிலாக ஒரு மொழியில் தயாரிக்கப்பட்ட படத்தைமற்றொரு மொழியினருக்குப் புரியும்படியாகச் செய்கின்றன.

6. இதழ் வெளியீட்டுவலகங்கள்

தமிழ் மொழிபெயர்ப்புப் பணியின் வளர்ச்சியில் இதழ்கள் பலவும் தொண்டாற்றிவருகின்றன. இவை மொழிபெயர்ப்புகளை வெளியிடல், மொழி பெயர்ப்புக்கொள்கை குறித்தக் கட்டுரைகளை வெளியிடல் என இருவேறு நிலைகளில் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் மொழிபெயர்ப்புகள் வெளிவந்த இதழ்களாக விவேகபோதினி, தாமரை, பிரபஞ்சம், எழுத்து, தீபம், மஞ்சரி, மனவோசை, செம்மலர், சுபமங்களா, விருட்சம், மேலும், மீட்சி, கனவு, வெளி, வைகறை(இது தமிழ், மலையாளம் ஆகிய இருமொழிகளிலான படைப்புகளைத் தாங்கிவரும் இதழாகும்) போன்றவை உள்ளன. இவற்றில் மஞ்சரி 1947 முதல் இந்திய மற்றும் வெளிநாட்டுமொழிகள் பலவற்றிலுமிருந்து கட்டுரைகள் கதைகள், நாவல்கள் போன்றவற்றின் தமிழ்வடிவங்களை வெளியிட்டு வருகின்றது. மேலும் மொழிபெயர்ப்பு பற்றியக்கட்டுரைகளை வெளியிடுவனவாக கலைக்கதிர், கலைமகள், தினமணி போன்ற வெகுஜன இதழ்களும், களஞ்சியம் போன்ற ஆய்வி தழ்களும், உள்ளன.

தமிழ் மொழிபெயர்ப்புப் பணியை அரசு, மற்றும் தனியார் துறைகளைச் சார்ந்த பல்வேறு நிறுவனங்கள் செய்துவந்தாலும் இப்பணி தொய்வுடைய தாகவே உள்ளது. இதற்குக் காரணங்களாக 1. தமிழர் பிறமொழிக் கல்வியில் (ஆங்கிலம், இந்தி தவிர்த்த பிறமொழிகளைக் கற்பதில்) ஆர்வமற்றிருத்தல், 2. கேரளம், கர்நாடகம், ஆந்திரம், மகாராஉஷ்டிரம், டெல்சி போன்ற பகுதிகளிலும், இலங்கை, மலேசியா போன்ற நாடுகளிலும் வாழும் தமிழர்கள் பலர் அவ்வப்பகுதிகளைச் சார்ந்த மொழிகளில் பயிற்சி பெற்றிருந்தும் மொழிபெயர்ப்புப்பணியில் ஆர்வமற்றிருத்தல், 3. மொழிபெயர்ப்பு நூல்களை

வாங்கிப்படிக்க தமிழ் வாசகர்கள் ஆர்வம் காட்டாதிருத்தல், 4. மொழிபெயர்ப்புக்கு தேர்ந்தெடுக்கும் நூல்கள் பல தரமற்றவையாகக் காணப்படுதல், 5. அவ்வப்போது வெளிவருகின்ற மொழிபெயர்ப்புகள் பல எளிதில் புரிந்து கொள்ள இயலாததாக அமைதல், 6. மொழிபெயர்ப்புகளை வெளியிட பதிப்பகத்தார் ஆர்வம் காட்டாமை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

7. மொழிபெயர்ப்புகளால் தமிழின் அமைப்பில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்

தமிழ் பண்டைக்காலத்திலிருந்தே பிறமொழிகளோடு கொண்டிருந்த தொடர்பால் பிறமொழிக்கருத்துக்களும் நூல்களும் தமிழ்வடிவம் பெற்றதோடு தமிழ் மொழியின் அமைப்பிலும் சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இவற்றை 1. எழுத்து, 2. சொல், 3. தொடர் போன்ற நிலைகளில் விளக்கலாம்.

1. எழுத்து

தமிழ் ஒலியன்களின் வரிசையில் மிகுதியாகக் கலப்பு ஏற்படுத்திய மொழியாக சமஸ்கிருதத்தைக் குறிப்பிடலாம். இம்மொழியிலிருந்து அதன் சிறப்பெழுத்துக்களில் வருக்க எழுத்துக்களுக்கு இடைநின்ற உயிர்ப்பொலி ஒலிப்பொலி, உயிர்ப்பு ஒலிப்பொலி ஆகிய வகைகளைச்சேர்ந்த பதினைந்து ஒலிகளும், உரசொலிகளான ś, ṣ, s, h, kṣ ஆகிய ஐந்து ஒலிகளும் தமிழில் புகுந்துள்ளன. இவை தமிழில் மாற்றொலிகளாகக் கருதப்படுகின்றன. இவற்றில் ஜகரம், ஷகரம் ஸகரம், ஹகரம், க்ஷகரம், ஆகிய ஐந்து எழுத்துக்களுடன் 'திரு' என்ற பொருளைத்தரும் 'ஸ்ரீ' என்ற எழுத்தையும் மணிப்பிரவாள காலம் முதல் கிரந்த எழுத்துமுறையில் தமிழில் எழுதிவருகின்றனர். மேலும் ஆங்கில மொழியின் தாக்கத்தால் தமிழில் புகுந்துள்ள Bகரம் Fகரம் போன்ற ஒலிகளில் B கரத்தை மாற்றொலி முறையில் பாங்கு, பிராஞ்சு என்பன போன்று எழுதுகின்றனர். ஆனால், F கரத்தை மாற்றொலி முறையில் பாரின், பாஸ்ட், பாறஸ்ட்ர் என்பன போன்றும், அறிவியல் துறைகளில் இவ்வொலியை தமிழிலுள்ள

ஆய்த எழுத்தைப் பயன்படுத்தி ஃபுளூரின், ஃபாரடே என்ற முறையிலும் எழுதுகின்றனர்.

2. சொல்

தமிழில் முண்டா, பிராகிருதம், பாலி, சமஸ்கிருதம், கிரேக்கம், அரபு, பாரசீகம், துருக்கி, உருது, மலாய், சீனம், சிங்களம், போர்ச்சுகீசியம், டச்சு, பிரெஞ்சு, ஆங்கிலம், இந்தி, மராத்தி, தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற பல்வேறு மொழிகளிலுள்ள சொற்கள் பல கலந்துள்ளன. அதுபோலவே தமிழிலுள்ள சொற்கள் பலவும் சமஸ்கிருதம், கிரேக்கம், எபிரேயம், சப்பான், ஆங்கிலம் போன்ற மொழிகளிலும் காணப்படுகின்றன. இருப்பினும் தமிழில் மிகுதியான கலப்பை ஏற்படுத்திய மொழிகளாக பண்டைக் காலத்தில் சமஸ்கிருதமும், தற்காலத்தில் ஆங்கிலமும் உள்ளன. இம்மொழிகளிலுள்ள சொற்கள் தமிழில் கலந்துள்ள முறைகளின் அடிப்படையில் அவற்றை 1. ஒலிபெயர்க்கப்பட்டவை, 2. கடன் மொழிபெயர்ப் பாக்கப்பட்டவை, 3. பொருள் விரிவாக்கப்பட்டவை, 4. பொருள் நீக் கப்பட்டவை, 5. கலவை வடிவங்களாக்கப்பட்டவை என வகைப்படுத்தி விளக்க லாம்.

1. ஒலிபெயர்க்கப்பட்டவை

பிற மொழிகளிலிருந்து தமிழில் ஒலிபெயர்க்கப்பட்டுள்ள (வடமொழியிலி ருந்து) சொற்களை 1. தற்சமங்கள், 2. தற்பவங்கள் என வகைப்படுத்தி விளக்கலாம்.

1. தற்சமங்கள்

வடமொழிக்கும் தமிழுக்கும் பொதுவான எழுத்துக்களால் விகாரமின்றி வழங்கப்படும் சொற்கள் தற்சமங்களாகும். சான்றுகளாக ஓணம் (மாயோன்மேய ஓண நன்னாள், மதுரைக்.591), குலம் (மலையுறைக்கடவுள் குலமுதல் வாழ்த்தி, ஐங்குறு. 259), யாமம் (முந்தை யாமம் சென்ற பின்றை, மதுரை. 620), கோவலர் (மடிவாய்க் கோவலர் குடிவயிற் சேப்பின், பெரும்பாண்.166), மானம் (மான விறல்வேள், பதிற்று. 42), கன்னி (உருவுடைக் கன்னியரைப் போல, நாலடி. 263), பாவம் (பாவம் பழி பற்றற வேண்டுவீர், அப்பர். 5,99,1), இமயம் (பொற்கோட்டிமயமும் பொதியமும் போன்றே, புறம்.2) போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

2. தற்பவங்கள்

வடமொழிக்குரிய சிறப்பெழுத்தாலும், பொதுவும் சிறப்புமாகிய ஈரெழுத்தாலும் இயன்று திரிதல் முதலிய விகாரம்பெற்று தமிழில் வழங்கும் சொற்கள் தற்பவங்களாகும். சான்றுகளாக யூபம் (யூபம் நட்ட வியன்களம் பல கொல், புறம்.15), நாகம் (நாகத்தன்ன பாகர் மண்டிலம், புறம். 367), சகடம் (சகடம் பண்டம் பெரிது பெய்தன்றே, புறம்,102), நகர் (முக்கட் செல்வன் நகர்வலம் செயற்கே, புறம்.6), பதாகை (பல்வேறு குழூஉக் கொடி பதாகை நிலைஇ, மதுரை. 373) போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

2. கடன் மொழிபெயர்ப்பாக்கப்பட்டவை (Loan Translations)

தருமொழிவடிவத்தின் மொழியை மட்டும் மாற்றி (சொற்பெயர்ப்பாக) பெறுமொழிவடிவத்தை அமைத்தலை இவ்வகையில் அடக்கலாம். சான்றுகளாக "உறிமயம்" என்பதை "பனிபடுநெடுவரை" (புறம்.6:1) எனவும், "த்ரிநயன்" என்பதை "முக்கட்செல்வன்" (புறம்.6) எனவும், "தர்மசக்ரம்" என்பதை

"அறவாழி" (குறள்,8) எனவும், "ஸம்ஸாரசாகரம்" என்பதை "பிறவிப் பெருங்கடல்" (குறள்.10) எனவும், "ஆஸ்ரயாசக" என்பதை "சேர்ந்தா ரைக்கொல்லி" (குறள்.306) எனவும், "அஉறங்காரமமகார" என்பதை "யான் எனது" (குறள்.346) எனவும், "காம க்ரோதமோக" என்பதை "காமம் வெகுளி மயக்கம்" (குறள்.360) எனவும் சொற்பெயர்ப்பு செய்துள்ளதைக் குறிப்பிடலாம் (பார்க்க. செ.வை.சண்முகம், 1989: 234-235).

3. பொருள் விரிவாக்கப்பட்டவை

தருமொழிச்சொற்களுக்கு இணையாக மற்றொரு பொருளில் வழங்கும் பெறுமொழிச்சொற்களைப் பயன்படுத்தி அதன் பொருளில் நீட்டம்பெறுதலை இவ்வகையில் அடக்கலாம். சான்றுகளாக 'ரகசியம்' என்ற பொருளில் உள்ள 'மறை' என்ற சொல்லை 'வேதம்' என்னும் பொருளில் "அருமறை" (திருமுருகு.186) எனவும், 'அரசன்' என பொருள்படும் 'வேந்தன்' என்ற சொல்லை 'இந்திரன்' என்னும் பொருளில் "வேந்தன் மேய தீம்புனல் உலகமும்" (தொல். அகத்.5:3) எனவும், பாண்டியனைக் குறிக்கும் 'நெடியோன்' என்ற சொல்லை இந்திரனைக் குறிக்கும் நோக்கில் "நெடியோன் கோவில்" (புறம். 214:3) எனவும் (செ. வை. சண்முகம், 1889:233-234) பயன்படுத் தியுள்ளமையைக் குறிப்பிடலாம்.

4. பொருள் நீக்கப்பட்டவை

தருமொழிவடிவத்தின் பொருட்கூறுகள் சிலவற்றை நீக்கிய நிலையில் அதன் பெறுமொழி ஒலிபெயர்ப்பைப் பயன்படுத்துதலை இவ்வகையில் அடக்கலாம். சான்றுகளாக, ஆகாயம் மற்றும் தரைவழியாகப் பயணிகளை ஏற்றிச் செல்லும் ஊர்திகளைக் குறிக்கும் 'பஸ்' என்ற பொதுச்சொல்லைத் தரைவழியாக

மட்டும் இயங்கும் ஒருவகைப் பேரூர்தியைக் குறிக்கும் நோக்கில் வழங்குவதையும், ஆண், பெண் ஆகிய இருபால் ஆசிரியர்களைக் குறிக்கும் 'டீச்சர்' என்ற சொல்லை பெண்பால் ஆசிரியரை மட்டும் குறிக்கும் நோக்கில் பயன்படுத்துதலையும் இவ்வகையில் அடக்கலாம்.

5. கலவை வடிவங்களாக்கப்பட்டவை (Loan Blend)

தருமொழிவடிவத்தின் ஒலிபெயர்ப்புடன் அதற்கு இணையான தமிழ் (பொதுச்சொல்) வடிவத்தையும் சேர்த்து பெறுமொழிவடிவத்தை அமைத்துள்ளமையை இவ்வகையில் அடக்கலாம். சான்றுகளாக, யாகசாலையில் நடப்படும் தூணைக் குறிக்கும் 'யூபம்' என்ற சொல்லுடன் "தூண்" என்பதையும் சேர்த்து "யூப நெடுந்தூண்" (புறம். 224:8) எனவும், பொற்கொல்லரைக் குறிக்கும் "கம்மியன்" என்ற சொல்லுடன் 'பொன்செய்' என்பதையும் சேர்த்து "பொன்செய் கம்மியன்" (நற்.313:2) எனவும் (பார்க்க. செ.வை.சண்முகம், 1989: 235-236) பெறுமொழி வடிவமாக்கியுள்ளமையைக் குறிப்பிடலாம்.

3. தொடர்

பிறமொழிகளின் தாக்கத்தால் தமிழின் தொடரமைப்பிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. சான்றாக, வடமொழியிலுள்ள 'அதி' முதலிய உபசர்க்கங்களையும் (அதிலோபமாந்தர், சீவக. 2986; அதிநுட்பம், குறள்.631), யற்சந்தம் வந்தபின் தற்சந்தம் வருதல் போன்ற வாக்கிய அமைப்புகளையும் (எப்பொருள் யார் யார் வாய், குறள். 423) தமிழில் அவ்வாறே மொழிபெயர்த்து வழங்குவது பற்றி பிரயோகவிவேகம் (45), இலக்கணக் கொத்து முதலிய நூல்கள் குறிப்பிடுவதைச் சுட்டிக்காட்டலாம். மேலும் தமிழில் அருகிய நிலையில் பயன்படுத்தப்படும் செயப்பாட்டுவினை அமைப்பிலான தொடர்களைப் பண்டைக் காலத்தில் வடமொழித்தொடர்பாலும் தற்காலத்தின் ஆங்கில மொழியின் தாக்கத்தாலும் மிகப்பரவலாகப் பயன்படுத்துதலையும் இங்கு குறிப்பிடலாம். இதற்குச் சான்றுகளாக "எல்லோரும் உடனே அரங்சிற்கு வாருங்கள்" என்பதை "அனைவரும் உடனே அரங்கில் வந்து சேரும்படியாகக் கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்"

எனவும், "நிர்வாகத்தினர் பயணப்படிகளை வழங்குவதில்லை" என்பதை "நிர்வாகத்தினரால் பயணப்படிகள் வழங்கப்படமாட்டாது" எனவும் வழங்குதலை எடுத்துக்காட்டலாம் (மொழிபெயர்ப்புகளால் தமிழ்மொழி அடைந்த மாற்றங்களில் ஒருசில மட்டுமே மாதிரிக்காக இங்கு காட்டப்பட்டன. இவை இன்னும் விரிவாகவும், தனியாகவும் ஆராயப்படவேண்டிய ஒன்று ஆகும்).

தொகுப்புரை
----

1. தமிழில் மொழிபெயர்ப்புப்பணி பண்டைக்காலத்திலிருந்தே தொடங்கி பல்வேறு நிலைகளில் வளர்ச்சி பெற்றுள்ளது. இதன் பொதுத்தன்மைகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. பழந்தமிழ் இலக்கியங்களில் கிடைப்பனவற்றுள் மொழிபெயர்ப்புகளாக எந்த நூலும் அமையவில்லை. ஆனால் அவற்றில் இராமாயணம் மகாபாரதம் ஆகியவற்றிலுள்ள கதைநிகழ்ச்சிகள் ஆங்காங்கே இடம்பெற்றுள்ளன. நீதி இலக்கியங்களில் வடமொழி நீதிநூல்களின் தாக்கம் சிறிதளவு காணப்படுகிறது. மேலும் ஆசாரக்கோவையை மொழிபெயர்ப்புக்குச் சான்றாக இலக்கணவிளக்கப் பாட்டியலின் உரை குறிப்பிடுகின்றது. மொத்தத்தில் சங்க இலக்கியம் நீதி இலக்கியம் போன்றவற்றில் வடமொழி சொற்களும் தொடர்களும் ஆங்காங்கே காணப்படுகின்றன. சங்கம் மருவிய காலம் முதல் சமணம், புத்தம், சைவம், வைணவம் போன்ற சமயங்களைச்சார்ந்த நூல்கள் பல பிராகிருதம், பாலி, சமஸ்கிருதம் போன்ற மொழிகளிலிருந்து தமிழாக்கப்பட்டன. பிற்காலத்தில் இஸ்லாம், கிறிஸ்தவம் முதலிய சமயநூல்களும் தமிழ்வடிவம் பெற்றுள்ளன. இடைக்கால மொழிபெயர்ப்புகள் மிகுதியும் தொகுத்தல், விரித்தல், தொகைவிரித்தல்

போன்ற முறைகளிலும் வழிநூல், சார்புநூல் முதலிய கோட்பாடுகளின் அடிப்படையிலும் தமிழ்வடிவம் பெற்றவையாகும். தற்காலத்தில் வெளிநாட்டு மொழிகள், வடஇந்திய மொழிகள் மற்றும் திராவிட மொழிகளிலிருந்து நூல்கள் பல மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. தமிழ்நூல்கள் பல தொடக்க காலத்தில் சமஸ்கிருதத்திலும் பிற்காலத்தில் மேனாட்டாரின் மொழிபெயர்ப்பாக வெளிநாட்டு மொழிகளிலும் அறிமுகமாகியுள்ளன. தற்காலத்தைப் பொறுத்த மட்டில் இந்த கொடுக்கல் வாங்கல்கள் மிகப்பரந்த அளவில் நடந்துவருகிறது. ஆனால் கொடுத்தலை விடவும் வாங்குவதல்தான் மிகுதியாகக் காணப்படுகிறது. குறிப்பாக ஆங்கிலத்திலிருந்து படைப்பிலக்கியங்களுடன் பல்வேறு அறிவுத்துறை சார்ந்த நூல்களும் தமிழில் மொழிபெயர்க்கப்படுகின்றன. மேலும் பிற மொழிகளிலுள்ள நூல்கள் பலவற்றிற்குரிய ஆங்கில மொழிபெயர்ப்புகளைத்தமிழ் படுத்தும் வழக்கமும் நடைமுறையில் உள்ளது.

2. காலத்திற்கேற்ப மொழிபெயர்ப்பின் அணுகுமுறையிலும் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. குறிப்பாக பிறமொழி நூல்களின் கருத்துக்களை வாங்கிக்கொண்டு அவற்றை வழி மற்றும் சார்புநூல் கோட்பாடுகளின் அடிப்படையில் தொகுத்தும், விரித்தும், தொகைவிரித்தும் மொழிமாற்றிவந்த பழங்கால முறை மேனாட்டாரின் வருகைக்குப்பிறகு மாற்றப்பட்டு, மூலநூலின் மொழியை மட்டும் பெயர்த்து பெறுமொழிவடிவத்தை அமைக்கும் முறை வழக்கிற்கு வந்ததைச் சுட்டிக்காட்ட லாம். இம்முறையின் காரணமாக மொழிபெயர்ப்பை மூலநூலுக்குச் சமமான தாகக் கருதும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

3. தற்காலத்தில் பிறமொழி நூல்களை மொழிபெயர்ப்பு செய்வதோடு மொழிபெயர்ப்புக் கொள்கைகளையும் சிக்கல்களையும் விளக்கும் நூல்களும் கட்டுரைகளும் தமிழில் எழுதப்பட்டுள்ளன. மேலும் மொழிபெயர்ப்பு குறித்த ஆய்வுகளும் நிகழ்ந்தவாறு உள்ளன. தற்காலத்தில் பிறமொழிகளைப் போலவே தமிழிலும் மொழிபெயர்ப்பு பயன்படு மொழியியலின் ஒருபிரிவாக வளர்க்கப்பட்டு வருகிறது.

4, அகராதிகள் பிறமொழிகளிலிருந்து தமிழுக்கு, தமிழிலிருந்து பிறமொழிகளுக்கு என இருவேறு நிலைகளில் காணப்பட்டாலும் அவை மொழி பெயர்ப்புக்கு உதவுவதாக அமையாததால் எந்த மொழியிலிருந்து மொழி பெயர்க்கிறார்களோ அந்த மொழியிலுள்ள ஒருமொழி அகராதிகளைப் (Monolingual Dictionaries) பயன்படுத்தும் நிலையே நீடித்துவருகின்றது. இந்நிலை மாறி அவை மொழிபெயர்ப்புக்கு உதவுவனவாக அமையவேண்டும்.

5. தமிழில் மொழிபெயர்ப்பாளர்கள் பிறமொழி நூல்களைத் தமிழில் அறிமுகப்படுத்தல், தமிழ்நூல்களைப் பிறமொழியில் அறிமுகப்படுத்தல் என இரு வேறு நிலைகளில் செயல்பட்டாலும் தற்காலத்தைப் பொறுத்தமட்டில் தமிழ் நூல்களைப் பிறமொழிகளில் மொழிபெயர்ப்பதையே தமிழ்மொழிபெயர்ப்பாளர்கள் முனைப்புடன் செய்து வருகிறார்கள். இந்நிலை மாறிப் பிறமொழிநூல்களைத் தமிழில் மொழிபெயர்க்கத் தமிழ் மொழிபெயர்ப்பாளர்கள் முன்வரல்வேண்டும்.

6. மொழிபெயர்ப்புப்பணியை அரசு மற்றும் தனியார் துறைகளைச் சார்ந்த நிறுவனங்கள் பலவும் செய்து வந்தாலும் தமிழ் மொழிபெயர்ப்பு வாசகர்களிடையே அதிக ஈர்ப்பைப் பெறவில்லை.

7. மொழிபெயர்ப்பின் மூலமாக பிறமொழி இலக்கியங்கள் பல தமிழ் வடிவம் பெற்றுள்ளதோடு தமிழின் அமைப்பு நிலையிலும் (எழுத்து, சொல், தொடர்) மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பிறமொழிகளின் தாக்கத்தால் தமிழில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது போலவே தமிழின் தாக்கத்தால் எபிரேயம், கிரேக்கம், சமஸ்கிருதம் போன்ற பழங்கால மொழிகளிலும், ஆங்கிலம் போன்ற தற்கால மொழிகளிலும் சொற்கலப்பு முதலான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இதனை 'பிற மொழிகளில் தமிழின் தாக்கம்' பற்றிய விரிவான ஆய்வின்மூலமே நிறுவமுடியும்.

2. தமிழ் மொழிபெயர்ப்பின் வரலாற்றை அடிப்படையாகக்கொண்டு பின் வருவனவற்றைப் பரிந்துரைகளாகக் கொள்ளலாம்.

1. தமிழில் மொழிபெயர்ப்பு பண்டைக்காலத்தில் பிராகிருதம், பாலி, சமஸ்கிருதம் போன்ற மொழிகளிலிருந்தும், தற்காலத்தில் ஆங்கிலத்திலிருந்தும் பரவலாகச் செய்யப்பட்டுள்ளது. பழங்காலத்தில் சமயநூல்களும் தற்காலத்தில் அறிவுத்துறை நூல்களும் மொழிபெயர்ப்பின் வாயிலாகப் பெறப்பட்டுள்ளன. ஆனால் அறிவுத்துறை சார்ந்த இலக்கியங்களுக்காக ஆங்கிலத்தை மட்டும் சார்ந்து நிற்கும் நிலையே நீடித்துவருகிறது. இதனைத் தவிர்த்து சீனம், ஜப்பான், ருசியன், செர்மன், பிரெஞ்ச் போன்ற மொழிகளிலுள்ள நூல்களையும் மொழிபெயர்ப்பது தமிழ்நூல் வளர்ச்சிக்கு உதவுவதாக அமையும். எனவே தருமொழி பற்றிய எல்லையை மேலும் வளர்ந்த நாடுகளிலுள்ள மொழிகளிலுமாக விரிவுசெய்துகொள்வது தேவையான ஒன்றாகும்.

2. தமிழில் மொழிபெயர்ப்புப் பணி ஓரளவு ஆங்கிலத்திலிருந்து நடைபெறுகி றதே ஒழிய இந்திய மொழிகளிலுமாக நடைபெறவில்லை. இதற்குக் காரண மாகத் தமிழ் பிற இந்திய மொழிகளுடனும் பிற இந்திய மொழிகள் தமிழுடனும் தொடர்பற்றிருத்தல், பிற இந்திய மொழிகளும் ஆங்கிலம் போன்ற வளர்ந்த நாடுகளிலுள்ள மொழிகளையே அவாவி நிற்றல், பிற இந்திய மொழிகள் மெச்சத்தக்க அளவிலான இலக்கியப்படைப்புகளைப் பெறாதிருத்தல் போன்றன அமைந்தாலும் அவற்றைக் கருத்தில் கொள்ளாது மொழிபெயர்ப்பின் எல்லையை மேனாட்டு மொழிகளுடன் மட்டுமல்லாது இந்திய மொழிகளுடனும் விரிவுபடுத்துவது பயன்தருவதாக அமையும்.

3. தமிழிலிருந்து பிறமொழிக்குச் சென்றவற்றில் பண்டை இலக்கியம், நீதி இலக்கியம், காப்பிய இலக்கியம் போன்றவையே முக்கிய இடம் வகிக்கின்றன.

இதற்குக்காரணமாக தமிழ் தற்கால இலக்கிய நிலையில் பின்தங்கி நிற்பதைச் சுட்டிக்காட்டலாம். இக்குறைபாட்டைத் தீர்க்கத் தமிழர்கள் பிறமொழி நூல்களை மிகுதியாக மொழிபெயர்ப்பதோடு அம்மொழிகளுக்குச் சமமாக தமிழைத் தகுதிப்படுத்திக்கொள்ளவும் வேண்டும்.

4. பிறமொழிகளிலிருந்து தமிழில் அறிமுகமாகியுள்ள நூல்களில் பலவும் ஆங்கில மொழிபெயர்ப்புகளிலிருந்து பெறப்பட்டவை ஆகும். மேலும் தமிழ் நூல்கள் ஆங்கில மொழியில்தான் மிகுதியான அளவு மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இதற்குக் காரணமாக தமிழர்களின் பிறமொழிக்கல்வி என்பது ஆங்கிலத்துடனும் இந்தி போன்ற மொழிகளுடன் சிறுபான்மையாகவும் நின்று விடுவதைக் சுட்டிக்காட்டலாம். எனவே தமிழர்கள் ஆங்கிலம் தவிர்த்த பிறவெளிநாட்டு மொழிகளையும் இந்தி தவிர்த்த ஏனைய இந்திய மொழிகளையும் கற்பதில் ஆர்வம் கொள்ளவேண்டும்.

5. தமிழ் மொழிபெயர்ப்பில் நூல்தேர்வு என்பது பெரும்பாலும் மொழிபெயர்ப்பாளர்களைச் சார்ந்திருப்பதால் மொழிபெயர்ப்பாளரின் விருப்பத்திற்குட்பட்ட நூல்கள் மட்டுமே மொழிபெயர்க்கப்படுகின்றன. இதைத் தவிர்த்து அறிஞர் குழுவின் தேர்வுக்குட்பட்ட நூல்களை மட்டும் மொழிபெயர்ப்பது தரமான நூல்களைத்தமிழில் கொண்டுவருவதற்கு உதவியாக அமையும். இதற்காக மொழிபெயர்ப்பு நிறுவனம் ஒன்று தன்னியக்க அமைப்பாக (Autonomous Body) அரசால் நிறுவப்பட்டு நூல்தேர்வு, மொழிபெயர்ப்பு ஆகிய பணிகள் ஊக்குவிக்கப் படவேண்டும்.

6. மொழிபெயர்ப்பு என்றவுடனே தமிழ் நூல்களைப்பிறமொழிகளில் (ஆங்கிலத்தில்) மொழிபெயர்ப்பது எனக் கருதாமல், பிறமொழிகளிலிருந்து

தமிழுக்கு மொழிபெயர்ப்பதைத் தலையாய நோக்கமாகக் கொள்ளவேண்டும்.

7. தமிழில் மொழிபெயர்ப்பு செய்வதை ஊக்குவிக்க பிறமொழிகளைக் கற்பித்தல், பிறமொழி இலக்கணநூல்களை வெளியிடல், பிறமொழிகளைக் கற்றவர்களை மொழிபெயர்ப்பு செய்யத்தூண்டுதல், மொழிபெயர்ப்பு சார்பான போட்டிகளை நடத்துதல், மொழிபெயர்ப்புக்கு பரிசுகள், பட்டங்கள் போன்றவற்றை வழங்குதல், மொழிபெயர்ப்பு குறித்த கல்வியைப் பாடத்திட்டத்தில் சேர்த்தல் போன்றவையும் மேற்கொள்ளப்படவேண்டும்.

8. தமிழ் மொழிபெயர்ப்பு பற்றிய தூண்டுதலை இந்தியாவில் பிறமொழி பேசும் மாநிலங்களில் வாழும் தமிழர்களிடையேயும், இலங்கை, மலேசியா போன்ற நாடுகளில் வாழும் தமிழர்களிடையேயும் ஏற்படுத்துவது அவர்கள் வசிக்கும் பகுதியைச்சேர்ந்த மொழிகளிலிருந்து நூல்களைத் தமிழில் மொழிபெயர்க்க உதவியாக அமையும்.

பகுதி - இரண்டு

இயல் - மூன்று

மலையாளமும் தமிழும்

3. மலையாளமும் தமிழும்

0. மலையாளமும் தமிழும்திராவிட மொழிக்குடும்பத்தைச் சார்ந்த மொழிகளாகும். மலையாளத்திற்கும் தமிழுக்கும் இடையே எஞ்சிய திராவிட மொழிகள் அனைத்தையும் விட நெருக்கம் மிகுதியாகக் காணப்படுகிறது. இதனைக் கருத்தில் கொண்டு மலையாளத்திற்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பையும் வேற்றுமையையும் இவ்வியல் 1. வரலாற்றுப்பின்புலம், 2. மலையாளம் – தமிழ் முரணிலக்கணம் என்ற அடிப்படையில் விளக்கிச் செல்வதாக அமைந்துள்ளது.

1. வரலாற்றுப் பின்புலம்

திருவிதாங்கூர், கொச்சி, மலபார் ஆகிய பகுதிகளில் வழங்கிவந்த மலைநாட்டுத் தமிழ் தற்காலத்தில் மலையாளம் என்ற பெயரால் அறியப்படுகிறது. இது கி.பி. பத்தாம் நூற்றாண்டளவில் தனியாக இலக்கியங்களைப் பெறத்தொடங்கியது. எனவே கி.பி. பத்தாம் நூற்றாண்டை மலையாளம் தமிழிலிருந்து தனியாகப் பிரிந்த காலமாகக் கொள்வர். மலையாளத்தின் இலக்கியங்களில் வைசிக ஆட்டதந்திரம் (இது பதினொன்றாம் நூற்றாண்டைச் சார்ந்தது என கருதுவர்), ராமசரிதம் (இது பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்தது) போன்றவை கிடைத்துள்ளவற்றில் காலத்தால் பழைமையானவையாக உள்ளன. ஆனால் இவ்விலக்கியங்களின் மொழிநடை தமிழிலிருந்து மிகுந்த வேறுபாடு கொண்டதன்று. இதற்குச் சான்றாக மலையாளத்திலுள்ள வினைச்சொற்கள் பால்காட்டும் விகுதிகளுடன் காணப்படுவதை ராமசரிதம் போன்ற இலக்கியங்களின் (இவற்றில் 'வந்தான் என்பது 'வந்நான்' என அமைந்துள்ளது) சுட்டிக்காட்ட முடியும் (மேலும் விளக்கங்களுக்கு எஸ். வையாபுரிப்பிள்ளை எழுதிய 'தமிழும் மலையாளமும்' என்ற கட்டுரையைப் பார்க்கவும்). எனவே தற்காலத்தில் மலையாளத்திற்கும் தமிழுக்கும் இடையே

காணப்படும் வேற்றுமைகளை மணிப்பிரவாள காலத்திற்கும் பிற்பட்டதாகக் கொள்வது பொருத்தமானது.

2. மலையாளம்-தமிழ் முரணிலக்கணம்

மலையாளமும் தமிழும் திராவிட மொழிகளாகையாலும் தமிழிலிருந்தே மலையாளம் தனிமொழியாக கி.பி. பத்தாம் நூற்றாண்டிற்குப் பிறகு வளர்ச்சி பெற்றதாலும்அவற்றிற்கிடையே ஒற்றுமைகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. இருப்பினும் இவ்விருமொழிகளும்வெவ்வேறு தனிமொழிகளாக வழங்கிவருவதால் அவற்றிக்கிடையே சில வேற்றுமைகளும் காணப்படுகின்றன. இத்தகைய வேற்றுமைகள் ஒலியன் மற்றும் எழுத்து, உருபன், சொல், தொடர் போன்ற நிலைகளில் உள்ளன. இவற்றை அடிப்படையாகக் கொண்டு மலையாளத்திலிருந்து தமிழுக்கான முரணிலக்கணம் (Contrastive Grammar) இங்கு சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது.

1. ஒலியனும் எழுத்தும்

மலையாளத்தில் 16 உயிர்களும் 38 மெய்களுமாக மொத்தம் 54 ஒலியன்களும், தமிழில் 12 உயிர்களும் 18 மெய்களுமாக மொத்தம் 30 ஒலியன்களும் உள்ளன. இவற்றைப் பின்வருமாறு அட்டவணைப்படுத்தலாம்.

அட்டவணை என். 3:1, மலையாளம், தமிழ் எழுத்துக்களின் ஒற்றுமை வேற்றுமைகள்

1		2		3		4	
ஒலியன்களின்வகைகள்		சிறப்புஒலியன்கள்		பொது ஒலியன்கள்		சமஸ்கிருத ஒலியன்கள்	
மலையாளம்	தமிழ்	மலையாளம்	தமிழ்	மலையாளம்	தமிழ்	மலையாளம்	தமிழ்
உயிர்	உயிர்	எ,ஒ	எ,ஒ	இ,ஈ,ஏ, அ,ஆ,ஓ, உ,ஊ,ஐ, ஔ	இ,ஈ,ஏ, அ,ஆ,ஓ, உ,ஊ,ஐ, ஔ	ரு,ரூ,அம் அக்	-
மெய்	மெய்	ற,ன,ழ	ற,ன, ழ	ப,த,ட, ச,க,ம, ந,ண,ங, ஞ,ய,ர, ல,வ,ள	ப,த,ட, ச,க,ம, ந,ண,ங, ஞ,ய,ர, ல,வ,ள	ப^{2},த^{2},ட^{2} ச^{2}க^{2},ப^{3} த^{3},ட^{3},ச^{3} க^{3},ப^{4},த^{4} ட^{4},ச^{4},க^{4} ச^{5},ச^{6},ச^{7} க^{5}, கூ	-

மலையாளத்தில் சிறப்பெழுத்துக்களும், பொதுவெழுத்துக்களும் தமிழுக்குச் சமமாகவும், சமஸ்கிருதச்சிறப்பெழுத்துக்கள் (நான்கு உயிர்களும் இருபது மெய் களும் தமிழைவிட மிகுதியாகவும் உள்ளன (பிற மொழிச்சொற்களைத் தமிழில் எழுதுவதற்காக சமஸ்கிருதத்திலுள்ள ஒலிப்பில் உயிர்ப்பொலி, ஒலிப்பு ஒலி, ஒலிப்பு உயிர்ப்பொலி, உரசொலி போன்றவற்றை மாற்றொலியாகவும் அவற்றில் ஜ,ஷ,ஸ,ஹ,க்ஷ போன்றவற்றைக் கிரந்த எழுத்துவடிவிலும் பயன்படுத்துகின்றனர்). மேலும் மலையாளம் ஒலிநிலையில் ந,ன வேறுபாட்டைப் பெற்றிருப்பினும் வரிவடி வத்தில் வேறுபாடின்றியும், நான்கு மெய்கள் வரை இணைந்த நிலையிலான உயிர்மெய் எழுத்துக்களைப்பெற்றும், குற்றியலுகரம் பிறைவடிவக் குறியீட்டைப்பெற்றும் தமிழி லிருந்து வரிவடிவ நிலையில் வேறுபட்டதாகவும் அமைந்துள்ளது.

2. உருபன்கள்

மலையாளத்திலுள்ள உருபன்கள் சில தமிழிலிருந்து வேறுபாடுகளைப் பெற்றுள்ளன. அவற்றைப் பின்வருமாறு விளக்கலாம்.

1. மூவிடப்பெயர்கள்

மலையாள மொழியிலுள்ள மூவிடப்பெயர்கள் தமிழிலிருந்து வேறுபடுவதைப் பின்வருமாறு அட்டவணைப்படுத்தலாம்.

அட்டவணை என்.3:2, மலையாளம், தமிழ், மூவிடப்பெயர்கள்

1		2		3	
மூவிடப்பெயர்		வேற்றுமை ஏலாவடிவம்		வேற்றுமை ஏற்கும் வடிவம்	
இடம்	எண்	மலையாளம்	தமிழ்	மலையாளம்	தமிழ்
தன்மை	ஒருமை	ஞான்	நான், யான்	என்	என்
"	பன்மை	நாம்	நாம், யாம்	நம், ஞங்ஙள்	நம், எம், எங்கள்
முன்னிலை	ஒருமை	நீ	நீ	நின்	உன்
"	பன்மை	நிங்ஙள்	நீர், நீங்கள்	நிங்ஙள்	உம், நும், உங்கள்
படர்க்கை	ஒருமை	அவன், அவள், அது	அவன், அவள், அது	அவன், அவள், அது	அவன், அவள், அது
"	பன்மை	அவர், அவர்கள், அவ, அவகள்	அவர், அவர்கள், அவை, அவைகள்	அவர், அவர்கள், அவ, அவகள்	அவர், அவர்கள், அவை, அவைகள்

இவற்றில் தன்மை, முன்னிலை இடங்களைக் குறிக்கும் மூவிடப்பெயர்களில் மிகுதியும், படர்க்கைப்பன்மையைக் குறிக்கும் மூவிடப்பெயர்களில் சிலவும் ஒலியமைப்பில் சில வேறுபாடுகளைப் பெற்று தமிழிலிருந்து மாறுபட்டுள்ளன.

2. வேற்றுமைக் குறிப்பான்கள்

வேற்றுமை உருபமைப்பில் மலையாளம் தமிழிலிருந்து சில வேறுபாடுகளைப் பெற்றுள்ளது. இதனைப் பின்வருமாறு அட்டவணைப்படுத்தலாம்.

அட்டவணை எண். 3:3, மலையாளம், தமிழ் வேற்றுமை அமைப்பு

வேற்றுமை		உருபுகள்		எடுத்துக்காட்டுகள்	
பெயர்	பொருள்	மலையாளம்	தமிழ்	மலையாளம்	தமிழ்
இரண்டாம் வேற்றுமை	செயப்படு பொருள் வேற்றுமை (Accusative case)	எ	ஐ	அவனெ	அவனை
மூன்றாம் வேற்றுமை	உடனிகழ்ச்சி வேற்றுமை (Sociative case)	ஒடு	ஒடு, உடன்	அவனோடு	அவனோடு, அவனுடன்
நான்காம் வேற்றுமை	- (Dative case)	னு, இல்	கு, இல், இன்	மரத்தினு, வீட்டில், வீட்டிலேக்கு	மரத்திற்கு வீட்டில் வீட்டிற்கு
ஐந்தாம் வேற்றுமை	நீங்கல் வேற்றுமை (Ablative case)	நிந்நு	இருந்து	வீட்டில் நிந்நு	வீட்டிலிருந்து
ஆறாம் வேற்றுமை	(Genitive case)	உடெ	உடைய	அவனுடெ	அவனுடைய
ஏழாம் வேற்றுமை	இடப்பொருள் வேற்றுமை (Locative case)	இல்	இல், கண்	மரத்தில்	மரத்தில் மரத்தின்கண்
எட்டாம் வேற்றுமை	விளிவேற்றுமை (Vacative case)	ஏ, ஓ,	ஆய், ஓ, ஆ	கொச்சே அம்மே/ அம்மோ, அச்சோ	குழந்தாய், அம்மோ, அப்பா/ அப்போ

3. வினைகள்

மலையாள மொழியிலுள்ள வினைச்சொற்கள் திணை, பால், எண், இடம், ஆகியனவற்றைக் காட்டும் உருபுகளின்றி வருகின்றன. ஆனால் தமிழில் வினைச் சொற்கள் இத்தகைய உருபுகளை ஈறாகப் பெற்றுவருகின்றன. சான்றாக 'அவன் வந்நு' என்பது தமிழில் 'அவன் வந்தான்' என வழங்குவதைச் சுட்டிக் காட்டலாம்.

4. எச்சவடிவங்கள்

மலையாள மொழியிலுள்ள எச்ச வடிவங்கள் சில அதற்குச் சமமான தமிழ் எச்சவடிவங்களின் அமைப்பிலிருந்து உருபுநிலையில் மாற்றம் பெற்றுள்ளன. அவற்றைப் பின்வருமாறு அட்டவணைப்படுத்தலாம்.

அட்டவணை என்.3:4 மலையாளம், தமிழ் எச்சவடிவங்கள்

சொல்/தொடர்		உருபு	
மலையாளம்	தமிழ்	மலையாளம்	தமிழ்
படிச்ச புஸ்தகம்	படித்தபுத்தகம்	ச்ச	த்த
செய்யுந்ந ஜோலி	செய்கின்றவேலை	உந்ந	கின்ற
அவன் ஓடான்போயி	அவன் ஓடப்போனான்	ஆன்	அ
அவன் கொடுத்து துடங்ஙி	அவன் கொடுக்கத் தொடங்கினான்	து	"

5. எதிர்மறைவடிவங்கள்

மலையாளத்திலுள்ள எதிர்மறை வடிவங்களில் 'ஆத்த' விகுதி பெற்று வழங்குவன தமிழில் 'ஆத' விகுதி பெற்றவையாய் உள்ளன. சான்றாக 'வராத்த' என்பது தமிழில் 'வராத' எனவும் 'போகாத்த' என்பது 'போகாத' எனவும் வழங்குவதைச் சுட்டிக்காட்டலாம்.

3. சொல்

மலையாளமும் தமிழும் சொல்நிலையில் பெற்றுள்ள வேறுபாடுகளைப் பின்வருமாறு விளக்கலாம்.

1. இனச்சொற்கள்

மலையாளத்திலும் தமிழிலும் அவற்றிற்கே உரித்தான சிறப்புச் சொற்களும் இருமொழிகளுக்கும் பொதுவான சொற்களும் காணப்படுகின்றன. அவற்றில் பொதுச்சொற்களில் சில வடிவநிலையில் தமிழிலிருந்து சில வேறுபாடுகளைப் பெற்றவையாக உள்ளன. அவற்றைப் பின்வருமாறு அட்டவணைப்படுத்தலாம்.

அட்டவணை எண்.3:5, மலையாளம்-தமிழ் இனச்சொற்கள்

1		2		3	
மாற்றத்தின் தன்மை		சொல்		மாற்றம் பெற்ற பகுதி	
தமிழ்	மலையாளம்	தமிழ்	மலையாளம்	தமிழ்	மலையாளம்
வல்லினமாதல்	மெல்லினமாதல்	பஞ்சி	பஞ்ஞி	ஞ்ச்	ஞ்ஞ்
		மாங்காய்	மாங்ஙா	ங்க்	ங்ங்
		ஒன்று	ஒந்நு	ன்ற்	ந்ந்
பல்லினமாதல்	அண்ணஒலியாதல்	தேய்ந்த	தேஞ்ஞ	ந்ந்	ஞ்ஞ்
		ஐந்து	அஞ்சு	ந்ந்	ஞ்ச்
		நெருக்கம்	ஞெருக்கம்	ந்	ஞ்

1		2		3	
நெட்டுயிராதல்	குற்றுயிராதல்	மழை	மழ	ஐ	அ
அகரம்பெறல்	எகரமாதல்	பருமாற்றம்	பெருமாற்றம்	அ	எ
இகரம்பெறல்	உகரமாதல்	பிரான்	புரான்	இ	உ
		நாட்டின்புறம்	நாட்டும்புறம்	"	"
பால்வேறுபாடு பெறல்	பால்வேறுபா டொழிதல்	அவன்வந்தான்	அவன் வந்து	ஆன்	-
பழையவழக்கு களை நீக்குதல்	பழையவழக்கு களைஏற்றல்	வாசிக்கப் போறேன், கேள்	வாயிக்கான் போகுந்நு, கேள்ப்பின், கேள்க்கின்	- -	ஆன் இன்
சொல்குறிப்பிட்ட நிலையானவடிவத் தைப்பெற்றிருத் தல்	சொற்களின் நிலையான வடிவத்தில் சிலகூறுகள் நீக்கப்படல்	அவனுக்கு அவனுடைய	அவனு அவன்றெ	க்கு உடைய	- றெ

(அட்டவணையில் ஏ.ஆர். இராஜராஜ வர்மாவின் கேரளபாணினீயத்தை அடியொற்றி மலையாளம் தமிழிலிருந்து சொல்நிலையில்வேறுபடுவனவாகக் காட்டப்பட்டுள்ளவை அனைத்தும் பண்டைக்காலத்தமிழிலும் இடைக்காலத்தமிழிலும் காணப்பட்டவையே என்று மா. இளையபெருமாள் "மலையாளத் தனித்தன்மைகளின் முன்னைய நிலை" என்ற கட்டுரையில் நிறுவியுள்ளார்)

2. வடிவில் ஒன்றுபட்டும் பொருளில் மாறுபட்டும் வழங்கும் சொற்கள்

மலையாளத்தில் தமிழைப்போன்ற வடிவத்தைப் பெற்ற சொற்கள் சில மாறுபட்ட பொருளைக் கொண்டனவாகக் காணப்படுகின்றன. சான்றாக, பின்வருவனவற்றைச் சுட்டிக்காட்டலாம்.

அட்டவணை எண்.3:6, மலையாளம், தமிழ் சொற்பொருள் வேறுபாடு

சொல்	தமிழில் வழங்கும் பொருள்	மலையாளத்தில் வழங்கும்பொருள்
அவதி	துன்பம்	விடுப்பு
விவசாயம்	பயிர்த்தொழில்	இயந்திரங்களாலான உற்பத்தி
ராவு	இரவு	காலை
பனி	Dew	காச்சல்
வழிபாடு	கடவுளைவணங்குதல்	கடவுளுக்கு நைவேத்தியம்கொடுத்தல்
தூங்குதல்	உறங்குதல்	நான்றுசாதல்

3. றகரம் பெற்ற பிறமொழிச் சொற்கள்

சமஸ்கிருதம், ஆங்கிலம் போன்ற மொழிகளில் றகரம் பெற்று வழங்கும் சொற்களின் ஒலிபெயர்ப்பு வடிவங்கள் மலையாளத்தில் அவ்வாறே றகரம் பெற்றும், தமிழில் ரகரம் பெற்றும் வழங்கப்படும். சான்றாக பின்வருவனவற்றைச் சுட்டிக்காட்டலாம்.

அட்டவணை எண்.3:7, மலையாளம், தமிழ் ஆகிய மொழிகளில் றகரம் பெற்ற பிறமொழிச்சொற்கள்

சொல்	மலையாளவடிவம்	தமிழ்வடிவம்
drocham	த்றோஉறம்	தரோகம்
praayam	ப்றாயம்	பிராயம்
Press	ப்றஸ்ஸ¬	பிரஸ்

4. சமஸ்கிருதச்சொற்கள்

மலையாளம், தமிழ் ஆகியமொழிகள் சமஸ்கிருதத்திலிருந்து சொற்கள் பலவற்றைக் கடனாகப்பெற்றுள்ளன. அவற்றில் மலையாளமொழியில் சமஸ்கிருதச் சொற்கள் பெரும்பாலும் ஒலியமைப்பில் மாற்றமின்றிஅவ்வாறே தத்சமங்களாக ஏற்கப்பட்டுள்ளன. ஆனால் தமிழில் சமஸ்கிருதச் சொற்களைப்பெரும்பாலும் திரித்தும் மெய்கள்பல இணைந்து வருமிடங்களில் அவற்றைப் பிரித்து உயிர் ஒலியன்களைச்சேர்த்தும், தத்புவங்களாக ஒலிபெயர்க்கின்றமையே வழக்கிலுள்ளது. சான்றுகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

அட்டவணை எண்.3:8, சமஸ்கிருத சொற்கள் மலையாளம், தமிழ் ஆகிய மொழிகளில் வழங்கும் விதம்

சமஸ்கிருதவடிவம்	மலையாளவடிவம்	தமிழ்வடிவம்
Vigñaaṉa(m)	Vigñaaṉam	Viññaaṉam
avaḥaasa(m)	avaḥaasam	avakaasam
addhyaaya(m)	addhyaayam	attiyaayam

5. சந்தி

மலையாளம், தமிழ் ஆகிய மொழிகளிலுள்ள இனச்சொற்களில் (Cognates) சில சந்திநிலையில் வேறுபாடுகளைக் கொண்டுள்ளன. மேலும் வடமொழியிலிருந்து கடன்பெற்ற சொற்களும் மலையாளத்தில் வடமொழியிலுள்ள சந்தியமைப்பின் படியும், தமிழில் வடமொழியின் சந்தியமைப்பைப் திரித்தும் நீக்கியும் வழங்கும் நிலை நடைமுறையில் உள்ளது. சான்றுகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

அட்டவணை எண்.3:9, மலையாளம், தமிழ் ஆகிய மொழிகளில் சந்திவேறுபாடு

சொல்		சந்தியமைப்பு	
மலையாளம்	தமிழ்	மலையாளம்	தமிழ்
நால்ப்பது	நாற்பது	ல்ப்	ற்
தல்க்காலம்	தற்காலம்	ல்க்	ற்
கேள்க்குக	கேட்குக	ள்க்	ட்
சில்ப்பம்	சிற்பம்	ல்ப்	ற்
ஸ்வப்னம்	சொப்பனம்	ஸ்வ் அ	சொ

4. தொடர்கள்

தமிழ்மொழி எழுவாய், செயப்படுபொருள், பயனிலை என்ற அமைப்பிலான தொடர்களைக் கொண்டது. மலையாளமும் தொடர்களைப்பொறுத்த மட்டில் இவ்வமைப்பையே கொண்டுள்ளது. இருப்பினும் ஒருசில விடங்களில் உருபு நிலையிலான மாற்றங்கள் காணப்படுகின்றன. அவற்றைப் பின்வருமாறு விளக்கலாம்.

1. இணைப்புவினை பெற்ற தொடர்கள்

மலையாளத்தில் இணைப்புவினையான (Copula Verb) 'ஆணு' ஒரு சிறப்பு அம்சமாகக் காணப்படுகிறது. ஆனால் இவ்விணைப்புவினை பெற்ற வாக்கியங்களுக்கிணையான தமிழ்வாக்கியங்கள் இணைப்புவினைகளின்றியும் ஒருசில விடங்களில் அழுத்தத்திற்காக மட்டும் அதற்கு இணையான மாற்றுவடிவங்களைப் பெற்றும் அமைகின்றன. சான்றுகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

அட்டவணை எண்.3:10, மலையாளத்தில் தொடர்கள் இணைப்புவினைபெற்று தமிழிலிருந்து மாறுபடும் விதம்

மலையாளவடிவம்	இணைப்புவினையற்றதமிழ் வடிவம்	இணைப்புவினைபெற்ற தமிழ் வடிவம்
அவன் ராமனாணு	அவன் ராமன்	அவன் ராமன் தான்
ராமன் வீட்டிலாணு	ராமன் வீட்டிலிருக்கிறான்	ராமன் வீட்டிலுண்டு/ ராமன் வீட்டில் தான்
கொச்சு பெண்ணாணு	பெண்குழந்தை	பெண்குழந்தை தான்/ பெண்குழந்தை ஆக்கும்
அவளாணு இந்நலெ வந்நது	அவள் நேற்றுவந்தாள்	அவள் தான் நேற்று வந்தது/ அவளாக்கும் நேற்று வந்தது

2. பிறவினை யமைப்பிலான தொடர்கள்

மலையாளத்திலுள்ள பிறவினை அமைப்பிலான சில தொடர்களுக்கு இணையாகத் தமிழில் தன்வினையமைப்பிலான தொடர்கள் அமைகின்றன. சான்றாக "எனிக்கு ஒரு தெற்றுபற்றி (எனக்கு ஒரு தவறு ஏற்பட்டது)" என்பதற்கு இணையாக "நான் ஒரு தவறு செய்தேன்" என்ற தொடர் அமைவதைக்குறிப்பிடலாம்.

3. துணைவினை பெற்ற தொடர்கள்

மலையாளத்தில் ஒருவித துணைவினை பெற்ற தொடர்களுக்கு இணையாக தமிழில் மற்றொரு வித துணைவினை பெற்ற தொடர்கள் அமைகின்றன. சான்றாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

அட்டவணை எண்.3:11 ஒரே பொருள்கொண்ட தொடர்கள் மாறுபட்ட துணைவினைகளைப் பெற்றமையும் விதம்

மலையாளவாக்கியம்	துணைவினை	தமிழ்வாக்கியம்	துணைவினை
அவள் வந்நுகாணும்	காணும்	அவள்வந்திருப்பாள்	இருப்பாள்
அவன் மரத்தில் நிந்நு வீணு	நிந்நு	அவன் மரத்தில் இருந்து விழுந்தான்	இருந்து

4. பெயரவாவிய பின்னொட்டு பெற்ற தொடர்கள்

மலையாளத்தில் ஒருவித பெயரவாவிய பின்னொட்டு பெற்ற (Noun-dependent post position)தொடர்களுக்கு இணையாக தமிழில் மற்றொரு விதபெயரவாவிய பின்னொட்டு பெற்ற தொடர்கள் அமைகின்றன. சான்றாக பின்வருவனவற்றைச் சுட்டிக்காட்டலாம்.

அட்டவணை எண்.3:12, ஒரே பொருள்கொண்ட தொடர்கள் மாறுபட்ட பெயரவாவிய பின்னொட்டுகளைப் பெற்றமையும் விதம்

மலையாளவாக்கியம்	பின்னொட்டு	தமிழ்வாக்கியம்	பின்னொட்டு
பந்துகொண்டுள்ளகளி	உள்ள	பந்தாலானவிளையாட்டு	ஆன
வ்றுத்தம் குறிச்சுள்ளக் றந்தம்	"	யாப்புபற்றிய நூல்	பற்றிய
போனகிறுவேண்டியுள்ள சமரம்	"	போனசிற்குரிய போராட்டம்	உரிய
		போனசிற்கான போராட்டம்	ஆன

5. பெயரடை அமைப்புப் பெற்ற தொடர்கள்

மலையாளத்தில் பெயரடை அமைப்பு பெற்ற (Nominal Attributive Construction) தொடர்களில் காணப்படும் எகர உருபு இன்றி அதற்கிணையான தமிழ்த் தொடர்கள் அமைகின்றன. சான்றாகப் பின்வருவனவற்றைச் சுட்டிக் காட்டலாம்.

அட்டவணை எண்.3:13, ஒரே பொருள்கொண்ட தொடர்கள் வடிவநிலையில் மாறுபட்டமையும் விதம்

மலையாளம்	உருபு	தமிழ்	உருபு
காட்டிலெ ஆன	எ	காட்டுயானை	–
கிணற்றிலெ வெள்ளம்	"	கிணற்றுநீர்	"
ஜப்பானிலெ ஸ்த்ரீ	"	ஜப்பானிய பெண்	"
கடயிலெ முதலாளி	"	கடைமுதலாளி	"
கேரளத்திலெ மந்த்ரிமார்	"	கேரள அமைச்சர்கள்	"

6. உம்மைத் தொடர்கள்

உம்மைத்தொடர்கள் மலையாளத்தில் குறைத்தொடர்களாகவும் வழங்கும். ஆனால் இதற்கு இணையான தமிழ்வடிவம் குறைத்தொடரமைப்பு இன்றி முற்றுப்பெற்று வழங்கும். சான்றாக 'அவன் போயி ஞானும்" என்பதற்கு இணையான தமிழ்த் தொடராக 'அவன் போனான் நானும் போனேன்' என்ற தொடர் அமைவதைக் குறிப்பிடலாம்.

7. வினாத்தொடர்கள்

மலையாளத்தில் வியங்கோள் வாக்கியங்களில் (Optative Sentences) ஓகாரமும் எதிர்மறை வாக்கியங்களில் (Negative Sentences) எகரமும் கேள்வி உருபுகளாக வருகின்றன. ஆனால் அவற்றிற்கிணையான தமிழ் வாக்கியங்களில் கேள்வி உருபாக ஆகாரம் மட்டுமே வருகின்றது. சான்றாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

அட்டவணை எண்.3:14, ஒரே பொருள் கொண்ட வினாத்தொடர்கள் மாறுபட்ட உருபுகளைப் பெற்றமையும் விதம்

மலையாள வாக்கியம்	உருபு	தமிழ்வாக்கியம்	உருபு
ராமனு புஸ்தகம் வேணுமோ	ஓ	இராமனுக்கு புத்தகம் வேண்டுமா	ஆ
ராமன் ஸ்கூளில் போயில்லெ	எ	இராமன் பள்ளிக்குடம் போகவில்லையா	"

(மலையாளத்திலும் தமிழிலும் காணலாகும் வினாத்தொடர்கள் பற்றியவிளக்கத்திற்கு வே.சா. அருள்ராஜின் 'தமிழ் மலையாளக்கேள்வி வாக்கியங்கள்' என்ற கட்டுரையைப் பார்க்கவும்)

இவற்றின் அடிப்படையில் மலையாளம் தமிழ் ஆகிய மொழிகளிடையே உள்ள வேறுபாடுகளில் பெரும்பான்மையும் வடிவத்தையும் சிறுபான்மை பொருளையும் அடிப்படையாகக் கொண்டுள்ளதை அறிந்து கொள்ளலாம் (மேலும் விளக்கங்களுக்கு ஆய்வேட்டில் 1:6, 2:7 ஆகிய பகுதிகளையும், கி. நாச்சிமுத்துவின் 'Teaching Tamil to Malayalam Speakers: Some hints to the Teacher and Student' என்ற கட்டுரையையும் பார்க்கவும்).

தொகுப்புரை

1. 'மலையாளமும் தமிழும்' என்ற இயலை அடிப்படையாகக்கொண்டு பின்வருவனவற்றைத் தெரிந்துகொள்ளலாம்.

1. மலையாளம் இராமசரிதகாலத்தைத் தொடர்ந்து வடமொழியிலிருந்து எழுத்துக்களையும் சொற்களையும் கடனாகப்பெற்று தனிமொழியாக வளர்ச்சி பெற்றுள்ளது.

2. மலையாளம், தமிழ் ஆகிய மொழிகளிடையே காணப்படும் வேறுபாடுகளில் வடிவத்தை அடிப்படையாகக்கொண்டவை மிகுதியாகவும் பொருளை அடிப்படையாகக் கொண்டவை குறைவாகவும் உள்ளன. அவற்றில் சொற்களை உச்சரிக்கும் முறையிலுள்ள வழக்கு வேறுபாடுகளைத் தவிர்த்த பிறவற்றில் பெரும்பான்மையும் வடமொழியின் கலப்பால் ஏற்பட்டவையாகும்.

2. மலையாளம், தமிழ் ஆகிய மொழிகளின் அமைப்பில் காணப்படும் ஒற்றுமை, வேற்றுமைகளை அடிப்படையாகக்கொண்டு மொழிபெயர்ப்புப்பணியின் வளர்ச்சிக்காக பின்வருவனவற்றைப் பரிந்துரைகளாகக் கொள்ளலாம்.

1. மொழியமைப்பு நிலையில் பழங்கால மலையாளம் தமிழோடு ஒப்புமையுடையதாகக் காணப்படுவதால் மலையாளத்திலுள்ள பழங்கால இலக்கியங்களைத் தமிழில் ஒலிபெயர்த்தும், அவற்றிலுள்ள ஒருசில கடினசொற்களுக்கு மட்டும் பொருளை அடிக்குறிப்பில் தந்தும் மொழிபெயர்ப்பை அமைக்கலாம் (மேலும் 'கவிதை மொழிபெயர்ப்புகள்' என்ற இயலிலுள்ள தொகுப்புரையின் மூன்றாவது பகுதியைப் பார்க்கவும்).

2. மலையாளத்திலுள்ள தற்கால இலக்கியங்களில் வடமொழிக்கலப்பு குறைவாகக்காணப்படுவனவற்றை (சான்றாக சச்சிதானந்தன், குஞ்ஞுண்ணி போன்றவர்களுடைய கவிதைகள்) வடமொழிக்கலப்பு மிகுதியாகக் காணப்படும் படைப்புகளைவிடவும் (சான்றாக, கே. ஐயப்பப்பணிக்கர் முதலானவர்களுடைய படைப்புகள்) சற்று எளிதாக மொழிபெயர்க்கலாம். ஆனால் வடமொழிக் கலப்புபெற்றும், பிறமொழிக்கலப்பின் காரணமாக மலையாளத்தில் தோன்றிய புதிய இயல்புகளைக்கொண்டும், மலையாளத்தின் தனித்தன்மைகளைப்பெற்றும் அமைந்துள்ள படைப்புகளைக் கருத்தினைகளைக்கொண்டு மொழிபெயர்ப்பது பொருத்தமானது.

பகுதி – மூன்று

இயல் - நான்கு

கவிதை மொழிபெயர்ப்புகள்

4. கவிதை மொழிபெயர்ப்புகள்

0. கவிதைகளை உவமை, உருவகம் போன்ற அணிகள், கற்பனை, குறிப்பு போன்ற உத்திகள் ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டு புனைகின் றனர். மேலும் வாசகர்களின் மனத்தைக் கவரும் நோக்கில் அழகுக் கூறு களை மிகுதியாகச் சேர்த்தும் அமைப்பர். ஆதலால் பிற இலக்கிய வகைகளை மொழிபெயர்ப்பதை விடவும் கவிதைகளை மொழிபெயர்ப்பது கடினமான ஒன்று. எனவே கவிதைகளின் மொழிபெயர்ப்பைப் பொறுத்தமட்டில் தருமொழிவடிவத்தின் கருத்துக்களைச் சொல்வதற்கு பெறுமொழி வடிவத்தைச் சற்று மாற்றியமைக்க வேண்டிய தேவை ஏற்படுகிறது. இதற்காக மாற்றிணைகளை மொழிபெயர்ப் பாளர்கள் மிகுதியாகப் பயன்படுத்துகின்றனர். மரபுக்கவிதைகளின் மொழி பெயர்ப்பில் யாப்பு சிக்கலைத் தோற்றுவிக்கிறது. மேலும் மொழிபெயர்ப்பின் போது தொடையமைப்பும் கவனிக்கப்படவேண்டிய ஒன்றாக உள்ளது. கட்டற்ற கவிதைகளின் மொழிபெயர்ப்பில் யாப்பு அடிப்படையிலான சிக்கல்கள் ஏற்படு வதில்லை. எனவே மரபுக்கவிதைகளை ஒப்பிட்டு நோக்க கட்டற்றகவிதைகளை மொழிபெயர்ப்பது எளிய ஒன்று. பாடல்களைப் பொறுத்தமட்டில் தருமொழி வடிவத்தின் இசையமைப்பு பெறுமொழிவடிவத்திலும் காணப்படுதலையே வாசகர்கள் விரும்புகின்றனர். இவற்றின் அடிப்படையில் இவ்வியல் மலையாளத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள கவிதைகளையும், அவற்றின் மொழிபெயர்ப்பின் தன்மைகளையும் 1. வகைப்பாடு, 2. மதிப்பீடு, 3. யாப்பு, 4. தொடை 5. அணி, 6. குறிப்புப் பொருள், 7. மொழிநடை, 8. அடிக்குறிப்புகள் 9. குறைகள் என வகைப்படுத்தி விளக்குவதாக அமைகிறது.

1. வகைப்பாடு

1. கவிதை மொழிபெயர்ப்புகளை மரபுக்கவிதை, கட்டற்ற கவிதை, நாட்டுப்புறப்பாடல்கள், பக்திப்பாடல்கள், திரைப்படப்பாடல்கள் என வகைப் படுத்தி விளக்கலாம்.

1. மரபுக்கவிதைகள்

மலையாளத்திலுள்ள மரபுக்கவிதைகளின் மொழிபெயர்ப்புகள் தொகுப்பு நூல்களிலும், தனி நூல்களிலும், இதழ்களிலுமாக வெளிவந்துள்ளன.

1. தொகுப்பு நூல்களாக வெளிவந்தவை

மகாகவி குமாரனாசானின், சிந்தாவிஷ்டயாய சீத (1919), சண்டாலபிக்ஷுகி (1923), கருணா (1924) ஆகிய குறுங்காவியங்களை "குமார னாசான் மூன்று கவிதைகள்" என்னும் தலைப்பில் இராமகோபிநாதன் (1971) மொழிபெயர்த்துள்ளார். இந்நூலை சாகித்ய அக்காடமி வெளியிட்டுள்ளது. வள்ளத்தோளின் குறுங்காவியங்கள் மற்றும் செய்யுள்கள் அடங்கிய தொகுப்பொன்றை துறைவன் (1971) என்பவர் மொழிபெயர்த்துள்ளார். இந்நூலையும் சாகித்ய அக்காடமி வெளியிட்டுள்ளது.

2. தனி நூல்களாக வெளிவந்தவை

ப. ஜனார்த்தனம் என்பவர் உள்ளூர் பரமேசுவர ஐயரின் 'கர்ணபூஷணம்' என்ற நூலை செவியணிக்கணி (1974) என்னும் தலைப்பிலும், குமாரனாசானின் சிந்தாவிஷ்டயாய சீதயை "சிந்தையில் மூழ்கியசீதை" (1975) என்னும் தலைப்பிலும் (இதுசிந்தாவிஷ்டயாய சீதக்கு செய்துள்ள இரண்டாவது மொழிபெயர்ப் பாகும்) மொழிபெயர்த்துள்ளார். இவ்விரு நூல்களையும் திருவனந்தபுரத்திலுள்ள ஜெயச்சந்திரா புக் டிப்போ வெளியிட்டுள்ளது. இளங்கம்பன் (1978) 'வீழ்ந்த மலர்' என்னும் தலைப்பில் குமாரனாசானின் "வீணபூவு" (1909) என்ற

குறுங்காவியத்தை மொழிபெயர்த்துள்ளார். இதனை பழனியிலுள்ள சித்திரகூடம் வெளியிட்டுள்ளது. திரு. நாராயணகுருவின் ஆத்மோபதேச சதகத்தை எஸ்.பி. சபாரத்னம் (1985) மொழிபெயர்த்துள்ளார். இதனை வர்க்கலையிலுள்ள நாராயணகுருகுலம் வெளியிட்டுள்ளது.

3. இதழ்களில் வெளிவந்தவை

நெல்லை சு. முத்து என்பவர் மகாகவி குமாரனாசானின் 'குரு' என்ற செய்யுளை "திரு. நாராயணகுரு மூர்த்தி" என்னும் தலைப்பில் மொழிபெயர்த்துள்ளார். இது வஞ்சிநாடு (21.1.1984) இதழில் வெளிவந்துள்ளது. கோ. முருகேசன் என்பவர் அய்யிப் பிள்ளை ஆசானின் ராமகதைப் பாட்டிலிருந்து இருபத்தி ஒரு செய்யுள்களை மொழிபெயர்த்துள்ளார். இது கேரளத்தமிழ் ஐந்தாவது ஆண்டுமலரில் (1985) வெளிவந்துள்ளது. மேலும் நெல்லை சு. முத்து குமாரனாசானின் 'சண்டாலபிக்சுகி' என்ற குறுங்காவியத்தை 'சண்டாளபிக்குணி என்னும் தலைப்பில் மொழிபெயர்த்துள்ளார் (இது சண்டாலபிக்சுகிக்கு செய்துள்ள இரண்டாவது மொழிபெயர்ப்பாகும்). இப்பெயர்ப்பு கேரளத்தமிழ்மொழிபெயர்ப்புச் சிறப்புமலரில் (1992) வெளிவந்துள்ளது.

2. கட்டற்றகவிதைகள்

கட்டற்ற கவிதைகளின் மொழிபெயர்ப்புகள் குறிப்பிட்ட ஒரு ஆசிரியரின் கவிதைகளடங்கிய தொகுப்புக்களாகவும், பல்வேறு ஆசிரியர்களுடைய கவிதைகளின் தொகுப்புக்களாகவும், பிற இலக்கிய வகைகளோடு சேர்ந்த நூல்கள் மற்றும் இதழ்கள் வாயிலாக உதிரிக்கவிதைகளாகவும் வெளிவந்துள்ளன.

1. ஓர் ஆசிரியரின் கவிதைகளை மட்டும் கொண்ட தொகுப்புக்கள்

சச்சிதானந்தனின் கவிதைகளடங்கிய தொகுப்பு ஒன்றை இரவியன், நிர்மால்யா, இக்பால், சித்தார்த்தன், சூரியதீபன், இந்திரன், சேவற்கொடியோன், சுகுமாரன், புதியபரிதி (1990) ஆகிய ஒன்பதுபேர்களின் மொழிபெயர்ப்பாக 'இரத்தசாட்சிகள்' என்ற தலைப்பில் மக்கள் கலாச்சாரக் கழகம் வெளியிட்டுள்ளது (இத்தொகுப்பில் இக்பாலின் மொழிபெயர்ப்பாக உள்ள 'எங்கள் தெய்வங்கள்' என்ற கவிதை 'மனவோசை' என்னும் இதழில் நவம்.1984-இல் வெளிவந்துள்ளது). பா. ஆனந்தகுமாரின் (1990) மொழிபெயர்ப்பாக 'குஞ்ஞுண்ணிக் கவிதைகள்' என்ற நூலை மகிழகம் வெளியிட்டுள்ளது.

2. பல்வேறாசிரியர்களின் கவிதைகளடங்கிய தொகுப்புக்கள்

மலையாளக்கவிஞர்களான எம். கோவிந்தன், குஞ்ஞுண்ணி, கெ. ஐயப்பபணிக்கர், ஆர். ராமச்சந்திரன், என்.என். கக்காடு, கெ.ஜி. சங்கரப்பிள்ளை, ஆற்றூர் ரவிவர்மா, கடமனிட்டராமகிருஷ்ணன், சச்சிதானந்தன், சுகதகுமாரி, சிப்சந்திரன், பாலச்சந்திரன் சுள்ளிக்காடு, எ. ஐயப்பன், ஜோஸ் வெம்மேலி, என்.ஜி. ராதாகிருஷ்ணன் ஆகியவர்களின் கவிதைகள் சிலவற்றிற்கு ஜெயமோகன் (1990) 'தற்கால மலையாளக்கவிதைகள்' என்ற தலைப்பில் மொழிபெயர்ப்பொன்றைச் செய்துள்ளார். இந்நூல் ஆல்பா வெளியீடாக உள்ளது (இந்நூலில் காணப்படும் கவிதைகளை மட்டும் ஒருசேரக் கொண்டதாக டிசம்பர் 1990இல் வெளிவந்த 'கனவு' இதழ் உள்ளது).

வி.எஸ். அகில்குமார், பாரதிபுத்திரன் (1991) ஆகியவர்களின் மொழிபெயர்ப்பாக 'மிளகுக்கொடிகள்' என்ற நூல் உள்ளது. அன்னம் வெளியீடாக வந்துள்ள இந்நூலில் பாலச்சந்திரன் சுள்ளிக்காடு, எ. ஐயப்பன், இராவுண்ணி, உமேஷ்பாபு, சாவித்திரி ராஜீவன், குரீப்புழ ஸ்ரீகுமார், டி.பி. ராஜீவன், விஜயலெட்சுமி, ஜோஸ் வெம்மேலி, அஜிதாதம்பி, அன்வர், மணம்பூர்ராஜன்பாபு, மாங்காட்டு இரத்தினாகரன், நாலாபாடம் பத்மநாபன், சுனில்தாஸ் ஆகிய பதினைந்து மலையாளக் கவிஞர்களின் கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

3. நூல்களில் வெளிவந்த உதிரிக் கவிதைகள்

நீலபத்மநாபனின் (1985) மொழிபெயர்ப்பாக சங்கரகுறுப்புவின் 'இன்றுநான் நாளை நீ', வைரமேகங்கள் (இது தாமரை இதழில் 1968ஆம் ஆண்டு வெளிவந்தது), என்.வி. கிருஉஷ்ணவாரியாரின் கடல்பாலம், ஐயப்பபணிக்கரின் சாபவிமோசனம் (இது எழுத்து இதழில் 1967ஆம் ஆண்டு வெளிவந்தது), சாவுபூஜை (ஐயப்பப் பணிக்கரின் இக்கவிதைகள் இரண்டும் 1968ஆம் ஆண்டு வெளிவந்த குருக்ஷேத்திரம் என்ற தொகுப்பு நூலில் காணப்படுகின்றன), ஓ.என்.வி. குறுப்புவின் (1978) உப்பு ஆகிய கவிதைகள் 'தற்கால மலையாள இலக்கியம்' என்ற தொகுப்பு நூலில் இடம்பெற்றுள்ளன. சச்சிதானந்தனின் 'உழைப்போரின் குரல்', எம். கோவிந்தனின் "மழைக்கால ஆறாகமாறினால் என் காதலனே" ஆகிய கவிதைகள் இந்திரன் (1986)என்பவரின் மொழிபெயர்ப்பாக 'காற்றுக்குத் திசையில்லை' என்ற நூலில் இடம் பெற்றுள்ளன.

4. இதழ்களில் வெளிவந்த உதிரிக் கவிதைகள்

செம்மனம் சாக்கோவின் 'ஊர்வலம்' என்ற கவிதையைக் குருமூர்த்தி (மஞ்சரி, டிச.1982) என்பவர் மொழிபெயர்த்துள்ளார். வைலோப்பிள்ளி ஸ்ரீதரமேனோனின் கவிதைகளில் 'அறுவடை முடிந்தது' என்பதை ஜெயமோகனும்

(மஞ்சரி, ஜன, 1988), 'தங்கக் கொடிமரம்' என்பதை ஜே. (மஞ்சரி, செப்.1989) என்பவரும் மொழிபெயர்த்துள்ளனர். பாலச்சந்திரன் சுள்ளிக்காடின் (1989) 'எவிடெ ஜோண்' என்ற கவிதைக்கு சச்சிதானந்தன் செய்துள்ள ஆங்கில மொழிபெயர்ப்பைத்தழுவி 'ஜான் எங்கே' என்ற கவிதையை நாகார்ஜுனன் அமைத்துள்ளார் (பாலச்சந்திரன் சுள்ளிக்காடின் இக்கவிதைக்கு வி.எஸ். அனில்குமார், பாரதிபுத்திரன் ஆகியவர்கள் செய்துள்ள மொழிபெயர்ப்பு "மிளகுக் கொடிகள்" என்ற நூலில் உள்ளது). இம்மொழிபெயர்ப்பு மீட்சி (டிசம்பர் 1991) இதழில் காணப்படுகிறது. மேலும் நிர்மால்யாவின் மொழிபெயர்ப்பாக பாலச்சந்திரன் சுள்ளிக்காடு (மரணவார்டு, ஜுன்), விஜயசந்திரன் (ராத்திரி, சுவரெழுத்து, உறவு, சிற்பம், தாளம், சிலுவைகள், பசு, தீர்மானம், முடிவு, குருவி, தோத்திரம், மங்களப்பாடல்), சச்சிதானந்தன் (ஒருசரீரம் ஒருநகரம், ராமநாதன் பாடும்போது, வராந்தா, சவாரி, கவிதை) ஆகியவர்களுடைய கவிதைகளும் மீட்சி (டிச.1991) இதழில் வெளிவந்துள்ளன. விஜயசந்திரனின் 'ரோஸாலிண்டா' என்ற கவிதையை நிர்மால்யா மொழிபெயர்த்துள்ளார். இது 'விருட்சம்' (ஜன.1992) என்ற இதழில் வெளிவந்துள்ளது. ஆ. மாதவன், நெல்லை சு.முத்து ஆகியவர்களின் மொழிபெயர்ப்பாக குஞ்ஞுண்ணியின் கவிதைகள் சிலவும் (இக்கவிதைகளுக்கு ப. ஆனந்தகுமார் செய்துள்ள மொழிபெயர்ப்புகள் 'குஞ்ஞுண்ணிகவிதைகள்' என்ற நூலில் உள்ளன), நீலபத்மநாபனின் மொழிபெயர்ப்பாக ஐயப்பப்பணிக்கரின் 'யானைக்கதை' என்ற கவிதையும், ஜி. குமரேசனின் மொழிபெயர்ப்பாக ஓ.என்.வி. குறுப்புவின் 'சின்னஞ்சிறு ஓசைகள்' என்ற கவிதையும், நெல்லை சு. முத்துவின் மொழிபெயர்ப்பாக புதுசேரி ராமச்சந்திரனின் 'காவேரி' என்ற கவிதையும் உள்ளன. இவையனைத்தும் கேரளத்தமிழ் மொழிபெயர்ப்புச் சிறப்பு மலரில் (1992) இடம் பெற்றுள்ளன.

3. நாட்டுப்புறப்பாடல்கள்

மாடசேரி மாதவவாரியார், கிளிமானூர் விசுவம்பரன் ஆகியவர்களுடைய நாட்டுப்புறப்பாடல்களின் தொகுப்புக்களிலிருந்து சுமார் முப்பது நாட்டுப்புறப் பாடல்களை மொழிபெயர்த்து தமிழவன் (1976) "மலையாள நாட்டுப்புறப் பாடல்கள் என்ற நூலை வெளியிட்டுள்ளார்.

4. பக்திப்பாடல்கள்

மலையாளத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள பக்திப்பாடல்கள் பெரும்பாலும் தனி நூலாக இல்லை. இவை தமிழ்மொழி மற்றும் பிற மொழிப்பாடல்கள் அடங்கிய தொகுப்புக்களில் இடையிடையே காணப்படுகின்றன. இத்தகைய தொகுப்புக்களாக சுவிசேஷகீதங்கள், சுவிசேஷ பிரபல்யசங்க கீதங்கள், ஐயப்ப பக்திப்பாடல்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவற்றில் காணப்படும் பாடல்களில் மலையாளமொழியை மூலமாகக்கொண்டவை மொழிபெயர்ப்பாக மட்டுமன்றி ஒலிபெயர்ப்பாகவும் உள்ளன.

5, திரைப்படப்பாடல்கள்

மலையாளத்திரைப்படங்கள் சிலவற்றை மொழிமாற்றம், மறுவுருவாக்கம் போன்ற முறைகளில் தமிழ்ப்படுத்தியுள்ளனர். இவ்வாறு திரைப்படங்களை மொழிமாற்றும்போது அவற்றிலுள்ள பாடல்களையும் தேவைக்கேற்ப மொழி பெயர்த்துள்ளனர். சான்றாக "மை டியர் குட்டிச்சாத்தான்', 'கற்பூரமுல்லை (என்றெ சூரிய புத்ரிக்கு)' போன்ற படங்களிலுள்ள பாடல்களைக் குறிப்பிடலாம்.

2. மலையாளத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட கவிதைகளில் செய்யுள் நூல்கள் ஆறும், கட்டற்ற கவிதைகளின் தொகுப்புகள் நான்கும், நாட்டுப்புறப்பாடல்களின் தொகுப்பு ஒன்றும் உள்ளன. எஞ்சிய அனைத்தும்

பிற இலக்கிய வகைகளடங்கிய தொகுப்புகளிலும் இதழ்களிலுமாகக் காணப்படு கின்றன. இவற்றில் குமாரனாசானின் 'சிந்தாவிஉஷ்டயாய சீத' (இராம கோபிநாதன், ப.ஜனார்த்தனம்), 'சண்டாலபிக்ஷுகி' (இராமகோபிநாதன், நெல்லை சு. முத்து) ஆகிய குறுங்காவியங்களும் பாலசந்திரன் சுள்ளிக்காடின் 'எவிடெஜோண்' (வி.எஸ். அனில்குமார் மற்றும் பாரதிபுத்திரன், நாகார்ஜுனன்) என்ற கவிதையும் இருவேறு மொழிபெயர்ப்புகளைப் பெற்ற வையாகும். மேலும் குஞ்ஞுண்ணியின் கவிதைகள் சில (ஆனந்தகுமார், ஜெயமோகன், ஆ. மாதவன் மற்றும் நெல்லை சு. முத்து) இரண்டு மொழிபெயர்ப்புகளையும், மற்றும் சில மூன்று மொழிபெயர்ப்புகளையும் பெற்றுள்ளன. மரபுக்கவிஞர்களில் குமாரனாசான், வள்ளத்தோள் ஆகியவர்களுடைய கவிதைகள் மிகுதியாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. தற்காலக்கவிஞர்களில் சச்சிதானந்தன், குஞ்ஞுண்ணி ஆகியவர்களுடைய கவிதைகள் தான் மிகுதியாக மொழிபெயர்க்கப்பட் டவை ஆகும். இவர்களில் சச்சிதானந்தனுடைய கவிதைகளைத்தான் மிகுதியான நபர்கள் மொழிபெயர்ப்பு செய்துள்ளனர்.

இம்மொழிபெயர்ப்புகளின் வாயிலாக குமாரனாசான், வள்ளத்தோள், உள்ளூர், திரு நாராயணகுரு, அய்யிப்பிள்ளை ஆசான், சச்சிதானந்தன், குஞ்ஞுண்ணி, எம். கோவிந்தன், கெ. ஐயப்பப்பணிக்கர், ஆர். இராமசந்திரன், என்.என். கக்காடு, கெ.ஜி. சங்கரப்பிள்ளை, ஆற்றூர் ரவிவர்மா, கடமனிட்ட ராமகிருஉஷ்ணன், சுகதகுமாரி, சிபிசந்திரன், பாலச்சந்திரன் சுள்ளிக்காடு, ஏ. ஐயப்பன், ஜோஸ்வெம்மேலி, என்.ஜி. ராதாகிருஉஷ்ணன், இராவுண்ணி, உமேஉஷ்பாபு, சாவித்திரி ராஜீவன், குரீப்புழா ஸ்ரீகுமார், டி.பி. ராஜீவன், விஜயலட்சுமி, அனிதாதம்பி, அன்வர், மணம்பூர்ராஜன்பாபு, மாங்காட்டு இரத்தினாகரன், நாலாபாடம் பத்மனாபன், சுனில்தாஸ், சங்கரக்குறுப்பு, என்.வி. கிருஉஷ்ணவாரியார், ஓ.என்.வி. குறுப்பு, செம்மணம் சாக்கோ,

வைலோப்பிள்ளி ஸ்ரீதரமேனோன், விஜயசந்திரன், புதுசேரிராமசந்திரன் ஆகிய 39 கவிஞர்களுடைய கவிதைகள் தமிழில் அறிமுகமாகியுள்ளன.

மொழிபெயர்ப்பாளர்களாக இராமகோபிநாதன், குறைவன், ப. ஜனார்த்தனம், இளங்கம்பன், எஸ்.பி. சபாரத்னம், நெல்லை சு.முத்து கோ. முருகேசன், இரணியன், நிர்மால்யா, இக்பால், சித்தார்த்தன், சூரியதீபன், இந்திரன், சேவற்கொடியோன், சுகுமாரன், புதியபரிதி, ப. ஆனந்தகுமார், ஜெயமோகன், வி.எஸ். அனில்குமார், பாரதிபுத்திரன், நீலபத்மநாபன், குருமூர்த்தி, ஜே, நாகார்ஜுனன், ஆ. மாதவன், ஜி. குமரேசன், தமிழவன் ஆகியவர்கள் உள்ளனர். இவர்களில் இராமகோபிநாதன், நிர்மால்யா, சுகுமாரன், ஜெயமோகன், நீலபத்மநாபன், ஆ. மாதவன், குருமூர்த்தி ஆகியவர்கள் கவிதை தவிர்த்த பிற இலக்கியவகைகளையும் மொழிபெயர்த்துள்ளனர்.

குமாரனாசான், வள்ளத்தோள் ஆகியவர்களுடைய கவிதைகள் வெளிவந்ததிலிருந்து சுமார் 50 ஆண்டுகளுக்குப் பிறகுதான் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. ஆனால் தற்காலக்கவிதைகளில் இவ்விடைவெளி மிகவும் சுருங்கியதாக உள்ளது.

கவிதை மொழிபெயர்ப்புகளில் சாகித்திய அக்காடமி, நாராயணகுருகுலம், மக்கள் கலாச்சாரக்கழகம், திருவனந்தபுரம் தமிழ்ச்சங்கம் ஆகிய நிறுவனங்கள் வெளியிட்டவைதவிர பிற அனைத்தும் சிறு பதிப்பகங்கள் வாயிலாகவும், மொழிபெயர்ப்பாளர்களின் சொந்த முயற்சியாலும், இதழ்கள் வாயிலாகவும் வெளிவந்தவையாகும்.

1960 முதல் 1969 வரையிலான காலகட்டத்தில் ஒருசில உதிரிக் கவிதைகளின் மொழிபெயர்ப்புகள் மட்டுமே இதழ்களின் வாயிலாக வெளிவந்துள்ளன. ஆனால் 1970 முதல் 1979 வரை தனியாகவும், தொகுப்புக்களாகவும்

மொத்தம் ஆறு நூல்களும், 1980 முதல் 1989 வரை ஒரு முழு நூலும் மற்றும் சில உதிரிக் கவிதைகளும், 1990 முதல் 1992 வரை தொகுப்பு நூல்கள் நான்கும் மற்றும் இதழ்களின் வாயிலாக சில உதிரிக்கவிதைகளும் வெளி வந்துள்ளன. இங்கு 1970-1979 வரையிலான காலப்பகுதியில் மிகுதியான மொழிபெயர்ப்புகள் தோன்றியுள்ளன. ஆனால் 1980 முதல் 1989 வரை யிலான காலப்பகுதி சற்றுத் தொய்வுடையதாக உள்ளது. இருப்பினும் 1990 முதல் கவிதை மொழிபெயர்ப்பு பற்றிய ஆவல் மிகுதியாக எழுந்துள்ளது. இதற்குச்சான்றாக நான்கு தொகுப்பு நூல்களும் மற்றும் இதழ்கள் வாயிலாக சில கவிதைகளும் வெளிவந்துள்ளமையைக் குறிப்பிடலாம்.

2. மதிப்பீடு

கவிதை இலக்கிய மொழிபெயர்ப்புகள் பற்றிய மதிப்பீட்டை மரபுக் கவிதைகள், கட்டற்ற கவிதைகள், நாட்டுப்புறப்பாடல்கள், பக்திப்பாடல்கள், போன்றவற்றின் அடிப்படையில் பின்வருமாறு அமைக்கலாம்.

1. மரபுக்கவிதைகள்

மரபுக்கவிதைகளின் மொழிபெயர்ப்பைப் பற்றிய மதிப்பீடு இராமகோபி நாதனின் மொழிபெயர்ப்பான "குமாரனாசான் மூன்று கவிதைகள்", தறைவனின் மொழிபெயர்ப்பாக உள்ள 'வள்ளத்தோள் கவிதைகள்', இளங்கம் பனின் மொழிபெயர்ப்பான 'வீழ்ந்தமலர்', எஸ்.பி. சபாரத்னத்தின் மொழிபெயர்ப்பான 'ஆத்மோபதேச சதகம்', நெல்லை சு. முத்துவின் மொழி பெயர்ப்பான "சண்டாலபிக்குணி" ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டு இங்கு செய்யப்பட்டுள்ளது. மேலும், சிந்தாவிஷ்டயாய சீதக்கு இராமகோபிநாதன் செய்துள்ள மொழிபெயர்ப்போடு ப. ஜனார்த்தனம் செய்துள்ள மொழிபெயர்ப் பையும், சண்டால பிக்சுகிக்கு நெல்லை சு. முத்து செய்துள்ள 'சண்டாலப்பிக்குணி'

என்ற மொழிபெயர்ப்போடு இராமகோபிநாதனுடைய மொழிபெயர்ப்பையும் ஒப்பிட்டு நோக்குவதாகவும் இப்பகுதி அமைந்துள்ளது.

1. குமாரனாசான் மூன்று கவிதைகள்

இராமகோபிநாதனின் (1971) மொழிபெயர்ப்பாக அமைந்துள்ள இந்நூலில் சிந்தாவிஷ்டயாயசீத (சீதையின் சிந்தாகுலம்), சண்டாலபிக்ஷுகி, கருண (கருணை) ஆகிய குறுங்காவியங்களின் மொழிபெயர்ப்புகள் இடம்பெற்றுள்ளன.

1. குமாரனாசானின் (1919) சிந்தாவிஷ்டயாயசீதை வியோகினி, சார்த்தூலவிக்ரீடிதம் என்ற வடமொழி யாப்புக்களால் ஆனது. இதனை இராமகோபிநாதன் கண்ணி, கலிவிருத்தம் போன்ற யாப்புக்களில் மொழி பெயர்த்துள்ளார். இம்மொழிபெயர்ப்பு மூலவடிவத்தைவிட சற்றுவிரிவாக அமைந்துள்ளது. சான்றாக, பின்வரும் செய்யுளைக் குறிப்பிடலாம்.

"சுதர் மாமுனியோடயோத்த்யயில்
சுதராயோரவவந்நொரந்தியில்
அதிசிந்தவகிச்சு ஸீத போய்
ஸ்திதிசெய்தாளுடஜாந்தவாடியில்
(புத்திரர் மாமுனியோடு அயோத்தியில்
போனவேளையில் ஒரு மாலையில்
மிகு சிந்தைமேவிட சீதைபோய்
அமர்ந்திருந்தாள் பூஞ்சோலையில்)"

(குமாரனாசான், 1989:25)

இதனை இராமகோபிநாதன்

"திருநிறைச் செல்வரோடு முனிவரும் அயோத் திஏகிச்
சிலபகல்கழிய ஓர்நாள் செக்கர் வான்படரும்வேளை
அருந்தவக் குடில்சார் பூங்கா அடைந்தனள் சனகி, நெஞ்சில்
ஆர்ந்தெழும் சிந்தைதாங்கி இருந்தவள் தனியள் ஆகி"

(இராமகோபிநாதன்,1990:13)

என மொழிபெயர்த்துள்ளார். இதில் "சுதர் (புத்திரர்)" என்பதை "திருநிறைச்செல்வர்" எனவும், "அந்தியில்" என்பதை "செக்கர்வான் படரும்வேளை" எனவும், "அதிசிந்தவசிச்சு" என்பதை "நெஞ்சில் ஆர்த்தெழும் சிந்தை தாங்கி" எனவும், "ஸீதபோய் ஸ்திரி செய்தா ஞூ ஜாந்த வாடியில்" என்பதை "அருந்தவக்குடில்சார் பூங்கா அடைந்தனள் சனகி....... இருந்தனள் தனியள் ஆகி" எனவும் விரிவாக்கியுள்ளார். மேலும் "மாமுனியோடு" என்பதை "மா" என்ற பொருட்கூறை நீக்கி 'முனிவரும்' எனவும் மொழிபெயர்த் துள்ளார்.

2. சிந்தாவிஷ்டயாய சீதயை ப. ஜனார்த்தனம் (1975) "சிந்தையில் மூழ்கிய சீதை" என மொழிபெயர்த்துள்ளார். கலிவிருத்தத்தில் அமைந்துள்ள இம்மொழிபெயர்ப்பு மூலத்தைவிட சற்று விரிவானதாகவும் இராமகோபிநாதனின் மொழிபெயர்ப்பைவிட சற்றுச் சுருக்கமானதாகவும் உள்ளது. சான்றாக, "சுதர்மாமுனியோடு வாடியில் (குமாரனாசான், 1989:25)" என்ற செய்யுளை ப. ஜனார்த்தனம்

"அனகர் மாமுனி யோடும் அயோத்தியில்
தனயர் போனபின் தானொரு அந்தியில்
மனதில் மால்உற மாமகள் சீதையும்
வனத்தில் ஓர்பொழில் வந்து உறைந் தாளரோ"

(ப. ஜனார்த்தனம், 1975:1)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதில் "மாமுனி" என்ற சொல்லை "அனகர்மாமுனி (கடவுள் தன்மை பொருந்திய மாமுனி)" என அடைசேர்த்தும் "அதிசிந்தவகிச்சு" என்பதை "மனதில் மாஊற (மனதில் மயக்கம் கொள்ள)" என மாற்றினை மூலமும் தமிழ்ப்படுத்தியுள்ளார்.

இம்மொழிபெயர்ப்பிலுள்ள கடினச் சொற்களுக்குரிய பொருளையும், பாடலின் கருத்துரையையும் மொழிபெயர்ப்பாளர் அடிக்குறிப்பில் தந்திருப்பது வாசகர்களுக்கு உதவியாக உள்ளது.

"நளினங்களறுத்து நீந்தியும்
குளிரேலும் கயமார்ந்து முங்கியும்
புளினங்களிலெந்நோடோடியும்
களியாடும் ப்ரியனந்நு குட்டிபோல்
(தாமரை கொய்து நீந்தியும்
குளிர்ந்த பொய்கையில் நீராடியும்
மணல் திட்டுகளில் ஓடோடியும்
விளையாடினான் காதலன் அன்று குழந்தைபோல்)"

(குமாரனாசான், 1989:45)

இப்பாடலை

"தாமரை கொய்திட நீந்தியும் தண்புனல்
தாழ்ந்த மடுவினில் மூழ்கியும் காதலன்
காவனந் தன்னில் என்னைத்தொடர்ந் தோடிடக்
களித்தனம்விளை யாடும் குழந்தைபோல்"

(இராமகோபிநாதன், 1990:33)

என இராமகோபிநாதனும்,

"தாமரை கொய்திடத் தானே நீந்தியும்
கோமகன் குளிர்கயம் மூழ்கி நீராடியும்
பூமணல் மேட்டினில் பொருந்தப் பாடியும்
சேமமோடாடினான் சேயெனச் செம்மையான்"

(ப. ஜனார்த்தனம், 1975:35)

என ஜனார்த்தனமும் மொழிபெயர்த்துள்ளனர். இங்கு "நளினங்களறுத்து நீந்தியும்" என்பதை "தாமரை கொய்திட நீந்தியும்" என இராமகோபிநாதனும், "தாமரை கொய்திடத்தானே நீந்தியும்" என ஜனார்த்தனமும் மொழிமாற்றி யுள்ளனர். இதில் "அறுத்து" என்பதை இருமொழிபெயர்ப்பாளர்களும் "கொய்திட" என மாற்றியுள்ளனர். "நீந்தியும்" என்பதை ஜனார்த்தனம் "தானே நீந்தியும்" எனக்குறிப்பாணைச் சேர்த்து மொழிபெயர்த்துள்ளார். "குளிரேலும் கயமார்ந்து முங்கியும்" என்பதை இராமகோபிநாதன் "தண்புனல் தாழ்ந்த மடுவில் மூழ்கியும்" எனவும், ஜனார்த்தனம் "கோமகன்குளிர்கயம் மூழ்கி நீராடியும்" எனவும் மொழிபெயர்த்துள்ளனர். இதில் "ஆர்ந்து (விரும்பி)" என்பதை இராமகோபிநாதன் "தாழ்ந்து" எனத்தவறாக மொழிபெயர்த்துள்ளார். ஆனால் ஜனார்த்தனம் இப்பொருட்கூறை நீக்கியுள்ளார். "முங்கியும்" என்பதை இராமகோபிநாதன் "மூழ்கியும்" என இயல்பாகவும், ஜனார்த்தனம் மூழ்கிநீராடியும் என அதன் பயனைச் சேர்த்தும் மொழிபெயர்த்துள் ளனர். மேலும் ஜனார்த்தனம் செய்துள்ள மொழிபெயர்ப்பில் "கோமகன்" என்ற எழுவாயும் சேர்க்கப்பட்டுள்ளது. "புளினங்களிலெந்நோடோடியும்" என்பதை "காவனந்தன்னில் எனைத் தொடர்ந்தோடியும்" என

இராமகோபிநாதனும் "பூமணல் மேட்டில் பொருந்தப் பாடியும்" என ஜனார்த்தனமும் மொழிபெயர்த்துள்ளனர். இதில் "புளினம் (மணல்திட்டு)" என்பதை "காவனம்" என இராமகோபிநாதனும் "பூமணல்மேடு" என ஜனார்த்தனமும் மொழிமாற்றியுள்ளனர். மேலும் "ஓடோடியும்" என்பதை இராமகோபிநாதன் "தொடர்ந்தோடியும்" எனச் சிறப்புற மொழிபெயர்த்துள்ளார். ஆனால் ஜனார்த்தனம் மூலவடிவத்திலிருந்து விலகி "பொருந்தப் பாடியும்" என மொழிபெயர்ப்பை அமைத்துள்ளார். "களியாடும் ப்ரீயனந்து குட்டிபோல்" என்பதை இராமகோபிநாதன் "களித்தனம் விளையாடும் குழந்தைபோல்" எனவும், ஜனார்த்தனம் "சேமமோடாடினான் சேயெனச் செம்மையான்" எனவும் மொழிபெயர்த்துள்ளார். இங்கு இராமகோபிநாதனின் மொழிபெயர்ப்பு மூலத்திலிருந்து விலகி இராமன், சீதை ஆகிய இருவரையும் ஒருசேரச்சொல்வதாகவும், ஜனார்த்தனத்தின் மொழிபெயர்ப்பு மூலத்தை அப்படியே பிரதிபலிப்பதாகவும் உள்ளன. இவற்றைப் பின்வருமாறு அட்டவணைப்படுத்திக்காட்டலாம்.

அட்டவணை எண்.4:1, இராமகோபிநாதன் ஜனார்த்தனம் ஆகியவர்களின் மொழிபெயர்ப்புகளின் தன்மை

குமாரனாசான் (மூலம்)	இராமகோபிநாதன் (மொழிபெயர்ப்பு-1)	ஜனார்த்தனம் (மொழிபெயர்ப்பு-2)
1. நளினங்களறுத்து நீந்தியும்	1. தாமரைகொய்திட நீந்தியும்	1. தாமரைகொய்திடத்தானே நீந்தியும்
2. குளிரேலும் கயமார்ந்நுமுங்ஙியும்	2. தன்புனல் தாழ்ந்து மடுவில் மூழ்கியும்	2. கோமகன் குளிர்கயம் மூழ்கி நீராடியும்
3. புளினங்ஙளிலெந்நோடோடியும்	3. காவனந்தன்னில் எனை தொடர்ந்தோடி	3. பூமணல் மேட்டில் பொருந்தப்பாடியும்
4. களியாடும் ப்ரீயனந்து குட்டிபோல்	4. களித்தனம் விளையாடும் குழந்தைபோல்	4. சேமமோடாடினான் சேயெனச்செம்மையான்

இவ் ஒப்பீட்டின் அடிப்படையில் இராமகோபிநாதன், ஜனார்த்தனம் ஆகிய இருவரின் மொழிபெயர்ப்புகளும் ஒருசில குறைபாடுகளுடன் மூலத்தைப் பிரதிபலிக்கும் நோக்கில் உள்ளன எனலாம்.

2. வள்ளத்தோள் கவிதைகள்

வள்ளத்தோள் நாராயண மேனோனுடைய கவிதைகளின் மொழிபெயர்ப்புகளான மக்தலனமரியம், சிறுசீதை, சந்திரசேனன் கடற்பயணம், தந்தையும் மகளும், ஆயர்பாடியில் அக்ரூரன், கிளிக்கொஞ்சல், இராதையின் நன்றி, பிறவியைத் திருத்தியது, கரும்பூமியின் பிஞ்சுபாதம், மன்னிப்பு வேண்டுதல், என் குருநாதன், விசுகாட்சி, பாபுஜி, அகத்துறைப் பாடல்கள், அன்னைபோற்றி, பாரத மகளிரின் இதயப்பண்பு, நாகிலை என்பனவற்றின் தொகுப்பாக இந்நூல் அமைந்துள்ளது. இதன் மொழிபெயர்ப்பாசிரியர் துறைவன் (1971) ஆவார். இந்நூலை கே.எம். பணிக்கரின் முன்னுரையுடன் சாகித்ய அக்காடமி வெளியிட்டுள்ளது.

துறைவனுடைய மொழிபெயர்ப்பின் பொதுத்தன்மைகளாக 1. தொகை வடிவங்களை விரியாக்குதல், 2. அடைச் சொற்களைச் சேர்த்தல், 3. ஒன்றிற்கு மற்றொன்றை இணையாகக் கொள்ளுதல், 4. மாற்றிணைகளைப் பயன்படுத்துதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். சான்றாக,

"வார்திங்கள்த் தாலமெடுத்த வஸந்தரா
வேதோ வெண்சாறொந்நு பூசிய்க்கயால்
ஶ்ரீலகலேல ஜில்லய்க் கொரு தூமுத்து
மாலயாய் மின்னீ நெயில் பட்டணம்
(வார்திங்கள் தட்டெடுத்த வஸந்தகால இரவு
ஏதோ வெண்சாற்றைப் பூசுவதால்
திருமிகு கலிலேய நாட்டிற்கொரு தூமுத்த
மாலயாய் மின்னியது நெயின் நகரம்)"

(வள்ளத்தோள், 1990:42)

என "மக்தலனமறியம்" என்ற குறுங்காவியத்தில் இடம்பெற்றுள்ள அடிகளைத் துறைவன்,

"திங்கள் எனும் தட்டெடுத்து
திகழ் வசந்த நல்லிரவு
பொங்கிவரும் பொன்னிறத்துப்
புதுச்சாறு பூசிடவும்
செழுமிய கலேல எனும்
சீமையினுக்கு இணையில்லா
அழகிய முத்தாரமென
அணிசெய்யுமே நெயின் நகரம்"

(துறைவன், 1987:1)

என்று மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதில் "வார்திங்கள் தாலம்" என்ற தொகையை "திங்கள் எனும் தட்டு" என விரியாக மாற்றியுள்ளார். "வஸந்தரா" என்பதை "திகழ்வசந்த நல்லிரவு" எனவும், "ஏதோ வெண்சாறு" என்பதை "பொங்கிவரும் வெண்ணிறத்துப் புதுச்சாறு" என அடை சேர்த்து மொழிபெயர்த்துள்ளார். "ஸ்ரீலகலேல ஜில்லக்கு" என்பதை "செழுமிய கலேல எனும் சீமையினுக்கு " எனத் தமிழ்ப்படுத்தியுள்ளார். இதில் "ஜில்ல" என்பதை "சீமை" என மாற்றிணை மூலம் பெறுமொழி வடிவமாக்கியுள்ளார். "ஒரு தூ முத்துமால" என்பதை "இணையில்லா அழகிய முத்தாரம்" எனவும், "மின்னி" என்பதை "அணிசெய்யும்" எனவும் கருத்தடிப்படையில் மொழிமாற்றியுள்ளார்.

பொதுவாக துறைவனின் மொழிபெயர்ப்பு வள்ளத்தோளின் கவிதை வரிகளுக்கு சொல்லுக்குச் சொல் பொருள் கொள்ளாமல் கருத்தடிப்படையில் அமைந்ததாக உள்ளது. சான்றாக,

"சீமோன்றெ பூமேட தன்னிலெ நேத்ராபி
ராமவிசாலமாம் சாலயிங்கல்
எண்ணபெட்டுள்ள சுகந்தம் பரத்துந்நோ-
ரெண்ண பகர்ந்து கொளுத்திச் செம்மே
தூ வெள்ளிச்சங்ஙலத் தும்பத்தாதிடம்
தூக்கிய தீபத்தின் தீப்திபூரம்
தூரிதமாகுமாறு..............
(சீமோனின் மாளிகையில் கண்களுக்கு
இன்பம் தருவதாம் மணியரங்கில்
தைலம் கலந்ததால் சுகந்தம் வீசுமோ
ரெண்ணெய் ஊற்றிக் கொழுத்தித்
தூய வெள்ளிச் சங்கிலியின் முனையில்
தொங்கவிட்ட தீபத்தின் ஒளிநிலையை
மங்கிடச் செய்யுமாறு ....)"

(வள்ளத்தோள், 1990:43)

என்றவரிகளை துறைவன்

1. "சீமோன்தன் மாளிகையில்
சிந்தைகவர் மணியரங்கில்
தேமதுர மணம்பரப்பும்
தைலமிட்டுத் திரியேற்றி
2. தூய வெள்ளிச்சங்கிலியில்
தூங்குபல மணிவிளக்கு
மேயஒளிச் சுடர்தானும்
மெலிந்தங்கு மங்கிடவே"

(துறைவன், 1987:2)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம்.

இதில் "பூமேட" என்பதை "மாளிகை" எனக்கருத்தடிப்படையில் மொழிமாற்றியுள்ளார். "எண்ணபெட்டுள்ள சுகந்தம் பரத்துந்நோரெண்ண பகர்ந்நு கொளுத்தி" என்பதை "தேமதுர மணம் பரப்பும் தைல மிட்டுத் திரியேற்றி" என சுருக்கமாகவும் மொழிபெயர்த்துள்ளார்.

இவற்றை அடிப்படையாகக்கொண்டு துறைவனின் மொழிபெயர்ப்பு எளிமையாக, சமகாலச் சொற்களைக் கொண்டதாக அமைந்தது எனலாம். மொழிபெயர்ப்பாளர் இடையிடையே அடிக்குறிப்புகளையும், ஒவ்வொரு கவிதையின் தொடக்கத்திலும் அதைப்பற்றியச் சுருக்கக்குறிப்பையும் தந்திருப்பது வாசகர்களுக்கு துணைபுரிவதாக உள்ளது.

3. வீழ்ந்தமலர்

குமாரனாசானுடைய 'வீணபூவு' வசந்ததிலகம்' என்ற வடமொழியாப்பில் அமைந்தது. இதனை இளங்கம்பன் "வீழ்ந்தமலர்" என்னும் தலைப்பில் கலிவிருத்தத்தில் மொழிபெயர்த்துள்ளார். இளங்கம்பனின் மொழிபெயர்ப்பு மூலத்தின் மையக்கருத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு தமிழ்க்கவிதை வடிவிற்கேற்பச் சற்று நெகிழ்வாகச் செய்யப்பட்டதாகும். எனவே இம் மொழிபெயர்ப்பு நடையமைப்பில் மூலவடிவினின்று சற்று விலகிச் செல்வதுபோல் உள்ளது. இருப்பினும் இது கலிவிருத்தத்திற்கேற்ற நல்ல நடையமைப்பைப் பெற்றுச் சிறப்புற உள்ளது. சான்றாக,

"ஆரோமலாமழகு சுத்தி ம்றுத்வ மாப

ஸாரஸ்ய மெந்ந சுகுமார குணத்திளெல்லாம்

பாரிங்க லேதுபம? அம்றுது மெய்யில் நவ்ய

தாருண்ய மேந்தியொரு நின்நில காணணம் தான்

(காமுறும் அழகு தூய்மை மென்மை சோபை

நளினம் என்ற நல்ல குணங்களுக் கெல்லாம்

பாரினில் ஏதுவமை? அந்த மெல்லுடலில் புது

இளமையேந்தி நிற்கும் நிலையதைக் காண்மின்"

(குமாரனாசான், 1990 அ:17)

என்ற பாடலை இளங்கம்பன்

"உருவோங்க ஒளியோங்க

உயர்பருவ எழிலோங்க

திருவோங்க நீயன்று

திகழ்ந்திருந்த நலமென்னே

பெருகு மழகுப் பெட்டகமாய்

பேரன்பில் கட்டவிழ்ந்தே

அருமலரே நீநின்ற

அழகிசைக்க வல்லார்யார்?"

(இளங்கம்பன், 1978:11)

என மொழிபெயர்த்துள்ளமையைக் குறிப்பிடலாம். இங்கு மலர் நின்ற தன்மையைக் காட்ட மூலநூலாசிரியர் கையாண்டுள்ள சொல்லமைப்பிற்கு மாறாக கருத்தடிப்படையில் ஒன்றுபட்டு மொழிபெயர்ப்பாளர் பெறுமொழி வடிவத்தை அமைத்துள்ளார்.

4. ஆத்மோபதேச சதகம்

திரு. நாராயணகுரு அவர்களின் ஆத்மோபதேச சதகத்தை எஸ்.பி. சபாரத்னம் (1985) நிலமண்டில ஆசிரியப்பாவால் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

இம்மொழிபெயர்ப்பு மூலத்தின் கருத்தை அடிப்படையாகக் கொண்டது. இதன் பொதுத்தன்மைகளாக 1. சொற்களை மிகுதியாகச் சேர்த்தல், 2. நடையைச் சுருக்குதல், 3. மாற்றிணைகளைப் பயன்படுத்துதல், 4. பொருட்கூறுகளை நீக்குதல், 5. பொருளடிப்படையில் விரித்து எழுதுதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். சான்றாக,

"கரணவுமிந்திரியவும் களேம்பரம் தொட்
டறியுமனேக ஜகத்து மோர்க்கிலெல்லாம்
பரவெளிதன்னிலுயர்ந்த பானுமான்தன்

திருவுருவாணு திரஞ்ஞு தேறிடேணம்

(கண்ணும் இந்திரியமும் உடலும் தொட்
டறியும் பல்லுயிர்களும் நினைக்கினெல்லாம்
பரவெளிதனில் உயர்ந்த ஒளியோன்தன்
திருவுருவாகும் தெரிந்தது தெளிக)"

(நாராயணகுரு, 1983:92)

என்ற பாடலை சபாரத்தினம்

"அந்தக் கரணமும் ஐம்பொறி உடலும்
இந்தச் சகமுதல் இயங்கனைத்துலகும்
பரவெளிதன்னிற் பற்கதிர் பரப்பும்
ஒரு கதிரோனின் திருவுருவாகும்
இடையறாச் சிந்தையால் இதனை உணர்க"

(எஸ்.பி. சபாரத்தினம், 1985:1)

என மொழிபெயர்த்துள்ளமையைக் குறிப்பிடலாம். இதில் "கரணம்" என்பதை "அந்தக்கரணம்" என "அந்த" என்ற சொல்லைச் சேர்த்தும், "இந்திரியவும் களேம்பரம்" என்பதை "ஐம்பொறி உடலும்" என நடையைச் சுருக்கியும், "தொட்டறியும் அனேக ஜகத்தும்" என்பதை "இந்தச் சகமுதல் இயங்கனைத் துலகும்" என மாற்றிணைகளைப் பயன்படுத்தியும், "ஓர்க்கிலெல்லாம்" என்ற பொருட்கூறை நீக்கியும், "பரவெளி தன்னிலுயர்ந்ந பானுமான் தன் திருவுருவானு திரஞ்ஞு தேறிடேணம்" என்பதை "பரவெளிதன்னிற் பற்கதிர்பரப்பும் ஒரு கதிரோனின் திருவுருவாகும் இடையறாச் சிந்தையால் இதனை உணர்க" என பொருளடிப் படையில் விரித்தெழுதியும் மொழிபெயர்ப்பை அமைத்துள்ளார்.

மேலும் மொழிபெயர்ப்பாளர் செய்யுள்களுக்குரிய மொழிபெயர்ப்புகளோடு அதன் கருத்துபற்றிய விளக்கத்தையும் சற்று விரிவாகத் தந்துள்ளார்.

5. சண்டால பிக்குனி

1. குமாரனாசானின் (1923) 'சண்டாலபிக்ஷுகி' என்ற குறுங்காவியம் மஞ்சரி, த்ருதகாகலி, லகுமஞ்சரி, ஓமனத்திங்கள் ஆகிய யாப்புக்களாலானது. இதனை நெல்லை சு. முத்து (1992) 'சண்டால பிக்குணி' என்ற தலைப்பில் மூலத்தின் யாப்பு வடிவங்களை அப்படியே கையாண்டு மொழிபெயர்ப்பு செய்துள்ளார். மலையாளத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள கவிதைகளில் மூலத்தின் யாப்புவடிவம் மாற்றப்படாது செய்யப்பட்ட மொழிபெயர்ப்புக்குச் சான்றாக இது அமைகிறது. இதில் தருமொழிவடிவத்தின் யாப்பைக் கொண்டு வருவதற்காக சில பொருட்கூறுகளை நீக்குதல் சில பொருட்கூறுகளை மிகுதியாகச் சேர்த்தல், ஒன்றை மற்றொன்றாக மாற்றுதல் போன்ற தகுமாற்றங்களை மொழிபெயர்ப்பாளர் செய்துள்ளார். சான்றாக,

1. "பண்டுத்தர உறிந்துஸ்தானத்தில் வன்புகழ்
கொண்ட சிராவஸ்திக் கடுத்தோரூரில்
(பண்டு வட இந்தியாவில் பெரும்புகழ்
கொண்ட சிராவஸ்திக்கு அடுத்த ஓரூரில்)"

2. ரண்டாயிரத்தஞ்ஞு றாண்டோளமாய் வெயில்
கொண்டெங்ஙும் வாககள் பூக்கும் நாளில்
(இரண்டாயிரத்தைந்நூறு ஆண்டுகளாய் வெயில்
பட்டு எங்கும் வாகைகள் பூக்கும் நாளில்)"

(குமாரனாசான், 1988:37)

என்ற வரிகளை நெல்லை சு. முத்து

1. "பண்டு வடக்குயர் பாரதத்தே புகழ்
கொண்ட சிராவத்திக்(கு) அண்டையூரில்

2. இரண்டாயிரத்தைந்நூ றாண்டுகளாய் வெயில்
கொண்டாடும் வாகைகள் பூக்கும் காலம்"

(நெல்லை சு.முத்து, 1992:18)

என மொழிபெயர்த்திருப்பதைக் குறிப்பிடலாம். இதில் "வன்புகழ்" என்ற சொல்லிலுள்ள "வன்" என்ற பொருட்கூறை நீக்கி "புகழ்" என மட்டுமே மொழிபெயர்த்துள்ளார். "உத்தர உறிந்துஸ்தானம்" என்பதை "வடக்குயர் பாரதம்" என "உயர்" என்ற பொருட்கூறை மிகுதியாகச் சேர்த்து மொழி பெயர்ப்பை அமைத்துள்ளார். "வெயில் கொண்டெங்ஙும்" என்பதை "வெயில் கொண்டாடும்" என மாற்றியுள்ளார். இதை "வெயில் பட்டெங்கும்" என மாற்றியிருந்தால் மூலத்திற்குச் சமமாக அமைந்திருக்கும். மேலும் "நாளில்" என்பதைக் "காலம்" எனவும் மாற்றியுள்ளார்.

2. குமாரனாசானின் சண்டால பிக்சுகியை இராமகோபிநாதன் (1971) கண்ணி, கலிவிருத்தம், நொண்டிச்சிந்து, ஆசிரியவிருத்தம் போன்ற யாப்பினங்களால் மொழிபெயர்த்துள்ளார். இம்மொழிபெயர்ப்பு அடைகள், மாற்றிணைகள் போன்றவற்றைப் பெற்று மூலத்தைவிட சற்று விரிவாக அமைந்துள்ளது. சான்றாக

"பண்டுத்தர உறிந்துஸ்தானத்தில் வன்புகழ்
கொண்ட சிறாவஸ்திக் கடுத்தோரூரில்
(பண்டு வட இந்தியாவில் பெரும்புகழ்
கொண்ட சிறாவஸ்திக்கு அடுத்த ஓரூரில்)"

(குமாரனாசான், 1988:37)

என்ற செய்யுளை இராமகோபிநாதன்

"நிலம் சிறந்த இந்துஸ்தான் நாட்டு வடபாலில்
பலர் ஏத்தும் சிராவஸ்தி நகர் மருங்கே ஓர் ஊரில்"

(இராமகோபிநாதன், 1990:47)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதில் "உத்தரஉறிந்துஸ்தானத்தில்" என்பதை "நிலம் சிறந்த இந்துஸ்தான் நாட்டு வடபாலில்" என அடைசேர்த்தும், "வன்புகழ் கொண்ட" என்பதை "பலர் ஏத்தும்" என மாற்றிணை மூலமாகவும், "சிறாவஸ்தி" என்பதை "சிராவஸ்திநகர்" என பொதுச்சொல்லைச் சேர்த்தும் மொழிபெயர்த்துள்ளார். மேலும் இம்மொழி பெயர்ப்பில் "பண்டு" என்ற சொல்லை நீக்கியுள்ளார்.

1. "பிக்சுனி மந்திரம் தன்னில் - புத்த
சிக்ஷித வானு மாதங்கி
(பிக்சுவின் மடம் தனில் - புத்த
கல்வி பெற்றாள் மாதங்கி)

2. பூஉடீணமொக்கெ வெடிஞ்ஞு - பால
தோஉழிச்சு கூந்தலரிஞ்ஞு
(அணிகள் அனைத்தும் களைந்து-செல்வி
மகிழ்ந்த கூந்தல் அறுத்தாள்
3. சேஉடீம் சீறமணி மாரேலும் - சுத்த
வேஉடீம் சரியாய் அணிஞ்ஞு
(பிறகு புத்த துறவியரை விடவும் - தூய
வேடத்தைச் சரியாய் அணிந்தாள்)"
(குமாரனாசான், 1988:49)

இக்கண்ணிகளை நெல்லை சு. முத்து

1. "பிக்குனி மந்திரந் தன்னில் - தவ
மிக்குயர் சீடராய் வாழ்ந்தாள்
2. ஆபரணங்களும் நீத்தாள் - செல்வி
சோபனக் கூந்த லறுத்தாள்
3. கூடும்சீ ராமணி முத்தாள் - தவ
வேடமும் செவ்வனுடுத்தாள்"
(நெல்லை சு. முத்து, 1992:30)

எனவும் இராமகோபிநாதன்,

1. "பிக்சுனி மாளிகை தங்கிப் - புத்த
சிட்சைகள் பெற்றாள் மாதங்கி
2. இட்ட அணிகள் களைந்து - தலை
மொட்டையடித்தாள் மகிழ்ந்து
3. ஏய தவப் பெண்டிர் போலெ - ஆடை
தூயவை தானும் அணிந்தாள்"
(இராமகோபிநாதன், 1990:66)

எனவும் மொழிபெயர்த்துள்ளனர். இங்கு "பிக்சுணி (புத்தப்பெண்துறவி)" என்பதை

நெல்லை சு. முத்து தமிழ் எழுத்து முறைக்கேற்ப 'பிக்குனி' எனவும், இராமகோபிநாதன் மூலவடிவத்தைத் தழுவி "பிக்ஷுணி" எனவும் ஒலிபெயர்ப்பு செய்துள்ளனர். "மந்திரம்" என்பதை நெல்லை சு. முத்து அவ்வாறே ஒலிபெயர்த்தும், இராமகோபிநாதன் "மாளிகை" என மாற்றிணையைப் பயன் படுத்தியும் மொழிமாற்றம் செய்துள்ளனர். "சிக்ஷித (கற்பவள்)" என்பதை நெல்லை சு. முத்து 'சீடராய்" என தமிழ்வாசகர்களுக்குப் புரியும் படியாகவும் இராமகோபிநாதன் "சிக்சைகள் பெற்றாள்" என மூலச்சொல்லை அப்படியே பயன்படுத்தியும் மொழிபெயர்த்துள்ளனர். "சிக்ஷிதவாணு மாதங்கி" என்பது எட்டு எழுத்துக்களால் ஆனது. இதை நெல்லை சு. முத்து "பிக்குயர் சீடராய் வாழ்ந்தாள்" என மூலவடிவத்திலிருந்து சற்றுவிலகி மொழிபெயர்த்துள்ளார். ஆனால் இராமகோபிநாதன் இதனை "சிட்சைகள் பெற்றாள் மாதங்கி" என எட்டு எழுத்துக்கள் கொண்ட அடியாக மாற்றியுள்ளார். இதில் "வாணு" என்ற பொருள்கூறு "பெற்றாள்" என மாற்றம் பெற்றுள்ளதும் இங்கு கவனிக்கத் தக்கது. "பால தோஉஷிச்சு கூந்தலரிஞ்ஞு" என்பதை நெல்லை சு. முத்து "செல்வி சோபனக்கூந்த லறுத்தாள்" என மொழிபெயர்த்துள்ளார். இதில் "பால (இளம்பெண்)" என்பதை "செல்வி" எனவும், "சந்தோஉஷிச்சு" என்ற பொருளில் "தோஉஷிச்சு" என முதல்குறையாக வந்துள்ள சொல்லை நீக்கியும், "கூந்தலரிஞ்ஞு" என்பதை "சோபன கூந்த லறுத்தாள்" என நயம்படவும் மொழிபெயர்ப்பை அமைத்துள்ளார். ஆனால் இராமகோபிநாதன் "தலை மொட்டையடித்தாள் மகிழ்ந்து" என யாப்புக்காக "பால" என்ற சொல்லை நீக்கி மொழிபெயர்ப்பைச் செய்துள்ளார். மேலும் "கூந்தலரிஞ்ஞு (கூந்தலைக் களைந்தாள்)" என்ற மங்கல வழக்கிற்குப் பதிலாக "தலை மொட்டையடித்தாள்" என்ற சாதாரண வழக்கைப் பயன்படுத்தியுள்ளார். "ஊேஃஉஃம்----அணிஞ்ஞு" என்பது "பிறகு புத்த துறவியரைவிடவும் தூய வேடத்தைச் சரியாக அணிந்தாள்"

எனப் பொருள்படும். இதை நெல்லை சு. முத்து "கூடும்..... செவ்வனுடுத்தாள்" என மொழிபெயர்த்துள்ளார். இதில் "புத்த துறவியரை விடவும்" என்ற கருத்தைப் "புத்த பெண்துறவியாகிய அவள்" எனவும், "தூயவேடத்தை சரியாக அணிந்தாள்" என்ற கருத்தை "தவவேடத்தையும் சரியாக உடுத்தாள்" என உம்மைசேர்த்தும் மொழிபெயர்ப்பை அமைத்துள்ளார். ஆனால் இராமகோபிநாதன் "ஏயதவப்.....அணிந்தாள்" என செய்துள்ள மொழிபெயர்ப்பில் "புத்தப்பெண் துறவியரைப்போல எனவும்," "சேஉஷம்" என்ற சொல்லை நீக்கியும், "ச்றமணி" என்பதை "தவப்பெண்டீர்" எனவும், "வேஉஷம்" என்பதை "ஆடை" எனவும் அமைத்துள்ளார். இவற்றைப் பின்வருமாறு அட்டவணைப் படுத்தலாம்.

அட்டவணை எண். 4:2, நெல்லை சு. முத்து, இராமகோபிநாதன் ஆகியவர்களின் மொழிபெயர்ப்புகளின் தன்மை

குமாரனாசான் (மூலம்)	நெல்லை சு. முத்து (மொழிபெயர்ப்பு-1)	இராமகோபிநாதன் (மொழிபெயர்ப்பு-2)
1. பிக்ஷுணிமந்திரம் தன்னில்	1. பிக்குணி மந்திரம் தன்னில்	1. பிக்ஷுணிமாளிகை தங்கிப்
2. புத்த சிக்ஷயிதவாணு மாதங்கி	2. தவமிக்குயர் சீடராய் வாழ்ந்தாள்	2. புத்த சிட்சைகள் பெற்றாள் மாதங்கி
3. பூஉஷணமொக்கெ வெடிஞ்ஞு	3. ஆபரணங்களும் நீத்தாள்	3. இட்ட அணிகள் களைந்து
4. பாலதோஉயிச்சு கூந்தலரிஞ்ஞு	4. செல்வி சோபன கூந்தலறுத்தாள்	4. தலைமொட்டையடித்தாள் மகிழ்ந்து
5. சேஉஷம் ச்றமணி மாரேவும்	5 கூடும் சிராமணி முத்தாள்	5. ஏயதவப்பெண்டிர் போலே
6. சுத்தவேஉஷம் சரி யாய் அணிஞ்ஞு	6. தவவேடமும் செவ்வனு டுத்தாள்	6. ஆடை தூயவைதானும் அணிந்தாள்

இவ்வட்டவணையின் மூலம் இராமகோபிநாதன், நெல்லை சு. முத்து ஆகிய இருவர்களின் மொழிபெயர்ப்புகளும் கருத்தளவில் குறைவுபடாது அமைந்துள்ளதையும், நெல்லை சு. முத்துவின் மொழிபெயர்ப்பு மாற்றிணைகளை மிகுதியாகப் பெற்றுத் திகழ்வதையும் அறிந்துகொள்ள முடியும்.

2. கட்டற்ற கவிதைகள்

1. கட்டற்ற கவிதைகளின் மொழிபெயர்ப்பைப் பற்றிய மதிப்பீடு இரத்தசாட்சிகள், குஞ்ஞுண்ணிக் கவிதைகள், தற்கால மலையாளக்கவிதைகள், விளக்குக் கொடிகள் ஆகிய நூல்களை அடிப்படையாகக்கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. மேலும் குஞ்ஞுண்ணியின் கவிதைகள் சிலவற்றிற்கு ஜெயமோகன், ஆ. மாதவன், நெல்லை முத்து ஆகியவர்கள் செய்துள்ள மொழிபெயர்ப்புகளை ஆனந்தகுமாரின் மொழிபெயர்ப்போடு ஒப்பிட்டுநோக்குவதோடு, பாலச்சந்திரன் சுள்ளிக்காடின் 'எவிடெஜோண்' என்ற கவிதைக்கு வி.எஸ். அனில்குமார், பாரதிபுத்திரன் ஆகியவர்கள் செய்துள்ள மொழிபெயர்ப்போடு நாகார்ஜுனன் செய்துள்ள மொழிபெயர்ப்பை ஒப்பிட்டு நோக்குவதாகவும் இப்பகுதி அமைந்துள்ளது.

1. இரத்தசாட்சிகள்

சச்சிதானந்தனுடைய கவிதைகளிலிருந்து இரனியன், நிர்மால்யா, இக்பால், சித்தார்த்தன், சூரியதீபன், இந்திரன், சேவற்கொடியோன், சுகுமாரன், புதியபரிதி ஆகிய ஒன்பதின்மரின் மொழிபெயர்ப்புகளாக சுமார் 31 கவிதைகள் அடங்கிய தொகுப்பாக 'இரத்தசாட்சிகள்' (1990) என்ற நூல் திகழ்கிறது.

இம்மொழிபெயர்ப்பு பெரும்பாலும் இயல்பாக அமைந்து மூலவடிவத்தைப் பிரதிபலிக்கின்றது. சான்றாக,

"ஆகாசத்திலெ நக்ஷத்ரங்ஙள் கெட்டுபோயது கொண்டு
நாமும் வீட்டில் ஒரு நக்ஷத்ர விளக்கு தூக்குந்நு
ப்ளாஸ்றிக் புல்க்கூட்டிலெ
பாவ கிறிஸ்துவின்றெ பிறவியறியிக்கான்
ஈ கடலாசு நக்ஷத்ரங்ஙள் மதி
கிழக்கு நிந்நோ படிஞ்ஞாறு நிந்நோ
ஞானிகளினி வரானில்ல
வந்நவர் வந்நவர் ஈ பூமியில் பாவகளாயி
அநீதிக்கு முன்னில் மௌனிகளாய ஞானிகள்க்கு
ஒரு ஜனனத்தினும் ஸாக்ஷியம் வகிக்கானாவில்ல
(வானில் நட்சத்திரங்கள் அணைந்துபோனதினால்
நாமும் வீட்டில் ஒரு நட்சத்திர விளக்கைத் தொங்கவிடுகிறோம்
பிளாஸ்டிக் புல் கூட்டில்
பொம்மை இயேசுவின் பிறப்பை அறிவிக்க
இந்தக் காகித நட்சத்திரங்கள் போதும்
கிழக்கிலிருந்தோ மேற்கிலிருந்தோ
ஞானிகள் வருவதற்கில்லை.
வந்தவர்கள் வந்தவர்கள் இந்த பூமியில் பொம்மைகளானார்கள்
அநீதியின் முன் மௌனம் பூண்ட ஞானிகளுக்கு
ஒரு பிறப்பிற்கும் சாட்சியாக முடியாது)"

(சச்சிதானந்தன், 1988:516)

என்ற வரிகளை சுகுமாரன்

"வானில் நட்சத்திரங்கள் அணைந்துபோயின
எனவே
நாமும் வீட்டில் ஒரு நட்சத்திரவிளக்கை மாட்டுகிறோம்
பிளாஸ்டிக் புல் கொட்டிலில்
பொம்மை யேசுவின் பிறப்பை அறிவிக்க
இந்தக் காகித நட்சத்திரங்கள் போதும்
கிழக்கிலிருந்தோ மேற்கிலிருந்தோ
இனி ஞானிகள் வரப்போவதில்லை
வந்தவர்களோ இந்த பூமியின் பொம்மைகளானார்கள்
அநீதியின் முன் மௌனிகளான ஞானிகள்
எந்தப் பிறவிக்கும் சாட்சியம் வகிக்க முடியாது"

(சுகுமாரன், 1990:56)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இங்கு மூலவடிவத்தில் காணப்படும் 'கெட்டுப்போயது' 'தூக்குந்நு' ஆகிய சொற்கள் தமிழுக்கும் பொதுவானதாக இருந்தாலும் பாடலில் வந்துள்ள சூழலின் அடிப்படையில் 'அணைந்துபோயின' 'மாட்டுகிறோம்' என மொழிபெயர்த்துள்ளார். "ஞானிகளினிவரானில்ல" என்பதை "இனி ஞானிகள் வரப்போவதில்லை" என்று சற்று மிகைப்படுத்தித் தமிழாக்கியுள்ளார். "வந்நவர் வந்நவர்" என மூலவடிவத்தில் இருமுறை வந்துள்ள சொல்லை "வந்தவர்களோ" என மட்டுமே மொழிபெயர்த்துள்ளார்.

இம்மொழிபெயர்ப்பில் மிகைமாற்றங்களும் இடையிடையே காணப்படுகின்றன. சான்றாக

"தீனம் தின்ன பொண்டாட்டி, பசிவெந்த கொளந்தை
ஓர்ம்ம கத்தி வண்டி ஆவிவண்டியாயி
தீர்த்தாடகருடெ உஷ்ண்முகநதி வரளும் வரெ
ஆண்டவர் தருந்ந அரத்துடம் கஞ்ஞி
ஆழ்ச்சயிலொரிக்கல் அரத்தொண்டு லகரி
(நோய் தின்ற பொண்டாட்டி பசியில் வெந்த கொளந்தை
நினைவு எரிந்து வண்டி புகைவண்டியானது
புனிதயாத்திரிகரின் உஷ்ண்முகநதி வரளும்வரை
ஆண்டவர்தரும் அரைவயிற்றுக்கஞ்சி
வாரத்திற்கொருமுறை அரைப்பட்டை போதை)"

(சச்சிதானந்தன், 1988:289)

என்பதை சுகுமாரன்

"நோய் தின்ற பெண்டாட்டி
பசியால் வெந்த குழந்தை
கனவுகள் எரிந்த வண்டி
தீர்த்த யாத்திரிகர்களின் உஷ்ண்முகநதி வரளும்வரை
ஆண்டவன் தரும் அரைவாய்க்கஞ்சி
வாரம் ஒருதடவை அரை மொந்தை போதை"

(சுகுமாரன், 1990அ:61)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இங்கு தருமொழிவடிவத்தில் காணப்படும் வட்டாரவழக்கைச் சார்ந்த தமிழ்ச் சொற்களான "தீனம் தின்ன பொண்டாட்டி", "கொளந்தை" போன்றவற்றை "நோய்தின்ற பெண்டாட்டி" "குழந்தை" என உயர்வழக்கு நடையிலான தமிழ்ப்பகுதிகளாக மாற்றியுள்ளார்.

2. குஞ்ஞுண்ணிக்கவிதைகள்

1. பா. ஆனந்தகுமார் (1990) என்பவர் குஞ்ஞுண்ணியின் கவிதைகள் சிலவற்றை மொழிபெயர்த்துத் தொகுப்பாக வெளியிட்டுள்ளார். குஞ்ஞுண்ணியின் கவிதைகள் எளிய கட்டமைப்பைக் கொண்டவை. எனவே இவற்றை மொழி பெயர்ப்பதும் ஒரு வகையில் எளிய ஒன்று. எனினும் இதிலும் சில சிக்கல்கள் காணப்படுகின்றன. ஆனந்தகுமாரின் மொழிபெயர்ப்பு உத்திகளாக மூலக்க விதையின் அமைப்பைப் பெறுமொழியில் கொண்டுவர முயலுதல், கருத்தடிப்படையில் வடிவத்தை மாற்றியமைத்தல் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

மூலக்கவிதையின் அமைப்பைப் பெறுமொழியில் கொண்டு வருவதற்காக அவர் செய்துள்ள முயற்சிக்குச் சான்றாக

"யாதா நாட்டார்
ததா ஸர்க்கார்
(எவ்வழி மக்கள்
அவ்வழி அரசு)"
(குஞ்ஞுண்ணி, 1989: 262)

என்ற கவிதையை

"எவ்வழி நாட்டாரோ
அவ்வழி சர்க்கார்"
(ஆனந்தகுமார், 1990:61)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இங்கு மொழிபெயர்ப்பாளர் மூலத்தின் வடிவத்தைப்பேண முற்பட்டதால் மொழிபெயர்ப்பு சொற்பெயர்ப்பாக மாறியுள்ளது.

"ஜனிக்கும் நிமிஷம் தொட்டென்
மகனிங்க்லீஷ் படிக்கணம்
அதினால் பார்யதன் பேறங்
இங்க்லண்டில்த்தன்னெயாக்கினான்
(பிறக்கும் நிமிடத்திலிருந்தே என்
மகன் ஆங்கிலம் படிக்கவேண்டும்
அதனால், மனைவியின் பிரசவத்தை
இங்கிலாந்தில் ஆக்கினேன் நான்)"

(குஞ்ஞுண்ணி, 1989:111)

இக்கவிதையை ஆனந்தகுமார்

"ஜனிக்கும் நிமிஷத்திலிருந்தே என்
மகன் இங்கிலீஷ் படிக்கணும்
இதனால்மனைவியின் பிரசவத்திற்கு
இங்கிலாந்திலே ஏற்பாடு செய்தேன் நான்"

(ஆனந்தகுமார், 1990:31)

என மொழிபெயர்த்துள்ளார். இதில் ஜனிக்கும், படிக்கணம் போன்ற சொற்களை மூலவடிவத்திலிருந்து அப்படியே பெறுமொழி வடிவத்திலும் பயன் படுத்தியுள்ளார். மேலும் 'அதினால்' என்பதை 'இதனால்' என மாற்றி யுள்ளார் "ஆக்கினான்" என்பதை "ஏற்பாடுசெய்தேன் நான்" என கருத்தடிப்படையில் மாற்றினை மூலம் மொழிபெயர்த்துள்ளார்.

"சூர்யன் கிழக்குதிக்குந்து
தெக்கில் நீ யெந்ந போலவே
படிஞ்ஞாறஸ்தமிக்குந்து
நிக்கில் ஞானெந்ந போலெயும்
(சூரியன் கிழக்கிலுதிப்பது
தெக்கில் நீ என்பது போலவே
மேற்கில் மறைவது
உக்கில் நானென்பது போலவும்)"

(குஞ்ஞுண்ணி, 1989:68)

என்பதை ஆனந்தகுமார்

"கதிரவன் கிழக்கில் உதிக்கிறான் - இது
என்னிடம் நீ யென்பது போலவே
மேற்கில் மறைகிறான் - இது
உன்னிடம் நான் என்பது போலவும்"

(ஆனந்தகுமார், 1990:19)

என மொழிபெயர்த்துள்ளார். இங்கு முதலடியிலும் மூன்றாமடியிலும் இறுதியில் பெற்றுள்ள தொடர் ஓசைநயம் "இது" என்ற தனிச்சொல் மூலம் துண்டிக்கப் பட்டுக் கவிதை வடிவமாற்றம் பெற்றுள்ளது.

"த்ருதராஉஷ்ட்ரன் மாரல்லோ
ராஉஷ்ட்ரீய நேதாக்கன்மார்
(திரிதிராஉஷ்டிரர்களன்றோ
அரசியல் தலைவர்கள்)"

(குஞ்ஞுண்ணி, 1989:160)

என்பதை ஆனந்தகுமார்

"திருதராஉஷ்டிரர்களன்றோ
திருவாளர் அரசியல் தலைவர்கள்"

(ஆனந்தகுமார், 1990:21)

என மொழிபெயர்த்துள்ளார். இங்கு "திருவாளர்" என்ற சொல்லை மிகுதியாகச் சேர்த்துள்ளார்.

இம்மொழிபெயர்ப்பில் இடையிடையே அடிக்குறிப்புகளையும் மொழிபெயர்ப் பாளர் தந்துள்ளார். மேலும் கவிதைகளின் மூலவடிவத்தின் தமிழ் ஒலிப்பெயர்ப்பை யும் நூலில் இணைத்துள்ளார். இவ்வொலிப் பெயர்ப்பில் வர்க்க எழுத்துக்களுக்கு இணையாகத் தமிழின் வல்லின எழுத்துக்களைத் தந்துவிட்டு அவற்றின்மீது 1,2,3 என எண்ணிட்டு வருக்க வேறுபாடுகளைக் காட்டியுள்ளார். மேலும் நூலின் இறுதியில்

மொழிபெயர்ப்புப் பிரச்சனை பற்றிய கட்டுரை ஒன்றையும் தந்துள்ளார்.

2. குஞ்ஞுண்ணியின் கவிதைகள் சிலவற்றிற்கு ஜெயமோகன் (1990) "தற்காலமலையாளக்கவிதைகள்" என்ற நூலிலும், ஆ. மாதவன், நெல்லை சு.முத்து (1992) ஆசியவர்கள் 'கேரளத்தமிழ்' மொழிபெயர்ப்புச் சிறப்பு மலரிலும் மொழிபெயர்ப்புகளைச் செய்துள்ளனர். இவர்களின் மொழிபெயர்ப்புத்திறனை விளக்குவதற்குச் சான்றாக

"ஒரு தீப்பெட்டிக் கொள்ளிதரு
கூடு தரு
ஒரு பீடி தரு
விரலு தரு
சுண்டு தரு
ஞானொரு பீடி வலிச்சு ரஸிக்கட்டெ
(ஒரு தீக்குச்சி தாருங்கள்
தீப்பெட்டி தாருங்கள்
ஒரு பீடி தாருங்கள்
விரல் தாருங்கள்
உதடு தாருங்கள்
நானொரு பீடி புகைத்து ரசிக்கட்டும்)"

(குஞ்ஞுண்ணி, 1989:105)

என்ற கவிதையை ஆனந்தகுமார்

"ஒரு தீக்குச்சிதா
ஒரு தீப்பெட்டிதா
ஒரு பீடிதா
விரல் தா
உதடு தா
நானொரு பீடி இழுத்து ரசிக்கிறேன்"

(ஆனந்தகுமார், 1990:67)

எனவும், ஜெயமோகன்

"ஒரு தீக்குச்சி கொடுங்கள்
ஒரு தீப்பெட்டி கொடுங்கள்
ஒரு பீடி கொடுங்கள்
விரல் கொடுங்கள்
உதடு கொடுங்கள்
ஒரு பீடி புகைத்துக்கொள்கிறேன்"

(ஜெயமொகன், 1990:15)

எனவும், ஆ. மாதவன், நெல்லை சு. முத்து ஆகியவர்கள்

"ஒரு தீக்குச்சிதா
தீப்பெட்டிதா
ஒரு பீடி தா
விரல் தா
உதடு தா
நானொரு பீடி புகைத்து ரசிக்கட்டும்"

(ஆ. மாதவன், நெல்லை சு.முத்து, 1992:73)

எனவும் மொழிபெயர்த்துள்ளனர்.

மலையாளத்தில் 'தரு' என்ற ஏவல் வினைமுற்றுச் சொல்லை பெரும்பாலும் மரியாதை வழக்காகப்பயன்படுத்துகின்றனர். 'தா' என்பது தன்மை இடத்தில் வருவது மிகவும் பழமையான வழக்காகும். தொல்காப்பியத்தில் (சொல், நூற். 28,29) இடம் பெற்றுள்ள இவ்வழக்கு மலையாள மொழியில் தற்காலத்திலும் காணப்படுகிறது. இதனை ஆனந்தகுமார், ஆ. மாதவன் மற்றும் நெல்லை சு.முத்து ஆகியவர்கள் அப்படியே மொழிபெயர்ப்பில் கொண்டுவந்திருக்கின்றனர். ஆனால்

ஜெயமோகன் 'கொடுங்கள்' என்ற மாற்றிணைமூலம் பெறுமொழிவடிவத்தை அமைத்துள்ளார். மேலும் 'கூடு தரு' என்பதை 'ஒரு' சேர்த்து 'ஒரு தீப்பெட்டிதா' என ஆனந்தகுமாரும் 'ஒரு தீப்பெட்டி கொடுங்கள்' என ஜெயமோகனும் மொழி பெயர்த்துள்ளனர். 'பீடி வலிச்சு ரஸிக்கட்டெ' என்பதை 'பீடி இழுத்து ரசிக்கிறேன்' என ஆனந்தகுமாரும் 'பீடி புகைத்துக்கொள்கிறேன்' என 'ரசித்தல்' என்ற பொருட்கூறை நீக்கி ஜெயமோகனும், 'பீடி புகைத்து ரஸிக்கட்டும்' என ஆ. மாதவன், நெல்லை முத்து ஆசியவர்களும் மொழிபெயர்த்துள்ளனர். இவற்றில் ஆனந்தகுமாரின் மொழிபெயர்ப்பு மூலத்தை அப்படியே பிரதிபலிப்பதாகவும், ஜெயமோகனின் மொழிபெயர்ப்பு மாற்றிணைப்பயன்பாடு மிகுந்ததாகவும், ஆ.மாதவன், நெல்லை சு. முத்து ஆசியவர்களின் மொழிபெயர்ப்புகள் மூலத்தை ஒத்துச்செல்வதாகவும் உள்ளன. இவற்றைப் பின்வருமாறு அட்டவணைப்படுத்திக் காட்டலாம்.

அட்டவணை எண்.4:3,ஆனந்தகுமார், ஜெயமோகன், ஆ. மாதவன் மற்றும் நெல்லை சு. முத்து ஆசியவர்களின் மொழிபெயர்ப்பின் தன்மை

குஞ்ஞுண்ணி (மூலம்)	ஆனந்தகுமார் (மொழிபெயர்ப்பு-1)	ஜெயமோகன் (மொழிபெயர்ப்பு-2)	ஆ. மாதவன் (நெல்லை சு.முத்து (மொழிபெயர்ப்பு-3)
1.ஒரு தீப் பெட்டிக் கொள்ளிதரு	1. ஒரு தீக்குச்சி தா	1. ஒரு தீக்குச்சிகொடுங்கள்	1. ஒரு தீக்குச்சி தா
2.கூடுதரு	2. ஒருதீப்பெட்டி தா	2. ஒரு தீப்பெட்டி கொடுங்கள்	2. தீப்பெட்டிதா
3.ஒருபீடிதரு	3. ஒரு பீடி தா	3. ஒரு பீடிகொடுங்கள்	3. ஒரு பீடிதா
4.விரலுதரு	4. விரல்தா	4. விரல்கொடுங்கள்	4. விரல்தா
5.சுண்டு தரு	5. உதடுதா	5. உதடுகொடுங்கள்	5. உதடு தா
6.ஞானொரு பீடிவலிச்சு ரஸிக்கட்டெ	6. நானொரு பீடிஇழுத்து ரசிக்கிறேன்	6. ஒரு பீடி புகைத்துக்கொள்கிறேன்	6. நானொரு பீடி புகைத்து ரசிக்கட்டும்

இங்கு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மூன்று மொழிபெயர்ப்புகளும் அவற்றிற்கிடையிலான ஒரு சில வேறுபாடுகளுடன் தருமொழி வடிவத்தை அப்படியே பிரதிபலித்துக்காட்டுகின்றன.

3. தற்கால மலையாளக் கவிதைகள்

மலையாளத்திலுள்ள சமகாலக் கவிஞர்களான எம். கோவிந்தன், குஞ்ஞுண்ணி, கெ. ஐயப்பப் பணிக்கர், ஆர். ராமச்சந்திரன், என்.என்.கக்காடு, கெ.ஜி. சங்கரப்பிள்ளை, ஆற்றூர் ரவிவர்மா, கடம்மனிட்டராமகிருஷ்ணன், சச்சிதானந்தன், சுகதகுமாரி, சிபிசந்திரன், பாலச்சந்திரன் சுள்ளிக்காடு, ஏ, ஐயப்பன், ஜோஸ்வெம்மேலி, என்.ஜி. ராதாகிருஷ்ணன் ஆகியவர்களின் கவிதைகள் சிலவற்றிற்கு ஜெயமோகன் (1990) செய்துள்ள மொழிபெயர்ப்பின் தொகுப்பாக இந்நூல் உள்ளது.

இம்மொழிபெயர்ப்பில் மூலநூலாசிரியர் பற்றிய குறிப்புகள், அடிக்குறிப்பு விளக்கங்கள் ஆகியவற்றை ஜெயமோகன் தந்துள்ளார். மேலும் மாற்றிணைபயன்பாடு இவரது மொழிபெயர்ப்பில் மிகுதியாகக்காணப்படுகிறது. சான்றுகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. "மேல்க்கூரயிலெ மழ
மூளிப்பறந்நு வந்நு கூடுந்ந கடந்தல் கூட்டமாணு
பின்னெ, அவ குத்தேற்று பிடயுந்நு முற்றத்து வீணுமரஞுந்நு
பாறப்புறத்தே மழ ப்ரவாசகன்ற சப்தமாணு
அது சிலம்பு குலுக்கி மந்றம் சொல்லி உறஞ்ஞுதுள்ளி
கரிம்பாறமேல் வாள்முனகொண்டு
மாந்றிகமாய் கல்ப்பனகள் ரூபப்பெடுத்துந்நு
(மேற்கூரையில் மழை
ரீங்காரமிட்டுப்பறந்து வந்து சேர்கின்ற குளவிகளின் கூட்டம்
பிறகு அவை குத்துப்பட்டு துடிக்கின்றன முற்றத்தில் விழுந்து
முனங்குகின்றன

பாறையின்மீது மழை தீர்க்கதரிசியின் குரல்
அது சிலம்புகுலுக்கி மந்திரம் சொல்லி வெறியுடன் துள்ளிக்
கரும்பாறைமேல் வாள்முனையால்
மாந்திரீகமான கட்டளைகளுக்கு உருவம் கொடுக்கிறது)"

(சச்சிதானந்தன், 1988:254)

என்பதை ஜெயமோகன்

"மேற்குரையின் மழை
ரீங்காரத்துடன் பறந்துவந்து கூடுகட்டும் குளவிக்கூட்டம்
பிறகு அவை கொட்டுபட்டுத்துடிக்கும்
பூமியின் மீது விழுந்து முளங்குகின்றன
பாறையின் மீது மழை தீர்க்கதரிசியின் குரல்
சிலம்பு குலுக்கி மந்திரம் கூவி வெறிகொண்டு
கரும்பாறை மீது வாள்முனையால்
மந்திரக் கட்டளைகளை பொறிக்கின்றது அது"

(ஜெயமோகன், 1990:55)

என மொழிபெயர்த்துள்ளார்.

இங்கு, "கூடுந்ந" என்பதை "கூடுகட்டும்" எனவும் "குத்தேற்று' என்பதை 'கொட்டுபட்டு' எனவும் "முற்றம்" என்பதை "பூமி" எனவும் "ரூபப்படுத்துந்நு" என்பதை "பொறிக்கிறது" எனவும் மாற்றிணைகளைப் பயன் படுத்தி மொழிபெயர்த்துள்ளார்.

2. "நின்னெத்தன்னெ அறியுக
ஒருஸந்த்யக்கு விஊக்கோப்ப
அவன்றெ காதில் மந்ரிச்சு
வீட்டில் கயற்றாத்த பார்யயிலும்
சபிக்குந்ந மக்களிலும் நிந்நு தன்னெ ரக்ஊிச்ச
துல்ய தூக்கிதர்க்கு நந்நிபறஞ்ஞு அரிச்சு
அவன் காலடிமுதல் உற்றுதயம் வரெ படருந்ந

மரவிப்பு கொண்டு மரணத்தெ நிர்வகிச்சு
அஸ்க்லேப்பியூஸினு கொடுக்கேண்ட
கோழியுடெ கார்யம் க்ரீஸ்ற்றோ மறந்நுபோயி
ப்லேற்றோவும் அரிஸ்ட்டோட்டிலும்
அதேச்சொல்லி வழக்காயி,
கடத்தின்றெ பலிச கூடிக்கூடி வந்நு
ஒடுவில் க்ரீசு முழுவன் தீற்றெழு தேண்டிவந்நு.
கும், கோழிகள்க்கு
ஸம்ஸ்காரத்தெக்குறிச் செந்தறியாம்
(உன்னையே அறிவாயாக
ஒரு மாலையில் விஷக்கோப்பை
அவன் காதில் முணுமுணுத்தது.
வீட்டில் அனுமதிக்காத மனைவியிடமும்
சபிக்கும் குழந்தைகளிடமும் இருந்து தன்னைக் காப்பாற்றிய
சம பங்காளிகளுக்கு நன்றி சொல்லிச் சிரித்து
அவன் காலடி முதல் இதயம்வரைப் பரவும்
மரவிப்பால் சாவை ஏற்றான்
அஸ்க்லேப்பியூஸிற்குக் கொடுக்கவேண்டிய
கோழியின் காரியத்தை கிரீட்டோ மறந்துபோனான்
பிளேட்டோவும் அரிஸ்டோட்டிலும்
அதற்காகச் சண்டையிட்டார்கள்.
கடனின் வட்டி மிகுந்துகொண்டே போனது
இறுதியில் கிரீசு முழுவதையும் தீறாகக்கொடுக்கவேண்டியதாயிற்று
உம் கோழிகளுக்கு கலாச்சாரத்தைக் குறித்து என்ன தெரியும்?)"
(சச்சிதானந்தன், 1988:539)

இக்கவிதையை ஜெயமோகன்

"உன்னையே அறிவாயாக
ஒரு மாலைநேரத்தில் விஷக்கோப்பை
அவன் காதில் கூறியது
வீட்டுக்குள் அனுமதிக்காத மனைவியிடமிருந்தும்
திட்டும் குழந்தைகளிடமிருந்தும்
தன்னை ரட்சித்த சகமனிதர்களுக்கு
நன்றிகூறிச் சிரித்தபடி
அவன்தன் காலடிமுதல் இதயம் வரை படரும்
சில்லிப்பால் மரணத்தை நிர்ணயம் செய்தான்.
அஸ்க்ளோபிசுக்கு தரவேண்டிய
கோழியைப்பற்றி சிரீட்டோ மறந்து போனான்.
பிளேட்டோவும் அரிஸ்டாடிலும்
சண்டைப் பிடித்துக்கொண்டது அதற்காகத்தான்
கடனுக்கான வட்டி ஏறி ஏறி வந்தது.
இறுதியில் கிரீசையே அடமானம் வைக்கவேண்டியிருந்தது.
கோழிகள் என்ன அறியும்
க லாச்சாரத்தைப் பற்றி இல்லையா"
(ஜெயமோகன், 1990:57)

என மொழிபெயர்த்துள்ளார்.

இதில் "மந்றிச்சு" என்பதை "கூறியது" எனவும், "சபிக்குந்ந" என்பதை "திட்டும்" எனவும். "துல்யதுக்கிதர்" என்பதை "சகமனிதர்" எனவும் மாற்றினை மூலம் மொழிபெயர்த்துள்ளார். மேலும் "ஸந்த்யக்கு" என்பதை "மாலைநேரத்தில்" என நடைவிரிவு செய்துள்ளார். "கொடுக்கேண்ட" என்பதை "தரவேண்டிய" என மொழிபெயர்த்துள்ளார்.

4. மிளகுக் கொடிகள்

வி.எஸ். அனில்குமார், பாரதிபுத்திரன் (1991) ஆகியவர்களின் மொழிபெயர்ப்பாக 'மிளகுக்கொடிகள்" என்ற நூல் அமைந்துள்ளது. இதில் பாலசந்திரன் சுள்ளிக்காடு (எங்கே ஜான், உடல்கிடப்பு) எ. ஐயப்பன் (எனது சவப்பெட்டி சுமப்பவரோடு, பூமியின் காவல்காரன்) இராவுண்ணி (அகங்கள், நரைதிரைகளின் கொண்டாட்டம்), உமேஷ்பாபு (பலி, புத்தகப் புழுவோடு), சாவித்திரி ராஜீவன் (ஆரண்யகாண்டம், ஜன்னல்) குரீப்புழ ஸ்ரீகுமார் (தேர்தலறிக்கை, கங்காரு) டி.பி. ராஜீவன் (கதவு, கடலிறக்கம்), விஜயலட்சுமி (காலடியோசை, பாகவதம்) ஜோஸ் வெம்மேலி (பிரளயத்திற்குப் பிறகு, பௌலோஸ் வெற்றிக்கதைப் பாட்டு), அனிதாதம்பி (ஞானஸ்நானம், பருவமாற்றம்), அன்வர் (நாலும் பருந்தும், இராத்திரியிலே போஸ்ட்மேன்), மணம்பூர்ராஜன்பாபு (தற்பலி, அம்மா), மாங்காடு இரத்தினாகரன் (இசை, அக்டோபரின் பாதை), நாலாபாடம் பத்மநாபன் (காலவட்டம், மண்ணப்பம்), சுனில் தாஸ் (முடிவுகள், பேயின் கடிதங்கள்) ஆகிய பதினைந்து கவிஞர்களின் கவிதைக ளுடைய மொழிபெயர்ப்புகள் இடம் பெற்றுள்ளன.

1. இம்மொழிபெயர்ப்பு பெரும்பாலும் மூலத்திற்கு நிகரான அளவில் செய்யப்பட்டதாகும். சான்றாக பாலசந்திரன் சுள்ளிக்காடு என்பவரின் "எவிடெஜோண் (ஜான் எங்கே)" என்ற கவிதையில் உள்ள

"தரிக நீ
பீதஸாயந்தனத்தின்றெ நகரமே
நின்றெ வைத்யுதாலிம்கனம்
கொடிகளொந்நு மில்லாதெ, கோஉந்ஙளில்த்
துரிசும் மீர்ச்சப்பொடியும் நிறச்சு நின்
துறமுகத்தில ணையுகயாணென்ற
குபித யௌவனத்தின் லோக நௌககள்,
அருதெ

நீ வீண்டு மென்னில் விளிச்சுணர்த்தருது
நின்றெ நியோண் வஸந்தத்தின்றெ
சுனகுடிச்சென்றெ தூர்த்த கௌமாரவும்
ஜலகிதாறின்றெ லைலாகநாவும்
ப்ரணய ந்ருத்தம் சவுட்டிய
பாதிராத் தெருவுகள்
இந்நு தூக்கதீர்கங்ஙள்
விக்லவ யுமுத்றஸஞ்சாரங்ஙள் தீர்ந்நு
ஞானொருவனெத்தேடிவந்நு
வேதங்ஙளில்வனு ஜோணெந்நுபேர்
மேல்விலாஸவும் நிழலுமில்லாத்தவன்
விசக்காத்தவன்
(தருக நீ
மஞ்சள் அந்தியின் நகரமே
நிம்மின்சாரத்தழுவலை
கொடிகள் ஒன்றுமில்லாமல் சிடங்குகளில்
துரிசும் மரத்தூணும் நிரப்பி நிங்
துறைமுகத்தில் ஒதுங்குகின்றது என்
கோப இளமையின் உலோகத் தோணிகள்
வேண்டாம்.
நீ மீண்டும் என்னுள் அழைத்து எழுப்ப வேண்டாம்
நின் றியாண் வசந்தத்தின்
பால்குடித்த என் தான்தோன்றித்தனத்தின் இளமையும்
நீர் கிட்டாரின் லைலா பாடலும்

காதல் நடனம் மிதித்த
நடு இரவுத் தெருக்கள்
இன்று துக்க நீளங்களாம்
நடுங்கும் கடல்யாத்திரை தீர்ந்து
நான் ஒருவனைத் தேடிவந்தேன்.
வேதங்களில் அவனுக்கு ஜான் என்று பேர்
முகவரியும் நிழலுமில்லாதவன்
பசிக்காதவன்)"

(பாலசந்திரன் சுள்ளிக்காடு,1990:109-110)

இவ்வரிகளை வி.எஸ். அனில்குமார், பாரதிபுத்திரன் ஆகியவர்கள்

"தருக நீ
மஞ்சள் அந்தியுடைய நகரமே
நின் மின்சார ஆலிங்கனம்
கொடிகளொன்றும் இல்லாமல்
அணுக்கள் தோறும் மயில்துத்தமும்
மரத்தூளும் நிரப்பிக் கொண்டு
உன்துறைமுகம் வருகின்றன என்
சினந்த இளமையின் உலோகப்படகுகள்
வேண்டாம்
நீ மீண்டும் என்னுள் எழுப்பவேண்டாம்
உன் நியான் வசந்தத்தின்
பால்குடித்த என் பொறுப்புணரா
விடலைப் பருவத்தை
ஜலகிதாரின் பாடலை
காதல் நடனமிட்ட பாதிராத்திரித்
தெருக்கள்

இன்று வேதனைகள் நீண்ட

அச்சமூட்டும் கடற்பயணங்கள் முடிந்துவிட்டன

'நான் ஒருவனைத் தேடிவந்தேன்

வேதங்களில் அவனுக்கு ஜான் என்றுபேர்

முகவரியும் நிழலுமில்லாதவன்

பசியில்லாதவன்"

(வி.எஸ். அனில்குமார், பாரதிபுத்திரன், 1991:17-18)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதில் 'லைலாக காவம்' என்ற தொடரில் உள்ள 'லைலாக' என்ற பொருட்கூறை நீக்கி "பாடல்" என மட்டுமே மொழிபெயர்த்துள்ளனர். ஆனால் "காதல்பாடல்" என்ற குறிப்பு இங்கு இடம்பெறாதிருப்பது குறையாக உள்ளது.

2. "எவிடெ ஜோண்" என்ற கவிதையை நாகார்ஜுனன் என்பவரும் "ஜான் எங்கே" என்ற தலைப்பில் மொழிபெயர்த்துள்ளார். இது சச்சிதானந்தன் இக்கவிதைக்குச் செய்த ஆங்கில மொழிபெயர்ப்பிலிருந்து செய்யப்பட்டதாகும்.

இம்மொழிபெயர்ப்பு மூலத்தின் கருத்தை அடிப்படையாகக்கொண்டு செய்யப்பட்டதென்று இதன் பொதுத்தன்மையை வரையறை செய்யலாம். சான்றாக "தரிக நீ. . ...விசக்காதவன்" என மேற்காட்டப்பட்டுள்ள வரிகளை நாகார்ஜுனன்

"மஞ்சள் மாலைப் பொழுதுகளான நகரமே
உன் எலெக்ட்ரிக் அணைப்பில் என்னை வை
சீறுகிற எனது ஆண்மையின் உலோகப் படகுகள்
உன் கரைகளுக்குப் பயணப்படும்போது
கொடிமரங்களற்ற படகுகளின்
அணுக்களை
மரத்தூளும் நீலநிற அமில உப்பும்
நிரப்புகின்றன
என்னுடைய அதீத இளம்பிராயமும்
திரவ கிட்டாரின் லைலாக நிறப்பாடல்களும்
உன் நியான் வசந்தத்தின் ரசத்தை உறிஞ்சி
காதலில் ஆடிய
அந்த நடுநிசித் தெருக்களை மட்டும்
நினைவு படுத்தாதே.
பொங்கும் கடல்களின்
கரைகளின் ஊடே
சோகத்துடன் காலம் காலமாய்
அலைந்துவிட்ட நான்
இப்போது தேடுவது ஒரு மனிதனை
ஜான் என்று வேதாகமங்களில் குறிப்பிடப்பட்ட
பசியற்ற நிழலற்ற
விலாசமற்றவனை"

(நாகார்ஜுனன், 1991:42)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம்.

இப்பெயர்ப்பில் கவிதைவரிகளின் வரிசை முறைமாற்றம் மிகுதியாக உள்ளது. "வைத்யுதாலிம்கனம்" என்பதை "எலெக்ட்ரிக் அணைப்பு" என மொழிபெயர்த்துள்ளார். இதை "மின்சார அணைப்பு" என மொழிபெயர்த்திருந்தால் இன்னும் சிறப்பாக அமைந்திருக்கும். ஆனால் இச்சொல்லை வி.எஸ். அனில்குமார், பாரதி புத்திரன் என்பவர்கள் "மின்சார ஆலிங்கனம்" என்று பகுதி தமிழாகவும் பகுதி வடமொழியிலான மலையாளமாகவும் மொழிபெயர்த்துள்ளனர்.

வி.எஸ். அனில்குமார், பாரதிபுத்திரன் ஆகியவர்களின் மொழிபெயர்ப்பு பெரும்பாலும் மூலத்தை அடுத்துச் செல்வதாகவும், நாகார்ஜுனனின் மொழிபெயர்ப்பு மாற்றிணைகளை மிகுதியாகப் பெற்றதாகவும் உள்ளது. சான்றாக

"இருபதாம் நம்பர் வீடு
அதே முறி
ஒரு மெழுகுதிரிமாத்ர மெரியுந்நு
நயன ரஊ்மியால்ப் பண்டென் க்ரகங்ஙளெ
ப்ரமணமார்க்த்தில் நிந்நும் தெறிப்பிச்ச
மறிய நீரிக்கிடக்குந்நு த்ரூஊ்வதன்
சமனமில்லாத் தொரம்காரசய்யயில்
எவிடெ ஜோன்?
ஸ்வரம் தாழ்த்தி ஞான் சோதிச்சு
அவனு ஞானல்ல காவலாள் போவுக
(இருபதாம் நம்பர் வீடு
அதே அறை

ஒரு மெழுகுவர்த்திமட்டும் எரிகிறது

விழிக்கதிர்களால் முன்பு என் கிரகங்களை

சுழற்சிப் பாதையிலிருந்து தள்ளுவித்த

மரியாள் வெந்து கிடக்கிறாள் காமலின்

அடக்கமற்ற ஒரு நெருப்புப் படுக்கையில்

எங்கே ஜான்?

குரல்தாழ்த்தி நான் கேட்டேன்

அவனுக்கு நானல்ல காவலாள் போய்விடு)"

(பாலச்சந்திரன் சுள்ளிக்காடு,1990:110)

என்பதை வி.எஸ். அனில்குமார், பாரதிபுத்திரன் ஆகியவர்கள்

"இருபதாம் என் வீடு

அதே அறை

ஒரு மெழுகுவர்த்தி எரிகிறது

விழிகளின் கதிர்களால் முன்பு என் கிரகங்களைச்

சுற்றுப் பாதையிலிருந்து தெறிக்கச்செய்த

மரியா எரிந்து கிடக்கிறாள். முடிவற்ற

பேராசையின் கரிப்படுக்கையில்

எங்கே ஜான்?

குரல் தாழ்த்தி நான் கேட்டேன்.

அவளுக்கு நான் காவலாளல்ல. போய்விடுங்கள்"

(வி.எஸ். அனில்குமார், பாரதிபுத்திரன்,
1991:18-19)

எனவும், நாகார்ஜுனன்,

"வீடு எண் 20

அதே அறை

மெழுகுவர்த்தி தனியாக எரிகிறது

என் கிரகங்களை ஒரு காலத்தில்

அவற்றின் பாதைகளிலிருந்து

கலைத்துத் தள்ளிய

மேரி

கண்களில் கதிர்களுடன்

எரியும் வேட்கையாலான

தீராத ஆசைப்படுக்கையில் கிடக்கிறாள்

மெலிதாகக் கேட்கிறேன்

ஜான் எங்கே?

போபோ ஜானைப் பாதுகாப்பவளா நான்!"

(நாகார்ஜுனன், 1991:42)

எனவும் மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இவற்றை அடிப்படையாகக் கொண்டு மொழிபெயர்ப்புகள் ஒன்றை ஒன்று வேறுபடுவதைப் பின்வருமாறு அட்டவணைப்படுத்தலாம்.

அட்டவணை எண்.4.4, வி.எஸ்.அனில்குமார் மற்றும் பாரதிபுத்திரன், நாகார்ஜுனன் ஆகியவர்களுடைய மொழிபெயர்ப்புகளின் தன்மை

பாலச்சந்திரன் சுள்ளிக்காடு (மூலம்)	வி.எஸ்.அனில்குமார், பாரதி புத்திரன் (மொழிபெயர்ப்பு-1)	நாகார்ஜுனன் (மொழிபெயர்ப்பு 2)
1. இருபதாம் நம்பர் வீடு	1. இருபதாம் எண் வீடு	1. வீடு எண் இருபது
2. மெழுகுத்திரி மாத்றமெரியுந்நு	2. மெழுகுவர்த்தி எரிகிறது	2. மெழுகுவர்த்தி தனியாக எரிகிறது
3. பண்டு	3. முன்பு	3. ஒருகாலத்தில்
4. ப்றமணமார்க்கத்தில்	4. சுற்றுப்பாதையிலிருந்து	4. அவற்றின் பாதைகளிலிருந்து
5. தெறிப்பிச்ச	5. தெறிக்கச்செய்த	5. கலைத்துத்தள்ளிய
6. ஸ்வரம்தாழ்த்தி	6. குரல்தாழ்த்தி	6. மெலிதாக
7. அவனு ஞானல்ல காவலாள்போவுக	7. அவருக்கு நான் காவலா எல்ல போய்விடுங்கள்	7. போபோ ஜானை பாதுகாப்பவளா நான்

இங்கு வி.எஸ். அனில்குமார், மற்றும் பாரதிபுத்திரன் ஆகியவர்களின் மொழிபெயர்ப்பு நேரடிச் சொற்களாலும், நாகார்ஜுனனின் மொழிபெயர்ப்பு மாற்றிணை மூலமாகவும் தருமொழிவடிவத்தை விளக்குகின்றன. மேலும் இவ்விரு வேறு மொழிபெயர்ப்புகளும் கருத்தளவில் மிகுந்த வேறுபாடின்றி மலையாளக்கவிதையைத் தமிழில் தருகின்றன.

2. மேலும் சாவுபூஜை, உப்பு ஆகிய கட்டற்ற கவிதைகளின் மொழிபெயர்ப்பின் தன்மைகளையும் பின்வருமாறு விளக்கலாம்.

1. சாவுபூஜை

ஐயப்பப்பணிக்கரின் 'ம்றுத்யுபூஜ' என்ற கவிதையை 'சாவுபூஜை' என்ற தலைப்பில் நீலபத்மநாபன் (1968) மொழிபெயர்த்துள்ளார்.

இம்மொழிபெயர்ப்பு மூலக்கவிதையின் செறிவைப் பேணுவதாக உள்ளது. இதற்காக நீலபத்மநாபன் மூலவடிவத்தில் காணப்படும் வடமொழிச்சொற்கள் சிலவற்றை அப்படியே ஒலிபெயர்த்து தந்துள்ளார். சான்றாக

"மந்தகாமினி
கேமந்தயாமினி
கனசியாமரூபிணி
வரு நீ
(மென்நடையாளே
பனிக்கால இரவுபோன்றவளே
கரும்மேகம் போன்றவளே
வருக நீ)"

(ஐயப்பப்பணிக்கர், 1990:30)

என்பதை நீலபத்மநாபன்

"ஊற மந்தகாமினி
ஊற மந்த யாமினி
கன சியாமரூபிணி
நீ வாராய்"

(நீலபத்மநாபன், 1985:29)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதில் மந்தகாமினி,

ஊேற மந்தயாமினி, கஙசியாமருபிணி ஆகிய சொற்களின் பொருளைச்சாதாரண வாசகர்கள் புரிந்துகொள்வது அரிதாக உள்ளது (இங்கு 'மந்தகாமினி' என்ற சொல்லின் முன் "ஊேற" என்ற சொல்லை நீல பத்மநாபன் மிகுதியாகச்சேர்த்திருப்பதின் காரணம் தெரியவில்லை).

பொதுவாக இம்மொழிபெயர்ப்பை மூலவடிவத்தை அவ்வாறே பிரதிபலித்துக்காட்டும் தன்மைபெற்றதாகக் கருதலாம். சான்றாக

"வரிக குளிரிளகுந்ந
செறு தென்னலேறி நீ
தரிக தளிரதரதல
தாம்பூல மாதுரி
(வருக குளிரிளகும்
இளந்தென்றலேறி நீ
தருக தளிரிதழ்த் தலத்தின்
தாம்பூல மதுரம்)"

(ஐயப்பப்பணிக்கர், 1990:30)

என்பதை நீலபத்மநாபன்

"வாராய்
குளிர்மேவும்
இளந்தென்றலேறி நீ
தாராய்
தளிரிதழ்
தாம்பூலமதுரம்"

(நீலபத்மநாபன், 1985:29)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம்.

இங்கு "குளிரிளகுந்ந" என்பதை "குளிர்மேவும்" எனவும், "தளிரதரதல தாம்பூல மாதுரி" என்பதை "தலம்" என்ற பொருட்கூறை நீக்கி "தளிரிதழ் தாம்பூல மதுரம்" எனவும் பெருமொழிக்கேற்ற விதத்தில் மொழிபெயர்ப்பை அமைத்துள்ளார்.

ஐயப்பப் பணிக்கரின் கவிதைகள் வடமொழிச் சொற்களை மிகுதியாகப் பெற்றதாகவும் செறிவான நடையமைப்பைக் கொண்டதாகவும் இருக்கும். எனவே இவரது கவிதைகளை மொழிபெயர்ப்பதென்பது கடினமான பணியாகும்.

2. உப்பு

ஓ.என்.வி. குறுப்புவின் (1978) உப்பு என்ற கவிதைக்கு நீலபத்மநாபன் (1982) செய்துள்ள மொழிபெயர்ப்பு இயல்பாக அமைந்து மூலத்தைப் பிரதி பலிப்பதாக உள்ளது. சான்றாக,

"ப்லாவில கோட்டிய கும்பிளில் தும்பதன்
பூபோலித்திரியுப்புதரியெடுத்
தாவி பாறுந்ந பொடியரிக்கஞ்ஞியில்
தூவி பதுக்கெப்பறயுந்நு முத்தச்சி
உப்பு சேர்த்தாலே ருசியுள்ளூ! கஞ்ஞியில்
உப்பு வீணலிஞ்ஞுபோம்
மட்டிலென்னுண்ணீ! நின் முத்தச்சியும் நின்னெ
நில்ப்பிச் சொருநாள் மறஞ்ஞுபோம்! எங்கிலும்
நின்னிலே யுப்பாயிரிக்குமே முத்தச்சி
எந்நும்! என்னுண்ணியெ விட்டெங்ஙு போகுவான்
(பலாவிலையில் செய்த கரண்டியில் தும்பையின்
பூப்போன்ற கொஞ்சம் உப்புப் பரல் எடுத்து

ஆவிபறக்கும் குருணையரிசிக் கஞ்சியில்

இட்டு மெதுவாய்ச் சொல்கிறாள் பாட்டி

உப்பு சேர்த்தாலே சுவையுண்டு! கஞ்சியில்

உப்புப் பரல் விழுந்து கரைந்துபோம்

அளவில்தான் கண்ணா நின் பாட்டியும் உன்னை

விட்டொருநாள் மறைந்துபோவாள்! என்றாலும்

உன்னில் உப்பாய் இருப்பாள் பாட்டி

என்றும்! என் குழந்தையை விட்டு எங்கே போவேன்)"

(ஓ.என்.வி. குறுப்பு, 1991:17)

என்பதை நீலபத்மநாபன்

"பலா இலையில் செய்த கரண்டியில்

தும்பைப்பூ போலிருந்த உப்புப் பரல் எடுத்து

ஆவிபறக்கும் பொடி அரிசிக் கஞ்சியில்

இட்டபின் மெல்லச் சொன்னாள் பாட்டி

உப்பிட்டாலே சுவையுண்டு! கஞ்சியில்

உப்புப் பரல் விழுந்து கரைந்து மறைந்திடுவது போல்

உன் பாட்டியும் நின்ற நிலையில்

ஒருநாள் மறைந்துபோவாள்! இருப்பினும்

உந்தன் உப்பாயிருப்பேன் இந்தப்பாட்டி

என்றும்! என் கண்ணே உன்னை விட்டெங்கு போவேன்"

(நீலபத்மநாபன், 1985:38-39)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதில் "நின் முத்தச்சியும் நின்னெநில்பிச் சொருநாள் மறஞ்ஞுபோம்" என்பதை "உன் பாட்டியும் நின்ற நிலையில் ஒரு நாள் மறைந்துபோவாள்" என மொழிபெயர்த்திருப்பது தவறாகக் காணப்படுகிறது.

3. நாட்டுப்புறப்பாடல்கள்

நாட்டுப்புறப் பாடல்களின் மொழிபெயர்ப்புப் பற்றிய மதிப்பீடு "மலையாள நாட்டுப்புறப்பாடல்கள்" என்ற நூலை அடிப்படையாகக்கொண்டு செய்யப்பட்டுள்ளது.

1. மலையாள நாட்டுப்புறப்பாடல்கள்

மாடசேரி மாதவவாரியார் என்பவரின் 'நம்முடெ பாட்டுகள்' என்ற நூலில் இருந்தும், சிரிமாஞூர் விசுவம்பரனின் நாட்டுப்புறப்பாடல்களின் தொகுப்பிலிருந்தும் முப்பது பாடல்களைத் தேர்வு செய்து அவற்றை "மலையாள நாட்டுப்புறப்பாடல்கள்" என்ற தலைப்பில் தமிழவன் (1976) மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார்.

இம்மொழிபெயர்ப்பு மூலப்பாடலில் காணப்படும் சொற்களையும் தொடர்களையும் இடையிடையே நீக்கியதாகவும் மாற்றிணைகளைப் பயன்படுத்தியதாகவும் அமைந்துள்ளது. சான்றாக,

"கறுத்தபெண்ணே கருங்குழலி
நினக்கொருத்தன் கிழக்குதிச்சு
காடுவெட்டி தரம் வருத்தி
தறையுழுது பதம் வருத்தி
பதம் வருத்தித் தினவிதச்சு
தின தின்னான் கிளியிறங்ஙி
கிளியாட்டான் பெண்ணிறங்ஙி"
அவளிறங்ஙி வளகிலுக்கி
வளகிலுங்ஙி கிளிபறந்நு

பெண்ணுடெ வளசிலுக்கம்
கிளிபறந்நு மலகடந்நு
கறுத்த பெண்ணே கருங்குழலீ

(கறுத்தபெண்ணே கருங்குழலீ
உனக்கொருத்தன் கிழக்குதித்தான்
காடுவெட்டி வெளியாக்கி
தறை உழுது பதமாக்கி
பதமாக்கித்தினை விதைத்தான்
தினைத்தின்னக்கிளிவந்தது.
கிளிவிரட்டப் பெண்வந்தாள்
அவளிறங்கி வளை குலுக்க
வளை குலுங்கிக் கிளிபறந்தது
பெண்ணுடைய வளைசிலுக்கம்
கிளி பறந்து மலைகடந்தது
கறுத்த பெண்ணே கருங்குழலீ)"

(மாடசேரி மாதவ வாரியர், 1968:41)

என்றபாடலை

"கறுத்தபெண்ணே கருங்குழலீ
உனக்கொருத்தன் கிழக்குதித்தான்
கல்லுருட்டி தினை விதச்சோம்
தினையிலெல்லாம் கிளிவந்தது
கிளிவிரட்டப் பெண் வந்தாள்
பெண்ணுக்குள்ள வளை குலுங்கும்
வளைகுலுங்கும் வளை குலுங்கும்
கிளிகளெல்லாம் பறந்துபோகும்"

(தமிழவன், 1976:20)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம்.

இங்கு மூலப்பாடலில் உள்ள மூன்று முதல் ஐந்து வரையிலான மூன்று அடிகளுக்குப் பொதுவாக மொழிபெயர்ப்பில் மூன்றாவது அடியையும், எட்டு முதல் பன்னிரண்டு வரையிலான ஐந்து அடிகளுக்குப் பொதுவாக மொழிபெயர்ப்பில் ஆறு முதல் எட்டுவரையிலான மூன்று அடிகளையும் இணையாக்கியுள்ளார். சில அடிகளை மிகுதியாகச் சேர்த்து மொழிபெயர்த்துள்ள பாடல்களும் இவரது மொழிபெயர்ப்பில் உள்ளன. சான்றாக,

1. "கறுத்த பெண்ணே நின்னெ
காணாஞ்ஞிட்டொரு நாளுண்டோ
வருத்தப்பெட்டேன் ஞானொரு
வண்டாய்ச் சமஞ்ஞெனெடீ
வண்டாயிச் சமஞ்ஞேன் ஞானொரு
பள்ளி வாதுக்கச் செந்நப்பம்
பூமலப்பெத லென்னெ
பூக் கொண்டெறிஞ்ஞெனெடீ
5, அப்பூவும் சூடி ஞானொரு
ஆற்று வரம்பே செந்நப்பம்
தந்நாளொருத்தன் நல்லொரு
பதினெட்டே மோதிரமே
செம்பல்லிரும்பல்ல
பித்தளயல்லோடல்ல
பதினெட்டு மோதிரவும்
பொன்னாலெ பணிசெய்தல்லோ
1, (கறுத்தபெண்ணே உன்னை
காணாத ஒரு நாளுண்டா
வருத்தப்பட்ட நானொரு
வண்டாய் ஆனேனடி

வண்டாய் ஆன நானொரு

பள்ளிவாசலில் சென்றபோது

பூமலை பையனென்னை

பூக்கொண்டு எறிந்தானடி

5. அப்பூவும் சூடி நானொரு

ஆற்றோரம் சென்றபோது

தந்தான் ஒருத்தன் நல்லொரு

பதினெட்டு மோதிரமே

செம்பல்ல இரும்பல்ல

பித்தளையல்ல ஓடல்ல

பதினெட்டு மோதிரமும்

பொன்னால் செய்ததல்லவா)"

(மாடசேரி மாதவவாரியார், 1968:32)

என்ற பாடலை, அதன் அடிக்குறிப்பில் உள்ளூர் பரமேசுவர ஐயர் பாடமாகக் காட்டியுள்ள,

"வண்டாய் சமஞ்ஞ ஞானொரு

தும்பியாய் பறந்நெநெடி

தும்பியாய் பறந்நு ஞானொரு

பள்ளி வாதுக்கச் செந்நப்பம்

(வண்டாய் ஆன நானொரு

தும்பியாய் பறந்தேனடி

தும்பியாய் பறந்து நானொரு

பள்ளி வாசலில் சென்றபோது")

என்ற வரிகளையும் சேர்த்து

"கறுத்தபெண்ணே உன்னை
காணாது ஒரு நாளில்
வருத்தப்பட்டு நானொரு
வண்டாய் ஆனேனடி
வண்டாய் ஆன நான்
தும்பியாய் பறந்தேனடி
தும்பியாய் பறந்து நானொரு
கோயிலருகில் போனப்போ
பூக்கெட்டும் பையன் என்மேல்
பூக்கொண்டு எறிந்தானடி
அப்பு சூடி நானுமொரு
ஆற்றருகே வந்தப்போ
தனியாய் ஒருத்தன் பதி
னெட்டு மோதிரங்களும்
செம்புமல்ல இரும்புமல்ல
பித்தளையோ அதுவுமல்ல
பதினெட்டு மோதிரங்களும்
பொன்மோதிரம் தானல்லவா
கறுத்தபெண்ணே உன்னைக்
காணாது ஒரு நாளில்
வருத்தப்பட்டு நானொரு
வண்டாய் ஆனேனடி"

(தமிழவன், 1976:13)

என மொழிபெயர்த்துள்ளார். இங்கு உள்ளூர் பரமேசுவர ஐயர் பாடமாக குறிப்பிட்டுள்ள அடிகளில்

"தும்பியாய் பறந்நெனெடி

தும்பியாய் பறந்து ஞானொரு"

ஆகியவை மட்டுமே மாடசேரி மாதவ வாரியரின் தொகுப்பில் இடம் பெறாதவை. மேலும் இம்மொழிபெயர்ப்பின் இறுதியில் மூலவடிவத்திலுள்ள முதலிரண்டு அடிகளையும் திரும்பவும் சேர்த்திருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மேற்காட்டியுள்ள பாடலின் மொழிபெயர்ப்பில் "ஒருநாளுண்டோ" என்பதை "ஒரு நாளில்" எனவும், "பள்ளி" என்பதை "கோவில்" எனவும், "பூமலப்பைதல்" என்பதை "பூ கெட்டும் பையன்" எனவும் "ஆற்றுவரம்பே" என்பதை "ஆற்றருகே" எனவும், "செந்நப்பம்" என்பதை "வந்தப்போ" எனவும், "தந்நானொருத்தன்" என்பதை "தனியாய் ஒருத்தன்" எனவும், "பொன்னாலே பணி செய்தல்லோ" என்பதை "பொன்மோதிரம் தானல்லவா" எனவும் மாற்றியமைத்துள்ளார்.

4. பக்திப் பாடல்கள்

பக்திப்பாடல்களின் மொழிபெயர்ப்பு பற்றிய மதிப்பீடு 'சுவிசேஷ கீதங்கள்' என்ற நூலை அடிப்படையாகக் கொண்டும், ஒலிபெயர்ப்பு பற்றிய மதிப்பீடு "சுவிசேஷ பிரபல்லிய சங்கக் கீதங்கள்" என்ற நூலை அடிப்படையாகக் கொண்டும் செய்யப்பட்டுள்ளது.

1. சுவிசேஷ கீதங்கள்

இந்நூலில் மலையாளம் முதலான பல மொழிகளிலிருந்து பெயர்க்கப்பட்ட பாடல்களும், மலையாளத்திலிருந்து ஒலிபெயர்க்கப்பட்ட பாடல்களும், தமிழ் மற்றும் ஆங்கிலத்தை மூலமாகக்கொண்ட பாடல்களும் உள்ளன. இவற்றில்

மலையாளத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டவை மூலத்திற்குச் சமமானதாகவும், சிறிதளவு தகுமாற்றங்களைப் பெற்றதாகவும் உள்ளன. சான்றாக,

1. "யேசுவோடு சேர்ந்நிரிப்பதெத்ர மோதமே
யேசுவின்னாய் ஜீவிக்குந்ந தெத்ர பாக்யமே
ஆசதன்னோடெந்நு மென்னில் வர்த்திச்சிடுந்நெ
ஆசுதன்றெ கூடெவாழான் காம்க்ஷிச்சீடுந்நெ

2. போக்கியென்றெ பாபமெல்லாம் தன்றெ யாகத்தால்
நீக்கியென்றெ சாபமெல்லாம் தான் வகிச்சதால்
ஓர்க்குந்தோறும் ஸ்னேக மென்னில் வர்த்திச்சீடுந்நே
பார்க்குந்நே தன் கூடெ வாழான் எந்நு ஸாத்யமோ?

3. ஸ்ரேஷ்டமேறும் நாட்டிலென்ற வாசமாக்குவான்
ஷோபயேறும் வீடெனிக்கொருக்கீடுந்நவன்
கைகளால் தீர்க்காத்த நித்ய பார்ப்பிடம் தன்னில்
வாணீடுந்ந நாளின்னாய் ஞான் நோக்கிப்பார்க்குந்நே

4. அந்நு தீருமென்றெ கஷ்டம் இந்நீ மண்ணிலெ
அந்நுமாறு மென்றெ துக்கம் நிச்சயம் தன்னெ
அந்நு தன்றெ சுத்த ரொத்து பாடி ஆர்க்குமே
எந்நெனிக்கு ஸாத்யமோ மகல் ஸம்மேளனம்

1. (யேசுவோடு சேர்ந்திருப்பதென்ன மகிழ்ச்சி
யேசுவிற்காய் ஜீவிப்பது என்ன பாக்கியம்
ஆசையவரோடென்றும் என்னில் பெருகிடுதே
அந்த தேவனுடன் வாழ விரும்பிடுதே

2. போக்கினார் என் பாவமெல்லாம் தான் பலியானதால்
நீக்கினார் என் சாப மெல்லாம் தான் சுமந்ததால்
எண்ணுந் தோறும் அன்பு என்னில் பெருகிடுதே
பார்க்கிறேன் உன் உடன் வாழ என்று கூடுமோ?

3, பேறு மிக்க நாட்டிலே என் வாழ்வை அமைக்க
ஒளி மிக்க வீடெனக் காயத்த மாக்குவார்
கைகளால் செய்யாத நிலையான வீட்டிலே
வாழப்போகும் நாளுக்காய் நான் எதிர்பார்க்கிறேன்.

4. அன்று தீரும் என் துன்பமிந்த வுலகினிலே
அன்று நீங்கும் என் கவலை நிச்சயம்தானே
அன்று தனது தூயர் சேர்ந்து பாடிப்புகழ்வாரே
என்றெனக்கு கூடுமோ உயர்ந்த சேர்க்கையே)"

(கன்வென்உஷன் கீதங்கள், 1992:174)

என்றபாடலை

1. "இயேசுவோடு சேர்ந்திருப்ப தென்ன பாக்கியம்
இயேசுவிற்காய் ஜீவிப்பதோர் என்ன ஆனந்தம்
ஆசை என்றும் எந்தனகம் பெருகின்றதே
ஆனந்தமாய் என்றும் வாழ வாஞ்சித்திடுதே

2. போக்கினார் என் பாவமெல்லாம் தாம் மரித்ததால்
நீக்கினார் என் சாபமெல்லாம் தாம் சுமந்ததால்
எண்ணவே உம் ஸ்னேகம் உள்ளில் பெருகிடுதே
மன்னவா உம் கூடவாழ என்று கூடுமோ

3. மாட்சிமிகும் நாட்டிலே நான் வாசம் செய்திட
மாசிறந்த வீடெனக்காய் ஆயத்தமாக்க
கைகளால் கட்டிடாததோர் நித்ய ராஜ்யமே
கண்டிடவே ஆசையோடு காத்திருக்குதே

4. அன்று தீரும் எந்தன் கஷ்டம்லோக மண்ணிலே
அன்று நீங்கும் எந்தன் துக்கம் யாவும் நிச்சயம்
அன்று சுத்தர் நின்று ஒன்றாய்ப்பாடி ஆர்க்கவே
என்று அந்நாள் வந்து சேரும் எந்தன் இயேசுவே"
(சுவிசேஷ கீதங்கள், பக்.123-124)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம்.

மேற்காட்டியுள்ள மலையாளப் பாடலின் ஒவ்வொரு அடியும் பதின்மூன்று எழுத்துக்களைக் கொண்டது. அதற்கேற்ப பெறுமொழிவடிவமும் பதின்மூன்று எழுத்துக்களைக் கொண்ட அடிகளை உடையதாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. எனவே பாடலின் இசையமைப்பில் மாற்றம் எதுவும் இல்லை. ஆனால் "ஆசுதக்றெ கூடெவாழான்" என்பது "ஆனந்தமாய் என்றும் வாழ" எனவும், "பார்க்குந்நே தன் கூடெ வாழான்" என்பது "மன்னவா உம் கூட வாழ" எனவும், "நாட்டிலென்ற வாசமாக்குவான்" என்பது "நாட்டிலே நான் வாசம் செய்திட" எனவும், "உேஷாபயேறும்" என்பது "மாசிறந்த" எனவும், "ஒருக்கிடுந்நவன்" என்பது "ஆயத்தமாக்க" எனவும் "பார்ப்பிடம் தன்னில்" என்பது "ராஜ்யமே" எனவும் "வாணிடுந்ந நாளின்னாய் ஞான் நோக்கிப் பார்க்குந்நே" என்பது "கண்டிடவே ஆசையோடு காத்திருக்குதே" எனவும், "இந்நீமண்ணிலே" என்பது "லோகமண்ணிலே" எனவும், "என்றெனிக்கு ஸாத்யமோ மகல் ஸம்மேளனம்" என்பது "என்று அந்நாள் வந்துசேரும் எந்தன் இயேசுவே" எனவும் தகுமாற்றங்களைப் பெற்றுள்ளன. இந்த தகுமாற்றங்கள் தருமொழி வடிவத்தின் இசையைப் பெறுமொழி வடிவத்தில் கொண்டுவருவதற்காகச் செய்யப் பட்டவையாகும்.

2. சுவிசேஷ பிரபல்யசங்க கீதங்கள்

இந்நூலில் மலையாளம் முதலான மொழிகளிலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட பாடல்களும் தமிழை மூலமாகக் கொண்ட பாடல்களும் இடம் பெற்றுள்ளன. இவற்றில் மலையாளத்திலிருந்து ஒலிபெயர்க்கப்பட்டவை பெரும்பாலும் சமமான அளவில் பெறுமொழி ஒலியன்களால் பதிலீடு செய்யப்பட்டுள்ளன. சான்றாக

"ஸியோன் ஸஞ்சாரி ஞான் யேசுவில் சாரி ஞான்

போகுந்நு குரிசின்றெ பாதயில்

1. மோக்ஷயாத்ரயாணிது ஞான் நடப்பது
காழ்ச்சயாலெயல்ல விச்வாஸத்தாலெயாம்
வீழ்ச்சகள் தாழ்ச்சகள் வந்நிடும் வேளயில்
ரக்ஷகன் கைகளில் தாங்ஙிடும் (ஸீயோன்)

2. லோகமேதும் யோக்யம் அல்லெனிக்கதால்
சோகமில்ல பாக்யம் உண்டு க்றிஸ்துவில்
நாதனு முள்முடி நல்கிய லோகமெ
நீதரும் பேரெனிக்கெந்தினாய் (ஸீயோன்)

3. ஸாக்ஷிகள் ஸமூஹம் தன்றெ சுற்றிலும்
நில்க்குந்நாயிரங்ஙள் ஆகயாலெ ஞான்
பாரவும் பாபவும் விட்டு ஞான் ஓடுமெ
ந்நேரவும் யேசுவே நோக்கிடும் (ஸீயோன்)

4. என்னெ நேடிய ஸந்தோஷமோர்த்ததால்
நிந்தகள் ஸகிச்சு மரிச்ச நாதனே
த்யானிச்சும் மானிச்சும் ஸேவிச்சும் போகயில்
க்ஷீணமெந்தந்நறிகில்ல ஞான் (ஸீயோன்)

5. பாலசிக்ஷ நல்கும் என்னப்பனெங்கிலும்
சேலெழுதும் தன் ஸ்னேஹம் குறஞ்ஞு போயிடா
நன்மயெ தன்கரம் நல்குமென்னீசில்
என்மனம் விச்ரமம் நேடிடும் (ஸீயோன்)

(சியோன் பயணிநான் இயேசுவில் சார்ந்து நான்

போகிறேன் குருசதின் பாதையில்

1. மோட்ச பயணம் தானது நான் நடப்பது
பார்வையாலேயல்ல விஸ்வாசத்தாலேயாம்
துன்பங்கள் தொல்லைகள் வந்திடும்வேளையில்
இரட்சகர் கைகளால் தாங்குவார்

2. உலகம் எனக்குப் பொருத்தம் இல்லை யாதலால்
கவலை யில்லை நன்மை உண்டு கிறிஸ்துவில்
இறைவனுக்கு முள்முடி தந்த உலகமே
நீ தரும் சிறப்பெனக் கெதற்காம்

3. சாட்சிகளின் கூட்டம் என்னைச் சுற்றிடும்
நிற்பதாயிரங்கள் ஆகையாலே நான்
பாரமும் பாவமும் விட்டுநான் ஓடுவேன்
எப்போதும் இயேசுவைப் பார்ப்பேனே

4. என்னை ஈட்டிய மகிழ்வை நினைத்ததால்
நிந்தைகள் சகித்து மாண்ட இறைவனே
தியானித்தும் மதித்தும் பணிந்தும் போனதால்
சோர்வு ஏதென்பதை அறியேன் நான்

5. சிறு தண்டனை தருமென் தந்தையாகிலும்
உள்ளெழும் அவரன்பு குறைந்து போகாது
நன்மைதான் உன்கரம் தருமென்றும் இப்பாவிக்கு
என் மனம் இளைப்பாறுதல் அடைந்திடும்)"

(கன்வென்ஷன் கீதங்கள், 1992:
132-133)

என்ற பாடலை

"சீயோன் சஞ்சாரிஞான் இயேசுவில் சாரிஞான்

போகுந்நு குரிசின்றே பாதையில்

1. மோட்ச யாத்ரயாணிது ஞான் நடப்பது

காட்சயாலேயல்ல விஸ்வாஸத்தாலே நாம்

வீழ்ச்சகள் தாழ்ச்சகள் வந்நிடும் வேளையில்

இரகூதகன் கைகளில் தாங்ஙிடும் - சீயோன்

2. லோகமேதும் யோக்யம் அல்லெனிக்கதால்

சோகமில்ல பாக்யம் உண்டு கிறிஸ்துவில்

நாதனு முள்முடி நல்கிய லோகமே

நீதரும் பேரெனிக் கெந்திநாய் - சீயோன்

3. சாட்சிகள் சமூகம் தன்றே சுற்றிலும்

நில்க்குந்நாயிரங்ஙள் ஆகையாலே நாம்

பாரவும் பாவமும் விட்டு ஞான் ஓடுந்நே

நேரமும் இயேசுவே நோக்கிடும் - சீயோன்

4. என்னெ நேருந்ந சந்தோஷ மோர்த்ததால்

நிந்நகள் சகிச்சு மரிச்ச நாதனே

தியானிச்சு மானிச்சு சேவிச்சு போகையில்

உஷ்ணமெந்தெந் நறியில்ல ஞான்-சீயோன்

5. பால சிட்ச நல்குமென் அப்பனெங்கிலும்

சேலெழும் வன் சிநேகம் குறஞ்ஞுபோகிலும்

நன்மையே வன்கரம் நல்குமென் ஈசனில்

என்மனம் விஸ்ரமம் தேடிடும் - சீயோன்"

(சுவிசேஷ பிரபல்லிய சங்க கீதங்கள்,
பக்.12-20)

என ஒலிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இப்பாடலின் ஒலிபெயர்ப்பில் உயிர்ப்பொலி (நாத்ன→நாதன), ஒலிப்பொலி (பா்ல→பால), ஒலிப்பு உயிர்ப்பொலி (பாக்யம்→பாக்யம்) உரசொலி (யேசுவில்→யேசுவில்) ஆகியன தமிழ் முறைப்படி வல்லின எழுத்துக்களால் மாற்றித்தரப்பட்டுள்ளன. மேலும் குறில் நெடிலாகவும் (லோகமெ→லோகமே) சகரம் ஸகரமாகவும் (விச்வாஸம்→விஸ்வாசம்), மகரம் ரகரமாகவும் (யாத்ர→யாத்ர) 'க்ஷ', 'ழ்ச்ச' என்பன 'ட்ச' ஆகவும் (மோக்ஷ→மோட்ச, காழ்ச்ச→காட்ச) மாற்றித்தரப்பட்டுள்ளன. 'த்யானிச்சு' என்பது வடமொழி தமிழாக்கமுறைப்படி 'தியானிச்சு' என ஒலிபெயர்க்கப்பட்டுள்ளது.

3. யாப்பு

மலையாளத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள செய்யுள்களின் யாப்பமைப்பு மிகுதியும் மூலவடிவத்திலிருந்து வேறுபட்டனவாகவும், ஒருசில தருமொழி யாப்புக்கு சமமானதாகவும், ஏனையன தருமொழியாப்பின் தமிழ்வடிவங்களாகவும் உள்ளன. இவ்வடிப்படையில் யாப்புமாற்றத்தை 1. தருமொழியாப்புக்கு இணையற்ற பெறுமொழி யாப்பைப் பயன்படுத்தியிருத்தல், 2. தருமொழி யாப்புக்கு இணையான பெறுமொழி யாப்பைப் பயன்படுத்தியிருத்தல், 3. தருமொழி யாப்பை அப்படியே பயன்படுத்தியிருத்தல் என வகைப்படுத்தி விளக்கலாம்.

1. தருமொழி யாப்புக்கு இணையற்ற பெறுமொழி யாப்பைப் பயன்படுத்தியிருத்தல்

தருமொழிக்கவிதைகளில் காணப்படும் யாப்புக்களில் வியோகினி, மஞ்சரி, த்ருதகாகளி, லகுமஞ்சரி, ஓமனத்திங்கள், நதோன்னதை, வஸந்த திலகம் ஆகியவற்றைப் பெறுமொழியில் கண்ணிவகைகள், கலிவிருத்தம், சந்தக்கவிதைகள், ஆசிரியவிருத்தம், சிந்து போன்ற வடிவத்தொடர்பற்ற யாப்புக்களால் மொழி பெயர்த்துள்ளமையை இவ்வகையில் அடக்கலாம்.

1. வியோகினி

குமாரனாசானின் சிந்தாவிஷ்டயாய சீதயில் காணப்படும் இவ் யாப்பு அர்த்தசமவிருத்தம் (அரைசமயாப்பு) என்ற வகையைச்சார்ந்தது. இதில் முதலடியையும் மூன்றாமடியையும் விட இரண்டாமடியும் நான்காமடியும் ஒவ்வோர் எழுத்துக்களை மிகுதியாகக் கொண்டிருக்கும். இதன் ஒன்று, மூன்று ஆகிய அடிகளின் சீரமைப்பு ஸ(லகு, லகு, குரு), ஸ(லகு, லகு, குரு), ஜ(லகு, குரு, லகு), க(குரு)எனவும், இரண்டு, நான்கு ஆகிய அடிகளின் சீரமைப்பு ஸ(லகு லகு, குரு, ப(குரு, லகு, லகு), ர(குரு, லகு, குரு), ல(லகு), க(குரு) எனவும் அமைந்திருக்கும் (குறிலெழுத்தை லகுவாகவும், நெடில், குறிலோடு ஒற்று சேர்ந்துவருதல், குறிலைத் தொடர்ந்த கூட்டெழுத்துவருதல் ஆகியவற்றைக் குருவாகவும் கொள்வர்). சான்றாக

"கிரிநிர்த்தர சாந்திகானமத்
தரியில்கேட்டு சயிக்குமங்ஙுஞான்
அரிகில் தருகுல்ம ஸஞ்சயம்
சொரியும் பூநிர நித்யமென்றமேல்
(மலைவீழ்மருவிதன் மென்நாதம்
குகையில் கேட்டிடவாழ்வேன் அங்குநான்
அருகில் மரஞ்செடி கொடிகள்
சொரியும் மலர்கள் தினமும் என்மேல்)"

(குமாரனாசான், 1989:54)

என்ற செய்யுளைக் குறிப்பிடலாம். இதன் யாப்பமைப்பை

```
VV-  VV-  V-V  -
VV-  -VV  -V-  V-
VV-  VV-  V-V  -
VV-  -VV  -V-  V-
```

எனக்காட்டலாம். (இங்கு'∨' என்ற குறியீடு லகுவையும் '—' குறியீடு குருவையும் குறிக்கும்). வியோகினிக்கிணையான தமிழ்யாப்பை

புளிமாங்கனி தேமா கூவிளம்
புளிமா கூவிளம் தேமா கூவிளம்
புளிமாங்கனி தேமா கூவிளம்
புளிமா கூவிளம் தேமா கூவிளம்

என வரையறை செய்யலாம். இதற்குரிய மெட்டை

தனதானன தன்னத் தானன
தனனா தன்னன தன்னத் தானன
தனதானன தன்னத் தானன
தானனா தன்னன தன்னத் தானன

என அமைக்கலாம்.

வியோகினியை இராமகோபிநாதன் கண்ணிவகைகள், கலிவிருத்தம் போன்ற யாப்புக்களால் மொழிபெயர்த்துள்ளார். சான்றாக மேல் குறிப்பிட்டுள்ள "கிரிதர . . . . . .மேல்" என்ற செய்யுளை இராமகோபிநாதன்

"அருவிமலையில் பாடிப்பாயும்
அமைதிக்கீதம் இழையக் கேட்கத்
தருவும் கொடிமென் மலர்கள் தூவத்
தனியே துயில்வேன் தரையுட் கருவாய்"

(இராமகோபிநாதன், 1990:43)

எனக் கண்ணியமைப்பில் மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதன் யாப்பமைப்பை

OX OX XX XX OX XX OX XX
OX OX OX XX OX OX OX OX

எனக்காட்டலாம் (இங்கு X என்ற குறியீடு நேரசையையும் 0 என்ற குறியீடு நிரையசையையும் காட்டுகிறது. மேலும் மலையாளச்செய்யுள்களின் சீரமைப்பு எழுத்தை அடிப்படையாகக் கொண்டும் தமிழ்ச் செய்யுள்களின் சீரமைப்பு அசையை அடிப்படையாகக்கொண்டும் கணக்கிடப்படுவதை வேறு படுத்திக்காட்டும் நோக்கிலும் இக்குறியீடுகள் இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளன)

மேலும் ஜனார்த்தனம் சிந்தாவிஷ்டயாய சீதக்குக் கலிவிருத்தத்திலான மொழிபெயர்ப்பொன்றைச் செய்துள்ளார். சான்றாக மேலே குறிப்பிட்டுள்ள "கிரிதர ....மேல்" என்ற செய்யுளை

'வரைவீ ழருவி முழங்கிடு கீதம்
தரைக்கீ ழிருந்து கேட்டே தூங்குவன்
நிரையா அருகில் நின்றிடு தருவும்
விரையார் கொடியும் வீயா தென்றுமே'

(ஜனார்த்தனம், 1975:52)

என மொழிபெயர்த்துள்ளார். இதன் யாப்பமைப்பை

0X 0X 00 XX
0X 0X XX X0
0X 0X X0 0X
0X 0X XX X0

எனக்காட்டலாம்.

இராமகோபிநாதன், ஜனார்த்தனம் ஆகியவர்கள் கையாண்டுள்ள கண்ணி, கலிவிருத்தம் போன்ற யாப்புக்கள் வியோகினியைவிடவும் அமைப்பில் சற்று விரிவானதாக உள்ளதால் அவை சமமற்ற யாப்புக்களாகின்றன.

2. மஞ்சரி

குமாரனாசான் சண்டாலபிக்ஷுகியின் முதற்பகுதியை இவ்யாப்பினால் அமைத்துள்ளார். மூன்று எழுத்துக்கள் உள்ளதும் ஐந்தோ அல்லது ஆறோ

மாத்திரை கொண்டதுமான (இவை இரண்டும் கலந்தும் வரலாம்) சீர்கள் முதலடியில் நான்கும் இரண்டாமடியில் மூன்றுடன் இறுதியில் ஒருகுருவுமாக மொத்தம் 22 எழுத்துக்களுடன் மஞ்சரி யாப்பு அமையும். சான்றாக

1. "செற்று குனிஞ்ஞு வலம்சாஞ்ஞு பூமேனி
   சுற்றிமறச்சு செங்காந்தி தேடும்
   (சற்று குனிந்து வலம் சாய்ந்த பூவுடல்
   சுற்றி மறைத்து செங்காந்தி தேடும்)"

(குமாரனாசான், 1988:39)

என்ற செய்யுளைக் குறிப்பிடலாம். இதன் யாப்பமைப்பை

```
-V   V-V   V--V   --V
-V   V-V   --V-   -
```

எனக்காட்டலாம். இதை

தான தனத்தன தானத் தனத்தான
தான தனத்தனத் தான னன்னே

எனப்பாடலாம்.

மஞ்சரியை இராமகோபிநாதன் கண்ணிவகைகள், ஆசிரியவிருத்தம் போன்ற யாப்புக்களால் மொழிபெயர்த்துள்ளார். சான்றாக மேல்குறிப்பிட்டுள்ள "செற்று. . . . . . . .தேடும்" என்ற செய்யுளை

"சற்று மேனி குனிந்தும் வலப்புறம்
சாய்ந்த கோலத் துடலைக் கதுவலும்
சுற்றி அங்கம் மறைத்தந் நலத்தினை
தொட்டுத் தேடிடும் சேலைத் தலைப்பது"

(இராமகோபிநாதன், 1990:51)

என மொழிபெயர்த்துள்ளார். இதன் யாப்பமைப்பை

```
XX  XX  OX  OO  XX  XX  OX  OO
XX  XX  OX  OO  XX  XO  XX  OO
```

எனக் குறிக்கலாம். மேலும்,

2. "காக்கயும் வந்து பனம்பழவும் வீணெந்
நாக்க மார்ந்து பிக்சு சுஉந்கஸ்டன்
(காகமும் வந்து பனம் பழமும் வீழ்ந்த
தென்றுள்மகிழ்ந்து பிக்சு வரண்ட தொண்டையுடன்)"

"லத தர்க்கழ லிலதவா துணக்குவா
னெத்தும் நியதியோரோ வடிவில்
(நல்லவர்களுக்கு துக்கத்தில் உதவச்
செல்லும் இறைவன் ஒரோ வடிவில்)"

(குமாரனாசான், 1988: 39-40)

என்ற இரண்டு மஞ்சரிக்கண்ணிகளின் கருத்தை ஒன்றாக்கி அறுசீர் ஆசிரியவிருத்தத்தில் இராமகோபிநாதன்

"பறந்துவந் திறங்கக் காகம் பனம்பழம் வீழ்ந்த தாச்சு
வறண்டவாய் நனைப்போம் என்று பிக்சுவின் முகத்தே தெம்பு
பிறந்தது பொலிந்த(து) என்றும் நல்லவர் துன்பில் நைந்தால்
அறந்தரு நியதி ஏதோ வடிவில் உதவும் வந்து"

(இராமகோபிநாதன், 1990:51)

என மொழிபெயர்த்துள்ளார். இதன் யாப்பமைப்பை

00 0X XX oo XX XX
00 0X XX X0 0X XX
00 0X XX X0 XX XX
00 0X XX 00 0X XX

எனக்காட்டலாம். இச்செய்யுளுக்குரிய அசைவாய்பாடு

கருவிளம் புளிமா தேமா கருவிளம் தேமா தேமா

கருவிளம் புளிமா தேமா கூவிளம் புளிமா தேமா

கருவிளம் புளிமா தேமா கூவிளம் தேமா தேமா

கருவிளம் புளிமா தேமா புளிமா புளிமா தேமா

என அமையும்.

முதலடியில் 12 எழுத்துக்களையும் இரண்டாமடியில் 10 எழுத்துக்களையும் கொண்டுவரும் மஞ்சரியாப்பை இராமகோபிநாதன் கண்ணி, ஆசிரியவிருத்தம் போன்ற யாப்புக்களைப் பயன்படுத்தி மொழிபெயர்த்துள்ளது வடிவ அடிப்படையில் பொருத்தமாக அமையவில்லை.

3. த்ருதகாகளி

குமாரனாசான் சண்டாலபிக்சுகியின் இரண்டாவது பகுதியை த்ருதகாகளி என்ற யாப்பைப் பயன்படுத்தி எழுதியுள்ளார். இது மூன்று எழுத்துக்கள் உள்ளதும் ஐந்து மாத்திரை கொண்டதுமான (இரண்டு குரு, ஒரு லகு) எட்டுச் சீர்கள் அடிக்கு நான்கு வீதம் இரண்டடிகளாய் வர ஒவ்வொரடியின் இறுதியிலும் ஒவ்வொ ரெழுத்து வீதம் இரண்டு எழுத்துக்கள் குறைந்து மொத்தம் 22 எழுத்துக்களாய் அமைவது த்ருதகாகளி (அடிகளின் முதற்சீரில் குறைந்து வருதலுமுண்டு). சான்றாக

"நிர்வ்வாணநிதி கண்ட மகாஸித்தன்
ஸர்வ்வலோகைகவன்த்யன் தயாகுலன்
(நிர்வாணமாம் நிதிகண்டமாஞானி
அனைத்துலகும் ஏத்தும் கருணைவள்ளல்)"

(குமாரனாசான், 1988:42)

என்ற செய்யுளைக்குறிப்பிடலாம். இதன் யாப்பமைப்பை

--V VV -V V- --
-V- -V -- V- V-

எனக்காட்டலாம்.

த்ருதகாகலியை இராமகோபிநாதன் கண்ணி மற்றும் சந்தக்கவிதைகளால் மொழிபெயர்த்துள்ளார். சான்றாக "நிர்வ்வாணநிதி.....தயாகுலன்" என்ற செய்யுளை

"விட்டு பற்றினை வீடெய்து வித்தையை
மேலவர் ஓதும்நிர் வாண நிலையினை
எட்டியுள்ளவன் என்குரு இவ்வுல(கு)
எங்கணும் புகழ் ஏய்ந்தஉள புத்தனாம்"

(இராமகோபிநாதன், 1990:55)

எனக்கண்ணியமைப்பில் மொழிபெயர்த்துள்ளமையைக் குறிப்பிடலாம். இதன் யாப்பமைப்பை

-V -V- --V ---
-V- --- -V V-V-
-V -V- -VV -VV
-V- V- -VV -V-

எனக்குறிக்கலாம். இதில் முதலடியின் இரண்டாவது பகுதியில் ஒரு எழுத்து மிகுந்து காணப்படுகிறது. எனவே இது தருமொழிக்கு இணையற்ற யாப்பாகக் கொள்ளப்பட்டுள்ளது.

4. லகுமஞ்சரி

குமாரனாசானின் சண்டாலபிக்சுகியின் மூன்றாம் பகுதி லகுமஞ்சரி என்ற யாப்பில் அமைந்தது. மூன்று எழுத்துக்கள் உள்ளதும் ஐந்து மாத்திரை கொண்டதுமான எட்டுச் சீர்கள் இரண்டடிகளாய் வர ஒவ்வோரடியின் இறுதியிலும்

இரண்டு எழுத்துக்கள் வீதம் குறைவுபட்டும் அடிகளின் தொடக்கத்திலுள்ள ஒவ்வொரு குருவுக்குப் பதிலாக இரண்டு லகுக்கள் வீதம் சேர்த்தும் மொத்தம் 22 எழுத்துக்களாய் அமைவது லகுமஞ்சரி. சான்றாக,

1. "விலயேறுமெந்தோ களஞ்ஞு கேழும்
   நிலயார்ந்ந பாலயும் வீடுபூகி
   (விலைமிக்க எதையோ தொலைத்துவாடும்
   நிலையிலந்தப் பெண்ணும் வீடடைந்தாள்)"

2. "அவள் பின்னெயத்யந்த கின்னயாயி
   அவசயாய் ப்ரத்யக்ஷ ஹேதுவென்யே
   (அவள் பிறகு மிகவும் துக்கித்து
   தளர்ந்தவள் காரணம் இல்லாமலே)"

(குமாரனாசான், 1988:43)

என்ற செய்யுள்களைக் குறிப்பிடலாம். இவற்றின் யாப்பமைப்பை

1. VV–V ––V –V ––
   VV–– –V– –V –V

2. V––V ––V –V –V
   VVV– ––V –V ––

எனக்குறிக்கலாம்.

லகுமஞ்சரியை இராமகோபிநாதன் கண்ணிவகைகள் மற்றும் சந்தக் கவிதைகளால் மொழிபெயர்த்துள்ளார். சான்றாக மேல்குறிப்பிட்டுள்ள "விலயேறுமெந்தோ ....வீடுபூகி", "அவள்......... ஹேதுவென்யே" என்ற செய்யுள்களை ஒன்றாக இணைத்துக்கண்ணியமைப்பில்,

"என்ன வோஓர் அரும்பொருள் போக்கிவிட்(டு)

ஏங்கும் சின்னச் சிறுமிபோல் மங்கையும்

தன் குடில் புகுந்தாள் துயர் மாழ்குவாள்

தளரு வாள் ஒரு காரணம் இன்றியே"

(இராமகோபிநாதன், 1990:57)

என மொழிபெயர்த்துள்ளார். இதன் யாப்பமைப்பை

-V --V- V- -V -

-- -- VV V- -- -

-V -V -- V- -V -

VV V- VV -V -- V-

எனக்காட்டலாம் (இதன் இரண்டாமடியில் ஓர் எழுத்து மிகுதியாக உள்ளது).

5. ஓமனத்திங்கள்

குமாரனாசானின் சண்டாலபிக்சுகியின் நான்காவது பகுதி ஓமனத்திங்கள் என்னும் யாப்பில் அமைந்தது. இவ்யாப்பு மூன்று எழுத்துக்கள் உள்ளதும் மொத்தம் ஐந்தோ அல்லது ஆறோ மாத்திரை கொண்டதுமான (இவை இரண்டும் கலந்தும் வரலாம்) சீர்கள் முதலடியில் நான்கும் இரண்டாமடியில் மூன்றுடன் குருவுமாக வரும் மஞ்சரியின் அமைப்பில் ஒவ்வோரடியின் இறுதியிலும் முறையே இரண்டு எழுத்துக்கள் வீதம் குறைந்து வருவதுடன் முதலடியின் எட்டாம் எழுத்துடன் ஒரு நிறுத் தத்தையும் பெற்றதாய்க் காணப்படும். ஆக ஓமனத்திங்களின் முதலடியில் பத்தும் இரண்டாமடியில் எட்டும் எழுத்துக்கள் இடம்பெற்றிருக்கும். சான்றாக,

"க்ருத்யங்ஙள் காலம் தெற்றாதெ - அவள்

ப்றத்யகம் செய்யும் மாழ்காதெ

(கடமைகளில் காலந்தவறாமல் - அவள்

தினமும் செய்வாள் வருந்தாமல்)"

(குமாரனாசான், 1988:50)

என்ற செய்யுளைக் குறிப்பிடலாம். இதன் யாப்பமைப்பை

--- --- -- V-

-V- --- -V

எனக் குறிக்கலாம். இச்செய்யுளை

தன்னன்ன தானன்ன தான - தன

தன்னன தானன்ன தான

என்ற சந்தத்தில் பாடலாம்.

ஓமனத்திங்களை இராமகோபிநாதன் சிந்துவகைகள் (இவற்றில் நொண்டிச்சிந்து நீங்கலாக) மற்றும் சந்த அமைப்பினால் ஆன கண்ணிகளால் மொழிபெயர்த்துள்ளார். சான்றாக "க்றுத்யங்ஙள் . . . . . .மாழ்காதெ" என்ற செய்யுளை "காலம் ஒரு தரம் தானும் தவறாள்

கடமைகள் செய்வதிலே - அவள்

சாலச் சிறந்தவள் ஆர்வத்தில் வேலைகள்

சட்டெனச் செய்திடுவாள்"

(இராமகோபிநாதன்,1990:67)

என சிந்து அமைப்பில் மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதன் அசையமைப்பை

XX OO XX OX OX XX OX -O

XX OO XX XX XX OX XO X

எனக் காட்டலாம்.

6. நதோன்னத

இரண்டு எழுத்துக்களாலான சீர்கள் முதலடியில் எட்டும் இரண்டாமடியில் ஆறரையும் காணப்படும். ஆக முதலடியில் 16 எழுத்துக்களும் இரண்டாமடியில் 13 எழுத்துக்களும் நதோன்னதையில் இடம்பெறும். மேலும் எல்லா எழுத்துக்களும்

குருவாக இருப்பதோடு எட்டெழுத்துக்கள் முடிந்ததும் நிறுத்தத்தையும் பெற்றமைவது நதோன்னதையின் பொதுப்பண்பாகும் (இரண்டாமடி 15 எழுத்துக்களால் அமைவதும் உண்டு). நதோன்னதையின் யாப்பமைப்பிற்குச் சான்றாக கருணையிலுள்ள

"அவள்தன் பாண்டு முகத்திலந்தி விண்ணிலெந்நபோலெ
யெவிடுந்நோ சாடியெத்தி ரக்தரேககள்
(அவளின் வெளிறிய முகத்தில் அந்திவானம்போல்
எங்கிருந்தோ பாய்ந்துவந்தன ரத்தக்கோடுகள்)"

(குமாரனாசான், 1990:37)

என்ற செய்யுளைக் குறிப்பிடலாம். இதன் யாப்பமைப்பை

V- -- VV -V -V -V -V -V
VV -- -V -V -V -V -

எனக்குறிப்பிடலாம்.

நதோன்னதயை இராமகோபிநாதன் கண்ணி, ஆசிரியவிருத்தம், சிந்து, போன்ற யாப்புக்களால் மொழிபெயர்த்துள்ளார். சான்றாக "அவள்தன் . . . . . ரக்தரேககள்" என்ற செய்யுளை

"எங்கொளித்தது குருதியோ
எகிறி வந்து குதித் தது
மாங் கிருள்வரும் முன்னர் வான்
மலர்ந்த செக்கரை ஒக்கவே"

(இராமகோபிநாதன், 1990:108)

என கண்ணியமைப்பில் மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதன் யாப்பமைப்பை

- V-VV VVV- VVV -V V- VV
- V-V- --- V-V -V- -V-

எனக் காட்டலாம்.

7. வஸந்ததிலகம்

குமாரனாசானின் வீணபூவு என்ற குறுங்காவியம் 'வஸந்ததிலகம்' என்ற வடமொழியாப்பால் ஆனது. இவ்யாப்பு 14 எழுத்துக்கள் வீதமுள்ள நான்கு அடிகளைக் கொண்டது. இதன் சீர்வரிசை த(குரு குரு, லகு), ப (குரு, லகு, லகு), ஜ (லகு, குரு, லகு), ஜ(லகு, குரு, லகு), க(குரு), க(குரு) என்ற அமைப்பில் காணப்படும் சான்றாக

"உறா'. பார்க்கில் நிகமனம் பரமார்த்த மெங்கில்
பாபம் நிஙக்கு பலமாயழல் பூண்ட வண்டே!
ஆபத்தெழும் தொழிலிலோர்க்குக முன்பு, பச்சாத்
தாபங்ஙள் ஸாகஸிகனிங்ஙவெ யெங்ஙுமுண்டாம்
(ஆ சிந்தித்து நோக்க இவ்வுகம் சரிதாவென்றால்
இத்துன்பம் உனக்கு, பெரும் துக்கம் கொண்ட வண்டே
ஆபத்தான தொழிலை நினைக்கும்முன் அதன்பின்
விளைவை நினயாதார் இப்படி எங்கும் உண்டு)"

(குமாரனாசான், 1990 அ:19)

என்ற செய்யுளைக் குறிப்பிடலாம். இதன் யாப்பமைப்பை

--V -VV V-V V-V --
--V -VV V-V --V --
--V -VV V-V V-V --
--V -VV V-V V-V --

எனக்குறிக்கலாம் (இதில் இரண்டாமடியின் பத்தாவது எழுத்தும் நான்காமடியின் மூன்றாமெழுத்தும் இலக்கண விதிக்கு மாறாகக் குருவாக உள்ளன. இவற்றை இலகுவாக உச்சரித்தால் போதுமானது). இதனை

தன்னான தானதன தானனத் தன்ன னானே
தன்னான தானதன தானனத் தன்ன னானே
தன்னான தானதன தானனத் தன்ன னானே
தன்னான தானதன தானனத் தன்ன னானே

என்ற சந்த அமைப்பில் பாடலாம்.

வஸந்த திலகத்தை இளங்கம்பன் கலிவிருத்தத்தைப் பயன்படுத்தி மொழி பெயர்த்துள்ளார். சான்றாக, மேற்குறிப்பிட்டுள்ள "உறா.....யெங்கு முண்டாம்" என்ற செய்யுளை

"மலர்கொண்ட ஐயமிதும்
மாறாத உண்மை எனில்
புலம்புவதில் வண்டிற்குப்
புகல்ஞாயம் உளதென்பேன்
நலமலருக் கறசெய்த
நவிலவெண்ணாத் தீமைக்கும்
அலமாந்தே அவ்வண்டும்
அழுவதுவே சரியாகும்"

(இளங்கம்பன், 1978:17)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதன் யாப்பமைப்பை

OXX XXO XXX XXO
OXO XXX OXX OXX
OOX OXX OXO XXX
OXX XXX OOX OXX

எனக் குறிக்கலாம்.

2. தருமொழியாப்புக்கு இணையான பெறுமொழி யாப்பைப் பயன்படுத்தியிருத்தல்

தருமொழிக்கவிதைகளில் காணப்படும் யாப்புக்களான த்ருதகாகலி, லகுமஞ்சரி, ஓமனத்திங்கள், நதோன்னதை ஆகியனவற்றைத் தமிழில் அதற்கிணை யான யாப்புக்களால் மொழிபெயர்த்துள்ளமையை இவ்வகையில் அடக்கலாம்.

1. த்ருதகாகலி

பதினொன்று எழுத்துக்கள் வீதமுள்ள இரண்டடிகளால் ஆனது த்ருதகாகலி (மேலும் விளக்கங்களுக்கு ஆய்வேட்டில் 4:3:1:3 என்ற பகுதியைப் பார்க்கவும்). சான்றாக சண்டாலபிக்சுகியின் இரண்டாவது பகுதியில் காணப்படும்

1"ஊ மதேடும் தன் பாள கிணற்றிலிட்
டோமல் கைவளையால் கயறுவலிச் சுடன்
(அழகார்ந்த பாளையை கிணற்றிலிட்டு
எழில்கையால் கயிறு இழுத்துடன்)
2. கோமளாம்கி நீர் கோரி நிந்நீடினாள்
ச்ரீமானப்பிக்சுவங்ஙு செந்நர்த்திச்சான்
(இனியாள் தண்ணீர் இறைத்து நின்றிட
திருவினப்பிக்சு அங்கு சென்று கேட்டான்)"

(குமாரனாசான், 1988:40)

என்ற செய்யுள்களைக் குறிப்பிடலாம். இவ்விரண்டு த்ருதகாகலி கண்ணிகளையும் ஒன்றாக இணைத்து 44 எழுத்துக்கள் உள்ள ஒரே கண்ணியாக்கி இராமகோபிநாதன்

"பாளை நீரிற்படிந்து முகர்ந்தபின்
பற்றினாள் வடம் கைதிரள் தோள் எழு
மீளமேலங்(கு) இழுத்தாள் கிணற்றடி
மேவிநின்றான் திருவினன் பிக்சுவும்"

(இராமகோபிநாதன், 1990:52)

என மொழிபெயர்த்துள்ளார். மேலும் ஒரே த்ருதகாகளியை இரண்டு த்ருதகாகளிகளின் வடிவமடங்கிய ஒரே கண்ணியாக மாற்றியுள்ள பகுதிகளும் உள்ளன. சான்றாக

"வண்டிண செந்நு முட்டி விடர்ந்ந செந்
தண்டலரல்லி காட்டி நில்க்கும் போலெ
(வண்டிணை சென்று மோதி விரிந்த செந்
தண்டலரல்லி காட்டி நிற்பதுபோல)"
(குமாரனாசான், 1988:41)

என்ற செய்யுளைக் குறிப்பிடலாம். இதன் யாப்பமைப்பை

-VV -V -V V-V -
-VV -V -V --V V

எனக் குறிக்கலாம். இச்செய்யுளை இரண்டு த்ருதகாகளிக்குரிய அமைப்பில் விரிவுசெய்து ஒரே கண்ணியாக இராமகோபிநாதன்

"வண்டு சென்றங்(கு) இணையொடும் வாசலில்
வாது செய்து முகையினில் மோதலால்
தண்டுமீ(து) அலர் அல்லியாள் புல்லிதழ்த்
தாழ்விலக்குவாள்போல் எதில் காட்டினாள்"
(இராமகோபிநாதன்,1990:53)

என மொழிபெயர்த்துள்ளார். இதன் யாப்பமைப்பை

-V -- V- V- -V-
-V -V V- V- -V-
-V -V -- V- -V-
-V -V -- V- -V-

எனக்காட்டலாம்.

2. லகுமஞ்சரி

லகுமஞ்சரியின் இரண்டடிகளிலுமாக அடிக்கு பதினொன்று எழுத்துக்கள் வீதம் மொத்தம் 22 எழுத்துக்கள் காணப்படும் (மேலும் விளக்கங்களுக்கு ஆய்வேட்டில் 4:3:1:4 என்ற பகுதியைப் பார்க்கவும்). சான்றாக சண்டால பிக்ஷுகியின் மூன்றாவது பகுதியில் காணப்படும்.

"அழுதவள் கோணி லொதுங்கியெங்ஙும்
பொழுதுபோகாதாயி புத்திமுட்டி
(அழுதவள் மூலையில் சென்று சற்றும்
பொழுதுபோகாமல் குழப்பமுற்றாள்)"
(குமாரனாசான், 1988:43)

என்ற செய்யுளைக் குறிப்பிடலாம். இதன் யாப்பமைப்பை

VVV- -VV -V --
VVV- --V -V -V

எனக்குறிப்பிடலாம். இந்த லகுமஞ்சரிச் செய்யுளை இராமகோபிநாதன் இரண்டு லகுமஞ்சரிகளின் வடிவம் கொண்ட ஒரு கண்ணியாக்கி

"மூலைமூலை ஒதுங்கி விசித்தனள்
முட்டிவந்த(து) அழுகை; கதிரவன்
மேலைவானில் இறங்க மசித்தபோல்
மெல்லியட்குப் பொழுததும் போகலை"
(இராமகோபிநாதன், 1990:57)

என மொழிபெயர்த்துள்ளார். இதன் யாப்பமைப்பை

-- -- V-V V- V-
-V-V VV- VV V-
-- -- V-V V- V-
-V-- VVV -- V-

எனக்காட்டலாம்.

3. ஓமனத்திங்கள்

எட்டெழுத்துக்கள் வீதமுள்ள இரண்டடிகளோடு முதலடியின் இறுதியில் இரண்டெழுத்துக்களாலான ஒரு தனிச்சொல்லும் இவ்யாப்பில் காணப்படும் (மேலும் விளக்கங்களுக்கு ஆய்வேட்டில் 4:3:1:5 என்ற பகுதியைப் பார்க்கவும்). சான்றாக சண்டாலபிக்ஷுகியின் நான்காவது பகுதியில் உள்ள

"ஸ்னேஹம்தான் சக்தி ஜகத்தில் - ஸ்வயம்
ஸ்னேகம்தானானந்த மார்க்கும்
(அன்புதான் சக்தி உலகில் - உண்மை
அன்புதான் மகிழ்ச்சி யார்க்கும்)"

(குமாரனாசான், 1988:60)

என்ற வரிகளைக் குறிப்பிடலாம். இதன் யாப்பமைப்பை

--- -VV -- V-
--- --V --

எனக் குறிப்பிடலாம். இச்செய்யுளை இராமகோபிநாதன் நொண்டிச்சிந்துவின் அமைப்பில்

"அன்பே உலகில் ஆற்றல் - அந்த
அன்புதான் ஆனந்தம் யார்க்கும்"

(இராமகோபிநாதன், 1990:85)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதன் யாப்பமைப்பை

-- VV V- -- -V
-V- --- --

எனக்காட்டலாம் (ஓமனத்திங்களும் நொண்டிச் சிந்துவும் சமமான அமைப்பைக் கொண்டவையாகும். ஆனால் நொண்டிச் சிந்துவின் இரண்டாவது அடி சற்று உள் வாங்கி நொண்டி போன்ற அமைப்பைப் பெற்று காணப்படும்).

4. நதோன்னத

முதலடியில் 16 எழுத்துக்களையும் இரண்டாமடியில் 13 எழுத்துக்களையும் கொண்டதாக நதோன்னத யாப்பு அமையும். இரண்டாமடியில் 15 எழுத்துக்கள் காணப்படுவதும் உண்டு (மேலும் விளக்கங்களுக்கு ஆய்வேட்டில் 4:3:1:6 என்ற பகுதியைப் பார்க்கவும்). சான்றாக, கருணையில்இடம்பெற்றுள்ள

1. "பணமில்லாஞ்ஞிதான் வரான் மடிக்கயாவாமஸ்ஸாது
கனிகயாய்த்தன்னெயெந்நெக்கனிக்கயாவாம்
(பணமில்லையென்றுதான் வர மடிக்கலாம் அத்துறவி
கனிகைதானே என்றும் கனித்திருக்கலாம்)"

2. "குணபுத்தியால் ஞான்தோழி, கொதிப்பதக்கோமளன்றெ
ப்றணயம் மாத்றமாணெந்நு பறஞ்ஞில்லே நீ
(நற்புத்தியால் நான் தோழி ஆசைப்படுவதக்கோமளத்தின்
காதல்மட்டும் தானென்று ஓதலையோ நீ)
(குமாரனாசான், 1970: 25-26)

என்ற செய்யுள்களைக் குறிப்பிடலாம். இவற்றின் யாப்பமைப்பை

1. VV -- V- V- V- V- -- -V
VV V- -V -- V- V- -

2. VV -V -- -V V- V- -V -V
VV -V V- -V V- -- -

எனக்காட்டலாம். இவ்விரு நதோன்னத செய்யுள்களையும் ஒன்றாகச்சேர்த்து சிந்து அமைப்பிலான கன்னியாக்சி இராமகோபிநாதன்

"பணம் கையில் இல்லை என்று தயங்கினனோ அப்பிச்சன்
பரத்தை தானே என்று என்னை மதித்திலனோ - அவன்
குணம் அறி(வு) இவைமிகும் அவ்வழகினைக் காதலித்தேன்
கூடல் ஒன்றே குறித்தேன் என்(று) ஓதலை யோ நீ?"

(இராமகோபிநாதன் 1990:91)

என மொழிபெயர்த்துள்ளார். இதன் யாப்பமைப்பை

V- -- -- -V V- VV -- --
V- -- -- -- V- VV- V-
V- VV V- V- -V V- -V- -
-- -- V- -- V- -- -

எனக்காட்டலாம். இச்செய்யுளின் முதலடியின் இரண்டாம் பகுதி தனிச்சொல்லோடு 15 எழுத்துக்களாலான நதோன்னதயின் இரண்டாமடி போன்று அமைந்துள்ளது.

"வாஸவதத்த தாளிவள் இவள்தான் மலர்முற்றத்தா
வாஸராந்தத்தில் நாம் கண்ட விஸ்வமோகினி
(வாஸவதத்தை தாளிவள் இவள்தான் மலர்முற்றத்தந்த
மாலைவேளையில் நாம்கண்ட விஸ்வமோகினி)"
(குமாரனாசான், 1990:34)

இதன் யாப்பமைப்பை

-V V- V- V- V- V- -- --
-V -- ---V -V -V V

எனக்குறிக்கலாம். நதோன்னத யாப்பில் அமைந்த இச் செய்யுள்களைச் சந்த அமைப்பிலான இரண்டு கண்ணிகளாக்கி இராமகோபிநாதன்,

1. வாஸவ தத்தை இவளே ஐயம் இல்லை, ஆம் இவள் தான்
வாச மலர் முற்றத்திலே முன்னம் ஒரு நாள்
2. கண்டதுண்டிப் பாவையை ஓர் அந்தியிலிக் கட்டழகி
கண்டவர் மனம் மயக்கும் விசுவ மோகினி

என மொழிபெயர்த்துள்ளார். இவற்றின் யாப்பமைப்பை

1. -V V- -V V- -- -- -V --
-V V- -- V- -- VV -

2. -V -- -- -- -V V- -V VV
-V -V -V -- VV VV VV

எனக்காட்டலாம் (இதில் "விஸ்வமோகினி" என்ற சொல்லை "விசுவமோகினி" என தமிழ்ப்படுத்தியுள்ளதால் இரண்டாவது கண்ணியின் ஈற்றடியில் ஒரு எழுத்து மிகுந்துள்ளது). இக்கண்ணிகளை

தன்னன தனத்த தன - தன்னன தனத்த - தன
தன்னன -தனத்த தன - தன்ன தன - னா

என்ற சந்த அமைப்பில் பாடலாம்.

3. தருமொழியாப்பை அப்படியே பயன்படுத்தியிருத்தல்

தருமொழிக்கவிதைகளில் காணப்படும் யாப்புக்களான மஞ்சரி, த்ருதகாகலி, லகுமஞ்சரி, ஓமனத்திங்கள் ஆகியனவற்றைத் தமிழில் அப்படியே மொழிபெயர்த்துள்ளமையை இவ்வகையில் அடக்கலாம். இவ்வகை முயற்சியை நெல்லை சு. முத்து சண்டால பிக்சுகிக்கு செய்துள்ள மொழிபெயர்ப்பில் மேற்கொண்டுள்ளார்.

1. மஞ்சரி

சண்டால பிக்சுகியின் முதல் பகுதியில் காணப்படும் இவ் யாப்பு முதலடியில் 12 எழுத்துக்களையும் இரண்டாமடியில் 10 எழுத்துக்களையும் கொண்டதாக அமையும் (மேலும் விளக்கங்களுக்கு ஆய் வேட்டில் 4:3:1:2 என்ற பகுதியைப் பார்க்கவும்). சான்றாக

"வாடிவலஞ்ஞு ஞரம்பு தளர்ந்நிர
தேடாலுமோர்க்குந்நில்லிக்க கங்ஙள்
(வாடிவதங்கி நரம்பு தளர்ந்திரை
தேடவும் நினைத்திலப் பறவைகள்)"

(குமாரனாசான், 1988:38)

என்ற செய்யுளைக் குறிப்பிடலாம். இதன் யாப்பமைப்பை

-VV -VV -VV -VV
--V --- -V- -

எனக் காட்டலாம். இதற்கு நெல்லை சு. முத்து செய்துள்ள மொழி பெயர்ப்பு

"வாடி வதங்கி நரம்பு தளர்ந்(து) இரை
தேடவு மின்றிச் சிறுங்கும் புட்கள்"

(நெல்லை சு. முத்து, 1992:19)

என அமைந்துள்ளது. இதன் யாப்பமைப்பை

-VV -VV -VV -V-
-VV -VV --- -

எனக்காட்டலாம். இவற்றை

தேமா புளிமா புளிமா கருவிளம்
கூவிளம் தேமா கருவிளம் தேமா

என்ற வாய்ப்பாட்டில் அடக்கலாம்.

2. த்ருதகாகளி

பதினொன்று எழுத்துக்கள் வீதமுள்ள இரண்டடிகளாலானது த்ருதகாகளி (மேலும் விளக்கங்களுக்கு ஆய்வேட்டில் 4:3:1:3 என்ற பகுதியைப் பார்க்கவும்). சான்றாக, சண்டால பிக்சுகியின் இரண்டாவது பகுதியிலுள்ள

"வண்டிண செந்நு முட்டி விடர்ந்ந செந்
தண்டலரல்லி காட்டி நில்க்கும்போலெ
(வண்டினை சென்றுமோதி விரிந்த செந்
தண்டலரல்லி காட்டி நிற்பது போல்)"

(குமாரனாசான், 1988:41)

என்ற செய்யுளைக் குறிப்பிடலாம். இதன் யாப்பமைப்பை

-VV -V -V V-V -

-VV -V -V --V V

எனக்குறிக்கலாம். இதனை நெல்லை சு. முத்து

"வண்டி னைசென்று முட்டி விரிந்தசெந்

தண்டில் பூமக ரந்தம்போல் நின்றனள்"

(நெல்லை சு. முத்து, 1992:22)

என மொழிபெயர்த்துள்ளார். இதன் யாப்பமைப்பை

-V- -V- VV- V-

--- VV- --- V-

எனக்குறிக்கலாம்.

3. லகுமஞ்சரி

பதினொன்று எழுத்துக்கள் வீதமுள்ள இரண்டடிகளாய் லகுமஞ்சரி அமையும் (மேலும் விளக்கங்களுக்கு ஆய்வேட்டில் 4:3:1:4 என்ற பகுதியைப் பார்க்கவும்). சான்றாக, சண்டால பிக்ஷுகியின் மூன்றாவது பகுதியிலுள்ள

"சிறகற்ற மின்னா மினுங்ஙுபோலெ

யறுபகல் நீங்ஙியிழஞ்ஞிருந்நு

(சிறகற்ற மின்மினிப் பூச்சிபோல

அறுபகல் நீங்கி நகர்கின்றது)"

(குமாரனாசான், 1988:43)

என்ற செய்யுளைக் குறிப்பிடலாம். இதன் யாப்பமைப்பை

VV-V --V -V- V

VVV- -VV -V- V

எனக்காட்டலாம். இதற்கு நெல்லை சு. முத்து செய்துள்ள மொழி பெயர்ப்பு

"சிறகிலா மின்மினிப்பூச்சி போலே
உறுபகல் மெல்லவே ஊரு மாங்கே"

(நெல்லை சு. முத்து, 1992:24)

என அமைந்துள்ளது. இதன் யாப்பமைப்பை

VVV- -V- -V- -
VVV- -V- -V- -

எனக்குறிக்கலாம்.

4. ஓமனத்திங்கள்

எட்டெழுத்துக்கள் உள்ள இரண்டடிகளுடன் முதலடியின் ஈற்றில் இரண்டெழுத்துக்களாலான தனிச்சொல்லும் காணப்படும் (மேலும் விளக்கங்களுக்கு ஆய்வேட்டில் 4:3:1:5 என்ற பகுதியைப் பார்க்கவும்). சண்டால பிக்சுகியின் நான்காவது பகுதி முழுவதும் இவ்யாப்பில் அமைந்தது. சான்றாக

"ஸ்னேஉறம்தான் சக்தி ஜகத்தில் - ஸ்வயம்
ஸ்னேகம் தானானந்த மார்க்கும்
(அன்புதான் சக்தி உலகில் - உண்மை
அன்புதான் மகிழ்ச்சி யார்க்கும்)"

(குமாரனாசான், 1988:66)

என்ற செய்யுளைக் குறிப்பிடலாம். இதன் யாப்பமைப்பை

--- -VV -- V-
--- --V --

எனக்குறிக்கலாம். இதனை நெல்லை சு.முத்து

"அன்புதான் பூலோக சக்தி - தூய
அன்புதான் ஆனந்த முக்தி"

(நெல்லை சு. முத்து, 1992:40)

என மொழிபெயர்த்துள்ளார். இதன் யாப்பமைப்பு

-V- --V -V -V
-V- --V -V

என அமைந்துள்ளது.

தருமொழிக் கவிதைகளில் காணப்படும் யாப்பமைப்பை அப்படியே பயன்படுத்தி பெறுமொழிவடிவத்தை அமைத்திருப்பது வரவேற்கத்தக்கதாகும். இத்தகைய முயற்சிகள் தமிழ் யாப்பின் வளர்ச்சிக்கு உதவுவதாக அமையும். மேலும் மஞ்சரி, த்ருதகாகளி, லகுமஞ்சரி, ஓமனத்திங்கள் போன்றவை மலையாளத்தில் நாட்டுப்புறயாப்புக்களாகக் (திராவிடயாப்புக்களாக) கருதப்படுவதால் தமிழிலுள்ள நாட்டுப்புறச் செய்யுள்களில் இத்தகைய யாப்புக்கள் காணப்படக்கூடும் (இங்கு மலையாளத்திலுள்ள ஓமனத்திங்களும் தமிழிலுள்ள நொண்டிச்சிந்தும் சமமான அமைப்பைக் கொண்டன என்பது குறிப்பிடத்தக்கதாகும்). இவற்றை மொழிபெயர்ப்பு மற்றும் ஒப்பீடு ஆகியவற்றின் மூலமே அறிந்துகொள்ள முடியும்.

4. தொடை

மலையாளத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள கவிதைகளின் தொடையமைப்பை அப்படியே நேரடி இணைகளால் தந்துள்ளதோடு, மாற்றிணைகளைப் பயன்படுத்தியும், தொடையமைப்பை நீக்கியும் மொழிபெயர்ப்பைச் செய்துள்ளனர். மேலும் கவிதைகளின் நயத்தை மிகுவிப்பதற்காகத் தொடைக் கூறுகளை மிகுதியாகச் சேர்த்தும் மொழிபெயர்த்துள்ளனர். இவற்றின் அடிப்படையில் தொடைமாற்றத்தை 1. தொடைகளை அப்படியே மொழிபெயர்த்திருத்தல், 2. தொடைகளை மாற்றிணைகளால் மொழிபெயர்த்திருத்தல், 3. தொடைகளை நீக்கியிருத்தல், 4. தொடைகளைச் சேர்த்தல் என வகைப்படுத்தி விளக்கலாம்.

1. தொடைகளை அப்படியே மொழிபெயர்த்திருத்தல்

மூலமொழி வடிவத்தில் காணப்படும் மோனை, எதுகை, இயைபு போன்ற தொடைகளை அப்படியே மொழிபெயர்த்துள்ளமையை இவ்வகையில் அடக்கலாம். சான்றுகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. "முற்றத்தெழுந்த பூவல்லி - நிர
முற்றும் ரஸத்தில் நனைக்கும்
(முன்றிலில் நிற்கும் பூவல்லி - அதை
முழுவதும் நீரால் தெளிப்பான்)"

(குமாரனாசான், 1988:50)

இச்செய்யுளை நெல்லை சு. முத்து

"முற்றத்தெ ழும்மலர் வள்ளிக் - கொடிமேல்
முற்றும்தெ ளித்தனள் அள்ளி"

(நெல்லை சு. முத்து, 1992:32)

என மொழிபெயர்த்துள்ளார். இங்கு மூலவடிவத்தில் காணப்படும் அடிமோனை அமைப்பை அவ்வெழுத்துக்களாலேயே மொழிபெயர்ப்பிலும் கொணர்ந்துள்ளார். மேலும்,

"காலம் பின்னெயும் கழிஞ்ஞு கதகள் நிறஞ்ஞுமாஸம்
நாலுபோயி நபஸ்ஸில் காறொழியாறாயி
(காலம் பிறகும் கடந்தது கதைகள் நிறைந்தமாதம்
நான்கு சென்றன. வானில் மேகமும் தீர்ந்தது)"

(குமாரனாசான், 1990:29)

என்ற செய்யுளை இராமகோபிநாதன்

"காலம் சில கடந்தது - கதைகள் நிறைந்தமாதம்

நா(ளு) அங்கவை நடந்தன - வானில் முகில்பெயர"

(இராமகோபிநாதன், 1990:94)

என மொழிபெயர்த்துள்ளார். இதில் மூலச்செய்யுளில் காணப்படும் மேற்கதுவாய் வகையிலான சீர்மோனையை மொழிபெயர்ப்பிலும் அதே எழுத்துக்களால் அமைத்துள்ளார்.

2. பண்டுத்தர உறிந்தஸ்தாலத்தில் வன்புகழ்

கொண்ட சிராவஸ்திக்கடுத்தோரூரில்

(பண்டுவட இந்தியாவில் பெரும்புகழ்

கொண்ட சிராவஸ்திக்கு அடுத்த ஓரூரில்)

(குமாரவாசான், 1988:37)

சண்டாலபிக்சுகியில் உள்ள இச்செய்யுளை நெல்லை சு. முத்து

"பண்டு வடக்குயர் பாரதத்தே புகழ்

கொண்ட சிராவத்திக்(கு) அண்டையூரில்"

(நெல்லை சு. முத்து, 1992:18)

என மொழிபெயர்த்துள்ளார். இதில் தருமொழி வடிவத்தில் காணப்படும் எதுகைத்தொடையை அதே எழுத்துக்களால் பெறுமொழிவடிவத்திலும் அமைத்துள்ளார்.

3 "மங்கும் தினஜ்வாலமேலே - பொடி

பொங்கி வானில் புகபோலெ

(மங்கும் கதிரவன் மேலே - தூசு

உயர்ந்தது வானில் புகைபோலே)"

(குமாரனாசான், 1988:53)

சண்டாலபிக்ஷுகியில் காணப்படும் இச்செய்யுளை நெல்லை சு. முத்து

"செங்கதிர்ச் சூரியன் மேலே - புழுதி

பொங்கிமு ழும்புகை போலே"

(நெல்லை, சு. முத்து, 1992:34)

என மொழிபெயர்த்துள்ளார். இதில் தருமொழிவடிவத்தில் காணப்படும் இயைபுத் தொடையை அப்படியே பெறுமொழிவடிவத்தில் மொழிபெயர்ப்பாளர் கொண்டு வந்துள்ளார்.

2. தொடைகளை மாற்றிணைகளால் மொழிபெயர்த்திருத்தல்

தருமொழிவடிவத்தில் காணப்படும் தொடைகளை மாற்றிணைகளைப் பயன் படுத்தி மூலத்திற்கு சமமாக மொழிபெயர்த்திருத்தலை இவ்வகையில் அடக்கலாம். சான்றுகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1, "அவிதிதாசார மாம்தம்க கன்ய
அவசயாய் ஸம்ப்ரமமார்ந்நு நிந்நு
(ஆசாரமுறைகளைப் புரிந்திடாத
நிலையில் திகைப்புடன் நின்றாள்)"

(குமாரனாசான், 1988:48)

சண்டாலபிக்ஷுகியில் காணப்படும் இச்செய்யுளை நெல்லை சு. முத்து

"உவமையில் ஞானிமுன் ஊமையானாள்

உவகையில் உற்ற திகைப்பில் அந்நாள்"

(நெல்லை சு. முத்து,1992:29)

என மொழிபெயர்த்துள்ளார். இங்கு தருமொழி வடிவத்தில்அகரத்தை முதலெழுத்துக்களாகப் பெற்று அடிமோனைத் தொடையமைப்பைக் கொண்டவற்றை மாற்றிணை மூலம் உகரத்தை முதலாகக்கொண்ட சொற்களால் மோனைத்தொடையில் மாற்றமின்றி மொழிபெயர்ப்பை அமைத்துள்ளார்.

2." ஊஃடாம்கமாம் தர்ம்ம மார்க்கம் - பால

கஊஃடதயெந்றி தரிச்சு

(என்குணத்ததாம் அறவழியை - செல்வி
மடியேதுமின்றி ஏற்றாள்)"

(குமாரனாசான், 1988:49)

என்பதை நெல்லை சு. முத்து

"என்குணத் தர்மநன் மார்க்கம் - கன்னி
பண்படக் கற்றனள் ஆக்கம்"

(நெல்லை சு. முத்து, 1992:30)

என மொழிபெயர்த்துள்ளார். இங்கு தருமொழி வடிவத்தில் காணப்படும் ஊஃகர எதுகை மாற்றிணைமூலம் ணகர எதுகையாக மாற்றப்பட்டுள்ளது.

3 "பூஊஃணமொக்கெ வெடிஞ்ஞு - பால

தோஊஷிச்சு கூந்தலரிஞ்ஞு

(அணிகள் அனைத்தும் களைந்து - செல்வி

மகிழ்ந்த கூந்தல் அறுத்தாள்)"

(குமாரனாசான், 1988:49)

சண்டால பிக்ஷுகியிலுள்ள இச்செய்யுளை நெல்லை சு. முத்து

"ஆபரணங்களும் நீத்தாள் - செல்வி

சோபனக் கூந்த லறுத்தாள்"

(நெல்லை சு. முத்து, 1992:30)

என மொழிபெயர்த்துள்ளார். இங்கு தருமொழிவடிவத்தில் காணப்படும் 'வெடிஞ்ஞு' 'அரிஞ்ஞு' என்ற அடியியைபுத் தொடையை 'நீத்தாள்", 'அறுத்தாள்" என மாற்றிணைமூலம் அடியியைபுத்தொடையாக மொழிபெயர்த்துள்ளார்.

3. தொடைகளை நீக்கியிருத்தல்

தருமொழிவடிவத்தில் காணப்படும் தொடைகளை நீக்கிவிட்டு பெறுமொழி வடிவத்தை அமைத்தலை இவ்வகையில் அடக்கலாம். சான்றுகளாகப் பின்வருவன வற்றைக் குறிப்பிடலாம்.

1. "விஉ௺யாதிபதர்ம்ம மோர்த்தஉேறா
விஉ௺மிச்சங்ஙனெ செய்ததாம் ந்ருபன்
விஉ௺ஸம்க்றம சங்கமூலமாய்
விஉ௺உறிக்கும் புதரம்கக்ஙந்தனம்
(அரச நீதியையே நினைத்தாள்
வருத்தம் மிகுந்திடச் செய்தான் இறைவன்
விடம் பகருமென்ற ஐயத்தால்
சகிப்பர் அறிவுள்ளார் அங்க சேதமும்)"

(குமாரனாசான், 1989:47)

சிந்தாவிஉ௺டயாய சீதயிலுள்ள இச் செய்யுளை ஜனார்த்தனம்

"அரச நீதிய தொன்றே ஓர்ந்தவள்
சரத மேயிது சிந்தியா செய்ததே
உரக வெவ்விடத் தையம் உற்றிடில்
அரிய அங்கமும் அரியர் பொறுப்பரே"

(ஜனார்த்தனம், 1975:40)

என மொழிபெயர்த்துள்ளார். இங்கு தருமொழிச்செய்யுளில் காணப்படும் அடிமோனை அமைப்பு மொழிபெயர்ப்பில் நீக்கப்பட்டுள்ளது. மேலும்

"தீனம் தில்ல பொண்டாட்டி பசிவெந்த கொளந்தை
ஓர்ம்மகத்தி வண்டி ஆவிவண்டியாயி
தீர்த்தாடகருடெ உஃண்முகநதி வரளும் வரெ
ஆண்டவர் தருந்ந அரத்துடம் கஞ்ஞி
ஆழ்ச்சயிலொரிக்கல் அரத்தொண்டு லகரி
(நோய்தின்ற பொண்டாட்டி பசியில் வெந்தகொளந்தை
நினைவு எரிந்து வண்டி புகைவண்டி யானது
புனித யாத்திரிகர்களின் உஃண்முகநதி வரளும் வரை
ஆண்டவர் தரும் அரைவயிற்றுக்கஞ்சி
வாரத்திற்கொருமுறை அரைப்பட்டை போதை)"

(சச்சிதானந்தன், 1988:289)

சச்சிதானந்தனுடைய இக்கவிதைவரிகளை சுகுமாரன்

"நோய்தின்ற பெண்டாட்டி
பசியால் வெந்த குழந்தை
கனவுகள் எரிந்த வண்டி
தீர்த்த யாத்திரிகர்களின் உஃண்முகநதி வரளும்வரை
ஆண்டவர்தரும் அரைவாய்க் கஞ்சி
வாரம் ஒரு தடவை அரைமொந்தை போதை"

(சுகுமாரன், 1990:61)

என மொழிபெயர்த்துள்ளார். இங்கு தருமொழி வடிவத்தில் காணப்படும் இணை மோனை, பொழிப்புமோனை ஆகியவை நீக்கப்பட்டுள்ளன.

2. "சயனம் வெடிஞ்ஞு நனஞ்ஞு வீர்த்த
நயவாம் புஜங்ஙள் துடச்சு தன்வி
(தூக்கம் கலைந்து நனைந்து பெருத்த
விழித்தாமரைகள் துடைத்தாள் மாது)"

(குமாரனாசான், 1988:44)

சண்டாலபிக்சுகியில் இடம்பெற்றுள்ள இச்செய்யுளை நெல்லை சு. முத்து

"உறக்கமும் தீர்ந்ததோ? கண்ணீர் பெய்து
பெருத்தன கண்களும் அம்மம்மாவோ"

(நெல்லை சு. முத்து 1992:25)

என மொழிபெயர்த்துள்ளார்.

இங்கு தருமொழி வடிவத்தில் உள்ள அடியெதுகை அமைப்பை நீக்கிவிட்டு பெறுமொழி வடிவத்தை அமைத்துள்ளார்.

3. "மங்ஙும் திஙஜ்வாலமேலெ - பொடி
பொங்ஙி வானில் புகபோலெ
(மங்கும் கதிரவன் மேலே - தூசு
உயர்ந்தது வானில் புகை போலே)"

(குமாரவாசான், 1988:53)

சண்டாலபிக்சுகியில்இடம்பெற்றுள்ள இச்செய்யுளை இராமகோபிநாதன்

"வீழும் கதிர் ஒளிபட்டு - வானில்
சூழும் புகை எனத் தூளி"

(இராமகோபிநாதன், 1990:72)

என மொழிபெயர்த்துள்ளார். இங்கு மூலவடிவத்தில் காணப்படும் அடியியைபுத் தொடை அமைப்பு பெறுமொழி வடிவத்தில் நீக்கப்பட்டுள்ளது.

4. தொடைகளைச் சேர்த்திருத்தல்

தொடையமைப்பு எதுவுமின்றி அமைந்த செய்யுள்களைத்தொடைநயம் தோன்றும்படியாக மொழிபெயர்த்துள்ளமையை இவ்வகையில் அடக்கலாம். சான்றுகளாகப் பின்வருவனவற்றைக்குறிப்பிடலாம்.

1. "கோமாளாம்கி நீர் கோரி நிந்நீடிவாள்
ச்ரீமாவப் பிக்சுவுமங்ஙு சேர்ந்நர்த்திச்சான்
(கோமளம் போன்றாள் நீர் இறைத்துநின்றாள்
திருவினன் அப்பிக்சுவும் அங்கு சென்று கேட்டான்)"

(குமாரனாசான், 1988:40)

சண்டால பிக்சுகியில் உள்ள இச்செய்யுளை நெல்லை சு. முத்து

"கோம ளாங்கி நீர் கோரி இறைத்த நாள்
கோமான் பிக்குவும் கோரினான் ஈதொன்று"

(நெல்லை சு. முத்து, 1992:21)

என மொழிபெயர்த்துள்ளார்.

இங்கு மோனைத் தொடையின்றி காணப்படும் மூலவடிவத்தை மோனை அமைப்போடு மொழிபெயர்த்துள்ளார்.

2. "அவள்தன் பாண்டு முகத்திலந்தி விண்ணிலெந்ந போலெ
யெவிடுந்நோ சாடியெத்தி ரக்தரேககள்
(அவளின் வெளிறிய முகத்தில் அந்திவானம் போல்
எங்கிருந்தோ பாய்ந்துவந்தன ரக்தக் கோடுகள்)"

(குமாரனாசான், 1990:37)

கருணையில் இடம்பெற்றுள்ள இச்செய்யுளை இராமகோபிநாதன்

"எங்கொளித்தது குருதியோ
எகிறிவந்து குதித்தது
மங்கிருள்வரும் முன்னர்வான்
மலர்ந்த செக்கரை ஒக்கவே"

(இராமகோபிநாதன், 1990:108)

என மொழிபெயர்த்துள்ளார்.

இங்கு தருமொழிவடிவம் எதுகைத்தொடையின்றி அமைந்துள்ளது. ஆனால் மொழிபெயர்ப்பாளர் அடியெதுகைத் தொடையைச் சேர்த்துப் பெறுமொழி வடிவத்தை அமைத்துள்ளார். மேலும்,

"உல்பன்னமாயது நசிக்கும் அணுக்கள் நில்க்கும்
உல்பன்னமாமுடல் வெடிஞொரு தேகி வீண்டும்
உல்பத்தி கர்ம்மகதிபோலெ வரும் ஜகத்தில்
கல்பிச்சிடுந்நிவிடெயிங்ஙனெ யாகமங்ஙள்
(பிறந்தது அழியும் அணுக்கள் நிலைநிற்கும்
பிறந்த உடலைவிட்டு ஆன்மா, மீண்டும்
பிறக்கும் அது செய்வினைக்கேற்ப அமையும் உலகில்
கற்பிக்கிறது இங்கே இப்படி வேத ஆகமங்கள்)"

(குமாரனாசான், 1990 அ:22)

வீணபூவுவில் உள்ள இச்செய்யுளை இளங்கம்பன்

"பிறந்தவைகள் இறப்பதுதான்
பேசுமிந்தப் புவிவாழ்வில்
மறந்திடவே முடியாத
மாநியதி நற்கருமச்
சிறப்புக்கும் தக்கவண்ணம்
செப்பும் பிறப்புண்டாம்
அறமுணர்த்தும் அருமறைகள்
அறைவதுவும் இதைத்தானே"

(இளங்கம்பன், 1978:26)

என மொழிபெயர்த்துள்ளார். இப்பெயர்ப்பில் இணை எதுகை, ஒரூஉ எதுகை, பொழிப்பு எதுகை ஆகியவைகளை மிகுதியாகச் சேர்த்துள்ளார்.

3. "சேஉநம் சிறமணி மாரேலும் - சுத்த
வேஉஷம் சரியாயணிஞ்ஞு
(பிறகு புத்த துறவியரிவும் - நல்ல
வேடத்தை சரியாய் அணிந்தாள்)"
(குமாரனாசான், 1988:49)

சண்டால பிக்சுகியிலுள்ள இச்செய்யுளை நெல்லை சு. முத்து

"கூடும் சிராமணி முத்தாள் - தவ
வேடமும் செவ்வனுடுத்தாள்"
(நெல்லை சு. முத்து, 1992:30)

என மொழிபெயர்த்துள்ளார்.

இங்கு மூலவடிவத்தில் அடியியைபுத்தொடை காணப்படவில்லை. ஆனால் மொழிபெயர்ப்பாளர் அதையும் சேர்த்து பெறுமொழிவடிவத்தை நயந்தோன்ற அமைத்துள்ளார்.

தருமொழிச்சொற்களை அவற்றின் அடியாகப் பிறந்த பெறுமொழி இணைகளால் மொழிபெயர்த்துள்ள பகுதிகளில் தொடை நயம் மூலவடிவத்தில் உள்ளதைப் போன்றும், பொருளிணைகளால் மொழிபெயர்த்துள்ள பகுதிகளில்மாற்றுத்தொடைவடிவங்களாகவும் தொடைநயம் இன்றியும் காணப்படுகின்றன. மேலும் பொருள் இணைகளைப் பயன்படுத்தியுள்ளதின்மூலம் தருமொழிவடிவத்தில் தொடை நயமற்ற பகுதிகளின் மொழிபெயர்ப்பில் புதிதாகவும் தொடைநயம் சேர்க்கப் பட்டுள்ளன.

5. அணி

மலையாளக் கவிதைகளில் காணலாகும் அணிகளை அப்படியே நேரடி இணைகளால் மொழிபெயர்க்காமல் வடிவமாற்றம் செய்தும், அலங்கார நடையின்றி அமைந்துள்ள பகுதிகளில் புதிதாக அணிகளைச் சேர்த்தும் கவிதை மொழிபெயர்ப்பாளர்கள் மொழிபெயர்த்துள்ளனர். இதற்குக்காரணங்களாக 1. செய்யுளை இலக்கண

அமைப்பிற்குள் கொண்டுவர முயற்சித்தல், 2. மூலத்தின் கருத்தைத் தெளிவாகப் பெறுமொழியில் சொல்ல முயற்சித்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இதற்காக மொழிபெயர்ப்பின்போது செய்துள்ள மாற்றங்களை 1. அணிகளின் வகையை மாற்றியிருத்தல், 2. தொகையணிகளை விரிவடிவமாக்கியிருத்தல், 3. அணிகளை நீக்கியிருத்தல், 4. அணிகளைப் புதிதாகச் சேர்த்திருத்தல் என வகைப்படுத்தி விளக்கலாம்.

1. அணிகளின் வகையை மாற்றியிருத்தல்

மூலவடிவத்தில் காணப்படும் ஒருவகை அணியை மற்றொரு வகை அணியாக மாற்றி மொழிபெயர்த்துள்ளமையை இவ்வகையில் அடக்கலாம். சான்றுகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1"சிந்திய பூங்குலகளாம் பட்டுத்தொங்குல் சூழுமொரு
பொன்னசோகம் விடர்த்திய குடதன் கீழில்
(ஏராளம் பூங்கொத்துக்களாலான பட்டுத்தொங்கல் சூழ்ந்த ஒரு
பொன்னசோகு பரப்பிய குடையின்கீழில்)"
(குமாரனாசான் 1990:23)

என கருணையில் காணப்படும் அடிகளை இராமகோபிநாதன்

"பட்டுக் குஞ்சரம் தொங்கும் குடைபோல மலர் கொத்தவிழ்ந்துப்
பல்கிளைப் பரப்பும் பொன் அசோகு"
(இராமகோபிநாதன், 1990:87)

என்று மொழிபெயர்த்துள்ளார். இதில் "அசோகமரத்தில் பூக்களோடு காணப்படும் கிளைகளைப் பட்டுக்குஞ்சரம் தொங்கும் குடைக்கு உருவகமாக்கி குமாரனாசான் அமைத்துள்ள வரிகளை இராமகோபிநாதன் "பட்டுக்குஞ்சரம் தொங்கும் குடைபோல் மலர்க்கொத்தவிழ்ந்து பல்கிளைப்பரப்பும் பொன்னசோகு" என உவமையாக மாற்றி மொழிபெயர்த்துள்ளார்.

2. "முண்டனம் செய்து சிரஸ்சும் முகசந்த்ர
மண்டலம் தானும் மஸ்றுணமாக்சி
(மொட்டையடித்த தலை முகமதியின்
மண்டலத்தையும் ஒளியூட்டியது)"

(குமாரனாசான், 1988:39)

சண்டாலபிக்சுகியில் இடம்பெற்றுள்ள இவ்வடிகளை நெல்லை சு. முத்து

"மொட்டைத்தலையும் முழுமதிபோல் முகமும்
பட்டொளிவீசும் படிமங்காட்டி"

(நெல்லை சு. முத்து, 1992:20)

என மொழிபெயர்த்துள்ளார். இதில் குமாரனாசான் அமைத்துள்ள 'முகசந்த்றன்' என்ற உருவகத்தை "முழுமதிபோல் முகமும்' என உவமையாக மாற்றி மொழி பெயர்த்துள்ளார்.

3." நீலக்கல்லொத்து மினுத்தோரிலகள்தன்
மேலே நா வைரத்தின் சாந்திவீசும்
(நீலக்கல்போன்று மின்னும் இலைகளின்
மேலே நல்வைரத்தில் ஒளிவீசும்)"

(குமாரனாசான், 1988:37)

என சாண்டாலபிக்சுகியில் காணப்படும் இக்கண்ணியை நெல்லை சு. முத்து

"நீலமணிகளாய் மின்னும் இலைகள்தன்
மேலொளிவைரக்கதிர்கள் வீசும்"

(நெல்லை சு. முத்து, 1992:18)

என மொழிபெயர்த்துள்ளார். இதில் "நீலக்கல்லொத்து மினுத்தோரிலகள்" என உவமையாய் அமைந்துள்ள பகுதியை "நீலமணிகளாய் மின்னும் இலைகள்" என உருவகமாக்கி மொழிபெயர்த்துள்ளார். இங்கு "இலைகள் நீலக்கல்லை ஒத்து மின்னின" என்ற கருத்தை "இலைகள் நீலமணிகளாய் மின்னின" என மாற்றியுள்ளார்.

2. <u>தொகையணிகளை விரிவடிவமாக்கியிருத்தல்</u>

மூலவடிவத்தில் தொகையாகக் காணப்படும் அணிகளை விரிவடிவமாக மாற்றி மொழிபெயர்த்தலை இவ்வகையில் அடக்கலாம். சான்றுகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1, "அனுபமக் க்ருபாநிதியகில பாந்தவன் சாக்ய

ஜினதேவன் தர்ம்மரஉ்மி சொரியும் நாளில்

(உவமையில் கருணைக்கடலாய் அகில உலகின் உறவினனாய் சாக்ய

குலந்தனில் உதித்த இறைவன் அருட்கதிர் சொரியும் நாளில்)"

(குமாரனாசான், 1990:23)

கருணையில் இடம்பெற்றுள்ள இச்செய்யுளை இராமகோபிநாதன்

"ஒப்புவமை சொல்லொணா தயாநிதி உலகெலாம் தன்

உற்ற உற(வு) எனும் புத்ததேவன் அவன்

இப்புவிக்(கு) அருளறத்தின் இன்னொளியாம் தன்னொளியை

எங்கணும் பரப்பிவந்த காலம் தனில்"

(இராமகோபிநாதன், 1990:87)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதில் "தர்ம்மரஉ்மி (அறக்கதிர்)" என்ற தொகை உருவகத்தை "அருளறத்தின் இன்னொளியாம் தன்னொளி, என விரிவடிவமாக்கி மொழிபெயர்த்துள்ளார்.

2. "வார்திங்கள்த்தாலமெடுத்த வஸந்தரா

வேதோவெஞ்சாறொந்நு பூசிய்க்கயால்

(வார்திங்கள் தட்டெடுத்த வசந்தகால இரவு

ஏதோ வெஞ்சா றொன்றைப் பூசுவதால்)"

(வள்ளத்தோள், 1990:42)

மக்தலனமறியத்தில் காணப்படும் இவ்வடிகளை துறைவன்

"திங்கள் எனும் தட்டெடுத்துத்

திகழ்வசந்த நல்லிரவு

பொங்கிவரும் பொன்நிறத்துப்

புதுச்சாறுபூசிடவும்"

(துறைவன், 1987:1)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதில் "திங்கள்த் தாலம்" என்ற தொகை உருவகத்தை "திங்கள் எனும் தட்டு" என விரிவடிவமாக மாற்றி மொழிபெயர்த்துள்ளார்.

3. அணிகளை நீக்கியிருத்தல்

தருமொழிக்கவிதையில் காணப்படும் அணியை நீக்கிப் பெறுமொழிக்கவிதையை அமைத்துள்ளமையை இவ்வகையில் சேர்க்கலாம். சான்றாகப்பின்வரும் செய்யுளைக் குறிப்பிடலாம்.

"வீசும் வலங்கரவல்லியில் பாளயும்
பாசவும் லீலயாய்த் தூக்கிக் கொண்டும்
(வீசும் வலக்கர அல்லியில் பாளையும்
கயிறும் லீலயாய்த் தூக்கியும்)"

(குமாரனாசான், 1988:39)

சண்டாலபிக்சுசியில் இடம்பெற்றுள்ள இக்கண்ணியை நெல்லை சு. முத்து

"வீசிடும் தன் வலக்கைதனில் பாளையும்
ஊசலாடும் கயிறும் சுமந்தே"

(நெல்லை சு. முத்து 1992:20)

என மொழிபெயர்த்துள்ளார். இங்கு "வலங்கர வல்லியில்" என வலக்கரத்தை அல்லிக்கு உருவகப்படுத்தியுள்ள மூலவடிவச் செய்தியை நீக்கி "வலக்கைதனில்" என பொதுவடிவமாக மொழிபெயர்ப்பை அமைத்துள்ளார்.

4. அணிகளைப்புதிதாகச் சேர்த்திருத்தல்

தருமொழிவடிவத்தில் உள்ளதைவிடவும் மிகுதியாக அணிகளைச்சேர்த்துப் பெறுமொழிவடிவத்தை அழகுபெறச்செய்தலை இவ்வகையில் அடக்கலாம். சான்றுகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. "அமுதவள் கோவிலொதுங்கியெங்கும்

பொழுது போகாதாயி புத்திமுட்டி

(அமுதவள் மூலையில் ஒதுங்கிச்சற்றும்

பொழுதுபோகாது குழப்பமுற்றாள்)"

(குமாரனாசான், 1988:43)

சண்டாலபிக்குகியில் காணப்படும் இச்செய்யுளை இராமகோபிநாதன்

"மூலை மூலை ஒதுங்கி விசித்தனள்

முட்டிவந்த(து) அழுகை, கதிரவன்

மேலை வானில் இறங்க மறுத்தபோல்

மெல்லியட்குப் பொழுதும் போகலை"

(இராமகோபிநாதன், 1990:57)

என மொழிபெயர்த்துள்ளார். இதில் "பொழுது போகாதாயி" என்பதை "கதிரவன் மேலைவானில் இறங்க மறுத்தபோல் மெல்லியட்குப் பொழுதும் போகலை" எனத் தற்குறிப்பேற்றமாக்கி மொழிபெயர்த்துள்ளார்.

2"அழகேறும் பிக்ஷுவுமப்பேராலும்

வழியும் கிணறும் பரிஸரவும்

(அழகுடை பிக்ஷுவும் அப்பேராலும்

வழியும் கிணறும் சுற்றுப்புறமும்)"

"ஒழியாதவளகோ முன்பில் கண்டு

மிழியடச் சென்நாலுமல்லென்நாலும்

(நீங்காது அவள் தன் முன் காண

விழியடைத்தாலும் திறந்திருக்கும்)"

(குமாரனாசான், 1988:43-44)

சண்டாலபிக்சுகியில் உள்ள இச்செய்யுள்களை நெல்லை சு. முத்து

"அவிசுடர் பிக்சுவும் ஆறும் பாழுங்
சிறைதும் பாதைகள் சூழ்நிலையும்"
"ஒழிவறக் கண்ணெதிர் ஓவியம்போல்
விழியடைத் தாலும்வி ரிந்து நிற்கும்"

(நெல்லை சு.முத்து,1992:24-25)

என மொழிபெயர்த்துள்ளார்.

இங்கு "ஒழியாதவளகோ முன்பில்க் கண்டு" என்ற அடியிலுள்ள "அவள் தன் முன்பில்காண" என்ற செய்திக்குப் பதிலாக "கண்ணெதிர் ஓவியம்போல்" என்ற உவமைத் தொடரைச் சேர்த்து மொழிபெயர்ப்பை அமைத்துள்ளார்.

6. குறிப்புப்பொருள்

மலையாளக் கவிதைகளில் காணப்படும் குறிப்புப் பொருள்களை மொழிபெயர்ப்பாளர்கள் தமிழில் வடிவநிலையிலான மாற்றங்களைச் செய்து மொழிபெயர்த்துள்ளனர். இதற்காக பெறுமொழிவடிவத்தில் கையாண்டிருக்கும் தகுமாற்றங்களை 1. கருத்துவிளக்க நடையைப் பயன்படுத்தியிருத்தல், 2. மாற்று வடிவங்களைப் பயன்படுத்தியிருத்தல் என வகைப்படுத்தி விளக்கலாம்.

1. கருத்துவிளக்க நடையைப் பயன்படுத்தியிருத்தல்

தருமொழிவடிவத்தின் குறிப்புப்பொருளை விளக்கமுறையில் தரும் நோக்கிலான நடையமைப்பை பெறுமொழிவடிவத்தில் பயன்படுத்தியிருத்தலை இவ்வகையில் அடக்கலாம். சான்றுகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1, "வாஸவதத்தாக்யயாய வாரசுந்தரி - மதுரா

வாஸிகளிலறியாதில்லிவளெயாரும்

(வாசவதத்தை என்ற பெயர்கொண்ட அழகிய வேசி மதுரை

வாசிகளில் அறியாதவர்களில்லை இவளை யாரும்)"

(குமாரனாசான், 1990:25)

இச்செய்யுளை இராமகோபிநாதன்

"வாஸவதத்தை என்னும் பேர் கொண்டவள் அழகிமட

மாதிவளை மாமதுரை ஊரில் - மிகத்

தேசுடையாள் என்பது அன்றி வேசிவிலை மாதெனவே

செப்ப அறியாதவர்கள் இல்லை"

(இராமகோபிநாதன், 1990:90)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இங்கு "மதுராவாஸிகளிலறி யாதில்லிவளேயாரும்" என்பதை அதன் குறிப்புப் பொருள் தோன்றுமாறு "மா மதுரை ஊரில் மிகத்தேசுடையாள் என்பது அன்றி வேசி விலை மாதெனவே செப்ப அறியாதவர்கள் இல்லை" என கருத்துவிளக்க நடையைப் பயன்படுத்தி மொழிபெயர்ப்பை அமைத்துள்ளார்.

2. "பாலொத்தெழும் புதுநிலாவிலலம் குளிச்சும்

பாலாதபத்தில் விளயாடியுமாட லெங்யே

நீ லீலபூண்டிளய மொட்டுகளோடு சேர்ந்து

பாலத்வமங்ஙனெ கழிச்சு நாளில் நாளில்

(பால்போன்று எழுகின்ற புதுநிலவொளியில் குளித்தும்

இளம்வெயிலில் களித்தும் மகிழ்வுடன்

நீ லீலைகள் செய்து இளம் மொட்டுகளுடன் சேர்ந்து

இளமையை அப்படியே கழித்தாய் நாள்தோறும்

(குமாரனாசான், 1990 அ.17)

வீணபூவு என்ற குறுங்காவியத்தில் உள்ள இச்செய்யுளை இளங்கம்பன்

"பால்மதியில் வெள்ளத்தில்
பரவசமாய்க் குளித்தெழுந்தே
கால்கொள்ளும் கதிர் ஒளியில்
கவர் மொட்டும் குழுவோடு
மேல் எழுந்த உவகையிலே
மிக்கெழிலாய் விளையாடிப்
பால்மணக்கும் பிள்ளைமையாம்
பருவத்தையும் கடந்தாய்"

(இளங்கம்பன், 1978:10)

என மொழிபெயர்த்துள்ளார். இங்கு 'பாலத்வம்' என்பதை "பால் மணக்கும் பிள்ளையாம் பருவம்" என மொழிபெயர்த்துத்தருமொழி வடிவத்தில் மலரின்மூலம் பெண்ணைக் குறிப்பாகச் சுட்டும் பகுதியைக் கருத்துவிளக்க நடையைப் பயன்படுத்தி வெளிப்படையாக்கி மொழிபெயர்த்துள்ளார்.

2. மாற்று வடிவங்களைப் பயன்படுத்தியிருத்தல்

தருமொழிவடிவத்தில் உட்கருத்திற்கிணையான பெறுமொழிவடிவத்தைப் பயன்படுத்தியிருத்தலை இவ்வகையில் அடக்கலாம். சான்றாக-

"ஆரோமலாமழகு சுத்தி ம்ருதுத்வ மாப
ஸாரள்யமெந்ந சுகுமார குணத்திலெல்லாம்
பாரிங்கலேதுபம? அம்ருது மெய்யில் நவ்ய
தாருண்ய மேந்தியொரு நின்றில காணணம் தான்
(காமுறும் அழகு தூய்மை மென்மை சோபை
நளினம் என்ற நல்ல குணங்களுக்கெல்லாம்
பாரினில் ஏதுபமை? அந்த மெல்லுடலில் புது
இளமையேந்தி நிற்கும் நிலையதைக் காண்பின்)"

(குமாரனாசான், 1990 அ:17)

என்ற செய்யுளை இளங்கம்பன்

"உருவோங்க ஒலியோங்க
உயர்பருவ எழிலோங்க
திருவோங்க நீ யன்று
திகழ்ந்திருந்த நலமென்னெ
பெருகுமழகுப் பெட்டகமாய்
பேரன்பில் கட்டவிழ்ந்தே
அருமலரே நீ நின்ற
அழகிசைக்க வல்லார்யார்?"

(இளங்கம்பன், 1978:11)

என மொழிபெயர்த்துள்ளமையைக் குறிப்பிடலாம். இங்கு "ஆரோமலாமழகு . . . . லேஷபம" என்பதை "உருவோங்க . . . . நலமென்னெ" எனவும், "அம்மூது மெய்யில் . . . . . . காணம்தான்" என்பதை "பெருமழுகுப் . . . . வல்லார் யார்?" எனவும் பெண்நின்ற தன்மையை மலருக்கு உருவகப்படுத்திக் குறிப்பால் காட்டும் நிலையிலிருந்து வேறுபடாத மாற்று வடிவங்களின் மூலம் பெறுமொழிவடிவத்தை அமைத்துள்ளார்.

7. மொழிநடை

மலையாளத்திலிருந்து தமிழில் கவிதைகளை நடைமாற்றம் செய்து மொழிபெயர்த்துள்ள பகுதிகளும் உள்ளன. இதற்குக் காரணமாக மோனை, எதுகை, இயைபு போன்ற தொடை நயங்களைப் பெறுமொழிவடிவத்தில் ஏற்படுத்த முயற்சித்தல், நேரடி இணைகள் இன்மையாலும், நயந்தோன்றச் சொல்வதற்காகவும் மாற்றிணைகளைத் தேர்வுசெய்தல் போன்றவற்றைக்குறிப்பிடலாம். நடைமாற்றத்தை அதன் போக்குத்தன்மைகளை அடிப்படையாகக் கொண்டு 1. விரிவாக்கியிருத்தல், 2. செறிவாக்கியிருத்தல்,

3. மாற்றிணைகளைப்பயன்படுத்தியிருத்தல் என வகைப்படுத்தி விளக்கலாம்.

1. விரிவாக்கியிருத்தல்

மூலவடிவத்தைவிடவும் மொழிபெயர்ப்பின் நடையமைப்பை விரிவாக அமைத்து பெருமொழிவடிவத்தை உருவாக்குவது விரிவாக்கமாகும். சான்றாக, கருணையில் இடம்பெற்றுள்ள

"கொண்டல் வேணீ மணியவள் குதூகமார்ந்நொரு மலர்ச்
செண்டொரு கரவல்லியால் சுழற்றிடுந்நு
(கார் மேகம்போல் இருண்ட கூந்தலை உடையவள் குதூகலத்துடன் மலர்ச்
செண்டொன்றைக்கரவல்லியால் சுழற்றுகின்றாள்)"

(குமாரனாசான், 1990:24)

என்ற பாடல் நதோன்நதை யாப்பில் அமைந்தது. இதில் இரண்டடிகளிலுமாக மொத்தம் 29 எழுத்துக்கள் இடம் பெற்றுள்ளன. இதை இராமகோபிநாதன்

"கொண்டலை நிகர்த்த குழலாள் அவள் மனம் உவகை
கொண்டிளம் கொடியலைந்து பாயும் - பசுந்
தண்டு நிகர் கையில் மலர்ச்செண்டினை ஒய்யாரமொடு
தாங்கியவரும்பாங்கில் சுழல்விப்பாள்"

(இராமகோபிநாதன், 1990:89)

எனக்கண்ணியமைப்பில் விரிவாக மொழிபெயர்த்துள்ளார். இங்கு "கொண்டல் வேணீ மணியவள்" என்பதை "கொண்டலை நிகர்த்த குழலாள்" எனவும், "குதூகமார்ந்நு" என்பதை "அவள்மனம் உவகை கொண்டிளம் கொடியலைந்து பாயும்" எனவும் "மலர்ச் செண்டொரு கரவல்லியால்" என்பதை "பசுந்தண்டு நிகர் கையில் மலர்ச்செண்டினை" எனவும் "சுழற்றிடுந்நு" என்பதை "ஒய்யாரமொடு தாங்கிவரும் பாங்கில் சுழல்விப்பாள்" எனவும் மூலவடிவத்தை விரிவாக மாற்றியமைத்துள்ளார்.

"அநுபமக்ருபா நிதியகில பாந்தவன் சாக்ய
ஜினதேவன் தர்ம்மரஉந்மி சொரியும் நாளில்
(உவமையில் கருணைக்கடலாய் அகில உலகின் உறவினனாய் சாக்ய
குலந்தனில் உதித்த இறைவன் அருட்கதிர்சொரியும் நாளில்)"

(குமாரனாசான், 1990:23)

கருணையில் இடம் பெற்றுள்ள இச்செய்யுளை இராமகோபிநாதன்

"ஒப்புவமை சொல்லொணா தயாநிதி உலகெலாம் தன்
உற்ற உற(வு) எனும் புத்ததேவன் – அவன்
இப்புவிக்(கு) அருள் அறத்தின் இன்னளியாம் தன்னொளியை
எங்கணும் பரப்பிவந்த காலம் – தனில்"

(இராமகோபிநாதன், 1990:47)

என மொழிபெயர்த்துள்ளார்.

இதில் "அநுபமக்ருபா நிதி" என்பதை "ஒப்புவமை சொல்லொண்ணா தயாநிதி" எனவும் "அகிலபாந்தவன் சாக்ய ஜினதேவன்" என்பதை "உலகெலாம் தன் உற்ற உற(வு) எனும் புத்ததேவன்" எனவும் "தர்ம்ம ரஉந்மி சொரியும் நாளில்" என்பதை "அவன் இப்புவிக்(கு) அருள் அறத்தின் இன்னளியாம் தன்னொளியைஎங்கணும் பரப்பிவந்த காலம்தனில்" எனவும் மூலவடிவத்தில் கருத்தை அடிப்படையாகக்கொண்டு அதன் நடையமைப்பை விரிவாக்கியுள்ளார்.

மலையாளத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள செய்யுள்கள் பெரும்பாலும் தருமொழி வடிவத்தின் கருத்தை அடிப்படையாகக்கொண்டு நடையமைப்பில் மாற்றம் செய்யப்பட்டவை ஆகும். ஆனால் குறிப்பிட்ட செய்யுள் ஒன்றை விரிவாக்குவது அல்லது செறிவாக்குவதென்பது மொழிபெயர்ப்பாளரின் விருப்பத்தைப் பொறுத்ததாக உள்ளது. சான்றாக,

"க்ருத்யங்ஙள் காலந்தவறாதே - அவள்
ப்றத்யம் செய்யும் மாழ்காதெ
(கடமைகளில் காலந்தவறாமல் - அவள்
தினமும் செய்வள் வருந்தாமல்)"

(குமாரனாசான், 1988:50)

என்ற சண்டாலபிக்சுகியில் உள்ள செய்யுளை இராமகோபிநாதன்

"காலம் ஒருதரம் தானும் தவறாள்
கடமைகள் செய்வதிலே - அவள்
சாலச்சிறந்தவள் ஆர்வத்தில் வேலைகள்
சட்டெனச் செய்திடுவாள்"

(இராமகோபிநாதன், 1990:67)

என விரிவாக மொழிபெயர்த்துள்ளார். இம்மொழிபெயர்ப்பு தருமொழிவடிவத்தின் கருத்துக்கள் விட்டுப்போகாமல் மாற்றிணைகளைப் பயன்படுத்தி செய்யப்பட்டதாகும். இதில் "க்ருத்யங்ஙள் காலந்தவறாதே" என்பதை "காலம் ஒருதரம் தானும் தவறாள் கடமைகள் செய்வதிலே" எனவும், "அவள் ப்றத்யம் செய்யும் மாழ்காதெ" என்பதை "அவள் சாலச்சிறந்தவள் ஆர்வத்தில் வேலைகள் சட்டெனச் செய்திடுவாள்" எனவும் விரிவாக்கம் செய்துள்ளார். மேற்குறிப்பிட்டுள்ள செய்யுளை நெல்லை சு. முத்து

"நித்தியம் செய்கடன் யாவும் - அவள்
சத்திய நெஞ்சுடன் செய்வாள்"

(நெல்லை சு. முத்து, 1992:31)

என மொழிபெயர்த்துள்ளார். இதுவும் மூலவடிவத்தில் கருத்துகள் எதுவும் விட்டுப்போகாமல் மாற்றிணைகளைப் பயன்படுத்தி செய்யப்பட்டதாகும். இதில் "க்ருத்யங்ஙள் காலந்தவறாதே" என்பதை "நித்தியம் செய்கடன்யாவும்" எனவும் "அவள் ப்றத்யம் செய்யும் மாழ்காதெ" என்பதை "அவள் சத்திய நெஞ்சுடன் செய்வாள்" எனவும் மொழிமாற்றியுள்ளார். இங்கு வடிவநிலையில் இராமகோபி நாதனின் மொழிபெயர்ப்பு விரிவானதாகவும், நெல்லை சு. முத்துவின் மொழிபெயர்ப்பு மூலத்தை ஒத்துச்செல்வதாகவும் உள்ளன.

2. செறிவாக்கியிருத்தல்

தருமொழிவடிவத்தைவிடவும் பெறுமொழிவடிவத்தில் நடையமைப்பைச் சுருக்கமாக அமைத்தல் நடைச்செறிவாக்கமாகும். இதற்குச் சான்றாக சச்சிதானந்தனின்

"மலையடிவாரம் முழுவன் இவன்றெ குதிரவண்டியுடெ
குடலின்னடியிலெவிடெயோ நிந்நு முளய்க்குந்ந
ஜலதரம்கத்தின்றெ சப்தம் படர்ந்நு கயறுந்ந
(மலையடிவாரம் முழுவதும் இவனுடைய குதிரைவண்டியின்
குடலின்கீழ் எங்கேயோ இருந்து தோன்றுகின்ற
நீரலைகளின் ஓசை பரந்து செல்கிறது)"

(சச்சிதானந்தன், 1988:289)

என்ற வரிகளை சுகுமாரன்

"இவனுடைய குதிரை வண்டியின் கீழிருந்து
மலையடிவாரம் முழுவதும்
ஜலதரங்க இசை பரவுகிறது"

(சுகுமாரன், 1990:61)

என மொழிபெயர்த்துள்ளமையைக் குறிப்பிடலாம். இங்கு "இவன்றே

குதிரவண்டியுடெ குடலின்டியிலெவிடெயோ நிந்நு முளய்க்குந்ந" என்பதை "இவனுடைய குதிரைவண்டியின் கீழிருந்து" எனவும், "ஜலதரங்கத்தின்றெ சப்தம் படர்ந்து கயருந்து" என்பதை "ஜலதரங்க இசை பரவுகிறது" எனவும் செறிவாக்கியுள்ளார். சிந்தாவிஷ்டயாய சீதயிலுள்ள

"கிரிநிர்த்தரசாந்திகானம்
த்தரியில் கேட்டு சயிக்குமங்ஙுஞான்
அரிகில் தருகுல்மலஞ்சயம்
சொரியும் பூநிர நித்யமென்றமேல்
(மலையிலிருந்து ஒழுகும் அருவிதரும் அமைதியின் இசையைக்
குகையில் கேட்டு வாழ்வேன் அங்கு நான்
அருகில் மரஞ்செடி கொடிகள்
சொரியும் மலர்கள் தினமும் என்மேல்)"

(குமாரனாசான், 1989:54)

இச்செய்யுளை இராமகோபிநாதன்,

"அருவி மலையில் பாடிப்பாயும்
அமைதிக் கீதம் இழையக் கேட்கத்
தருவும் கொடிமென் மலர்கள் தூவத்
தலியே துயில்வேன் தரையுட் கருவாய்"

(இராமகோபிநாதன், 1990:43)

என மொழிபெயர்த்துள்ளார். இதில் "அரிகில் தருகுல்மலஞ்சயம் சொரியும் பூநிர நித்யமென்றமேல்" என்பதை "தருவும் கொடிமென் மலர்கள் தூவ" எனச் சுருக்கி மொழிமாற்றியுள்ளார். இங்கு "நித்யமென்ற மேல்" என்ற பொருட் கூறு முற்றிலும் நீக்கப்பட்டுள்ளது.

மலையாளத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள கவிதை நூல்களில் நடைச்செறிவாக்கப்பட்ட பகுதிகள் குறைவாகவே உள்ளன.

3. மாற்றிணைகளைப் பயன்படுத்தியிருத்தல்

தருமொழி வடிவத்தைச் சொல்லுக்குச்சொல் நேரடி இணைகளால் அப்படியே மொழிபெயர்க்காமல் மாற்றுச் சொற்களைப்பயன்படுத்தி மொழி பெயர்த்தலை இவ்வகையில் அடக்கலாம். சான்றாக, கருணையில் உள்ள

1" காலம் பின்னெயும் கழிஞ்ஞு கதகள் நிறஞ்ஞுமாஸம்
நாலுபோயி நபஸ்ஸில் காறொழியாறாயி
(காலம் பிறகும் கடந்தது, கதைகள் நிறைந்தமாதம்
நான்கு சென்றன. வானில் மேகமும் தீர்ந்தது)"

2"பாலபூத்து பரிமளம் சுமந்நு சுத்தமாம் புலர்
காலவாயு குளிர்த்தெங்ஙும் சரிக்கயாயி
(பாலைபூத்தது நல்வாசனையைச்சுமந்தது தூயகாலை
நேரக்காற்று குளிர்ந்து எங்கும் பரவியது)"

(குமாரனாசான், 1990:29)

என்ற செய்யுள்களை இராமகோபிநாதன்

1. "காலம் சில கடந்தது - கதைகள் நிறைந்த மாதம்
நா(லு) அங்கவை நடந்தன - வானில் முகில்பெயர"

2. "பாலை முகை அவிழ்ந்தது - வாசம் படர் கமழ
காலும் இறைகுளிர்ந்தது - வீசிற்(று) அயல் மெல்லவே"

(இராமகோபிநாதன், 1990:94)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இங்கு "காலம் பின்னெயும் கழிஞ்ஞு" என்பதை "காலம் சில கடந்தது" எனவும், "கதகள் நிறஞ்ஞுமாஸம் நாலுபோயி" என்பதை "கதைகள் நிறைமாதம் நா(லு) அங்கவை நடந்தன" எனவும், "நபஸ்ஸில் காறொழியாறாயி" என்பதை "வானில் முகில் பெயர" எனவும், "பாலபூத்து" என்பதை "பாலை முகை அவிழ்ந்தது" எனவும், "பரிமளம் சுமந்நு சுத்தமாம் புலர்காலவாயு" என்பதை "வாசம் படர்கமழ காலும்" எனவும், "குளிர்த்தெந்நலும் சரிக்கயாயி" என்பதை "இறை குளிர்ந்தது வீசிற்(று) அயல் மெல்லவே" எனவும் மாற்றிணைகளைப் பயன்படுத்தியுள்ளார்.

1. "ஸமயமாயில்லபோலும் ஸமயமாயில்ல போலும்
க்ஷமயென்றெ க்ஹுதயத்திலொழிஞ்ஞு தோழி
(நேரமாகவில்லைபோலும் நேரமாகவில்லைபோலும்
பொறுமையென் இதயத்தினின்று ஒழிந்தது தோழி)"

2. "காடு சொல்லுந்நதா மென்னெக் கபளிப்பிக்குவான் கையி
லோடு மேந்தி நடக்கும்புல்பல வாணன்
(பொருளின்றி ஏதாவது சொல்லி என்னை ஏமாற்ற கையில்
ஓடுமேந்தி நடக்கிறான் இந்த காமதேவன்)"

(குமாரனாசான், 1990:25)

கருணையில் இடம்பெற்றுள்ள இச்செய்யுளை இராமகோபிநாதன்

"காலம் வரவில்லை இன்னும் காலம் வரவில்லை யாமே
கருத்தழிந்தேன் என் நெஞ்சு பொறுக்கலையேடி தோழி
கோலமலர் ஐங்கணையின் மாரன் திரு ஓடும் ஏந்தி
குறும்புசெய்(து) ஏமாற்றிடவே நடந்தனவோ?"

(இராமகோபிநாதன், 1990:90)

என மொழிபெயர்த்துள்ளார். இதில்"ஸமயமாயில்லபோலும் ஸமயமாயில்ல போலும்" என்பதை "காலம் வரவில்லை இன்னும் காலம் வரவில்லை யாமே" எனவும், "க்ஊஷம யென்றெக்குதயத்தி லொழிஞ்ஞு தோழி" என்பதை "கருத்தழிந்தேன் என்நெஞ்சு பொறுக்கலையேடி தோழி" எனவும், "காடு சொல்லுந்நதா மென்னைக் கபளிப்பிக்குவான்" என்பதை "குறும்பு செய்(து) ஏமாற்றிடவே" எனவும் "கையிலோடு மேந்தி நடக்குமீயுல்பலவாணன்" என்பதை "கோலமலர் ஐங்கணையின் மாரன் திருவோடு ஏந்தி..... நடந்தனனோ?" எனவும் மொழிமாற்றியுள்ளார்.

8. அடிக்குறிப்புகள்

கவிதைகளில் காணப்படும் பெயர்கள் மற்றும் சிறப்புச்சொற்களை மொழிமாற்றுவதிலுள்ள சிக்கல்களைக் கருத்தில் கொண்டு, தருமொழிவடிவத்தின் செய்திகளைப் பெறுமொழி வாசகர்கள் புரிந்துகொள்வதற்காக மொழிபெயர்ப் பாளர்கள் அடிக்குறிப்புகளைப் பயன்படுத்தியுள்ளனர். மலையாளத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட கவிதைகளில் காணப்படும் அடிக்குறிப்புகளை 1. பெயர் விளக்கம் தருவன, 2. பொருள்விளக்கம் தருவன, 3. கருத்து விளக்கம் தருவன, 4. ஒத்த கருத்துக்களைக் குறிப்பன என வகைப்படுத்தி விளக்கலாம்.

1. பெயர்விளக்கம் தருவன

தருமொழிவடிவத்தில் காணப்படும் பெயர்கள் பற்றியக் குறிப்புகளைப் பெறுமொழிவாசகர்களுக்கு அறிமுகப்படுத்தும் நோக்கில் அமைக்கப்பட்டுள்ள அடிக்குறிப்புகளை இவ்வகையில் அடக்கலாம். சான்றாக,

"சோத்யம் சோதிச்சவர் விசாரண காத்து கழியுந்நு
அப்போழும் போற்றியுடெ கோடதியிலெ டெ
புலயனு நீதிகிட்டுமெந்நு நிங்ஙள் கருதுந்நு
(கேள்விகேட்டவர்கள் விசாரணைக்காகக் காத்துநிற்கின்றனர்
அப்போதும் போற்றியின் நீதிமன்றத்தின் வழியாக
புலையனுக்கு நீதி கிடைக்குமென்று நீங்கள் நம்புகிறீர்கள்)"

(சச்சிதாலந்தன், 1988:360)

என்பதைச் சூரியதீபன்

கேள்விகேட்டவர்கள் விசாரணைக்குக் காத்திருக்கிறார்கள்
அப்போதும்
போற்றியின் நீதிமன்றத்தின் மூலம்
புலையனுக்கு நீதிகிடைக்குமென்று நம்புகிறீர்கள் நீங்கள்"

(சூரியதீபன், 1990:24)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இங்கு 'போற்றி' என்ற சொல்லுக்கு, "நெருக்கடி நிலைகாலத்தில் கேரளத்துப்பொறியியல் கல்லூரி மாணவர் இராஜன் போலீஸ்காரர்களால் சித்தரவதை செய்யப்பட்டு கொலைசெய்யப்பட்டார். வழக்கில்போலீஸ்காரர்களை விடுதலைசெய்த நீதிபதியின் பெயர் 'போற்றி' (சூரியதீபன், 1990:25)" என அடிக்குறிப்பிட்டுள்ளார்.

2. பொருள் விளக்கம் தருவன

பெறுமொழி வடிவத்தில் காணப்படும் கடின சொற்களுக்கு அடிக் குறிப்பில் பொருள் தந்துள்ளமையை இவ்வகையில் அடக்கலாம். சான்றாக

"வைராக்ய மேறியோரு வைதிகனாட்டெயேற்ற
வைரிக்கு முன்புழறியோடிய பீருவாட்டெ
நேரே விடர்ந்நு விலஸீடின நின்னெ நோக்கி
யாராகிலெந்து மிழியுள்ளவர் நிந்நிரிக்காம்

(உலக சுகங்களில் வெறுப்புற்ற துறவியாகட்டும் நேரிட்டெதிர்க்கும்
எதிரியின் முன் அலறியோடிய கோழையாகட்டும்
எழிலாய் மலர்ந்து ஒளிவீசும் உன்னைப்பார்க்கும்
யாராகிலென்ன கண்ணுள்ளவர் நின்றிருப்பர்)"

(குமாரனாசான், 1990 அ:18)

வீணபூவில் உள்ள இச்செய்யுளை இளங்கம்பன்

"உலகை வெறுத்தவரும்
உயிர்பறிக்கும் பகைக்கஞ்சிப்
பலங்கொண்டே விரைபவரும்
பாவாய் உன் பேரழகை
உளங்கொள்ளாமல் பிரிதல்
உலகில் அரிதன்றோ
இளமலரே! உன்னிடத்தில்
எழில்மயக்கம் கொள்ளார்யார்"

(இளங்கம்பன், 1978:12)

என மொழிபெயர்த்துள்ளார். இங்கு மொழிபெயர்ப்பில் காணப்படும் 'உலகை வெறுத்தவரும்' என்பதற்கு 'துறவிகள்' எனவும், 'பலங்கொண்டே விரைபவரும்' என்பதற்கு "உயிர்பிழைத்தால் போதும் என்று ஓடுகின்ற வேளையிலும்" எனவும் (இளங்கம்பன், 1978:12) அடிக்குறிப்பிட்டுள்ளார்.

3. கருத்துவிளக்கம் தருவன

தருமொழிவடிவத்தை அப்படியே ஒலிபெயர்ப்பு செய்தோ, சொற்பெயர்ப்பு செய்தோ பெறுமொழிவடிவத்தை அமைத்துவிட்டு அதன் கருத்தை அடிக்குறிப்பில் தந்துள்ளமையை இவ்வகையில் சேர்க்கலாம். சான்றாக,

"சாட்டவாறடியேற்ற ஒரு முதுகு

நம்முடெ முன்னில் மலயாயி நில்க்குந்நு

சூழ்ந் நெடுக்கப்பட்ட ரண்டு கண்ணுகள்

இந்நும் நம்மெ நீர்க்கஉழிக்குந்நு

(சாட்டைவாறால் அடிபட்ட ஒரு முதுகு

நம்முன்னில் மலையாக நிற்கிறது

குத்தியெடுக்கப்பட்ட இரண்டு கண்கள்

இன்றும் நம்மை உற்று நோக்குகிறது)"

(சச்சிதானந்தன், 1988:361)

என்பதை சூரியதீபன்

"சாட்டையடிபட்ட ஒரு முதுகு

நம்முன்னே மலையாக நிற்கிறது

தோண்டி எடுக்கப்பட்ட இரண்டு கண்கள்

இன்றும் நம்மை உற்றுப்பார்க்கின்றன.

(சூரியதீபன், 1990:25)

என மொழிபெயர்த்துள்ளார். இங்கு "சாட்டையடிபட்ட ஒரு முதுகு" என்பதற்கு "நெருக்கடிநிலையின் போது சித்திரவதைக்குள்ளாகி கொல்லப்பட்ட இராசன் போன்றோர்" எனவும் "தோண்டி எடுக்கப்பட்ட இரண்டு கண்கள்" என்பதற்கு "வயநாட்டில் போராட்டத்தின்போது தோண்டியெடுக்கப்பட்ட வர்க்கீஸின் கண்கள்" எனவும் (சூரியதீபன், 1990:25) அடிக்குறிப்பிட்டுள்ளார்.

4. ஒத்த கருத்துக்களைக் குறிப்பன

தருமொழிவடிவத்தை மொழிபெயர்த்துவிட்டு அதற்கு இணையான கருத்துக்கள் பெறுமொழியில் உள்ள வேறு நூல்களில் காணப்படின் அவற்றை அடிக்குறிப்பாகத் தந்துள்ளமையை இவ்வகையில் அடக்கலாம். சான்றாக

"நல்லவாக்குள்ளப்போள் சீத்தவாக்கோதுந்நோன்
நல்லொரு விட்டியானல்லோ
(நல்ல சொற்கள் உள்ளபோது தீயசொற்களைப் பேசுவோன்
பெரிய ஒருமடயன் அல்லவா)"
(குஞ்ஞுண்ணி, 1989:181)

என்பதை ஆனந்தகுமார்

"நல்ல வார்த்தைகளுள்ளபோது தீயவார்த்தை கூறுவோன்
நல்ல ஒரு மூடனல்லவா"
(ஆனந்தகுமார், 1990:87)

என மொழிபெயர்த்துவிட்டு "இனிய உளவாக இன்னாத கூறல் கனியிருப்பக் காய்கவர்ந்தற்று" (குறள். 100) என்ற குறட்பாவை (ஆனந்தகுமார், 1990:87) அடிக்குறிப்பில் தந்துள்ளமையைக் குறிப்பிடலாம்.

9. குறைகள்

மலையாளத்திலிருந்து தமிழில் கவிதைகளை அவற்றின் கருத்தின் அடிப்படையில் பெரும்பாலும் சமமான இணைகளால் மொழிமாற்றியுள்ளனர். ஆனால் ஒருசில விடங்களில் மட்டும் மொழிபெயர்ப்பு மூலவடிவத்திலிருந்து மாறுபட்டுச்செல்வதாகவும் உள்ளது. இவற்றை 1. கருத்துக்களை மிகுதியாகச் சேர்த்திருத்தல், 2. கருத்துக்களை நீக்கியிருத்தல், 3. தவறுபட மொழி பெயர்த்திருத்தல் என வகைப்படுத்திவிளக்கலாம்.

1. கருத்துக்களை மிகுதியாகச் சேர்த்திருத்தல்

தருமொழி வடிவத்தில் காணப்படுவதைவிடவும் செய்திகளை மிகுதியாகச் சேர்த்து மொழிபெயர்ப்பை அமைத்துள்ளமையை இவ்வகையில் அடக்கலாம். சான்றுகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1 "ஆனந்த நிர்வ்வாணம் செய்யும் - காம
தேனுவாம் த்யானம் க்ஷீறவிச்சு
(மகிழ்ச்சியாம் விண்ணக இன்பம் தரும் - காம
தேனுவாம் தியானம் செய்தாள்)"
"நிர்ம்மல சீலராகும் - அன்ய
தர்ம்மபக்ஷிணிமாரொப்பம்
(மழுவில் பங்பினள் ஆனாள் - பிற
புத்த பிக்சுகி மாரோடு)"

(குமாரனாசான், 1988:50)

சண்டால பிக்சுகியின் நான்காவது பகுதியில், மாதங்கி புத்தமடத்தில் தங்கியிருந்த நிலைமையைக் காட்டுமாறு அமைந்துள்ள இக்கண்ணிகளை இராமகோபி நாதன்

"தன்னைமறக்கும் ஆனந்தம் - அதில்
தழையும் நிர்வாணத்துப் பேறு
காட்ட வழிசெய்யும் தியானம் - அது
கேட்டது ஈயும் காமதேனு
இன்ன நிலைகளில் உய்க்கும் - படி
சொன்ன வழிகள் பயின்றாள்
தூய்மை நெறிப்படுவாராம் - அந்தச்
சோதரிமார் அன்பில் தோய்ந்து"

(இராமகோபிநாதன், 1990:67

என மொழிபெயர்த்துள்ளார். இங்கு தருமொழிவடிவத்தில் உள்ளதை விடவும் "காட்டவழிசெய்யும்.............. காமதேனு", "இன்ன நிலைகளில் ....பயின்றாள்" என்ற இரண்டு கண்ணிகளை மிகுதி யாகச் சேர்த்துள்ளார்.

2 "அழகோடந்நகரத்தின் தெக்கு கிழக்கதுவழி

ஒழுகும் யமுனதன்றெ புளினம் காண்மு

(அழகுடன் அந்நகரத்தின் தென்கிழக்குவழி

பாயும் யமுனையின் மணல்திட்டுகளைக் காண்மின்"

"இளமஞ்ஞ வெயில் தட்டி நிறமாறி நீலவிண்ணில்

விளங்ஙுந்ந வெண்முகிலின் நிரகணக்கே

(இளமஞ்சள் வெயில்பட்டு நிறமாறி நீலவிண்ணில்

விளங்குகின்ற வெண்முகிலின் வரிசைபோல)"

(குமாரனாசான், 1990:29)

கருணையில் இடம்பெற்றுள்ள இக்கண்ணிகளை இராமகோபிநாதன்

"ஆறொன்றும் இருந்தது - அயல்பாய் எழில்யமுனை

ஊர் என்பதை வளைத்தது - ஓடிற்று தென்கீழ்பால்

பாரோர் தமை அழைத்தது - பாரீர் எனல்போல

ஏரார்ந்திலை செழுமென்(று) - எழிற்சேர்குளிர்சோலை

மஞ்சள் தகதகத்தது - வானில் வெயில் தாழ

எஞ்சும் இடநீலத்(து) - இயல்பின் நிறம் நீங்கி

மஞ்சின்குவைபடர்ந்து - வானில் எனுமாபோல்

கொஞ்சம் தொலை உளதோ - கூறப்புகின் வேறாம்"

(இராமகோபிநாதன், 1990:95)

என மொழிபெயர்த்துள்ளார். இதில் "ஆறொன்றும் இருந்தது", "ஊர் என்பதை வளைத்தது", "பாரோர்.........செழுமென்று", "மஞ்சின்குவை....... வேறாம்" ஆகிய பகுதிகளை தருமொழிவடிவத்தில் உள்ளதைவிடவும் மிகுதியாகச் சேர்த்துள்ளார்.

2. கருத்துக்களை நீக்கியிருத்தல்

தருமொழிவடிவத்தில் காணப்படும் செய்திகள் சிலவற்றை நீக்கிவிட்டு பெறுமொழிவடிவத்தை அமைத்தலை இவ்வகையில் அடக்கலாம். சான்றாக,

"உல்பன்னமாயது நசிக்கும் அணுக்கள் நில்க்கும்
உல்பன்னமாமுடல் வெடிஞ்ஞொரு தேகி வீண்டும்
உல்பத்தி கர்ம்மகதிபோலெ வரும் ஜகத்தில்
கல்பிச்சிடுந்நிவிடெயிங்ஙனெ யாகமங்ஙள்
(பிறந்தது அழியும் அணுக்கள் நிலைநிற்கும்
பிறந்த உடலைவிட்டு ஆன்மா மீண்டும்
பிறக்கும் அது செய்வினைக்கேற்ப அமையும் உலகில்
கற்பிக்கிறது இங்கே இப்படி வேத ஆகமங்கள்)"

(குமாரனாசான், 1990 அ:22)

என வீணபூவில் இடம்பெற்றுவரும் இச்செய்யுளை இளங்கம்பன்

"பிறந்தவைகள் இறப்பதுதான்
பேசுமிந்தப் புவிவாழ்வில்
மறந்திடவே முடியாத
மாறியதி நற்கருமச்
சிறப்புக்குத் தக்கவண்ணம்
செப்பும்பின் பிறப்புண்டாம்
அறமுணர்த்தும் அரும்மறைகள்
அறைவதுவும் இதைத்தானே"

(இளங்கம்பன், 1978:26)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதில் "அணுக்கள் நில்க்கும் (அணுக்கள் நிலைநிற்கும்)" என தருமொழி வடிவத்தில் காணப்படும் உயிர்ச்சுழற்சிக் கொள்கை பற்றியக் குறிப்பை மொழிபெயர்ப்பாளர் நீக்கியுள்ளார். மேலும் "உல்பன்னமாமுடல்......வரும்" என்பதை "மறந்திடவே ...... பிறப்புண்டாம்" என மொழிபெயர்த்துள்ளார். இங்கு "பிறந்த உடலைவிட்டு ஆன்மா மீண்டும் பிறக்கும்" என்ற செய்தியை நீக்கிவிட்டு "செய்வினைக் கேற்ப பிறப்பமையும்" என்ற கருத்தைப் புகுத்தியுள்ளார்.

3. தவறுபட மொழிபெயர்த்திருத்தல்

தருமொழிவடிவத்தின் கருத்தைச் சரிவர புரிந்துகொள்ளாமல் தவறுபடும்படியாக மொழிபெயர்த்துள்ளமையை இவ்வகையில் அடக்கலாம். சான்றாக

"வரிக மரணத்தின்றெ
மூடாவுராகமே
புணர்ந்திடுக நின் புஜ
புஜாம்க வலயங்ஙளால்
(வருக மரணத்தின்
மூடாவுராகமே
அணைத்திடு நின் புஜ
பாம்புச் சுருள்களால்)"

(ஐயப்பப்பணிக்கர், 1990:30-31)

என சாவுபூஜையில் இடம்பெற்றுள்ள இவ்வரிகளை நீலபத்மநாபன்

"மரணத்தின்

மூடாநுராகமே

வருக

உன்புஜ அங்க வளையங்களால்

அள்ளி அணைத்திடு"

(நீலபத்மநாபன், 1985:30)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இங்கு "புஜ-புஜாம்க வலயங்ஙள்" என்பதில் 'புஜ' என்ற சொல் தோள் அல்லது கையையும் 'புஜாம்கம்' என்பது பாம்பையும் குறிக்கும். இதை "புஜ அங்க வளையங்கள்" என 'புஜ' என்ற சொல்லை நீக்கியும் "புஜாம்கம்" என்பதை 'புஜ', 'அங்கம்' எனப்பிரித்தும் தருமொழிவடிவத்தில் புஜத்தைப் பாம்புச்சுருள்களுக்கு உருவகப் படுத்திச் சொல்லியுள்ள கருத்தைத் திரித்துப்பிழைபட மொழிபெயர்த்துள்ளார். ஆனால் "புணர்ந்திடுக" என்ற சொல்லை "அள்ளி அணைத்திடுக" என மொழி பெயர்த்திருப்பது சிறப்பாக உள்ளது.

தொகுப்புரை

1. மலையாளத்திலிருந்து தமிழில் மரபுக்கவிதை, கட்டற்றகவிதை, நாட்டுப்புறப்பாடல்கள், பக்திப்பாடல்கள் போன்ற வகைகளைச்சார்ந்த கவிதை இலக்கியங்கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இவற்றின் மொழிபெயர்ப் பின் தன்மைகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. மரபுக்கவிதைகளுக்கு இராம கோபிநாதன், துறைவன், ஜனார்த்தனம், இளங்கம்பன், எஸ்.பி. சபாரத்னம் ஆகியவர்கள் செய்துள்ள மொழிபெயர்ப்புகள் மூலத்தின் வடிவமைப்பிலிருந்து பெரும்பான்மையும் மாறுபட்டு பெறுமொழிக்கேற்ற வகையில் அமைந்துள்ளன. ஆனால் நெல்லை சு. முத்துவின் மொழிபெயர்ப்பு வடிவ நிலையில்மாற்றமின்றி தருமொழிவடிவத்தை பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது. கட்டற்ற கவிதைகள், நாட்டுப்புறப்பாடல்கள், பக்திப்பாடல்கள் ஆகியவைவற்றின்

மொழிபெயர்ப்புகள் மூலவடிவத்திற்குச் சமமானதாக உள்ளன. இவற்றில் பக்திப்பாடல்களின் மொழிபெயர்ப்பில் தருமொழிவடிவத்தின் இசையமைப்பை அப்படியே பெறுமொழிவடிவத்தில் கொண்டுவந்துள்ளனர். இதற்காக சொல்லமைப்பில் சில தகுமாற்றங்களைச் செய்துள்ளனர்.

2. மரபுக்கவிதைகளின் மொழிபெயர்ப்புகளை அவற்றின் யாப்பை நீக்கிப் பெறுமொழியாப்பைப் புகுத்தியும், தருமொழிக்கும் பெறுமொழிக்கும் சமமான யாப்பைப் பயன்படுத்தியும், தருமொழியாப்பை அப்படியே தமிழில் கொணர்ந்தும் செய்துள்ளனர்.

3. கவிதைகளின் தொடையமைப்பை அப்படியே மூலவடிவத்தில் உள்ளதைப் போன்றும், மாற்றிணைகளைப் பயன்படுத்தியும் மொழிபெயர்த்துள்ளனர். மேலும் தருமொழிவடிவத்தின் தொடைகளை நீக்கியும் தருமொழிவடிவத்தில் தொடைகளின்றி காணப்படும் பகுதிகளில் புதிதாகத் தொடைகளைச் சேர்த்தும் பெறுமொழி வடிவத்தை அமைத்துள்ளனர்.

4. தருமொழிக்கவிதைகளில் காணப்படும் அணிகளை மொழிபெயர்ப்பதற்காக அவற்றின் வகையை மாற்றியிருத்தல், தொகை வடிவங்களை விரிவாக்கியிருத்தல் போன்ற உத்திகளுடன் அணிகளை நீக்கியிருத்தல், புதிதாக அணிகளைச் சேர்த்திருத்தல் போன்ற தகுமாற்றங்களைப் பெறுமொழிவடிவத்தில் செய்துள்ளனர்.

5. தருமொழிவடிவத்திலுள்ள குறிப்புப் பொருள்களைப் பெறுமொழிவடிவத்தில் கொண்டு வருவதற்காக கருத்துவிளக்க நடையைப்பயன்படுத்தியிருத்தல், மாற்றுவடிவங்களைப்பயன்படுத்தியிருத்தல் ஆகிய உத்திகளை மேற்கொண்டுள்ளனர்.

6. மூலக்கவிதைகளின் மொழிநடையிலிருந்து பெறுமொழிவடிவத்தின் மொழி நடையை விரிவாக்கம், செறிவாக்கம், மாற்றிணைப்பயன்பாடு ஆகிய முறைகளின் மூலம் மாற்றியமைத்துள்ளனர்.

7, தருமொழிவடிவத்தின் கருத்துக்களை விளக்குவதற்காக மொழி பெயர்ப்பாளர்கள் பயன்படுத்தியுள்ள அடிக்குறிப்புகள் பெயர்விளக்கம் தருதல், பொருள்விளக்கம் தருதல், கருத்துவிளக்கம் தருதல், ஒத்த கருத்துக்களைக் குறித்தல் போன்ற தன்மைகளைப் பெற்றனவாக உள்ளன.

8. கவிதை மொழி பெயர்ப்புகளில் கருத்துக்களை மிகுதியாகச்சேர்த்திருத்தல், கருத்துக்களை நீக்கியிருத்தல், தவறுபட மொழிபெயர்த்திருத்தல், போன்ற குறைகளும் காணப்படுகின்றன.

2. மலையாளத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள கவிதைகள் பற்றிய மதிப்பீட்டிலிருந்து பின்வருவனவற்றைத் தெரிந்துகொள்ளலாம்.

1. கவிதைமொழிபெயர்ப்பாளருக்கு இருமொழியறிவு, மொழிபெயர்ப்பு முறைகுறித்த கல்வி, கவிதைத்துறையில் ஈடுபாடு (மொழிபெயர்ப்பாளன் கவிஞனாக இருப்பது விரும்பத்தக்கது) போன்றவற்றோடு யாப்பு, இசை ஆகியவை பற்றிய பயிற்சியும் இன்றியமையாததாகிறது.

2. இசைப்பாடல்களின் மொழிபெயர்ப்பில் தருமொழி இசையை பெறுமொழிவடிவத்திலும் கொண்டுவருவதுபோல மரபுக்கவிதைகளை மொழிபெயர்க்கும்போது தருமொழிவடிவத்தின் யாப்பு அல்லது சந்தத்தை பெறுமொழிவடிவத்திலும் மாற்றியமைத்தால் மூலத்திற்குச்சமான மொழிபெயர்ப்பை உருவாக்கமுடியும்.

3. கவிதை மொழிபெயர்ப்பைச் சொல்லுக்குச் சொல் அப்படியே செய்யாமலும் அதன் மொத்த கருத்திலிருந்து விலகாமலும் (மரபுக்கவிதையாயின் யாப்பு அல்லது சந்தத்தை அடியொற்றிச்) செய்வது சிறப்பு.

4. மொழிபெயர்ப்பாளர்கள் சொல்லையும் பொருளையும் மட்டுமன்றிக் கவிதையின் யாப்பையும் கூர்ந்து நோக்கி மொழிபெயர்த்தால் கவிதை மொழி பெயர்ப்புகள் இன்னும் சிறப்படையும்.

3. மலையாளத்திலிருந்து தமிழுக்குக் கவிதை மொழிபெயர்ப்பு செய்வது பற்றியப் பரிந்துரைகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. மலையாளத்தில் இராமசரிதம், கண்ணச ராமாயணம், சந்தேசகாவியங்கள் போன்ற பல நூல்கள் காணப்படுகின்றன. இவை எதுவும் தமிழில் மொழி பெயர்க்கப்படவில்லை (அய்யிபிள்ளை ஆசானின் இராம கதைப்பாட்டிலிருந்து 21 செய்யுள்கள் நீங்கலாக). இவற்றில் மிகுதியும் மொழிநிலையில் மலையாள எழுத்துக்களாலான தமிழ் நூல்கள் போன்று காணப்படுகின்றன. எனவே இவற்றை தமிழில் மொழிபெயர்ப்பதற்காக ஒலிபெயர்ப்பு செய்து ஒரு சில கடின சொற்களுக்கு மட்டும் உரையெழுதும் முறையை மேற்கொள்ளலாம்.

2. மலையாளத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டவைற்றில் காலத்தால் பழமையானதாக குமாரனாசான், வள்ளத்தோள் போன்றவர்களுடைய கவிதைகள் மட்டுமே காணப்படுகின்றன. ஏனைய மொழிபெயர்ப்புகள் அனைத்தும் சமகாலத்தை மையமிட்டனவாகும். இவையும் பரவலாகச்செய்யப்படவில்லை. எனவே தொடக்ககாலம் முதல் தற்காலம் வரையிலான கவிதைகள் பலவற்றை மேலும் மொழிபெயர்ப்பு செய்வதின் மூலம் தமிழ்க்கவிதை வளர்ச்சிக்கு உதவமுடியும்.

3. மொழிபெயர்ப்பாளர்கள் சொற்பொருள் அளவில் மட்டும் நில்லாது யாப்பு, நடை, சந்தக்கூறுகள் பற்றிய கூர்த்த அறிவோடும் மொழிபெயர்ப்பைச் செய்யவேண்டும். அதற்கேற்ற வகையில் மொழிபெயர்ப்பாளர் தருமொழி பெறுமொழி ஆகிய இருமொழி அறிவோடு யாப்பு, நடை பற்றிய பயிற்சியும் பெற்றிருத்தல் விரும்பத்தக்கது.

இயல் - ஐந்து

புனைகதை மொழிபெயர்ப்புகள்

5. புனைகதை மொழிபெயர்ப்புகள்

0. நாவல், சிறுகதை, நாடகம் போன்ற புனைகதை இலக்கியங்கள் கற்பனைக் கதை அல்லது நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு அமைவதால் அவற்றை மொழிபெயர்ப்பதென்பது கவிதைகளை ஒப்பிட்டு நோக்க எளிய ஒன்றாகும். இருப்பினும் பேச்சுமொழி, கதைப்பொருளை விவரிக்கும் முறை போன்றவற்றில் ஒவ்வொரு மொழியும் சில தனித்தன்மைகளைப் பெற்றுள்ளன. எனவே மொழிபெயர்ப்பாளர்கள் தருமொழி வடிவத்தின் நடையமைப்பில் மாற்றங்களைச் செய்து பெறுமொழி வடிவத்தை அமைக்கின்றனர். இவ்வியல் மலையாளத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள புனைகதைகளையும் அவற்றின் மொழிபெயர்ப்பின் தன்மைகளையும் 1. வகைப்பாடு, 2. மதிப்பீடு, 3. பேச்சுமொழி, 4. குறிப்புப்பொருள், 5. மொழிநடை, 6. அடிக்குறிப்புகள், 7. குறைகள் என வகைப்படுத்தி விளக்குவதாக அமைகின்றது.

1. வகைப்பாடு

1. புனைகதைகளின் மொழிபெயர்ப்புகளை நாவல், சிறுகதை, நாடகம் போன்ற இலக்கிய வகைகளின் அடிப்படையில் வகைப்படுத்தி விளக்கலாம்.

1. நாவல்

மலையாளத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டவாக சுமார் நாற்பது நாவல்கள் இங்கு தொகுக்கப்பட்டுள்ளன. அவற்றில் சந்து மேனோனின் (1889) இந்துலேகாவுடைய மொழிபெயர்ப்பு 1908இல் விவேகபோதினி என்ற இதழில் தொடர்கதையாக வெளிவந்தது. தொடர்ந்து சி.வி. ராமன்பிள்ளையின் (1891) மார்த்தாண்டவர்மாவை ஓ. கிருஉந்ணபிள்ளை (1934) மொழிபெயர்த்துள்ளார். இது திருவனந்தபுரத்திலுள்ள கமலாலயா அச்சகத்திலிருந்து வெளியிடப்பட்டுள்ளது. சமூகநாவல் எழுத்தாளரான பி. கேசவதேவின் 'ஓடயில் நிந்நு' என்ற நாவலை ஆர். இராமநாதன் (1954) 'வாழ்க்கைப்போர்' என்ற தலைப்பில் மொழிபெயர்த்துள்ளார். இதனைத் தமிழ் புத்தகாலயம்

வெளியிட்டுள்ளது. மலையாளத்தின் முதல் நாவலான சந்துமேனோனின் இந்து லேகாவிற்கு கா. அப்பாத்துரை (1956) செய்துள்ள மொழிபெயர்ப்பு மலர்நிலைய வெளியீடாக வந்துள்ளது (இது இந்நாவலுக்கு செய்யப்பட்டுள்ள இரண்டாவது மொழிபெயர்ப்பாகும்). டி.என். கோபிநாதனின் 'பூக்காரி' என்ற நாவலை மு. வேங்கடசாமி (1956) தமிழ்ப்படுத்தியுள்ளார். இது பாரி நிலைய வெளியீடாகக் காணப்படுகிறது. பி.ஸி. குட்டிகிருஷ்ணனின் (உறுபு) 'குஞ்ஞம்மையும் கூட்டுகாரும்' என்ற நாவலை கே.ஸி. சங்கரநாராயணன் (1956) 'வெறும் மனிதன்' என்ற தலைப்பில் மொழிபெயர்த்துள்ளார். மேலும் வைக்கம் முகமது பஷீரின் 'என்டுப்புப்பாய்க் கோரானயுண்டாயிருந்து' என்ற நாவலை கே.ஸி. சங்கரநாராயணன் (1959) 'எங்கள் தாத்தாவுக்கு ஒரு யானை இருந்தது' என்ற தலைப்பில் மொழிபெயர்த்துள்ளார். இவ்விரு நாவல்களையும் கலைமகள் காரியாலயம் பதிப்பித்து வெளியிட்டுள்ளது. வி.மாதவன் நாயரின் 'சர்க்கஸ்' என்ற நாவலை 'மிருகங்கள் நடத்தும் சர்க்கஸ்' என எம்.பி. சுப்பிரமணியம் (1960) மொழிபெயர்த்துள்ளார். இது மீனாட்சி புத்தகநிலைய வெளியீடாகும், ஸ்ரீதரன் (1961) என்பவர் எஸ்.கே. நாயரின் 'ஐயப்பன்' என்ற நாவலை மொழிபெயர்த்துள்ளார். இது பாரிநிலையத்திலிருந்து வெளிவந்துள்ளது. தகழி சிவசங்கரப்பிள்ளையின் (1956) செம்மீனை சுந்தரராமசாமி, (1962) மொழிபெயர்த்துள்ளார். இது சாகித்திய அக்காடமியின் வெளியீடாகத் திகழ்கின்றது. பாறப்புறத்து என்பவரின் 'நிணமணிஞ்ஞ கால்ப்பாடுகள்' என்ற நாவலைக் குயிலன் (1963) 'ரத்தக்கறைபடிந்த அடிச் சுவடுகள்' என மொழிபெயர்த்துள்ளார். இதனை நர்மதா பதிப்பகம் இரண்டாம் பதிப்பாக (1988) வெளியிட்டுள்ளது. தகழிசிவசங்கரப்பிள்ளையின் (1948) ரண்டிடங்ஙழியை டி. ராமலிங்கம் (1964) 'இரண்டுபடி' என மொழிபெயர்த்துள்ளார். இதனையும் சாகித்ய அக்காடமி வெள்யிட்டுள்ளது.

வைக்கம் முகமது பஷீரின் (1944) 'பால்யகாலசகி' என்ற நாவலை புஷ்பவேணிகோவி (1964) 'இளம்பருவத்துத் தோழி' என மொழிபெயர்த்துள்ளார். இதனை சென்னையிலுள்ள கலைஞன் பதிப்பகம் வெளியிட்டுள்ளது. கேசவதேவின் 'ஓடயில் நிந்நு' என்ற நாவலுக்கு ஹேமா ஆனந்ததீர்த்தன் (1964) செய்துள்ள மொழிபெயர்ப்பு 'சாக்கடையிலிருந்து' என்ற தலைப்பில் உள்ளது. இதனையும் கலைஞன் பதிப்பகம் வெளியிட்டுள்ளது (இது இந்நாவலுக்குச் செய்யப்பட்டுள்ள இரண்டாவது மொழிபெயர்ப்பாகும்). சி.ஏ. பாலன் (1966) கே. பத்மநாபன்நாயரின் 'குஞ்ஞாலிமரக்கார்' என்ற நாவலை மொழிபெயர்த்துள்ளார். இது குயிலன் பதிப்பகத்திலிருந்து வெளிவந்துள்ளது. பி. கேசவதேவின் 'அயல்க்கார்' என்ற நாவலை கே.வி. சங்கரநாராயணன் (1967) 'அண்டைவீட்டார்' என்ற தலைப்பில் மொழிபெயர்த்துள்ளார். இது வாசகர் வட்டத்தின் வெளியீடாகக் காணப்படுகிறது. மங்கையர்க்கரசி (1967) நரேந்திரநாத் என்பவரின் கள்ளன் ராமுவைச் 'சுட்டிராமன்' என தமிழாக்கியுள்ளார். இது பழனியப்பா பிரதர்சின் வெளியீடாகத் திகழ்கிறது. ஆசி (1967) என்பவர் பாறப்புறத்துவின் தேன்வரிக்காவை 'தேன்பலா' என்ற தலைப்பில் மொழிபெயர்த்துள்ளார். இதனைக்குயிலன் பதிப்பகம் வெளியிட்டுள்ளது. சி.ஏ. பாலன் (1967) என்பவரின் மொழிபெயர்ப்பாக எம்.டி. வாசுதேவன் நாயரின் மஞ்ஞு (பனிமேகம்), நாலு கெட்டு (வாழ்வு தந்த செல்வன்) ஆகிய நாவல்கள் காணப்படுகின்றன. இவற்றில் பனிமேகத்தை பாரிபுத்தகப் பண்ணையும், வாழ்வுதந்த செல்வனை மல்லிகைப்பதிப்பகமும் வெளியிட்டுள்ளன. தொடர்ந்து சி.ஏ. பாலன் (1968) திக்கோடியானின் மஞ்ஞுத்துள்ளியைப் 'பனித்துளி' என்ற தலைப்பிலும், கேசவதேவின் நாவல்களில் ப்ராந்தாலயத்தை 'பைத்தியக்கார உலகம்' என்றும், 'ஞான்' என்பதை 'நான்' (1969)

என்றும் மொழிபெயர்த்துள்ளார். இவற்றில் பனித்துளி இளங்கோ பதிப்பகத்திலிருந்தும் பைத்தியக்கார உலகம், நான் ஆகியவை கலைஞன் பதிப்பகத்திலிருந்தும் வெளிவந்துள்ளன. மு. வேங்கடசாமி (1970) என்பவர் ஜோசப் முண்டசேரியின் ப்றபெஸர் (1948) என்ற நாவலைப் 'பேராசிரியர்' என மொழிபெயர்த்துள்ளார். இதை சாகித்ய அக்காடமி வெளியிட்டுள்ளது.

சி.ஏ. பாலன் (1972) உண்ணிக்கிருஷ்ணன் புத்தூரின் 'பலிக்கல்' (1968) என்ற நாவலை 'நூ பூக்கள் மலரும்' என மொழிபெயர்த்துள்ளார். இதனைக் கலைஞன் பதிப்பகம் வெளியிட்டுள்ளது. வைக்கம் முகமது பஷீரின் பாத்தும்மாயுடெ ஆடு, பால்யகால சகி (1944) ஆகிய இரண்டு நாவல்களை சி.எஸ். விஜயம் (1973) என்பவர் மொழிபெயர்த்துள்ளார். இவற்றை நேஷனல் புக் டிரஸ்ட் "பாத்தும்மாவுடைய ஆடும் இளம்பருவத்துத்தோழியும்" என்ற தலைப்பில் ஒரு தொகுப்பு நூலாக வெளியிட்டுள்ளது (இதில் பால்யகாலசகிக்கு சி.எஸ். விஜயம் செய்துள்ள மொழிபெயர்ப்பான 'இளம்பருவத்தோழி' இரண்டாவது பெயர்ப்பாக உள்ளது). பி.ஸி. குட்டி கிருஷ்ணனின் 'சுந்நரிகளும் சுந்நரன்மார்களும்' (சுந்தரிகளும் சுந்தரன்மார்களும்) என்ற நாவலை ரா. சௌரிராஜன் (1974) தமிழ்ப்படுத்தியுள்ளார். இதனை சாகித்திய அக்காடமி வெளியிட்டுள்ளது. கேசவதேவின் 'கண்ணாடி' என்ற நாவலைப் பாலகிருஷ்ணமேனோன் (1975) என்பவரும், பாறப்புறத்தின் (1967) அரநாழிகநேரம் (அரை நாழிகை நேரம்) என்ற நாவலை கே. நாராயணன் (1975) என்பவரும், தகழியின் 'ஏணிப்படிகள் (ஏணிப்படிகள்)' என்ற நாவலை சி.ஏ, பாலன் (1976) என்பவரும் மொழிபெயர்த்துள்ளனர். இவை மூன்றும் நேஷனல் புக் டிரஸ்டின் வெளியீடாக வந்துள்ளன.

சி.ஏ. பாலன் (1978) கேசவதேவின் நாவல்களான நடி (நடிகை), ஒரு சுந்தரியுடெ ஆத்மகத (ஓர் அழகியின் சுயசரிதை) ஆகியவைகளை மொழிபெயர்த்துள்ளார். இவற்றில் நடிகை கலைஞன் பதிப்பகத்திலிருந்தும், ஓர் அழகியின்

சுயசரிதை பூம்புகார் பிரசுரத்திலிருந்தும் வெளிவந்துள்ளன. வெட்டூர்ராமன் நாயரின் 'பாமாவின் டயரி' என்ற நாவலை சி.ஏ. பாலன் மொழிபெயர்த்துள்ளார். இது மஞ்சரியில் (மே, ஜூன், 1979) தொடர்கதையாக வெளிவந்துள்ளது. வைக்கம் முகமது பஷீரின் (1965) 'மதிலுகள்' என்ற நாவலை 'மதில்கள்' என்ற தலைப்பில் சுரா என்பவர் மொழிபெயர்த்துள்ளார். இது மஞ்சரி (ஜனவரி 1980) இதழில் வெளிவந்துள்ளது. மேலும் சுரா என்பவரின் மொழிபெயர்ப்புகளாக பஷீரின் ஜீவித நிழல்பாடுகள் (நிழல்கள்) என்ற நாவலும், (மஞ்சரி, செப். 1981) என். கிருஷ்ணன் நாயரின் தீர்ப்பு (மஞ்சரி, அக். நவம். 1981) என்ற நாவலும் உள்ளன. மலயாற்றூர் இராமகிருஷ்ணனின் நாவல்களில் அஞ்சுசென்ட் (1969) என்பதை 'ஐந்து சென்ட் நிலம்' என்ற தலைப்பிலும் 'சல்லிவேர்கள்' என்பதை 'வேர்கள்' என்ற தலைப்பிலும் குறிஞ்சிவேலன் (1982) மொழிபெயர்த்துள்ளார். இவற்றில் ஐந்து சென்ட் நிலத்தை ஸ்ரீ அர்ச்சனா பதிப்பகம் வெளியிட்டுள்ளது. 'வேர்கள்' தீபம் இதழில் தொடராக வெளிவந்துள்ளது. பஷீரின் (1943) 'ப்ரேமலேகனம்' என்ற நாவலை சுரா 'அதேகடிதம்' என்ற தலைப்பில் மொழிபெயர்த்துள்ளார். இது மஞ்சரி (ஜூலை, 1983) இதழில் வெளிவந்துள்ளது. மணவை முஸ்தபா (1985) என்பவர் எம்.டி. வாசுதேவன் நாயரின் 'காலம்' என்ற நாவலை மொழிபெயர்த்துள்ளார். இது சாகித்திய அக்காடமியின் வெளியீடாக உள்ளது. நீலபத்மநாபனின் (1985) மொழிபெயர்ப்பாக பஷீரின் (1965) 'மதிலுகள்' வெளிவந்துள்ளது (இது இந்நாவலுக்குச் செய்யப்பட்டுள்ள இரண்டாவது மொழிபெயர்ப்பாகும்). இப்பெயர்ப்பு தற்கால மலையாள இலக்கியம் என்ற தொகுப்பில் இடம்பெற்றுள்ளது. தம்பிசெல் என்பவரின் மொழிபெயர்ப்புகளாக இராஜன் சின்னங்கத்தின் 'அக்கரை இக்கரை, சாராதாமணியின் அஸ்தமனம் (அவள் மெள்ள மறைந்தாள்) ஆகிய நாவல்கள் உள்ளன. இவை இரண்டும் சிமி பதிப்பகத்திலிருந்து (1988) வெளிவந்துள்ளன.

2. சிறுகதை

மலையாளத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள சிறுகதைகள் தனியான தொகுப்புக்களிலும், பிறமொழிக்கதைகள் மற்றும் பிற இலக்கியவகைகள் அடங்கிய தொகுப்புக்களிலும், இதழ்களிலுமாக வெளிவந்துள்ளன.

1. மலையாளச்சிறுகதைகளை மட்டும் கொண்ட தொகுப்புக்கள்

மலையாளச் சிறுகதைகளின் மொழிபெயர்ப்புகள் மட்டும் அடங்கிய தொகுப்புகளில் சௌரி(1957) என்பவரின் பெயர்ப்பாக 'சங்கமம்' என்ற நூல் உள்ளது. இது தேனருவிப் பதிப்பகத்தின் வெளியீடாகும். காரூர் நீல நீலகண்டபிள்ளையின் சம்மானத்தை ஆ. மாதவன் (1968) 'பரிசு' என மொழிபெயர்த்துள்ளார். இதனை சிறுவர் இலக்கியமன்றம் வெளியிட்டுள்ளது. ஆசி (1970) என்பவரின் மொழிபெயர்ப்பாக 'சிரஞ்சீவிகள்' என்ற நூல் உள்ளது. இதனை அறிவுச்சுடர் நிலையம் வெளியிட்டுள்ளது. 'மலையாளச் சிறுகதைகள்' என்ற தொகுப்புநூலின் மொழிபெயர்ப்பாளர் புஷ்பவேணிகோவி (1971) ஆவார். இது சாகித்திய அக்காடமியின் வெளியீடாக உள்ளது. நேஷனல் புக் டிரஸ்டின் வெளியீடாக 'கதாபாரதி மலையாளச் சிறுகதைகள்' என்ற தொகுப்புநூல் உள்ளது. இதை கே. நாராயணன் (1973) மொழி பெயர்த்துள்ளார். 'மரக்குதிரை' என்ற தொகுப்பை இளம்பாரதி (1974) என்பவர் மொழிபெயர்த்துள்ளார். இது அன்னம் (சிவகங்கை) வெளியீடாக உள்ளது. 'சமீபத்திய மலையாளச் சிறுகதைகள்' என்ற தொகுப்பை நேஷனல் புக் டிரஸ்ட் வெளியிட்டுள்ளது. இதனை ம. இராஜாராம் (1980) என்பவர் தமிழாக்கியுள்ளார்.

2. பிறமொழிக்கதைகள் அடங்கிய தொகுப்புக்களில் இடம்பெற்றவை

பிறமொழிக் கதைகளின் தொகுப்புக்களிலும், பிற இலக்கிய வகைகள் அடங்கிய தொகுப்புக்களிலும் மலையாளச் சிறுகதைகளின் தமிழ்ப் பெயர்ப்புகள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் தாமோதரனின் சிறுகதை ஒன் றிற்கு சு. குருசாமி (1946) 'திருடனின் கடிதம்' என்ற தலைப்பில் செய்துள்ள மொழிபெயர்ப்பு அருணோதய நிலையத்தின் வெளியீடான 'இந்தியச் சிறுகதைகள்' என்ற நூலில் இடம் பெற்றுள்ளது. ல.சி. என்பவரின் மொழி பெயர்ப்பாக காரூர் நீலகண்டபிள்ளையின் 'அசுந்தலும் அம்புலியும்' என்ற சிறுகதையும், கே.ஏ. சங்கரநாராயணனின் மொழிபெயர்ப்பாக எம்.டி. வாசுதேவன் நாயரின் 'இருட்டின் உள்ளம்' என்ற சிறுகதையும் வாசகர்வட்டத் தின் வெளியீடான 'மறுகதைகள்' (1967) என்ற தொகுப்பில் இடம்பெற்றுள் ளன. மா. தக்ஷிணாமூர்த்தி (1968) என்பவர் விஜயன் காரோட்டின் 'பஞ்சலோகம்' என்ற சிறுகதையை மொழிபெயர்த்துள்ளார். இது 'குருக்ஷேத்திரம்' என்ற தொகுப்புநூலில் (தமிழ்ப் புத்தகாலய வெளியீடு) இடம்பெற்றுள்ளது. நீலபத்மநாபனின் (1985) மொழிபெயர்ப்பான 'தற் கால மலையாள இலக்கியம்' என்ற நூலில் தகழியின் 'கேள்விக்குறிகள்' (முரசொலி, 28.12.1956), காரூரின் 'பூவம்பழம்' (தீபம், செப். 1967), எஸ்.கே. பொற்றக்காடின் இந்ததர்மம் (முத்தாரம், நவ.1956), பொன்குந்நம் வர்க்கியின் 'ஏரின் ஓசை' (கதிர், ஏப்.1966) நாகவள்ளி ஆர்.எஸ். குறுப்புவின் 'அன்னம் ஊட்டல்' (சாந்தி, அக்.1955), ஜோசப் முண்டசேரியின் 'அந்தக்கண்ணீர்' (முத்தாரம், செப்.1957), லலிதாம்பிகா அந்தர்ஜனத்தின் 'சர்க்கரை முத்தம்' (தாமரை, மார்ச்.1966), டி. பத்மநாபனின் 'கறுத்த குழந்தை' (அக், ஜூலை, 1972), மாதவிக் குட்டியின் 'பக்ஷியின் மணம் (எழுத்து, மார்ச், 1967) என்ற ஒன்பது சிறு கதைகளின் மொழிபெயர்ப்புகள் காணப்படுகின்றன. இந்திரன் (1986)

என்பவரின் மொழிபெயர்ப்பாக 'காற்றுக்குத் திசையில்லை' என்ற நூலில் பஷீரின் 'ஒரு மனிதன்' என்ற சிறுகதை இடம் பெற்றுள்ளது (இக்கதை அக்.1987இல் மஞ்சரி இதழிலும் வெளிவந்துள்ளது). கேரளத்தமிழ் மொழி பெயர்ப்புச் சிறப்புமலரில் (1992) கோ. முருகேசனின் மொழிபெயர்ப்பாக சங்கர்கரியம் என்பவரின் 'நாராயணன் வாத்தியார்' என்ற சிறுகதையும், டி. தேவதாஸ், சி. நாச்சிமுத்து ஆகியவர்களின் மொழிபெயர்ப்பாக காரூரின் 'மோதிரம்' என்ற சிறுகதையும் ஆ. மாதவனின் மொழிபெயர்ப்பாக மாதவிக்குட்டியின் 'தேனிலவு' என்ற சிறுகதையும், பி. மதனின் மொழிபெயர்ப்பாக எம்.டி. வாசுதேவன் நாயரின் 'மரணம்' என்ற சிறுகதையும் இடம் பெற்றுள்ளன.

3. இதழ்களில் வெளிவந்தவை

சிறுகதை மொழிபெயர்ப்புகள் மிகுதியும் இதழ்களில் வெளிவந்துள்ளன. அவற்றில் மோகன சந்திரனின் மொழிபெயர்ப்பாக வி.வி. பாலகிருஷ்ணனின் "அக்கினி ஜுவாலைகளே நட்சத்திரங்களை நடுங்கச்செய்யுங்கள்' (செம்மலர், ஏப்.1974:61-67) என்பதும், வி.எச்.எஸ். சாஸ்திரியின் மொழிபெயர்ப்புகளாக ஐ.கே.கே.எம். என்பவரின் 'யார் செய்த குற்றம்' (மஞ்சரி, மார்ச், 1976:83-88), சஜி பெனும் மூட்டில் என்பவரின் 'பெண்பார்த்தோம்' (மஞ்சரி, செப்.1976: 50-55), லதா என்பவரின் 'கணவன்' (மஞ்சரி, ஜூலை, 1977:5-8), ஸாராஜோசப் என்பவரின் 'கொடுத்து வைத்தது' (மஞ்சரி, அக். 1977: 19-25), ஜே.எஸ். மாராமன் என்பவரின் 'மந்திரமோதிரம்' (மஞ்சரி, ஜூலை, 1978:21-25), சுப்பையாபிள்ளை என்பவரின் 'நாகரிக அன்பு' (மஞ்சரி, செப்.1988: 81-86), கே.பி.என். என்பவரின் 'குறைந்த விலைக்கு' (மஞ்சரி, அக்.1978:57-61), ஜோசப் என்பவரின் 'எழுந்தவேளை' (மஞ்சரி, ஜூன் 1979:25-28), பி. மாதவமேனோனின் 'உச்சி வேளைக்கு நிழல்' (மஞ்சரி,ஜூலை,1979:29-32)

ஆகியவைகளும், சுரா என்பவரின் மொழிபெயர்ப்புகளாக எழுவந்தலை உண்ணிகிருஷ்ணனின் 'கீறல்கள்' (மஞ்சரி, டிச.1979:35-39), ஏகலவ்யன் என்பவரின் 'கவர்னர் வந்தார்' (மஞ்சரி, மே.1980:33-39) ஆகியவை களும், வி.எச்.எஸ். சாஸ்திரியின், மொழிபெயர்ப்பாக ஸ்ரீகௌதமன் என்பவ ரின் 'எல்லைமரம்' (மஞ்சரி, நவ.1980; 50-56) என்பதுவும், உறரி என்பவரின் மொழிபெயர்ப்பாக வேளூர் கிருஷ்ணன்குட்டியின் 'கடிதங்கள்' (மஞ்சரி, டிச.1981:35-39) என்பதுவும், சுரா என்பவரின் மொழிபெயர்ப் பாக கேசவதேவின் 'அன்னக்குட்டி (தாமரை, சன. 1982:4-14) என்ப தவும், குருமூர்த்தி என்பவரின் மொழிபெயர்ப்புகளாக காரூரின் 'சோற்றுமூட்டை' (மஞ்சரி, ஏப்.1982:73-78), ராமகிருஷ்ணன் பாலாடு என்பவரின் 'மனிதப்பண்பு' (மஞ்சரி, ஜூன் 1982:27-31) ஆகியவைகளும், சுரா என்பவரின் மொழிபெயர்ப்பாக கோபிக்குட்டனின் 'கடைசி இரவு' (மஞ்சரி, ஆக.1982:47-60) என்பதுவும், எம். குருமூர்த்தியின் மொழிபெயர்ப்பாக எஸ்.கே. பொற்றக்காடின் 'ஏழிலைப்பாலை' (மஞ்சரி, செப்.1982:17-24) என்பதுவும், வி. கிருஷ்ணமூர்த்தி என்பவரின் மொழிபெயர்ப்பாக உறபீப் வலப் பாடு என்பவரின் 'அந்தமரம்' (மஞ்சரி, அக்.1982:47-52) என்பதுவும், எம். குருமூர்த்தியின் மொழிபெயர்ப்புகளாக எஸ்.கே. பொற்றக்காடின் 'வேட்டைக்காரர்' (மஞ்சரி, நவ.1982:17-24), 'அடகுப்பொருள்' (மஞ்சரி, ஆக.1983:17-23) ஆகியவைகளும், இளம்பாரதியின் மொழிபெயர்ப் பாக பி.கேசவதேவின் 'இன்பச்சிறை' (மஞ்சரி, ஆக.1984: 17-28), பிரகாஷ் என்பவரின் மொழிபெயர்ப்பாக தகழியின் 'சுடேற்றம்' (குங்குமச்சிமிழ், 1-4-1987: 63-72), கரீம்காக்காவின் மொழிபெயர்ப்பாக குஞ்ஞிராம குறுப்புவின் 'ரிஸ்ட்வாட்ச்' (மஞ்சரி, நவ.1987:33-48), ஜெயமோகனின் மொழிபெயர்ப்புகளாக டி.பத்மநாபனின் 'அமைதியின்மை ஆகிய பூச்செடிகள்' (மஞ்சரி, ஜூன்,1988: 33-38), ஸக்கரியாவின் 'தேடிப்போகவேண்டியதில்லை' (மஞ்சரி, அக்.1989:17-23) ஆகியவைகளும், சுதாவின் மொழிபெயர்ப்பாக

பி. கேசவதேவின் 'வருங்காலக் கணவர்' (நிலாமுற்றம், அக்.1990:13-14), சங்கீதாவின் மொழிபெயர்ப்பாக நாகவள்ளி ஆர்.எஸ். குறுப்புவின் 'கல்யாணமாலை' (நிலாமுற்றம், டிச.1990:5-6), எஸ். செல்வராஜின் மொழிபெயர்ப்பில் சுஜா ஜெயிம்சின் 'தூரத்தில் ஒலிக்கும் மணியோசை' (நிலாமுற்றம், ஜன, 1991:13-15), எஸ். ராமகிருஷ்ணனின், மொழி பெயர்ப்பாக பஷீரின் 'யானைரோமம்' (சுபமங்களா, மார்ச்.1992: 46-56) என்பவைகளும் குறிப்பிடத்தக்கன (மேலும் இதழ்களின் வாயிலாக வந்துள்ளவைாக பல மொழிபெயர்ப்புகள் உள்ளன. அவை அனைத்தும் இங்கு தொகுத்துச்சொல்லப்படவில்லை).

3. நாடகம்

மலையாளத்திலிருந்து தமிழில் முழுநீள நாடகங்களின் மொழிபெயர்ப்புகள் தனிநூல்களாகவும், ஓரங்க நாடகங்களின் மொழிபெயர்ப்புகள் தொகுப்பாகவும், மற்றும் இதழ்களின் வாயிலாகவும் வெளிவந்துள்ளன. மேலும் அச்சேறாத நிலையிலும் சில நாடகங்கள் உள்ளன.

1. தனிநூல்களாக வெளிவந்தவை

மலையாளத்தில் முதுகுளம் ராகவன்பிள்ளையின் 'மனுஷ்யன்' என்ற நாடகத்தின் கதையைத் தழுவி பா. ஆதிமூலம், நா. சோமசுந்தரம் (1963) ஆகிய இருவரும் 'மனிதன்' என்ற நாடகத்தை எழுதியுள்ளனர். இதனை இன்பநிலையம் (சென்னை) வெளியிட்டுள்ளது. இடசேரி கோவிந்தன் நாயரின் 'கூட்டுக்றுஷி' என்ற நாடகத்தை ரா. சௌரிராஜன்(1964) 'கூட்டுப்பண்ணை' என்ற தலைப்பில் மொழிபெயர்த்துள்ளார். இதனை சாகித்திய அக்காடமி வெளியிட்டுள்ளது.

2. தொகுப்பாக வெளிவந்தவை

பா. ஆதிமூலம் (1959) என்பவர் குற்றிபுழா கிருஷ்ணபிள்ளையின் தொகுப்பில் இடம்பெற்றுள்ள அடிமை (செறுகாடு), கட்டுகள் அல்லது பந்தங்கள் (எஸ். இராமகிருஷ்ணன்), என்றாலும் தீரவில்லை வாடகைப் பாக்கி (உறுபு), பேஷானதிருமணம் (இடசேரி கோவிந்தன் நாயர்), சொப்பன மேகலை (டி.என்.), சாலோமி (வி.ஜெ. தோமஸ்), தாஜ்மகால் (மலயாற்றூர் இராமகிருஷ்ணன்), ஏகாதசிமகாத்மியம் (திருக்கோடியான்) என்ற எட்டு நாடகங்களையும் மொழிபெயர்த்து 'அடிமை' என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளார். இது ஔவை நூலக வெளியீடாக வந்துள்ளது.

3. இதழ்களில் வெளிவந்தவை

ஜி. சங்கரப்பிள்ளையின் (1981) 'குகை' என்ற ஓரங்க நாடகத்தை சுகுமாரன் மொழிபெயர்த்துள்ளார். இது 'வெளி' (நவம். டிசம்.1990) என்ற நாடக இதழில் பிரசுரமாகியுள்ளது. ப.ப. தம்பி (1992) என்பவர் என். கிருஷ்ணபிள்ளையின் (1953) 'மூத்தாங்ஙள' எனற ஓரங்க நாடகத்தை 'பெரியண்ணா' என்ற தலைப்பில் மொழிபெயர்த்துள்ளார். இது கேரளத்தமிழ் மொழிபெயர்ப்புச் சிறப்பு மலரில் வெளிவந்துள்ளது.

4. அச்சுவடிவம் பெறாமல் மேடையில்மட்டும் நடிக்கப்பட்டவை

அச்சில் வராத நாடகங்களாக ப.ப. தம்பியின் மொழிபெயர்ப்பில் சி.வி. ராமன்பிள்ளையின் மார்த்தாண்ட வர்மாவையும் (இது சி.வி. ராமன் பிள்ளை தன்னுடைய 'மார்த்தாண்டவர்மா' என்ற நாவலைத் தழுவி எழுதியதாகும்), சே. இராமனுஜத்தின் மொழிபெயர்ப்பில் ஜி. சங்கரப்பிள்ளையின் 'தங்கக்கு டத்தையும் (இதை 9.3.1990 இல் நிஜநாடக இயக்கத்தினர் நடித்துக்காட் டியுள்ளனர்) குறிப்பிடலாம்.

4. வசனகவிதை அமைப்பிலான புனைகதைகள்

மலையாளத்திலிருந்து தமிழில் மொழிபெயர்ப்பாகியுள்ள வசனகவிதை அமைப்பிலான புனைகதை நூலாக நித்யசைதன்யயதியின் 'மனுஷ்ய புத்ரனாய யேசு' உள்ளது. இதனை எஸ். மணி (1991) 'மானுடமைந்தன் இயேசு' என்ற தலைப்பில் மொழிபெயர்த்துள்ளார். இது நாராயண குருகுலத்தின் (குன்னூர்) வெளியீடாக வந்துள்ளது.

2. மலையாளத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள புனைகதை இலக்கியங்களாக நாவல்கள் நாற்பதும், சிறுகதைத்தொகுப்புக்கள் ஏழும், முழுநீள நாடகங்கள் இரண்டும், ஓரங்க நாடகங்களின் தொகுப்பு ஒன்றும் உள்ளன. எஞ்சிய அனைத்து சிறுகதைகளும், ஓரங்க நாடகங்களும் பிற இலக்கியவகைகள் அடங்கிய தொகுப்புகளிலும் இதழ்களிலுமாகக் காணப்படுகின்றன. இவற்றில் இந்துலேகா (1908-இல் விவேகபோதினியில் வந்த மொழிபெயர்ப்பு, மற்றும் கா. அப்பாத்துரை செய்துள்ள மொழிபெயர்ப்பு), ஓடயில் நிந்து (ஆர். இராமநாதன், ஹேமா ஆனந்ததீர்த்தன்), பால்யகாலசகி (புஷ்பவேணிகோவி, சி.எஸ். விஜயம்), மதிலுகள் (சுரா, நீலபத்மநாபன்) ஆகிய நாவல்கள் இருவேறு மொழிபெயர்ப்புகளைப் பெற்றுள்ளன. மேலும் எஸ்.கே. பொற்றெக்காடின் 'ஒட்டகம்' என்ற சிறுகதையை சௌரி என்பவரும் (இது சங்கமம் என்ற தொகுப்பில் உள்ளது) புஷ்பவேணிகோவி என்பவரும் (இது மலையாளச் சிறுகதைகள் என்ற தொகுப்பில் காணப்படுகிறது) மொழிபெயர்த்துள்ளனர்.

இம்மொழிபெயர்ப்புகளின் வாயிலாக சந்துமேனோன், சி.வி.ராமன்பிள்ளை, பி. கேசவதேவ், டி.என். கோபிநாதன், பி.சி. குட்டிகிருஷ்ணன் (உறூபு), வைக்கம் முகமது பஷீர், வி. மாதவன்நாயர், எஸ்.கே. நாயர், தகழி, பாறப்புறத்து, கே. பத்மநாபன்நாயர், நரேந்திரநாத், எம்.டி.வாசுதேவன்நாயர், திக்கோடியான், ஜோசப் முண்டசேரி, உண்ணிக்கிருஷ்ணன் புதூர், வெட்டூர் ராமன்நாயர், மலயாற்றூர் ராமகிருஷ்ணன், இராஜன் சின்னங்கத்,

சாராதாமஸ் ஆகியவர்களின் நாவல்களும், எஸ்.கே. பொற்றக்காடு, காரூர் நீலகண்டபிள்ளை, எம்.டி. வாசுதேவன் நாயர், சந்திரகாந்தப்பக்ஷி, முட்டத்து வர்க்கி, நாடன், கெ. சுகுமாரன், அம்பாடி நாராயணப்பொதுவாள், ஈ.வி. கிருஷ்ணபிள்ளை, எஸ். ராமவாரியார், பி. கேசவதேவ், தகழி, பஷீர், லலிதாம்பிகா அந்தர்ஜனம், பொன்குந்நம் வர்க்கி, பி.ஸி. குட்டிகிருஷ்ணன், நாகவள்ளி ஆர்.எஸ். குறுப்பு, கெ. சரஸ்வதி அம்மா, என்.பி. செல்லப்பன் நாயர், புளிமான பரமேசுவரன்பிள்ளை, வெட்டூர் ராமன்நாயர், போஞ்ஞிக்கர ராபி, ஜி.என். பணிக்கர், துளஸி, நந்தனார், டாட்டாபுரம் சுகுமாரன், ஜி. விவேகானந்தன், கே.எல். மோகனவர்மா, லலிதாபிரபா, எம்.முகுந்தன், என்.பி. முகமது, பட்டத்துவிள கருணாகரன், கோவிலன், என். மோகனன், எம். கோவிந்தன், ஐயதேவன், காக்கநாடன், ஓ.வி. விஜயன், எம்.பி. நாராயணபிள்ளை, புனத்தில் குஞ்ஞப்துல்லா, ஸேது, ஸக்கரியா, எம். சுகுமாரன், பி. பத்மராஜன், இ. ஹரிகுமார், அசமன்னூர் ஹரி ஹரன், தாமோதரன், விஜயன் காரோட்டு, ஜோசப் முண்டசேரி, டி. பத்மநாபன், மாதவிக்குட்டி, சங்கர்காரியம், வி.வி. பாலகிருஷ்ணன், ஐ.கே.கே.எம்., சஜி பைஜும் மூட்டில், லதா, ஸாராஜோசப், ஜே.எஸ். மாராமண், சுப்பையாபிள்ளை, கே.பி.என். ஜோசப், பி. மாதவமேனோன், எழுவந்தலை உண்ணிகிருஷ்ணன், ஏகலவ்யன், ஸ்ரீகௌதமன், வேணூர் கிருஷ்ணன்குட்டி, ராமகிருஷ்ணன்பாலாடு, கோபிக்குட்டன், ஹரிப்பவலப்பாடு, குஞ்ஞிராமகுறுப்பு, சுஜாஜேய்ம்ஸ் போன்றவர்களின் சிறுகதைகளும், முதுகுளம் ராகவன்பிள்ளை, இடசேரி கோவிந்தன் நாயர், செறுகாடு, எஸ்.ராமகிருஷ்ணன், ஹறுபு, டி.என்., வி.ஜே. தோமஸ், மலயாற்றூர் ராமகிருஷ்ணன், திக்கோடியான், ஜி. சங்கரப்பிள்ளை, என். கிருஷ்ணபிள்ளை ஆகியவர்களின் நாடகங்களும், நித்தியசைதன்யயதியின் வசனகவிதை அமைப்பிலான புனைகதை நூலும் தமிழில் அறிமுகமாகியுள்ளன.

புனைகதை மொழிபெயர்ப்பாளர்களில் ஓ. கிருஷ்ணபிள்ளை,

ஆர். இர்ராமநாதன், கா. அப்பாத்துரை, மு. வேங்கடசாமி, கே.ஸி. சங்கரநாராயணன், குயிலன், டி. ராமலிங்கம், புஷ்பவேணி கோவி, ஹேமா ஆனந்ததீர்த்தன், சி.ஏ. பாலன், மங்கையர்க்கரசி, ஆசி, சி.எஸ். விஜயம், ரா. சௌரிராஜன், பாலகிருஷ்ணமேனோன், கே. நாராயணன், சுரா, குறிஞ்சிவேலன், மணவை முஸ்தபா, நீலபத்மநாபன், தம்பிசெனி ஆகியவர்கள் நாவல்களையும், சௌரி, ஆ. மாதவன், ஆசி, புஷ்பவேணிகோவி, கே. நாராயணன், இளம்பாரதி, ம. இராஜாராம், சு. குருசாமி, ல.சி., கே.ஸி. சங்கரநாராயணன், மா. தக்ஷிணாமூர்த்தி, நீலபத்மநாபன், இந்திரன், கோ. முருகேசன், டி. தேவதாஸ், சி. நாச்சிமுத்து, பி. மதனன், மோகனசந்திரன், வி.எச்.எஸ். சாஸ்திரி, சுரா, ஹரி, குருமூர்த்தி, வி. கிருஷ்ணமூர்த்தி, பிரகாஷ், கரிம்காக்க, ஜெயமோகன், சுதா, சங்கீதா, எஸ். செல்வராஜ், எஸ். இராமகிருஷ்ணன் ஆகியவர்கள் சிறுகதைகளையும், பா. ஆதிமூலம், நா. சோமசுந்தரம், சுகுமாரன், ப.ப. தம்பி, சே. ராமானுஜம் ஆகியவர்கள் நாடகங்களையும், எஸ். மணி வசனகவிதை அமைப்பிலான புனைகதை நூலையும் தமிழ்ப்படுத்தியுள்ளனர். இம்மொழிபெயர்ப்பாளர்களில் நீலபத்மநாபன் ஆ. மாதவன், டி. தேவதாஸ், சி. நாச்சிமுத்து, குருமூர்த்தி, ஜெயமோகன், சுகுமாரன் ஆகியவர்கள் புனைகதை தவிர்ந்த பிற இலக்கியங்களையும் மொழிபெயர்த்துள்ளனர்.

புனைகதை மொழிபெயர்ப்புகளில் சாகித்திய அக்காடமி, நேஷனல் புக் டிரஸ்ட் ஆகிய அரசு நிறுவனங்களும் திருவனந்தபுரம் தமிழ்ச்சங்கம் போன்ற அமைப்புகளும் வெளியிட்டவை தவிர பிற அனைத்தும் சிறு பதிப்பகங்கள் வாயிலாக வும் இதழ்களின் வாயிலாகவும் வெளிவந்தவையாகும்.

மலையாளத்திலிருந்து தமிழில் புனைகதை மொழிபெயர்ப்புகளாக 1930 வரை இரண்டு நாவல்களும், 1950களில் ஐந்து நாவல்களும் சிறுகதைத் தொகுப்பு ஒன்றும், ஓரங்க நாடகங்களின் தொகுப்பு ஒன்றும் 1960 களில்

15 நாவல்களும், சிறுகதைத் தொகுப்பு ஒன்றும், நாடக நூல்கள் இரண்டும், 1970களில் பதினொரு நாவல்களும், சிறுகதைத்தொகுப்பு ஒன்றும் வெளிவந்தன. மேலும் பிற இலக்கியவகைகள் அடங்கிய தொகுப்புகளிலும், இதழ்களிலும் நாவல், சிறுகதை மற்றும் ஓரங்கநாடகங்கள் ஆகியன பல அவ்வப்போது வெளிவந்துள்ளன. இவற்றில் செம்மலர், தாமரை, மஞ்சரி போன்ற இதழ்கள் மிகுதியான மொழி பெயர்ப்புகளை வெளியிட்டுள்ளன. மொத்தத்தில் 1980-ற்குப் பிறகு மலையாளத் திலிருந்து தமிழுக்குச் செய்யப்பட்டுவரும் புனைகதை மொழிபெயர்ப்புப்பணி தொய்வுடையதாக காணப்படுகிறது.

2. மதிப்பீடு

புனைகதை இலக்கிய மொழிபெயர்ப்புகள் பற்றிய மதிப்பீட்டை நாவல், சிறுகதை, நாடகம் போன்றவற்றின் அடிப்படையில் பின்வருமாறு அமைக்கலாம்.

1. நாவல்

நாவல் மொழிபெயர்ப்பைப் பற்றிய மதிப்பீடு செம்மீன், இரண்டுபடி, பேராசிரியர், நூறுபூக்கள் மலரும், இளம்பருவத்துத்தோழி, அரைநாழிகை நேரம், மதில்கள், ஐந்துசென்ட் நிலம், அதேகடிதம், காலம் ஆகியவைவற்றை அடிப் படையாகக்கொண்டு இங்கு செய்யப்பட்டுள்ளது. மேலும் மதில்கள் என்ற நாவலுக்கு சுரா, நீலபத்மநாபன் ஆகியவர்கள் செய்துள்ள மொழிபெயர்ப்புகளை ஒப்பிட்டு நோக்குவதாகவும் இப்பகுதி அமைந்துள்ளது.

1. செம்மீன்

தகழி சிவசங்கரப்பிள்ளையின் 'செம்மீன்' என்ற நாவலை சுந்தரராமசாமி (1962) மொழிபெயர்த்துள்ளார். இப்பெயர்ப்பு மூலத்தின் கருத்தின் அடிப்படையில் பெறுமொழிக்கேற்ற நடையமைப்பைக் கொண்டதாக உள்ளது. சான்றுகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. "கறுத்தம்ம பரீ எந்நோளம் சப்திச்சு எந்நிட்டு பொட்டிச்சிரிச்சு. ஆவிளி முழுவனாக்கான் பரீக்குட்டி ஆவசியப்பெட்டு. கறுத்தம்ம சிரி அடக்கியிட்டு கௌரவம் பாவிச்சு 'இல்ல' எந்நு தல குலுக்கி (கறுத்தம்மா பரீ என்பதுவரைவாயெடுத்தாள். உடன் குபீரென்று சிரித்தாள். அப்பெயரை முழுமையாக்கும்படி பரீக்குட்டி கேட்டுக்கொண்டான். கறத்தம்மா சிரிப்பை அடக்கிவிட்டு கௌரவபாவத்துடன் 'இல்லை' என்று தலையை அசைத்தாள்)"

(தகழி, 1986:5)

இதனை சுந்தரராமசாமி

"கறுத்தம்மா 'பரீ' என்பதுவரையிலும் சொல்லிட்டுச் சிரித்தாள். தனது முழுப்பெயரையே சொல்லும்படி பரீக்குட்டிஅவளிடம் கேட்டுக்கொண்டான். கறுத்தம்மா சிரிப்பை அடக்கி முகத்தில் கௌரவபாவத்தை வரவழைத்துக்கொண்டு மாட்டேன் என்று தலையை அசைத்து........"

(சுந்தரராமசாமி, 1987:9)

என மொழிபெயர்த்துள்ளார். இதில் "கறுத்தம்ம பரீ எந்நோளம் சப்திச்சு எந்நிட்டு பொட்டிச்சிரிச்சு" என்பதை "கறுத்தம்மா 'பரீ' என்பது வரையிலும் சொல்லிவிட்டுச்சிரித்தாள்" என மொழிபெயர்த்துள்ளார். இங்கு "சப்திச்சு" என்ற வினைமுற்றுடன் 'எந்நிட்டு' என்ற இணைப்புச்சொல்லையும் சேர்த்து 'சொல்லிவிட்டு' என வினையெச்சமாக்கி இருவேறு தொடர்களை ஒன்றாக்கியுள்ளார். மேலும் "பொட்டிச்சிரிச்சு (குபீரென்று சிரித்தாள்)" எனச் சிரிப்பின் ஒரு குறிப்பிட்ட வகையைக் குறிக்கும் சிறப்புச் சொல்லை "சிரித்தாள்" என பொதுச்சொல்லாக மாற்றியுள்ளார். "ஆவிளி முழுவனாக்கான் பரீக்குட்டி ஆவசியப்பெட்டு" என்பதை "தனது முழுப்பெயரையே சொல்லும்படி பரீக்குட்டி அவளிடம் கேட்டுக்கொண்டான்" என கருத்தின் அடிப்படையில் மொழிபெயர்த்துள்ளார். கறுத்தம்ம சிரி அடக்கியிட்டு கௌரவம் பாவிச்சு 'இல்ல' எந்நு தல குலுக்கி" என்பதை "கறுத்தம்மா சிரிப்பை அடக்கி முகத்தில் கௌரவபாவத்தை வரவழைத்துக்கொண்டு மாட்டேன் என்று தலையை அசைத்து........."என 'முகத்தில்'

என்ற பொருட்கூறை மிகுதியாகச் சேர்த்து மொழிபெயர்த்துள்ளார்.

2. "நெறியும் முறயும் கெட்டுச்சில கொச்சு முதலாளிமார் சிலப் போள் கடப்புறம் அசுத்தமாக்கும். செம்மீன் தல்லானும் உணக்கமீன் வல்லம் கெட்டானும் ஒக்கெயாயி கிழக்கு நிந்நும் பெண்ணுங்ஙள் வரும். அவர் கடப்புறம் அசுத்தமாக்கும். அவர்க்குண்டோ கடப்புறத்தின்றே விசுத்தி அறியாவு? அவர் கடலம்மையுடெ மக்களல்ல. பக்ஷே பலம் அனுபவிக்கேண்டது முக்குவரும் (நெறியும் முறையும் கெட்டு சில சின்ன முதலாளிகள் சில வேளைகளில் கடற்கரை யைத் தீட்டுப்படுத்துவார்கள். இரால் மீன் அடிக்கவும் கருவாட்டுச்சிப்பங்கட்ட வும் கிழக்கிலிருந்து பெண்கள் வருவார்கள். அவர்களுக்கு உண்டா கடற்கரையின் தூய்மை பற்றிய அறிவு? அவர்கள் கடல்தாயின் குழந்தைகளல்ல. ஆனால் அதன் பலனை அனுபவிக்க வேண்டியவர்கள் மீனவர்கள்)." (தகழி, 1986:11)

என்பதை சுந்தரராமசாமி

"ஒழுக்கத்தையும் மானத்தையும் இழந்துவிட்ட சில சின்ன முதலாளிகள் சில சமயங்களில் கடற்கரையை அசுத்தமாக்கிவிட்டுப்போவார்கள். செம்மீன் அடிக்கவும் கருவாட்டுச் சிப்பம் கட்டவும் கிழக்கே இருந்து சில பெண்கள் வருவதுண்டு. அவர்களும் கடற்கரையை அசுத்தமாக்கியிருக்கிறார்கள். அவர் களுக்கு எங்கே தெரியும் கடற்கரையின் பரிசுத்தத் தன்மை? அவர்கள் கடல்தாயின் குழந்தைகளுமல்ல. ஆனால் அதன் பலாபலன்கள் கடற்கரைச் செம்படவர்களின் தலையில் வந்து விடியும்"

(சுந்தரராமசாமி, 1987:16)

என மொழிபெயர்த்துள்ளார். இதில் "நெறியும் முறயும் கெட்டு" என்பதை "ஒழுக்கத்தையும் மானத்தையும் இழந்துவிட்ட" எனவும் "அவர் கடப்புறம் அசுத்தமாக்கும்" என்பதை "அவர்களும் கடற்கரையை அசுத்தமாக்கியிருக்கி றார்கள்" என எச்ச உம்மையைச் சேர்த்தும், முக்காலத்தைச் சுட்டும் எதிர் காலத்தை இறப்பில் நிகழ்காலமாக மாற்றியும், "அவர்க்குண்டோ கடப்புறத் தின்றெ விசுத்தி அறியாவு" என்பதை "அவர்களுக்கு எங்கே தெரியும் கடற்கரையின் பரிசுத்தத் தன்மை" எனவும் "பக்ஷே பலம் அனுபவிக்கேண்டது முக்குவரும்"

என்பதை "ஆனால் அதன் பலாபலன்கள் கடற்கரைச் செம்படவர்களின் தலையில் வந்து விடியும்" எனவும் கருத்தின் அடிப்படையில் பெறுமொழிக்கேற்ற நிலையில் மாற்றம் செய்துள்ளார்.

மூலவடிவத்தை நேரடிச்சொற்களால் பதிலீடு செய்யாமல் மாற்றிணைகளைக்கொண்டு மொழிபெயர்த்துள்ள பகுதிகள் சுந்தரராமசாமியின் மொழிபெயர்ப்பில் மிகுதியாகக் காணப்படுகின்றன. சான்றாக

"நினக்கு மொலேம் தலேம் வந்ந ப்றாயமா. கொச்சு மொதலாளிமாரும் இப்போழத்தெ கண்ணும் தலேயில்லாத்த செறுவால்யக்காரும் நின்றெ குண்டிக்கும் நெஞ்சத்தும் தொளச்சு நோக்கும் (உனக்கு முலையும் தலையும் வந்த பருவம். சின்ன முதலாளிகளும் இப்போதைய கண்ணும் தலையுமில்லாத இளம்பருவத்தினரும் உனது குண்டியையும் நெஞ்சையும் துளைத்துப்பார்ப்பார்கள்)"

(தகழி, 1986:12)

என்பதை

"இதோபாரு நீ வயசு வந்த பொண்ணு. சின்ன முதலாளிகளும், கண்தலை தெரியாமல் திரிகிற இந்தக்காலத்து இளவட்டப்பிள்ளைகளும் முன்னும் பின்னும் கண்போடு வாங்க"

(சுந்தரராமசாமி, 1987:17)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதில் "நினக்கு மொலேம் தலேம் வந்ந ப்றாயமா" என்பதை மாற்றிணைகளால் அக்கருத்துத் தோன்றும் படியாக "இதோபாரு நீ வயதுவந்த பொண்ணு" எனவும் (பெண்கள் பருவமடைதலைக்குறிக்க 'முலையும் தலையும் வந்தன' என்னும் வழக்கு தமிழிலும் இருந்தது. பார்க்க. தொல்.சொல். நூற்பா.422, சேனாவரையர் உரை) "குண்டிக்கும் நெஞ்சத்தும் தொளச்சு நோக்கும்" என்பதை "முன்னும் பின்னும்

கஃபோடு வாங்க" என ஆகுபெயர் அடிப்படையில் நாகரிக வழக்கைப் (இடக்கரடக்கலாக) பின்பற்றியும் மொழிபெயர்ப்பை அமைத்துள்ளார்.

மூலவடிவத்தில் காணப்படும் பேச்சுவழக்குத்தொடர்களை பொதுப் பேச்சு வழக்குத்தொடர்களாக மாற்றி சுந்தரராமசாமி மொழிபெயர்த்துள்ள பகுதிகளும் உள்ளன. சான்றுகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. "என்றெ மொகாளு மேலம் கடாலு கரிச்சு தொறேலொளளோருடெ வாயி மண்ணடிக்கல்லே (எனது மகளே இனிமேல் கடலை நாசமாக்கி துறையில் உள்ளவர்களின் வாயில் மண்ணைப் போட்டுவிடாதே)"

(தகழி,1986:12)

என்பதை

"கறுத்தம்மா நீ கடலைப்பாழாய் அடிச்சி கரையிலே வாழ்கிற ஜனங்கள் வாயிலே மண் அள்ளிப்போட்டுவிடாதே".

(சுந்தரராமசாமி, 1987:17)

என மொழிபெயர்த்துள்ளார். இதில் மீனவர்களின் பேச்சுவழக்கு மொழிக்குப் பதிலாக தமிழில் பொதுப்பேச்சு வழக்கு மொழியைக் கையாண்டுள்ளார்.

2. "சுத்தமா மொகாளெ வலுது. சுத்தம் மரக்கான்ற சொத்து மரக்காத்தீன்றெ சுத்தமா (ஒழுக்கம் தான் மகளே பெரியது. ஒழுக்கம். மரக்காயனின் செல்வம் மரக்காத்தியின் ஒழுக்கம் தான்)"

(தகழி, 1986:11)

இதனை

"ஒழுக்கம் இருக்குதே அதுதான் பெண்ணே பெரிசு. மரக்காத்தியின் ஒழுக்கம்தான் மரக்காயனுக்குச் சொத்து"

(சுந்தரராமசாமி, 1987:16)

என மொழிபெயர்த்துள்ளார். இதிலும் வட்டாரப்பேச்சு வழக்கை நீக்கி பொதுப்பேச்சு வழக்கை இணையாக்கியுள்ளார்.

மொத்தத்தில் சுந்தரராமசாமியின் மொழிபெயர்ப்பு மூலத்தின் கருத்துக்கள் எதுவும் விட்டுபோகாமலும், மாற்றிணைகளை மிகுதியாகப்பயன்படுத்தியும், மீனவப்பேச்சுவழக்கிற்குப் பதிலாகப் பொதுப்பேச்சுவழக்கைக் கொண்டதாகவும் அமைந்துள்ளது.

2. இரண்டுபடி

தகழி சிவசங்கரப்பிள்ளையின் 'ரண்டிடங்கழி' என்ற நாவலை 'இரண்டுபடி' என்ற தலைப்பில் டி. ராமலிங்கம்பிள்ளை (1964) மொழிபெயர்த்துள்ளார். இப்பெயர்ப்பு மூலத்திற்கு சமமான அளவில் சரியாகச் செய்யப்பட்டதாகும். சான்றாக,

"அச்சா, "அச்சனு என்னா தொக பெம்பணம் வேணம்? ஆதைர்யத்தெ சிருத விலவச்சு. சோத்யத்தெ அவள் அம்கீகரிச்சு. கோரன்றெ சிற்றப்பனு கோரன்றெ ப்றவறுத்தி பிடிச்சில்ல. பெண்ணுகாணான் வந்ந செறுக்கனு பெண்பணத்தெக் குறிச்சு பறயான் அவகாசமில்ல. கீழ்நடப்பு அனுவதிக்காத்த ஆ இடபெடல் திக்காரமாணு. அயாள் முசிச்சலோடும் தேஉஷ்யத்தோடும் பறஞ்ஞு (ஐயா! ஐயாவுக்கு என்ன தொகை பெண்பணம் வேண்டும்? அந்த தைரியத்தை சிறுதை மதித்தாள். கேள்வியை அவள் ஏற்றுக்கொண்டாள். கோரனின் சிற்றப்பனுக்கு கோரனின் செயல் பிடிக்கவில்லை. பெண்பார்க்க வந்த பயலுக்குப் பெண்பணத்தைக் குறித்துப் பேச அனுமதி இல்லை. நாட்டு நடப்பை ஏற்றுக்கொள்ளாத அந்தத் தலையீடு அதிகப்பிரசங்கித்தனமாகும். அவன் மனவருத்தத்தோடும் கோபத்தோடும் கூறினான்),"

(தகழி, 1988:12)

என்பதை

"ஐயா! ஐயாவுக்கு என்ன தொகை பெண்பணம் வேணும்? அந்தத் தைரியத்தைச் சிருதை மதித்தாள். கேள்வியை அவள் ஏற்றுக்கொண்டாள். கோரனுடைய சிற்றப்பனுக்கு கோரனுடைய செயல் பிடிக்கவில்லை. பெண் பார்க்க வந்த பயனுக்குப் பெண்பணத்தைப் பற்றிப்பேச உரிமையில்லை. புராதனவழக்கம் அனுமதியாத அந்தத் தலையீடு அதிகப் பிரசங்கித்தனமே. அவன் கோபத்தோடு கூறினான்".

(டி. ராமலிங்கம்பிள்ளை, 1990:12)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதில் பெரும்பாலான பகுதிகளையும் மூலத்திற்கேற்ப சரியாக மொழிமாற்றியுள்ளார். ஆனால் இறுதித்தொடரில் உள்ள "முசிச்சலோடும் தேஷியத்தோடும் (மன வருத்தத்தோடும் கோபத்தோடும்)" என்பதை "கோபத்தோடு" என மட்டுமே மொழிமாற்றியுள்ளார். இங்கு 'முசிச்சலோடும்" என்பது நீக்கப்பட்டுள்ளது.

டி. ராமலிங்கம்பிள்ளையின் மொழிபெயர்ப்பு தருமொழிவடிவத்தை நேரடிச் சொற்களால் மாற்றித்தரும் நோக்கிலும் அமைந்துள்ளது. சான்றாக

"எட்டில்தறயில் அந்நும் பெண்ணுகாணான் ஆள் வந்நிட்டுண்டு. ஆ மாஸத்தில் அது நாலாமத்தெ ஆளாணு. இப்போள் வந்நிரிக்குந்நது நீலம்பேரூர்க்காரனாணத்றெ (எட்டில்தறயில் அன்றும் பெண்பார்க்க வந்துள்ளனர். அந்த மாதத்தில் அவன் நான்காவது ஆள். இப்போது வந்திருப்பவன் நீலம் பேரூர்க்காரனாம்)"

(தகழி, 1988:7)

என்பதை

"எட்டில் தறையில் அன்றும் பெண்பார்க்க ஆள் வந்திருக்கிறான். அம்மா தத்தில் அவன் நான்காவது ஆள். இப்போது வந்திருப்பவன் நீலம்பேரூர்க்கார னாம்."

(டி. ராமலிங்கம்பிள்ளை,1990:7)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதில் "ஆள் வந்நிட்டுண்டு" என்பதை "ஆள் வந்திருக்கிறான்" எனவும், "ஈ மாஸத்தில் அது நாலாமத்தெ ஆளாணு" என்பதை "அம்மாதத்தில் அவன் நான்காவது ஆள்" எனவும் நேரடிச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளார்.

இவற்றிலிருந்து தருமொழிவடிவத்தை மூலத்திற்குச் சமமான அளவிலும், நேரடிச் சொற்களாலும் மொழிபெயர்க்கும் நோக்கில் டி. ராமலிங்கம்பிள்ளையின் மொழிபெயர்ப்பு அமைந்துள்ளது எனலாம். மேலும் சிறப்புச் சொற்களுக்கு அடிக்குறிப்புகளில் தந்துள்ள விளக்கமும் பயனுடையதாக உள்ளது.

3. பேராசிரியர்

ஜோசப் முண்டசேரியில் 'ப்றொபஸர்' என்ற நாவலை மு. வேங்கடசாமி (1970) 'பேராசிரியர்' என்ற தலைப்பில் மொழிபெயர்த்துள்ளார். இப் பெயர்ப்பு மூலத்தை அவ்வாறே பிரதிபலிப்பதாக உள்ளது. சான்றாக,

"மானேஜ்மென்றினு புத்திமுட்டுள்ளது ஞங்ஙளாரும் நிஷேதிக்குந்நில்ல. பக்ஷே அது விசாரிச்சு ஞங்ஙளெத்ற கஷ்டப்பெடும்? ஈ இன்ஸ்ற்றிற்றூஷனில் ராவும் பகலுமில்லாதெ பணியெடுத்திட்டு என்னெப்போலெ சிலர்க்கு குடும்பம் புலர்த்தானொக்குந்நில்லெந்நுள்ளது ஒரு பரமார்த்தமாணு. எனிக்கொராதாய வுமில்ல. வேறே ஆறேழு குட்டிகளுண்டெனிக்கெந்து இவி டேக்கறியாம். அவரே ஸமாதானிப்பிச்சு ஜோலிசெய்யான் எனிக்கு வய்யாதாயிரிக்குந்நு. வல்லதும் கூட்டித்தந்நில்லெங்கில் ஞான் வீழ்ச்சயிலாவும் (மானேஜ்மென்றிற்கு நெருக்கடிகள் உள்ளதை நாங்கள் யாரும் மறுக்கவில்லை. ஆனால் அதை நினைத்து நாங்கள் எவ்வளவு கஷ்டப்பட? இந்த நிறுவனத்தில் இரவும் பகலுமில்லாமல் வேலை

செய்துவிட்டு என்னைப்போல் சிலருக்கு குடும்பம் நடத்த முடியவில்லை என்பது ஓர் உண்மையாகும். எனக்கு எந்த வருமானமும் இல்லை. வேறு ஆறேழு குழந்தைகள் எனக்கு உண்டு என்று தாங்களுக்குத் தெரியும். அவர்களைக் கவனித்துவிட்டு வேலை செய்ய எனக்கு முடியவில்லை. ஏதாவது கூட்டித்தராவிட்டால் நான் கஷ்டத்திலாவேன்)"

(ஜோசப் முண்டசேரி, 1987:8)

என்பதை

"மானேஜ்மெண்டின் தொந்தரவுகளை நாங்கள் யாரும் இல்லையென்று மறுக்கவில்லை. ஆனால் அதை நினைத்துக்கொண்டு நாங்கள் எத்தனை நாள் கஷ்டப்படுவது? இந்தக் கல்லூரியில் இரவும் பகலுமாய் வேலைசெய்யும் என்னைப்போன்ற சிலருக்குக் குடும்பம் நடத்த முடியவில்லை என்பது எல்லோரும் அறிந்த ஓர் உண்மையாகும். எனக்கு வேறு வரும்படி எதுவும் இல்லை. ஆறேழு குழந்தைகள் எனக்கு இருப்பது தங்களுக்குத்தெரியும். அவர்களைச் சமாதானப் படுத்திவிட்டு வேலை செய்வதற்கு என்னால் முடியவில்லை. ஏதாவது கூட்டித்த ராவிட்டால் என் குடும்பம் முழுகிவிடும்.

(மு. வேங்கடசாமி, 1987:10)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதில் "புத்திமுட்டுகள்" என்பதை "தொந்தரவுகள்" எனவும், "ஈ இன்ஸ்ற்றிற்றூஊஷனில்" என்பதை "இந்தக்கல்லூரியில்" எனவும், "ஞான் வீழ்ச்சயிலாவும்" என்பதை "என் குடும்பம் முழுகிவிடும்" எனவும் மாற்றிணைகளைப் பயன்படுத்தி மொழிபெயர்த்துள்ளார். மேலும் "ஞங்ஙள் எத்ற கஷ்டப்பெடும்" என்பதை "நாங்கள் எத்தனை நாள் கஷ்டப்படுவது" என 'நாள்' என்ற சொல்லை மிகுதியாகச் சேர்த்தும், "ஒரு பரமாத்தமாணு" என்பதை "எல்லோரும் அறிந்த ஓர் உண்மையாகும்" என நடையை விரிவுபடுத்தியும் மொழிபெயர்ப்பை அமைத்துள்ளார்.

இம்மொழிபெயர்ப்பு இடையிடையே பெறுமொழிக்கேற்ப தகுமாற்றங் களைப் பெற்றதாகவும் உள்ளது. சான்றாக,

"அந்நொக்கெ ஒரு நாட்டின்புறத்து அல்ப்பம் குடும்பஸ்வத்தோ டொந்நிச்சு மலயாம் பள்ளிக்கூடத்தில் கஊந்டிச்சொராசாநுமாயால் பதிவில் கவிஞ்ஞந்தஸ்ஸாயி. எந்நால் குடும்பம் நடத்தான் அங்ஙேர்க்கு காடுவெட்டி க்றூஷி செய்யேண்டியிருந்நு (அன்றெல்லாம் நாட்டுப்புறத்தில் கொஞ்சம் குடும்ப சொத்துக்களுடன் மலயாளப்பள்ளிக்கூடத்தில் அரிதாக ஒரு ஆசிரியரு மானால் வழக்கத்திற்கதிகமான மதிப்பு ஏற்படும். ஆனால் குடும்பம் நடத்த அவருக்கு காடுவெட்டி விவசாயம் செய்யவேண்டியதாய் இருந்தது)."

(ஜோசப் முண்டசேரி, 1987:13)

என்பதை

"அன்றெல்லாம் நாட்டுப்புறத்தில் சிறிது குடும்ப சொத்தோடு மலையாளப் பள்ளிக்கூடத்தில் ஓராசிரியருமாய் விட்டால் வழக்கத்திற்கு மாறான அந்தஸ்தும் கிடைக்கும். ஆனால் குடும்பம் நடத்துவதற்கு அவர் நிலத்தை உழுது பயிரிடவேண் டியதாய் இருந்தது".

(மு, வேங்கடசாமி, 1987:14)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதில் "காடுவெட்டி க்றூஷி செய்யேண்டியிருந்நு" என்பதை "நிலத்தை உழுது பயிரிடவேண்டியதாய் இருந்தது" என பெறுமொழி நில அமைப்பிற்கேற்ப மாற்றிணையைப் பயன்படுத்தி மொழிபெயர்ப்பை அமைத்துள்ளார்.

"பத்தாம் க்லாஸ்சும் கழிஞ்ஞு படிப்பின்றெ ரங்கம் தமிழ்நாட்டிலொரு கோளேஜாயதோடெ மணியோடர் அயக்கானே உள்ளு எந்நாயி ஆ தறவாடியுடெ ஸம்பாத்யம் ஒக்கெக்கூடியாலும் (பத்தாம் வகுப்பும் முடிந்து படிக்கும் இடம்

தமிழ்நாட்டிலொரு கல்லூரி என்றானதும் மணியாடர் அனுப்பவே போதும் என்றா கிவிட்டது அந்தக் குடும்பத்தலைவனின் சம்பாத்தியம் எல்லாம் சேர்ந்தாலும்)"

(ஜோசப் முண்டசேரி, 1987:14)

என்பதை

"பதினோராம் வகுப்பு முடிந்தபின் அவன் தமிழ்நாட்டிலுள்ள ஒரு கல்லூரியில் படிக்கவேண்டியதாக ஏற்பட்டபோது, அந்த உழவரின் சம்பாத்தியமும் முழுவதும் சேர்ந்தாலும் அது அவனுக்கு மணியாடர் அனுப்புவதற்கே போதுமானதாக இருந்தது"

(மு. வேங்கடசாமி, 1987:15)

என மொழிபெயர்த்துள்ளார். இதில் "பத்தாம் க்லாஸ்சும் கழிஞ்ஞு" என்பதை தமிழ்நாட்டில் அப்போதிருந்த நிலைக்கேற்ப "பதினோராம் வகுப்பு முடிந்தபின்" என மொழிபெயர்த்துள்ளார். மேலும் "மணியோடர் அயக்கானே உள்ளூ எந்நாயி ஆ தறவாடியுடெ ஸம்பாத்யம் ஒக்கெக்கூடியாலும்" என்பதை "அந்த உழவரின் சம்பாத்தியம் முழுவதும் சேர்ந்தாலும் அது அவனுக்கு மணியாடர் அனுப்புவதற்கே போதுமானதாக இருந்தது" என 'தறவாடி' என்ற சொல்லை "உழவர்" என மாற்றியும், வாக்கியத்தின் சொல்லமைப்பை முன்பின்னாக மாற்றியும் மொழி பெயர்ப்பை அமைத்துள்ளார்.

இவற்றின் அடிப்படையில் மு. வேங்கடசாமியின் மொழிபெயர்ப்பு தகுமாற்றங்களின் மூலமும், மாற்றிணைகளின் மூலமும் தருமொழிவடிவத்தைப் பிரதிபலிக்கும் நோக்கில் அமைந்துள்ளது எனலாம்.

4. <u>நூறு பூக்கள் மலரும்</u>

சி.ஏ. பாலன் (1972) என்பவர் உண்ணிக்கிருஷ்ணன் புதூரின் 'பலிக்கல்' என்ற நாவலை "நூறுபூக்கள் மலரும்" என்னும் தலைப்பில்

மொழிபெயர்த்துள்ளார். இப்பெயர்ப்பு சொல்லுக்குச் சொல் என்றில்லாமல் கருத்தின் அடிப்படையில் மாற்றிணைகளைக் கொண்டு அமைந்தது. சான்றாக,

"ஒந்நிநும் ஸம்சயிக்கருது. மனஸ்ஸிலு ஆக்றகம் உண்டெங்கில் அது ஸாதிக் கணம். அதினாணு பெண்ணுங்ஙள்க்கு பாக்யம் வேண்டது.......உண்ணிச்சிரியம்ம மகளுடெ இம்கிதம் மனஸ்ஸிலாக்கி உள்ளழிஞ்ஞு ப்றோிப்பிச்சு (ஒன்றிற்கும் சந்தேகப் படக்கூடாது. மனதில் ஆசையிருந்தால் அதை நிறைவேற்றவேண்டும். அதற்குத் தான் பெண்களுக்கு அதிர்ஷ்டம் வேண்டும்......உண்ணிச்சிரியம்மா மகளின் மனநிலை யைப் புரிந்துகொண்டு பரிவோடு ஊர்வமூட்டினாள்)".

(உண்ணிக்கிருஉஷ்ணன் புதூர், 1986:17)

என்பதை

"எதுக்கும் சந்தேகப்படக்கூடாதம்மா, மனசிலே ஆசையிருந்தா அதைச் சாதிக்கத்தான் வேணும். அதுக்குத்தான் பெண்களுக்கு அதிர்ஷ்டம் வேணும் ....உண்ணிச்சிரியம்மா மகளது மன உணர்ச்சியைப் புரிந்துகொண்டாள்; மனப்பூர்வமாக அவளை உற்சாகப்படுத்தினாள்".

(சி.ஏ. பாலன், 1972:9)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதில் "ஒந்நிநும்" என்பதை "எதுக்கும்" என மாற்றிணை மூலமும், சம்சயிக்கருது" என்பதை "சந்தேகப்படக் கூடாதாம்மா" என உரையாடல் நிலைக்கேற்பவும், "உள்ளழிஞ்ஞு" என்பதை "மனப்பூர்வமாக" என கருத்தடிப்படையிலும் மொழிபெயர்த்துள்ளார். மேலும் "இம்கிதம் மனஸ்ஸிலாக்கி" என்பதை "மன உணர்ச்சியைப் புரிந்துகொண்டாள்" என நடைவிரிவு செய்துள்ளார்.

"கோவிலகத்தேக்கு ஒந்நு போகானுள்ள ஆச மனஸ்ஸில் கயறிட்டு குறச்சு நாளாயி. ஆவசியமில்லாதெ ஒற்றக்குப் போகுந்நது கண்டால் ஆரெங்கிலும் எந்தெங்கிலும் பறயுமோ எந்ந பயமாயிருந்நு இதுவரெ. (அரண்மனையினுள்

ஒருமுறை செல்லவேண்டும் என்ற ஆசை மனதில் ஏற்பட்டு கொஞ்சம் நாட்களானது. தேவையில்லாமல் தனியாகச் செல்வதைக் கண்டால் யாராவது ஏதாவது சொல்வார்களோ என்ற பயம் இருந்தது இதுவரை)".

(உண்ணிக்கிருஷ்ணன் புதூர், 1986:17)

என்பதை

"அரண்மனைக்குச் செல்லவேண்டுமென்று வெகுநாட்களாக அவள் ஆவலுடன் துடித்துக்கொண்டிருந்தாள். அதற்காக ஒரு சந்தர்ப்பம் வாய்க்கவேண்டும். இல்லாவிட்டால் ஜனங்கள் ஏதாவது கதை கட்டிவிடுவார்களோ என்ற பயம் அவள் மனதில் இதுவரை இருந்துவந்தது".

(சி.ஏ. பாலன், 1972:9)

என மொழிபெயர்த்துள்ளார். இதில் "கோவிலகத்தேக்கு ஒந்நு போகானுள்ள ஆச மனஸ்ஸில் கயறீட்டு குறச்சு நாளாயி" என்பதை "அரண்மனைக்குச்செல்ல வேண்டுமென்று வெகு நாட்களாக அவள் ஆவலுடன் துடித்துக்கொண்டிருந்தாள்" என மாற்றிணைகளைப் பயன்படுத்தி மொழிபெயர்த்துள்ளார். "ஆவசியமில்லாதெ ஒற்றக்குப் போகுந்நது கண்டால் ஆரெங்கிலும் எந்தெங்கிலும் பறயுமோ எந்ந பயமாயிருந்நு இதுவரெ" என்பதை "அதற்காக ஒரு சந்தர்ப்பம் வாய்க்கவேண்டுமே. இல்லாவிட்டால் ஜனங்கள் ஏதாவது கதை கட்டிவிடுவார்களோ என்ற பயம் அவள் மனதில் இதுவரை இருந்து வந்தது" என தருமொழிவடிவத்தின் கருத்தின் அடிப்படையிலும் "அதற்காக ஒரு சந்தர்ப்பம் வாய்க்க வேண்டுமே" என்ற தொடரை மிகுதியாகச் சேர்த்தும் மொழிபெயர்ப்பை அமைத்துள்ளார்.

இவற்றின் அடிப்படையில் சி.ஏ. பாலனின் மொழிபெயர்ப்பு மாற்றிணைகள் மூலமும் பெறுமொழிக்கேற்ப நடையமைப்பைப் பெற்று சற்று நெகிழ்வுத் தன்மையுடன் காணப்படுகிறது எனலாம். மேலும் தருமொழிவடிவத்தில் காணப்படும் பண்பாட்டுச் சொற்கள் அடிக்குறிப்புகளின் மூலம் விளக்கப்பட்டிருப்பது இம்மொழிபெயர்ப்பின் சிறப்பு அம்சமாகக் கருதலாம்.

5. இளம் பருவத்துத்தோழி

வைக்கம் முகமது பஷீரின் 'பால்யகாலசகி' என்ற நாவலை சி.எஸ். விஜயம் (1973) "இளம்பருவத்துத்தோழி" என்ற தலைப்பில் மொழிபெயர்த்துள்ளார். இப்பெயர்ப்பு மூலநூலை ஒத்துச்செல்வதாக அமைந்துள்ளது, சான்றாக,

"எந்து கொண்டவள்க்கு மாம்பழம் கிட்டுந்நில்ல? காற்றுள்ளப்போழும் இல்லாதப்போழும் சுக்றா உல்க்கண்டயோடே மாஞ்சுவட்டில் நில்க்கும் ஒந்நும் வீழில்ல, ஒரு இலபோலும் வீழில்ல, வளரே பழுத்த மாங்ஙா மாவில் கிடப்புண்டெந்நு அவள்க்கறியாம். வீழுந்நில்லெங்கில் கயறிப்பறிக்கணம். பக்ஷே மிசறு வளரேயுண்டு. அது கடிச்சு கொந்நு களயும். கடிக்குந்ந ஆ வலிய எறும்புகள் இல்லெங்கில்தன்னெ மாவில் கயறுக சுக்றாயெக்கொண்டு சாதிக்குந்ந கார்யமாணோ? பெண்ணல்லே? (ஏன் அவளுக்கு மாம்பழம் கிடைக்கவில்லை? காற்றுள்ளபொழுதும் இல்லாதபொழுதும் சுக்ற ஆவலோடு மாவின் மூட்டில் நிற்பாள். ஒன்றும் விழாது ஒரு இலை கூட விழாது. நன்றாகப் பழுத்த மாங்காய் மாமரத்தில் கிடக்கிறதென்று அவளுக்குத் தெரியும். விழவில்லையென்றால் ஏறிப்பறிக்கவேண்டும். ஆனால் செவ்வெறும்பு ஏராளமுண்டு. அது கடித்துக்கொன்றுவிடும். அந்த பெரிய எறும்புகள் இல்லாவிட்டால் தான் மாமரத்தில் ஏறுவதென்பது சுக்றாவால் முடியும் காரியமா? பெண்ணல்லவா?)"

(பஷீர், 1988:13-14)

என்பதை

"மாம்பழம் அவளுக்கும்ட்டும் ஏன் கிடைக்கவே மாட்டேன் என்கிறது? காற்றடித்தாலும் சரி இல்லையென்றாலும் சரி, சுக்றா சாதா அந்த மரத்தினடியிலேயே நின்றுகொண்டிருப்பாள். எதுவுமே விழாது. பெயருக்கு ஒரு இலையாவது விழாதோ? ஊஹும், நன்றாகப் பழுத்த மாங்காய் மரத்தில் இருக்கிறது என்பது அவளுக்குத் தெரியும். விழவில்லை என்றால் ஏறித்தான் பறிக்கவேண்டும். ஆனால் மரத்தில் சிவப்பு எறும்பு நிறைய இருக்கிறதே! ஐயோ, அது கடித்துத் தொலைத்துவிடும், கடித்துக்கொல்லும் அந்தப் பெரிய எறும்புகள் இல்லையென்

றாலும் கூட மாமரத்தில் ஏறுவதென்பது அவளால் செய்யக்கூடிய காரியமா என்ன? அவள் பெண்ணல்லவா"

(சி.எஸ். விஜயம், 1990:88)

என மொழிபெயர்த்துள்ளமையைக் குறிப்பிடலாம். இதில் "எந்து கொண்ட வள்க்கு மாம்பழம் கிட்டுந்நில்ல?" என்பதை "மாம்பழம் அவளுக்கு மட்டும் ஏன் கிடைக்கவே மாட்டேன் என்கிறது?" என சொல்வரிசை முறையை மாற்றியும், "காற்றுள்ளப்போழும் இல்லாதப்போழும்" என்பதை "காற்றடித்தாலும் சரி இல்லையென்றாலும் சரி" என கருத்தடிப்படையில் நடையை மாற்றியும், "சுக்றா உல்க்கண்டயோடே மாஞ்சுவட்டில் நில்க்கும்" என்பதை "சுக்றா சாதா அந்த மரத்தினடியிலேயே நின்று கொண்டிருப்பாள்" என "உல்க்கண்ட (ஆவல்)" என்ற சொல்லை நீக்கியும், "ஒரு இலபோலும் வீழில்ல" என்பதை "பெயருக்கு ஒரு இலையாவது விழாதோ ஊஹூம்" என வினா அமைப்பு மற்றும் ஒலிக்குறிப்புச்சொல்லால் நிகழ்ச்சி நடப்பதுபோன்ற சூழலை உருவாக்கியும் மொழிபெயர்ப்பைஅமைத்துள்ளார். மேலும், "பக்ஷே மிசறு வளரேயுண்டு, அது கடிச்சு கொந்நுகளயும்" என்பதை "ஆனால் மரத்தில் சிவப்பு எறும்பு நிறைய இருக்கிறதே! ஐயோ அது கடித்துத் தொலைத்துவிடும்" எனவும் "ஆ வலிய எறும்புகள் இல்லெங்கில் தன்னே மாவில் கயறுக சுக்றாயெக்கொண்டு சாதிக்குந்ந கார்யமானோ? பெண்ணல்லே?" என்பதை "அந்தப்பெரிய எறும்புகள் இல்லையென்றாலும் கூட மரத்தில் ஏறுவதென்பது அவளால் செய்யக்கூடிய காரியமா என்ன? அவள் பெண்ணல்லவா?" எனவும் வினா அமைப்பிலான தொடர்களுடன் மாற்றிணைகளைப் பயன்படுத்தி நடையை விரிவாக்கியும் மொழிபெயர்ப்பை அமைத்துள்ளார்.

இதன் அடிப்படையில் இம்மொழிபெயர்ப்பு தருமொழிவடிவத்தை அதன் சூழலோடு சற்று விளக்கமான நிலையில் தருவதாக அமைந்துள்ளது எனலாம்.

6. அரைநாழிகை நேரம்

கே. நாராயணன் (1978) என்பவர் பாறப்புறத்துவின் 'அரநாழிக நேரம்' என்று நாவலை 'அரைநாழிகைநேரம்' என்ற தலைப்பில் மொழி பெயர்த்துள்ளார். இப்பெயர்ப்பு சிலவிடங்களில் மூலத்தைவிட விரிவாகவும் மற்றுசில விடங்களில் சுருக்கமாகவும் அமைந்துள்ளது. சான்றாக,

"வாரியெல்லுகள்க்கிடயில் சூண்ட கொளுத்தி வலிக்கும்போலுள்ள வேதன. குஞ்ஞோனச்சன் வசம் சரிஞ்ஞுகிடந்நு வய்ய. முற்றத் தெங்ஙானும் இம்மினிநேரம் நடந்நிருந்நெங்கில் கொள்ளாமாயிருந்நு. நடக்கும்போள் கிடக்கணமெந்நு தோந்நும். கிடக்கும்போள் நடக்கணமெந்நும் (விலா எலும்புகளுக்கிடையில் தூண்டில் போட்டு இழுப்பதைப் போன்ற வேதனை. குஞ்ஞோனச்சன் பக்கமாகத் திரும்பிப்படுத்தார். சுகமில்லை. முற்றத்தில் எங்காவது கொஞ்சம் நேரம் நடந்திருந்தால் நன்றாக இருக்கும். நடக்கும் போது படுக்கவேண்டுமென்று தோன்றும். படுக்கும்போது நடக்கவேண்டும் என்றும்)".

(பாறப்புறத்து, 1986:7)

என்பதை

"விலா எலும்புகளில் தூண்டில்போட்டு இழுப்பதைப்போன்ற வலி எடுக்கவே குஞ்சைசனனா ஒருக்களித்துப்படுத்தார். அவரால் வலியைப் பொறுக்க முடியவில்லை. முற்றத்தில் சிறிதுநேரம் நடந்தால் நல்லது என்று தோன்றியது. எழுந்து நடந்தால் படுக்கவேண்டும்போல் இருக்கும். படுத்தால் எழுந்து நடக்கத்தோன்றும்.

(கே. நாராயணன், 1978:1)

என மொழிபெயர்த்துள்ளதைச் சுட்டிக்காட்டலாம். இதில் "வாரியெல்லுகள்க்கிடயில் ஜண்ட கொளுத்தி வலிக்கும்போலுள்ள வேதன. குஞ்ஞோச்சன் வசம் சாரிஞ்ஞுகிடந்நு" என்பதை "விலா எலும்புகளில் தூண்டில்போட்டு இருப்பதைப் போன்ற வலி எடுக்கவே குஞ்சைநைனா ஒருக்களித்துப்படுத்தார் என இரண்டு தொடர்களை ஒன்றாக இணைத்து மொழிபெயர்த்துள்ளார். மேலும் "வய்ய" என்பதை "அவரால் வலியைப்பொறுக்க முடியவில்லை" என கருத்தடிப்படையில் விரிவாக மாற்றியமைத்துள்ளார். "முற்றத்தெங்ஙாலும் இம்மிணிநேரம் நடந்நெங்கில் கொள்ளாமாயிருந்நு" என்பதை "முற்றத்தில் சிறிதுநேரம் நடந்தால் நல்லது என்று தோன்றியது" என "எங்ஙாலும் (எங்காவது)" என்ற சொல்லை நீக்கியும், "கொள்ளாமாயிருந்நு" என்ற தொடரை "நல்லது என்று தோன்றியது" எனவும் மொழிபெயர்ப்பை அமைத்துள்ளார். "நடக்கும்போள்" என்பதை "எழுந்து நடந்தால்" எனவும், "நடக்கணமெந்நும்" என்பதை "எழுந்து நடக்கத்தோன்றும்" எனவும் நடைவிரிவு செய்து பெருமொழிவடிவத்தை அமைத்துள்ளார்.

நாவலில் பரவலாகக் காணப்படும் விவிலியக்கருத்துக்கள் கொண்ட பகுதிகளைக்கிறிஸ்தவத்திருமறையின் தமிழ்ப்பெயர்ப்பில் உள்ள சொற்களையும் தொடர்களையும் பயன்படுத்தி மாற்றம் செய்துள்ளார். சான்றாக,

"யகோவயுடெ நாமம் வாழ்த்தப்பெடட்டே! நீ அனாதியாயும் சாஸ்வதமாயும் தெய்வமாகுந்நு. நீ மர்த்யனெ பொடியிலேக்கு சேருமாறாக்குந்நு. மநுஷ்யபுத்றன்மாரே திரியெ வருவின் எந்நு அருளிச்செய்யுந்நு. ஆயிரம் ஸம்வத்ஸரம் நின்றெ த்றுஷ்டியில் இந்நலெ கழிஞ்ஞுபோய திவஸம் போலெயும் ராத்ரியிலெ ஒரு யாமம் போலெயும் இரிக்குந்நு. நீ அவரெ ஒழுக்கிக்களயுந்நு. அவர் உறக்கம் போலெ யத்றே. அவர் ராவிலெ முளச்சு வளருந்ந புல்லு போலெயாகுந்நு. அது ராவிலெ தழச்சு வளருந்நு. வைகுந்நேரம் கரிஞ்ஞு வாடிப்போகுந்நு. ஞங்ஙள் நின்றே கோபத்தால் க்ஷயிச்சும் க்றோதத்தால் ப்றமிச்சும் போகுந்நு. ஞங்ஙளுடெ ஆயுஷ்காலம் எழுபது ஸம்வத்ஸரம். ஏறியால்

என்பது ஸம்வத்ஸரம். அது வேகம் தீருகயும் ஞங்கள் பறந்துபோகயும் செய்யுந்நு (யகோவாவின் நாமம் வாழ்த்தப்படுவதாக! நீர் தொடக்கமற்று என்றென்றும் கடவுளாய் இருக்கிறீர். நீர் அழிந்துபோகும் மனிதனை மண்துகளில் சேரும்படியாக மாற்றுகிறீர். மனித புத்திரர்களே மீண்டும் வாருங்கள் என்று அருள் செய்கிறீர். ஆயிரம் ஆண்டுகள்உமது பார்வையில் நேற்றுக்கடந்த நாள்போலயும் இரவிலே ஒரு யாமம் போலவும் இருக்கின்றன. நீர் அவர்களை நீர்ப்பாச்சலில் வாரித்தள்ளு கிறீர். அவர்கள் தூக்கத்தை ஒத்து இருக்கிறார்கள். அவர்கள் காலையில் முளைத்து வளருகிற புல்லைப்போல் இருக்கிறார்கள். அதுகாலையில் தழைத்து வளர்கிறது. மாலையில் மாண்டு வாடிப்போகிறது. நாங்கள் உமது கோபத் தால் அழிந்தும் உமது உக்கிரத்தால் நிலைகுலைந்தும் போகிறோம். எங்களின் ஆயுள்காலம் எழுபதுவருடம். கூடினால் எண்பது வருடம். அது சீக்கிரமாய் முடி யவும் நாங்கள் பறந்துபோகவும் செய்கிறோம்)"

(பாறப்புறத்து, 1986:114-115)

என்பதை,

"கர்த்தரின் திருநாமம் வாழ்க. ஆண்டவரே! நீரே என்றென்றைக்கும் தேவனாயிருக்கிறீர். நீர் மனுஷரை நீர்த்தூளியாக்கி மனுபுத்திரரே திரும் புங்கள் என்கிறீர். உமது பார்வைக்கு ஆயிரம் வருஷங்கள் நேற்றுக்கழிந்த நாள் போலவும், இராச்சாமம் போலவும் இருக்கின்றன. அவர்களை வெள்ளம்போல் வாரிக்கொண்டு போகிறீர். நித்திரைக்கு ஒத்திருக்கிறார்கள். காலையிலே முளைக்கிற புல்லுக்கு ஒப்பாயிருக்கிறார்கள். அது காலையிலே முளைத்து, பூத்து மாலையிலே அறுப்புண்டு உலர்ந்துபோம். நாங்கள் உமது கோபத்தினால் அழிந்து, உக்கிரத்தினால் கலங்கிப்போகிறோம். எங்கள் ஆயுள் நாட்கள் எழுபது வருஷம். பலத்தின் மிகுதியால் எண்பது வருஷமாயிருந்தாலும் அது சீக்கிரமாய்க் கடந்து போகிறது. நாங்கள் பறந்துபோகிறோம்".

(கே. நாராயணன், 1978:109-110)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதில் "அனாதியாயும் சாஸ்வதமாயும்" என்பதை "என்றென்றைக்கும்" எனவும், "மர்த்யனெ பொடியிலேக்கு சேருமாறாக்குந்நு. மனுஷ்யபுத்ரன்மாரெ திரியே வருவின் எந்நு அருளிச்செய்யுந்நு" என்பதை "நீர் மனுஷரை நீர்த்தூளியாக்கி மனுபுத்திரரே திரும்புங்கள் என்கிறீர்" எனவும், "நீ அவரெ ஒழுக்கிக்களயுந்நு" என்பதை "அவர்களை வெள்ளம்போல் வாரிக்கொண்டு போகிறீர்" எனவும், "அது ராவிலெ தழச்சு வளருந்நு. வைகுந்நேரம் கரிஞ்ஞு வாடிப்போகுந்நு" என்பதை "அது காலையிலே முளைத்து பூத்து மாலையிலே அறுப்புண்டு உலர்ந்துபோம்" எனவும், "ஞங்ஙளுடெ ஆயுஷ்காலம் எழுபது ஸம்வத்ஸரம் ஏறியால் எண்பது ஸம் வத்ஸரம். அது தீருகயும் ஞங்ஙள் பறந்நுபோகயும் செய்யுந்நு" என்பதை "எங்கள் ஆயுள் நாட்கள் எழுபது வருஷம் பலத்தின் மிகுதியால் எண்பது வருஷமாயிருந்தாலும் அது சீக்கிரமாய்க் கடந்துபோகிறது. நாங்கள் பறந்துபோகிறோம்" எனவும் விவிலியத் தமிழ்ப்பெயர்ப்பில் உள்ள சொற்களையும் தொடர்களையும் பயன்படுத்தி (சங்கீதம், 70:3-7,10) பெறுமொழி வடிவத்தை அமைத்துள்ளார்.

தருமொழி வடிவத்திற்கிணையாக விவிலியத் தமிழ்ப்பெயர்ப்பிலுள்ள பகுதிகளை அப்படியே பயன்படுத்தியுள்ளதையும் இம்மொழிபெயர்ப்பில் ஆங்காங்கே காணலாம். சான்றாக,

"நின்றெ ஸகல ஸம்பாத்யத்தாலும் விவேகம் நேடுக. அதினெ உயர்த்துக. அது நின்னெ உயர்த்தும். அதினெ ஆலிம்கனம் செய்தால் அது நினக்கு மானம் வருத்தும். அது நின்றெ தலயெ அலங்காரமால அணியிக்கும். (உனது எல்லா சம்பாத்யங்களாலும் விவேகத்தை ஈட்டுவாயாக. அதை உயர்த்துவாயாக. அது உன்னை உயர்த்தும். அதனைத் தழுவினால் அது உனக்கு பெருமையைச் சேர்க்கும். அது உன் தலையில் அலங்காரமான மாலையை அணிவிக்கும்)".

(பாறப்புறத்து, 1986:114)

என்பதை

"ஞானமே முக்கியம்; ஞானத்தை சம்பாதி. என்னத்தைச் சம்பாதித்தாலும் புத்தியைச் சம்பாதித்துக்கொள். அதை நீ மேன்மைப்படுத்து. அது உன்னை மேம்மைப்படுத்தும். நீ அதைத் தழுவிக்கொண்டால் அது உன்னைக் கனம் பண்ணும். அது உன் தலைக்கு அலங்காரமான முடியைக்கொடுக்கும்".

(கே. நாராயணன், 1978:108)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இங்கு "நின்றெ ஸகல ஸம்பாத்யத்தாலும் விவேகம் நேடுக" என்பதை "ஞானமே முக்கியம்; ஞானத்தைச் சம்பாதி. என்னத்தைச் சம்பாதித்தாலும் புத்தியைச் சம்பாதித்துக்கொள்" எனவும், "அதினெ உயர்த்துக. அது நின்னெ உயர்த்தும்" என்பதை "அதை நீ மேன்மைப்படுத்து, அது உன்னை மேன்மைப்படுத்தும்" எனவும், "அதினெ ஆலிம்கனம் செய்தால் அது நினக்கும் மானம் வருத்தும்" என்பதை "நீ அதைத் தழுவிக்கொண்டால் அது உன்னைக் கனம் பண்ணும்" எனவும், "அது நின்றெ தலயெ அலங்காரமால அணியிக்கும்" என்பதை "அது உன் தலைக்கு அலங்காரமான முடியைக் கொடுக்கும்" எனவும் மூலவடிவத்திற்கிணையாக விவிலியத் தமிழ்ப்பெயர்ப்பிலுள்ள பகுதிகளைப் (நீதிமொழிகள், 4:7-9) பயன்படுத்தியுள்ளார்.

இவற்றின் அடிப்படையில் இம்மொழிபெயர்ப்பு மூலத்தைவிட சற்று விரிவாகவும், மற்று சில விடங்களில் செறிவாகவும், விவிலியத் தமிழ்ப்பெயர்ப்பின் நடையை தேவையான இடங்களில் பயன்படுத்திச் செல்வதாகவும் அமைந்துள்ளது எனலாம்.

7. மதில்கள்

வைக்கம் முகமது பஷீரின் 'மதிலுகள்' என்ற நாவலை சுரா(1980) என்பவர் 'மதில்கள்' என்ற தலைப்பில் மொழிபெயர்த்துள்ளார். இப்பெயர்ப்பு தருமொழி வடிவத்தை விளக்குமுறையில் தருவதாக உள்ளது. சான்றாக,

"உயர்ந்த கன்மதிலுகள் ஆகாசம் முட்டுந்ந மாதிரி, அது என்னெயும் ஸென்ட்றல் ஜயிலினெயும் சுற்றிக்கொண்டங்ஙனெ நில்க்குகயாணு, உள்ளில் அனேகம் கெட்டிடங்ஙள். அனேகம் மனுஉஷ்யர். தடவுகாரெயெல்லாம் அகத்தாக்கிக் கழிஞ்ஞு, கார்யமாய சப்தங்ஙளொந்நுமில்ல. வெளுப்பினு தூக்கிக்கொல்லேண்ட வருண்டு. காலாவதி தீர்ந்து நாளெ ஸ்வதந்த்ற லோகத்தேய்க்கு போகுந்நவருண்டு. எங்கிலும் ஆகெக்கூடி ஒரு . . . . . ஒரு ப்ரசாந்தத (உயர்ந்த கல்மதில்கள் வானத்தைத் தொடுவது மாதிரி. அவை என்னையும் சென்ட்ரல் ஜெயிலையும் வளைத்துக்கொண்டு அப்படி நிற்கின்றன. உள்ளே ஏராளம் கட்டிடங்கள். ஏராளம் மனிதர். கைதிகளை எல்லாம் உள்ளே தள்ளியாகிவிட்டது. குறிப்பிடத் தக்க ஆரவாரங்கள் எதுவும் இல்லை. விடியற்காலையில் தூக்கிவிட்டு கொல்லப் பட வேண்டியவர்கள் உண்டு. தண்டனைக் காலம் முடிந்து நாளை சுதந்திர உல கிற்குப் போகிறவர்கள் உண்டு. என்றாலும் மொத்தத்தில் ஒரு . . . . . . ஒரு அமைதி)"

(பஷீர், 1990:17)

என்பதை

"கற்களால் ஆன அந்த உயர்ந்த மதில்கள் வானத்தை முட்டிக்கொண்டி ருந்தன. அவை என்னையும் சென்ட்ரல் ஜெயிலையும் வளைத்துக்கொண்டிருந்தன. மதில்களினுள் இருந்த இடத்தில்தான் எத்தனை எத்தனை கட்டிடங்கள்! எத்தனை விதமான மாடிகள்! சிறைக் கைதிகள் அனைவரையும் உள்ளே அடைத்தாகிவிட்டது. அதனால் தானோ என்னவோ கொஞ்சம் கூடக் கூச்சல் இல்லை. ஆரவார மில்லை. சிறைச்சாலைகளின் நான்கு சுவர்களுக்குள் அடங்கிகிடக்கும் இத்தனை மனிதர்களிலே தான் எத்தனை விதங்கள்! பொழுது புலவதற்கு முன் தூக்கு கயிற்றில் வாழ்வின் இறுதி மூச்சை விடப்போகும் சிலர். தண்டனைக்காலம் முடிந்து சுதந்திரப்பறவைகளாய் உலகின் ஆரவாரம் கண்டு களிக்கப்போகும் சிலர்.

என்ன இருந்தாலும் அங்கே அமைதிக்கு மட்டும் கொஞ்சமும் பஞ்சமிருந்ததாகக் தெரியவில்லை.

(சுரா, 1990:58)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இங்கு "கன்மதிலுகள்" என்பதை "கற்களால் ஆன அந்த உயர்ந்த மதில்கள்" எனவும், "உள்ளில் அனேகம் கெட்டிடங்ஙள்" என்பதை "மதில்களினுள் இருந்த இடத்தில்தான் எத்தனை எத்தனை கட்டடங்கள்! எத்தனை விதமான மாடிகள்" எனவும், "அனேகம் மனுஷ்யர்" என்பதை "சிறைச்சாலைகளின் நான்கு சுவர்களுக்குள் அடங்கிக்கிடக்கும் இத்தனை மனிதர்களிலேதான் எத்தனை விதங்கள்" எனவும், "தடவுகாரெ யெல்லாம் அகத்தாக்கிக்கழிஞ்ஞு,கார்யமாய சபதங்ஙளொந்நுமில்ல" என்பதை" சிறைக்கைதிகள் அனைவரையும் உள்ளே அடைத்தாகிவிட்டது. அதனால் தானோ என்னவோ கொஞ்சம் கூடக் கூச்சல் இல்லை. ஆரவாரமில்லை" எனவும், "வெளுப்பினு தூக்கிக்கொல்லேண்டவருண்டு" என்பதை "பொழுது புலர்வதற்கு முன் தூக்குகயிற்றில் வாழ்வின் இறுதிமூச்சை விடப் போகும் சிலர்" எனவும், "காலாவதி தீர்ந்நு நாளெ ஸ்வதந்த்ர லோகத்தேய்க்கு போகுந்நவருண்டு" என்பதை "தண்டனைக்காலம் முடிந்து சுதந்திரப் பறவைகளாய் உலகின் ஆரவாரம் கண்டு களிக்கப்போகும் சிலர்" எனவும், "எங்கிலும், ஆகெக்கூடி ஒரு......ஒரு ப்ரசாந்தத" என்பதை "என்ன இருந்தாலும் அங்கே அமைதிக்கு மட்டும் கொஞ்சமும் பஞ்சமிருந்ததாகத் தெரியவில்லை" எனவும் மூலத்தைவிட விளக்கமான நிலையில் மொழிபெயர்ப்பு அமைந்துள்ளது.

இதன் அடிப்படையில் இம்மொழிபெயர்ப்பு தருமொழிவடிவத்தில் குறிப்பாக உள்ள பகுதிகளைச் சற்று விளக்கமாகவும், வெளிப்படையாகவும், வாசகர்களுக்கு வியப்பை ஏற்படுத்தும்படியாகவும் தருவதாக உள்ளது எனலாம்.

மேலும் இந்நாவலுக்கு 'மதிலுகள்' என்னும் தலைப்பில் நீலபத்மநாபன் (1985) மொழிபெயர்ப்பொன்றைச் செய்துள்ளார். இப்பெயர்ப்பு மூலநூலை நேரடிச் சொற்களால் வெளிப்படுத்திக்காட்டுவதாக அமைந்துள்ளது. சான்றாக,

"உயர்ந்நகன்மதிலுகள்............ஒரு ப்ரசாந்தத" (பஷீர், 1990:17) என மேல் காட்டியுள்ள பகுதியை நீலபத்மநாபன்,

"ஆகாயம் முட்டுமாறு உயரமான கருங்கல் மதில்கள், அவை என்னையும் சென்ட்ரல் சிறைச்சாலையையும் சூழ்ந்துகொண்டு நிற்கின்றன. உள்ளே ஏராளமான கட்டிடங்கள், ஏராளம் மனிதர்கள். கைதிகளை எல்லாம் உள்ளே தள்ளிவிட்டார்கள் குறிப்பிடும்படியான சப்தங்கள் எதுவும் இல்லை. விடியற்காலையில் சாகப்போகிறவர்கள் உண்டு. தண்டனைக் காலம் முடிவடைந்து நாளை வீடு திரும்புகிறவர்கள் உண்டு. எனினும் மொத்தத்தில் ஒரு அமைதி"

(நீலபத்மநாபன், 1985:153-154)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதில் "உயர்ந்நகன்மதிலுகள் ஆகாசம் முட்டுந்ந மாதிரி" என்பதை "ஆகாசம் முட்டுமாறு உயரமான கருங்கல் மதில்கள்" என சொல்வரிசை முறையை மாற்றியும், "வெளுப்பினு தூக்கிக்கொல்லேண்டவருண்டு" என்பதை "விடியற்காலையில் சாகப்போகிறவர்கள் உண்டு" என 'தூக்கிலிட்டு கொல்லப்படுதல்' என்ற குறிப்பை நீக்கியும், ஸ்வதந்த்ர லோகத்தேய்க்குப் போகுந்நவருண்டு" என்பதை "வீடு திரும்புகிறவர்கள் உண்டு" என தருமொழிவடிவத்திலிருந்து விலகியும் மொழிபெயர்ப்பு அமைந்துள்ளது.

இதன் அடிப்படையில் நீலபத்மநாபனின் மொழிபெயர்ப்பு மூலவடிவத்திலிருந்து சற்றுச்சுருக்கமாகவும், நேரடிச் சொற்களால் மொழிமாற்றம் பெற்றதாகவும் அமைந்துள்ளது எனலாம்.

மதிலுகள் என்ற நாவலுக்கு சுரா மற்றும் நீலபத்மநாபன் ஆசியவர்கள் செய்துள்ள மொழிபெயர்ப்பின் தன்மையைக்காண,

"ஞான் பறஞ்ஞு, வார்டர் மரிக்குந்நு. ஆத்மாவு தைவத்தின்றெ மகாஸன்னிதியில் செல்லுந்நு. தைவம் சோதிக்குந்நு. தரித்றவாஸியாய ஊற ஜயில் வார்டறே.........ஆ பாவப்பெட்ட பஊஷீறின்றெ ஒரு ப்லேடும் ஒரு தீப்பெட்டியும் ரண்டு கெட்டு பீடியும் எவிடெ? (நான் சொன்னேன். வார்டர் இறக்கிறார். ஆத்துமா கடவுளின் திருச்சன்னிதியில் செல்கிறது. கடவுள் கேட்கிறார். தரித்திரவாசியான ஏ ஜெயில் வார்டரே........அந்த ஏழையான பஊஷீரின் ஒரு பிளேடும் ஒரு தீப்பெட்டியும் இரண்டு கட்டு பீடியும் எங்கே)"

(பஊஷீர், 1990:21)

என்ற பகுதியை

"நீங்கள் செத்துப்போறீங்கன்னு வச்சுக்குவோம். அப்போ உங்க ஆவி உங்களை விட்டுப்பிரிஞ்சு போகும். பிரிஞ்ச ஆவி தெய்வத்தின் சந்நிதியில் போகும். அப்போ தெய்வம் கேட்கும். ஏய் தரித்திரம் பிடிச்ச வார்டரே! பாவம் அந்தப் பஊஷீரின் ப்ளேடும் தீப்பெட்டியும் இரண்டுகட்டு பீடியும் எங்கே"

(சுரா. 1980:60)

என சுராவும்

"நான் சொன்னேன். வார்டர் சாகிறான். ஆத்மா தெய்வத்தின் மகாசன்னிதியில் செல்கிறது. கடவுள் கேட்கிறார். தரித்திரவாசியான ஊறப் வார்டரே பாவம், அந்த பஊீரின் ஒரு பிளேடும் ஒரு நெருப்புப் பெட்டியும், ரண்டுகட்டு பீடியும் எங்கே?"

(நீலபத்மநாபன், 1985:159)

என நீலபத்மநாபனும் மொழிபெயர்த்துள்ளமையைப் பின்வருமாறு ஒப்பிடலாம்.

அட்டவணை எண்.5:1 சுரா, நீலபத்மநாபன் ஆகியவர்களின் மொழிபெயர்ப்பின் தன்மை

பஷீர் (மூலம்)	சுரா (மொழிபெயர்ப்பு-1)	நீலபத்மநாபன் (மொழிபெயர்ப்பு-2)
1. ஞான்பறஞ்ஞு	1. –	1. நான் சொன்னேன்
2. வார்டர் மரிக்குந்நு	2. நீங்கள் செத்துப்போ நீங்கன்னு வச்சுக்குவோம்	2. வார்டர் சாகிறான்
3. ஆத்மாவு தைவத்தின்றெ மகாஸன்னிதியில் செல்லுந்நு	3. அப்போ உங்க ஆவி உங்களை விட்டுப்பிரிஞ்சுபோகும். பிரிஞ்சஆவி தெய்வத்தின் சந்நிதியில் போகும்	3. ஆத்மா தெய்வத்தின் மகா சன்னிதியில் செல்கிறது.
4. தைவம் சோதிக்குந்நு	4. அப்போ தெய்வம் கேட்கும்	4. கடவுள் கேட்கிறார்
5. தரித்றவாஸியாய ஊறஜயில் வார்டறே... ஆ பாவப்பெட்ட பஷீறின்றெ ஒரு ப்லேடும் ஒரு தீப்பெட்டியும் ரண்டு கெட்டு பீடியும் எவிடெ?	5. ஏய் தரித்திரம்பிடிச்ச வார்டரே! பாவம். அந்தப் பஷீரின் ப்ளேடும் தீப்பெட்டியும் இரண்டு கட்டு பீடியும் எங்கே?	5. தரித்திரவாசியான ஊறப் வார்டரே பாவம், அந்த பஷீரின் ஒரு பிளேடும் ஒரு நெருப்புப்பெட்டியும் ரண்டுகட்டுபீடியும் எங்கே?

இங்கு முன்னிலையாரிடம் படர்க்கையில் பேசுவது போல அமைந்த தருமொழி வடிவத்தை சுரா தமிழ் வழக்கிற்கேற்ப மாற்றி முன்னிலையில் பேசுவதுபோலவும், நீலபத்மநாபன் மூலத்தில் காணப்படுவதுபோலவும் மொழிபெயர்த்துள்ளனர். மேலும் சுராவின் மொழிபெயர்ப்பு சற்று விரிவாக அமைந்து மூலத்தின் இயல்பைப் பிரதிபலித்துக்காட்டுவதாகவும், நீலபத்மநாபனின் மொழிபெயர்ப்பு மூலத்தின் சொற்களை அப்படியே பெயர்த்துத்தருவதாகவும் அமைந்தது எனலாம்.

8. ஐந்து செண்ட் நிலம்

மலயாற்றூர் இராமகிருஷ்ணனின் 'அஞ்சுஸெண்ற்' என்ற நாவலை குறிஞ்சிவேலன் (1982) 'ஐந்து செண்ட் நிலம்' என மொழிபெயர்த்துள்ளார். இப்பெயர்ப்பு மூலநூலை அப்படியே பிரதிபலித்துக் காட்டுவதாக உள்ளது. சான்றாக,

"ஸர்க்கார் கார்யங்ஙள் அங்ஙனெயாணெந்நு ராமேட்டனு தோந்நி. கடலாஸ் பரிசோதிக்குந்நயாள் மனுஷ்யத்வமுள்ளவனாவாம். சரி செய்யணமெந்ந நிர்பந்தம் அயாள்க்குண்டாவாம். பக்ஷே அத்றுஷ்யமாய எந்தோ சிலது அயாளுடெ கைகளெ வரிஞ்ஞு கெட்டுந்நு. பிடிச்சு நிர்த்துந்நு. (அரசினரின் காரியங்கள் அப்படித்தானென்று ராமேட்டனுக்குத் தோன்றியது. விண்ணப்பத்தைப் பரிசோதிக்கும் நபர் மனிதத்தன்மை உடையவர் ஆகலாம். நீதி செய்யவேண்டும் என்ற கட்டாயம் அவருக்கு ஏற்படலாம். ஆனால் கண்ணுக்குப் புலப்படாத ஏதோ சில அவரின் கைகளை இறுக்கிக்கட்டுகின்றன. பிடித்து நிறுத்துகின்றன)".

(மலயாற்றூர் ராமகிருஷ்ணன், 1991:47)

என்பதை

"அரசாங்க வேலைகள் அப்படித்தானென்று ராமேட்டனுக்குத்தோன்றியது. விண்ணப்பத்தைப் பரிசோதிப்பவன் மனிதத்துவம் உள்ளவனாக இருக்கலாம். செய்யலாம் என்ற நிர்ப்பந்தமும் அவனுக்கு உண்டாகலாம். ஆனால் புலப்படாத எவையோ சில அவன் கைகளை வரிந்து கட்டும். பிடித்து நிறுத்தும்"

(குறிஞ்சிவேலன், 1982:61)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதில் "ஸர்க்கார் கார்யங்ஙள்" என்பதை "அரசாங்கவேலைகள்" என கருத்தடிப்படையில் மாற்றிணை மூலமாகவும், "மனுஷ்யத்துவம்" என்பதை "மனிதத்துவம்" என ஒலிபெயர்த்தும் மொழிமாற்றியுள்ளார். "சரி செய்யணமெந்ந நிர்பந்தம்", "அத்றுஷ்யமாய் எந்தோ சிலது" என்பவைகளை முறையே "செய்யலாம் என்ற நிர்பந்தம்", "புலப்படாத எவையோ சில" என "சரி", "த்றுஷ்யம்" ஆகிய பொருட்கூறுகளை நீக்கி அவற்றை உய்த்துணரும் வகையில் பெறுமொழிவடிவத்தை அமைத்துள்ளார். மேலும் 'கெட்டுந்நு', 'நிர்த்துந்நு' என்ற நிகழ்கால வடிவங்களை தமிழில் கெட்டும், நிறுத்தும் என்ற எதிர்கால வடிவங்களாக மொழிபெயர்த்துள்ளார் (தமிழில் இவ்வெதிர்காலம் நிகழ்காலத்தையும் உணர்த்தும் தன்மை பெற்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது).

இதன் அடிப்படையில் இம்மொழிபெயர்ப்பு மாற்றிணைப்பயன்பாட்டுடன் குறிப்பாக தருமொழிவடிவத்தை விளக்கும் நோக்கில் அமைந்தது எனலாம்.

9. அதே கடிதம்

பஷீரின் 'ப்ரேமலேகனம்' என்ற நாவலை "அதே கடிதம்" என்ற தலைப்பில் சுரா (1983) மொழிபெயர்த்துள்ளார். இப்பெயர்ப்பு தருமொழி வடிவத்தினை விளக்கும் நோக்கில் விரிவாகவும், இடையிடையே சிலவற்றை நீக்கி யதாகவும் அமைந்துள்ளது எனலாம். சான்றாக,

"ஸாறாம்ம எந்தாணு மோஉந்டிக்குவான் துடங்ஙியது? . . . . . பழ்ஸாணெங்கில் கேசவன் நாயருடெ போக்கற்றில்த்தென்னெயுண்டு. வல்ல உஷர்ட்டோ முண்டோ ஆயிரிக்குமோ? . . . . அதோ வல்ல புஸ்தகமாணோ? அங்ஙனெயெங்கில் அவள் வாயிக்காத்ததாயி அவிடெ எந்துண்டு? இது வேண்டாயி ருந்நல்லோ ஸாறாம்மே! ஞான் ஸாறாம்மயெ என்றெ ஜீவனெக்காள் ஸ்னேகிக் குந்நுண்டல்லோ. என்னோடு சோதிச்சிருந்நெங்கில் எந்தும், எந்தும் ஞான் தருமாயிருந்நில்லே? (சாறாம்மா எதைத் திருடத்தொடங்கினாள்.....பர்சு தாவென்றால் கேசவன் நாயரின் பாக்கட்டில்தான் இருக்கிறது. ஏதாவது சட்டையோ, வேட்டியோ ஆக இருக்குமோ. . . . அதோ ஏதாவது புத்தகமோ? அப்படித்தானென்றால் அவள் வாசித்திராததாக அங்கே என்ன இருக்கிறது? இது தேவையில்லையே ஸாறாம்மா. நான் ஸாறாம்மையை என் னுடைய உயிரைவிடவும் நேசிக்கிறேனே. என்னிடம் கேட்டிருந்தால் எதையும், எதையும் நான் தருவேனே)"

(பஷீர், 1991:14)

என்பதை

"அப்படி அங்கே எதை எடுக்க முயன்று கொண்டிருந்தாள் சாராம்மா? மணிபர்ஸ் என்றால் அது கேசவனின் ஜேபியில் அல்லவா இருக்கிறது? ஒரு வேளை வேட்டி, சட்டை எதையாவது எடுக்க எத்தனித்துக்கொண்டிருக்கிறாளோ? இல்லாவிட்டால் ஏதாவது புத்தகத்தைத் தேடியிருப்பாளோ? அப்படி வைத்துக்கொண்டாலும் அவள் வாசிக்காத புத்தகம் அங்கே என்ன இருக்கிறது? இது தேவை தானா சாராம்மா? உன்னை நான் என் உயிரிலும் மேலாக நேசிக்கிறேனே. உனக்குத்தெரியுமா? என்னிடம் ஒருவார்த்தை சொல்லியிருந்தால் உலகத்தையே உன்கையில் கொண்டுவந்து தருவேன், உனக்குத் தெரியுமா?

(சுரா, 1983:43)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதில் "ஸாறாம்ம எந்தானு மோஉ்டிக்குவான் துடங்ஙியது"? என்பதை "அப்படி அங்கே எதை எடுக்க முயன்றுகொண்டிருந்தாள் சாராம்மா" எனவும், "வல்ல உஷர்ட்டோ முண்டோ ஆயிரிக்குமோ" என்பதை "ஒருவேளை வேட்டி சட்டை எதையாவது எடுக்க எத்தனித்துக்கொண்டிருப்பாளோ?" எனவும், "அதோ வல்ல புஸ்தகமாணோ" என்பதை "இல்லாவிட்டால் ஏதாவது புஸ்தகத்தைத் தேடியிருப்பாளோ?" எனவும், அங்ஙனெ யெங்கில் அவள் வாயிக்காத்ததாயி அவிடெ எந்துண்டு" என்பதை "அப்படி வைத்துக்கொண்டாலும் அவள் வாசிக்காத புத்தகம் அங்கே என்ன இருக்கிறது" எனவும், "ஞான் ஸாறாம்மயெ என்றெ ஜீவனேக்காள் ஸ்னேகிக்குந்நுண்டல்லோ என்னோடு சோதிச்சிருந்நெங்கில் எந்தும், எந்தும் ஞான் தருமாயிருந்நல்லே?" என்பதை "சாராம்மா? உன்னை நான் என் உயிரினும் மேலாக நேசிக்கிறேன். உனக்குத் தெரியுமா? என்னிடம் ஒரு வார்த்தைச்சொல்லியிருந்தால் உலகத்தையே உன் கையில் கொண்டுவந்து தருவேன். உனக்குத் தெரியுமா?" எனவும் தருமொழி வடிவத்தின் சூழலை விளக்கும் நோக்கில் நடை விரிவுசெய்த மொழிபெயர்ப்பை அமைத்துள்ளார்.

இதனடிப்படையில் இம்மொழிபெயர்ப்பு மூலத்தின் சூழலை விளக்கும் நோக்கில் சற்று விளக்கமாக அமைந்துள்ளது எனலாம்.

10. காலம்

எம்.டி. வாசுதேவன் நாயரின் 'காலம்' என்ற நாவலை மணவை முஸ்தபா (1985) மொழிபெயர்த்துள்ளார். இப்பெயர்ப்பு பெரும்பாலும் மூலத்தை அப்படியே பிரதிபலித்துக்காட்டுவதாக அமைந்துள்ளது. சான்றாக,

"புறத்து உச்சவெயில் கத்திக்காளுகயாயிருந்நு உஷ்ணம். கவுங்ஙின் தோட்டத்திலூ டெ வல்லப்போழும் கடந்நு வருந்ந ஒரு வீர்ப்புக்காற்றில் தீ நாளங்ஙளுண்டெந்நு தோந்நி. அடிச்சுவாரி நனஞ்ஞு தேப்புகொண்டு ஒந்நு துடச்சு வ்ருத்தியாக்கியிருந்நெங்கில் நிலத்து கிடக்காமாயிருந்நு. பக்ஷே நிலம் பொட்டி பொளிஞ்ஞு பொடிபுரண்டு கிடக்குந்நு. (வெளியில் உச்சை வெயில் கொளுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்தது. வெப்பம் கமுகுத்தோட்டத்தின் வழியே எப்போதாவது கடந்துவரும் வெப்பக்காற்றில் தீப்பொறிகள்உண்டென்று தோன்றியது. பெருக்கி ஈரத்துணியால் ஒன்று துடைத்து சுத்தமாக்கியிருந்தால் தரையில் படுக்கலாமாக இருந்தது. ஆனால் தரை உடைந்து நொறுங்கி தூசுபட்டு கிடக்கிறது)"

(எம்.டி. வாசுதேவன் நாயர், 1980:11)

என்பதை

"வெளியே மதியவெயில் கொளுத்திக்கொண்டிருந்தது. கமுகுத்தோட்டத்தினூடே எப்போதாவது கடந்துவரும் வெப்பக்காற்றில் தீக்கங்குகள் இருப்பது போல் தோன்றியது. கூட்டிப்பெருக்கி ஈரத்துணியால் துடைத்துச் சுத்தப்படுத்தியிருந்தால் தரையில் படுக்கலாம். ஆனால் தரையோ துண்டு துக்காணியாக உடைந்தும் புழுதி படிந்தும் கிடந்தது"

(மணவைமுஸ்தபா, 1985:1)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதில் "உச்சவெயில் கத்திக்காளு கயாயிருந்நு" என்பதை "மதியவெயில் கொளுத்திக்கொண்டிருந்தது" எனவும் "அடிச்சுவாரி" என்பதை "கூட்டிப்பெருக்கி" எனவும் "நிலம் பொட்டி பொளிஞ்ஞு பொடிபுரண்டு கிடக்குந்நு என்பதை "தரையோ துண்டு துக்காணியாக உடைந்தும் புழுதிபடிந்தும் கிடந்தது" எனவும், மாற்றிணைகளைப்பயன்படுத்தி மொழிபெயர்ப்பை அமைத்துள்ளார்.

மொத்தத்தில் இம்மொழிபெயர்ப்பு மாற்றிணைகளின் மூலம் நடைமாற்றத் தைப்பெற்று தருமொழிவடிவத்தை அவ்வாறே பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது எனலாம்.

2. சிறுகதை

1. சிறுகதை மொழிபெயர்ப்பு பற்றிய மதிப்பீடு சங்கமம், மலையாளச் சிறுகதைகள், சமீபத்திய மலையாளச் சிறுகதைகள் ஆகிய தொகுப்புகளை அடிப் படையாகக்கொண்டு செய்யப்பட்டுள்ளது. மேலும் 'ஒட்டகம்' என்ற சிறுகதைக்கு சௌரி (சங்கமம்), புஊ்பவேணிகோவி (மலையாளச்சிறுகதைகள்) ஆகியவர்கள் செய்துள்ள மொழிபெயர்ப்புகளை ஒப்பிடுவதாகவும் இப்பகுதி அமைந்துள்ளது.

1. சங்கமம்

சௌரியின் (1957) மொழிபெயர்ப்பாக 'சங்கமம்' என்ற சிறுகதைத் தொகுப்பு அமைந்துள்ளது. இதில் எஸ்.கே. பொற்றெக்காடின் சங்கமம், நினைவுகள், க்வஉேறரி, ஒட்டகம், சிதைந்த கனவு, மணியோசை, பட்டுச்சொக்காய், விதி, இருட்டில் கூஷயரோகி, வெறிநாய், தர்மசாலையில், அவனுடைய கேரளம் என்ற கதைகள் இடம்பெற்றுள்ளன. இம்மொழிபெயர்ப்பு மூலத்தைத் தழுவிச்செல்வதோடு ஆங்காங்கே மாற்றிணைகளைப் பெற்றதாகவும் உள்ளது. சான்றாக 'ஒட்டகம்' என்ற சிறுகதையில் இடம்பெற்றுவரும்

"எல்வாரும் அவனெ ஒட்டகம் எந்நாணு விளிக்குந்நது. நீண்டு மெலிஞ்ஞு கம்பித்தூணுகள் போலுள்ள காலுகள் கட்டப்பாரபோலுள்ள கைகள், நீண்ட கழுத்துள்ள சீலபரணி போலுள்ள நெஞ்ஞு. ஈ கடகங்ஙள்க்கு முகளில் உணங்ஙிய மச்சித்தேங்ஙபோலுள்ள ஒரு தலயும்! அதாணு ஒட்டகம் (எல்லாரும் அவனை ஒட்டகம் என்றுதான் அழைப்பது வழக்கம். நீண்டு மெலிந்த கம்பித்தூண்கள் போன்ற கால்கள், கடப்பாரைகள் போன்ற கைகள். நீண்ட கழுத்துள்ள சீனஜாடி போன்ற நெஞ்சு. இந்த சேர்க்கைகளுக்கு மேல் உலர்ந்த ஒல்லித் தேங்காய் போன்ற ஒரு தலையும் அதுதான் ஒட்டகம்)".

(எஸ்.கே. பொற்றெக்காடு, 1990:85)

என்ற பகுதியை

"எல்லோரும் அவனை ஒட்டகம் என்றுதான் அழைப்பது வழக்கம். நீண்ட, மெல்லிய இருப்புத்தூண்கள் போலக்கால்கள், கடப்பாரை மாதிரிக் கைகள், கழுத்து நீண்ட பெரிய சீனாஜாடி போன்ற மார்பு. இந்தச் சேர்க்கைக்குக்கு மேலே ஒல்லித்தேங்காய் போல் ஒரு தலை! இது தான் ஒட்டகம்".

(சௌரி,1957:59)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதில் "நீண்டு மெலிஞ்ஞு கம்பித்தூண்போலுள்ள காலுகள்" என்பதை "நீண்ட மெல்லிய இரும்புத்தூண்கள் போலக் கால்கள்" எனக் காலுக்குரியதாக வரும் (நீண்டு மெலிஞ்ஞு) வினையெச்ச அமைப்பிலான அடையை 'நீண்ட மெல்லிய' எனப் பெயரெச்ச அடுக்கைப்பயன் படுத்தி மொழிபெயர்த்துள்ளார். இதனால் காலின் தன்மையைக் குறிக்கும் நீண்டு மெலிந்த தன்மை கம்பித்தூணுக்குரியதாக மாற்றம் பெற்றுள்ளது. இந்தக் கவர்பொருளைத் தவிர்க்க தருமொழிவடிவத்தில் காணப்படுவதுபோல் வினையெச்ச அடுக்கைப்பயன்படுத்தி மொழிபெயர்த்திருக்கவேண்டும். மேலும் "நீண்ட கழுத்துள்ள சீலபரணி போலுள்ள நெஞ்ஞு" என்பதை "நீண்ட பெரிய

சீனஜாடி போன்ற மார்பு" என "நீண்ட கழுத்துள்ள" என்பதற்குப் பதிலாக "நீண்ட பெரிய" என மாற்றிணையைப்பயன்படுத்தி மொழிபெயர்த்துள்ளார் (இங்கு நீண்ட கழுத்துள்ள என்ற பெயரெச்ச அடுக்கு சீனப்பரணிக்கு அடையாக உள்ளது. இதைப் பெறுமொழி வடிவத்திலும் பெயரெச்ச அடுக்கைப்பயன்படுத்தி சீனப்பரணிக்கு அடையாக மொழிபெயர்த்துள்ளார்).

இதன் அடிப்படையில் சௌரியின் மொழிபெயர்ப்பு மாற்றிணைகளைப் பெற்றுச்சிறப்புடன் திகழ்வதோடு ஒருசில குறைகளையும் கொண்டுள்ளது எனலாம்.

இச்சிறுகதையை புஉஷ்பவேணி கோவி (1971) என்பவரும் மொழி பெயர்த்துள்ளார். இம்மொழிபெயர்ப்பு பெரும்பாலும் சொல்லுக்குச்சொல் சரியாகச் செய்யப்பட்டது. சான்றாக "எல்லாரும் அவனெ. . . . ஒருதலையும்" (எல்.கே. பொற்றெக்காடு, 1990:85) என முன்காட்டியுள்ள பகுதியை

"யாவரும் அவனை ஒட்டகம் என்றே அழைப்பது வழக்கம். நீண்டு மெலிந்த கம்பித்தூண்கள் போன்ற கால்கள், கடப்பாரைபோன்ற கைகள். நீளக்கழுத்தை உடைய சீன ஜாடியை ஒத்த நெஞ்சு. இத்தகைய உறுப்புக்களின் மேல் காய்ந்த தேங்காய் போன்ற தலை! அவன்தான் ஒட்டகம்,"

(புஉஷ்பவேணிகோவி, 1990:69)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதில் "எல்லாரும்" என்பதை 'யாவரும்' எனவும், "விளிக்குந்நது" என்பதை "அழைப்பது வழக்கம்" எனவும் மாற்றிணை மூலம் மொழிபெயர்த்துள்ளார். மேலும் "நீண்டுமெலிஞ்ஞு கம்பித்தூண் போலுள்ள காலுகள்" என்பதில் காலுக்கு அடையாக உள்ள "நீண்டு மெலிஞ்ஞு"

என்ற மைந்த வினையெச்ச அடுக்கால்ஜன ஐடையை "நீண்டு மெலிந்த கம்பித் தூண்கள் போன்றகால்கள்" என வினையெச்சம் (நீண்டு), மற்றும் பெயரெச்ச (மெலிந்த) அடைகளால் கம்பித்தூணுக்கு உரியதாக்கித் தவறுபட மொழி பெயர்த்துள்ளார். "உணங்கிய மச்சிதேங்ங" என்பதை "மச்சி(ஒல்லி)" என்ற பொருட்கூறை நீக்கி "காய்ந்த தேங்காய்" என மொழிமாற்றியுள்ளார்.

இதன் அடிப்படையில் புஉஷ்பவேணிகோவியின் மொழிபெயர்ப்பு பொருட்கூறுகள் சிலவற்றை நீக்கியும் மாற்றிணைகளைப் பயன்படுத்தியும் அமைந்தது எனலாம்.

'ஒட்டகம்' என்ற சிறுகதைக்கு சௌரி மற்றும் புஉஷ்பவேணிகோவி ஆசிரியர்கள் செய்துள்ள மொழிபெயர்ப்பின் தன்மையைக் காண

"ஆகஸ்த் விப்லவம் கொண்டு இந்திய கலங்ஙி. ரண்டாம் லோகமகா யுத்தம் அவஸானிச்சு. இந்திய ஸ்வாதந்த்ர்யம் ப்ரக்யாபிச்சு. ஒட்டகம் அதொந்நுமறிஞ்ஞில்ல. ஈ லோகத்தில் அஸாதாரணமாயி சிலது நடக்குந்நுண்டெந்நு ரண்டு ப்றாவசியம் மாத்ரம் அனுபவப்பெட்டு (ஆகஸ்ட் புரட்சியால் இந்தியா அதிர்ந்தது. இரண்டாம் உலகப்போர் முற்றுப்பெற்றது. இந்தியா விடுதலை அடைந்தது. ஒட்டகம் அதொன்றும் அறியவில்லை. இந்த உலகில் அசாதாரணமாக சில நடக்கின்றன என்று இரண்டுமுறை மட்டுமே அனுபவபூர்வமாக உணர்ந்தான்)"

(எஸ்.கே. பொற்றெக்காடு, 1990:87)

என்ற பகுதியை

"ஆகஸ்டுப் புரட்சியில் தேசமே கிடுகிடுத்தது. உலகப்போர் முடிவடைந்தது. இந்தியா விடுதலை பெற்றது. ஒட்டகத்திற்கு இதெல்லாம் தெரியாது. உலகில் சில அதிசயமான நிகழ்ச்சிகள் நடக்கின்றன. என்பதை இருமுறை அவன் அனுபவப் பூர்வமாக உணர்ந்தான்"

(சௌரி, 1957:61)

எனச்சௌரியும்,

"ஆகஸ்டு போராட்டத்தில் இந்தியாவே கலங்கியது. இரண்டாம் உலகப்போர் முடிந்தது. இந்தியா சுதந்திரம் அடைந்தது. ஒட்டகம் இதை ஒன்றையும் அறியவில்லை. இந்த உலகத்தில் அசாதாரணமாகவும் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன என்பதை அவன் இரண்டு முறைகள் தன் அனுபவத்தில் உணர்ந்தான்".

(புஉஷ்பவேணிகோவி, 1990:70)

என புஉஷ்பவேணிகோவியும் மொழிபெயர்த்துள்ளனர். இவற்றைப் பின்வருமாறு ஒப்பிடலாம்.

அட்டவணை என்.5:2 சௌரி, புஉஷ்பவேணிகோவி ஆகியவர்களின் மொழிபெயர்ப்பின் தன்மை

எஸ்.கே. பொற்றெக்காடு (மூலம்)	சௌரி (மொழிபெயர்ப்பு-1)	புஉஷ்பவேணிகோவி (மொழிபெயர்ப்பு-2)
1. ஆகஸ்த் விப்லவம் கொண்டு இந்திய கலங்ஙி	1. ஆகஸ்டுப்புரட்சியில் தேசமே கிடுகிடுத்தது	1. ஆகஸ்டுபோராட்டத்தில் இந்தியாவே கலங்கியது
2. ரண்டாம் லோகமகா யுத்தம் அவஸானிச்சு	2. உலகப்போர் முடிவடைந்தது	2. இரண்டாம் உலகப்போர் முடிந்தது.
3. இந்திய ஸ்வாதந்த்ர்யம் பரக்யாபிச்சு	3. இந்தியாவிடுதலை பெற்றது	3. இந்தியா சுதந்திரம் அடைந்தது.
4. ஒட்டகம் அதொந்நுமறிஞ்ஞில்ல	4. ஒட்டகத்திற்கு இதெல்லாம் தெரியாது	4. ஒட்டகம் இதை ஒன்றையும் அறியவில்லை
5. ஈலோகத்தில் அஸாதாரணமாயி சிலது நடக்குந்நுண்டெந்நு ரண்டுப்ராவசியம் மாத்ரம் அனுபவப்பெட்டு	5. உலகத்தில் சில அதிசயமான நிகழ்ச்சிகள் நடக்கின்றன என்பதை இருமுறை அவன் அனுபவபூர்வமாக உணர்ந்தான்.	5. இந்த உலகத்தில் அசாதாரணமாகவும் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன என்பதை அவன் இரண்டுமுறைகள் தன் அனுபவத்தில் உணர்ந்தான்

இங்கு சௌரி, 'இந்திய கலங்கி' என்பதை 'தேசமே சிலிர்த்தது' எனவும், 'அதொந்நுமறிஞ்ஞில்ல' என்பதை' இதெல்லாம் தெரியாது' எனவும்' 'ஈ லோகத்தில் அஸாதாரணமாயி சிலது' என்பதை 'உலகத்தில் சில அதிசயமான நிகழ்ச்சிகள்' எனவும், 'ரண்டு ப்றாவசியம் மாத்றம் அநுபவப்பெட்டு என்பதை 'இருமுறை அவன் அனுபவபூர்வமாக உணர்ந்தான், எனவும் மாற்றிணைகளைக் கொண்டும், 'ரண்டாம் லோக மகாயுத்தம்' என்பதை 'உலகப்போர்' என 'இரண்டாம்' என்ற குறிப்பை நீக்கியும் மொழிபெயர்த்துள்ளார். மேலும் புஷ்பவேணிகோவி 'இந்திய கலங்கி' என்பதை 'இந்தியாவே கலங்கியது' எனவும், 'அதொந்நுமறிஞ்ஞில்ல' என்பதை 'இதை ஒன்றையும் அறியவில்லை' எனவும், 'அஸாதாரணமாயி சிலது' என்பதை' அசாதாரணமாகவும் நிகழ்ச்சிகள்' எனவும், 'ரண்டு ப்றாவசியம் மாத்றம் அநுபவப்பெட்டு' என்பதை 'அவன் இரண்டுமுறைகள் தன் அனுபவத்தில் உணர்ந்தான்' எனவும் மாற்றிணைகளின் மூலம் மொழிபெயர்ப்பை அமைத்துள்ளார்.

இவற்றிலிருந்து சௌரியின் மொழிபெயர்ப்பு மாற்றிணைகளைப்பெற்றதாகவும், சில பொருட்கூறுகளை நீக்கியதாகவும் காணப்படுகிறது என்பதையும், புஷ்பவேணி கோவியின் மொழிபெயர்ப்பு மாற்றிணைகளுடன் தருமொழிவடிவத்தை ஒத்துச்செல்வதாகவும் உள்ளது என்பதையும் அறிந்துகொள்ளலாம்.

2. மலையாளச் சிறுகதைகள்

புஷ்பவேணிகோவி (1971) என்பவர் கெ. சுகுமாரனின் 'சிதமாயசதி (சரியான ஏமாற்று)' என்ற சிறுகதையை 'சதித்திட்டத்தின் முடிவு' என்றும், அம்பாடி நாராயணப்பொதுவாளின் 'நீறி தெளிஞ்ஞகுறு (நீறித்தெளிந்த உண்மை)' என்பதை 'குற்றம் தெளிந்தது' எனவும், ஈ.வி. கிருஷ்ணபிள்ளையின் 'அவளுடெ கதயெழுத்து' என்பதை 'அவள் கதை எழுதினாள்' என்றும், எஸ். ராமவாரியாரின் 'தப்தபாஷ்பம் (சோகக்கண்ணீர்)' என்பதை 'கண்ணீர்' என்றும், பி.கேசவதேவின்

'அச்சனும் பார்யயும் (அப்பாவும்மனைவியும்)' என்பதை 'தந்தையும் மனைவியும்' எனவும், தகழியின் 'சீட்டுக்காரி கொச்சுநாணி', எஸ்.கே. பொற்றெக்காடின் 'ஒட்டகம்' பஷீரின் 'ஐசுக்குட்டி' ஆகிய சிறுகதைகளை அதே தலைப்புகளிலும், லலிதாம்பிகா அந்தர் ஜனத்தின் 'விதிபலம்' என்பதை 'தலைவிதி' எனவும், பொன் குந்நம் வர்க்கியின் "கடயுடெதாக்கோல் (கடையின் சாவி)" என்பதை 'கடைச்சாவி' எனவும், பி.ஸி. குட்டிக்கிருஷ்ணனின் 'முளகுவள்ளியை' 'மிளகுக்கொடி' எனவும், நாகவள்ளி ஆர்.எஸ். குறுப்புவின் 'சிதறிய சீட்டுக்கட்டு' என்பதை 'சிதறிப்போன சீட்டுக்கட்டு' எனவும், கெ. சரஸ்வதி அம்மாவின் 'ஸ்வார்த்தத (தன்னலம்)' என்பதை 'சுயநலம்' என்றும், இ.எம். கோவூரின் 'பாறக்கல்லு' என்பதை 'கூழாங்கல்' என்றும், என்.பி. செல்லப்பன் நாயரின் 'ஒடுவிலெத்தெ கண்ணி' என்பதை 'கடைசிக்கண்ணி' எனவும், புளிமான பரமேசுவரன் பிள்ளையின் 'செருப்பு குத்தியுடெ மகள்' என்பதை 'செருப்பு தைப்பவன் மகள்' என்றும், வெட்டூர்ராமன் நாயரின் "களவு போய மால' என்பதைக் 'காணாமல் போன சங்கிலி' எனவும், போஞ்ஞிக்கரராபியின் 'ஸ்வர்ணவாச்சு' என்பதை 'தங்கவாச்சு' எனவும், எம்.டி.வாசுதேவன் நாயரின் 'பள்ளிவாளும் கால்சிலம்பும்' என்பதை 'திருவாளும் காற்சிலம்பும்' எனவும் மொழிபெயர்த்து 'மலையாளச் சிறுகதைகள்' என்ற இந்நூலை அமைத்துள்ளார்.

புஷ்பவேணிகோவியின் இம்மொழிபெயர்ப்பு சொல்லுக்குச் சொல் சரியாகச் செய்யப்பட்டதாகும். சான்றாக ஈ.வி. கிருஷ்ணபிள்ளையின் 'அவளுடெ கதயெழுத்து' என்ற சிறுகதையிலுள்ள,

"அவள் ஸதா ஆக்யாயிகா பாராயணத்தில் ஸமயம் கழிச்சு வந்நு, அல்பமாய இம்க்லீஷ் ஞானம் கொண்டு வாயிக்காவுந்ந நோவலுகளெல்லாம் ஆ பாஷயில் வாயிச்சு தீர்த்து. அதோடு கூடி உயர்ந்நதரம் க்ரந்தங்ஙள் வாயிக்குவானும் அவள்க்கு அபிருசி கூடிவந்நு. இங்ஙனெ என்றெ சுருக்கமாய வரவுகொண்டு வாயிக்காவுந்நேடத்தோளம் நோவலுகள் அவள் வாயிச்சு கழிஞ்ஞு. நோவல்

வாங்டுவான் எந்நுள்ள பொலிச்சிலவு பறஞ்ஞு வல்லதும் குறெ வஸ்துக்கள் உள்ளது வில்க்குக நந்நல்லெந்நு எனிக்குத்தோந்நி நேரு பறயணமல்லோ. அம்முக்குட்டி அதினென்னெ தீரெ நிர்பந்திச்சதுமில்ல. நிர்ப்பந்திச்சால் ஞான் அங்ஙனெ ஸம்மதிக்கு கயில்லெந்நு அவள்க்கு பூர்ண போத்யமுண்டாயிருந்நு. ஞான் அத்ர நிஷ்டூரனாய ஒரு பர்த்தாவல்ல. ஸ்த்ரீகள் புருஷன் மாருடெ வருதி அனுஸரிச்சு நடக்கணம். அது கொண்டு புஸ்வத்து எழுதிக்கொடுத்து நோவலுகள் வாங்ஙான் என்னெ நிர் பந்திக்குந்நதினு அவள் பயப்பெட்டிரிக்கணம். பக்ஷே எனிக்கு ஈ நோவலுகளில் தீரெ ரஸமில்ல. வல்ல ப்ராந்தன்மாரும் எழுதிக்கூட்டுந்ந அம்மாவிக்கதகள் வாயிச்சு ஸமயம் களயுவான் ஞான் ஒருங்ஙியில்ல (அவள் எப்போதும் நாவல் வாசிப்பதில் நேரத்தைக் கடத்திவந்தாள். சிறிது ஆங்கில அறிவைக்கொண்டு வாசிக்கத்தக்க நாவல்களையெல்லாம் அந்த மொழியில் வாசித்து முடித்தாள். அத்துடன் உயர்ந்த ரகத்தைச் சார்ந்த நூல்களை வாசிக்கவும் அவளுக்கு ஆவல் மிகுந்து வந்தது. இப்படி என் சுருங்கிய வருவாயில் வாசிக்கக்கூடிய அளவுக்கு நாவல்களை அவள் வாசித்துத்தீர்த்தாள். நாவல் வாங்குவதற்கென்ற சிலவைச் சொல்லி ஏதாவது கொஞ்சம் சொத்துக்கள் உள்ளதை விற்பது நல்லதல்ல என்று எனக்குத்தோன்றியது. உண்மை சொல்லவேண்டுமல்லவா. அம்முக்குட்டி அதற்கென் னைக் கொஞ்சமும் கட்டாயப்படுத்தியதுமில்லை. கட்டாயப்படுத்தினால் நான் அப்படி சம்மதிக்கமாட்டேன் என்று அவளுக்கு முழு நம்பிக்கை உண்டு. நான் அவ்வளவு கண்டிப்பற்ற ஒரு கணவன் அல்ல. பெண்கள் ஆண்களின் வருமானத்தை அனுசரித்து நடக்கவேண்டும். அதனால் நிலபுலன்களை விற்று நாவல்களை வாங் குவதற்கு என்னைக் கட்டாயப்படுத்த அவள் பயப்பட்டிருக்கவேண்டும். ஆனால் எனக்கு இந்த நாவல்களில் கொஞ்சமும் இரசனை இல்லை. ஏதாவது கிறுக்கர்கள் எழுதித்தள்ளுகிற மாமிக்கதைகளை வாசித்து நேரம்போக்க நான் தயாராகவில்லை)"

(ஈ.வி.கிருஷ்ணபிள்ளை, 1990:27)

இப்பகுதியை

"அவள் சதா நாவல் படிப்பதிலேயே காலத்தைக் கடத்திவந்தாள். ஏதோ சிறிது இங்கில்உீ் அறிவால் வாசிக்கக்கூடிய நாவல்களை எல்லாம் அவள் அம்மொழியிலேயே வாசித்து முடித்திருந்தாள். அத்துடன் உயர்ந்த இலக்சியங்களைப் படிப்பதிலும் அவள் ஆவல் அதிகரித்தது. ஏதோ என் சிறிய வருமானத்தில் வாசிக்கக் கூடிய நாவல்களையெல்லாம் அவள் படித்து முடித்தாள். நாவல் வாங்குவதற்காக இருந்த பொருட்களை விற்பது நல்லதல்ல என எனக்குத் தோன்றியது. உண்மையைக் கூறவேண்டுமல்லவா? அம்முக்குட்டி அவ்விதம் செய்ய என்னை நிர்ப்பந்திக்கவுமில்லை. நிர்ப்பந்தம் செய்தாலும் நான் அதற்கு ஒத்துக்கொள்ளமாட்டேன் என்று அவள் பூரணமாக அறிந்திருந்தாள். நான் அப்படிப்பட்ட ஒரு கணவன். பெண்கள் கணவனது வருமானத்தை அனுசரித்துப் போகவேண்டும். ஆகவே சொத்தை எழுதிவைத்து நாவல்கள் வாங்கச்சொல்ல அவளுக்குத் தைரியம் போதவில்லையோ என்னவோ? ஆனால் எனக்கு இந்த நாவல்கள் ரசிப்பதே இல்லை. ஏதோ பைத்தியக்காரர்கள் கிறுக்கிவைத்திருந்த பாட்டிக்கதைகளை யெல்லாம் படிக்க நான் தயாராக இல்லை".

(புஉீபவேணிகோவி, 1990:23)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதில் 'ஸமயம்' என்பதை 'காலம்' எனவும், 'வஸ்துக்கள்' என்பதை 'பொருட்கள்' எனவும் "பூஸ்வத்து' என்பதை "சொத்து" எனவும் "நோவலுகள் வாங்ஙான் என்னெ நிர்பந்திக்குந்நதிலு அவள் பயப்பெட்டிரிக்கணம்" என்பதை "நாவல்கள் வாங்கச்சொல்ல அவளுக்குத் தைரியம் போதவில்லையோ என்னவோ" எனவும் மாற்றிணைகளைப்பயன்படுத்தி மொழிபெயர்ப்பை அமைத்துள்ளார். மேலும் கிறுகிறுப்பூட்டும் தன்மைபெற்ற கதைகளைக் குறிக்கும் 'அம்மாவிக்கதகள்' என்ற சொல்லை 'பாட்டிக்கதைகள் (பழங்கதைகள்)' என பொருள்மாறுபாடு தோன்ற மொழிபெயர்த்துள்ளார் (இதை அம்மாமிக்கதைகள் எனவும் மொழிபெயர்க்கலாம்).

இவற்றின் அடிப்படையில் புஉீபவேணிகோவியின் மொழிபெயர்ப்பில் ஒரு சில குறைகள் காணப்பட்டாலும் அது மாற்றிணைகளுடன் மூலத்தைப்பிரதிபலிக்கும் நோக்கில் அமைந்தது எனலாம்.

3. சமீபத்திய மலையாளச் சிறுகதைகள்

ம. இராஜாராம் (1980) என்பவரின் மொழிபெயர்ப்பாக அமைந்துள்ள இந்நூலில் என்.பி. முகமது (ஒரு அடியீடுமட்டும்), பட்டத்துவிள கருணாகரன் (நிசிகேதன் யமதர்மனிடம் கேட்டது), கோவிலன் (பித்தம்), என். மோகனன் (பூஜைக்கு உதவாத பூக்கள்), எம். கோவிந்தன் (பாம்பு), ஜயதேவன் (டில்லி), காக்கநாடன் (வெளியேபோகும் வழி), ஓ.வி. விஜயன் (பாறைகள்), எம். முகுந்தன் (புலரிமுதல் புலரிவரை), எம்.பி. நாராயணபிள்ளை (ஆறாம் ஜார்ஜின் நீதிமன்றம்), துளசி (கன்னிகையின் எலும்பு), புனத்தில் குஞ்ஞப்துல்ல (உலகமுடிவு), வேது (உங்களுக்காக ஒரு மரணம்), ஸக்கரியா (இயேசுபுரம் பப்ளிக் லைப்ரரியைப்பற்றி ஒரு குற்றச்சாட்டு), எம். சுகுமாரன் (குற்றப்பத்திரிகைக்குப்பதில்), பி. பத்மராஜன் (இன்னொருவன்) இ. ஹரிகுமார் (கரப்பான் பூச்சிகள்), அசமன்னூர் ஹரிகரன் (கனவு) ஆகிய பதினெண்மரின் சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. இம்மொழிபெயர்ப்பு மூலத்திற்குச் சமமாகவும், மாற்றிணைகளைப் பயன்படுத்தியும் செய்யப்பட்டது. சான்றாக எம்.பி. நாராயணபிள்ளையின் "ஜோர்ஜ் ஆறாமன்றகோடதி (ஜார்ஜ் ஆறின் நீதிமன்றம்)" என்ற சிறுகதையில் காணப்படும்.

"மாதாவெ நீ யெந்தினு கரயுந்நு. அசுரெனெ ப்ரஸவிச்ச நின்றெ உதரம் சபிக்கப்பெட்டதாணு. அசுரன் நுணச்ச நின்றெ முலக்கண்ணுகளும், அசுரனெ சும்பிச்ச நின்றெ சுண்டுகளும். அசுரனெக்கண்டு கோள்மயிர்க்கொண்ட நின்றெ சரீரவும் சபிக்கப்பட்டதாணு. சாபமோக்ஷணத்தினு ப்ரார்த்திக்கூ (தாயே நீ எதற்கு அழுகிறாய். அசுரனைப் பெற்ற உன் வயிறு சபிக்கப்பட்டது. அசுரன் சுவைத்த உன் முலைக்காம்புகளும், அசுரனை முத்தமிட்ட உன் உதடுகளும், அசுரனைக்கண்டு மயிர்சிலிர்த்த உன் உடலும் சபிக்கப்பட்டது. சாபவிமோசனத்திற்காகப் பிரார்த்தனை செய்)"

(எம்.பி. நாராயணபிள்ளை, 1991:667)

என்ற பகுதியை

"மாதாவே நீ ஏன் அழுகிறாய்? அசுரனைப் பெற்ற உன்வயிறு சாபம் நிறைந்தது. அசுரன் சப்புக்கொட்டிய உனது முலைக்காம்புகளும் அசுரனை முத்தமிட்ட உனது உதடுகளும், அசுரனைப்பார்த்து ரோமாஞ்சனம் அடைந்த உனது உடம்பும் சாபம் பூண்டவை. சாப விமோசனத்திற்காகப் பிரார்த்தனை செய்".

(ம. இராஜாராம், 1990:113)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதில் 'எந்திநு' என்பதை 'ஏன்' எனவும், 'சபிக்கப்பெட்டதாணு என்பதை "சாபம் நிறைந்தது" எனவும், "நுணச்ச" என்பதை "சப்புக்கொட்டிய" எனவும் மாற்றிணைகளைப் பயன்படுத்தி மொழிபெயர்ப்பை அமைத்துள்ளார்.

மேலும் இம்மொழிபெயர்ப்பு பெரும்பாலும் மூலத்திற்குச் சமமாகவே உள்ளது எனலாம். சான்றாக, "மாம்ஸாகாரம் ப்ரக்ருதியுடெ நியமமாணு. சிதலினெ கோழி தின்னுந்நு. கோழியெ குறுக்கன் தின்னுந்நு. குறுக்கனெ மனுஷ்யன் தின்னுந்நு. மனுஷ்யன் மனுஷ்யனெ தின்னுந்நு. அவனெ ஸிம்ஹம் தின்னுந்நு. ஸிம்ஹத்தினெ கழுகன் தின்னுந்நு. கழுகனெ உறும்பு தின்னுந்நு. உறும்பினெ ஆஸ்றேலியயிலெ ஒரு ஜந்து தின்னுந்நு. ஆ ஜந்துவினெ சிதல தின்னுந்நு. சிதலினெ கோழி தின்னுந்நு. மனுஷ்யன் மீன் தின்னுந்நு. மீன் மனுஷ்யனெ தின்னுந்நு. அது சரியல்ல. ஸ்வயம் பர்யாப்தி நேடணம். நாம் மற்றொரு ஜீவியுடெ இறச்சி தின்னருது. ஸ்வந்தம் மாம்ஸம் மாத்ரம் பக்ஷிக்கணம் (மாமிச உணவு இயற்கையின் நியதியாகும். கரையானைக் கோழி தின்கிறது. கோழியை நரி தின்கிறது. நரியை மனிதன் தின்கிறான். மனிதன் மனிதனைத் தின்கிறான். அவனைச் சிங்கம் தின்கிறது. சிங்கத்தைக் கழுகு தின்கிறது. கழுகினை எறும்பு தின்கிறது. எறும்பை ஆஸ்திரேலியாவிலுள்ள ஒரு உயிரி தின்கிறது. அந்த உயிரியைக்கரையான் தின்கிறது. கரையானைக் கோழி தின்கிறது. அது சரியல்ல. தன்னிறைவு அடையவேண்டும். நாம் பிறிதொருஉயிரியின் இறச்சியைத் தின்னக்கூடாது. சொந்த மாமிசத்தை மட்டுமே உண்ண வேண்டும்)".

(எம்.பி. நாராயணபிள்ளை, 1991:671)

எனப்தை

"மாமிச உணவு இயற்கையின் நியதி. கரையானைக் கோழி தின்கிறது. கோழியைக் குள்ளநரி தின்கிறது. குள்ளநரியை மனிதன் தின்கிறான். மனிதனை மனிதன் தின்கிறான். அவனைச் சிங்கம் தின்கிறது. சிங்கத்தைக் கழுகு தின்கிறது. கழுகை எறும்பு தின்கிறது. எறும்பை ஆஸ்திரேலியாவில் ஒரு பிராணி தின்கிறது. அந்தப் பிராணியைக் கரையான் தின்கிறது. கரையானைக் கோழிதின்கிறது. மனிதன் மீன் தின்கிறான். மீன் மனிதனைத் தின்கிறது. அது சரியல்ல. சுயநிறைவு அடையணும்.சொந்தம் மாமிசம் மட்டுமே புசிக்கணும்".

(ம. இராஜாராம், 1990:117)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இங்கு நேடணம், பகூஷிக்கணம் ஆகிய சொற்களை அடையணும், புசிக்கணும் என 'ணும்' சேர்த்து பேச்சுமொழி நடையில் மொழிபெயர்த்துள்ளார். மேலும் 'குறுக்கன்' என்பதை 'குள்ளநரி' என மாற்றியுள்ளார்.

இவற்றின் அடிப்படையில் ம. இராஜாராமின் மொழிபெயர்ப்பு மூலத்திற்குச் சமமாக மாற்றிணைகளைப் பயன்படுத்தி செய்யப்பட்டது எனலாம்.

2. மேலும் பகூஷியின் மணம், மோதிரம், யானைரோமம் ஆகிய சிறுகதை மொழிபெயர்ப்புகளின் தன்மைகளையும் பின்வருமாறு விளக்கலாம்.

1. பகூஷியின் மணம்

மாதவிக்குட்டியின் 'பகூஷியுடெ மணம்' என்ற சிறுகதையை நீலபத்மநாபன் (1967) 'பகூஷியின் மணம்' என்ற தலைப்பில் மொழிபெயர்த்துள்ளார். இம்மொழிபெயர்ப்பு பெரும்பாலும் சொல்லுக்குச்சொல் சரியாகச் செய்யப்பட்டது. சான்றாக,

"நിന്റെ കണ്ണുകള്ക്കു മാത്രം കാണാന് കഴിഞ്ഞ ആ മഞ്ഞപ്പൂക്കളുടെ ഇടയില് ഞാന് നിന്നിരുന്നു. നിന്റെ കൈ പിടിച്ചു നിന്നെ എത്തേണ്ട ഇടത്തേക്കു എത്തിക്കുവാന്..........പക്ഷേ അന്നു നീ വന്നില്ല. നിനക്കു എന്റെ സ്നേഹത്തെപ്പറ്റി അറിഞ്ഞിരുന്നില്ല. ഞാനാണു നിന്റെയും എല്ലാവരുടെയും മാര്ക്കദര്ശി എന്നു നീ അറിഞ്ഞിരുന്നില്ല (உன்னுடைய கண்களுக்கு மட்டும் காண முடிந்த அந்த மஞ்சள்பூக்களின் இடையில் நான் நின்றிருந்தேன். உன்னுடைய கை பிடித்து உன்னை சேரவேண்டிய இடத்தில் சேர்ப்பிக்க. ஆனால் அன்று நீ வரவில்லை. உனக்கு எனது அன்பைப் பற்றித் தெரிந்திருக்கவில்லை. நான் தான் உன்னுடையதும் எல்லாவருடையவுமான வழிகாட்டி என்று நீ தெரிந்திருக்கவில்லை)"

(மாதவிக்குட்டி, 1991:662)

என்பதை

"உன் கண்களுக்கு மட்டும் தெரிந்த அந்த மஞ்சள் பூக்களின் இடையில் நான் நின்றிருந்தேன். நீ போய்ச்சேரவேண்டிய இடத்துக்கு உன் கையைப் பிடிச்சு கூட்டிக்கொண்டுபோய் உன்னைச் சேர்ப்பிக்க. ஆனால் அன்னைக்கு நீ வரவில்லை. என் அன்பைப் பற்றி நீ தெரிந்திருக்கவில்லை. உன்னுடையவும், எல்லாவருடையவும் வழிகாட்டி நான்தான் என்று நீ அறிந்திருக்கவில்லை".

(நீலபத்மநாபன், 1985:149)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதில் "നിന്റെ കൈപിടിച്ചു നിന്നെ എത്തേണ്ടയിടത്തേക്കു എത്തിക്കുവാന്" என்பதை "நீ போய்ச்சேரவேண்டிய இடத்துக்கு உன் கையைப்பிடிச்சு கூட்டிக்கொண்டு போய் உன்னைச் சேர்ப்பிக்க" எனவும், "നിനക്കു എന്റെ സ്നേഹത്തെപ്പറ്റി അറിഞ്ഞിരുന്നില്ല" என்பதை "என் அன்பைப்பற்றி நீ தெரிஞ்சிருக்கவில்லை" எனவும், "ഞാനാണു നിന്റെയും എല്ലാവരുടെയും മാര്ക്കദര്ശി എന്നു നീ അറിഞ്ഞിരുന്നില്ല" என்பதை "உன்னுடையவும் எல்லோருடையவும் வழிகாட்டி நான்தான் என்று நீ அறிந்திருக்கவில்லை" எனவும் தருமொழிவடிவத்தின் சொல்வரிசை முறையை மாற்றி பெறுமொழிவடிவத்தை அமைத்துள்ளார். மேலும்,

"காணான் கழிஞ்ஞு" என்பதை "தெரிந்த" எனவும், "நின்னெ எத்தேண்டயிடத் தேக்கு" என்பதை "நீ போய்ச்சேரவேண்டிய இடத்துக்கு" எனவும், "எத்திக்குவான்" என்பதை "கூட்டிக்கொண்டுபோய் உன்னைச்சேர்ப்பிக்க" எனவும் மாற்றிணைகளைப் பயன்படுத்தியுள்ளார். இப்பகுதியில் பிடிச்சு, அன்னைக்கு (அன்றைக்கு), தெரிஞ் சிருக்கவில்லை ஆகிய பேச்சுமொழிச் சொற்களும் இடம்பெற்றுள்ளன.

இவற்றின் அடிப்படையில் இம்மொழிபெயர்ப்பு சொல்வரிசை முறைமாற்றம், மாற்றிணைப்பயன்பாடு, பேச்சுமொழிச் சொற்களின் கலப்பு ஆகிய தன்மைகளுடன் மூலத்தைப் பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது எனலாம்.

2. மோதிரம்

காரூர் நீலகண்டபிள்ளையின் 'மோதிரம்' என்ற சிறுகதையை டி. தேவதாஸ், சி. நாச்சிமுத்து (1992) ஆகியவர்கள் மொழிபெயர்த்துள்ளனர். இம்மொழி பெயர்ப்பு சொல்லுக்குச்சொல் சரியாகச் செய்யப்பட்டது. சான்றாக,

"குஞ்ஞுவம்மாவன் எழுபத்திநாலாம் பிறந்நாள் திவஸமாணு மரிச்சது. அனாயாசமாய மரணம். மக்களும் மருமக்களும் அத்தேகத்தின்றெ பிறந்நாள் ஸத்ய யுண்ணான் கூடியிருந்நு. அத்தேகம் ஈ லோகத்து நிந்நு என்நென்நேய்க்குமாயி மறஞ்ஞது ஸ்வந்தம் மக்களெ கண்டு கொண்டாணு. அயாள் அறுபத்தியஞ்சு வயஸ்சுவரெ ஆனகேறி நடந்நு. பின்னெ ரண்டு மூந்நு வர்ஷம் கழிஞ்ஞப்போள் வலதுகாலினு ஸ்வாதீனக்குறவுண்டாயி. அதில் பின்னெ வீட்டில் நிந்நு ஸாதாரண வெளியில்ப்போகாறில்ல. வீட்டிலிரிப்பாயப்போள் அத்தேகத்தின்றெ ஆவசியங்ஙள்வேசிக்கான் மக்களுண்டு. குஞ்ஞுவம்மாவன்றெ ஜீவிதஸாயாஉறனம் ப்ரகாசவத்தாயிருந்நு (குஞ்சுதாத்தா இறந்தது எழுபத்திநான்காம் பிறந்தநாள் தினத்தில்தான். கஷ்ட மில்லாத சாவு. மக்களும் மருமக்களும் அவருடைய பிறந்தநாள் விருந்தை உண்ப தற்காக வந்திருந்தார்கள். அவர் இந்த உலகத்திலிருந்து நிரந்தரமாக மறைந்தது சொந்த மக்களைப் பார்த்துக் கொண்டுதான். அவர் அறுபத்தைந்து வயதுவரை

யானைமீது சவாரி செய்துகொண்டிருந்தார். பிறகு இரண்டு மூன்று வருடங்கள் கழிந்தபோது வலதுகாலைத் தன்விருப்பம்போல் பயன்படுத்த இயலாமை ஏற்பட்டது. அதன்பிறகு வீட்டிலிருந்து பொதுவாக வெளியே செல்வதில்லை. வீட்டில் இருப்பான போது அவருடைய தேவைகளை நிறைவுசெய்யப் பிள்ளைகள் இருந்தார்கள். குஞ்சுத்தாத்தாவின் வாழ்வின் இறுதிக்காலம் ஒளியுடையதாய் இருந்தது)"

(காரூர், 1978:488)

என்பதை

"குஞ்சுத்தாத்தா இறந்தது தனது எழுபத்தி நான்காவது பிறந்த நாள் அன்றுதான். கஷ்டமில்லாத சாவு. மக்களும் மருமக்களும் அவரின் பிறந்தநாள் விருந்து உண்பதற்காகக் கூடியிருந்தனர். அவர் இந்த உலகத்திலிருந்து நிரந்தரமாக மறைந்தது தன் சொந்த மக்களைப் பார்த்துக்கொண்டுதான். அந்த மனிதர் அறுபத்தைந்து வயதுவரை யானைமீது ஏறி சவாரி செய்துகொண்டிருந்தார். பின்பு இரண்டு மூன்று வருடங்கள் கழிந்தபோது வலதுகால் வழக்குன்றியது. அதன்பிறகு வீட்டிலிருந்து அவர் பொதுவாக வெளியே செல்வதில்லை. வீடே இருப்பான பொழுது அவர் தேவைகளைக் கவனித்துக்கொள்ள மக்கள் இருந்தனர். குஞ்சுத் தாத்தாவின் வாழ்வின் அந்திக்காலம் ஒளிமயமாய் இருந்தது".

(டி. தேவதாஸ், சி. நாச்சிமுத்து,
1992:57)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதில் "குஞ்ஞம்மாவன் எழுபத்தி நாலாம் பிறந்தநாள் திவஸமாணு மரிச்சது" என்பதை "குஞ்சுத்தாத்தா இறந்தது தனது எழுபத்திநான்காவது பிறந்தநாள் அன்றுதான்" என சொல்வரிசை முறையை மாற்றி மொழிபெயர்த்துள்ளனர். மேலும் "அம்மாவன்" என்பதை (இது **மாமா**, தாத்தா என இருவேறு பொருள்களைக் கொண்டது) வருஞ்சூழலைப் பொறுத்து

'தாத்தா' எனவும், "பிறந்தநாள் திவஸம்" (இதில் நாள் என்பது நட்சத்திரம் என பொருள்படும்) என்பதை 'பிறந்தநாள் அன்று' எனவும், 'எந்நெந்நேக்குமாயி மறஞ்ஞு' என்பதை 'நிரந்தரமாக மறைந்தது' எனவும், ஸ்வாதீனக்குறவு' என்பதை 'வலுக்குன்றியது' எனவும் மாற்றிணைகளைப் பயன்படுத்தியும், 'ஆனகேறிநடந்நு' என்பதை 'யானை ஏறி சவாரிசெய்துகொண்டிருந்தார்' என கருத்தடிப்படையிலும் பெறுமொழிவடிவத்தை அமைத்துள்ளனர்.

இவற்றின் அடிப்படையில் தருமொழிவடிவத்தின் கருத்து மற்றும் நடை ஆகியனவற்றில் மாற்றமின்றி ஒரு சில மாற்றிணைகளுடன் இம்மொழிபெயர்ப்பு அமைந்துள்ளது எனலாம்.

3. யானைரோமம்

எஸ். இராமகிருஷ்ணன் (1992) என்பவர் வைக்கம் முகமது பஷீரின் 'ஆனப்பூட' என்ற சிறு கதையை 'யானைரோமம்' என மொழிபெயர்த்துள்ளார். இப்பெயர்ப்பு மூலத்தை அடிப்படையாகக்கொண்டு சற்றுவிளக்கமாக நடையமைப்பில் சிறிது மாற்றம் பெற்று அமைந்துள்ளது. சான்றாக,

"ஆனப்பூட மோஷணத்தின்றெ கதயாணு. கொலகொம்பனாய ஒரான சவிட்டி அரச்சும் குத்தியும் அவன் ஒந்நுரண்டு ஆனக்காரெ கொந்நிட்டுண்டு. அவன்றெ வாலிலெ ஒரு பூடயாகுந்நு மோஷ்டிக்கேண்டது. மோஷ்டிக்கேண்டதெந்நு பறஞ்ஞால் ஒரும் காணருது. ஆனக்காரும் பாப்பயும் உம்மயும். அது கடிச்சு பிழுதெடுக்கான் சிறமிக்குந்நு. ஈ ஞானாணு ஒரானயல்ல, மூந்நு ஆனகள். ரண்டு பிடியும் ஒரு கொம்பனும் ஆ கொம்பனானயுடெ வாலிலெ ஒரு ரோமமாகுந்நு வேண்டது. என்றெ ஸ்வந்தம் ஆவசியமல்ல. ராதாமணிக்கு வேண்டியாணு. எக்ஸயிஸ் இன்ஸ்பெக்டருடெ மகள். அவள் என்றெ க்லாஸ்சுமேற்றாணு. புஸ்தகத்தில் வய்க்கான் அவளெனிக்கு மயில்ப்பீலி தந்நிட்டுண்டு ('யானைமயிர்'

திருட்டின் கதையாகும். கொலைகார கொம்பன் யானை. மிதித்துத்தேய்த்தும், குத்தியும் அது ஒன்றிரண்டு யானைப்பாகரைக் கொன்றிருக்கிறது. அதன் வாலிலிருந்து ஒரு மயிரைத்தான் திருடவேண்டும். திருடவேண்டும் என்று சொன்னால் யாரும் பார்க்கக்கூடாது. யானைப்பாகரும் வாப்பாவும் உம்மாவும். அதைக் கடித்துப் பிடிங்கியெடுக்க முயற்சி நடக்கிறது. முயல்பவன் நான்தான். ஒரு யானையல்ல மூன்று யானைகள். ரண்டு பெண்யானைகளும் ஒரு ஆண்யானையும் அந்த ஆண்யானையின் வாலிருந்து ஒரு மயிர்தான் தேவைப்படுவது. எனது சொந்த தேவைக்காக அல்ல. ராதாமணிக்காகத்தான். எக்சைஸ் இன்ஸ்பெக்டரின் மகள். அவள் என்னுடன் படிப்பவள். புத்தகத்தில் வைப்பதற்கு அவள் எனக்கு மயிலிறகு தந்திருக்கிறாள்)".

(பஷீர், 1990 அ:7)

என்பதை

"இந்தக்கதை ஒரு திருட்டைப்பற்றியது. அதுவும் இரண்டு மாவுத்தர்களைச் சுருட்டிக்காலில் போட்டு மிதித்துக்கொன்ற பெரிய தந்தங்கள் உள்ள கொம்பானையின் வாலில் இருந்து மயிர் திருடுவதைப்பற்றியது. இது எவருக்கும் அறியாமல் நடக்கவேண்டும். உம்மாவிற்கோ வாப்பாவிற்கோ கூடத்தெரியாமல், மாவுத்தனுக்கும் கூட தெரியாமல் நடக்கவேண்டும். யானைவாலில் இருந்து மயிரைக்கடித்து எடுக்கவேண்டும். ஒரு யானையல்ல, மூன்று யானைகள் அங்கே இருந்தது. இரண்டு பெண்யானைகளுக்கு ஊடே அந்த கொம்பானை இருந்தது. அதன் வாலில் இருந்துதான் முடி தேவையிருந்தது. எனக்காகக்கூட இல்லை. ராதாமணிக்காக. அவள் என்னோடு படிப்பவள். எக்ஸைஸ் இன்ஸ்பெக்டரின் மகள். புத்தகத்திற்குள் வைத்துக்கொள்ள மயிலிறகு கொடுத்தவள்."

(எஸ். இராமகிருஷ்ணன், 1992:46)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இங்கு "ஆனப்பூட மோஷணத்தின்றெ கதயாணு" என்பதை "இந்தக்கதை ஒரு திருட்டைப் பற்றியது "என கதைப்பெயரை பதிற்பெயராக மாற்றியும், "கொல கொம்பனாய ஒரான" என்பதை "பெரிய தந்தங்களுள்ள கொம்பானை" என "கொல்லும் யானை" என்ற குறிப்பை நீக்கியும், "சவிட்டி அரச்சும் குத்தியும் அவன் ஒந்நரண்டு ஆனக்காரெ கொந்நிட்டுண்டு" என்பதை "அதுவும் இரண்டு மாவுத்தர்களைச் சுருட்டிக்காலில் போட்டு மிதித்துக்கொன்ற. . . . ."என ஒந்நிரண்டு, சவிட்டி, அரச்சும் குத்தியும் போன்ற நடைக்கூறுகளை நீக்கியும், "அவன்றெ வாலிலே ஒரு பூடயாகுந்நு மோஷ்டிக்கேண்டது" என்பதை "வாலிலிருந்து மயிர் திருடுவதைப் பற்றியது" எனப்பொதுப்படையாகவும், "மோஷ்டிக்கேண்ட தெந்நு பறஞ்ஞால் ஆரும் காணருது. ஆனக்காரும் பாப்பயும் உம்மயும்" என்பதை "இது எவருக்கும் அறியாமல் நடக்கவேண்டும். உம்மாவிற்கோ, வாப்பாவிற்கோ கூடத்தெரியாமல், மாவுத்தனுக்கும் கூட தெரியாமல் நடக்கவேண்டும்" என நடைமாற்றம் செய்தும், "அது கடிச்சு பிழுதெடுக்கான் சிறமிக்குந்நு. ஆள் ஞானாணு" என்பதை "யானை வாலிருந்து மயிரக்கடித்து எடுக்கவேண்டும்" என கடித்து எடுப்பவரைப்பற்றியக் குறிப்பை நீக்கியும், "ஒரானயல்ல, மூந்நு ஆனகள். ரண்டு பிடியும் ஒரு கொம்பனும்" என்பதை "ஒரு யானையல்ல மூன்று யானைகள் அங்கே இருந்தது. இரண்டு பெண்யானைகளுக்கு ஊடே அந்த கொம்பானை இருந்தது" என ஆண்யானை காணப்பட்ட இடம்பற்றியக் குறிப்பைச் சேர்த்தும், "என்றெ ஸ்வந்தம் ஆவசியமல்ல. ராதாமணிக்கு வேண்டியாணு. எக்ஸயிஸ் இன்ஸ்பெக்டருடெ மகள். அவள் என்றெ க்லாஸ்சுமேற்றாணு" என்பதை "எனக்காகக் கூட இல்லை. ராதாமணிக்காக.அவள் என்னோடு படிப்பவள். எக்ஸைஸ் இன்ஸ்பெக்டரின் மகள்" என தொடர்வரிசையை முன்பின்னாக மாற்றியும் மொழிபெயர்ப்பை அமைத்துள்ளார்.

இவற்றிலிருந்து எஸ். இராமகிருஷ்ணனின் மொழிபெயர்ப்பு கருத்துக்களைச் சேர்த்தல், கருத்துக்களை நீக்குதல், மூலத்தைவிட்டு விலகிச் செல்லுதல், நடையமைப்பை மாற்றுதல் போன்ற தன்மைகளைப் பெற்றதாக உள்ளது எனலாம்.

3. நாடகம்
----

1. நாடக மொழிபெயர்ப்பின் தன்மை பற்றிய மதிப்பீடு 'கூட்டுப் பண்ணை' என்ற நாடக நூலை அடிப்படையாகக்கொண்டு செய்யப்பட்டுள்ளது.

1. கூட்டுப்பண்ணை

ரா. சௌரிராஜன் (1964) என்பவர் இடசேரி கோவிந்தன்நாயரின் 'கூட்டுக்ருஷி' என்ற நாடகத்தைக் 'கூட்டுப்பண்ணை' என மொழிபெயர்த்துள்ளார். இப்பெயர்ப்பு மூலத்தின் கருத்தை அடிப்படையாகக்கொண்டு செய்யப்பட்டுள்ளது. சான்றாக,

"வழி, உச்சதிரிஞ்ஞ சமயம், ரண்டு க்ருஷிக்கார் எதிர் வசங்ஙளிலூடெ ப்றவேசிக்குந்நு. ஒரு வ்ருத்தனும் ஒரு செறுப்பக்காரனும், வயஸ்ஸன்றெ கையில் முடிங்கோல். செறுப்பக்காரன்றெ கய்யில் பூக்கொட்ட (வழி, சாயுங்கால நேரம். இரண்டு விவசாயிகள் எதிர்பக்கங்களிலாக வருகிறார்கள். ஒரு முதியவரும் ஒரு இளைஞனும், முதியவரின் கையில் சாட்டையும் இளைஞனின் கையில் பூக்கூடையும் உள்ளன)"

(இடசேரி கோவிந்தன் நாயர், 1966:375)

என்ற வருணனைப் பகுதியை

"வயல் பக்கத்து வழி, பொழுது சாயும் நேரம். இரு குடியானவர்கள் எதிரெதிரே வருகிறார்கள். ஒரு கிழவனும் (பறங்கோடன்) ஒரு இளைஞனுமே (வாரியார்) அவர்கள். கிழவன் கையில் சாட்டைக் கம்பும், இளைஞன் கையில் பூக்கூடையும் உள்ளன"

(ரா. சௌரிராஜன், 1987:25)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதில் "வழி" என்பதை "வயல்பக்கத்துவழி" எனவும், "வ்ருத்தன்" என்பதை "கிழவன் (பறங்கோடன்) எனவும், "செறுப்பக்காரன்" என்பதை "இளைஞன் (வாரியார்) எனவும் (அவர்கள் யார் என்பதை வெளிப்படையாகச் சுட்டிக்காட்டும் நோக்கில் அடைப்புக்குறியினுள் பெயர்களைக் கொடுத்தும், சற்று விளக்கமாக அமைத்துள்ளார். மேலும்,

"நம்பியார் : (எழுந்நேற்று) ஞான் பறயேண்டது பறஞ்ஞு. வாசிக்கு நாசா பலம். ஏதாயாலும் எறங்ஙிப் போணது காணான் ஞான் நில்க்கனில்ய

ஆமீன் : இரிக்கின் நம்பியாரெ ஒப்பம் போவாம்.

அபூபக்கர் : அதொந்நு லீய நம்யாரெ, நிங்ஙள்க் கெந்தா நிங்ஙளுடெ குற்றம் கொண்டல்லல்லோ

போக்கர் : (ஆமீனோடு) பின்னெய் ஈ இருப்பிது அடிஸ்தானல்லோச்சோளின் நிங்ஙள்க்கு பய்க்கெங்கிங்ஙட்டு எல்லாற்றினேம் பிடிச்செறக்கித் தரின். எறங்ஙித்தந்நில்லெங்கி பின்னெத்தெப்பனி போக்கரு நோய்க்கோளாம்.

அபூபக்கர் : இத்றய்க்கொந்நும் பதன்பண்டடோ போக்கரெ. இது இந்நு எனிக்கு பந்நு. அனக்கு அத்றக்கேள்ளு

போக்கர் : என்றெ ஸ்தலத்திர்ந்நட்டல்லடா ஈ பீம்பு காச்சேண்டது எறங்ஙிட்டு பற

(நம்பியார் : (எழுந்து) நா(ன்) சொல்லவேண்டியதைச் சொல்லிட்டேன். பிடிவாதத்துக்கு நாசம்தா(ன்)பலன். என்ன வானாலும் வீட்டிலி ருந்து இறங்கிப் போறதப்பாக்க நா(ன்) நிக்கமாட்டேன்.

ஆமீன் : இருங்க நம்பியாரே ஒன்னாப் போகலாம்.

அபூபக்கர் : அதொண்ணுமில்லே நம்பியாரே; ஒங்களுக்கென்ன வந்துச்சு. ஒங்க குத்தமில்லியே.

போக்கர் : (ஆமீனோடு) ஜனா இப்படி இருந்தாலும் பிரயோசனம் ஒண்ணும் இல்ல. நீங்க ஒடனே இங்கேண்டு வெளியேறுங்க. வெளியேறாட்டா அப்புறம் (நா(ன்) பாத்துக்கறேன்.

அபூபக்கர் : இவ்வளவொண்ணும் குதிக்காதடா போக்கரே. இது இன்னிக்கு எனக்கு வந்திருக்கு. நாளைக்கு உனக்கு அவ்வளவுதா(ன்)

போக்கர் : ஏ(ன்) எடத்திலே நின்னுட்டல்லடா இந்தத் திமிரு பேச்சு பேசிறது வெளியே வந்துட்டுப் பேசுடா!). (இடசேரி கோவிந்தன் நாயர், 1966:390-391)

என்பதை

நம்பியார் : (எழுந்திருந்து) நான் சொல்ல வேண்டியதைச் சொல்லியாகிவிட்டது. பிடிவாதத்திற்கு முடிவு நாசந்தான். என்ன ஆனாலும் வீட்டைவிட்டு வெளியேறுகிறதைக் காண நான் இங்கே நிற்கமாட்டேன்.

அமீனா : இருங்க நம்பியாரே, சேர்ந்து போகலாம்.

அபூபக்கர் : அதெல்லாம் ஒன்னுமில்லை நம்பியாரே! உங்களுக்கு என்ன வந்தது, உங்கள் பேரில் குற்றமில்லையே

போக்கர் : (அமீனாவிடம்) அப்புறம் இந்த இடத்தை ஒழுங்கா காலிசெய்ய வைக்கணும். உங்களுக்கு முடியாவிட்டால் சாமான்களை எடுத்து வெளியே போடுங்கள். அதுக்கும் முடியாத போனால் நான் பார்த்துக்கொள்கிறேன்.

அபூபக்கர் : அப்படியொன்றும் பதட்டப்படவேண்டாம். போக்கரே! இது இன்னைக்கு எனக்கு வந்திருக்கு, நாளைக்கு உனக்கு இதே நிலை வரும்.

போக்கர் : என் இடத்திலே இருந்து கொண்டாடா இந்தத்திமிரு பேச்சு பேசறே? வீட்டை விட்டு வந்து அப்புறம் பேசுடா?"
(ரா. சௌரிராஜன், 1987: 43)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதில் "வாசிக்கு நாசா பலன்" என்ற பழமொழியை கருத்தடிப்படையில் "பிடிவாதத்திற்கு முடிவு நாசந்தான் என விரிவு செய்து அமைத்துள்ளார். "எறங்ஙிப்போகுது காணான் ஞான் நில்க்க வில்ய" என்பதை "வீட்டைவிட்டு வெளியேறுகிறதைக் காண நான் இங்கே நிற்க மாட்டேன்" என 'வீட்டைவிட்டு,' 'இங்கே' ஆகிய சொற்களைச் சேர்த்து நடைவிரிவாக்கமாகவும், "நிங்ஙளுடெ குற்றம் கொண்டல்லல்லோ" என்பதை "உங்கள் பேரில் குற்றமில்லையே" என மாற்றிணை மூலமாகவும் "எறங்ஙித்தந்நில லெங்கி பின்னத்தெப்பணி போக்கரு நோய்க்கோளாம்" என்பதை "அதுக்கும் முடியாத போனால் நான் பார்த்துக்கொள்கிறேன்" என தன்மையை படர்க்கையாக்கிச் சொல்வதாக அமைந்த பகுதியைத் தன்மையாக்கியும், "இத்றய்கொந்நும் பதஙப ண்டடோ போக்கரெ இது இந்து எனிக்கு பந்நு. அனக்கு அத்றக்கேள்கு" என்பதை "அப்படியொன்றும் பதட்டப்படவேண்டாம் போக்கரே! இது இன்னைக்கு எனக்கு வந்திருக்கு; நாளைக்கு உனக்கும் இதே நிலை வரும்" என கருத்தடிப்படையிலும் மொழிபெயர்ப்பை அமைத்துள்ளார்.

இவற்றின் அடிப்படையில் இம்மொழிபெயர்ப்பு தருமொழிவடிவத்தின் கருத்தை அடிப்படையாகக்கொண்டு மூலத்தை ஓரளவில் ஒத்த பெருமொழிவடிவமாகத் திகழ்கிறது எனலாம். இதிலுள்ள (முசுலீம்) பேச்சுவழக்கின் தன்மையை மொழிபெயர்ப்பாளர் பெருமொழி வடிவத்தில் கொண்டு வராததால் மூலவடிவத்தின் பண்புகள் அனைத்தும் மொழிபெயர்ப்பில் இடம்பெறவில்லை எனலாம் (இங்கு மொழிபெயர்ப்பாளர் மலையாளப் பேச்சுவழக்கை தமிழ்ப்பேச்சுவழக்காக மாற்றி மொழிபெயர்த்திருக்கவேண்டும்) எனவே உயர்வழக்கு, பேச்சுவழக்கு என்ற இரட்டைவழக்கு நிலை

(Diglossia), நடைவேறுபாடு இவைபற்றிய தெளிவோடு நாடகங்களை மொழிபெயர்க்க மொழிபெயர்ப்பாளர்கள் பயிற்சி பெறவேண்டியது இன்றியமையாத தாகும்.

2. இதழ்களின் வாயிலாக வெளிவந்த ஓரங்க நாடகங்களான குகை, பெரியண்ணா ஆகியனவற்றின் மொழிபெயர்ப்பு பற்றிய மதிப்பீட்டையும் பின்வருமாறு அமைக்கலாம்.

1. குகை

சுகுமாரன் (1990) என்பவர் ஜி. சங்கரப்பிள்ளையின் 'குக' என்ற ஓரங்க நாடகத்தை 'குகை' என்னும் தலைப்பில் மொழிபெயர்த்துள்ளார். இப் பெயர்ப்பு மூலத்தை அப்படியே மாற்றித்தருவதாக உள்ளது. சான்றாக,

"எங்ஙுநிந்நெந்நறியாதெ ஒரு வெளிச்சம் மாறி மாறி வீசி மறயுந்நு. ஏதாண்டொரு ஸர்ச்சு லைற்றுபோலெ. தம்பதிகளும் பாரம் சுமக்குந்நவனும் ஆசயோடும் ப்றதீக்ஷயோடும் அதினெ நோக்குந்நு. பார்ய எழுந்நேல்க்குந்நு. அது போயி மறயுந்ந மார்க்கத்திலேக்கு நடக்கான் ஆயுந்நு. பக்ஷே சங்ஙல கொண்டு பந்திதயாயதினால் நிந்நு போகுந்நு. பாரம் சுமக்குந்நவன் கண்ணாடி யுடெ நிழலின்றெ பின்னாலெ ஓடுந்ந கொச்சு குட்டியெப்போலெ ஆ வெளிச்சத்தெ பின்துடரான் ஶ்றமிக்குந்நு. அது மறயுந்நு. அயாள் ஶூன்யமாய வழியில் தளர்ந்நும் க்ஷீணிச்சும் நில்க்குந்நு. வெளிச்சம் மறயுந்நு (எங்கிருந்தென்று அறிய முடியாத ஒரு வெளிச்சம் மாறிமாறி வீசி மறைகிறது. ஏகதேசம் ஒரு சர்ச்லைற்றைப் போல. தம்பதிகளும் பாரம் சுமப்பவனும் ஆசையோடும் எதிர்பார்ப்போடும் அதைப்பார்க்கின்றனர். மனைவி எழுகிறாள். அது போய் மறையும் பாதையில் நடக்க முயல்கின்றாள். ஆனால் சங்கிலியில் கட்டப்பட்டிருப்பதால் நின்றுவிடுகிறாள். பாரம் சுமப்பவன் கண்ணாடி நிழலின் பின்னால் ஓடும் சிறு குழந்தையைப் போல் அந்த ஒளியைப் பின்தொடர முயல்கின்றான். அது மறைகிறது. அவன் ஶூன்யமான பாதையில் தளர்ந்தும் களைப்படைந்தும் நிற்கிறான். வெளிச்சம் மறைகிறது)"

(ஜி. சங்கரப்பிள்ளை, 1989:442)

என்ற வருணனைப்பகுதியை

"எங்கேயிருந்து என்று புலப்படாத ஒரு வெளிச்சம் அலைந்து வீசி மறை கிறது. ஏறத்தாழ ஒரு சர்ச் லைட் போல. தம்பதிகளும், பாரம் சுமப்பவனும் ஆவலோடும் நம்பிக்கையோடும் அதைப்பார்க்கின்றார்கள். மனைவி எழுந்து நிற்கிறாள். அது போய் மறைகிற வழியில் நடக்க முயல்கிறாள். ஆனால் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருப்பதால் நின்று விடுகிறாள். பாரம் சுமப்பவன் கண்ணாடியின் பிரதிபலிப்புக்குப் பின்னால் ஓடுகிற சிறுவனைப்போல அந்த வெளிச் சத்தைப் பின் தொடர முயற்சி செய்கிறான். அது மறைந்துவிடுகிறது. வெற்றிடத் தில் களைத்து ஓய்ந்து உட்கார்கிறான். வெளிச்சம் மறைந்து விடுகிறது"

(சுகுமாரன், 1990:33-34)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதில் "மாறி மாறி வீசி மறையுந்நு" என்பதை "அலைந்து வீசி மறைகிறது" எனவும், "கண்ணாடியுடெ நிழலின்றே பின்னாலெ" என்பதை "கண்ணாடியின் பிரதிபலிப்புக்குப் பின்னால்" எனவும் "ஓடுந்ந கொச்சு குட்டியெப்போலெ" என்பதை "ஓடுகிற சிறுவனைப்போல" எனவும், "சூன்யமாய வழியில் தளர்ந்தும் கூஷீணிச்சும் நில்க்குந்நு" என்பதை "வெற்றிடத்தில் களைத்து ஓய்ந்து உட்காருகிறான்" எனவும் தருமொழிவடிவத்தைப் பெறுமொழிக்கேற்ற இணைகளால் பதிலீடு செய்துள்ளார். மேலும் உரையாடல்களின் மொழிபெயர்ப்புக் குச் சான்றாக

"பார்ய : எனிக்குபோகணம்

பர்த்தாவு : எவிடெ போகான்?

பார்ய : ஊஉறா! எங்ஙும் போகானில்லெந்நாணோ?

பாரம்சுமக்குந்நவன் : எவிடெயெங்கிலும் போகான் கழிஞ்ஞெங்கில்!

ஈ குகயில், இருட்டின்றெ ஈ பாதாளக்குழியில்

நிந்நும் (ஒரு சுவடுமுன்னோட்டு நடக்குந்நு)

வய்ய......வெளிச்சமெவிடெ?........

வெளிச்சம்?..........நசிச்ச குக!

(சடஞ்ஞிரிக்குந்நு)

பார்ய : ஈ நசிச்ச குகயில் நிந்நும் எனிக்கு புறத்து கடக்கணம்

பர்த்தாவு : மாத்றமோ?

பார்ய : ஈ நசிச்ச.....நசிச்சநிங்ஙளில் நிந்நும்

(மனைவி : எனக்கு போகவேண்டும்

கணவன் : எங்கே போக?

மனைவி : ஊஉறா! எங்கும் போவதற்கில்லை என்றா?

பா.சு : எங்கேயாவது போக முடிந்த தென்றால்!

இந்தக் குகையில், இருட்டின் இந்த பாதாளக்குழியில் இருந்தும்

(ஒரு அடி முன்பாக நடக்கிறான்) முடியவில்லை........

வெளிச்சம் எங்கே?.......வெளிச்சம்?..........

நாசமாய்ப்போன குகை! (தளர்ந்து இருக்கிறான்)

மனைவி : இந்த நாசமாய்போன குகையிலிருந்து எனக்கு

வெளியே செல்லவேண்டும்

கணவன் : மட்டுமா?

மனைவி : இந்த நாசமாய்ப்போன........நாசமாய்ப்போன

உங்களிடமிருந்தும்)" (ஜி. சங்கரப்பிள்ளை, 1989:441)

என்பதை

மனைவி : நான் போகவேண்டும்

கணவன் : எங்கே போவாய்?

மனைவி : உறா எங்கேயும் போக முடியாதா?

பா.சு. : எங்கேயாவது போக முடிந்தால்....இந்தக் குகையிலிருந்து

.........இந்த இருட்டின் பாதாளத்திலிருந்து.....

(ஓரடி முன்னே நடக்கிறான்) முடியவில்லை.....வெளிச்சம்

எங்கே? வெளிச்சம்......நாசமாய்ப்போன குகை

(தளர்ந்து உட்காருகிறான்)

மனைவி : இந்த நாசமாய்ப்போன குகையிலிருந்து வெளியே போகவேண்டும்

கணவன் : அவ்வளவு தானா?

மனைவி : நாசமாய்ப்போன உங்களிடமிருந்தும்" (சுகுமாரன், 1990:33)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதில் "எனிக்குப்போகணம்" என்பதை "நான் போகவேண்டும்" எனவும், "எவிடெபோகான்" என்பதை "எங்கே போவாய்" எனவும், "மாத்ரமோ" என்பதை "அவ்வளவுதானா" எனவும் உரையாடல் நிலைக்கேற்ப மாற்றிணைகளைப் பயன்படுத்தியுள்ளார். மேலும், "ஈ நசிச்ச குகயில் நிந்நும் எனிக்கு புறத்து கடக்கணம்" என்பதை "இந்த நாசமாய்ப்போன குகையிலிருந்து வெளியே போகவேண்டும்" என 'எனிக்கு' என்ற சொல்லை நீக்கியும், "ஈ நசிச்ச......நசிச்ச நிங்ஙளில் நிந்நும்" என்பதை "நாசமாய்ப்போன உங்களிடமிருந்தும்" என "நசிச்ச" என்று இருமுறை வந்துள்ள சொற்களை ஒருமுறை மட்டும் கொண்டும் மொழிபெயர்ப்பை அமைத்துள்ளார்.

இவற்றின் அடிப்படையில் இம்மொழிபெயர்ப்பு ஒருசில மாற்றிணைகளுடன் மூலத்தை அப்படியே தமிழ்ப்படுத்தித் தருவதாக உள்ளது எனலாம். இந்நாடக உரையாடல் எழுத்துவழக்கை ஒட்டியதாக அமைந்துள்ளது. இதனை மொழிபெயர்ப்பாளரும் தமிழ் எழுத்துவழக்கை ஒட்டி அமைத்திருப்பது பொருத்தமாக உள்ளது எனலாம்.

2. பெரியண்ணா

என். கிருஉஷ்ணபிள்ளையின் 'மூத்தாங்ஙள' என்னும் ஓரங்க நாடகத்தை ப.ப. தம்பி (1992) 'பெரியண்ணா' என்ற தலைப்பில் மொழிபெயர்த்துள்ளார். இப்பெயர்ப்பு பெரும்பாலும் மூலத்திற்குச் சமமானதாக அமைகின்றது. சான்றாக,

"நகரத்திலுள்ள ஒரு செறிய வீட்டின்றெ முன்வசத்தெ வராந்தயில் கிடக்குந்ந பெஞ்சில் அம்பத்தஞ்சினும் அறுபதினும் இடக்கு ப்ராயம்வருந்ந ஒரு வ்ருத்தன் இரிக்குந்நு.

அயாளுடெ சரீரம் சடச்சு நீண்டதாணு. குழியில் வீண கண்ணுகள். ஒட்டியகவிள். கெட்டி வச்ச குடும. கழுத்தில் ருத்ராக்ஷம் கோர்த்த சரடு. ப்றோக்கும் ஜெம்பறுமணிஞ்ஞ ஒரு பெண்குட்டி கையில் சூலமாயி வராந்த ஊத்துக்கொண்டு நில்க்குந்நு. ப்நசரிப்புள்ள ஒரு குட்டியாணவள். ஒம்பதோ பத்தோ வயஸ்சுகாணும். சுவரில் சில தேவிமாருடெயும் தேவன்மாருடெயும் படங்ஙள் தூக்கியிட்டுண்டு. பெண்குட்டி வ்றுத்தன்றெ அடுத்து நிந்நாணு தூத்து வாருந்நது (நகரத்திலுள்ள ஒரு சிறிய வீட்டின் முன்பக்கத்தில் வராந்தாவில் காணப்படும் பெஞ்சில் ஐம்பத்தைந்திற்கும் அறு பதிற்கும் மத்தியிலான வயதைக்கொண்ட ஒரு முதியவர் இருக்கிறார். அவரின் உடல் மெலிந்து நீண்டது. குழிவிழுந்த கண்கள்; ஒட்டிய கன்னம்; கட்டிவைத்த குடுமி; கழுத்தில் உருத்திராக்ஷம் கோர்த்த கயிறு; ஃப்ராக்கும் ஜெம்பறும் அணிந்த ஒரு சிறுமி கையில் வாரியலமாக வராந்தாவைப் பெருக்கிக்கொண்டு நிற்கிறாள். சுறுசுறுப்பு மிகுந்த சிறுமி அவள். ஒன்பதோ பத்தோ வயது இருக்கும். சுவரில் தேவியருடையவும், தேவர்களுடையவும் படங்கள் தொங்கவிடப்பட்டுள்ளன. சிறுமி முதியவரின் பக்கத்தில் நின்று கொண்டு பெருக்கிச் சுத்தம் செய்கிறாள்)"

(என். கிருஉண்ணிபிள்ளை, 1990:61)

என்ற வருணனைப் பகுதியை

"ஒரு நகரத்திலுள்ள சிறு வீட்டின் முன்பக்கத் திண்ணையில் கிடக்கும் பெஞ்சில் அய்ம்பதுக்கும் அறுபதுக்குமிடையே வயதுவரும் ஒரு கிழவர் உட்கார்ந்திருக்கிறார். மெலிந்து நீண்ட உடல். குழிவிழுந்த கண்கள். ஒட்டிய கன்னம். கட்டிய குடுமி. கழுத்தில் உருத்திராட்சம் கோத்தகயிறு, பாவாடையும் சொக்காயுமணிந்த ஒரு சிறுமி கையில் துடைப்பத்தோடு கிழவர் அருகே திண்ணையைப் பெருக்கிக்கொண்டு நிற்கிறாள். பொலிவு உடைய ஒரு பெண்குழந்தை, ஒன்பது அல்லது பத்து வயது வரும். சுவரில் சில தேவன் தேவியர் படங்கள்"

(ப.ப. தம்பி, 1992:78)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதில் "அம்பத்தஞ்சினும் அறுபதினும் இடக்குப்றாயம் வருந்ந" என்பதை "ஐம்பதுக்கும் அறுபதுக்குமிடையே வயதுவரும்" என தவறாகவும், "அயாளுடெ சரீரம் சடச்சு நீண்டதாணு' என்பதை "மெலிந்து நீண்ட உடல்" என நடைச்செறிவு செய்தும், ப்றோக்கும் ஜெம்பறுமவிஞ்ஞு ஒரு பெண்குட்டி கையில் சூலமாயி வராந்த தூத்துக்கொண்டு நில்க்குந்நு. பெண்குட்டி வ்றுத்தன்றே அடுத்து நிந்நாணு தூத்து வாருந்நது" என்பதை "பாவாடையும் சொக்காயுமவிந்த ஒரு சிறுமி கையில் துடைப்பத்தோடு கிழவர் அருகே திண்ணையைப் பெருக்கிக்கொண்டு நிற்கிறாள்" என இரண்டு வாக்கியங்களிலான கருத்துக்களை ஒன்றாக இணைத்தும் மொழிபெயர்ப்பு அமைந்துள்ளது. மேலும் "சுவரில் சில தேவிமாருடெயும் தேவன்மாருடெயும் படங்ஙள் தூக்கியிட்டுண்டு" என்பதை "சுவரில் சில தேவன் தேவியர் படங்கள்" என தருமொழி வடிவத்தின் சொல் வரிசை முறையை மாற்றி பெறுமொழி வடிவத்தை அமைத்துள்ளார். மேலும் உரையாடல்களின் மொழிபெயர்ப்புக்குச் சான்றாக,

பெண்குட்டி : சேட்டா, சேட்டா இய்யாளென்னெ
(கரயான் பாவிக்குந்நு)

வ்றுத்தன் : அய்யே! மடயி! ஞான் நேரம்போக்கிலொந்நு
கௌரவப்பெட்டதிநு சே.சே. மோசம். இங்ஙுவா
உஷஉஹாறீ (பின்னெயும் கைக்கு பிடிக்குந்நு. குட்டி
ஒழிஞ்ஞு மாறுந்நு. சேட்டனெ கெட்டிபிடிக்குந்நு)

பெண்குட்டி : சேட்டா இய்யாள் பறவா அய்யாக்கென்னெ அடிச்
செறக்காம் மனசொண்டெந்நு

வ்றுத்தன் : ஐசே. பாவம் பாவம் ஞானங்ஙனெ பறயுமோ
கோபிக்குட்டி

கோபிக்குட்டி : தானதுமதின்றப்புறவும் பறயும். பறயுந்நவனா
கரயாதவியத்தி நீ யங்ஙகத்து போ

(சிறுமி : அண்ணா, அண்ணா இவரு என்ன (அழத்தொடங்குகிறாள்)

முதியவர் : ஐயோ! முட்டாள் பெண்ணே!
நான் விளையாட்டாய்க் கோவப்பட்டதற்கு...சே.சே

மோசம். இங்குவா மருமகளே (பின்பும் கையில் பிடிக்கிறார். சிறுமி விலகி ஒதுங்குகிறாள். அண்ணாவைக் கட்டிப்பிடிக்கிறாள்)

சிறுமி : அண்ணா இவருக்கென்னை அடிச்சு வெரட்டலாம்போலிருக்காம்

முதியவர் : ஐயோ பாவம் நானப்படி சொல்வேனோ கோபிக்குட்டி

கோபிக்குட்டி : நீர் இதுவும் இதுக்கு மேலயும் சொல்வீர். சொல்கிறவரும் தான். அழாதே தங்கச்சி. நீ அங்கு உள்ளே போ)"

(என். கிருஉஷ்ணபிள்ளை, 1990:62)

என்பதை

"சிறுமி : அண்ணா, அண்ணா, இவர் என்னை (அழத்தொடங்குகிறாள்)

கிழவர் : அடி முட்டாள் பெண்ணே! நான் விளையாட்டுக்கு அதட்டிய துக்கு சீ.சீ. நல்லால்ல. இப்படிவா மருமகளே.)

(மீண்டும் கையைப் பிடிக்கிறார். குழந்தை விலகிச்செல்கிறது. அண்ணாவைக் கட்டிப்பிடிக்கிறது)

சிறுமி : அண்ணா இவர் சொல்கிறார். அவருக்கென்ன அடித்துத் தூக்கி விளாசலாம் போல இருக்காம்.

கிழவர் : சீ. சீ. பாவம், பாவம், நானப்படி சொல்வேனா கோபிக்குட்டி.

கோபிக்குட்டி : நீர் அதுவும் சொல்வீர். அதற்கு மேலேயும் சொல்வீர். சொல்லக்கூடியவர்தான். அழாதே தங்கச்சி! நீ உள்ளே போ" (ப.ப. தம்பி, 1992:79-80)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதில் "ஞான் நேரம் போக்கிலொந்து கௌரவப்பெட்டதிநு சே.சே. மோசம்" என்பதை "நான் விளையாட்டுக்கு அதட்டியதுக்கு சீ.சீ. நல்லால்ல" எனவும், "அய்யாக்கென்னெ அடிச்சொறக்காம் மனசொண்டெந்நு" என்பதை

"அவருக்கென்ன அடித்துத் தூக்கி விளாசலாம் போல இருக்காம்" எனவும் பேச்சு மொழிநடையிலான மாற்றிணைகளால் மொழிபெயர்ப்பு அமைந்துள்ளது.

இம்மொழிபெயர்ப்பிலும் மூலத்தில் காணப்படும் பேச்சுமொழியின் கூறுகள் அப்படியே வந்துள்ளதாகக் கொள்ள முடியாது. எனினும் இதில் காணப்படும் பேச்சுநடையின் சொல்தேர்வு (விளாசலாம்) ஓரளவு பேச்சு மொழியின் இயல்பைக் காட்டக்கூடியதாக இருக்கின்றதெனலாம். இவற்றின் அடிப்படையில் இம்மொழிபெயர்ப்பு மாற்றிணைப் பயன்பாட்டோடு மூலத்திற்கு ஓரளவு சமமான தாக அமைந்துள்ளது எனலாம்.

4. வசனகவிதை அமைப்பிலான புனைகதைகள்

வசனகவிதை நடையிலமைந்த புனைக்கதை மொழிபெயர்ப்பின் தன்மைபற்றிய மதிப்பீடு 'மானுட மைந்தன் இயேசு' என்ற நூலை அடிப்படையாகக் கொண்டு செய்யப்பட்டுள்ளது.

மானுடமைந்தன் இயேசு

குரு நித்யசைதன்யயதி என்பவர் கலீல்கிப்ரானின் கருத்துக்களை அடிப்படை யாகக் கொண்டு எழுதிய 'மனுஉஷ்யபுத்ரனாயயேசு' என்ற நூலை எஸ். மணி (1991) என்பவர் 'மானுடமைந்தன் இயேசு' என்னும் தலைப்பில் மொழிபெயர்த் துள்ளார். இம்மொழிபெயர்ப்பு மூலத்திற்கு சமமான அளவிலும், மாற்றிணைகளைக் கையாண்டும் செய்யப்பட்டதாகும். சான்றாக,

"கொலபாதகியெ கொல்லணமெந்தும் கள்ளனெ க்ரூசிக்கணமெந்தும் வேசியயெ கல்லெறியணமெந்நும் நிங்ஙள் கேட்டிரிக்குந்நு. அப்றகாரம் க்ரூரமாய சிக்ஷ ஆர்க்கெங்கிலும் நல்கியால் நிங்ஙளுடெ ஆத்மாவு இருண்டுபோகும். தின்மயெ திருத்தான் செய்யுந்நதும் தின்மயாயி பவிக்கும் (கொலைபாதகனைக் கொல்ல வேண்டும் என்றும், திருடனைச் சிலுவையில் அறையவேண்டும் என்றும் வேசியைக் கல்லெறியவேண்டும் என்றும் நீங்கள் கேட்டிருக்கிறீர்கள். அப்படி கொடிய தண்டனையை யாடுக்காவது கொடுத்தால் உங்களுடைய ஆத்மா இருண்டுபோகும். தீமையைத் திருத்துவதற்குச் செய்வதும் தீமையாய் முடியும்)"

(நித்யசைதன்யயதி, 1990:12)

என்பதை

"கொலையாளியைக் கொல்லவேண்டும் என்றும், திருடனைச் சிறையில் அறையவேண்டுமென்றும், வேசியைக் கல்லெறியவேண்டும் என்றும் நீங்கள் கேட்டிருக்கிறீர்கள். அத்தகைய கொடூரமான தண்டனையை யாருக்கேனும் கொடுத்தால் உங்களில் ஆத்மா இருண்டுபோகும். தீமையைக் களையச் செய்வது தீமையாகவே முடிகிறதே"

(எஸ். மணி, 1991:9)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதில் "தின்மயெ திருத்தான்" என்பதை "தீமையைக் களைய" என மாற்றிணையைப் பயன்படுத்தியும், "தின்மயாயி பவிக்கும்" என்பதை "தீமையாகவே முடிகிறதே" என ஏகாரத்தை மிகுதியாகச் சேர்த்தும் பெருமொழிவடிவத்தை அமைத்துள்ளார். மேலும்

"ஒரிக்காலும் ஆரும் ஒற்றய்க்கு தின்மசெய்யான் ப்றேரிதராவுந்நில்ல. எல்லா தின்மயிலும் கூட்டுத்தரவாதித்வமுண்டு. அதிலொருவனெ ஒற்றப்பெடுத்தி சிக்ஷிக்கும்போள் அவன் கொடுக்குந்ந விலகொண்டாயிரிக்கும் நிங்கள் ஸந்தோஷம் அநுபவிக்குந்நது (ஒரு போதும் யாரும் தனித்து தீமைசெய்யத் தூண்டப்படுவதில்லை. எல்லா தீமைகளிலும் கூட்டுப்பொறுப்பு உண்டு. அவர்களில் ஒருவனைத் தனிமைப்படுத்தி தண்டனை கொடுக்கும்போது அவன் கொடுக்கின்ற விலையைக் கொண்டு நீங்கள் மகிழ்ச்சியடைகிறீர்கள்)"

(நித்யசைதன்யயதி, 1990:12-13)

என்பதை

"ஒரு போதும் யாரும் தானாகத் தீமை செய்ய உந்தப்படுவதில்லை. எல்லாத் தீமைக்கும் கூட்டுப்பொறுப்பு உண்டு. அதில் ஒருவனைத் தனிமைப்படுத்தி தண்டிக்கும்போது அவன் தரும் விலையைக்கொண்டே நீங்கள் சந்தோஷத்தை அநுபவிக்கிறீர்கள்."

(எஸ். மணி, 1991:9)

என மொழிபெயர்த்துள்ளார். இதில் "ஒற்றய்க்கு" என்பதை "தானாக" எனவும் "ப்றேரிதராவுந்நில்ல" என்பதை "உந்தப்படுவதில்லை" எனவும் "அவன் கொடுக்குந்ந விலகொண்டாயிரிக்காம்" என்பதை "அவன் தரும் விலையைக் கொண்டே" எனவும் மாற்றிணைகளைப் பயன்படுத்தியுள்ளார்.

இவற்றின் அடிப்படையில் இம்மொழிபெயர்ப்பு மாற்றிணைகளுடன் தருமொழி வடிவத்தை அவ்வாறே பிரதிபலிக்கிறது எனலாம்.

3. பேச்சுமொழி

1. மலையாளப் புனைகதைகளில் காணப்படும் பேச்சுமொழி தமிழ்ப் பெயர்ப்பின்போது அடைந்துள்ள மாற்றங்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை 1. பேச்சுவழக்கிற்குப் பேச்சுவழக்கு, 2. பேச்சு வழக்கிற்குப் பொதுவழக்கு என வகைப்படுத்தி விளக்கலாம்.

1. பேச்சுவழக்கிற்குப் பேச்சுவழக்கு

தருமொழி வடிவத்தில் காணப்படும் பேச்சுமொழியைப் பெறுமொழியில் அதற்குச் சமமான மற்றொரு பேச்சுமொழியாக மாற்றி மொழிபெயர்த்துள்ளமையை இவ்வகையில் அடக்கலாம். சான்றுகளாகப் பின்வருபவற்றைக் குறிப்பிடலாம்.

1."எடீ, மரக்கானேந்தினா தேடிவக்குனது? அவன்றெ ஸ்வத்து படிஞ்ஞாறு பரேந்நு கிடக்குவா. பின்னெ பண்டோள்ளோரு பறெனது வள்ளோம் வலேம் தொறேலே ஆவாசியத்தினெந்நா. அதொக்கெ போயி, எந்நாலும் மனஸ்து வச்சாலு ஏது மரக்காவா வள்ளோம் வலேம் மேடிக்காவொக்காத்தேது (அடி மரக்காயன் எதற்குத் தேடிவைக்கிறான்? அவனுடைய செல்வம் மேற்கே பரந்துகிடக்கிறது. ஆனால் முற்காலத்தவர்கள் சொல்வது வள்ளமும் வலையும் துறையிலுள்ள தேவைக்கென்று. அதெல்லாம் போய்விட்டது. இருந்தாலும் மனம் வைத்தால் எந்த மரக்காயனுக்கு வள்ளமும் வலையும் வாங்கமுடியாமல் போய்விடும்)"

(தகழி, 1986:33)

தகழியின் செம்மீனில் காணப்படும் இப்பகுதியை சுந்தரராமசாமி

"மரக்கான் எதுக்கு புள்ளே சொத்து சேத்து வைக்கப்போறான். அந்த காலத்து ஆளுங்க 'தோணியும் வலையும் துறையிலே இருக்கிறவனுக்கு அப்படிம்பாங்க. அந்தக் காலமெல்லாம் போச்சு. இருந்தாலும் மனசு வச்சுப்புட்டான்னா எந்த மரக்கானுக்குத்தான் தோணியும் வலையும் வாங்கமுடியா துன்னு கேக்கறேன்".

(சுந்தரராமசாமி, 1987:43)

என மொழிபெயர்த்துள்ளார். இதில் "ஏடி" என்பதை "புள்ளே" எனவும், "பண்டோள்ளோரு" என்பதை "அந்தக் காலத்து ஆளுங்க" எனவும், "போயி" என்பதை "போச்சு" எனவும், "மனஸு வச்சாலு" என்பதை "மனசு வச்சுப்புட் டான்னா" எனவும் பேச்சுமொழிச் சொற்களால் மொழிபெயர்த்துள்ளார். மேலும் வச்சுப்புட்டான், கேக்கறான் போன்ற பேச்சுவழக்கு வடிவங்களையும் ஆண்டிருப்பது பொருத்தமானதாகும்.

2. "அடி நீ யெந்தினா கரயுந்நது? நீ பறஞ்ஞிட்டல்லே ஞான் பட்டாளத்தில் போயது? அதா ஞானும் பறயுந்நெ. ஞான் பறஞ்ஞிட்டு பட்டாளத்தில் போயி. அவிடெ செந்நேப்பின்னெ ஞானும் வேண்ட கொச்சும் வேண்ட. இனி தந்தேம் மோனும் கூடெ பொறுத்தோளணம். ஞானும் என்றெ கொச்சும் இவிடுந்நு போக்வா. மாதவன் பறஞ்ஞு. எடி தலயிரிக்கும்பழு வாலாடருது. அறியாமோ? எந்நா தல மதி வாலு வேண்ட (அடி, நீ எதற்கு அழுகிறாய்? நீ சொன்னதால் தானே நான் பட்டாளத்திற்குப் போனேன்? அதைத்தான் நானும் சொல்கிறேன். நான் சொல்லித்தான் பட்டாளத்திற்குப் போனீர்கள். அங்கே போனதன் பிறகு நானும் வேண்டாம். குழந்தையும் வேண்டாம். இனி அப்பாவும் மகனும் ஒன்றாகத் தங்குங்கள். நானும் எனது குழந்தையும் இங்கிருந்து போகிறோம். மாதவன் சொன்னான். அடி தலை உள்ளபோது வாலாட்டக்கூடாது தெரியுமா? அப்படி யானால் தலைபோதும் வால் வேண்டாம்)"

(பி. கேசவதேவன், 1990:65)

கேசவதேவின் 'அச்சனும் பாரியயும் (தந்தையும் மனைவியும்)' என்ற சிறுகதையில் காணப்படும் இப்பகுதியை புஉந்பவேணிகோவி,

"ஏண்டி அழுவுறே. நீ சொல்லித்தானே நான் பட்டாளத்துக்குப் போனேன். அதைத்தான் நானும் சொல்றேன். நான் சொல்லிப்பட்டாளத்துக் குப்போனீக. அங்கே போனதும் நானும் வேணாம். புள்ளையும் வேணாம். இனி அப்பனும் மவனுமா இருங்க. நானும் எம்புள்ளையும் எங்கேனாச்சும் போறோம். அடியே தலையிருக்கும்போது வாலாடக்கூடாது தெரியுமா? அப்படீன்னா தலை போதும் வாலு வேண்டா"

(புஉந்பவேணிகோவி, 1990:53)

என மொழிபெயர்த்துள்ளார். இதில் "எடீ நீ யெந்தினா கரயுந்நது?" என்பதை "ஏண்டி அழுவுறே" எனவும், "பறயுந்நெ" என்பதை "சொல்றேன்" எனவும், "இனி தந்தேம்' மோனும் கூடெ பொறுத்தோளணம். ஞானும் என்றெ கொச்சும் இவிடுந்நு போகவா "என்பதை" இனி அப்பனும் மவனுமா இருங்க நானும் எம்புள்ளையும் எங்கேனாச்சும் போறோம் " எனவும் பேச்சுமொழியிலமைந்த மாற்றிணைகளால் பதிவிட்டுள்ளார். இங்கு மூலத்தில் கிடைக்கின்ற அனுபவம் மொழி பெயர்ப்பிலும் வந்துள்ளது எனலாம். மொழிபெயர்ப்புகள் இத்தகைய முறையில் அமைவதைச் சிறப்பானதாகக் கொள்ளலாம்.

2. பேச்சுவழக்கிற்குப் பொதுவழக்கு

தருமொழி நூலில் காணப்படும் பேச்சுவழக்கு மொழியைப் பொதுவழக்கு மொழியாக மாற்றி மொழிபெயர்ப்பை அமைத்துள்ளமையை இவ்வகையில் அடக்கலாம். மலையாளத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள புனைகதைகளில் பெரும் பான்மையும் இவ்வகையில் அடங்குகின்றன. சான்றாக,

"என்றெயோ! ஒக்கெகரிஞ்ஞு. கண்டத்திலெ பேக்கோம் பேக்கோந்து தவள கரேண்ட காலத்து வெருத்தேடன்ற அறபோலெ அல்ல கெடக்கணு ஆகாசம் (என்னுடையதா! எல்லாம் கரிகிவிட்டது. வயலில் பேக்கோம் பேக்கோம் என்று

தவளை கத்தவேண்டிய காலத்தில் சலவைக்காரனின் அறை போல அல்லவா கிடக்கிறது ஆகாயம்)"

(இடசேரி கோவிந்தன் நாயர், 1966:377)

கூட்டுக்கிறுஷி (கூட்டுப்பண்ணை) என்ற நாடகத்தில் காணப்படும் இப்பகுதியை ரா. சௌரிராஜன்,

"என்வயல் என்ன வாழ்ந்தது? எல்லாம் கரிசிப்போய்விட்டது. பேக்கோம் பேக்கோம் என்று தவளைகள் கத்தவேண்டிய காலத்தில் வண்ணார் வீட்டு அறைமாதிரி வானம் வெளுத்துக்கிடக்கிறதே. பார்க்கவில்லை?....... கஷ்டம்"

(ரா. சௌரிராஜன், 1987:28)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இங்கு தருமொழிவடிவத்தில் உள்ள பேக்கோம் என்ற ஒலிக்குறிப்புச் சொல்லைத் தவிர பிற அனைத்தும் பொதுவழக்கைச் சார்ந்தவையாக உள்ளன. எனவே இம்மொழிபெயர்ப்பில் மூலத்தின் இயல்பு இடம்பெற்று வரவில்லை எனலாம்.

2. மேலும் தருமொழிப்படைப்புகளில் காணப்படும் கிளைமொழிகளில் தகழியின் செம்மீன் மீனவர் சமுதாய வழக்கையும், இரண்டிடங்கழி பறயர் சமுதாய வழக்கையும், பஷீரின் பால்யகாலசகி, என்றுப்புப்பாக் கோரானயுண்டாயிருந்து போன்றன இஸ்லாமிய சமுதாய வழக்கையும் கொண்டுள்ளன. இவற்றிற்குச் செய்துள்ள மொழிபெயர்ப்புகளை 1. கிளைமொழிக்குக் கிளைமொழி, 2. கிளைமொழிக்குப் பொதுமொழி என வகைப்படுத்தி விளக்கலாம்.

1. <u>கிளைமொழிக்குக் கிளைமொழி</u>

தருமொழி வடிவத்தில் காணப்படும் கிளைமொழியை அதற்குச்சமமான மற்றொரு கிளைமொழியாக மாற்றியுள்ளமையை இவ்வகையில் அடக்கலாம். சான்றாக,

"நோக்கு! நின்னெ நின்றெ தள்ளேம் தந்தேம் வளர்த்தியபோலெ நீ வயற்றிக்கெடக்கிந்நதினேம் வளர்த்தியேக்கணம். பெண்ணாணெங்கி வல்ல கடப்புறத்து கெடக்குந்ந செறுக்கனு வென வருத்திவெச்சேக்கணம் கேட்டோ! (பாரு! உன்னை உன் அம்மாவும் அப்பாவும் வளர்த்தியது போல நீ வயிற்றில் கிடப்பதையும் வளர்த்தவேண்டும். பெண்தானென்றால் ஏதாவது கடற்கரையில் கிடக்கிற பையனுக்கு வினைவருத்தி வைக்க வேண்டும் கேட்டாயா!)"

(தகழி, 1986:204)

செம்மீனில் காணப்படும் இப்பகுதியை சுந்தரராமசாமி

"இந்தாப்பாரு உன்னை உங்க அப்பனும் அம்மாவும் வளத்தாப்போலே உன் வயித்திலே இருக்கிற குழந்தையையும் வளத்தணும். தெரிஞ்சுதா அம்மா? அது பெண்ணாப் பிறந்ததுன்னா கடற்கரைப் பயல்களுக்குத் தொல்லை கொடுத்துக்கிட்டு இருக்கணும் தெரிஞ்சுக்கோ"

(சுந்தரராமசாமி, 1987:269)

என மொழிபெயர்த்துள்ளார். இதில் "நோக்கு" என்பதை "இந்தாப்பாரு" எனவும், "நின்னெ" என்பதை "உன்னெ" எனவும், "வளத்திய போலெ" என்பதை "வளத்தாப் போலே" எனவும் "வயற்றிக்கெடக்குந்நதினேம்" என்பதை "வயத்திலே இருக்கிற குழந்தையையும்" எனவும், "கடப்புறத்து கெடக்குந்ந செறுக்கனு வென வருத்தி வெச்சேக்கணம்" என்பதை "கடற்கரைப் பயல்களுக்குத் தொல்லை கொடுத்துக் கிட்டு இருக்கணும்" எனவும் மீனவக் கிளைமொழிக்குச் சமமாக மற்றொரு கிளை மொழியைப் பயன்படுத்தி மொழிபெயர்ப்பை அமைத்துள்ளார். இங்கு மூலத்தின் பண்பு மொழிபெயர்ப்பிலும் வந்துள்ளது எனலாம்.

2. கிளைமொழிக்குப் பொதுமொழி

தருமொழிவடிவத்தில் காணப்படும் கிளைமொழியைப் பொதுமொழியாக மாற்றி மொழிபெயர்த்துள்ளமையை இவ்வகையில் அடக்கலாம். சான்றாக,

"எந்தாணெடோ ஈ பறேணது? இது எவடத்தெ ஞாயமா? ஞானு உத்தரம் பறஞ்ஞில்லேலு மயறு மீர்த்து முட்டும். ஈ கிடாத்தீடெ தள்ளே கொண்டு மரானு தான் எந்து தொக பெண்பணம் கொடுத்தெடோ? (என்னடா சொல்றே! இது எங்குள்ள நியாயம்? நா(ன்) பதில் சொல்லாட்டா வயிறு வீங்கி ஊதும் நீ இந்தப் பெண்ணின் பெத்தவளக் கொண்டுவர நீ எவ்வளவு தொக பரிசம் கொடுத்தே?)

(தகழி, 1988:12)

இரண்டிடங்ஙழி (இரண்டுபடி) என்ற நாவலில் காணப்படும் இப்பகுதியை டி. ராமலிங்கம்பிள்ளை,

"என்னடே நீ சொல்வது? இது எந்த இடத்து நியாயம்? நான் பதில சொல்லாவிட்டால் வயறு பெருகி வீங்கும். இந்தப் பெண்ணின் அம்மெயெக் கொண்டுவர நீ என்ன தொகை பெண்பணமாகக் கொடுத்தே?"

(டி. ராமலிங்கம்பிள்ளை, 1990:12)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இங்கு "எந்தாணெடோ ஈ பறேணது" என்பதை "என்னடே நீ சொல்வது?" எனவும், "இது எவடத்தெ ஞாயமா" என்பதை "இது எந்த இடத்து நியாயம்" எனவும், "ஞானு உத்தரம் பறஞ்ஞில்லேலு மயறு மீர்த்து முட்டும்" என்பதை "நான் பதில் சொல்லாவிட்டால் வயிறு பெருகி வீங்கும்" எனவும், "ஈ கிடாத்தீடெ தள்ளெ கொண்டு மரானு தான் எந்துதொக பெண்பணம் கொடுத்தெடோ?" என்பதை "இந்தப்பெண்ணின் அம்மெயெக் கொண்டுவர நீ என்ன தொகையைப் பெண்பணமாகக் கொடுத்தே" எனவும், பறையர்களின் கிளைமொழிக்குச்சமமாகப் பொதுமொழியைப் பயன்படுத்தியுள்ளார். இதனால் மூலமொழி வடிவம் தரும் பண்பை மொழிபெயர்ப்பு இழந்துநிற்கிறது என்பது தெளிவு.

இதனைப் பறையர்களின் கிளைமொழி வழக்கிற்குச் சமமான தமிழ்க் கிளைமொழி வழக்கில் மொழிபெயர்த்திருந்தால் சிறப்பாக அமைந்திருக்கும்.

4. குறிப்புப்பொருள்

மலையாளப் புனைகதைகளில் காணப்படும் குறிப்புப்பொருள்களைத் தமிழில் வடிவ அடிப்படையிலான மாற்றங்களைச் செய்து மொழிமாற்றியுள்ளனர். இதற்காக கையாண்டிருக்கும் தருமாற்றங்களை 1. கருத்துவிளக்க நடையைப் பயன்படுத்தியிருத்தல், 2. மாற்றுவடிவங்களைப் பயன்படுத்தியிருத்தல் என வகைப்படுத்தி விளக்கலாம்.

1. கருத்துவிளக்க நடையைப் பயன்படுத்தியிருத்தல்

தருமொழிவடிவத்தில் குறிப்புப்பொருளை விளக்குமுறையில் தரும் நோக்கில் பெறுமொழிவடிவத்தின் நடையமைப்பை மாற்றியிருத்தலை இவ்வகையில் அடக்கலாம். சான்றாக,

"ஸ்த்ரீகள் தைவத்தின்றெ உல்க்ருஉஷ்ட ஸ்ருஉஷ்டியாணெந்நு ஏதோ ஒரு மகாகவி பாடிட்டுள்ளதாயி ஸாறாம்ம பறஞ்ஞு. கேசவன் நாயர்க்கு சிரிவந்நு. ஸ்த்ரீகளுடெ தலக்குள்ளில் நிலாவெளிச்சமாணு. அயாள் பறஞ்ஞு. உதாகரணமாயி ஏழு விவாகம் செய்த ஒரு மான்யன்றெ அனுபவகத கேசவன் நாயர் பறயுகயும் செய்து. ஆ மான்யன்றெ ஏழாமத்தெ ஜீவிதகாலசகி கோணிப்படியில் நிந்நு எந்தோ ஆவசியம் ப்ரமாணிச்சு தலயும் குத்திக்காிங்கல் திண்ணயில் வீணு. அவரெ ஆசுபத்ரியில் கொண்டு செந்நாக்கிட்டு மடங்ஙிவந்ந பர்த்தாவு ப்ரக்மசாரியாய கூட்டுகாரனோடு விசேசம் பறயுகயாயிருந்நு. 'அபகடம் அத்ர பயங்கரமல்ல' 'தலபொட்டித்துறந்நு எந்நல்லே பறயுந்நது?' 'அது சரியாணு' 'தலச்சோறு காணாமோ?' ஊறயி. ஏழு ஸ்த்ரீகளெ அடுத்தறிஞ்ஞ ஆ மான்யன் நித்யப்ரக்மசாரியோடு பறயுகயாணு. தல பொட்டித்துறந்நால்த்தன்னெ

தலச்சோர் எவிடெக்காணானா? ஸ்த்ரீயல்லெ? (பெண்கள் கடவுளின் மகத்தான படைப்பென்று ஏதோ ஒரு பெருங்கவிஞன் பாடியிருப்பதாக சாராம்மை சொன்னாள். கேசவன் நாயருக்கு சிரிப்புவந்தது. பெண்களின் தலைக்குள் வெறும் நிலவொளிமட்டுமே. அவர் சொன்னார். எடுத்துக்காட்டாக ஏழுதிருமணங்களைச் செய்த ஒரு நபரின் அநுபவக்கதையை கேசவன் நாயர் சொல்லவும் செய்தார். அந்த ஆசாமியின் ஏழாவது வாழ்க்கைத்துணைவி ஏணிப்படியிலிருந்து ஏதோ அவசியத் திற்காக தலைகீழாகக் கருங்கற்களால் கட்டின திண்ணையில் விழுந்து விட்டாள். அவளை மருத்துவமனையில் சேர்ப்பித்துவிட்டு திரும்பவரும் கணவன் பிரம்மச்சாரியான நண்பனோடு செய்தியைச் சொல்லத் தொடங்கினான். 'விபத்து அவ்வளவுக்கு பயப்படும்படியாக இல்லை' 'தலை உடைந்து நொறுங்கிவிட்டது என்றல்லவா சொல்கிறார்கள்?' 'சரிதான்'. 'மூளை தெரிந்திருக்குமே' 'ஊேற! ஏழு பெண்களுடன் நெருங்கிப்பழகின அந்த ஆசாமி நித்திய பிரம்மசாரியிடம் சொன்னான். தலை உடைந்து நொறுங்கினால்தான் என்ன? மூளையை எங்கே பார்க்க? பெண்ணல்லவா?)"

(பஷீர், 1991:12)

என்பதை

தெய்வத்தின் உன்னத சிருஷ்டிதான் பெண்கள்! என்றாள் சாராம்மா. பெரிய ஒரு கவிஞர் பாடியிருந்ததை அவள் மேற்கோளாக வேறு காட்டினாள். அதைக்கேட்டதும் கேசவனுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. பெண்களின் தலைக்குள் என்ன இருக்கிறது? முழு நிலாவெளிச்சம். அப்போது ஏதோ முற்றும் என்பார்களே' என்று இழுத்தார் அவர். உதாரணமாக ஏழுமுறை திருமணம் செய்துகொண்ட ஒருவனைப்பற்றியக் கதையையும் கூறினார். ஏழாமவள் ஏதோ எதிர்பாராத சந்தர்ப்பத்தில் ஏணிதடுக்கிக் கீழே விழுந்து விடுகிறாள். தலை குப்புற விழுந்த அவளை மருத்துவமனையில் சேர்த்துவிட்டுத் திரும்பி வருகிறான் கணவன். குசலம் விசாரித்தான் இன்னும் திருமணமாகாத ஒரு நண்பன். அவனிடம் அந்த ஆசாமி சொன்னானாம். 'நல்லவேளை அடி அவ்வளவு மோசமில்லை. 'தலை

இரண்டாகப்பிளந்துவிட்டது என்று சொன்னாங்களே!' 'ஆமாம்........' 'அப்போ மூளை வெளியே தெரிந்திருக்குமே' அவ்வளவுதான்! விழுந்து விழுந்து சிரித்துவிட்டான் கணவன். மூளையா? பொம்பளைகளிடம் எங்கேயாவது மூளை இருக்குமா? என்றானாம்"

(சுரா, 1983:42-43)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதில் "தல பொட்டித் துறந்நால்த் தன்னெ தலச்சோர் எவிடெக்காணானா. ஸ்த்ரீயல்லே?" என்பதை "மூளையா? பொம்பளைகளிடம் எங்கேயாவது மூளை இருக்குமா?" என 'பெண்களுக்கு சுய புத்தியில்லை' என்ற பொருளைத்தரும் மூல வடிவத்தை சுரா கருத்துவிளக்க நடையைப் பயன்படுத்தி மொழிமாற்றியுள்ளார். ஆனால் 'ஆ மான்யன்றெ ஏழா மத்தெ ஜீவிதகாலசகி கோணிப்படியில் நிந்து <u>எந்தோ ஆவசியம் ப்ரமாணிச்சு</u> தலயும் குத்திக் கரிங்கல் திண்ணயில் வீணு, என்ற பகுதியில் அடிக்கோடிட்ட சொற்களில் குறிப்பாகத் தெரிக்கும் ஆழமான அங்கதச் சுவையை மொழிபெயர்ப்பாளர் 'ஏதோ எதிர்பாராத சந்தர்ப்பத்தில்' என்று மொழிபெயர்க்கும் போது உப்புச்சப்பற்ற வெறும் வருணனையாக மட்டுமே பெறுமொழிவடிவம் நின்றுவிடுகிறது. எனவே மொழிபெயர்ப்பாளர்கள் இத்தகைய குறிப்புப்பொருள் தரும் பகுதிகளைக் கூர்த்த உணர்வினால் அறிந்து மொழிபெயர்க்க வேண்டும், வரிக்குவரி ஆழமான நகைச்சுவை ததும்பும் பஷீர்போன்றவர்களின் படைப்புகளை மிக்க கவனத்துடன் மொழிபெயர்க்கவில்லை என்றால் மூல இலக்கிய அனுபவத்தை பெறுமொழிவடிவத்தில் கொண்டுவர இயலாமல் போகும்.

2. <u>மாற்றுவடிவங்களைப் பயன்படுத்தியிருத்தல்</u>

தருமொழிவடிவத்தின் உட்கருத்திற்கிணையான பெறுமொழிவடிவத்தைப் பயன்படுத்தியிருத்தலை இவ்வகையில் அடக்கலாம். சான்றாக,

"உயர்ந்த கன்மதில்கள்........ஒரு ப்ரசாந்தத" (பஷீர், 1990:17)

என்பதை, "கற்களால் ஆன அந்த உயர்ந்த மதில்கள்....... அமைதிக்கு

மட்டும் கொஞ்சமும் பஞ்சமிருந்ததாகத் தெரியவில்லை" (சுரா, 1990:58) என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம் (இவ்வெடுத்துக்காட்டை ஆய்வேட்டில் 5:2:1:7 என்னும் பகுதியில் பார்க்கவும்). இங்கு சிறைச்சாலையின் தன்மையைக் குறிப்பாகக் காட்டும் தருமொழிவடிவத்தின் நிலையிலிருந்து மாறுபட்டு அதன் உட்கருத்தை வெளிப்படுத்தும் நோக்கில் மொழிபெயர்ப்பு மாற்றுவடிவங்களைப் பெற்று விளக்கமாகவும் தெளிவாகவும் அமைந்துள்ளது.

5. மொழிநடை

மலையாளத்திலிருந்து தமிழிற்குப் புனைகதைகளை நடைமாற்றம் செய்து மொழிபெயர்த்துள்ள பகுதிகளும் உள்ளன. இதற்குரிய காரணங்களாக தருமொழி வடிவத்தின் இயல்பைப் பெறுமொழிவடிவத்திலும் கொண்டுவர முயற்சித்தல், நேரடி இணைகள் இல்லாதபோது மாற்றிணைகளைக் கையாளுதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். நடைமாற்றத்தை அதன் தன்மைகளின் அடிப்படையில் 1. விரிவாக்கியிருத்தல், 2. செறிவாக்கியிருத்தல், 3. மாற்றிணைகளைப் பயன்படுத்தியிருத்தல், 4. குறைத்தொடர்களை நிரப்பியிருத்தல், 5. சொல்வரிசை முறையை மாற்றியிருத்தல், 6. வாக்கியங்களை இணைத்திருத்தல், 7. வாக்கியங்களைப் பிரித்திருத்தல், 8. உரைக்கோவைகளின் வடிவத்தை மாற்றியிருத்தல், 9. எதிர் இணைகளைப் பயன்படுத்தியிருத்தல் என வகைப்படுத்தி விளக்கலாம்.

1. விரிவாக்கியிருத்தல்

மூலவடிவத்தைவிடவும் மொழிபெயர்ப்பின் நடையமைப்பை விரிவாக அமைத்து பெறுமொழிவடிவத்தை உருவாக்குவது விரிவாக்கமாகும். சான்றுகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. "கறத்தம்ம போயாலு பின்னெ கறத்தம்ம என்ன ஓர்க்குமோ? பரீக்குட்டியுடெ ஆத்மார்த்தமாய சம்சயமாயிருந்நு அது. ஓர்த்தில்லேலு ஈ கடப்புறத்திருந்நு ஞான் பாடும். வல்ய வயஸ்ஸனாயி வாயிலெ பல்லு போயிக் கழிஞ்ஞும் பாடும். கறுத்தம்மய்க்கு பறயுவானுண்டாயிருந்நு. கொச்சு மொதலாளி ஒரு நல்ல பெண்ணினேம் கெட்டி கொச்சுங்ஙளுமாயி நல்ல கச்சோடக்காரனாயிக்கழியணம். பரீக்குட்டி மிண்டியில்ல. கறுத்தம்ம துடர்ந்நு மொதலாளி எந்நெம் நம்மா தம்மிகளிச்சு நடந்நதும் அங்ஙு மறாக்கணம் (கறுத்தம்மா போனால் பிறகு கறுத்தம்மா என்னை நினைப்பாயா? பரீக்குட்டியின் உள்ளார்ந்த ஐயம் அது. நினைக்காவிட்டாலும் இந்த கடற்கரையிலிருந்து நான் பாடுவேன். நல்ல கிழவனாகி வாயில் பற்கள் விழுந்தபிறகும் பாடுவேன். கறுத்தம்மாவிற்கு சொல்வதற்கு இருந்தது. சின்ன முதலாளி ஒரு நல்ல பெண்ணையும் திருமணம் செய்து பிள்ளைகளுமாக நல்ல வியாபாரியாக வாழவேண்டும். பரீக்குட்டி பேசவில்லை. கறுத்தம்மா தொடர்ந்தாள். முதலாளி, முன்பு நாம் ஒன்றாக விளையாடி நடந்ததையும் நீங்கள் மறக்கவேண்டும்)".

(தகழி, 1986:119)

செம்மீனில் காணப்படும் இப்பகுதியை சுந்தரராமசாமி

"நீ போயுட்டா........அப்புறம் உனக்கு என் ஞாபகம் இருக்குமா? அவன் மனதில் உண்மையிலேயே எழுந்த சந்தேகம் அது. நீ என்னை மறந்துப்புட்டாலும் நான் என்னைக்கும் இந்தக்கடற்கரையிலே உட்கார்ந்து பாடிக்கிட்டிருப்பேன். வயசாகி, பல்விழுந்து தொண்டு கிழமானாலும் சரி, நான் பாடிக்கிட்டிருப்பேன் என்றான் அவன். கறுத்தம்மா தன் மனதில் எண்ணியதை வாய்விட்டுச்சொன்னாள். முதலாளி ஒண்ணு சொல்றேன். அப்படிச்செய்யுங்க. மனசுக்குப் பிடிச்ச ஒரு பெண்ணைக் கட்டிக்கிட்டு வியாபாரத்தையும் நல்லபடியாக் கவனிச்சுக்கிட்டு சந்தோஷமா இருங்க. பரீக்குட்டி மௌனமாக இருந்தான். கறுத்தம்மா தொடர்ந்து பேசிக்கொண்டே போனாள். முதலாளி, நீங்க என்னை அடியோடு மறந்துடணும். நம்ம ரெண்டுபேரும் கூடிப்பேசிக்கிட்டிருந்ததையும் அடியோடு மறந்துடணும்."

(சுந்தரராமசாமி, 1987:153)

என மொழிபெயர்த்துள்ளார். இதில் "ஓர்த்தில்லேலும்" என்பதை "நீ என்னை மறந்துப்புட்டாலும்" எனவும், "ஈ கடப்புறத்திருந்நு ஞான் பாடும்" என்பதை "நான் என்னைக்கும் இந்த கடற்கரையிலே உட்கார்ந்து பாடிக்கிட்டிருப்பேன்" எனவும், "கறுத்தம்மய்க்கு பறயுவானுண்டாயிருந்நு" என்பதை "கறுத்தம்மா தன் மனத்தில் எண்ணியதை வாய்விட்டுச் சொன்னாள்" எனவும், "கொச்சுமொதலாளி ஒரு நல்லபெண்ணினெ கெட்டி கொச்சுங்ஙளுமாயி, நல்ல கச்சோடக்காரனாயி கழியணம்" என்பதை "முதலாளி ஒண்ணு சொல்றேன். அப்படிச் செய்யுங்க. மனசுக்குப் பிடிச்ச ஒரு பெண்ணைக் கட்டிக்கிட்டு, வியாபாரத்தையும் நல்லபடியாக் கவனிச்சுக்கிட்டு சந்தோஷமா இருங்க" எனவும், "கறுத்தம்ம துடர்ந்நு" என்பதை "கறுத்தம்மா தொடர்ந்து பேசிக்கொண்டே போனாள்" எனவும், "மொதலாளி எந்நெம் நம்மா தம்மிகளிச்சு நடந்நதும் அங்ஙு மறாக்கணம்" என்பதை "முதலாளி நீங்க என்னை அடியோடு மறந்துடணும். நம்ம ரெண்டுபேரும் கூடிப் பேசிக்கிட்டிருந்ததையும் அடியோடு மறந்துடணும்" எனவும் விரிவாக்கமாக அமைத்துள்ளார்.

2. "கறத்தம்ம அவளுடெ பாவியிலேக்கு போவுகயாணு. அதெங்ஙனெயாயிரிக்கும்? அபகடத்தில் நிந்நும் ரக்ஷப்பெட்டுதன்னெயோ அவள் போகுந்நது? ஆருமாரும் அவளெக்குறிச்சு ப்றார்த்திச்சில்ல. அவளும் ப்றார்த்திச்சில்ல. ஒருபக்ஷே பரீக்குட்டி ப்றார்த்திக்குந்நுண்டாவாம். அங்ஙனெ ஆ கடப்புறத்திந்நு சுபரிசிதயாயிருந்ந கறுத்தம்ம போயி. இனியும் ஆ காலம் இவிடெ பரந்நொழுகுமோ? பரந்நொழுகுமாயிரிக்காம். பக்ஷே கேள்கான் ஆளில்ல (கறுத்தம்மா அவளுடைய எதிர்காலத்தை நோக்கிச் செல்கிறாள். அதெப்படியிருக்கும்? விபத்திலிருந்து தப்பித்தானா அவள் போகிறாள்? யாரும் அவளுக்காகப் பிரார்த்திக்கவில்லை. ஒருவேளை பரீக்குட்டி பிரார்த்தனை செய்துகொண்டிருக்கலாம்.
அப்படி அந்தக்கடற்கரையிலிருந்து எல்லோருக்கும் தெரிந்த கறுத்தம்மா போனாள். இனியும் அந்தப்பாடல் இங்கு பரந்தொழுகுமா? பரந்தொழுகலாம். ஆனால் கேட்பதற்கு ஆளில்லை)"

(தகழி, 1986:136)

செம்மீனில் இடம்பெற்றுள்ள இப்பகுதியை சுந்தரராமசாமி,

"கறுத்தம்மா தன் எதிர்கால வாழ்வை நோக்கி அடியெடுத்து வைத்து நடக்கிறாள். அவளுடைய எதிர்காலம் எப்படி இருக்கிறதோ? ஒரு வேளை அவமானத்திலிருந்து பயங்கரமான ஒரு பொறியிலிருந்து அவள் தப்பிச் செல்கிறாளோ? அவளுடைய நல்வாழ்வுக்காக யாரும் பிரார்த்திக்கவில்லை. அவளும் பிரார்த்திக்க வில்லை. ஒருகால் பரீக்குட்டி பிரார்த்தித்தானோ என்னவோ? அந்தக்கடற்கரை யில் கறுத்தம்மாவைத் தெரியாதவர்கள் யாரேனும் உண்டா? அவள் இன்று அந்த ஊரை விட்டே செல்கிறாள். ஆனால் அந்தக் கடற்கரையில் இனிமேலும் அந்தக் கீதம் கேட்குமா? கேட்கலாம். ஆனால் அதையார் கூர்ந்து கேட்கப்போகி றார்கள். அதற்குத்தான் ஆள் இல்லை)"

(சுந்தரராமசாமி, 1987:175)

என மொழிபெயர்த்துள்ளார். இதில் "பாவியிலேக்கு" என்பதை "எதிர்கால வாழ்வை நோக்கி" எனவும், "போவுகயாணு" என்பதை "அடியெடுத்து வைத்து நடக்கிறாள்" எனவும், "அதெங்ஙனெயாயிரிக்கும்" என்பதை "அவளுடைய எதிர்காலம் எப்படி இருக்கிறதோ" எனவும், "அபகடத்தில் நிந்நும் ரக்ஷப்பெட்டு தன்னெயோ அவள் போகுந்நது" என்பதை "ஒருவேளை அவமானத்திலிருந்து பயங்கரமான பொறி யிலிருந்து அவள் தப்பிச்செல்கிறாளோ" எனவும் "அங்ஙனெ அக்கடப்புறத்திந்நு சுபரிசிதயாயிருந்ந கறுத்தம்ம போயி" என்பதை "அந்தக்கடற்கரையில் கறுத்தம்மாவைத் தெரியாதவர்கள் யாரேனும் உண்டா? அவள் இன்று அந்த ஊரை விட்டே செல்கிறாள்" எனவும், "பரந்நொழுகுமாயிரிக்காம், பக்ஷே கேள்க்கான் ஆளில்ல" என்பதை "கேட்கலாம். ஆனால் அதையார் கூர்ந்து கேட்கப்போகிறார்கள். அதற்குத் தான் ஆள் இல்லை" எனவும் விரிவாக்கம் செய்துள்ளார்.

3. மதிலினு சோரயும் நீரும் வெச்சுகாறுகயில்ல. பக்ஷே அதினொராத்மாவு உண்டாயிட்டில்லே எந்நொரு ஸம்சயம். மதில் பலதும் கேட்டு. பலதும் கண்டு (மதிலிற்கு இரத்தமும் நிணநீரும் இருக்காது. ஆனால் அதற்கொரு ஆத்மா இருக்காதா என்றொரு சந்தேகம். மதில் பலவற்றையும் கேட்டது. பலவற்றையும் கண்டது)"

(பஷீர், 1990:52)

மதிலுகள் (மதில்கள்) என்ற நாவலில் காணப்படும் இப்பகுதியை சுரா

"மதிலுக்கு இரத்தம் இல்லைதான். ஆனால் அதற்கு ஓர் ஆத்மா இல்லை என்பதை நான் ஏற்றுக்கொள்ளமுடியாது. மதில் பலவற்றையும் காண்கிறது. யார்யாரோ பேசுவதையெல்லாம் கேட்கிறது. பிறகு எப்படிச் சொல்லமுடியும் அதற்கு உயிரில்லையென்று?"

(சுரா, 1980:75)

என மொழிபெயர்த்துள்ளார். இதில் "அதினொராத்மாவு உண்டாயிட்டில்லே எந்நொரு ஸம்சயம்" என்பதை "அதற்கு ஓர் ஆத்மா இல்லை என்பதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது" எனவும், "மதில் பலதும் கேட்டு. பலதும் கண்டு" என்பதை "மதில் பலவற்றையும் காண்கிறது. யார்யாரோ பேசுவதை யெல்லாம் கேட்கிறது. பிறகு எப்படிச் சொல்லமுடியும் அதற்கு உயிரில்லையென்று?" எனவும் விரிவாக்கம் செய்துள்ளார்.

2. செறிவாக்கியிருத்தல்

மூலமொழிவடிவத்தைவிடவும் பெறுமொழிவடிவத்தின் நடையமைப்பைச் சுருக்கமாக அமைத்தலை இவ்வகையில் அடக்கலாம். சான்றுகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1"ஓலோம்பியுடெ சிந்த மற்றொரு தரத்திலாணு ப்ரவர்த்திச்சது. அவன் சோதிச்சு. 'ஈ குட்டநாட்டில எத்ற பற நெலம் காணும்? பொன்னிட்டி ஆ சோத்யத்தின்றெ அல்பத்வத்தில் பொட்டிச்சிரிச்சுபோயி. ஈ காணாய நாடு முழுவன் எத்ற பற கண்டம் காணுமெந்து! ஆர்க்கறியாமெடொ?" ஓலோம்பி

அவன்றெ சோத்யத்தின்றெ உத்தேசத்தெ விசதப்பெடுத்தி (ஓலோம்பியின் சிந்தனை பிறிதொருவகையில் தான் செயல்பட்டது. அவன்கேட்டான். இந்த குட்டநாட்டில் எத்தனை பறை விதைப்பாடு காணும்? பொன்னிட்டி அந்தக் கேள்வியின் அற்பத்தனத்தை எண்ணிக்குபீரெங்கு சிரித்தான். இந்த நாடு முழுவதும் எவ்வளவு விதைப்பாடு இருக்குமென்று யாருக்குத்தெரியும்? ஓலோம்பி அவனுடைய கேள்வியின் உட்கருத்தை விளக்கினான்)".

(தகழி, 1988:33)

என்பதை டி. ராமலிங்கம் பிள்ளை

"ஓலோம்பியின் சிந்தனை பிறிதோர் வழிக்குச் சென்றது. அவன் கேட்டான், 'இந்த குட்டநாட்டில் எத்தின பறை விதைப்பாடு காணும்? ஆருக்குத் தெரியும்டே? உலோம்பி அவனுடைய கேள்வியின் உட்கருத்தை விளக்கினான்".

(டி. ராமலிங்கம்பிள்ளை, 1990:32)

என மொழிபெயர்த்துள்ளார். இதில் "பொன்னிட்டி ஆ சோத்யத்தின்றெ அல்பத்வத்தில் பொட்டிச்சிரிச்சுபோயி. ஈ காணாய நாடு முழுவன் எத்றபற கண்டம் காணுமெந்து ஆர்க்கறியாமெடோ?" என்பதை "ஆருக்குத் தெரியுமடே" என மட்டுமே மொழிமாற்றம் செய்துள்ளார். இங்கு மூலவடிவத்திலுள்ள கேள்வியின் கருத்து விடையிலும் திரும்ப இடம்பெற்றுள்ளது. மொழிபெயர்ப்பில் அது விடுபட்டாலும் பொருள் தெளிவில் குறைவு ஏற்படவில்லை.

2. "நெலோம பறம்பும் மேடிக்கானுள்ள ருபா ஒண்டாக்கும் பழேக்கு ஞானும் கொச்சும் சாகுமல்லோ........வேண்ட நெலோம் வேண்ட பறம்பும் வேண்ட. இரிக்குந்நேடத்தோளம் சுகமாயி கழிஞ்ஞாமதி (வயலும் விளையும் வாங்குவதற்கான ருபாய் சம்பாதிக்கும்போது நானும் குழந்தையும் செத்துப்போவோம்.......வேண்டாம், வயலும் வேண்டாம் விளையும் வேண்டாம் இருக்கிறதற்கேற்பச் சுகமாக வாழ்ந்தால் போதும்)"

(பி. கேசவதேவ், 1990:62)

கேசவதேவின் 'அச்சனும் பார்யயும் (தந்தையும் மனைவியும்)' என்ற சிறுகதையில் காணப்படும் இப்பகுதியை புஊ்பவேணிகோவி,

"நெலத்தையும் சிலத்தையும் வாங்கறதுக்குள்ளாற நானும் எம்பிள்ளையும் கெடந்துச் செத்துப்புடுவோம்.........வேண்டா நெலமும் வேண்டா ஒண்ணும் வேண்டா. இருக்கிறதை வெச்சுக்கிட்டிருந்தா போதும்".

(புஊ்பவேணிகோவி, 1990:51)

என மொழிபெயர்த்துள்ளார். இதில் "நெலோம் பறம்பும் மேடிக்கானுள்ள ருபா ஒண்டாக்கும்பழேக்கு" என்பதை "நெலத்தையும் சிலத்தையும் வாங்கறதுக்குள்ளாற" என எதிரொலிச்சொற்களைக் கையாண்டு நடைச்செறிவு செய்துள்ளார்.

3. மாற்றிணைகளைப் பயன்படுத்தியிருதல்

தருமொழி வடிவத்தைச் சொல்லுக்குச் சொல் நேரடி இணைகளால் மொழி பெயர்க்காமல் மாற்றுச் சொற்களைப் பயன்படுத்தி மொழிபெயர்த்தலை இவ்வகையில் அடக்கலாம். சான்றுகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. "இனியும் பாடருதெந்நு அவள்க்குபேக்ஷிக்கணம். இனியும் கடப்புறத்தெ சந்றிகயெ அங்ஙனெ சலிப்பிக்கருது. அவள்க்கு பரீக்குட்டியோடு வளரெ பறயுவானுண்டு. க்ஷமாயாசனம் செய்யானுண்டு. (இனியும் பாடக்கூடாதென்று அவளுக்குக் கேட்டுக் கொள்ள வேண்டும். இனியும் கடற்கரை நிலவொளியை அப்படி வேதனையடையச் செய்யக்கூடாது. அவளுக்கு பரீக்குட்டியிடம் நிறைய சொல்வதற்குண்டு. மன்னிப்பு கேட்பதற்குண்டு)".

(தகழி, 1986:118-119)

செம்மீனில் காணப்படும் இப்பகுதியை சுந்தரராமசாமி

"சின்னமுதலாளி இனிமேலும் நீங்கள் பாடிக்கொண்டிருப்பது நியாயமா?

என்று வாய்விட்டுக் கேட்கவேண்டும் போலிருந்தது அவனுக்கு. தயவு செய்து பாடாமலிருங்கள் என்று மன்றாடிக் கேட்டுக்கொள்ள வேண்டும் என்றிருந்தது. கடற் கரைச் சந்திரனின் உணர்ச்சியை இன்னுமா தூண்டிக்கொண்டிருப்பது? பரிக்குட்டியிடம் அவள் எதை எதையோ சொல்ல எண்ணினாள். தன்னை மன்னித்துவிடவேண்டும் என்று கேட்டுக்கொள்ளவேண்டும்".

(சுந்தரராமசாமி,1987:152)

என மொழிபெயர்த்துள்ளார். இதில் "இனியும் பாடருதெந்து அவள்க்கபேக்ஷிக்கணம்" என்பதை "சின்ன முதலாளி இனிமேலும் நீங்கள் பாடிக்கொண்டிருப்பது நியாயமா? என்று வாய்விட்டுக் கேட்கவேண்டும் போலிருந்தது அவனுக்கு. தயவுசெய்து பாடாமலிருங்கள் என்று மன்றாடிக் கேட்டுக்கொள்ளவேண்டும் என்றிருந்தது" எனவும் (இங்கு படர்க்கை வடிவம் மொழிபெயர்ப்பில் முன்னிலைவடிவமாகியுள்ளது), "இனியும் கடப்புறத்தெ சந்றிகயெ அங்ஙனெ சலிப்பிக்கருது" என்பதை "கடற்கரைச் சந்திரனின் உணர்ச்சியை இன்னுமா தூண்டிக்கொண்டிருப்பது" எனவும், "அவள்க்கு பரிக்குட்டியோடு வளரெ பறயானுண்டு. க்ஷமாயாசனம் செய்யானுண்டு" என்பதை "பரிக்குட்டியிடம் அவள் எதை எதையோ சொல்ல எண்ணினாள். தன்னை மன்னித்துவிட வேண்டும் என்று கெஞ்சிக் கேட்டுக்கொள்ளவேண்டும்" எனவும் கருத்தடிப்படையில் மாற்றிணைகளாக அமைத்துள்ளார்.

2. "ஞான் ஆனக்காரோடு பறஞ்ஞு. ஒரு ஆனவால்வேணம். ஆனக்கார் பரிகசிக்குந்ந மட்டில் பறஞ்ஞு, ஆனய்க்கு ஒரேயொரு வாலல்லேயுள்ளு. அது முறிச்சு தந்நால் ஆன எந்து செய்யும்? ஞான் பறஞ்ஞு. எனிக்கு முழுவனும் வேண்ட ஒரு பூடமதி, ஆனப்பூட! ஆனப்பூடயோ? ஆனக்கார் சிரிச்சு, இதெந்தா வல்ல கோழியோ மற்றோ ஆணோ? (நான் யானைப்பாகரிடம் சொன்னேன். ஒரு யானைவால் வேண்டும். யானைப்பாகர் கேலி செய்கிற மாதிரி சிரித்தமட்டில் யானைக்கு ஒரே ஒரு வால்தான் உண்டு. அதை வெட்டித்தந்தால் யானை என்ன

செய்யும்? நான் சொன்னேன். எனக்கு முழுவதும் வேண்டாம். ஒரு மயிர் போதும். யானைமயிர்! யானைமயிரோ? யானைக்காரர் சிரித்தனர். இதென்ன ஏதாவது கோழி போன்றதோ?)"

(பஷீர், 1990 ஆ:29)

ஆனப்பூட (யானைரோமம்) என்ற சிறுகதையில் காணப்படும் இப்பகுதியை எஸ். ராமகிருஷ்ணன்,

"நான் மாவுத்தர்களிடம் போய்க்கேட்டேன். எனக்கு ஒரு யானைவால்வேண்டும். மாவுத்தர்கள் என்னைப் பார்த்து சிரித்தபடி சொன்னார்கள். யானைக்கு ஒரே ஒரு வால்தான் இருக்கு. அதையும் உனக்கு வெட்டிக்கொடுத்துவிட்டால்.....யானை என்ன செய்யும். பின்னெ நான் சொன்னேன். முழுவாலும் வேண்டியதில்லை. ஒரே ஒரு முடி போதும். ஒரு சிறு ரோமம் போதும். மாவுத்தர்கள் சிரித்தார்கள். யானை ரோமம்........இதென்ன செம்மறியாடா ரோமத்திற்கு பிடுங்க"

(எஸ். ராமகிருஷ்ணன், 1992:54)

என மொழிபெயர்த்துள்ளார். இதில் "இதெந்தா வல்ல கோழியோ மற்றோ ஆணோ" என்பதை "இதென்ன செம்மறியாடா ரோமத்திற்கு பிடுங்க" என மாற்றி னைமூலமாக கோழியைச்செம்மறியாடாகக் கொண்டுள்ளார்.

4. குறைத்தொடர்களை நிரப்பியிருத்தல்

தருமொழிவடிவத்தில் காணப்படும் குறை அமைப்பிலான தொடர்களை தமிழ் மொழியமைப்பிற்கேற்ப மாற்றியுள்ளமையை இவ்வகையில் அடக்கலாம் சான்றாக,

"முற்றத்தெங்ஙாலும் இம்மிணிநேரம் நடந்நிருந்நெங்கில் கொள்ளாமாயிருந்நு. நடக்கும்போள் கிடக்கணமெந்நு தோந்நும். கிடக்கும்போள் நடக்கணமெந்நும் (முற்றத்தில் எங்காவது கொஞ்சம்நேரம் நடந்திருந்தால் நன்றாக இருக்கும்.

நடக்கும்போது படுக்கவேண்டும் என்று தோன்றும். படுக்கும்போது, நடக்க வேண்டும் என்றும்)"

(பாறப்புறத்து, 1986:7)

என்பதை

"முற்றத்தில் சிறிதுநேரம் நடந்தால் நல்லது என்று தோன்றியது. எழுந்து நடந்தால் படுக்கவேண்டும்போல் இருக்கும். படுத்தால் எழுந்து நடக்கத்தோன்றும்"

(கே. நாராயணன், 1978:1)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதில் "நடக்கும்போள் கிடக்கணமெந்நு தோந்நும்" என்ற தொடரில் 'தோந்நும்' என்ற சொல் முற்றுப்பொருளைத் தருகின்றது. இதனை நோக்கியதாக "கிடக்கும்போள் நடக்கணமெந்நும்" என்ற குறைத்தொடர் காணப்படுகிறது. மொழி பெயர்ப்பாளர் இக்குறை அமைப்பைத் தமிழ்மொழி இயல்புக்கேற்ப 'படுத்தால் எழுந்து நடக்கத்தோன்றும்' என மாற்றியமைத்துள்ளார்.

5. சொல்வரிசை முறையை மாற்றியிருத்தல்

தருமொழித் தொடர்களில் காணப்படும் சொல்வரிசை முறையை மாற்றிப் பெறுமொழித் தொடர்களை அமைத்துள்ளமையை இவ்வகையில் அடக்கலாம். சான்றாக,

"நின்றெ கண்ணுகள்க்கு மாத்றம் காணான் கழிஞ்ஞ ஆ மஞ்ஞப்பூக்களுடெ இடயில் ஞான் நிந்நிருந்நு. நின்றெ கைபிடிச்சு நின்னெ எத்தேண்டயிடத்தேக்கு எத்திக்குவான்........பக்ஷே அந்நு நீ வந்நில்ல. நினக்கு என்றெ ஸ்னேகத் தெப்பற்றி அறிஞ்ஞிருந்நில்ல ஞானாணு நின்றெயும் எல்லாவருடெயும் மார்க்கதர்சி எந்நு நீ அறிஞ்ஞிருந்நில்ல (உன்னுடைய கண்களுக்கு மட்டும் காணமுடிந்த அந்த மஞ்சள் பூக்களின் இடையில் நான் நின்றிருந்தேன். உன்னுடைய கைபிடித்து உன்னைச்

சேரவேண்டிய இடத்தில் சேர்ப்பிக்க. ஆனால் அன்று நீ வரவில்லை. உனக்கு எனது அன்பைப்பற்றித் தெரிந்திருக்கவில்லை. நான்தான் உன்னுடையதும் எல்லாவருடையவுமான வழிகாட்டி என்று நீ தெரிந்திருக்கவில்லை)".

(மாதவிக்குட்டி, 1991:662)

என்பதை

"உன் கண்களுக்கு மட்டும் தெரிந்த அந்த மஞ்சள் பூக்களின் இடையில் நான் நின்றிருந்தேன். நீபோய்ச் சேரவேண்டிய இடத்துக்கு உன் கையைப்பிடிச்சுக் கூட்டிக்கொண்டுபோய் உன்னைச் சேர்ப்பிக்க. ஆனால் அன்னைக்கு நீ வரவில்லை என் அன்பைப் பற்றி நீ தெரிந்திருக்கவில்லை. உன்னுடையவும், எல்லாவருடையவும் வழிகாட்டி நான்தான் என்று நீ அறிந்திருக்கவில்லை".

(நீலபத்மநாபன், 1985:149)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதில் "நின்றெ கைபிடிச்சு நின்னெ எத்தேண்ட யிடத்தேக்கு எத்திக்குவான்" என்பதை "நீ போய்ச்சேர வேண்டிய இடத்துக்கு உன் கையைப் பிடிச்சு கூட்டிக்கொண்டுபோய் உன்னைச் சேர்ப்பிக்க" எனவும், "நினக்கு என்றெ ஸ்னேகத்தெப்பற்றி அறிஞ்ஞிருந்நில்ல" என்பதை "என் அன்பைப்பற்றி நீ தெரிந்திருக்கவில்லை" எனவும், "ஞானாணு நின்றெயும் எல்லாவருடெயும் மார்க்கதர்சி என்நு நீ அறிஞ்ஞிருந்நில்ல" என்பதை "உன்னுடையவும், எல்லாவருடையவும் வழிகாட்டி நான்தான் என்று நீ அறிந்திருக்கவில்லை" எனவும் சொல்வரிசை முறையை மாற்றியுள்ளார்.

6. <u>வாக்கியங்களை இணைத்திருத்தல்</u>

தருமொழிவடிவத்தில் காணப்படும் வெவ்வேறு வாக்கியங்களை ஒன்றாக இணைத்துப்பெறுமொழி வடிவத்தை அமைத்துள்ளமையை இவ்வகையில் அடக்கலாம். சான்றுகளாக, பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. "கறுத்தம்ம பரீ எந்நோளம் சப்திச்சு. எந்நிட்டு பொட்டிச் சிரிச்சு (கறுத்தம்மா பரீ என்பதுவரை சத்தமிட்டாள். உடன் குபீரென்று சிரித்தாள்)"

(தகழி, 1986:5)

செம்மீன் என்ற நாவலில் காணப்படும் இப்பகுதியை சுந்தரராமசாமி,

"கறுத்தம்மா பரீ என்பதுவரையிலும் சொல்லிவிட்டுச்சிரித்தாள்"

(சுந்தரராமசாமி, 1987:9)

என மொழிபெயர்த்துள்ளார். இதில் 'சப்திச்சு' என்ற வினைமுற்றிற்கும் 'எந்நிட்டு' என்ற இணைப்புச் சொல்லிற்கும் பதிலாக 'சொல்லிவிட்டு' என்ற எச்சவடிவத்தை மாற்றிணையாகப் பயன்படுத்தி இரு வேறு தொடர்களை ஒன்றாக்கி யுள்ளார்.

2. "வாரியெல்லுகள்க்கிடையில் சூண்ட கொழுத்தி வலிக்கும்போலுள்ள வேதனை. குஞ்ஞெனாச்சன் வசம் சரிஞ்ஞு கிடந்நு (விலா எலும்புகளுக்கிடையில் தூண்டில்போட்டு இருப்பதைப்போன்ற வேதனை. குஞ்ஞெனாச்சன் பக்கமாகத் திரும்பிப் படுத்தார்)".

(பாறப்புறத்து, 1986:7)

அரநாழிநேரம் (அரைநாழிகைநேரம்) என்ற நாவலில் காணப்படும் இப்பகுதியை கே. நாராயணன்

"விலா எலும்புகளில் தூண்டில்போட்டு இழுப்பதைப்போன்ற வலி எடுக்கவே குஞ்சைனைா ஒருக்களித்துப் படுத்தார்"

(கே. நாராயணன், 1978:1)

என மொழிபெயர்த்துள்ளார். இதில் 'வேதன' என்ற முற்றுச் சொல்லை 'வலி' என்ற தமிழ் இணையைக் கொண்டும் 'எடுக்கவே' என்ற வினையெச்ச இணைப்புச் சொல்லைப் புதிதாகச் சேர்த்தும் இருவேறு தொடர்களை ஒன்றாகச் சேர்த்துள்ளார்.

7. வாக்கியங்களைப் பிரித்திருத்தல்

தருமொழிவடிவத்தில் காணப்படும் வாக்கியங்களைப் பிரித்துப்பெறுமொழி வடிவத்தைக் கருத்தில் மாற்றமின்றி அமைத்தலை இவ்வகையில் அடக்கலாம். சான்றுகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. "அங்ஙனெ ஆ கடப்புறத்திந்நு சுபரிசிதயாயிருந்ந கறுத்தம்ம போயி (அப்படி அந்தக் கடற்கரையிலிருந்து எல்லோருக்கும் தெரிந்த கறுத்தம்மா போனாள்)"

(தகழி, 1986:136)

என்பதை சுந்தரராமசாமி

"அந்தக் கடற்கரையில் கறுத்தம்மாவைத் தெரியாதவர்கள் யாரேனும் உண்டா? அவள் இன்று அந்த ஊரை விட்டே செல்கிறாள்"

(சுந்தரராமசாமி, 1987:175)

என மொழிபெயர்த்துள்ளார். இங்கு தருமொழிவடிவத்தில் "கறுத்தம்ம ஆ கடப்புறத்து சுபரிசிதயாயிருந்நு (கறுத்தம்மா அந்த கடற்கரையில் எல்லோருக்கும் தெரிந்தவளாய் இருந்தாள்)", கறுத்தம்ம போயி (கறுத்தம்மா போனாள்)" என்ற இரண்டு வாக்கியங்கள் காணப்படுகின்றன. இவற்றில் முதல் வாக்கியத்தை "அந்தக்கடற்கரையில் கறுத்தம்மாவைத் தெரியாதவள் யாரேனும் உண்டா?" என வினாவாக்கியமாகவும், இரண்டாவது வாக்கியத்தை "அவள் இன்று அந்த ஊரை விட்டேச் செல்கிறாள்" என செய்திவாக்கியமாகவும் கொண்டு மொழிபெயர்ப்பை அமைத்துள்ளார்.

2. "இனியும் ஆ கானம் இவ்டெ பரந்நொழுகுமோ? பரந்நொழுகுமாயிரிக்காம். பக்ஷே கேள்க்கான் ஆளில்ல (இனியும் அந்தப்பாடல் இங்கு பரந்தொழுகுமா? பரந்தொழுகலாம். ஆனால் கேட்பதற்கு ஆளில்லை)"

(தகழி, 1986:136)

என்பதை சுந்தரராமசாமி

"ஆனால் அந்தக் கடற்கரையில் இனிமேலும் அந்தக்கீதம் கேட்குமா?

கேட்கலாம். ஆனால் அதையார் கூர்ந்து கேட்கப்போகிறார்கள். அதற்குத் தான் ஆள் இல்லை"

(சுந்தரராமசாமி, 1987:175)

என மொழிபெயர்த்துள்ளார். இங்கு "பக்ஷே கேள்க்கான் ஆளில்ல" என்பதை அதன் கருத்தடிப்படையில் "ஆனால் அதையார் கூர்ந்து கேட்கப்போகிறார்கள். அதற்குத்தான் ஆள் இல்லை" என இரண்டு வாக்கியங்களாக விரித்து மொழிபெயர்ப்பை அமைத்துள்ளார்.

8. <u>உரைக்கோவைகளின் வடிவத்தை மாற்றியிருத்தல்</u>

கருமொழிவடிவத்திலுள்ள உரைக்கோவைகளின் வடிவத்தை மாற்றி மொழி பெயர்ப்பை அமைத்தலை இவ்வகையில் அடக்கலாம். சான்றுகளாகப் பின்வருவன வற்றைக் குறிப்பிடலாம்.

1. "கறத்தம்ம போயாலு பின்னெ கறத்தம்ம என்னெ ஓர்க்குமோ? பரீக்குட்டியுடெ ஆத்மார்த்தமாய சம்சயமாயிருந்நு அது (கறுத்தம்மா போனால் பிறகு கறுத்தம்மா என்னை நினைப்பாயா? பரீக்குட்டியின் உள்ளார்ந்த ஐயம் அது)"

(தகழி, 1986:119)

செம்மீன் என்ற நாவலில் காணப்படும் இப்பகுதியை சுந்தரராமசாமி,

"நீ போயுட்டா........அப்புறம் உனக்கு என் ஞாபகம் இருக்குமா? அவன் மனத்தில் உண்மையிலேயே எழுந்த சந்தேகம் அது"

(சுந்தரராமசாமி, 1987:153)

என மொழிபெயர்த்துள்ளார். இதில் முன்னிலையாரிடம் படர்க்கையில் பேசுவது போன்று "கறத்தம்ம" என முதலில் வந்துள்ள சொல்லை 'நீ' எனவும் இரண்டாவது வந்துள்ள சொல்லை 'உனக்கு' எனவும் முன்னிலைச் சுட்டுக்களாக மாற்றியும், 'பரீக்குட்டி' என்பதற்கு 'அவன்' என்ற சுட்டுப் பெயரைப் பயன்படுத்தியும் உரைக்கோவையின் வடிவமைப்பை மாற்றியுள்ளார்.

2. "ஓர்த்தில்லேலும் ஈ கடப்புறத்திருந்து ஞான் பாடும் வல்ய வயஸ்ஸனாயி வாயிலெ பல்லு போயிக்கழிஞ்ஞும் பாடும் (நினைக்கா விட்டாலும் இந்தக் கடற் கரையிலிருந்து நான் பாடுவேன். நல்ல கிழவனாகி வாயில் பற்கள் விழுந்த பிறகும் பாடுவேன்)"

(தகழி, 1986:119)

செம்மீன் என்ற நாவலில் காணப்படும் இப்பகுதியை சுந்தரராமசாமி,

"நீ என்னை மறந்துப்புட்டாலும் நான் என்னைக்கும் இந்தக் கடற்கரையிலே உட்கார்ந்து பாடிக்கிட்டிருப்பேன். வயசாகி, பல்விழுந்து தொண்டுக்கிழவனானாலும் சரி நான் பாடிக்கிட்டிருப்பேன் என்றான் அவன்"

(சுந்தரராமசாமி,1987:153)

என மொழிபெயர்த்துள்ளார். இதில் 'ஓர்த்திலேலும்' என்பதுடன் 'நீ' 'என்னை' ஆகியவற்றைச் சேர்த்து 'நீ என்னை மறந்துப்புட்டாலும்' எனவும், 'பாடும்' என்பதுடன் 'நான்' என்பதைச் சேர்த்து 'நான் பாடிக்கிட்டே இருப்பேன்' எனவும் தருமொழி வடிவத்தில் எழுவாய் மறைந்து நிற்கும் பகுதிகளில் எழுவாயைச் சேர்த்து பெறுமொழிவடிவத்தை அமைத்துள்ளார்.

3. "மதில் பலதும் கேட்டு, பலதும் கண்டு (மதில் பலவற்றையும் கேட்டது. பலவற்றையும் கண்டது)"

(பஷீர், 1990:52)

மதிலுகள் (மதில்கள்) என்ற நாவலில் காணப்படும் இப்பகுதியை சுரா

"மதில் பலவற்றையும் காண்கிறது. யார் யாரோ பேசுவதையெல்லாம் கேட்கிறது"

(சுரா, 1990:75)

என மொழிபெயர்த்துள்ளார். இதில் "கேட்டு," "கண்டு" ஆகிய இறந்தகால வடிவங்களை 'கேட்கிறது', 'காண்கிறது' என நிகழ்கால வடிவங்களாகக் கொண்டு உரைக்கோவையின் வடிவமைப்பை மாற்றி மொழிபெயர்ப்பை அமைத்துள்ளார்.

9. எதிர் இணைகளைப் பயன்படுத்தியிருத்தல்

தருமொழிவடிவத்தில் காணப்படும் சொற்களுக்கு எதிர்மாறான சொற்களைப் பெறுமொழி வடிவத்தில் பயன்படுத்திக் கருத்துமாற்றம் ஏற்படாத அளவில் மொழி பெயர்ப்பை அமைத்துள்ளமையை இவ்வகையில் அடக்கலாம். சான்றுகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. "என்றெ மொகாளு கறத்தம்மயோடிஉ‌ஷ்டமாயிருந்நு. இனி ஆங்ஙளாயி விசாரிச்சாமதி அதா இஉஷ்டத்தின்றெ லக்ஷணம் அல்யோ? (எனது மகன் கறுத்த மாவிடம் சிநேகமாய் இருந்தாய். இனி அண்ணனாக நினைத்தால் போதும். அதுதான் அன்பின் அடையாளம் அல்லவா)"

(தகழி 1986:173)

என்பதை சுந்தரராமசாமி

"தம்பி உனக்கு கறுத்தம்மாகிட்டே ஆசை என்னும் எனக்கு நல்லாத்தெரியும் பாத்துக்க. ஆனா இனிமே நீ அவளை உன் தங்கச்சியா எண்ணிக்க. அதுதான் அன்புக்கு அடையாளம் பார்த்துக்க. இல்லையா? நான் சொல்லுது சரிதானே"

(சுந்தரராமசாமி, 1987:224)

என மொழிபெயர்த்துள்ளார். இங்கு "இனி ஆங்ஙளாயி விசாரிச்சா மதி (இனி அண்ணனாக நினைத்தால் போதும்)" என்பதை "நீ அவளை உன் தங்கச்சியா எண்ணிக்க" என எதிர்மாறான இணைகளால் மொழிபெயர்ப்பை அமைத்துள்ளார்.

2. "பறிச்சு நடானாணெங்கிலும் பாயலு தப்பானாணெங்கிலும் எந்நல்ல. புஞ்சப்பாடத்தெ ஏது ஜோலிக்கும் அவளெ ஜயிக்கான் ஒரு கிடாத்தியில்ல. (பிடுங்கி நடுவதற்கென்றாலும் களை எடுப்பதற்கென்றாலும் என்றல்ல வயல்வெளியில் என்ன வேலைக்கும் அவளை வெல்ல ஒரு இளம்பெண்ணும் இல்லை)"

(தகழி, 1988:8)

ரண்டிடங்கழி (இரண்டுபடி) என்ற நாவலில் இடம் பெற்றுள்ள இப்பகுதியை டி. ராமலிங்கம் பிள்ளை

"பிடுங்கி நடுவதற்காயினும், களைபறிப்பதற்காயினும் மாத்திரமல்ல புன்செய் வயல் வேலை எதற்கும் அவளைத் தோற்கடிக்க ஒரு சிறுமியும் இல்லை".

(டி. ராமலிங்கம்பிள்ளை, 1990:7-8)

என மொழிபெயர்த்துள்ளார். இங்கு "அவளெ ஜயிக்கான்" என்பதை "அவளைத் தோற்கடிக்க" என எதிர் இணையைப் பயன்படுத்தி மொழிபெயர்ப்பை அமைத்துள் ளார்.

மூலத்திற்கும் மொழிபெயர்ப்பிற்கும் இடையே நடையமைப்பில் காணப்படும் வேறுபாடுகள் இங்கு விளக்கப்பட்டன. இவற்றில் சில மொழிபெயர்ப்பின் தரத்தை உயர்த்துவனவாகவும், சில தாழ்த்துவனவாகவும் அமைந்துள்ளன. எனவே மொழிபெயர்ப்பு அமையவேண்டிய நடைபற்றிய தெளிவோடு மொழிபெயர்ப்பாளர் தன் பணியை மேற்கொள்வதை இன்றியமையாத ஒன்றாகக் கருதலாம்.

6. அடிக்குறிப்புகள்

புனைகதைகளில் காணப்படும் பெயர்கள் மற்றும் சிறப்புச்சொற்களை மொழி மாற்றுவதிலுள்ள சிக்கல்களைக் கருத்தில் கொண்டு மொழிபெயர்ப்பாளர்கள் அடிக் குறிப்புகளைப் பயன்படுத்தியுள்ளனர். இவற்றை 1. பெயர்விளக்கம் தருவன, 2. பொருள் விளக்கம் தருவன, 3. கருத்துவிளக்கம் தருவன, 4. வழக்குச்சொற் களை விளக்குவன என வகைப்படுத்தி விளக்கலாம்.

1. பெயர் விளக்கம் தருவன

தருமொழிவடிவத்தில் காணப்படும் பெயர்கள் பற்றியக் குறிப்புக்களை பெறு மொழி வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தும் நோக்கில் அமைக்கப்பட்டுள்ள அடிக்குறிப் புகளை இவ்வகையில் அடக்கலாம். சான்றுகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. மகளுடெ போக்கு நோக்கி உளிச்சிரியம்ம க்ருதக்ருத்யயாயி தன்றெமகள் பொன்னு தம்புரான்றெ கிரீடமெடுத்தணியுந்ந திவஸம் வளரெயொந்நும் அகலத்தல்லெந்நு உளிச்சிரியம்மக்கு தோந்நியோ? தன்றெ மகள்க்கு ஒரு தம்புரான் வந்நு கூடுமெந்நல்லே பறஞ்ஞிருந்நது. பாழூர் கணியாணாணு மகளுடெ ஜாதகமெழுதீட்டுள்ளது. மகள்க்கு பட்டமகிஷி யோகமுண்டெந்நாணு ஜாதகத்தில் காணுந்நது. பாழூர் கணியான் எழுதிய ஜாதகம் பிழக்குமோ? (தன்னுடைய மகளின் போக்கைக்கண்டு உளிச்சிரியம்ம வெற்றி வந்து விட்டதைப் போன்று எண்ணினாள். தன்னுடைய மகள் அரசனின் முடியைச் சூடிக்கொள்ளும் நாள் ஒன்றும் தொலைவில் இல்லையென்று உளிச்சிரியம்மைக்குத் தோன்றியதோ? தன்னுடைய மகளுக்கு ஒரு அரசன் வந்து சேருவான் என்றல்லவா சொல்லியிருப்பது. பாழூர் கணியான் தான் மகளுடைய ஜாதகத்தை எழுதியிருக்கிறான். மகளுக்கு முடிசூடும் அதிஷ்டம் உண்டென்றுதான் ஜாதகம் சொல்கிறது. பாழூர் கணியான் எழுதிய ஜாதகம் பொய்த்துவிடுமா)"

(உண்ணிக்கிருஷ்ணன் புதூர், 1986:34)

'பலிக்கல் (நூறுபூக்கள் மலரும்)' என்ற நாவலில் காணப்படும் இப்பகுதியை சி.ஏ. பாலன்,

"மகள் சிங்காரித்துப்போவதைக் கண்ட அம்மா பெரிதும் மகிழ்ச்சியடைந்தாள். அவள் ராணியாகி மணிமகுடமணியும் நாள் வெகுதூரத்தில் இல்லை என்று உளிச்சிரியம்மா மனதுக்குள்ளே எண்ணினாளா? தன் மகளை ஒரு அரசன் மணம்புரிவான் என்றல்லவா ஜாதகம் பார்த்தவர்கள் சொல்லியிருக்கிறார்கள்? பட்டத்து ராணியாவதற்கான அதிருஷ்டமிருக்கிறதென்றல்லவா ஜாதகத்தில் குறிப்பிட்டிருக்கிறது? பாழூர் கணியான் எழுதிய ஜாதகம் தவறாகிப்போய்விடுமா என்ன?"

(சி.ஏ. பாலன், 1972:29)

என மொழிபெயர்த்துள்ளார். இங்கு 'பாழூர் கனியான்' என்பதற்கு "கேரள நாட்டில் புகழ்பெற்ற ஒரு ஜோதிடர்" (சி.ஏ. பாலன், 1972:29) என அடிக்குறிப்பிட்டுள்ளார்.

2. "ஈ குட்டநாட்டிலு எத்றபற நெலம் காணும் (இந்த குட்டநாட்டில் எவ்வளவு பறை விளையும் வயல் உண்டு)"

(தகழி, 1988:33)

ரண்டிடங்கழி (இரண்டுபடி) என்ற நாவலில் காணப்படும் இப்பகுதியை டி. ராமலிங்கம்

"இந்த குட்டநாட்டில் எத்தனை பறை விதப்பாடு காணும்?"

(டி. ராமலிங்கம், 1990:32)

என மொழிபெயர்த்துள்ளார். இங்கு 'குட்டநாடு' என்பதற்கு "கேரள சமஸ்தானத்தில் திருவிதாங்கூர் பகுதியிலுள்ள கோட்டயம், சங்கனாசேரி, ஆலப்புழை முதலிய தாலுகாக்களுக்குக் குட்டநாடு என்று பெயர். நீர் நிறைந்த ஏரிகளில் வரப்புகள் வைத்து நீர் வற்றச்செய்தபின் கிருஷி நடத்தப்படுகிறது. இவ்விடங்களில் வருஷத்தில் ஒரு பூ தான் விளையும்" (டி. ராமலிங்கம்பிள்ளை, 1990:32) என அடிக்குறிப்பிட்டுள்ளார்.

2. <u>பொருள் விளக்கம் தருவன</u>

தருமொழிச் சொல்லுக்கு இணையான சொல் பெறுமொழியில் இல்லாதபோது அவற்றை அப்படியே மொழிபெயர்ப்பில் பயன்படுத்திவிட்டு அதன் பொருளை அடிக்குறிப்பில் தந்துள்ளமையை இவ்வகையில் அடக்கலாம். சான்றாக,

"ப்றார்த்திச்சு கொண்டு கிடக்காண் பெண்ணு பறயுந்நு. பிறார்த்தனகளொக்கெ அப்பூப்பன் தாடிபோலெ உள்ளில் பறந்நு நடக்குந்நு (பிரார்த்தனைசெய்துகொண்டு படுக்க அவள் சொல்கிறாள். பிரார்த்தனைகளெல்லாம் அப்பூப்பன் தாடிபோல் மனதில் பறந்து திரிகிறது)"

(பாறப்புறத்து, 1986:290)

என்பதை கே. நாராயணன்

"பிரார்த்தனை செய்துகொண்டு படுத்திருக்கச்சொல்கிறாள். பிரார்த்தனைகளெல்லாம் அப்ப்பன் தாடிபோல் (இங்கு 'அப்பூப்பன்தாடி' என்பது 'பூ' என்ற எழுத்து இன்றி 'அப்ப்பன் தாடி' எனப்பிழையாக உள்ளது) அல்லவா மனதினுள் பறந்து திரிகின்றன".

(கே. நாராயணன், 1978:291)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இங்கு தருமொழிவடிவத்தில் காணப்படும் 'அப்பூப்பன்தாடி' என்பதை அவ்வாறே பெறுமொழி வடிவத்தில் ஒலிபெயர்த்து எழுதிவிட்டு "இலவம் பஞ்சைப் போன்றதொரு காய் வேடிக்கையாகத் 'தாத்தாதாடி' என்னும் பொருள்பட அப்பூப்பன்தாடி என்பார்கள்" (கே. நாராயணன், 1978:291) என அடிக்குறிப்பிட்டுள்ளார்.

3. <u>கருத்துவிளக்கம் தருவன</u>

தருமொழிவடிவத்தை அப்படியே ஒலிபெயர்ப்பு செய்தோ, சொற்பெயர்ப்பு செய்தோ பெறுமொழி வடிவத்தை அமைத்துவிட்டு அதன் கருத்தை அடிக்குறிப்பில் தந்துள்ளமையை இவ்வகையில் சேர்க்கலாம். சான்றாக,

"சிருதேயி அம்மய்க்கு புடவகொடுத்தால் கொள்ளாமெந்நுண்டு (சிருதேயி அம்மைக்கு புடவை கொடுக்கலாமென்று தோன்றுகிறது)"

(உண்ணிக்கிருஉந்னன் புதூர், 1986:62)

என்பதை சி.ஏ. பாலன்

"நான் சிருதேயிக்குப் புடவை கொடுக்கலான்னு விரும்பறேன்"

(சி.ஏ. பாலன், 1972:63)

என மொழிபெயர்த்துவிட்டு "புடவை கொடுத்தல்" என்பதற்கு "அந்தக்காலத்தில் நாயர் வகுப்பைச்சேர்ந்த பெண்களைமணம்புரிவது புடவைகொடுக்கும் சடங்குதான், தாலிகட்டும் வழக்கமில்லை. நாயர் வகுப்பைச் சேர்ந்த பெண்களின் திருமணத்திற்கு மலையாளத்தில் 'புடவை முறி' என்று சொல்வதுண்டு" (சி.ஏ. பாலன், 1972:63) என அடிக்குறிப்பிட்டுள்ளார்.

4. வழக்குச் சொற்களை விளக்குவன

வட்டாரவழக்கில் காணப்படும் சிறப்புச் சொற்களை அப்படியே பயன்படுத்தி விட்டு அவற்றின் பொருள்விளக்கங்களை அடிக்குறிப்பில் தந்துள்ளமையை இவ்வகையில் அடக்கலாம். சான்றாக,

"ஆண்டில் நூற்றியென்பது திவஸமெங்கிலும் ஜோலி செய்திரிக்கணம். ஒரு திவஸத்தெ கூலி அஞ்சு கூலியேன் (ரண்டிடங்கழி) நெல்லாணு. ஓணத்தினோ மகத்தினோ வாவினோ ஒந்நும் விஶேஷஉநால் ஒந்நும் கொடுக்கயில்ல. கொய்த்து காலத்து ஒந்நிடவிட்ட திவஸம் ஒரோ கற்ற செலவிநு கொடுக்கும். பத்திலொந்நு பதம் கொய்து மெதிச்சு வாங்ஙிக்கொள்ளணம். தீர்ப்போ, குத்துபதமோ, பிடிப்பதமோ, அளக்கிடயோ சீவாடோ, காவலோ ஒந்நும் சோதிக்கருது (வருடத்திற்கு நூற்றியென்பது நாளாவது வேலை செய்திருக்க வேண்டும். ஒரு நாளைக்குக் கூலி ஐந்து கூலியேன் (இரண்டுபடி நெல்) ஓணத்திற்கோ மகத்திற்கோ அமாவாசைக்கோ எதுவும் சிறப்பாக கொடுக்கமாட்டார்கள். அறுவடைக்காலத்தில் ஒன்றுவிட்ட நாள்களில் ஒவ்வொரு கதிர்கட்டு செலவிற்காகக் கொடுப்பார்கள். பத்திற்கொருபதம் அறுவடை செய்து கதிரடித்து வாங்கிக்கொள்ளலாம். தீர்ப்போ, குத்துபதமோ, பிடிப்பதமோ, அளக்கிடையோ, சீவாடோ, காவலோ ஒன்றும் கேட்கக்கூடாது)"

(தகழி, 1988:19)

என்பதை டி. இராமலிங்கம்பிள்ளை

"வருடத்திற்கு நூற்றென்பது நாளாவது வேலை செய்யவேண்டும். ஒரு நாளைக்கூலி ஐந்து கூலியேன் - இரண்டுபடி - நெல். ஓணத்திற்கோ மகத்திற்கோ, அமாவாசைக்கோ விசேஷமாக ஒன்றும் கொடுப்பதில்லை. அறுவடைக்காலத்தில் ஒன்றுவிட்டொருநாள் ஒவ்வொரு கதிர்கட்டு செலவுக்குக் கொடுக்கப்படும். பத்திலொருபதம் கதிரறுத்தது மிதித்து வாங்கிக்கொள்ள வேண்டும். தீர்ப்போ, குத்துபதமோ, பிடிப்பதமோ, அளக்கிடையோ, சீவாடோ, காவலோ ஒன்றும் கேட்கலாகாது".

(டி. ராமலிங்கம்பிள்ளை, 1990:18)

என மொழிபெயர்த்துவிட்டு 'பதம்' என்பதற்கு 'கதிரறுத்து குடிப்பவர்களுக்குள்ள உரிமை' எனவும், 'தீர்ப்பு' என்பதற்கு 'பிரதிதினம் அறுவடைக்காரனுக்கும் ஒரு நெல்கற்றை' எனவும், 'குத்துபதம்' என்பதற்கு 'அளக்கிறபோதுள்ள ஒரு வருமானம்' எனவும், 'பிடிப்பதம்' என்பதற்கு 'ஓரினம் வருமானம்' எனவும் 'அளக்கிடை' என்பதற்கு 'அளவுகாரனுடைய வருமானம்' எனவும், 'சீவாடு' என்பதற்கு 'ஒரு வயல் வேலைப் பொறுப்பாளியின் வருமானம்' எனவும் (டி. ராமலிங்கம்பிள்ளை, 1990:18) அடிக்குறிப்புகளின் மூலம் விளக்கம் தந்துள்ளார்.

இங்கு தரப்பட்டுள்ள அடிக்குறிப்புகள் தருமொழிச் சூழலை விளக்கிக் காட்டுவதோடு பெறுமொழி வாசகரின் புரிதல் திறனை மிகுவிக்க உதவுகின்றன எனலாம்.

7. குறைகள்

மலையாளத்திலிருந்து தமிழில் புனைகதைகளை அவற்றின் கருத்தின் அடிப்படையில் பெரும்பாலும் சமமான இணைகளால் மொழிபெயர்ப்பாளர்கள் மொழிமாற்றியுள்ளனர். ஆனால் ஒருசில இடங்களில் மட்டும் மொழிபெயர்ப்பு தருமொழி வடிவத்திலிருந்து மாறுபட்டுச் செல்வதாகவும் உள்ளது. இவற்றை 1. கருத்துக்களை மிகுதியாகச் சேர்த்திருத்தல், 2. கருத்துக்களை நீக்கியிருத்தல், 3. தவறுபட மொழிபெயர்த்திருத்தல் என வகைப்படுத்தி விளக்கலாம்.

1. கருத்துக்களை மிகுதியாகச் சேர்த்திருத்தல்

தருமொழி வடிவத்தில் காணப்படுவதை விடவும் செய்திகளை மிகுதியாகச் சேர்த்து மொழிபெயர்ப்பை அமைத்துள்ளமையை இவ்வகையில் அடக்கலாம். சான்றாக "ஆனப்பூட மோஉநனத்தின்றெ......அவளெனிக்கு மயில்ப்பீலி தந்நிட்டுண்டு" (பஉந்ர், 1990 அ:7) என்பதை "இந்தக்கதை ஒரு திருட்டைப்பற்றியது . . . மயிலறகு கொடுத்தவள்" (எஸ். இராமகிருஉந்ணன், 1992:46) என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம் (இவ்வெடுத்துக்காட்டை 'மதிப்பீடு' என்னும் பகுதியில் 'யானைரோமம்' என்னும் தலைப்பின்கீழ் பார்க்கவும்). இதில் "ஓரானயல்ல

மூந்து ஆனகள் ரண்டு பிடியும் ஒரு கொம்பனும்" என்பதை "ஒரு யானை யல்ல மூன்று யானைகள் அங்கே இருந்தது. இரண்டு பெண்யானைகளுக்கு ஊடே அந்த கொம்பானை இருந்தது" என ஆண்யானை காணப்பட்ட இடம் பற்றிய குறிப்பாக "இரண்டு பெண்யானைகளுக்கு ஊடே அந்த கொம்பானை இருந்தது" என்பதைச் சேர்த்து மொழிபெயர்ப்பை அமைத்துள்ளார்.

2. <u>கருத்துக்களை நீக்கியிருத்தல்</u>

தருமொழி வடிவத்தில் காணப்படும் செய்திகள் சிலவற்றை நீக்கி விட்டு பெறுமொழி வடிவத்தை அமைத்தலை இவ்வகையில் அடக்கலாம். சான்றுகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. "அம்புஜம் காறிலிருந்து ஓர்த்து. பலதவணயாயி என்னெ ஒரு ஸர்க்கீட்டின்னாயி கங்காதரேட்டன் க்ஷணிக்குந்நு. அப்போழொக்கெ போதபூர்வம் ஒழிஞ்ஞு மாறுகயாணுண்டாயிட்டுள்ளது. தன்னெ காணும்போழொக்கெ கங்காதரேட்டன் விகாரவாய்போடெ ஸம்ஸாரிக்காறுண்டு. ஙங்காதரேட்டனு தன்னோடு ப்ரேமமாணெந்நுமறியாம். அத்ர ப்ரேமமாணெங்கில் ஸர்க்கீட்டு போகானாணோ விளிக்கேண்டது? தன்னெ கல்யாணம் கழிச்சுகூடே? (அம்புஜம் காரிலிருந்து நினைத்தாள். பலமுறை தன்னை ஒரு பயணத்திற்காக கங்காதரச்சேட்டன் அழைக்கிறான். அப்போதெல்லாம் எச்சரிக்கையோடு நழுவிக்கொண்டிருக்கிறேன். தன்னைக் காணும் போதெல்லாம் கங்காதரச்சேட்டன் உணர்ச்சி மேலிட்டப்பேசுவதுண்டு. கங்காதரசேட்டனுக்கு என்னுடன் காதலுண்டென்று தெரியும். அவ்வளவு காதலென்றால் உல்லாசப்பயணம் செல்வதற்கா அழைக்கவேண்டும். என்னைத் திருமணம் செய்யக் கூடாதா?)"

(உண்ணிக்றுஉஷ்ணக்புதூர், 1986:232)

பலிக்கல் (நூ முபூக்கள் மலரும்) என்ற நாவலில் காணப்படும் இப்பகுதியை சி.ஏ. பாலன்

"அம்புஜம் காருக்குள் அமர்ந்தவாறு யோசித்துப்பார்த்தாள். ஒரு உல்லாசப்பயணத்திற்காக மேனன் தன்னை எத்தனையோ தடவை அழைத்திருக்கிறான். இவன் தன்னைக் காதலிக்கிறானென்றால் உல்லாசப்பயணத்திற்காகவா அழைக்க வேண்டும்? திருமணம் செய்துகொள்வது தானே?"

(சி.ஏ. பாலன், 1972:266)

என மொழிபெயர்த்துள்ளார். இதில் "அப்போழொக்கெ போதபூர்வம் ஒழிஞ்ஞு மாறுகயாணுண்டாயிட்டுள்ளது. தன்னெ காணும்போழொக்கெ கங்காதரேட்டன் விகாரவாய்போடெ ஸம்ஸாரிக்காறுண்டு" என்ற பகுதி அப்படியே நீக்கப்பட்டுள்ளது.

2. "தைவத்தினெ இத்ர ஸ்னேகத்தோடெ விளிச்சிருந்நெங்கில்.......! ஞான் சோதிச்சு. விளிச்சிருந்நெங்கில்? அவள் சொடிச்சு. ஸ்னேகத்தோடெ விளிச்சிருந்நெங்கில் எந்நாணு ஞான் பறஞ்ஞது! ஸ்னேகத்தோட விளிச்சிருந்நெங்கில் .... அவள் பறஞ்ஞு. தைவம் என்றெ முன்பில் ப்ரத்யக்ஷபெடுமாயிருந்நு! அதுவ்வோ? ஞான் பறஞ்ஞு.தைவம் ஆருடெ முன்பிலும் ப்ரத்யக்ஷப்பெடுகயில்ல! தைவம் நம்முடெ அடுத்துண்டு. ப்ரபஞ்சங்ஙளாய எல்லா ப்ரபஞ்சங்ஙளுடெயும் வெளிச்சம், சைதன்யம்...............நாராயணி ப்ரத்யக்ஷப்பெடானுள்ளது ஞானலெ! (கடவுளை இவ்வளவு அன்போடு அழைத்திருந்தால்... நான் கேட்டேன் அழைத்திருந்தால்? அவள் சற்று கோபத்துடன், அன்போடு அழைத்திருந்தால் என்று தான் நான் சொன்னேன். அன்போடு அழைத்திருந்தால் ....அவள் சொன்னாள். கடவுள் என் முன்பில் தோன்றியிருப்பார். அப்படியா? நான் சொல்வேன். கடவுள் யாருடைய முன்பிலும் தோன்றமாட்டார். கடவுள் நம் பக்கத்தில் உண்டு. அண்ட கோளங்களாகிய எல்லா உலகங்களுடையவும் ஒளி, பரவொளி.......நாராயணி தோன்ற வேண்டியது நானல்லவா........)

(பஷீர், 1990:44-45)

மதிலுகள் (மதில்கள்) என்ற நாவலில் காணப்படும் இப்பகுதியை சுரா

"தெய்வத்தை மட்டும் நான் இத்தனை அன்போடு கூப்பிட்டிருந்தால் கூப்பிட்டிருந்தால்.....? நான் கேட்டேன். அன்போடு கூப்பிட்டிருந்தால் என்றில்லையா சொன்னேன்? அவள் என்னைத் திருத்தினாள். சரி, அன்போடு கூப்பிட்டிருந்தால்.....? தெய்வம் உடனே என்முன் வந்திருக்கும். அப்படியா? இதோ நானும் உன்முன் வந்திருக்கிறேனே!"

(சுரா, 1980:72-73)

என மொழிபெயர்த்துள்ளார். இதில் "ஞான் பறஞ்ஞு தைவம் ஆருடெ முன்பிலும் ப்றத்யக்ஷப் பெடுகயில்ல! தைவம் நம்முடெ அடுத்துண்டு. ப்றபஞ்சங்ஙளாய எல்லா ப்றபஞ்சங்ஙளுடெயும் வெளிச்சம். சைதன்யம் ...." என்ற பகுதியை நீக்கியுள்ளார்.

3. தவறுபட மொழிபெயர்த்திருத்தல்

தருமொழிவடிவத்தின் கருத்தைச் சரிவரப் புரிந்துகொள்ளாமல் தவறுதோன்றும் படியாக மொழிபெயர்த்துள்ளமையை இவ்வகையில் அடக்கலாம். சான்றாக,

"நனஞ்ஞமணல். காலடிகளமரும்போள் தணுத்த வெள்ளம் உறஞ்ஞு கூடுந்நு. வேகம் நடக்கணமெந்நுண்டு. இரும்புப்பாலம் சப்திக்குந்நுண்டோ? ஓலச்சூட்டின்றெ அவசிஷ்டம் நனஞ்ஞ மணலில் கத்தியடங்ஙுந்நு. நனுத்த இருட்டிலும் வண்டிச்சக்றங்ஙள் உரஞ்ஞு மினுத்த றெயில்ப் பாளங்ஙள் வெள்ளி நாடகள் போலெ திளங்ஙுந்நு (நனைந்த மணல் காலடிகள் படும்போது குளிர்ந்த நீர் இறுகிச்சேர்கிறது. வேகமாக நடக்கவேண்டும் என்று உண்டு. இரும்புப்பாலம் ஓசை எழுப்புகிறதா? ஓலைப்பந்தத்தின் மீதி நனைந்த மணலில் எரிந்து அணைகிறது. நேர்த்த இருட்டிலும் வண்டிச்சக்கரங்கள் உரசி மினுமினுத்த றெயில் தண்டவாளங்கள் வெள்ளிநாடாக்கள் போல் மின்னுகின்றன)"

(எம்.டி. வாசுதேவன்நாயர், 1980:9)

என 'காலம்' என்ற நாவலில் இடம்பெற்றுள்ள இப்பகுதியை மணவைமுஸ்தபா

"ஈரமணல். காலடி பதியும்போது குளிர்ந்த நீரில் கால்மரத்துப் போவதுபோல் இருந்தது. வேகமாக நடக்கவேண்டும்போல் இருந்தது. இரும்புப் பாலத்தின் சத்தம் கேட்கிறதோ? ஓலைத்தீப்பந்த நெருப்பை மணலினுள் குத்தி அணைத்தான். கடும் இருட்டிலும் வண்டிச்சக்கரங்கள் உராய்ந்ததனால் ஏற்பட்ட கோடுகள் வெள்ளி ரிப்பன் போல் மின்னிக்கொண்டிருந்தன".

(மணவை முஸ்தபா, 1985:VI)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதில் "ஓலக்சூட்டின்றெ அவஷிஷ்டம் நனஞ்ஞ மணலில் கத்தியடங்ஙிநு" என்பதை "ஓலைத் தீப்பந்த நெருப்பை மணலினுள் குத்தி அணைத்தான்" என மூலத்தில் வெளிப்படையாகச் சொல்லாத செய்தியைத் தவறாக யூகித்து மொழிபெயர்ப்பை அமைத்துள்ளார்.

மொழிபெயர்ப்பாசிரியன் மிகவும் கவனத்துடனும் கூர்ந்த நோக்குடனும் மொழிபெயர்ப்புப் பணியை ஆற்றவேண்டும். இல்லையெனில் பிழைகள் ஏற்பட்டுவிட வாய்ப்பு உண்டு.

தொகுப்புரை

1. மலையாளத்திலிருந்து தமிழில் புனைகதை இலக்கியங்களாக நாவல், சிறுகதை, நாடகம் போன்றவை மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இவற்றின் மொழிபெயர்ப்பின் தன்மைகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. புனைகதை இலக்கியங்களின் மொழிபெயர்ப்புகள் மூலத்தைப் பிரதிபலிப்பனவாகவும், மாற்றிணைகளைப் பெற்றதாகவும், கருத்துவழிப்பட்டனவாகவும், விளக்கமுறையில் அமைந்ததாகவும், மறுபடைப்பாகவும் காணப்படுகின்றன.

2. புனைகதைகளில் காணப்படும் பேச்சுமொழியைப் பெறுமொழியின் பேச்சுமொழியைக் கொண்டும், பொதுப்பேச்சுமொழியைக் கொண்டும் மொழி பெயர்த்துள்ளனர். ஆனால் நாடக மொழிபெயர்ப்புகளில் பேச்சுமொழியைப் பேச்சுமொழியாக மொழிபெயர்க்காததால் மொழிபெயர்ப்பு சிறக்காதுபோன இடங்களும் உள்ளன.

3. புனைகதைகளில் உள்ள குறிப்புப்பொருள்களை கருத்துவிளக்க நடையைப் பயன்படுத்தியும், மாற்றுவடிவங்களைப் பயன்படுத்தியும் மொழிபெயர்த்துள்ளனர். சில இடங்களில் குறிப்புப்பொருள் மொழிபெயர்ப்பில் வராமல் நழுவிவிட்ட இடங்களும் உள்ளன.

4. புனைகதைகளின் மொழிபெயர்ப்பில் தருமொழியின்நடையமைப்பை விரிவாக்கம், செறிவாக்கம், மாற்றிணைப்பயன்பாடு, குறைத்தொடர்களை நிரப்புதல், சொல்வரிசை முறையை மாற்றுதல், வாக்கியங்களை இணைத்தல், வாக்கியங்களைப்பிரித்தல், உரைக் கோவைகளின் வடிவத்தை மாற்றுதல், எதிர் இணைகளைப் பயன்படுத்துதல் போன்ற முறைகளால் மாற்றியுள்ளனர். ஆனால் நடை மாற்றம் மூலத்தின் இயல்பை வெளிப்படுத்தும் நோக்கில் அமைய மொழிபெயர்ப்பாளர் தருமொழி, பெறுமொழி ஆகியவைவற்றின் நடைபற்றிய கூர்த்த அறிவு பெற்றிருக்கவேண்டும்.

5. தருமொழிவடிவத்தின் கருத்துக்களை விளக்குவதற்காக மொழிபெயர்ப் பாளர்கள் பயன்படுத்தியுள்ள அடிக்குறிப்புகள் பெயர்விளக்கம் தருவன, பொருள் விளக்கம் தருவன, கருத்துவிளக்கம் தருவன, வழக்குச் சொற்களை விளக்குவன போன்ற தன்மைகளைப் பெற்றவையாகும்.

6. புனைகதை மொழிபெயர்ப்பில் கருத்துக்களை மிகுதியாகச் சேர்த்திருத்தல், கருத்துக்களை நீக்கியிருத்தல், தவறுபட மொழிபெயர்த்திருத்தல் போன்ற குறைகளும் காணப்படுகின்றன.

2. மலையாளத்திலிருந்து தமிழுக்குப் புனைகதை மொழிபெயர்ப்பு செய்வது பற்றியப் பரிந்துரைகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. மலையாளத்திலிருந்து தொடக்ககாலம் முதல் நாவல்களும், சிறுகதைகளும் மொழிபெயர்ப்பாகியுள்ளன. ஆனால் நாடகமொழிபெயர்ப்பு மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. குறிப்பாக மலையாளத்தில் பிரபல நாடக ஆசிரியர்களான என். கிருஉ்ணபிள்ளை (பத்மபவன், அநுரஞ்சனம், இத்துல்கன்னிகள்), வி.ஜே. தோமஸ் (அவன் வீண்டும் வருந்நு), சி.என். ஸ்ரீகண்டன் நாயர் (காஞ்சனசீதை, லங்காலக்சுமி, சாகேதம்), தோப்பில்பாசி (பாஞ்சாலி, அசுவமேதம்), கே.டி. முகமது (கறவயற்றபசு), என்.என். பிள்ளை (ஈஸ்வரன் அறஸ்டில், காபாலிக) போன்றவர்களின் சிறந்த படைப்புகள் எதுவும் மொழி பெயர்க்கப்படவில்லை. நாவல்களின் மொழிபெயர்ப்பிலும் தேக்கநிலை காணப் படுகிறது. கேசவதேவ், தகழி, பஷீர் போன்றவர்களைத் தொடர்ந்து வந்த படைப்பாளர்களான ஒ.வி. விஜயன், முகுந்தன், காக்கநாடன் முதலானவர்களின் படைப்புகள் மற்றும் தற்கால எழுத்தாளர்களின் படைப்புகள் எதுவும் மொழி பெயர்க்கப்படவில்லை. மேலும் சிறுகதை இலக்கியத்திலும் சில மொழிபெயர்ப்புகள் வந்தனவேயன்றி திட்டமிட்ட முறையில் அதுவும் பரவலாகச்செய்யப்படவில்லை. எனவே புனைகதை இலக்கிய மொழிபெயர்ப்பில் மேலும் கவனம் செலுத்துவது தமிழ்ப்புனைகதை வளர்ச்சிக்கு உதவுவதாக அமையும்.

2. புனைகதை இலக்கிய மொழிபெயர்ப்புகளைத் தழுவல்களாக அன்றி நேரடிப்பெயர்ப்புகளாக அமைப்பதின் மூலம் மொழியமைப்பு நிலையிலும் தமிழில் புதுமைகள் ஏற்பட வாய்ப்பு உண்டு.

3. மொழிபெயர்ப்பாளர்கள் மலையாளம் தமிழ் ஆகிய இருமொழி அறிவுடையவர்களாகவும், புனைகதைத்துறையில் ஈடுபாடுடையவர்களாகவும் இருப்பது மிகவும் இன்றியமையாததாகும். மேலும் மொழிபெயர்ப்பாளர்கள் தமிழ், மலையாளம் ஆகிய மொழிகளின் இரட்டைவழக்கு நிலை, கிளைமொழி வழக்குகள் ஆகியன பற்றிய அறிவுடையவர்களாக இருந்து சூழ்நிலைக்குத்தக்க மொழிவழக்குகளை ஆள்கிறவர்களாகவும் இருப்பது நல்லது.

4. பதிப்பகங்கள் மற்றும் இதழ்கள் புனைகதை மொழிபெயர்ப்புகளை வெளியிடுவதில் ஆர்வம் காட்டுவது தமிழில் மொழிபெயர்ப்பு இலக்கிய வளர்ச்சிக்கு உதவுவதாக அமையும்.

5. மொழிபெயர்ப்பு இலக்கியம் குறித்த ஆர்வத்தையும், அதன் இன்றியமை யாமை குறித்த அறிவையும் ஊட்டுவதோடு, மொழிபெயர்ப்பு உத்திகள் குறித்த பயிற்சிகளையும், பிறமொழிக்கல்வியையும் இலக்கிய ஆர்வலர்களுக்குக் கொடுப்பதின் மூலம் மொழிபெயர்ப்பு இலக்கிய வளர்ச்சியை ஊக்குவிக்க முடியும்.

3. மலையாளத்திலிருந்து தமிழில் புனைகதை மொழிபெயர்ப்பு செய்வதற்குரிய மாதிரிக்காக பின்வரும் மொழிபெயர்ப்புகளைப் பரிந்துரைக்கலாம்.

1. புனைகதை மொழிபெயர்ப்பாளர்களில் டி. ராமலிங்கம் (இரண்டுபடி) நேரடி இணைகளைக் கொண்டும், சுந்தரராமசாமி (செம்மீன்) மாற்றிணைகளைக் கொண்டும், நீலபத்மநாபன் (மதில்கள்), சௌரி (சங்கமம், கட்டுப்பண்ணை), புஉந்பவேணிகோவி (மலையாளச் சிறுகதைகள்), சுகுமாரன் (குகை) போன்றவர்கள் தருமொழிக்குச் சமமானதாகவும், சி.ஏ. பாலன் (நூறுபூக்கள் மலரும்)

பெறுமொழிக்கேற்ற நடையமைப்பைக் கொண்டும், சுரா (மதில்கள், அதே கடிதம்), எஸ். ராமகிருஷ்ணன் (யானைரோமம்) போன்றவர்கள் விளக்கமுறையிலும் அமைத்துள்ளனர். இவற்றில் டி. ராமலிங்கம், சுந்தரராமசாமி, நீலபத்மநாபன், சௌரி, புஷ்பவேணிகோவி, மா. இராஜாராம், சி.ஏ. பாலன் போன்றவர்களின் மொழிபெயர்ப்புகள் ஒவ்வொருவகையிலான தனித்தன்மைகளுடன் சிறப்புறதிகழ்கின்றன. எனவே புனைகதை மொழிபெயர்ப்பைச் செய்யவிரும்புகின்றவர் இவற்றில் ஏதாவது ஒரு முறையைத் தேர்வுசெய்து பெறுமொழிவடிவத்தை அமைக்கலாம்.

2. மொழிபெயர்ப்பை இப்படித்தான் செய்யவேண்டும் என்ற வரையறை இல்லாமல் நேரடிப்பெயர்ப்பு, சுருக்கம், விளக்கமுறை, தழுவல், மறுபடைப்பு போன்ற பல்வேறு நிலைகளில் அதன் தேவைக்கேற்ப வாசகர்களைக் கருத்தில் கொண்டு அமைப்பது பிறமொழிக்கருத்துக்களை அறிந்துகொள்வதற்கு ஊன்றுகோலாக அமையும்.

இயல் - ஆறு

புனைகதையல்லாத உரைநடை மொழிபெயர்ப்புகள்

6. புனைகதையல்லாத உரைநடை மொழிபெயர்ப்புகள்

0. புனைகதையல்லாத உரைநடை இலக்கியங்கள் கருத்துக்களை நேரடியாகச்சொல்லும் பாங்கில் அமைகின்றன. இவற்றில் படைப்பிலக்கியங் களைப்போல உவமை, உருவகம் போன்ற அணிகள், உணர்ச்சிக் கூறுகள் முதலான வை இடம்பெற்று வரும் வாய்ப்பு மிக அருகிய நிலையிலேயே உள்ளது. மேலும் மறைத்துச்சொல்லுதல், அவாய்நிலை, குறிப்பு போன்றவையும் மிகுதியாகக்காணப் படுவதில்லை. எனவே படைப்பிலக்கியங்களை மொழிபெயர்ப்பதை விடவும் இவற்றை மொழிபெயர்ப்பது எளிது. ஆனால் இத்தகைய இலக்கியங்களை மொழி பெயர்க்கும்போது கருத்தடிப்படையிலான சிக்கல்கள் மிகுதியாக ஏற்படுகின்றன. ஏனெனில் சொல்லுக்கும் அது தருகின்ற பொருளுக்கும் இங்கு சமமான மதிப்பு உண்டு. எனவே மொழிபெயர்ப்பாளர்கள் இவ்வகை இலக்கிய மொழிபெயர்ப்பின் போது மாற்றிணைகளை மிகக்கவனத்துடன் பயன்படுத்தவேண்டும். சான்றாக, "பின்னெ எத்றயோ நாள் அதின்றே இன்பம் என்றெ ஹ்ருதயத்தில் அலதல்லியிருந்நு (பிறகு எவ்வளவோ நாட்களாக அதனுடைய இன்பம் என்னுடைய இதயத்தில் அலையாய் மோதிக்கொண்டிருந்தது)" (நித்திய சைதன்யயதி, 1990:8) என்ற வசனகவிதையிலான பகுதியை எஸ். மணி "பிறகு எத்தனையோ நாட்கள் அந்த இன்பம் என் மனதில் அலைமோதிக்கொண்டிருந்து" (எஸ். மணி, 1991:4) என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இங்கு தருமொழிவடிவத்தில் காணப் படும் 'ஹ்ருதயம்' என்ற சொல்லை 'மனதில்' என மொழிபெயர்த்துள்ளார். இத்தகைய மொழிபெயர்ப்பு முறை படைப்பிலக்கியங்களில் ஏற்றுக்கொள்ளத்தக்கது. ஆனால் அறிவியல் இலக்கியங்களில் இத்தகைய சொல்மாற்றங்கள் அதிகப்படியான தவறுகளை உருவாக்கும் (மருத்துவத்துறையில் இதயத்தையும் மனத்தையும் ஒன்றிலொன்று வேறுபட்டவையாகக் கொள்கின்றனர். எனவே இதயநோயையும் மனநோயையும் வெவ்வேறுவித மருத்துவமுறைகளால் சரிசெய்கின்றனர்). மேலும்

அறிவியல் இலக்கியங்களில் காணப்படும் கலைச்சொற்கள் மொழிபெயர்ப்பின்போது சிக்கல்களை உருவாக்குகின்றன. மொழிபெயர்ப்பாளர்கள் தருமொழிக்கருத்துக்களைப் பெறுமொழிக்கேற்பச்சொல்வதற்காக நடையை மாற்றியமைத்தல், வாசகர்களுக்கு தருமொழிவடிவம் பற்றியத் தெளிவை ஏற்படுத்துவதற்காக அடிக்குறிப்புகளைப் பயன்படுத்துதல் போன்ற வழிமுறைகளையும் செய்கின்றனர். இவ்வியல் மலையாளத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள புனைகதையல்லாத உரை நடை இலக்கியங்களையும் அவற்றினுடைய மொழிபெயர்ப்பின் தன்மைகளையும் 1. வகைப்பாடு, 2. மதிப்பீடு, 3. சொல்லாக்கம், 4. மொழிநடை, 5. அடிக்குறிப்புகள், 6. குறைகள் என வகைப்படுத்தி விளக்குவதாக அமைந்துள்ளது.

1. வகைப்பாடு

1. புனைகதைத் தன்மையற்ற உரைநடை இலக்கியமொழிபெயர்ப்புகளாக இலக்கணம், திறனாய்வு, வரலாறு, சமயம் போன்ற துறைகளைச் சார்ந்த படைப்புகள் வெளிவந்துள்ளன.

1. இலக்கணம்

பேராசிரியர் மா. இளையபெருமாள் அவர்கள் மலையாளத்திலிருந்து லீலாதிலகம், கேரளபாணியம் ஆகிய இரண்டு இலக்கண நூல்களை முழுமையாகத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். அவற்றில் லீலாதிலகத்தின் (1971) மொழிபெயர்ப்பு பேராசிரியரின் சொந்த வெளியீடாகவும் கேரள பாணியத்தின் (1977) மொழி பெயர்ப்பு கேரளப்பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் வெளியீடாகவும் உள்ளன. குண்டர்ட் பாதிரியாரின் 'மலயாள பாஉஷா வ்யாகரணம்' என்ற நூலின்

எழுத்துக்காண்டம், சொற்காண்டம் ஆகிய பகுதிகளை "டாக்டர் ஹெர்மன் குண்டர்ட் எழுதிய மலையாள மொழி இலக்கணம்" (1979) என்னும் தலைப்பில் மொழி பெயர்த்துள்ளார். மேலும் குண்டர்ட் பாதிரியாரின் மலயாளபாஷா வ்யாகரணத்தின் வாசககாண்டத்தில் கர்த்தாவு, ஆக்யாதம், பொருத்தம், நாமாதிகாரம் ஆகிய பகுதிகளை "டாக்டர் ஹெர்மான் குண்டர்ட் எழுதிய மலையாள மொழி இலக்கணம் பகுதி: 2, சொற்றொடர் காண்டம்" (1983) என்னும் தலைப்பில் டாக்டர் கி. நாச்சிமுத்து அவர்களுடன் இணைந்து மொழிபெயர்த்துள்ளார். இவற்றையும் தனித்தனி நூல்களாக கேரளப்பல்கலைக்கழகத் தமிழ்த்துறை வெளியிட்டுள்ளது.

2. திறனாய்வு

மலையாளத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட திறனாய்வுக்கட்டுரைகள் தனி நூலாகவும், தொகுப்பு நூல்கள் மற்றும் இதழ்களிலாகவும் வெளிவந்துள்ளன.

1. தனிநூலாக வெளிவந்தவை

சச்சிதானந்தன் (1983) 'மார்க்சியன் சௌந்தர்ய சாஸ்திரம் ஒரு முகவுர' என்ற தலைப்பில் மாத்ருபூமி வார இதழில் (2 ஜன. 1983–6 பெப்.1983) எழுதிவந்த கட்டுரைகளை (இவற்றை "கான்மார்க்ஸின்றெ கலாதர்சனம்" என்னும் தலைப்பில் கோழிக்கோட்டிலுள்ள மல்பெறிபுக்ஸ் 1987–இல் வெளியிட்டுள்ளது) 'மார்க்ஸிய அழகியல் ஒரு முன்னுரை' என்னும் தலைப்பில் சுகுமாரன் (1985) மொழிபெயர்த்துள்ளார். இதனை மீட்சிபுக்ஸ் வெளியிட்டுள்ளது.

2. தொகுப்பு நூல்கள் மற்றும் இதழ்களில் உதிரிகளாக வெளிவந்தவை

பி.கெ. பாலகிருஷ்ணனின் மேடைப்பேச்சாக அமைந்த கட்டுரை ஒன்றை நீலபத்மநாபன் (1968) 'நல்ல நாவலும் மகத்தான நாவலும்' என்னும் தலைப்பில் மொழிபெயர்த்துள்ளார். இது 'குருக்ஷேத்திரம்' என்ற தொகுப்பு நூலில் இடம் பெற்றுள்ளது (இக்கட்டுரையை நீலபத்மநாபன் 'தற்கால மலையாள இலக்கியம்' என்ற தொகுப்பு நூலிலும் சேர்த்துள்ளர்). சுகுமாரனின்

மொழிபெயர்ப்புகளாக சச்சிதானந்தனின் 'கலையும் மார்க்ஸியமும்" (பரிமாணம், ஆக.1979), 'சமாந்தரகலை இலக்கியங்களும் கலாச்சார சகோதரத்துவமும்' (வைகை, அக்.1979) ஆகிய கட்டுரைகள் வெளிவந்துள்ளன. டி. தேவதாஸ், கி. நாச்சிமுத்து ஆகியவர்களின் மொழிபெயர்ப்புகளாக பெஞ்சமின் (1988) என்பவரின் 'ஜனப்ரியசாகித்யவும் ப்றபுத்தருடெ சாகித்யவும் (மக்கள் விருப்ப இலக்கியமும் அறிவாளி இலக்கியமும்) என்ற கட்டுரையும், டி. பாஸ்கரனின் (1989) 'குமாரனாசானும் சைவசித்தாந்தவும்' என்ற கட்டுரையும் உள்ளன. இவை 'மேலும்' என்ற ஆய்விதழில் (ஆகஸ். 1990., நவம்.1990) வெளிவந்துள்ளன. குரு நித்யசைதன்யயதி எழுதிய கட்டுரை ஒன்றை, நிர்மால்யா என்பவர் 'கலையில் ஆன்மீகம்' (சுபமங்களா, ஆக.1991) என்னும் தலைப்பில் மொழிபெயர்த்துள்ளார். ஜி. சங்கரப்பிள்ளையின் 'நாடகரசிகர்' என்ற கட்டுரையை வ. விநாயகபெருமாள் மொழிபெயர்த்துள்ளார். இது கேரளத்தமிழ் மொழிபெயர்ப்புச் சிறப்புமலரில் (1992) வெளிவந்துள்ளது.

3. வரலாறு

இவ்வகையில் நாட்டுவரலாறு, இலக்கியவரலாறு, தலவரலாறு, வாழ்க்கை வரலாறு ஆகியவை சார்ந்த நூல்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

1. நாட்டுவரலாறு

சி. ஜேசுதாசன் (1970) இளங்குளம் குஞ்ஞன்பிள்ளையின் (1961) 'கேரளம் அஞ்சும் ஆறும் நூற்றாண்டுகளில்' என்ற நூலை 'பண்டைய கேரளம்' என்னும் தலைப்பில் மொழிபெயர்த்துள்ளார். இதனைத் தமிழ்ப்புத்தகாலயம் வெளியிட்டுள்ளது. பி.ஆர். பரமேசுவரனின் (1978) மொழிபெயர்ப்பாக 'இந்திய சரித்றத்திலேக்கு ஒரு திறனோட்டம்' என்ற நூல் "இந்திய வரலாறு ஒரு மார்க்சிய கண்ணோட்டம்" என்னும் தலைப்பில் உள்ளது. இதனைப் பாட்டாளிகள் வெளியீடு பிரசுரித்துள்ளது.

2. இலக்கிய வரலாறு

பி.கெ. பரமேசுவரன் நாயரின் (1958) 'மலயாள சாகித்ய சரித்றம்' என்ற நூலை 'மலையாள இலக்கிய வரலாறு' என்னும் தலைப்பில் இராமகோபிநாதன் (1968) மொழிபெயர்த்துள்ளார். இதனைச்சாகித்ய அக்காடமி வெளியிட்டுள்ளது.

3. தன்வரலாறு

'நாக்குமரத்திறெ கீழில்' என்ற நூலை சி.ஏ. பாலன் (1970) 'நாக்குமர நிழலில்' என்ற தலைப்பில்மொழிபெயர்த்துள்ளார். இதனை சென்னையிலுள்ள 'இராஜிமுத்து பதிப்பகம்' வெளியிட்டுள்ளது. கே.பி. கேசவமேனோனின் 'கழிஞ்ஞகாலம்' என்ற நூலை 'கடந்தகாலம்' என்னும் தலைப்பில் இராஜம் கிருஷ்ணன் (1978) மொழிபெயர்த்துள்ளார். இதனை 'நேஷனல் புக்டிரஸ்ட் ஆப் இந்தியா' வெளியிட்டுள்ளது.

4. வாழ்க்கை வரலாறு

சூரநாட்டு குஞ்ஞன்பிள்ளையின் 'ஸ்ரீசுவாதி திருநாள்' என்ற நூலை பி.எஸ். நாராயணசுவாமி (1957) மொழிபெயர்த்துள்ளார். இதனைக் கேரளப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ளது. ஆன்ஸ்லெம் (1963) என்பவரின் மொழிபெயர்ப்பில் "திருத்தொண்டர் சாவுருகுரியாக்கோஸ் எலியாஸ் அடிகளார்" என்ற நூல் உள்ளது. இதனை அசிசிபிரஸ் (நாகர்கோவில்) வெளியிட்டுள்ளது.

4. சமயம்

மலையாளத்திலிருந்து தமிழில் இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகிய சமயங்களைச்சார்ந்த நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

1. இந்து

மாதவன் நம்பூதிரியின் "ஸ்ரீகுருவாயூரப்பன்றெ திருநாம குணங்ஙள்" என்ற நூலை கே.வி. கிருஷ்ணசாஸ்திரி "ஸ்ரீகுருவாயூரப்பனுடைய கருணை அல்லது திருநாமமகிமை" என்னும் தலைப்பில் மொழிபெயர்த்துள்ளார். இதை லிபர்ட்டி பிரஸ் (சேலம்) வெளியிட்டுள்ளது.

2. இஸ்லாம்

அஜீஸ் (1990) என்பவர் அப்துல்காதரின் 'அத்தௌஉறீத்' என்ற நூலை 'ஏகத்துவம்' என்னும் தலைப்பில் மொழிபெயர்த்துள்ளார். இதனை முஸ்லீம் சொசைட்டி (கோவை) வெளியிட்டுள்ளது.

3. கிறிஸ்தவம்

வி.எம். சூரியன், ஏ. ஜேசைராஜ் (1976) ஆகியவர்கள் 'ஆசாரிப்புக் கூடாரமும் அதன் பணிமுத்துக்களும்" என்னும் தலைப்பில் எ.பி. பைலியின் நூலை மொழிபெயர்த்துள்ளனர். இதை ஒய்.எம்.சி.எப். பப்ளிகேஷன் (சென்னை) வெளியிட்டுள்ளது. மரியதாஸ்(1991) என்பவர் "சீறோமலபார் சபயுடெ குர்பான ஒரு ஆமுகபடனம்" என்ற நூலை "சீரோமலபார் திருச்சபையின் திருப்பலி ஓர் அறிமுகம்" என மொழிபெயர்த்துள்ளார். இதைக் 'கன்னியாகுமரி மாவட்ட மறைக்கல்வி நடுநிலை மையம்' வெளியிட்டுள்ளது.

5. பிறதுறைகள்

1. மலையாளத்திலிருந்து தமிழில் பல்வேறு துறைகளைச்சார்ந்த நூல்களும் இதழ்க் கட்டுரைகளும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

1. நூல்கள்

தேவதாஸ் என்பவரின் 'பூம்பாற்றகள்' என்ற நூலை 'பறக்கும் பூக்கள்' என எம். முஸ்தபா (1968) மொழிபெயர்த்துள்ளார். இதனை சேதுபதிப்பகம் வெளியிட்டுள்ளது. பாலசார குறுப்புவின் 'மயில் நம்முடெ தேசிய பக்ஷி' என்ற நூலைக் குயிலன் (1968) 'மயில் நமது பறவை' என்னும் தலைப்பில் மொழிபெயர்த்துள்ளார். இதனைக் குயிலன் பதிப்பகம் வெளியிட்டுள்ளது. சந்தானந்த சுவாமிகளின் 'சந்தானந்தரத்னம்' என்ற நூலை இராமபத்திர சர்மா (1917) மொழிபெயர்த்துள்ளர். இதனை தேவகோட்டை எஸ்டேட்

பிரஸ் வெளியிட்டுள்ளது. வேதாந்த விவகாரகிரிமினல் கேஸ்' என்ற மொழி பெயர்ப்பு நூல் 1908-இல் திரிபுர சுந்தரி அச்சுக்கூடத்திலிருந்து வெளிவந்துள்ளது. இந்நூலை பற்றிய பிற விவகாரங்கள் கிடைக்கவில்லை. விலக்ஷணானந்த சுவாமி களின் 'ஜிஞ்ஞாசுரத்னம்' என்ற நூலை பா.சி. கந்தசாமிபிள்ளை (1917) மொழிபெயர்த்துள்ளார். இதனை பாலக்காட்டிலுள்ள வித்யாசந்தானம் அச்சுக் கூடம் வெளியிட்டுள்ளது. வேலாயுதசுவாமி (1915) என்பவர் தன்வந்திரிபகவானின் (தத்தாதிரேயமகரிஷி) "தேவதாசித்தி என்னும் மலையாள மாந்தரீக ரத்னாகரம்" என்ற நூலை மொழிபெயர்த்துள்ளார். இதை ஸன் ஆப் இந்தியா பிரஸ் (சென்னை) அச்சிட்டு வெளியிட்டுள்ளது. வடகரையிலுள்ள சித்தசமாஜ் என்ற அமைப்பு 'சித்தவித்தியார்த்திகள் நடவடிக்கைகள் கிரமங்கள் (1968) என்ற நூலை வெளியிட்டுள்ளது. மேலும் சிவானந்த பரமஹம்சரின் உலகபிரகாசிகை (1970), சித்தவேதம் மோக்ஷ சூத்திரம் (1972), உலக சந்ததிக்குள்ள ஜீவிதம் (1975) ஆகிய நூல்களையும் இந்நிறுவனம் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளது.

2. <u>இதழ்க்கட்டுரைகள்</u>

மலையாள மனோரம்ம, மாத்ருபூமி, வனிதா, அநாதி போன்ற ஜனரஞ்சக இதழ்களில் இடம்பெற்ற கட்டுரைகளின் மொழிபெயர்ப்புகள் சில மஞ்சரியில் வெளி வந்துள்ளன. அவற்றில் வி.எச்.எஸ். சாஸ்திரியின் மொழிபெயர்ப்புகளாக ரூபிதின் (மாத்ரு, 19.12.75) ட்ரிட்டிகேல் (மஞ்.பெப்.1976:46-48), சி.கே. நம்பூதிரியின் (அநாதி, ஜன.1976) பரசுராமர் நாடு (மஞ்.மார்ச், 1976:8-10), இராஜன் குருக்களின் (மாத்ரு. 21-3-76) கேரளத்தில் மந்திரவாதம் (மஞ். ஏப்.1976:12-15), ஈ.வி. மாதவன் நம்பியாரின் (மாத்ரு.26-4-76) பூரம்கொண்டாடும் நாதர் (மஞ்.மே.1976:12-15), ஸ்ரீதரனின் (மாத்ரு. 25-4-76) மாரியம்மன் விழா (மஞ்.ஜுன், 1976: 44-46), டி. தாமோதரனின் (மாத்ரு. 27.6.76) காளைப்பூட்டு (மஞ்.ஜுலை,

1976:23-25), ஜான் காரிமாற்றத்தின் (வனி, ஜன, 1977) என்ற தீருமோ (மஞ்.பிப்.1977:33-36), அருணனின் (மாத்ரு.19-12-76) அமைதியை விரும்பும் ஆதிவாசிகள் (மஞ்.பிப்.1977:80-82), ஸ்ரீனிவாசனின் (மாத்ரு. 13-2-77) வேலும் பீலியும் (மஞ் மார்ச்:1977:6-8), ஸ்ரீமதிசாரி நாராயணனின் (வனி. பிப்.77) நர்ஸின் வாழ்வில் ஒருநாள் (மஞ். மார். 1977:52-56), மூர்க்கோத்து குஞ்ஞப்பாவின் (வனி.மார்ச்.1977) குழந்தைகள் ஜாக்கிரதை (மஞ்.ஏப்.1977:26-28), அநிருத்த வர்மாவின் (மாத்ரு.3-2-77) வீரவழி பாடு (மஞ். ஏப்.1977:33-35), எம்.ஈ. தங்கப்பனின் (மாத்ரு. 5-12-76) கல்பாத்தித்தேர்விழா (மஞ்.மே. 1977:4-6), எம். கே.கே. நாயரின் (வனி.ஏப்.1977) அமுதுக்கு மறுபெயர் (மஞ்.மே. 1977:78-80), ஆர். கோபமணியின் (மாத்ரு. 8-11-73) மலர்களின் அரசி (மஞ்.ஜுன்.1977: 85-87), ஸ்ரீநிவாசனின் (மாத்ரு. 26-6-77) சோற்றானிக்கரைப் பகவதி (மஞ். ஜுலை, 1977:77-79), பி.கெ. ஆர்யன் நம்பியாரின் (மாத்ரு.23.1.77) முன்னால் தெரிந்தவன் (மஞ். ஆக.1977:57-61), களத்தறயின் (வனி.ஜுன், 1977) பெருமையோ பெருமை (மஞ்.ஆக.1977:62-64), கே. லலிதாம் பிகையின் (வனிதா) வரவேற்புரை (மஞ். செப். 1977:5-9), எம்.என். கோவிந்தன்நாயரின் (மனோரம்மா) ஓணம் (மஞ்.செப். 1977:17-19), பி.ஆர். உண்ணியின் (மாத்ரு. 27.9.77) கலைக்கோவில் (மஞ்.அக்.1977: 26-28), எம்.வி. விஷ்ணு நம்பூதிரியின் (மாத்ரு.23-10-77) தீயாட்டு (மஞ். நவ.1977 34-38), பி. ரமணியின் (வனி.ஆக.1977) சத்துள்ளபழம் (மஞ்.டிச.1977:27-29), டி.என். மாத்யூவின் (மாத்ரு.2.10.77) அருகிவரும் பறவைகள் (மஞ்.டிச.1977: 44-46), பி.வி. கிருஷ்ணவாரியாரின் (மாத்ரு.1.11.1977) கொங்கன்படை (மஞ்.சன.1978: 44-46), பி.ஆர். நாயரின் (வனி, நவ.1977) விருந்தினர் ஜாக்கிரதை (மஞ்.

ஜன.1978:53-56), தர்யோதனனின் (மனோரம்மா) பாயசமும் புளிக்குமோ (மஞ்.பிப். 1978:17-19), கிருஉஷ்ண குமாரி மாராரின் (மாத்ரு. 22.1.78) கேரளத்தில் ஒரு திருவெண்காடு (மஞ்.பிப்.1978:25-28), பேரூர்க்கட எம்.ஜி. ராஜின் (மனோ, 28.1.1978) இடமாற்றம் (மஞ். மார்ச்.1978:20-22), இராஜம்மா ஜான் சாமுவேலின் (மாத்ரு. 16.12.77) திருமணம் பலவிதம் (மஞ்.ஏப்.1978:24-27), பிரபல சந்திரனின் (மனோ. 26.11.77) யார்தவறு? (மஞ்.ஏப் 1978: 34-36), பி. சுப்பையாபிள்ளையின் (மனோரம்மா) கவலம்வந்தது (மஞ்.மே. 1978: 11-14), என். மாதவன் குட்டியின் (மாத்ரு.21.8.77) திருநெல்வேலி (மஞ்.மே.1978:46-48), என். அச்சுதன் நாயரின் (மாத்ரு.12-3-76) ரோஜாவின் கதை (மஞ்.ஜுன், 1978:36-38), ஜே. லலிதாம்பிகாவின் (வனி. ஜுலை,1978) பாராட்டுவிழா (மஞ். ஆக.1978:17-20), பி.என். விஜயனின் (மாத்ரு. 9.7.78) லோக்கு விழா (மஞ்.ஆக.1978: 52-54), சுவயம் பிரபா நாயரின் (வனி ஆக.1977) திருமாலுக்குரிய நன்னாள் (மஞ்.செப். 1978:24-26), கே.எஸ்.கே. கழிம்பரத்தின் (மாத்ரு. 16-7-78) இரத்தினபுரம் (மஞ். செப்.1978:27-29, ஆர்.எஸ். வைத்தியநாதனின் (மாத்ரு.1-1-78) வெற்றித்தெய்வவிழா (மஞ்.அக்.1978:49-51), சத்தியபாமாவின் (மாத்ரு. 12.2.78) மோகினியாட்டம் (மஞ்.நவ.1978: 25-27), பால்மணியின் (மனோ. 24-10-78) கேரளத்து இசைக்கோவில் (மஞ்.நவ. 1978:42-44), கே.என். சுஜாதாவின் (வனி.நவ.78) நான் விரும்பும் கணவர் (மஞ்.டிச.1978:6-8), கே. லலிதாம்பிகாவின் (வனி.டிச.1978) கொஞ்சும் கிளிகளே (மஞ்.ஜன.1979:75-78), வி. விஜயனின் (மாத்ரு.10.12.1978) கலைப்பொருள் கடத்துவோர்

(மஞ். மார்ச், 1979: 27-30), கே.எம். சுரேஷின் (வனி. நவ.1978) கொடவர் திருமணம் (மஞ். மார்ச், 1979; 85-88), கே. குஞ்ஞிக்கிருஷ்ணனின் (மாத்ரு.1.4.79) கர்லா குகைச் சிற்பம் (மஞ்.ஏப்.1979; 13-15), அஜயனின் (வனி.மார்ச்,1979) லட்சியமனைவி (மஞ்.ஏப்.1979:85-88), எம்.வி. குருவிளையின் (வனி.மார்ச்,1979) யூதர் திருமணம் (மஞ்.மே. 1979:40-43), ஆர். ஹேறலியின் (மாத்ரு.22.4.79) என்னெய்ப்பனை (மஞ். மே, 1979:82-84), மண்ட்யன் குஞ்ஞிராமனின் (மனோ. 26.5.79) பூரக்களி (மஞ்.ஜூன், 1979; 39-40), மூர்க் கோத்து குஞ்ஞப்பனின் (வனி. மே.1979) மாப்பிளை விழா (மஞ்.ஜூன், 1979: 41-44), இந்து பி.நாயரின் (வனி. மார்ச், 1979) எப்படியோ பிழைக்கிறார்கள் (மஞ்.ஜூலை, 1979: 38-42), ஆர். ஹேறலியின் (மாத்ரு. 29.7.79) மிளகு (மஞ். ஆக.1979: 10-13), வட்டவிளை ஜயகுமாரின் (மாத்ரு. 8-7-79) பண்புமிக்க பழங்குடிகள் (மஞ்.செப்.1979:26-29), ஸ்ரீதேவி உண்ணிக்கிருஷ்ணனின் (வனி. ஜூலை, 1979) பயண அவசரம் (மஞ்.செப்.1979:33-36), வி.எம். குட்டிகிருஷ்ணமேனோனின் (மாத்ரு. 1.7.1979) கேரளவீரர்கள் (மஞ்.அக்.1979: 41-43), கே. ஜனார்த்தனனின் (மாத்ரு.16.9.1979) பத்மநாபபுரம் சிற்பம் (மஞ்.நவ.1979:40-41), விலாசினி விஜயனின் (வனி.மே.1979) பயன்கருதாத தொண்டு (மஞ்.டிச.1979:11-13), பாதலில் தம்பியின் (மனோ.1.12.79) எதிர்பாராத எதிர்ப்பு (மஞ்.டிச.1979:44-46), எம்.ஆர். மனோகரின் (மனோ.24.11.79) ஏக்கம் தீர்ந்தது (மஞ்.சன.1980:33-35), கிருஷ்ணகுமாரியின் (வனி.நவ.1979) ஊனமுற்றோர் விடுதி (மஞ்.சன.1980: 83-85), ராமன் நாயரின் (மனோ.26.1.80) தோல் இருக்க (மஞ். பிப்.1980:28-31), லீலா விஜயகிருஷ்ணனின் (வனி. ஜன.1980) அறம் வளர்க்கும் ஊர் (மஞ்.மார்ச், 1980:24-26), என். அசோகனின் (மாத்ரு.24.2.80) கால்நடைப்பந்தயம் (மஞ்.மார்ச்.1980:27-29),

டி.என். கோபிநாதன் நாயரின் (வனி.சன.79) தெய்வத்தாய் (மஞ்.ஏப். 1980:76-79), சி.ஆர். மன்மதனின் (மாத்ரு. 5.3.1980) நாடன்கலை (மஞ்.ஏப்.1980: 83-86), ஈ.சி. மாதவன் நம்பியாரின் (மாத்ரு. 13.4.1980) கேரளத்தின் தீபாவளி (மஞ்.மே.1980:17-26), எம். சாவித்திரியின் (வனி.1.1.1979) எனக்குப் பிடித்த கணவர் (மஞ்.மே. 1980:87-88), ஏ.டி. சாக்கோவின் (மாத்ரு.27.4.80) காட்டை அழிக்கலாமா (மஞ்.ஜுன், 1980:13-16), பி.ஆர். நாதனின் (மாத்ரு. 29.6.80) குட்டிமூஸா (மஞ்-ஜுலை, 1980:17-21), வேளூர் கிருஷ்ணன்குட்டியின் (வனி.ஜுலை,1980) பெண்பார்த்தால் (மஞ். ஜுலை 1980:22-25), ஜே. லளிதாம்பிகாவின் (வனி.ஜுலை,1980) ஜம்பம் தேவைதானா (மஞ். ஆக.1980:74-79), ஜே. கட்டக்கலின் (மாத்ரு.27-7-80) நயாக்ராவைக் கண்டேன் (மஞ்.ஆக.1980:84-87), ஐ.பி. என்னின் (வனி. மே.1980) காசுதரும் முந்திரி (மஞ்.செப்.1980: 49-51), கே.சி. பணிக்கரின் (மாத்ரு.24.4.1980) மதயானைக்கு மயக்குமருந்து (மஞ். செப்.1980:73-77), லளிதாம்பிகாவின் (வனி.செப்.1980) நேரம் இல்லாதவர்கள் (மஞ்.அக்.1980:7-10), வாசி முரளீமேனோனின் (மனோ. 4.10.80) வாழைத்தாறு (மஞ்.அக்.1980:81-84), கீதாகிருஷ்ணனின் (மனோ.25.10.80) டிக்கெட் டிக்கெட் (மஞ்.நவ.1980: 27-30), ஈ.வி. மாதவனின் (மாத்ருபூமி) கேரளத்தில் சுற்றுலா (மஞ். டிச.1980:26-30), லளிதாம்பிகாவின் (வனி.நவ.1980) பாவம் குழந்தைகள் (மஞ்.டிச.1980:85-88), சுரேந்திரனின் (மனோ.15.11.80) இப்படியும் சில பேர்வழிகள் (மஞ்.சன.1981:24-26), நடுவட்டம் கோபாலகிருஷ்ணனின் (மாத்ரு.30.11.1980) விக்கிரகத்திருட்டும் சிதைவும் (மஞ்.பிப்.1981:64-66), பதாலில் தம்பியின் (மனோ.20.12.1980) புதிய கதவு (மஞ்.மார்ச்,1981:66-69) ரத்னசிங் மற்றும் மாதவன் நம்பியாரின் (மாத்ரு.15.2.1981) பாரம் தூக்குவோர் (மஞ்.ஜுன், 1981:51-56), வேளூர் கிருஷ்ணன் குட்டியின் (மனோரம்மா) வைத்திய

பரிசோதனை (மஞ்.ஆக.1981:29-32) போன்றவைகளும், உறுரியின் மொழி பெயர்ப்புகளாக எஸ். ராமகிருஉதீனனின் (வனி. ஜூலை, 1979) அழகுதரும் மருதேந்ற்றி (மஞ்.நவ.1979:27-28), சும்மார் குண்டலின் (மாத்ரு. 7-9-80) மூவரசு நாடகம் (மஞ்.அக்.1980: 18-21), பி.வி. சுகுமாரன் நாயரின் (மாத்ரு.14-12-80) பிரசாந்தி நிலையம் (மஞ்.ஜன.1981:39-43) ஸ்ரீபட்ரேயின் (மாத்ரு.22.3.81)கள்ளக்கடத்தலில்புதுமை (மஞ்.ஏப்.1981:6-9), கே. கேயின் (வனி.நவ.1980) ஊமையும் பேசலாம் (மஞ்.ஏப்.1981:50-52) தாமஸ் வடகேடத்துவின் (மனோ. 11.1.1981) மனித உருவில் முள் (மஞ். மே.1981:78-82), விஜயம் ரவியின் (வனி,மே.1981) ஜோடிப் பொருத்தம் (மஞ்.ஜூன்,1981:5-8), டி.யு.கெ. உண்ணியின் (மாத்ருபூமி) விளயன்னூர் விளைஞர்கள் (மஞ். ஜூலை, 1981:82-85), ஸ்வாதியின் (மாத்ரு. 22-2-1981) ஊனமும் ஞானமும் (மஞ்.ஆக.1981: 25-27), இந்திரா கிருஉத்னனின் (வனிதா) அலங்காரப்பொருள் (மஞ். நவ. 1981:44-46), அனியன் குறிச்சித்தானத்தின் (மனோ. 22.8.1981) காதகுத்தல் வைபவம் (மஞ்.நவ.1981:55-59), சகுந்தலா நடராஜனின் (வனி.நவ.1981) மாநகரில் மதிய உணவு (மஞ்.டிச.1981:40-42), வி.கெ. அலெக்சாண்டரின் (வனி.டிச.1981) தலையணை மந்திரம் (மஞ்.சன.1982:17-20), விஜயம் ரவியின் (மனோ. 12.12.81) அந்தஸ்து (மஞ்.சன.1982:24-27), சும்மார் குண்டலின் (மாத்ருபூமி) கேரளத்து வாத்தியங்கள் (மஞ்.பிப்.1982: 8-11), ஐ.பி. என்னின் (வனி.சன.1982) இனிப்பூட்டும் ஆலப்புழை (மஞ். பிப்.1982: 39-41), ஜி.என். ராஜத்தின் (வனி.பிப்.1982) தொலைபேசி மர்மம் (மஞ்.ஏப்.1982:34-38), ஜார்ஜ் வர்க்கீஸ் ஓமனின் (மனோ. 20.3.82) மரணமே உனக்கு நன்றி (மஞ்.ஏப்.1982:39-41), விஜயம் ரவியின் (மனோரம்மா) தேடிவந்த துஉந்யந்தன் (மஞ்.மே.1982:5-9), சகுந்தலா நடராஜனின் (வனி.பிப்.1982) ஈடில்லா இசைக் குரல்

(மஞ்.மே.1982:17-20) என்பவைகளும் உள்ளன. மேலும் சுருளிமலியின் மொழிபெயர்ப்பாக ஓ. அபூட்டியின் (மனோரம்மா) சாவையே விரும்பிய கைதி (மஞ்.டிச.1980:52-56), மல்லவி எஸ்.எம். சுலைமான் பாஊஷாவின் மொழிபெயர்ப்பாக கே. கங்காதரனின் (மாத்ரு.17-3-1984) கண்ணீர்க்காட்சிகள் (மஞ்.மே.1984: 21-24) போன்றவைகளும் காணப் படுகின்றன.

2. கேரளநாட்டு எழுத்தாளர்களின் ஆங்கில நூல்கள்

கேரளநாட்டு எழுத்தாளர்களின் ஆங்கில நூல்களையும், மலையாள நூல்களின் ஆங்கில மொழிபெயர்ப்புகளையும் மூலமாகக் கொண்டு தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட நூல்கள் சிலவும் காணப்படுகின்றன. அவற்றில் சாகித்ய அக்காடமியின் வெளியீடுகளாக கே.ஸி. சங்கர நாராயணனின் (1974) மொழிபெயர்ப்பாக கே.எம். ஜார்ஜின் 'குமாரனாசான்' என்ற நூலும், மா. இளையபெருமாளின் (1979) மொழிபெயர்ப்பாக உறிருதயகுமாரியின் 'வள்ளத்தோள்' என்ற நூலும், கு. இராஜவேலுவின் (1979) மொழிபெயர்ப் பாக டி.ஸி. சங்கரமேனோனின் 'சந்துமேனோன்' என்ற நூலும், எழில்முதல்வன் எனப்படும் மா. இராமலிங்கத்தின் (1986) மொழிபெயர்ப்பாக சுகுமார் அழிக்கோடின் 'மகாகவி உள்ளூர்' என்ற நூலும் உள்ளன. என். இராமகிருஉஷ்ணனின் (1988) மொழிபெயர்ப்பாக இ.எம்.எஸ். நம்பூதிரிபாடின் 'ஒரு இந்திய கம்யூனிஸ்டின் நினைவலைகள்' என்ற நூல் உள்ளது. இதனைச் சென்னை புக்ஸ் வெளியிட்டுள்ளது. மேலும் இ.எம்.எஸ். நம்பூதிரிபாடின் நூல்களில் தமிழ்வடிவம் பெற்றவையாக மார்க்சியமும் இலக்கியமும் (1988, சென்னை புக்ஸ்), வேதங்களின் நாடு, இந்தியவரலாறு, கம்யூனிஸ்ட் இயக்கத்தின் தத்துவார்த்த பிரச்சனைகள், கம்யூனிஸ்ட் இயக்கமும் நாடாளுமன்ற அரசியலும் ஆகியவையும் காணப்படுகின்றன.

2. மலையாளத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள புனைகதையல்லாத உரைநடை இலக்கியங்களாக இலக்கணநூல்கள் மூன்றும், திறனாய்வு நூல் ஒன்றும், திறனாய்வுக்கட்டுரைகள் ஏழும், வரலாற்று நூல்கள் இரண்டும், இலக்கிய வரலாற்றுநூல் ஒன்றும், தன்வரலாறு மற்றும் வாழ்க்கை வரலாறு ஆகியன சார்ந்த நூல்கள் இரண்டு வீதமும், இந்துசமய நூல் ஒன்றும், இஸ்லாமிய சமயநூல் ஒன்றும், கிறிஸ்தவ சமயநூல்கள் இரண்டும், எஞ்சிய துறைகளைச்சார்ந்த நூல்கள் பத்தும் இதழ்க்கட்டுரைகள் சுமார் நூற்றி ஏழும் இங்கு தொகுக்கப்பட்டுள்ளன. மேலும் கேரளநாட்டு எழுத்தாளர்கள் ஆங்கில மொழியில் எழுதிய நூல்களிலிருந்தும், மலையாள நூல்களின் ஆங்கில மொழிபெயர்ப்புகளிலிருந்தும் தமிழாக்கப்பட்டவையாக ஏறத்தாழப் பத்து நூல்கள் காணப்படுகின்றன. மலையாளத்திலிருந்து செய்யப்பட்ட புனைகதையல்லாத உரைநடை இலக்கிய மொழிபெயர்ப்புகளில் காலத்தால் முந்தியதாக 1908இல் திரிபுரசுந்தரி அச்சுக்கூடத்திலிருந்து வெளியான 'வேதாந்த விவகார கிரிமினல் கேஸ்' என்ற நூல் உள்ளது.

இம்மொழிபெயர்ப்புகளின் வாயிலாக இளங்குளம் குஞ்ஞன்பிள்ளை, ஏ.ஆர். இராஜராஜவர்மா, ஹெர்மன் குண்டர்ட், சச்சிதானந்தன், பி.கெ. பாலகிருஷ்ணன், பெஞ்சமின், டி. பாஸ்கரன், நித்யசைதன்யதி, ஜி. சங்கரப்பிள்ளை, பி.கெ. பரமேசுவரன்நாயர், கே.பி. கேசவமேனோன், சூரநாட்டு குஞ்ஞன்பிள்ளை, மாதவன் நம்பூதிரி, அப்துல்காதர், எ.பி. பைலி, தேவதாஸ், பாலசாரகுறுப்பு, சந்தானந்த சுவாமிகள், விலகூஷ்ணானந்த சுவாமிகள், தன்வந்திரி பகவான், சிவானந்தபரம ஹம்சர், ரஷீத், சி.கே. நம்பூதிரி, இராஜன்குருக்கள், ஈ.சி. மாதவன் நம்பியார், ஸ்ரீதரன், டி. தாமோதரன், ஜான்கரிமாற்றம், அருணன், ஸ்ரீனிவாசன், ஸ்ரீமதிசாரி நாராயணன், ஸ்ரீக்கோத்து

குஞ்குப்பா, அநிருத்தவர்மா, எம்.ஈ. தங்கப்பன், எம்.கே.கே.நாயர், ஆர். கோபமணி, பி.கெ. ஆர்யன் நம்பியார், களத்தற, கே. லலிதாம்பிகா, எம்.என். கோவிந்தன் நாயர், பி.ஆர். உண்ணி, எம்.வி. விஷ்ணு நம்பூதிரி, பி. ரமணி, டி.என். மாத்யு, பி.வி. கிருஷ்ணவாரியர், பி.ஆர். நாயர், துர்யோதனன், கிருஷ்ண குமார் மாரார், பேரூர்க்கட எம்.ஜி. ராஜ், இராஜம்மா ஜான் சாமுவேல், பிரபலசந்திரன், பி. சுப்பையாபிள்ளை, என். மாதவன்குட்டி, என். அச்சுதன் நாயர், ஜே. லலிதாம்பிகா, பி.என். விஜயன், சுயம் பிரபாநாயர், கே.எஸ். கே. கழிம்பரம், ஆர். எஸ். வைத்தியநாதன், சத்தியபாமா, பால்மணலில், என். சுஜாதா, வி. விஜயன், கே.எம். சுரேஷ், கே. குஞ்ஞிக்கிருஷ்ணன், அஜயன், எம்.ஸி. குருவிள, ஆர்.ஹேறலி, மண்ட்யன் குஞ்ஞிராமன், மூர்க்கோத்து குஞ்குப்பா, இந்து பி. நாயர், வட்டவிளை ஜயகுமார், ஸ்ரீதேவி உண்ணிக்கிருஷ்ணன், வி.எம். குட்டிகிருஷ்ணமேனோன், கே. ஜனார்த்தனன், விலாசினி விஜயன், பாதலில் தம்பி, எம்.ஆர். மனோகர், கிருஷ்ணகுமாரி, ராமன்நாயர், லீலாவிஜயகிருஷ்ணன், என். அசோகன், டி.என். கோபிநாதன் நாயர், சி.ஆர். மன்மதன், எம். சாவித்திரி, டி.என். சாக்கோ, பி.ஆர். நாதன், வேணுர்கிருஷ்ணன் குட்டி, ஜே. கட்டக்கல், ஐ.பி.என், கே.சி. பணிக்கர் வாசீ முரளீ மேனோன், கீதாகிருஷ்ணன், சுரேந்திரன், நடுவட்டம் கோபால கிருஷ்ணன், ரத்னிசிங், மாதவன் நம்பியார், என், ராமகிருஷ்ணன், சும்மார் கூண்டல், பி.ஸி. சுகுமாரன் நாயர், ஸ்ரீபட்ரெ, கே.கே. தோமஸ் வடகேடத்து, விஜயம் ரவி, டி.யு.கெ. உண்ணி, ஸ்வாதி, இந்திராகிருஷ்ணன், அஙியன் குறிச்சித்தானம், சகுந்தலா நடராஜன், வி.கெ. அலெக்சாண்டர், விஜயம் ரவி, ஜி.என். ராஜம், ஜார்ஜ் வர்க்கீஸ், ஓ. அபூட்டி, கே. கங்காதரன், கே.எம். ஜார்ஜ், ஹிருதயகுமாரி, டி.சி. சங்கரமேனோன், சுகுமார் அழிக்கோடு, இ.எம்.எஸ். நம்பூதிரிப்பாடு முதலானவர்களின்

படைப்புகள் தமிழில் அறிமுகமாகியுள்ளன. இவர்களில் சச்சிதானந்தன், ஜி. சங்கரப்பிள்ளை நித்யசைதன்யயதி, டி.என். கோபிநாதன் போன்றவர்கள் பிற இலக்கிய வகைகள் வாயிலாகவும் தமிழுக்கு அறிமுகமானவர்கள்.

மொழிபெயர்ப்பாளர்களாக மா. இளையபெருமாள், சி. நாச்சிமுத்து, சுகுமாரன், நீலபத்மனாபன், டி. தேவதாஸ், நிர்மால்யா, வ. விநாயக பெருமாள், சி. ஜேசுதாசன், பி.ஆர். பரமேசுவரன், இராமகோபிநாதன், சி.ஏ. பாலன், இராஜம் கிருஷ்ணன், எஸ்.பி. நாராயணசாமி, ஆன்ஸெம், கே.வி. கிருஷ்ணசாஸ்திரி, அஜீஸ், வி.எம். சூரியன், ஏ. ரூசைராஜ், மரியதாஸ், எம். முஸ்தபா, குயிலன், இராமபத்திரசர்மா, பா.சி. கந்தசாமிபிள்ளை, வேலாயுதசுவாமி, வி.எச்.எஸ். சாஸ்திரி, ஹரி, சுருளிமணி, சுலைமான், கே.வி. சங்கரநாராயணன், கு. இராஜவேலு, மா. இராமலிங்கம், என். இராமகிருஷ்ணன் போன்றவர்கள் உள்ளனர். இவர்களில் சி. நாச்சிமுத்து, சுகுமாரன், நீலபத்மநாபன், டி. தேவதாஸ், நிர்மால்யா, இராமகோபிநாதன், சி.ஏ. பாலன், கே.வி. சங்கரநாராயணன் போன்றவர்கள் பிற இலக்கிய மொழிபெயர்ப்புகளையும் செய்துள்ளனர்.

புனைகதைத் தன்மையற்ற உரைநடை இலக்கியமொழிபெயர்ப்புகளில் சுவாதித்திருநாள், கேரளபாணினியம், மலையாள மொழி இலக்கணம் ஆகியன வற்றை கேரளப்பல்கலைக்கழகமும், மலையாள இலக்கிய வரலாறு, மற்றும் குமாரனாசான், வள்ளத்தோள், சந்துமேனோன், மகாகவி உள்ளூர் ஆகியன வற்றைச் சாகித்திய அக்காடமியும், கடந்தகாலம் என்ற நூலை நேஷனல் புக் டிரஸ்ட் ஆப் இந்தியாவும், பண்டைய கேரளம் என்ற நூலைத்தமிழ்ப் புத்தகாலயமும் வெளியிட்டுள்ளன. மேலும் சித்தசமாஜ் போன்ற நிறுவனங் களும், தனியார் பதிப்பகங்களும், அச்சகங்களும், இதழ்களும் ஏனைய

மொழிபெயர்ப்புகளை வெளியிட்டுள்ளன. இவற்றில் கேரளப்பல்கலைக்கழகம், சாகித்திய அக்காடமி, நேஷனல் புக்டிரஸ்ட், தமிழ்ப்புத்தகாலயம், சேதுபதிப்பகம், குயிலன் பதிப்பகம் மற்றும் இதழ்கள் போன்றவற்றிலிருந்து வெளிவந்த படைப்புகளைத் தவிர பிறவற்றில் மிகுதியும் குறிப்பிட்ட சமயம், அரசியல் போன்றவற்றைச் சார்ந்த வாசகர்களைக் கருத்தில் கொண்டு வெளியிடப்பட்டவை ஆகும்.

மலையாளத்திலிருந்து தமிழில் புனைகதைத் தன்மையற்ற உரைநடை இலக்கிய மொழிபெயர்ப்புப் பணி சுமார் 1908இல் இருந்தே செய்யப்பட்டிருந்தாலும் 1960திற்குப் பிறகுதான் இப்பணி ஓரளவு பரவலான அளவில் நடந்துள்ளது என திரட்டப்பட்ட தகவல்களின் அடிப்படையில் கருதலாம். இருப்பினும் மா. இளையபெருமாள் (லீலாதிலகம், கேரளபாணினியம், மலையாளமொழி இலக்கணம்-முதல்பாகம், வள்ளத்தோள்), கி. நாச்சிமுத்து (மலையாள மொழி இலக்கணம்-இரண்டாம் பாகம்), சுகுமாரன் (மார்க்ஸிய அழகியல் ஒரு முன்னுரை), சி. ஜேசுதாசன் (பண்டைய கேரளம்), இராமகோபிநாதன் (மலையாள இலக்கியவரலாறு), சி.ஏ. பாலன் (தூக்குமரநிழலில்), இராஜம் கிருஷ்ணன் (கடந்த காலம்), பி.எஸ். நாராயணசுவாமி (சுவாதிதிருநாள்), கே.ஸி. சங்கரநாராயணன் (குமாரனாசான்) போன்றவர்கள் மட்டுமே தரமானதும் நிலைபேறுடையதுமான நூல்களைத் தேர்வுசெய்து மொழிபெயர்த்துள்ளனர். இவ்வடிப்படையில் கவிதை, மற்றும் புனைகதை இலக்கிய மொழிபெயர்ப்புகளோடு ஒப்பிட்டுநோக்க புனைகதையல்லாத உரைநடை இலக்கிய மொழிபெயர்ப்புப்பணி தொய்வுடையதாகவே உள்ளது எனலாம்.

2. மதிப்பீடு

புனைகதையல்லாத உரைநடை இலக்கிய மொழிபெயர்ப்பு பற்றிய மதிப்பீட்டை இலக்கணம், திறனாய்வு, வரலாறு போன்ற படைப்புகளின் அடிப்படையில் பின்வருமாறு அமைக்கலாம்.

1. இலக்கணம்

இலக்கணநூல்களின் மொழிபெயர்ப்புபற்றிய மதிப்பீடு லீலாதிலகம், கேரளபாணினியம், மலையாளமொழி இலக்கணம் ஆகியவற்றின் அடிப்படையில் செய்யப்பட்டுள்ளது.

1. லீலாதிலகம்

லீலாதிலகம் வடமொழியில் எழுதப்பட்ட மலையாள இலக்கணநூலாகும். இந்நூலுக்குரிய பழைய உரையைத்தழுவி இளங்குளம் குஞ்ஞன்பிள்ள உரை ஒன்றைச் செய்துள்ளார். இதனை பேராசிரியர் மா. இளையபெருமாள் (1971) தமிழில் மொழிபெயர்த்துள்ளார். இம்மொழிபெயர்ப்பில் முன்னுரை, அடிக்குறிப்புவிளக்கங்கள், வடசொற்பொருளகராதி, மலைநாட்டுத்தமிழ் சொல்லகராதி ஆகிய பகுதிகளை மொழிபெயர்ப்பாளர் மிகுதியாகச்சேர்த்துள்ளார். லீலாதிலக மொழிபெயர்ப்பில் நூற்பாக்களும், எடுத்தக்காட்டுகளும் ஒலிபெயர்ப்பு செய்து மூலத்தில் உள்ளதுபோன்றே அமைக்கப்பட்டுள்ளது. இம்மொழிபெயர்ப்பின் பொதுத்தன்மையாக தருமொழிவடிவத்தை அதற்கு சமமான பெறுமொழி இணைகளால் மாற்றியுள்ளதைக் குறிப்பிடலாம். சான்றாக,

"உபமானோபமேயங்ஙள்க்கு பரஸ்பரம் மிக்கவாறும் அவயவஸாதர்ம்ம்ய யோகம் வருந்நதாணு உபம எந்நு சிலர் பறயுந்நு. எந்நால் அது ஸாத்றுசியம் கூடாதெ உண்டாகுந்நதல்ல. ரண்டு வஸ்துக்கள் ஸத்றுசங்ஙளெந்நு பறஞ்ஞால் அவ பின்னங்ஙளாணெந்நும் ஸித்திக்கும். பின்னமல்லங்கில் ஸாத்றுசியத்தினு

உபபத்தியில்ல. (உவமான உவமேயங்களுக்கு இடையில் ஒன்றிற்கொன்று பெரும் பாலும் உறப்பொற்றுமை உள்ளதுதான் உவமை என்று சிலர் கூறுகிறார்கள். ஆனால் அது ஒற்றுமை இல்லாமல் உண்டாவதில்லை. இரண்டு பொருள்கள் ஒப்புமை உடையன என்று சொன்னால் அவை வேறுபட்டவை என்பதும் பெறப்படும். வேற்றுமை இல்லாவிட்டால் ஒற்றுமைக்கு வழியில்லை)"

(இளங்குளம் குஞ்ஞன்பிள்ளை, 1990:202)

என்பதை

"உவமை என்பது உவமான, உவமேயங்களுக்கு இடையில் ஒன்றிற்கொன்று பெரும்பாலும் உறப்பொற்றுமைகள் ஏற்படுவதாகும் என்று சிலர் கூறுகின்றனர். ஆனால் அது ஒப்புமை இல்லாது ஏற்படுவதில்லை. இரண்டு பொருள்கள் ஒப்புமையுடையன என்று கூறின் அவை வேறுபட்டவை என்பதும் வந்தெய்தும். வேற்றுமையில்லை என்றால் ஒப்புமைக்கு நியாயம் இல்லை.

(இளையபெருமாள், 1971:196-197)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதில் "உபமானோபமேயங்ஙள்க்கு பரஸ்பரம் மிக்கவாறும் அவயவஸாதர்ம்ம்யயோகம் வருந்நதாணு உபம எந்நு பறயுந்நு" என்பதை "உவமை என்பது உவமான உவமேயங்களுக்கு இடையில் ஒன்றிற்கொன்று பெரும்பாலும் உறப்பொற்றுமைகள் ஏற்படுவதாகும் என்று சிலர் கூறுகிறார்கள்" என சொல்வரிசைமுறையை மாற்றியமைத்துள்ளார்.

2. கேரளபாணினீயம்

ஏ.ஆர். இராஜவர்ம்மாவின் கேரளபாணினீயம் (1895) என்ற இலக்கண நூலை மா. இளையபெருமாள் (1977) தமிழில் மொழிபெயர்த்துள்ளார். இம்மொழிபெயர்ப்பு முன்னுரை, அடிக்குறிப்புவிளக்கங்கள், அடிச்சொற்களுக்கு அடைப்புக்குறியினுள் தமிழ் இணைகள், சிறப்புப்பெயர் அகரவரிசை, எடுத்துக்

காட்டு அகராதி, நூற்பா முதற்குறிப்பு அகரவரிசை முதலியனவற்றை மிகுதியாகப் பெற்றதாக உள்ளது. கேரளபாணினிய மொழிபெயர்ப்பில் நூற்பாக்களும் எடுத்துக்காட்டுகளும் மூலத்தில் உள்ளதுபோன்றே ஒலிபெயர்ப்பு செய்யப்பட்டதாகவும், உரைப்பகுதி மொழிபெயர்ப்பு செய்யப்பட்டதாகவும் உள்ளது.

1. நூற்பாக்களும் எடுத்துக்காட்டுகளும்

கேரளபாணினிய நூற்பாக்களுக்கும் எடுத்துக்காட்டுகளுக்கும் மா. இளையபெருமாள் செய்துள்ள ஒலிபெயர்ப்பு தருமொழியின் ஒலிக்குறியீடுகளைப் பெறுமொழியில் பயன்படுத்தியதாகவும், தருமொழியின் ஒலியன்களைப் பெறுமொழிக்கேற்ப மாற்றியமைக்கப்பட்டதாகவும் உள்ளது.

1. தருமொழியின் ஒலிக்குறியீடுகளைப் பெறுமொழியில் பயன்படுத்துதல்

மூலநூலில் காணப்படும் ஒலிக்குறியீடுகளைப் பெறுமொழியில் பயன்படுத்திக் கொள்ளுதலை இவ்வகையில் அடக்கலாம். இதை தருமொழியின் வரிவடிவத்திற்கு சமமான வரிவடிவம் பெறுமொழியில் இன்மையால் பயன்படுத்துதல், பொருள் தெளிவிற்காகவும் வடிவச்சான்றிற்காகவும் பயன்படுத்துதல் என இருவகையாகப் பிரிக்கலாம்.

1. சமமான வரிவடிவம் இன்மையால் பயன்படுத்துதல்

மலையாளத்திலுள்ள 'ശ' என்ற ஒலிக்குறியீட்டை தமிழ்மொழிபெயர்ப்பிலும் அப்படியே பயன்படுத்தியுள்ளமையை இவ்வகையில் அடக்கலாம். சான்றாக,

"தர்ശிக்கப்பெடாவுந்நது த்றுശ் யம்

தர்ശிக்குந்நவன் த்றுஷ்டாவு்

ஏதுகொண்டு தர்ശிக்குந்நுவோ அது தர்ശனம்

தர்ശிக்குந்ந க்றிய த்றுஷ்டி

தர்ശிக்க ശிலமுள்ளவன் தர்ശி"

(இராஜராஜவர்மா, 1988:167)

என்பதை

"தர்ശிக்கப் பெடாவுன்னது - த்ருശ்யம்

தர்ശிக்குந்நவன் - த்ருஷ்டாவு்

ஏதுகொண்டு தர்ശிக்குன்னுவோ அது - தர்ശனம்

தர்ശிக்குன்ன க்ரிய - த்ருஷ்டி

தர்ശிக்குக ശிலமுள்ளவன் - தர்ശി "

(இளையபெருமாள், 1977:195)

என ஒலிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதில் தருமொழிவடிவத்தில் காணப் படும் 'ശ' அப்படியே பெறுமொழிவடிவத்திலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் 'த்றுஷ்டாவு" என்பதில் குற்றியல் உகரத்தைக்குறிக்கும் '്' என்ற குறியீட்டை அதன் ஒலிபெயர்ப்பிலும் 'த்ருஷ்டாவு்' என அப்படியே பயன் படுத்தியுள்ளார்.

2. வடிவச்சான்றிற்காகப் பயன்படுத்துதல்

கேரளபாணிய மொழிபெயர்ப்பில் தருமொழி வடிவத்தில் காணப்படும் ஒலிக்குறியீடுகள் அனைத்தும் ஏதாவது ஒரு காரணத்தை அடிப்படையாகக்கொண்டு அப்படியே பயன்படுத்தப்பட்டுள்ளன எனலாம். குறிப்பாக வரிவடிவம் பற்றிய விளக்கம் இடம்பெறும் பகுதிகளில் மொழிபெயர்ப்பாளருக்கு மூலநூல் ஒலிகளின் வரிவடிவத்தைப் பயன்படுத்த வேண்டிய கட்டாயம் உண்டு. சான்றாக

மகரத்தின் இடத்தில் அனுஸ்வாரம் வருவதையும் லகர ஒற்றிற்குப் பதிலாக தகர ஒற்று வருவதையும் காட்டுகின்ற

"ഇടമ് - ഇടം
ധനമ് - ധനം
പാല് - പാൽ
മരത്തില് - മരത്തിൽ

(இராஜராஜவர்மா, 1988:38)

என்ற பகுதியை

"இடம் - இடം
தனம் - தனം
பால் - பாൽ
மரத்தில் - மரத்திൽ

(இளையபெருமாள், 1977:45)

என மொழிமாற்றியுள்ளதைக் குறிப்பிடலாம். இங்கு தருமொழிவடிவத்தில் காணப்படும் ം, ൽ ஆகிய இரண்டு எழுத்துக்களையும் அப்படியே பயன்படுத்தியுள்ளார்.

2. <u>தருமொழியின் ஒலியன்களைப் பெறுமொழிக்கேற்ப மாற்றியமைத்தல்</u>

தருமொழி வடிவத்தில் காணப்படும் ஒலியன்களைப்பெறுமொழியின் ஒலியன்களால் நேரடியாகப் பதிலீடு செய்ய முடியாத நிலையில் அவற்றைப் பெறுமொழியின் பிற ஒலியன்களாக மாற்றி ஒலி பெயர்ப்பு செய்துள்ளமையை இவ்வகையில் அடக்கலாம். சான்றுகளாக,

1. "ஸ்வரத்தின் முன்பு லோபிக்கும்
ஸம்வ்ருதம் வ்யர்த்தமாகயால்
அதினெ ஸ்வரமாயிட்டே
வகவய்க்கேண்ட ஸந்தியில்[4]"

(இராஜராஜவர்மா, 1988:86)

என்பதை

ஸ்வரத்தின் முன்பு லோபிக்கும்
ஸம்வ்ருதம் வ்யர்த்தமாகயால்
அதினெ ஸ்வரமாயிட்டே
வகவெய்க்கேண்ட ஸந்தியில்

(இளையபெருமாள், 1977:102)

எனவும்

2. "அட்டெ ஆதெ உடெ ஊடே
இவயந்த்யம் களஞ்ஞுமாம்
உற்றஸ்வம் நீட்டாம்[3] பலத்தின்னாய்
தள்ளாம்[4] ப்ரதான்ய உறாவியில்"

(இராஜராஜவர்மா, 1988:88)

என்பதை

"அட்டெ ஆதெ உடெ ஊடெ
இவயந்த்யம் களஞ்ஞுமாம்
உற்றுஸ்வம் நீட்டாம் பலத்தின்னாய்
தள்ளாம் ப்ராதான்ய உறாவியில்"

(இளையபெருமாள், 1977:104)

எனவும்

3. "வர்ஜ்ஜிப்பு ஸ்வரஸம்யோகம்[3]
யவசேர்த்து யதாவலே
பூர்வ்வம் தாலவ்யமாணெங்கில்
யகாரமதிலேய்க்கணம்
பூர்வமோஉஷ்ட்ய ஸ்வரம் வந்நால்
வகாரம் சேர்த்து கொள்ளுக"

(இராஜராஜவர்மா, 1988:89)

என்பதை

"வ்ர்ஜ்ஜிப்பு ஸ்வரஸம்யோகம்
யவசேர்த்து யதாவலே
பூர்வ்வம் தாலவ்யமாணெங்கில்
யகாரமதிலெய்க்கணம்
பூர்வமோஉஷ்ட்யஸ்வரம் வந்நால்
வகாரம் சேர்த்துக்கொள்ளுக"

(இளையபெருமாள், 1977 : 105)

எனவும் ஒலிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இங்கு உயிர்ப்பொலிகள், ஒலிப்பு ஒலிகள், ஒலிப்பு உயிர்ப்பொலிகள் ஆகியவற்றிற்குரிய தனியான எழுத்துவடிவங்களைத் தவிர்த்து அவற்றைத் தமிழ் முறைப்படி வர்க்க முதலெழுத்துக்களாக மாற்றி எழுதியுள்ளார். மேலும் ருகரத்தை ரகரமாகவும் உயிரெழுத்தான த்ருகாரத்தை 'ரு' என்ற உயிர்மெய் எழுத்தாலும் பதிலிட்டுள்ளார். (இளையபெருமாளின் ஒலிபெயர்ப்பில் ஜகரம், ஷகரம், ஸகரம், ஹகரம் ஆகியன அப்படியே கிரந்த எழுத்து முறையிலும், ழகரம் மலையாள வரிவடிவத்திலும் எழுதப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்).

2. உரைப்பகுதி

கேரளபாணினியத்திலுள்ள உரைப்பகுதியை இளையபெருமாள் கருத்தளவில் மாற்றமின்றி மூலத்தை அப்படியே பிரதிபலிக்கின்ற அளவில் மொழிபெயர்த்துள்ளார். சான்றாக,

"நாம் எந்திநெப்பற்றி ஸம்ஸாரிக்குந்நுவோ அது உத்தேசியம். அதிநு எந்துண்டாகுந்நு எந்நு பறயுந்நுவோ அது விதேயம். இதாகுந்நு உத்தேசிய விதேயபாவம். 'காக்க கறுத்ததாகுந்நு' எந்நு பறயும் போள் நாம் காக்கயெப்பற்றியாணு ஸம்ஸாரிக்குந்நது. அதினால் காக்க உத்தேசியம். அதின்மண்ணம் தன்னெ காக்கயெப் பற்றிப் பறயுந்ந கறுத்ததாகுந்நு எந்நது

விதேயம் (நாம் எதைக்குறித்துப் பேசுகிறோமோ அது உத்தேசியம். அதற்கு என்ன ஏற்படுகிறது என்று சொல்கிறோமோ அது விதேயம், இதுதான் உத்தேசிய விதேயத்தன்மை. காகம் கறுத்தது என்று சொல்லும்போது நாம் காகத்தைப் பற்றித்தான் பேசுகிறோம். அதனால் காகம் உத்தேசியம். அதன்படி காகத்தைப் பற்றிச் சொல்கின்ற கருமையானது என்பது விதேயம்)."

(இராஜராஜவர்மா, 1988: 158-159)

என்பதை

"நாம் எதனைக் குறித்துப்பேசுகிறோமோ அது உத்தேசியம். அதற்கு எது உண்டாகிறது என்று கூறுகிறோமோ அது விதேயம். இதுவே உத்தேச விதேய பாவம். 'காக்க கறுத்தாகுந்நு' எனக்கூறும்போது நாம் காக்கையைப் பற்றிப் பேசுகிறோம், அதனால் காக்கை உத்தேசியம். அவ்வண்ணமே காக்கையைக் குறித்துப் பேசப்படும் 'கறுத்தாகுன்னு' என்பது விதேயம்".

(இளையபெருமாள், 1977:186)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதில் உத்தேசியம். விதேயம் ஆகிய வடமொழிச்சொற்கள் அப்படியே தமிழில் ஒலிபெயர்க்கப்பட்டுள்ளதோடு தருமொழிவடிவம் வாக்கியத்திற்கு வாக்கியம் சரியாக மொழிமாற்றப்பட்டுள்ளது.

3. மலையாளமொழி இலக்கணம்

குண்டர்ட் பாதிரியாரின் 'மலயாள பாஷாவ்யாகரணம்' (1851) என்ற இலக்கணநூலின் முதலிரு பகுதிகளான அக்ஷரகாண்டம், பதக்காண்டம் ஆகியவைகளைப் பேராசிரியர் மா. இளையபெருமாள் (1979) மொழிபெயர்த்துள்ளார். இது "மலையாளமொழி இலக்கணம்" என்னும் தலைப்பில் தனி

நூலாக வெளிவந்துள்ளது. மேலும் மலையாள பாஷா வ்யாகரணத்தின் மூன்றாம் பகுதியான வாசக காண்டத்தில் கர்த்தாவு, ஆக்யாதம், பொருத்தம், நாமாதிகாரம் என்ற தலைப்புகளில் அமைந்த பகுதிகளை பேராசிரியர் மா. இளையபெருமாள், சி. நாச்சிமுத்து (1983) ஆகியவர்கள் இணைந்து மொழிபெயர்த்துள்ளனர். இது "மலையாளமொழி இலக்கணம் பகுதி 2: சொற்றொடர் காண்டம்" என்னும் தலைப்பில் வெளிவந்துள்ளது. இவை நீங்கலாக மூலநூலில் காணப்படும் பிற பகுதிகள் எதுவும் இன்னும் மொழி பெயர்க்கப்படவில்லை. மலயாள பாஷாவ்யாகரணத்தின் மொழிபெயர்ப்பாக அமைந்துள்ள நூல்களில் எடுத்துக்காட்டுகள் ஒலிபெயர்ப்பின் மூலமும் (இந்நூலில் நூற்பாக்கள் இல்லை) உரைப்பகுதி மொழிபெயர்ப்பின் மூலமும் தமிழ்வடிவம் பெற்றுள்ளன. இம்மொழிபெயர்ப்பின் சிறப்புத்தன்மையாகத் தருமொழி வடிவத்தைக் கருத்தளவில் வேறுபாடின்றி அப்படியே மொழி மாற்றியுள்ளமையைக் குறிப்பிடலாம். சான்றாக,

"மலையாளபாஷ த்ரமிளம் எந்നுள்ள தமிழின்றெ ஒரு ஶாக ஆகுந்நு. அது தெலுங்கு, கர்ண்ணாடகம், துளு, குடகு முதலாய ஶாககளெக்காள் அதிகம் தமிழருடெ ஶுத்றங்ஙளோடு ஒத்து வரிகயால் உபபாஷயத்றெ. எங்கிலும் ப்றாஉ்றமணர் ஈ கேரளத்தெ அடக்கிவாணு, அனாசரங்ஙளெ நடப்பாக்கி நாட்டிலெ ஶுத்றருமாயி சேர்ந்நு போயதினால் ஸம்ஸ்க்றுதசப்தங்ஙளும் வாசகங்ஙளும் .. வளரெ நுழஞ்ஞுவந்நு பாஷயுடெ ரூபத்தெ பலவிதத்திலும் மாற்றியிருக்குந்நு (மலையாளமொழி த்திரமிளம் என்ற தமிழின் ஒரு கிளையாகும். இது தெலுங்கு, கன்னடம், துளு, குடகு முதலான கிளை மொழிகளை விடவும் மிகுதியாகத் தமிழர்களின் இலக்கணங்களோடு ஒத்துவருவதால் கிளை மொழியாகும். ஆனாலும் பிராமணர்கள் இந்தக் கேரளத்தை அடக்கி ஆண்டனர். அனாசாரங்களை நடப்பித்து நாட்டில் சூத்திரர்களுடன் சேர்ந்துவிட்டபடியால் சமஸ்கிருத ஒலிகளும் சொற்களும் மிகுதியாகக்

கலந்து மொழியின் வடிவத்தைப் பலவிதங்களிலும் மாற்றியிருக்கிறது)"

(ஹெர்மன் குண்டர்ட், 1962:25)

என்பதை

"மலையாளமொழி த்ரமிளம் என்ற தமிழின் ஒரு கிளை மொழியாகும். தெலுங்கு, கர்நாடகம், துளு, குடகு முதலிய கிளைமொழிகளைவிடப் பெரிதும் தமிழர்களின் மொழியிலக்கணத்தோடு ஒத்துவருவதால் அது ஒரு துணை மொழியே. எனினும் பிராமணர் இக்கேரளத்தை அடக்கி ஆண்டு தங்கள் அனாசாரங்களை வழக்கில் கொணர்ந்து இந்நாட்டில் வாழ்ந்த சூத்திரர்களோடு கலந்ததால் சமஸ்கிருதச் சொற்களும் சொற்றொடர்களும் மிகுதியும் புகுந்து மொழியின் மூலவடிவம் பலவிதங்களிலும் மாற்றப்பட்டுள்ளன."

(இளையபெருமாள், 1979:1)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதில் 'சாக(கிளை)', 'சூத்ரம் (சூத்திரம்)' ஆகியசொற்களை வரும் சூழலின் அடிப்படையில் 'கிளைமொழி', 'மொழி இலக்கணம்' எனவும், "நாட்டிலெ " என்பதை "இந்நாட்டில் வாழ்ந்த" என விளக்கமாகவும், "நடப்பாக்கி" என்பதை "வழக்கில் கொணர்ந்து" என நல்ல தமிழ்நடையிலும், "நுழஞ்ஞுவந்நு" என்பதை "புகுந்து" என வடிவத்தைச் செறிவாக்கியும் மொழிபெயர்ப்பை அமைத்துள்ளார். ஆனால் "ஸம்ஸ்க்றுத சப்தங்ஙளும் வாசகங்ஙளும் வளரெ நுழஞ்ஞு வந்நு பாஷயுடெ ரூபத்தெ பலவிதத்திலும் மாற்றியிரிக்குந்நு" என்ற செய்வினை அமைப்பில் உள்ள தொடரை "சமஸ்கிருதச் சொற்களும் சொற்றொடர்களும் மிகுதியும் புகுந்து மொழியின் மூலவடிவம் பலவிதங்களிலும் மாற்றப்பட்டுள்ளன" எனச் செயப்பாட்டுவினை அமைப்பில் மாற்றியுள்ளார்.

2. திறனாய்வு

1. திறனாய்வு இலக்கிய மொழிபெயர்ப்பின் தன்மைபற்றிய மதிப்பீடு

'மார்க்ஸிய அழகியல் ஒரு முன்னுரை' என்ற நூலை அடிப்படையாகக் கொண்டு செய்யப்பட்டுள்ளது.

1. மார்க்ஸிய அழகியல் ஒரு முன்னுரை

சச்சிதானந்தன் மாத்ருபூமி வாரஇதழில் எழுதிய கட்டுரைகள் அடங்கிய இந்நூலின் மொழிபெயர்ப்பாளர் சுகுமாரன் (1985) ஆவார். இம்மொழிபெயர்ப்பு மூலத்தின் கருத்தை அப்படியே தருவதாக உள்ளது. சான்றாக,

"பத்றப்றவர்த்தன காலத்தெ மார்க்ஸின்றெ மற்றொரு கண்டுபிடித்தம் பாஉ஢யெ ஸம்பந்திச்சதாணு. மிகவும் ம்ருதுலவுமாய பிம்பங்ஙளில் ஸம்சாரிக்குந்ந பழய கவிகளுடெ பாஉ஢ பருஉ஢மாய ஆதுனிகயதார்த்யம் அவதரிப்பிக்கான் அபர்யாப்தமாணெந்நும் அதினு சக்தமாய ஒரு புதிய பாஉ஢ வேணமெந்நும் அத்தேகம் பறயுந்நு (இதழ்ப்பணி செய்தகாலத்தில் மார்க்ஸின் மற்றொரு கண்டுபிடிப்பு மொழியைப் பற்றியதாகும். நிதானமானதும் மென்மையானதுமான பிம்பங்களில் பேசும் பழைய கவிஞர்களின் மொழி மென்மையற்ற புதிய உண்மைகளை வெளிப்படுத்தப்போதியதன்று என்றும், அதற்கு வலிமையுள்ள ஒரு புதுமொழி வேண்டும் என்றும் அவர் குறிப்பிடுகின்றார்)."

(சச்சிதானந்தன், 1987:20)

என்பதை

"பத்திரிகைத்துறையில் ஈடுபட்டிருந்த காலத்தில் மார்க்ஸ் முன்வைத்த இன்னொரு கண்டுபிடிப்பு மொழியைச்சார்ந்தது. நிதானமாகவும், மென்மையான படிமங்களிலும் பேசுகின்ற பழைய கவிஞர்களின் மொழி கடினமான நவீன யதார்த்தங்களை வெளிப்படுத்த இயலாதது என்றும், அதற்கு வலுவான ஒரு புதிய மொழி தேவை என்றும் குறிப்பிடுகிறார்"

(சுகுமாரன், 1985:15)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதில் "பத்றப்றவர்த்தன காலத்தெ" என்பதை "பத்திரிகைத்துறையில் ஈடுபட்டிருந்த காலத்தில்" எனவும், "மார்க்ஸின்றெ மற்றொரு கண்டுபிடித்தம்" என்பதை "மார்க்ஸ் முன்வைத்த இன்னொரு கண்டுபிடிப்பு" எனவும், மூலத்தின் கருத்தை வெளிப்படுத்துவதற்கேற்ற பெறுமொழி இணைகளைப் பயன்படுத்தி மொழிபெயர்ப்பை அமைத்துள்ளார்.

தருமொழிவடிவத்தின் நடையமைப்பிலிருந்து பெறுமொழிவடிவம் மாறுபட்டு அமைகின்ற இடங்களும் சுகுமாரனின் மொழிபெயர்ப்பில் காணப்படுகின்றன. சான்றாக,

"ஒரோ விஷயத்திலும் தங்ஙளுடெ ஷைலியுடெ ஒரு விளம்பரத்தினுள்ள அவஸரம் கண்டெத்துந்நவர் கேவலம் ரூபபரமாய ஈ ப்றவர்த்தனம் கொண்டு தன்னெ தலதிரிஞ்ஞ ஒருள்ளடக்கத்திலேக்கு நயிக்கப்பெடும். ஈ தலதிரிஞ்ஞ உள்ளடக்கம் திரிச்சு அதின்றெ ரூபத்தில் வைக்றுதத்தின்ற முத்றயர்ப்பிக்குகயும் செய்யும் (ஒவ்வொரு செய்தியிலும் தங்களுடைய நடையின் ஒரு விளம்பரத்திற்கான வாய்ப்பைக் கண்டடைபவர் வெறும் வடிவநிலையிலான இந்தச் செயலைக் கொண்டுதான் மாறுபாடான ஒரு உள்ளடக்கத்திற்கு இட்டுச்செல்லப்படுவர். இந்த மாறுபாடான உள்ளடக்கம் திரும்ப அதன் வடிவத்தில் வேறுபாட்டின் முத்திரையைப் பொறிக்கவும் செய்யும்)."

(சச்சிதானந்தன், 1987:21)

என்பதை

"ஒவ்வொரு விஷயத்திலும் தங்களுடைய நடையை (உருவத்தை) விளம்பரப்படுத்த வாய்ப்பைக் காண்பவர் வெறும் உருவரீதியான இந்தச் செயல்மூலம் குழப்பமான ஓர் உள்ளடக்கத்திற்கு இட்டுச்செல் லப்படுவர். இந்தக் குழப்பமான உள்ளடக்கம் எதிர்மறையாக அதன் உருவத்தில் விகாரமாகத் தோன்றும்.

(சுகுமாரன், 1985:16)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதில் "தங்ஙளுடெ ஊடீஸியுடெ ஒரு விளம்பரத்திலுள்ள அவஸரம் கண்டெத்துந்நவர்" என்பதை "தங்களுடைய நடையை விளம்பரப்படுத்த வாய்ப்பைக் காண்பவர்" எனவும், "தலதிரிஞ்ஞ ஒருள்ளடக்கத்திலேக்கு" என்பதை "குழப்பமான ஓர் உள்ளடக்கத் திற்கு" எனவும், "திரிச்சு அதின்றெ ரூபத்தில் வைக்ருதத்தின்ற முத்ரயர்ப் பிக்குகயும் செய்யும்" என்பதை "எதிர்மறையாக அதன் உருவத்தில் விகார மாகத் தோன்றும்" எனவும் மூலத்தின் நடையமைப்பை மாற்றி மொழிபெயர்ப்பை அமைத்துள்ளார்.

2. இதழ்களின் வாயிலாக வெளிவந்த திறனாய்வுக் கட்டுரைகளான மக்கள் விருப்ப இலக்கியமும் அறிவாளி இலக்கியமும், குமாரனாசானும் சைவசித்தாந்தமும் ஆகியனவற்றின் மொழிபெயர்ப்பு பற்றிய மதிப்பீட்டையும் பின்வருமாறு அமைக்கலாம்.

1. <u>மக்கள் விருப்ப இலக்கியமும் அறிவாளி இலக்கியமும்</u>

இது பெஞ்சமின் என்பவரின் "ஜனப்ரிய சாகித்யவும் ப்ரபுத்தருடெ ஸாகித்யவும்" என்ற கட்டுரைக்கு டி. தேவதாஸ், கி. நாச்சிமுத்து (1990) ஆகியவர்கள் செய்துள்ள மொழிபெயர்ப்பாகும். இப்பெயர்ப்பு மூலத்திற்கு சமமான அளவில் அமைந்துள்ளது. சான்றாக,

"வாஸ்த்தவத்தில் வாயிக்கான் கொள்ளாவுந்ந ஸாகித்ய முண்டாகுந்நில்லெந்ந ஸத்யதயன்றெ பரிவேதனம் திகச்சும் அர்த்தவத்தாணு. அனுகரணவும் மனம் மடிப்பிக்குந்ந தார்சனிக நாட்யவும் ஸகிக்காவுந்நதிலதிகமாயிரிக்குந்நு. பாவுகத்வமாத்ரம் ஸ்வப்பனம் கண்டுகொண்டு ப்ரான்ஸிலேக்கும் லாத்றின் அமேரிக்கயிலேக்கும் ப்ரத்க்ஷாபரிதராயி நோக்குந்நதினு பகரம் தன்னிலேக்கும்

தாஜுள்பெடுந்ந ஸமூகத்திலேக்கும், தனிக்கு ப்றதிகரிக்கேண்ட ஜீவிதத்திலேக்கும் நோக்கான் நம்முடெ எழுத்துகார் தய்யாறாகணம். றெடிமெய்டு தர்சனங்ஙள் கோரிப்பகரானுள்ள நிர்ஜீவ பாத்றங்ஙளோ அவ ஆவிஉ்கரிக்கானுள்ள ஸமவாக்யங்ஙளோ அல்ல ஸாகித்ய மெந்நங்கீகரிக்கணம். ஏது ஸாகித்யத்தினுமுண்டு அநிவார்யமாயொருப்றதேசிகத்தவம். அதம்கீகரிக்காதெ மௌலிகதயுள்ள ஸாகித்ய முண்டாவில்ல (உண்மையில் வாசிப்பதற்கேற்ற இலக்கியம் உண்டாகவில்லை என்ற நல்ல வாசகனுடைய முறையீடு முழுதும் பொருள் நிறைந்ததாகும். போலச்செய்தலும் மனம் மடிக்கச்செய்யும் தத்துவக்கூத்தும் பொறுத்துக்கொள்வதற்கும் அதிகமாக உள்ளன. இரசனை மாற்றத்தைக் கனவு கண்டுகொண்டு பிரான்சிலும் லத்தீன் அமெரிக்காவிலும் ஆவல்கொண்டவராய்ப் பார்ப்பதற்குப் பதிலாக தன்னிலும் தானுட்படுகின்ற சமூகத்திலும் தனக்குப் பயன்தரவேண்டிய வாழ்க்கையிலும் பார்ப்பதற்கு நம்முடைய எழுத்தாளர்கள் தயாராகவேண்டும். றெடிமெய்டு தரிசனங்களை அள்ளிப்பரிமாறுவதற்குரிய உயிரற்ற பாத்திரங்களோ அவற்றைச் சொல்வதற்குரிய சமவாக்கியங்களோ அல்ல இலக்கியம் என்று ஏற்றுக்கொள்ளவேண்டும். எந்த இலக்கியத்திற்கும் உண்டு விளக்கமுடியாத ஒரு வட்டாரச் சாயல். அதை ஏற்றுக்கொள்ளாமல் அசலான இலக்கியம் உண்டாகாது)"

(பெஞ்சமின், 1988:18-19)

என்பதை

"உண்மையில் வாசிப்பதற்கேற்ற இலக்கியம் உண்டாகவில்லை என்னும் நல்ல வாசகனுடைய முறையீடு முழுதும் பொருள் நிறைந்ததாகும், போலச்செய்தலும், மனம்வெறுக்கச் செய்கின்ற தத்துவத்திருக்கூத்தும் பொறுத்துக் கொள்வதற்கு அதிகமாக இருக்கிறது. இலக்கிய இரசனை மாற்றத்தைக் கனவு கண்டுகொண்டு பிரான்சையும் லத்தீன் அமெரிக்காவையும் ஆவலோடு பார்ப்பதற்குப் பதிலாக தன்னையும் தான் உட்பட்ட சமூகத்தையும் தான் எதிர்நோக்கவேண்டிய வாழ்க்கையையும் உற்றுநோக்க நமது எழுத்தாளர்கள் ஆயத்தமாக வேண்டும்.

ரெடிமெய்டு தரிசனங்களோ (ஆயத்த தரிசனங்கள்) வாரிவிளம்புவதற்குரிய உயிரற்ற பாத்திரங்களோ அவற்றைப் படைப்பதற்குரிய சமவாக்கியங்களோ அல்ல இலக்கியம் என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும். எந்த இலக்கியத்திற்கும் விளக்க இயலாத ஒரு வட்டாரச் சாயல் உண்டு. அதை அங்கீகரிக்காமல் ஒரிஜினல் இலக்கியம் (அசலான) உண்டாகாது."

(டி. தேவதாஸ், கி. நாச்சிமுத்து,1990:6)

என மொழிபெயர்த்துள்ளதைச் சுட்டிக்காட்டலாம். இதில் "பாவுகத்துவ மாற்றம்" என்பதை "இலக்கிய இரசனை மாற்றம்" எனவும், "நோக்கான்" என்பதை "உற்றுநோக்க" எனவும் "இலக்கிய", "உற்று" ஆகிய பொருட்கூறுகளை முறையே சேர்த்தும், 'ப்ரதீக்ஷாபரிதராயி (ஆவல்கொண்டவராய்)' என்பதை 'ஆவலோடு' என செறிவுசெய்தும், "உட்பெடுந்ந" என்ற நிகழ்கால வடிவத்தை "உட்பட்ட" என இறந்தகால வடிவமாக்கியும், "தனிக்கு ப்ரதிகரிக்கேண்ட ஜீவிதத்திலேக்கும்" என்பதை "தான் எதிர்நோக்கவேண்டிய வாழ்க்கையையும்" என மாற்றிணையாகக் கொண்டும் மொழிபெயர்ப்பை அமைத்துள்ளனர்.

2. குமாரனாசானும் சைவசித்தாந்தமும்

டி. பாஸ்கரனின் 'குமாரனாசானும் சைவசித்தாந்தவும்' என்ற கட்டுரையை டி. தேவதாஸ், கி. நாச்சிமுத்து (1990) ஆகியவர்கள் மொழிபெயர்த்துள்ளனர். இப்பெயர்ப்பு மூலத்திற்குசமமான அளவில் உள்ளது.

"ஈ லோகவும் ஞானும் ஈஸ்வரஸ்ருஷ்டியாணெந்ந ஆசயம் வளரெ ஸாதாரணமாணு. எந்நால் எனிக்கு அறிவுண்டாக்கான் வேண்டி ஜ்ஞானேந்திரியங்ஙள் தந்நும், துர்மார்க்கத்தில் நிந்நு பிந்திரிப்பிக்குந்நதும் ஈஸ்வரனாணெந்ந பக்ஷம்

சைவசித்தாந்தத்தில் உள்ளதத்றே (இந்த உலகமும் நானும் கடவுளின் படைப்புத் தான் என்ற கருத்து மிகவும் சாதாரணமானதாகும். ஆனால் எனக்கு அறிவை உருவாக்குவதற்காக ஐம்புலன்களைத் தந்தும், என்னை சன்மார்க்கத்தில் நடத்து வதும், தீயவழியிலிருந்து பின்திரும்பச்செய்வதும் கடவுள்தான் என்பது சைவசித்தாந் தத்தில் மட்டும் உள்ள சிறப்பாகும்)."

(டி. பாஸ்கரன், 1989:146)

என்பதை

"இந்த உலகமும் நானும் கடவுளின் படைப்புத்தான் என்ற கருத்து மிகவும் சாதாரணமானதாகும். ஆனால் எனக்கு அறிவை உருவாக்குவதற்காக ஐம்புலன்களைத்தந்ததும், என்னை நன்னெறியில் நடத்துவதும், தீ நெறியிலிருந்து மீட்பதும் கடவுள்தான் என்ற கருத்து சைவசித்தாந்தத்தில் உள்ளதாகும்"

(டி. தேவதாஸ், கி. நாச்சிமுத்து,
1990 அ:79)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதில் "ஸன்மார்க்கம்" என்பதை "நன்னெறி" எனவும், "துர்மாக்கம்" என்பதை "தீநெறி" எனவும் நல்ல தமிழ்ச் சொற்களாக்கியும், "பின்திரிப்பிக்குந்நதும்" என்பதை "மீட்பதும்" என மாற்றிணையாகக் கொண்டும் மொழிபெயர்ப்பை அமைத்துள்ளனர். ஆனால் "சைவசித்தாந்தத்தில் உள்ள தத்றே" என்பதை "சைவசித்தாந்தத்தில் மட்டுமே உள்ள சிறப்பாகும்" என மொழிபெயர்த்திருப்பின் சிறப்பாக அமைந்திருக்கும்.

தருமொழிவடிவத்தில் இடையிடையே காணப்படும் சான்றுச்செய்யுள்களை அவ்வாறே மூலத்திற்குச் சமமான அளவில் மொழிமாற்றியுள்ளனர். சான்றாக குமாரனாசானின் சிவதோத்திர மாலையிலிருந்து மேற்கோளாகக் கொள்ளப்பட்ட

"கல்க்கண்டமே கதளிதன் பழமே பழத்தில்

முக்கும் மத்றுத்த மதுவே மம தம்புராவே

சொல்க்கொண்ட சாருமறயாம் தவி முந்திரிக்கொம்

பொக்கெக்குலச்ச கனியே கனியேணமென்னில்

(கற்கண்டே கதளிதன் பழமே பழத்தில்

நிறைந்த இனித்த மதுவே என் தலைவனே

சொற்கொண்ட அழகிய மறையாம் தனித் திராட்சைக்கிளை

யெல்லாம் காய்த்த கனியே கனியவேண்டும் என்னில்)"

(டி. பாஸ்கரன், 1984:148)

என்ற செய்யுளை

"கல்கண்டே கதளியின்பழமே பழத்தில்

நிறைந்த இனித்த மதுவே என் தலைவனே

புகழ்சான்ற அழகிய மறையாம் தனித்திராட்சைக்கொம்

பெல்லாம் காய்த்த கனியே கனிக என்னில்"

(டி. தேவதாஸ், கி. நாச்சிமுத்து, 1990அ:81)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதில் "சொல்க்கொண்ட" என்பதை அதன் கருத்தின் அடிப்படையில் "புகழ் சான்ற" எனவும், "கனியேணம்" என்பதை வியங்கோளமைப்பில் "கனிக" எனவும் மொழிமாற்றியுள்ளனர்.

இம்மொழிபெயர்ப்பு தருமொழி நடையமைப்பைப் பெரும்பாலும் பின்பற்றிச்செல்வதால் பெறுமொழி இயல்பிலிருந்து சற்று விலகியதுபோன்று தோன்றுகிறது.

3. வரலாறு

வரலாற்று நூல்களின் மொழிபெயர்ப்பு பற்றிய மதிப்பீடு பண்டைய கேரளம், மலையாள இலக்கிய வரலாறு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு செய்யப் பட்டுள்ளது.

1. பண்டைய கேரளம்

இளங்குளம் குஞ்ஞன்பிள்ளையின் "கேரளம் அஞ்சும் ஆறும் சதங்ஙளில்" என்ற நூலின் மொழிபெயர்ப்பாக "பண்டையகேரளம்" என்னும் வரலாற்று நூல் உள்ளது. இதன் மொழிபெயர்ப்பாளர் சி. ஜேசுதாசன் (1970) ஆவார். இம்மொழிபெயர்ப்பு சரியாக மூலத்தை அப்படியே பெயர்த்துத் தருவதாக உள்ளது. சான்றாக

"தலவன் மக்களாணு தமிழிலெ ப்றேமகானங்ஙளில் பலப்போழும் நாயிகா நாயகன்மார். அல்லாதுள்ளவரும் காவியங்ஙளில் வரும்போள் தலவனும் தலவியும் தன்னெ. நாயகன் எந்நும் நாயிக எந்நுமுள்ள ஸம்ஸ்க்றுத பதங்ஙளுடெ நேர்தர்ஜ்ஜமயாணு ஈ வாக்குகள். நாயகன், நாயகி எந்ந பதங்ஙள் கொண்டும் அவரெ நிர்த்தேசிக்கும். இருவர்க்கும் தோழனும் தோழியும் கூடியே தீரு எந்நுண்டு. அதும் ஸம்ஸ்க்றுத காவியங்ஙளுடெ அநுகரணமாணு (தலைவனின் மக்கள்தான் தமிழ்க்காதல் பாடல்களில் பலவேளைகளிலும் நாயகி, நாயகர்கள். அல்லாதவர்களும் காவியங்களில் வரும்போது தலைவனும் தலைவியும் தான். 'நாயகன்' என்றும் 'நாயிக' என்றுமுள்ள சமஸ்கிருதச்சொற்களின் நேர்மொழிபெயர்ப்புகள் தான் இச்சொற்கள். நாயகன், நாயகி என்ற சொற்களாலும் அவர்களைக் குறிப்பிடுவர். இருவருக்கும் தோழனும் தோழியும் இருந்தே தீரும் என்பது மரபு. இதுவும் சமஸ்கிருத கவிதைகளின் போலச்செய்தலாகும்)"

(இளங்குளம் குஞ்ஞன்பிள்ளை, 1967:30)

என்பதை

"தலைவனுடைய மக்களே அகப்பாடல்களில் வரும் தலைவனும் தலைவியும். மற்றவர்களும் பாடல்களில் வரும்போது தலைவனும் தலைவியும் தாம். நாயகன் நாயகி என்ற வடமொழிப்பதங்களின் மொழிபெயர்ப்பே இச்சொற்கள். நாயகன், நாயகி என்ற சொற்களாலும் அவர்களைக் குறிப்பதுண்டு. இருவருக்கும் தோழனும் தோழியும் இருந்தே ஆகவேண்டும் என்பது மரபு. இதுவும் வடமொழிப் பாடல்களின் எதிரொலியே"

(சி. ஜேசுதாசன், 1970:31)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதில் "ப்றேமகானங்ஙள்" என்பதை "அகப்பாடல்கள்" என்றும், "நாயிகா" என்பதை "தலைவி" என்றும், "நாயகன்" என்பதை "தலைவன்" என்றும், "காவியம்" என்பதை "பாடல்" என்றும், "சமஸ்க்ருதம் " என்பதை "வடமொழி" என்றும் தமிழிலக்கிய வழக்கிற்கேற்ப மாற்றியுள்ளார். மேலும் "தமிழிலெ ப்றேமகானங்ஙளில்" என்பதில் "தமிழ்" என்ற சொல்லை நீக்கி "அகப்பாடல்களில்" எனவும், "நேர்தர்ஜ்ஜம" என்பதில் "நேர்" என்ற சொல்லை நீக்கி "மொழிபெயர்ப்பு" எனவும் பெறுமொழிவடிவத்தை அமைத்துள்ளார்.

சி. ஜேசுதாசன் கருத்தடிப்படையில் மூலத்தின் நடையமைப்பை மாற்றி மொழிபெயர்ப்பை அமைத்துச்செல்கின்ற பகுதிகளும் உள்ளன. சான்றாக

"தொழிலினெயும் திண (ஸ்தலம்)களேயும் ஆஸ்பதமாக்கியுள்ள ஜாதி விபாகமே அந்நுண்டாயிருந்நுள்ளு. குறிஞ்ஞி நிலத்து தாமஸிச்சிருந்நவரெ புனவர், குறவர், ஆடவர், கானவர் எந்நெல்லாமாணு விளிச்சிருந்நது. குறவருடெ தலவனெ நாடன் எந்நும் வெற்பன் எந்நும் ஸ்த்ரீகளெ கொடிச்சியர் எந்நும் பறஞ்ஞிருந்நு. சேயோன் (சுவந்நவன், முருகன்) ஆயிருந்நு அவருடெ தைவம்.

(தொழிலையும் திணைகளையும் அடிப்படையாகக்கொண்ட சாதிப்பிரிவு மட்டுமே

அன்றிருந்தது. குறிஞ்சி நிலத்தில் உள்ளவர்களை புனவர், குறவர், ஆடவர், கானவர் என்றெல்லாம் அழைத்தனர். குறவர்களின் தலைவனை நாடன் என்றும் வெற்பன் என்றும் பெண்களைக் கொடிச்சியர் என்றும் குறிப்பிட்டனர். சேயோன் (சிவந்தவன், முருகன்) தான் அவர்களின் கடவுள்)"

(இளங்குளம் குஞ்ஞன்பிள்ளை, 1967:20)

என்பதை,

"தொழிலையும் நிலத்தையும் வைத்துத்தான் அன்று மக்களைச் சாதிகளாகப் பிரித்திருந்தார்கள். குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்திருந்தவர்கள் புனவர், குறவர், ஆடவர், கானவர் எனப்பட்டார்கள். குறவர் தலைவனை நாடன், வெற்பன் என்றனர். பெண்களைக் கொடிச்சியர் என்று கூறினார்கள். அவர்கள் தெய்வம் சேயோன் (சிவந்தவன், முருகன்)."

(சி. ஜேசுதாசன், 1970:20)

என மொழிபெயர்த்துள்ளமையைச் சுட்டிக்காட்டலாம். இதில் "தொழிலினையும் திண (ஸ்தலம்)களேயும் ஆஸ்பதமாக்கியுள்ள ஜாதிவிபாகமே அந்நுண்டாயிருந்நது" என்பதை "தொழிலையும் நிலத்தையும் வைத்துத்தான் அன்று மக்களைச் சாதிகளாகப் பிரித்திருந்தார்கள்" என கருத்தின் அடிப்படையிலும், "எந்நெல்லாமாணு விளிச்சிருந்நு" என்பதை "எனப்பட்டார்கள்" என நடையமைப்பைச் செறிவு செய்தும், "குறவருடெ தலவனெ நாடன் எந்நும் வெற்பன் எந்நும், ஸ்த்ரீகளெ கொடிச்சியர் எந்நும் பறஞ்ஞிருந்நு" என்பதை "குறவர் தலைவனை நாடன், வெற்பன் என்றனர். பெண்களைக்கொடிச்சியர் என்று கூறினார்கள்" என இருவாக்கியங்களாகப் பிரித்தும், "சேயோன் ஆயிருந்நு அவருடெ தைவம்" என்பதை "அவர்கள் தெய்வம் சேயோன்" என சொல்வரிசை முறையை மாற்றியும் மொழிபெயர்ப்பை அமைத்துள்ளார்.

இவற்றின் அடிப்படையில் இம்மொழிபெயர்ப்பு தருமொழிவடிவத்தை அதற்குச் சமமான இணைகளால் மாற்றித்தருவதாக உள்ளது எனலாம்.

2. மலையாள இலக்கியவரலாறு

பி.கெ. பரமேசுவரன் நாயரின் 'மலயாள சாகித்யசரித்றம்' என்ற நூலை 'மலையாள இலக்கியவரலாறு' என்னும் தலைப்பில் இராமகோபிநாதன் (1968) மொழிபெயர்த்துள்ளார். இப்பெயர்ப்பு மூலத்தின் கருத்தை அடிப்படையாகக்கொண்டு அமைக்கப்பட்டதாக உள்ளது. சான்றாக,

"ஸம்ஸ்க்றுதத்தினு கேரளபாஷயுடெமேல் உண்டாய ஸ்வாதீன சக்தியும் வளரெ ப்றாசீனகாலம் முதல்க்குதன்னெ ஆரம்பிச்சு. செந்தமிழ் காலத்தினு வளரெ முன்புதன்னெ பாண்டிநாட்டு தமிழிலேக்கு ஸம்ஸ்க்றுதம் வ்யாபிச்சு கழிஞ்ஞிருந்நுவெந்நு வேணம் விசாரிக்கான். பக்ஷே கேரளத்தில் ஸம்ஸ்க்றுதஸம்க்றமணத்தினு உேறுது பூதமாயி கூடுதல் ப்றத்யேகமாய ஒரு சாகசர்யம் உண்டாயி. அது நம்பூதிரிமாருடெ ஆகமனமாயிருந்நு (சமஸ்கிருதத்திற்கு கேரளமொழியின் மேல் ஏற்பட்ட ஆதிக்கம் மிகவும் பழையகாலம் முதலே தொடங்குகிறது. செந்தமிழின் காலத்திற்கு மிகவும் முன்பே பாண்டிநாட்டுத்தமிழில் சமஸ்கிரும் கலந்திருந்தது என்றுதான் எண்ணவேண்டும். ஆனால் கேரளத்தில் சமஸ்கிருத கலப்பிற்குக் காரணமாக மிகுதியும் சிறப்புத்தன்மைவாய்ந்த ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. அது நம்பூதிரிமார்களின் வருகையாக இருந்தது)"

(பி.கெ. பரமேசுவரன்நாயர், 1989:16-17)

என்பதை

"கேரள மொழியின்மீது மிகப்பழைய காலத்திலிருந்தே சமஸ்கிருதம் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியிருக்கிறது. செந்தமிழ் உருவாவதற்கு வெகு காலத்திற்கு முன்பே பாண்டிநாட்டுத் தமிழிலும் சமஸ்கிருதம் புகுந்திருக்கவேண்டும். கேரளத்தைப் பொறுத்தவரையிலோ நம்பூதிரிகளின் வருகையால் சமஸ்கிருதக்கலப்பிற்கு வெகு சாதகமான ஒரு தனிச்சூழ்நிலையே உருவாயிற்று"

(இராமகோபிநாதன், 1984:18)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதில் "ஸம்ஸ்க்ருதத்திநு கேரளபாஷயுடெமேல் உண்டாய ஸ்வாதீன சக்தியும் வளரெ ப்றாசீன காலம் முதல்க்குதன்னெ ஆரம்பிச்சு" என்பதை "கேரள மொழியின் மீது மிகப்பழைய காலத்திலிருந்தே சமஸ்கிருதம் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியிருக்கிறது" என சொல் வரிசை முறையை மாற்றியும், "பாண்டிநாட்டு தமிழிலேக்கு ஸம்ஸ்க்றுதம் வ்யாபிச்சு கழிஞ்ஞிருந்நுவெந்நு வேணம் விசாரிக்கான்" என்பதை "பாண்டிநாட்டுத்தமிழிலும் சமஸ்கிருதம் புகுந்திருக்கவேண்டும்" என நடைச்செறிவு செய்தும், "பக்ஷே கேரளத்தில் ஸம்ஸ்க்றுத ஸம்க்றமணத்திநு உேறதுபூதமாயி கூடுதல் ப்றத்யேகமாய ஒரு சாகசர்யம் உண்டாயி. அது நம்பூதிரிமாருடெ ஆகமனமாயிருந்நு" என்பதை "கேரளத்தைப் பொறுத்த வரையிலோ நம்பூதிரிகளின் வருகையால் சமஸ்கிருதக் கலப்பிற்கு வெகு சாதகமான ஒரு தனிச் சூழ்நிலையே உருவாயிற்று" என இருவேறு வாக்கியங்களை ஒன்றாக இணைத்தும் மொழிபெயர்ப்பை அமைத்துள்ளார்.

இவற்றிலிருந்து இம்மொழிபெயர்ப்பு கருத்தின் அடிப்படையில் பெறுமொழிக்கேற்ப நடைமாற்றம் பெற்றதாக உள்ளது எனலாம்.

3. சொல்லாக்கம்

மலையாளத்திலிருந்து தமிழில் செய்யப்பட்ட புனைகதையல்லாத உரைநடை இலக்கியங்களில் காணப்படும் கலைச்சொற்களை மொழிமாற்றுவதற்காக மேற்கொண்டுள்ள உத்திமுறைகளை 1. நேரடி இணைகளால் மொழிமாற்றியிருத்தல், 2. கடன் மொழிபெயர்ப்பாக அமைத்திருத்தல், 3. ஒலிபெயர்த்திருத்தல், 4. கலவை வடிவாக்கியிருத்தல் என வகைப்படுத்தி விளக்கலாம்.

1. நேரடி இணைகளால் மொழிமாற்றியிருத்தல்

தருமொழியில் அமைந்த கலைச்சொற்களை அதற்கு சமமான பெறுமொழி இணைகளால் மொழிமாற்றியுள்ளமையை இவ்வகையில் அடக்கலாம். சான்றுகளாக கேரளபாணிய கலைச்சொற்கள் சிலவற்றிற்கு மா. இளையபெருமாள் செய்துள்ள மொழிபெயர்ப்புகளைச் சுட்டிக்காட்டலாம்.

அட்டவணை எண்.6:1, கேரளபாணிணிய கலைச்சொற்கள் சிலவற்றை மா. இளைய பெருமாள் நேரிணைகளால் மொழிமாற்றியுள்ளமை

இராஜராஜவர்மா (கேரளபாணிணிய மூலம்)	இளையபெருமாள் (கேரளபாணிணிய தமிழ்ப்பெயர்ப்பு)
அனுனாஸிகம் (ப.53)	மெல்லினம் (ப.65)
ஆகமம் (ப.85)	தோன்றல் (ப.101)
ஆதேசம் (ப.85)	திரிதல் (ப.101)
ஊஷ்மாவு (ப.55)	உரசினம் (ப.65
க்றுஸ்வம் (ப.55)	குறில் (ப.65)
க்றுதிகள் (ப.8)	வினைகள் (ப.12)
த்வித்வம் (ப.85)	இரட்டல் (ப.101)
தீர்க்கம் (ப.55)	நெடில் (ப.65)
நிபாதம் (ப.8)	இடைச்சொல் (ப.12)
ப்றக்றுதி (ப.113)	பகுதி (ப.134)
மத்யமம் (ப.55)	இடையினம் (ப.65)
முற்றுவின (ப.20)	வினைமுற்று (ப.24)
வ்யஞ்ஜனம் (ப.55)	மெய் (ப.65)
விக்றுதி (ப.113)	விகுதி (ப.134)
ஸ்வரம் (ப.55)	உயிர் (ப.65)
ஸ்வரஸந்தி (ப.84)	உயிர்ப்புணர்ச்சி (ப.101)
ஸர்வநாமம் (ப.8)	பதிற்பெயர் (ப.13)

மேற்குறிப்பிட்டுள்ள கலைச்சொற்கள் மலையாளமொழியில் வழங்கும் பொருளுக்கு இணையான தமிழ்ச்சொற்களால் மொழிமாற்றப்பட்டுள்ளன.

2. கடன் மொழிபெயர்ப்பாக அமைத்திருத்தல்

சொற்களை அவற்றின் கருத்தை அடிப்படையாகக்கொண்டு வடிவமாற்றமின்றி மொழியை மட்டும் மாற்றியுள்ளமையை இவ்வகையில் அடக்கலாம். சான்றுகளாக கேரளபாணினியக் கலைச்சொற்கள் சிலவற்றிக்கு மா. இளையபெருமாள் செய்துள்ள கடன் மொழிபெயர்ப்புகளைச் சுட்டிக்காட்டலாம்.

அட்டவணை எண். 6.2, கேரளபாணினிய கலைச்சொற்கள் சிலவற்றுக்கு மா. இளையபெருமாள் செய்துள்ள கடன் மொழிபெயர்ப்புகள்

இராஜராஜவர்மா (கேரளபாணினிய மூலம்)	இளையபெருமாள் (கேரளபாணினிய தமிழ்ப்பெயர்ப்பு)
அனுனாஸிகாதிப்ரஸரம் (ப.18)	மெல்லினமாக்கல் (ப.22)
பதமத்யஸந்தி (ப.84)	பதயிடைப்புணர்ச்சி (ப.100)
பதாந்தஸந்தி (ப.84)	பதயிறுதிப்புணர்ச்சி (ப.100)
புருஷபேத நிராஸம் (ப.18)	பால்வேறுபாட்டொழிப்பு (ப.23)
வ்யஞ்ஜனஸ்வரஸந்தி (ப.85)	மெய்உயிர்ப்புணர்ச்சி (ப.101)
வ்யஞ்ஜன ஸந்தி (ப.85)	மெய்ப்புணர்ச்சி (ப.101)
ஸ்வரஸம்வரணம் (ப.18)	உயிர்க்குறுக்கம் (ப.22)

இங்கு மொழிபெயர்ப்பாளர் தருமொழிச்சொற்களின் பொருட்கூறுகள் எவையும் விட்டுப்போகாமல் அவற்றை அப்படியே பெறுமொழியின் சொற்கூறுகளால் மொழிமாற்றியுள்ளார்.

3. ஒலிபெயர்த்திருத்தல்

தருமொழிச்சொற்களை அவற்றின் ஒலியமைப்பின் அடிப்படையில் பெறுமொழி எழுத்துக்களால் எழுதியுள்ளமையை இவ்வகையில் அடக்கலாம். சான்றுகளாக கேரளபாணினிய கலைச்சொற்களுக்கு மா. இளையபெருமாள் செய்துள்ள ஒலி பெயர்ப்புகளைச் சுட்டிக்காட்டலாம்.

அட்டவணை எண்.6:3, கேரளபாணினிய கலைச்சொற்கள் சிலவற்றை மா. இளையபெருமாள் ஒலிபெயர்த்து அமைத்துள்ளமை

இராஜராஜவர்மா (கேரள பாணினிய மூலம்)	இளையபெருமாள் (கேரளபாணினிய தமிழ்ப்பெயர்ப்பு)
அம்க^{3}ப^{4}ம்க^{3}ம் (ப.18)	அங்கபங்கம் (ப.22)
இடநில (ப.113)	இடைநிலை (ப.134)
கோ^{4}ச^{6}ம் (ப.55)	கோஉஷம் (ப.65)
சாரிய (ப.113)	சாரியை (ப.134)
முன்வினயெச்சம் (ப.20)	முன் வினையெச்சம் (ப.24)
ம்ருது^{3} (ப.55)	மிருது (ப.65)
விகாரம் (ப.114)	விகாரம்(ப.134)
ஸந்தி^{4} (ப.114)	சந்தி (ப.134)

இங்கு ஒலிப்பு ஒலி, ஒலிப்பு உயிர்ப்பொலி, உரசொலி ஆகியவற்றை ஒலிப்பில் ஒலியாலும், மகரத்தை ஙகரத்தாலும், உயிரெழுத்தான ருகாரத்தை 'ரு' என்ற உயிர்மெய் யெழுத்தாலும் அகரத்தை சிலவிடங்களில் ஐகாரத்தாலும் தமிழாக்கியுள்ளார். (இவற்றில் இடநில, சாரிய, முன்வினயெச்சம் ஆகியவை

தமிழிலிருந்து மலையாளத்தில் சென்று வழங்கும் சொற்களாகவும், விகாரம், சந்திபோன்றவை தமிழிலும், மலையாளத்திலும் வடமொழியிலிருந்து வந்து வழங்கும் சொற்களாகவும் உள்ளன).

4. கலவை வடிவாக்கியிருத்தல்

தருமொழிச் சொல்லின் ஒரு பகுதியை ஒலிபெயர்த்தும் மற்றொரு பகுதியை மொழிபெயர்த்தும் பெறுமொழிச் சொல்லை உருவாக்கியுள்ளமையை இவ்வகையில் அடக்கலாம். சான்றுகளாக கேரளபாணிய கலைச்சொற்கள் சிலவற்றை மா. இளையபெருமாள் ஒலிபெயர்த்தும் மொழிபெயர்த்தும் தமிழாக்கியுள்ளமையைச் சுட்டிக்காட்டலாம்.

அட்டவணை என்.6:4, கேரளபாணிய கலைச்சொற்களை மா. இளையபெருமாள் கலவை வடிவாக மொழிமாற்றியிருத்தல்

இராஜராஜவர்மா (கேரளபாணிய மூலம்)	இளையபெருமாள் (கேரளபாணிய தமிழ்பெயர்ப்பு)
அதிகரம் (ப.55)	அதிவல்லினம் (ப.65)
காரகப்றகரணம் (ப.156)	காரகவியல் (ப.183)
தத்திதப்றகரணம் (ப.167)	தத்திதவியல் (ப.195)
சந்தியாக்ஷரம் (ப.55)	சந்திஎழுத்து (ப.65)
சமானாக்ஷரம் (ப.55)	சமான எழுத்து (ப.65)

இங்கு 'அதிகரம்' என்பதில்' 'அதி' என்ற முதற்பகுதியை ஒலிபெயர்த்தும் '-கரம்' என்ற இரண்டாவது பகுதியை அதற்கு இணையான 'வல்லினம்' என்ற சொல்லால் மொழிபெயர்த்தும் அமைத்துள்ளார். காரகப்றகரணம், தத்திதப்றகரணம் ஆகியவற்றில் 'காரகம்-', 'தத்திதம் - ' ஆகியப்பகுதிகளை ஒலிபெயர்ப்பிக்

வாயிலாகவும், 'ப்ரகரணம்' என்ற பகுதியை 'இயல்' என்ற சொல்லின் வாயிலாகவும் மொழிமாற்றியுள்ளார். மேலும் சந்தியக்ஷரம், சமானாக்ஷரம் என்பனவற்றில் 'சந்தி'-, 'சமானா-' ஆகியனவற்றை ஒலிபெயர்த்தும் 'அக்ஷரம்' என்பதை 'எழுத்து' என மொழிபெயர்த்தும் பெறுமொழிவடிவத்தை அமைத்துள்ளார். (இவற்றில் ஒலிபெயர்க்கப்பட்ட சொற்கள் பல வடமொழியைச் சார்ந்தனவாகும். இவை தமிழிலும் அவ்வாறே வழங்கிவருகின்றன).

4. <u>மொழிநடை</u>

மலையாளத்திலிருந்து தமிழில் புனைகதையல்லாத உரை நடை இலக்கியங்களை நடைமாற்றம் செய்தும் மொழிபெயர்த்துள்ளனர். இதற்குரிய காரணங்களாக மூலத்தின் இயல்பை மொழிபெயர்ப்பிலும் கொண்டுவர முயற்சித்தல், மாற்றிணைகளைப் பயன்படுத்துதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். நடைமாற்றத்தை அதன் தன்மைகளைக் கருத்தில் கொண்டு 1. விரிவாக்கியிருத்தல், 2. செறிவாக்கியிருத்தல், 3. மாற்றிணைகளைப் பயன்படுத்தியிருத்தல், 4. சொற்களின் வரிசை முறையை மாற்றியிருத்தல், 5. வாக்கியங்களை இணைத்திருத்தல், 6. வாக்கியங்களைப் பிரித்திருத்தல், 7. எதிர் இணைகளைப் பயன்படுத்தியிருத்தல் என வகைப்படுத்தி விளக்கலாம்.

1. <u>விரிவாக்கியிருத்தல்</u>

தருமொழிவடிவத்தைவிடவும் பெறுமொழிவடிவத்தை விரிவாக அமைத்தலை இவ்வகையில் அடக்கலாம். சான்றுகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. "விசாலமாய கழகங்ஙளும், அவய்க்கு கீழில் க்ராமங்ஙள், தேசங்ஙள், கூட்டங்ஙள் எந்நிங்ஙனெயுள்ள அவாந்தர கடகங்ஙளும் உண்டாயிருந்நு. (பரந்த

அளவில் கழகங்களும் அவற்றின் கீழ் கிராமங்கள், தேசங்கள், கூட்டங்கள் என்றிவ் வாறுள்ள உட்பிரிவுகளும் இருந்தன)."

(பரமேசுவரன்நாயர், 1989:2)

என்பதை இராமகோபிநாதன்

"பரந்த நிலப்பகுதிக்குக் கழகங்களும் அவற்றிற்குக் கீழ் கிராமங்கள், தேசங்கள், கூட்டங்கள் என்று பலவாறான சிறு அமைப்புகளும் இருந்தன"

(இராமகோபிநாதன், 1984:2)

என மொழிபெயர்த்துள்ளார். இதில் "விசாலமாய கழகங்ஙளும்" என்பதைப் "பரந்த நிலப்பகுதிக்குக் கழகங்களும்" என "நிலப்பகுதிக்கு" என்ற பொருட்கூறை மிகுதியாகச் சேர்த்து நடைவிரிவாக்கம் செய்துள்ளார்.

2. "ஜனகீய காவ்யவ்ருத்தங்ஙளுடெ பரிணாமமாணு க்ருஷ்ணகாதயிலெ வ்ருத்தமெந்நு காணான் ப்ராயஸமில்ல. வடக்கன் பாட்டுகளில் ப்ரயோகிச்சிட்டுள்ள வ்ருத்தங்ஙளோடு க்ருஷ்ணகாதா வ்ருத்தத்தினுள்ள பந்தம் ஸ்பஷ்டமாணு. வடக்கன் பாட்டுகளில் பலதும் க்ருஷ்ணகாதய்க்கு சேஷம் எழுதப்பெட்ட வயாகாமெங்கிலும் அவயிலெ வ்ருத்தங்ஙளும் சைலிகளும் எத்றயோ பழக்கமேறியவயாயிரிக்காமெந்நு சூசிப்பிச்சு கழிஞ்ஞல்லோ (பொதுமக்களுடைய பாடல்களில் உள்ள யாப்புக்களின் வளர்ச்சிதான் கிருஷ்ணகாதையில் காணப்படும் யாப்பு என்று புரிந்துகொள்ள சிரமமில்லை. வடக்கன்பாட்டுகளில் பயன்படுத்தப்பட்டுள்ள யாப்புக்களோடு கிருஷ்ணகாதையிலுள்ள யாப்பின் உறவு வெளிப்படையானது. வடக்கன் பாட்டுகளில் பலவும் கிருஷ்ணகாதைக்குப்பிறகு எழுதப்பட்டவையாக இருந்தாலும், அவற்றின் யாப்பும் நடையும் எவ்வளவோ பழமையானவையாக இருக்கலாம் என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளதல்லவா)."

(பி.கெ. பரமேசுவரன் நாயர், 1989:52)

என்பதை இராமகோபிநாதன்

"சாமானிய மக்களிடையே வழங்கிவந்த பாட்டின் யாப்பே கிருஉ்ணகாதையின் பாவினமாக வளர்ந்து உருவாகியிருக்கிறது என்பது எளிதில் விளங்கும். வடக்கத்திப் பாட்டுகளில் கையாண்டிருக்கும் பாவினங்களுக்கும் கிருஉ்ணகாதையின் யாப்புக்கும் உள்ள தொடர்பு தெளிவாகப் புலப்படுகிறது. வட்க்கத்திப்பாட்டுகளில் பல கிருஉ்ணகாதைக்குப் பிற்பட்டகாலத்தில் இயற்றப்பெற்றிருக்கவும் கூடும். ஆயினும் அவற்றின் யாப்பும் நடையும் நீண்ட காலத்திய வழக்கால் செம்மைப்பட்டவை என்பது தெளிவு. இக்கருத்தைத்தான் ஏற்கனவே குறிப்பிட்டாயிற்றே"

(இராமகோபிநாதன், 1984:60)

என மொழிபெயர்த்துள்ளார். இங்கு "ஜனகீய" என்பதை "சாதாரணமக்களிடையே வழங்கிவந்த" எனவும், "பரிணாமமாணு" என்பதை "வளர்ந்து உருவாகியிருக்கிறது" எனவும், "எத்றயோ பழக்கமேறிய வயாயிரிக்காம்" என்பதை" நீண்டகாலத்திய வழக்கால் செம்மைப்பட்டவை என்பது தெளிவு" எனவும் "எந்ற சூசிப்பிச்சு கழிஞ்ஞல்லோ" என்பதை "இக்கருத்தைத்தான் ஏற்கனவே குறிப்பிட்டாயிற்றே" எனவும் நடைவிரிவாக்கம் செய்துள்ளார்.

2. செறிவாக்கியிருத்தல்

தருமொழிவடிவத்தை விடவும் பெறுமொழிவடிவத்தின் நடையமைப்பைச் சுருக்கமாக அமைத்தலை இவ்வகையில் அடக்கலாம். சான்றாக

"மிஸ்ற்றிஸவும் ஸிம்போலிஸவும் சங்கரக்குறுப்பின்றெ கவிதயுடெ ரண்டு ப்ரதான லக்ஷணங்ஙளாணெந்நேயுள்ளு. அவகொண்டு மாத்ரம் ஆ கவியுடெ ஸ்வபாவம் பூர்ணமாகுந்நில்ல. மற்றுசில மிஸ்ற்றிக் கவிகளேப்போலெ அமேயமாய ப்ரதிபாஸங்ஙளுடெ வ்யாக்யாதாவு மாத்ரமல்ல குறுப்பு. ஸாமான்ய ஜீவிதம் தன்னெயாயிருந்நு மிக்கவாறும் அத்தேகத்தின்றெ கவிதாவிஷயம் (மிஸ்ட்டிசமும் சிம்பாலிசமும் சங்கரக்குறுப்புவின் கவிதையின் இரண்டு முக்கியமான தன்மைகள் தான். ஆனால்

அவற்றைக்கொண்டு மட்டும் அந்த கவிஞரின் தன்மை முழுமையாவதில்லை. மற்றுசில மிஸ்டிக் கவிஞர்களைப்போல தெளிவற்ற எண்ணங்களின் விளக்கவுரைகாரர் மட்டுமல்ல குறுப்பு. பொதுவாழ்க்கைத்தான் பெரும்பாலும் அவருடைய கவிதைப்பொருள்)."

(பரமேசுவரன் நாயர், 1989:242)

என்பதை இராமகோபிநாதன்,

"மிஸ்டிஸிஸம், ஸிம்பாலிஸம் ஆகியஇரண்டும் சங்கரக்குறுப்புவின் கவிதையில் காணும் இரு இயல்புகள் என்பதோடு சரி. அவர் கவிதையின் திறன் அத்துடன் நிற்பதன்று. மனதில் தோன்றும் தெளிவற்ற நிழலாட்டங்களுக்குப் பொருள்தேடும் கவிஞர் அல்ல சங்கரக்குறுப்பு. அன்றாட வாழ்க்கையே அவர் கவிதைக்குப் பெரும்பாலும் பொருளாகிறது".

(இராமகோபிநாதன், 1984:280)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதில் "அவகொண்டு மாத்ரம் ஆ கவியுடெ ஸ்வபாவம் பூர்ண்ணமாகுந்நில்ல" என்பதை "அவர் கவிதையின் திறன் அத்துடன் நிற்பதன்று" எனவும், "மற்றுசில மிஸ்ற்றிக் கவிகளேப்போலெ அமேயமாய ப்ரதிபாஸங்ஙளுடெ வ்யாக்யாதாவு மாத்ரமல்ல குறுப்பு" என்பதை "மனதில் தோன்றும் தெளிவற்ற நிழலாட்டங்களுக்குப் பொருள்தேடும் கவிஞர் அல்ல சங்கரக்குறுப்பு" எனவும் நடைச்செறிவு செய்துள்ளார்.

3. <u>மாற்றிணைகளைப் பயன்படுத்தியிருத்தல்</u>

தருமொழிவடிவத்தைச் சொல்லுக்குச் சொல் நேரடி இணைகளைக்கொண்டு மொழிபெயர்க்காமல் மாற்றுச் சொற்களைப் பயன்படுத்தி மொழிபெயர்த்தலை இவ்வகையில் அடக்கலாம். சான்றாக

"பாஉஷயுடெ அபூர்ண்ணத ஏற்றவும் வெளிப்பெடுந்நத மிஸ்ற்றிக் அனுபூதிகள் பகர்த்தும் போழாணு. கல்பனாசக்தியுள்ள ப்றதிபாசாலிகள் அத்தரம் ஸந்தர்ப் பங்களில் ப்றதிரூபங்ஙளெ (ஸிம்பள்) அவலம்பிக்குந்நு. சங்கரக்குறுப்பு அங்ஙனெ யாணு செய்தது. ஸிம்போலிஸம் குறுப்பின்றே கவிதயுடெ ஒரு ஸாமான்ய லக்ஷண மாணு. மிஸ்ற்றிக் அனுபூதிகள் பகர்த்தும்போள் அதின்றெ ப்றாபல்யம் வளரெ வர்த்திக்குந்நு (மொழியின் போதாமை மிகுதியும் வெளிப்படுவது மிஸ்டிக் தன்மை களை வெளியிடும்போது தான். கற்பனை யாற்றலுள்ள உருவகக் கவிஞர்கள் அத்த கைய வேளைகளில் குறியீடுகளைப் பயன்படுத்துகிறார்கள். சங்கரக்குறுப்பும் அவ்வாறுதான் செய்துள்ளார். குறியீட்டாட்சி குறுப்பின் கவிதைகளுடைய ஒரு பொதுத்தன்மையாகும். மிஸ்டிக் தன்மைகளை வெளியிடும்போது அதன் சிறப்பு மிகவும் பெருகுகிறது)".

(பரமேசுவரன் நாயர், 1989:241)

என்பதை

"மிஸ்டிக் அனுபூதிகளைப் பேச முற்படும்போதுதான் மொழிக்கே பக்குவம் போதாது என்பது புலனாகிறது. அனுபூதியின் முன்னிலையில் சொல் முடமாகிப்போ கிறது. கற்பனை வளமுள்ள கவிஞர்கள் சொல்லின் வலிவின்மையை உணர்ந்தவர்கள். ஆதலின் குறியீட்டு உருவகங்களைக் (ஸிம்பல்கள்) கையாளுகின்றனர். சங்கரக்குறுப் பின் முயற்சியும் அவ்வழியே சென்றிருக்கிறது. இயல்பாகவே சங்கரக் குறுப்பின் கவிதை 'ஸிம்பாலிக்' இனத்தது. 'மிஸ்டிக்' அனுபூதிகளை வெளியிடும்போது இந்த 'ஸிம்பாலிஸம்' மேலும் தீவிரமாகிறது".

(இராமகோபிநாதன், 1984:279)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதில் "பாஷயுடெ அபூர்ணத ஏற்றவும் வெளிப்படுந்நது மிஸ்றிக் அநுபூதிகள் பகர்த்தும் போழாணு" என்பதை "மிஸ்டிக் அநுபூதிகளைப் பேச முற்படும்போது தான் மொழிக்கே பக்குவம் போதாது என்பது புலனாகிறது. அநுபூதியின் முன்னிலையில் சொல் முடமாகிப் போகிறது." என மாற்றிணைமூலம் நடைவிரிவுசெய்து மொழிபெயர்த்துள்ளார். மேலும் "ப்றதிபாசாலிகள்" என்பதை "கவிஞர்கள்" என்றும், "சங்கரக்குறுப்பு அங்ஙனெ யாணு செய்தது" என்பதை "சங்கரகுறுப்பின் முயற்சியும் அவ்வழியே சென்றிருக் கிறது" எனவும், "கருத்தடிப்படையில் மாற்று வடிவங்களைப்பயன்படுத்தி மொழி பெயர்ப்பை அமைத்துள்ளார். ஆனால் "ஸிம்போலிஸம் குறுப்பின்றெ கவிதயுடெ ஒரு ஸாமான்ய லக்ஷணமாணு" என்பதற்கு "இயல்பாகவே சங்கரக்குறுப்பின் கவிதை ஸிம்பாலிக் இனத்தது" எனச் செய்துள்ள மொழிபெயர்ப்பை "குறியீட்டாட்சி குறுப் பின் கவிதையுடைய பொதுப்பண்பாகும்" என அமைத்திருந்தால் இன்னும் தெளிவு ஏற்பட்டிருக்கும்.

4. சொற்களின் வரிசைமுறையை மாற்றியிருத்தல்

தருமொழித் தொடர்களில் காணப்படும் சொல்வரிசைமுறையை மாற்றிப் பெறுமொழித் தொடர்களை அமைத்துள்ளமையை இவ்வகையில் அடக்கலாம். சான்று களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. "பில்க்காலத்து கேரளத்தின்றெ பல பாகங்ஙளிலும் நிந்நு கண்டெடுத் திட்டுள்ள றோமன் நாணயங்ஙள் அதிபுராதனமாய வாணிஜ்யபந்தங்ஙளெ ஸூசிப் பிக்குந்ந அவசிஷ்டங்ஙளாணு (பிற்காலத்தில் கேரளத்தின் பல பகுதிகளிலி ருந்தும் கண்டெடுக்கப்பட்ட ரோம நாணயங்கள் மிகப்பழங்கால வாணிப உறவைச் சுட்டிக்காட்டும் சான்றுகளாகும்)."

(பரமேசுவரன்நாயர், 1989:1)

என்பதை இராமகோபிநாதன்

"பண்டைக்கால வாணிபத்தொடர்பின் நினைவுச் சின்னங்களாக கேரளத்தில் பலவிடங்களிலும் ரோமநாட்டு நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன"

(இராமகோபிநாதன் 1984:2)

என மொழிபெயர்த்துள்ளார். இங்கு

1. பில்க்காலத்து
2. கேரளத்தின்றெ பல பாகங்ஙளிலும் நிந்நு
3. கண்டெடுத்திட்டுள்ள
4. றோமன் நாணயங்ஙள்
5. அதிபுராதனமாய வாணிஜ்ய பந்தங்ஙளெ

சூசிப்பிக்குந்ந அவசிஉஷ்டங்ஙளாணு.

என உள்ள சொல்வரிசை முறையை

5. பண்டைக்கால வாணிபத்தொடர்பின் நினைவுச் சின்னங்களாக
4. ரோம நாட்டு நாணயங்கள்
1. சமீபத்தில்
3. கண்டெடுக்கப் பட்டிருக்கின்றன

என மாற்றி அமைத்துள்ளார். (இதில் 'சூசிப்பிக்குந்ந' என்ற குறிப்பு நீக்கப்பட்டுள்ளது).

2. "ஆகப்பாடெ பறயும்போள் ஸ்வானுபூதியுடெ அகாததயில் நிந்நு உருத்திரிஞ்ஞ மலயாளக்கவிதகளில் ப்ரதமகணனீயமாணு க்ருஉஷ்ணகாத (மொத்தத்தில் சொன்னால் சுய அனுபவத்தின் ஆழத்திலிருந்து உருப்பெற்ற மலையாளக்கவிதைகளில் முதல்வரிசையில் நிற்கிறது கிருஉஷ்ணகாதை)"

(பரமேசுவரன் நாயர், 1989:56)

என்பதை இராமகோபிநாதன்

"பொதுவாகப் பேசுங்கால் கிருஉ்ணகாதை சுவானுபூதியின் ஆழத்திலிருந்து உருவாகிவந்த மலையாளக் கவிதைகளுள் முதலிடம்பெறுவதற்குரியது".

(இராமகோபிநாதன், 1984:65)

என மொழிபெயர்த்துள்ளார். இங்கு தருமொழிவாக்கியத்தின் இறுதியில் காணப்படும் எழுவாயை முதலில் கொண்டுவந்து பெறுமொழி வாக்கியத்தை அமைத்துள்ளார்.

3. "கோ என்நர்த்தமுள்ள 'ஆ' என்ந பழய பதத்தில் நிந்நாணு 'ஆயன்' உண்டாயது (கோ என்ற பொருளுள்ள 'ஆ' என்ற பழைய சொல்லிலிருந்து 'ஆயன்' உருவானது)."

(இளங்குளம் குஞ்ஞன்பிள்ளை, 1967:23)

என்பதை ஜேசுதாசன்

"ஆயன் என்ற சொல் 'பசு' என்ற பொருளை உடைய 'ஆ' விலிருந்து வந்தது".

(ஜேசுதாசன், 1970:23)

என மொழிபெயர்த்துள்ளார். இங்கு தருமொழி வாக்கியத்தின் இறுதிப்பகுதி பெறுமொழி வாக்கியத்தின் முதற்பகுதியாக அமைந்துள்ளது.

5. வாக்கியங்களை இணைத்திருத்தல்

தருமொழி வடிவத்தில் காணப்படும் வெவ்வேறு வாக்கியங்களை ஒன்றாக இணைத்து பெறுமொழி வடிவத்தை அமைத்துள்ளமையை இவ்வகையில் அடக்கலாம். சான்றுகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. "மேல்ப்பறஞ்ஞ ப்ரத்யேகதகளில் நிந்நு ஒரு கார்யம் அவிஉஷ்த்யமாயி தெளியுந்நுண்டு. அதாயது மலயாளத்தினு தமிழில் நிந்நு வ்யதிரிக்தமாய ஒரு நில

பண்டேயுண்டாயிருந்நு (மேற்சொன்ன தனி இயல்புகளிலிருந்து ஒரு காரியம் மறக்கமுடியாத அளவிற்குத் தெளிவாகிறது. அதாவது மலையாளத்திற்கு தமிழிலிருந்து வேறுபட்ட ஒரு நிலை பண்டைக்காலம் முதலே ஏற்பட்டிருந்தது)."

(பரமேசுவரன் நாயர், 1989:7)

என்பதை இராமகோபிநாதன்

"மேலே குறிப்பிட்டிருக்கும் தனி இயல்புகளினால் மலையாளம் மிகப்பழைய காலத்திலிருந்தே வேறுபட்டு நின்றிருக்கிறது என்பது மறக்கமுடியாதபடி மெய்ப்பிக்கப் படுகிறது"

(இராமகோபிநாதன், 1984:7)

என மொழிபெயர்த்துள்ளார். இங்கு தருமொழி வடிவத்திலுள்ள இரண்டு வாக்கியங்களையும்

1. மேல்ப்பறஞ்ஞ ப்றத்யேகதகளில் நிந்நு

2. அதாயது மலயாளத்தினு தமிழில் நிந்நு வ்யதிரிக்தமாய ஒரு நில பண்டே யுண்டாயிருந்நு

3. ஒரு கார்யம் அனிஷேத்யமாயி தெளியுந்நுண்டு.

என்ற வரிசைமுறையில் அமைத்து ஒரே வாக்கியமாக பெருமொழிவடிவத்தை உருவாக்கியுள்ளார். மேலும் இவ்வாக்கியத்தில் "ப்றத்யேகதகளில் நிந்நு, அதாயது" என்பதை "தனி இயல்புகளினால்" எனவும், "மலயாளத்தினு தமிழில் நிந்நு வ்யதிரிக்தமாய ஒரு நில பண்டே யுண்டாயிருந்நு" என்பதை "மலையாளம் மிகப்பழைய காலத்திலிருந்தே வேறுபட்டு நின்றிருக்கிறது என்பது" எனவும், "ஒரு கார்யம் அனிஷேத்யமாயி தெளியுந்நுண்டு" என்பதை "மறக்கமுடியாதபடி மெய்ப்பிக்கப்படுகிறது" எனவும் மாற்றியமைத்துள்ளார்.

2. "சம்புக்கள் இந்நு ஏதாண்டு லுப்தப்ரசாரங்ஙளாயிட்டாணிரிக்குந்நது. எங்கிலும் மலயாளகவித்யுடெ வளர்ச்சயில் அவ வகிச்ச பங்கு விஸ்மரிக்கத்தக்கதல்ல (சம்புக்கள் இன்று ஏகதேசம் வழக்கிறந்த நிலையில் உள்ளன. என்றாலும் மலையாளக் கவிதையின் வளர்ச்சியில் அவை வகித்த பங்கு மறக்கத்தக்கதல்ல)."

(பரமேசுவரன் நாயர், 1989:61)

என்பதை இராமகோபிநாதன்

"தற்காலத்தில் சம்புக்களைப் படிப்பவர்கள் மிகச்சிலரேயாயினும் மலையாளக் கவிதையின் வளர்ச்சிக்கு அவை பெருமளவு துணைசெய்திருக்கின்றன என்பதை மறப்பதற்கில்லையே"

(இராமகோபிநாதன், 1984:72)

என மொழிபெயர்த்துள்ளார். இங்கு "சம்புக்கள் இந்நு ஏதாண்டு லுப்தப்ரசாரங்ஙளாயிட்டாணிரிக்குந்நது. எங்கிலும்" என்பனவற்றை "தற்காலத்தில் சம்புக்களைப் படிப்பவர்கள் மிகச்சிலரேயாயினும்" எனக் கருத்தடிப்படையிலும், "மலயாளக் கவிதயுடெ வளர்ச்சயில்அவ வகிச்ச பங்கு விஸ்மரிக்கத்தக்கதல்ல" என்பதை "மலையாளக் கவிதையின் வளர்ச்சிக்கு அவை பெருமளவு துணை செய்திருக்கின்றன என்பதை மறப்பதற்கில்லையே" என வடிவ அடிப்படையில் சற்றுவிரிவாகவும் கொண்டு இருவேறு வாக்கியங்களை ஒன்றாக இணைத்துள்ளார்.

6. வாக்கியங்களைப் பிரித்திருத்தல்

தருமொழிவடிவத்தில் காணப்படும் வாக்கியங்களைப் பிரித்து பெறுமொழிவடிவத்தை அமைத்துள்ளமையை இவ்வகையில் அடக்கலாம். சான்றுகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. "அந்நேய்க்கு கேரளத்தில் அதிவாஸம் உறப்பிச்சு கழிஞ்ஞிருந்ந நம்பூதிரிமாரும், நாட்டுகாராய நாகவர்க்கக்காருடெ இடயிலெ ப்ரபுக்கன்மாரு மடங்ஙிய க்ராமஸம்கடனகள் முகாந்தரமாயிருந்நு ராஜ்யபரணம் நடத்திவந்நது.

(அன்றைக்கு கேரளத்தில் நிலையாகக் குடியேறிய நம்பூதிரிகளும் நாட்டுமக்களாகிய நாகவர்க்கத்தினரின் இடையில் பிரபுக்களும் அடங்கிய கிராம அமைப்புகள் மூலமாயிருந்தது அரசாட்சி)."

(பரமேசுவரன்நாயர், 1989:2)

என்பதை இராமகோபிநாதன்

"இதற்கிடையில் நம்பூதிரிகள் கேரளநாட்டில் நிலையாகக்குடியேறிவிட்டனர். நம்பூதிரிகளையும் நாட்டின் பழங்குடி மக்களாகிய நாகப்பிரபுக்களையும் கொண்ட கிராம இணைப்புகள் வாயிலாக நாட்டின் ஆட்சி நடந்துவந்தது"

(இராமகோபிநாதன், 1984:2)

என மொழிபெயர்த்துள்ளார். இங்கு "அந்நேய்க்கு கேரளத்தில் அதிவாஸம் உறப்பிச்சு கழிஞ்ஞிருந்ந நம்பூதிரிமாரும்" என்பதை" இதற்கிடையில் நம்பூதிரிகள் கேரளநாட்டில் நிலையாகக் குடியேறிவிட்டனர்" என ஒரு வாக்கியமாகவும், "நம்பூதிரிமாரும் நாட்டுகாராய நாகவர்க்கக்காருடெ இடயிலெ ப்றபுக்கன்மாரு மடங்ஙிய க்றாம ஸங்கடனகள் முகாந்தரமாயிருந்நு ராஜ்யபரணம் நடத்திவந்நது" என்பதை "நம்பூதிரிகளையும் நாட்டின் பழங்குடி மக்களாகிய நாகப்பிரபுக்களையும் கொண்டகிராம இணைப்புகள் வாயிலாக நாட்டின் ஆட்சி நடந்துவந்தது" என மற்றொரு வாக்கியமாகவும் கொண்டு மொழிபெயர்ப்பை அமைத்துள்ளார்.

2. இங்ஙனெ நோக்கும்போள் சம்புஸாகித்யம் இந்நு ஒரு அடஞ்ஞ அத்யாயமாணெங்கில்த்தன்னெயும் அதிலெ ப்றவணதகள் கொண்டு உத்தேஜிதமாய ஒரு கவிதயாணு இந்நும் மலயாளிகள் ஆஸ்வதிக்குந்நதெந்நுள்ள பரமார்த்தம் விஸ்மரிக்கத்தக்கதல்ல (இப்படிப்பார்க்கும்போது சம்பு இலக்கியம் இன்று ஒரு நின்றுபோன அத்தியாயம் தான். என்றாலும் அதன் நிறைவால் முனைப்புள்ள ஒரு கவிதையைத்தான் இன்றும் மலையாளிகள் அனுபவிக்கிறார்கள் என்ற உண்மை மறக்கத்தக்கதல்ல)"

(பரமேசுவரன்நாயர், 1989:63)

என்பதை இராமகோபிநாதன்

"சம்பு இலக்கியம் என்னவோ முடிவுற்றதோர் அத்தியாயம் தான். ஆனாலுமே அதன் கை ஓங்கியிருந்த காலத்தின் இலக்கிய முனைப்புகள் தாம் இன்று மலையாளிகள் ரசிக்கிற கவிதைக்கு ஒளியும் இனிமையும் தந்திருக்கின்றன என்பதை மறப்பதற்கில்லை".

(இராமகோபிநாதன், 1984:73)

என மொழிபெயர்த்துள்ளார். இங்கு "இங்ஙனே நோக்கும்போள் சம்புஸாகித்யம் இந்து ஒரு அடஞ்ஞ அத்யாயமாணு" என்பதை "சம்பு இலக்கியம் என்னவோ முடிவுற்றதோர் அத்தியாயம்தான்" எனவும், "எங்கில்த்தன்னெயும் அதிலெ ப்ரவணதகள் கொண்டு உத்தேஜிதமாய ஒரு கவிதயாணு இந்நும் மலயாளிகள் ஆஸ்வதிக்குந்நதெந்நுள்ள பரமார்த்தம் விஸ்மரிக்கத்தக்கதல்ல" என்பதை "ஆனாலுமே அதன் கை ஓங்கியிருந்த காலத்தின் இலக்கிய முனைப்புகள்தாம் இன்று மலையாளிகள் ரசிக்கிற கவிதைக்கு ஒளியும் இனிமையும் தந்திருக்கின்றன என்பதை மறப்பதற்கில்லை" எனவும் இரண்டு வாக்கியங்களாகப் பிரித்து மொழிபெயர்ப்பை அமைத்துள்ளார்.

3. "ஜீவிதத்தின்றெ ஏற்றவும் கர்க்கசமாய வசங்ஙள் கண்டும் அனுபவிச்சும் மனஸ்சு தழம்பிச்ச ஒரு ஸ்த்ரீயில் ஸௌகுமார்யத்தின்றெ நேரிய அரிகுகள் குறெயொக்கெ மடங்ஙிப்போயேக்காவுந்நதாகயால் பர்த்தாவில் நிந்நு தனிக்குண்டாய அனுபவங்ஙளெ தெல்லெந்நு கர்க்கசமாயி ஸீத விமர்சிச்சிட்டுண்டெங்கில் அது உநந்தவ்யமாணு (வாழ்க்கையின் மிகவும் கடுமையான பக்கங்களைக்கண்டும் அனுபவித்தும் மனம் தழும் பேறிய ஒரு பெண்ணில் மென்மையின் நேரிய எல்லைகள் கொஞ்சமெல்லாம் மழுங்கிப் போயிருக்கலாமாகையால் கணவனிலிருந்து தனக்கேற்பட்ட அனுபவங்களை அப்படியே கடுமையாக சீதை விமர்சித்திருந்தால் அது மன்னிக்கத்தக்கதாகும்)"

(பரமேசுவரன் நாயர், 1989:194)

என்பதை இராமகோபிநாதன்

"வாழ்க்கையின் கடுமையை அனுபவித்துத் தழும்பேறிய மனத்தினள் சீதை. எழிலும் மென்மையும் சற்றுக் கசங்கிவிட்ட நிலையை எய்தியவளும் கூட கணவனால் தனக்கு நேர்ந்தவற்றை எண்ணிக்கடுமையாகவே பேசிவிடுகிறாள். புண்பட்டவளல்லவா! நாம் அவளை மன்னிக்கலாம் தான்".

(இராமகோபிநாதன், 1984:224)

என மொழிபெயர்த்துள்ளார். இங்கு "ஜீவிதத்தின்றெ ஏற்றவும் கர்க்கசமாய வசங்ஙள் கண்டும் அனுபவிச்சும் மனஸ்சு தழம்பிச்ச ஒரு ஸ்த்ரீயில்" என்பதை "வாழ்க்கையின் கடுமையை அனுபவித்துத் தழும்பேறிய மனத்தினள் சீதை" எனவும், "ஸௌகுமார்யத்தின்றெ நேரிய அரிகுகள் குறெயொக்கெ மடங்ஙிப் போயேக் காவுந்நதாகயால்" என்பதை "எழிலும் மென்மையும் சற்றுக் கசங்கிவிட்டநிலையை எய்தியவளும் கூட" எனவும், "பர்த்தாவில் நிந்நு தனிக்குண்டாய அனுபவங்ஙளெ தெல்லொந்நு கர்க்கசமாயி சீத விமர்சிச்சிட்டுண்டெங்கில்" என்பதை "கணவனால் தனக்கு நேர்ந்தவற்றை எண்ணிக்கடுமையாகவே பேசிவிடுகிறாள்" எனவும், "அது உக்ஷந்தவ்யமாணு" என்பதை "நாம் அவளை மன்னிக்கலாம்தான்" எனவும் நீண்ட தருமொழிவாக்கியத்தை நான்கு சிறுவாக்கியங்களாகப்பிரித்து பெறுமொழிவடிவத்தை அமைத்துள்ளார்.

7. எதிர்இணைகளைப் பயன்படுத்தியிருத்தல்

தருமொழிவடிவத்தில் காணப்படும் சொற்களுக்குஎதிர்மாறான சொற்களைப் பெறுமொழி வடிவத்தில் பயன்படுத்தி கருத்துமாற்றம் ஏற்படாத அளவில் மொழிபெயர்ப்பை அமைத்துள்ளமையை இவ்வகையில்அடக்கலாம். சான்றுகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. "ஜனகீய கானவ்ருத்தங்ஙளுடெ பரிணாமமாணு க்ருஷ்ணகாதயிலெ வ்ருத்தமெந்நு காணான் ப்ரயாஸமில்ல (பொதுமக்களுடைய பாடல்களில் உள்ள யாப்புக்களின் வளர்ச்சிதான் கிருஷ்ணகாதையில் காணப்படும் யாப்பு என்று புரிந்துகொள்ளச் சிரமமில்லை)"

(பரமேசுவரன் நாயர், 1989:52)

என்பதை இராமகோபிநாதன்

"சாமானிய மக்களிடையே வழங்கிவந்த பாட்டின்யாப்பே கிருஊ்ணகாதையின் பாவினமாக வளர்ந்து உருவாகியிருக்கிறது என்பது எளிதில் விளங்கும்"

(இராமகோபிநாதன், 1984:60)

என மொழிபெயர்த்துள்ளார். இங்கு "காணான் ப்ரயாஸமில்ல (புரிந்துகொள்ள சிரமமில்லை)" என்பதை "எளிதில் விளங்கும்" என எதிர் இணையைப் பயன்படுத்தி மொழிபெயர்த்துள்ளார்.

2. "அனுபவத்தில்பெட்ட பரிதிகளில் நிந்நெடுத்த கவிதாஸா மக்ரிகள் உப யோகிக்குந்ந ஏதொரு கவியுடெயும் கவிதயில் இதுபோலெ ஸ்வந்தம் பரிஸரங்ஙள் ப்றதிபலிக்காதிரிக்கயில்ல (அனுபவத்திற்குட்பட்ட எல்லைகளிலிருந்து எடுத்த கவிதைப் பொருளைப் பயன்படுத்தும் எந்த ஒரு கவிஞனுடைய கவிதையிலும் இதைப் போல் சொந்தச் சூழல்கள் வெளிப்படாதிருப்பதில்லை)."

(பரமேசுவரன் நாயர்,1989:55)

என்பதை இராமகோபிநாதன்

"தன்சொந்த அனுபவத்தின் எல்லைக்குட்பட்டவற்றையே கவிதைக்கும் பொருளாக்கிக்கொள்கிற எந்தக் கவிஞனும் தன் சூழலையே கவிதையில் பிரதிபலித்துக்காட்டுவது இயல்புதானே".

(இராமகோபிநாதன், 1984:64)

என மொழிபெயர்த்துள்ளார். இதில் "ப்றதிபலிக்காதிரிக்கயில்ல" என்பதை "பிரதிபலித்துக்காட்டுவது இயல்புதானே" என எதிர் இணையைப்பயன்படுத்தி மொழிபெயர்த்துள்ளார்.

5. அடிக்குறிப்புகள்

மலையாளத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள புனைகதையல்லாத உரை இலக்கியங்களில் காணப்படும் பெயர்கள் மற்றும் சிறப்புச் சொற்களை மொழிமாற்றுவதிலுள்ள சிக்கல்களைக் கருத்தில் கொண்டும், தருமொழிச் செய்திகளைப் பெறுமொழிவாசகர்களுக்குப் புரியவைக்கும் நோக்கிலும் மொழிபெயர்ப்பாளர்கள் அடிக்குறிப்புகளைப் பயன்படுத்தியுள்ளனர். இவற்றை 1. பெயர்விளக்கம் தருவன, 2. பொருள் விளக்கம் தருவன, 3. ஒத்த கருத்துக்களைக் குறிப்பன, 4. தருமொழிவடிவத்தின் திட்டவட்டமான பொருளைக்குறிப்பன, 5. மூலநூலாசிரியரின் கருத்தை மறுப்பன, 6. மூலநூலின் உள்ள தவற்றைக்காட்டுவன என வகைப்படுத்தி விளக்கலாம்.

1. பெயர்விளக்கம் தருவன

தருமொழிவடிவத்தில் காணப்படும் பெயர்கள் பற்றியக் குறிப்புகளைப் பெறுமொழிவாசகர்களுக்கு அறிமுகப்படுத்தும் நோக்கில் அமைக்கப்பட்டுள்ள அடிக்குறிப்புகளை இவ்வகையில் அடக்கலாம். சான்றுகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. "ஸி.வி.யுடெ க்ருதிகளில் காணுந்நதுபோலெ நீதிமத்க்ருதயமாய உபபாஉஷகருடெ ஸம்பத்தியோ இதிவ்ருத்தத்தின்றெ ஸம்கீர்ண்ணயோ ப்றதிருத்தத ஸ்ருஉஷ்டிக்குந்நுமில்ல. (ஸி.வி.யின் படைப்புகளில் காணப்படுவதுபோல் வகைவேறுபாடுகளுடைய வட்டாரவழக்குகளின் செல்வாக்கோ கதைப்பின்னல்களின் கலவையோ தடங்கல்களை ஏற்படுத்துவதில்லை".

(பெஞ்சமின், 1988:12)

என்பதை

"சி.வி.யின் படைப்புகளில் காணப்படுவதுபோல வெவ்வேறு வித வட்டார வழக்குகளின் ஆட்சியோ கதைப்பின்னல்களின் கலவையோ தடங்கல்களை ஏற்படுத் துவதுமில்லை".

(டி. தேவதாஸ், சி. நாச்சிமுத்து, 1990:2)

என மொழிபெயர்த்துவிட்டு பெறுமொழி வாசகர்களுக்கு சி.வி.யையும் அவரது படைப்புகளையும் அறிமுகப்படுத்தும் நோக்கில் "சி.வி. ராமன்பிள்ளை (1958-1922) என்பவர் சிறந்த நாடகப்பிரியரும் நடிகருமாவார். மார்த்தாண்டவர்மா, ராமராஜபஉறதூர், தர்மராஜா என்பன இவருடைய வரலாற்று நாவல்கள். இவற்றைப் பின்னர் நாடகங்களாக்கி நடித்துக்காட்டி னார்" (டி. தேவதாஸ், சி. நாச்சிமுத்து, 1990:6) என அடிக்குறிப்பு விளக்கம் தந்துள்ளனர்.

2. "ஆசான்றெ நிரூபணங்ஙள் எந்ந க்ரந்தத்தில் அந்யாசயங்ஙள் ஆதானம் செய்யுந்நதினெப்பற்றி விசதீகரிச்சு காணுந்நு. (ஆசானுடைய நிருபணங்கள் என்ற நூலில் வேற்றுக் கருத்துக்களை ஏற்றுக்கொள்வதைப் பற்றி விளக்கப்பட்டிருப்பதைக் காணலாம்)"

(டி. பாஸ்கரன், 1989:78)

என்பதை

"ஆசானின் நிருபணங்கள் என்ற நூலில் பிற கருத்துக்களை வாங்கிக்கொள்வதைப் பற்றி விளக்கப்பட்டிருப்பதைக் காணலாம்".

(டி. தேவதாஸ், சி. நாச்சிமுத்து, 1990 அ:78)

என மொழிபெயர்த்துவிட்டு ஆசானின் நிரூபணங்கள் என்ற நூலுக்கு விளக்கமாக, "குமாரனாசான் பிற ஆசிரியர்களின் நூல்களைத் திறனாய்வு செய்து எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு ஆசானின் நிரூபணங்கள் (ஆசானின் திறனாய்வுக் கட்டுரைகள்). வள்ளத்தோள் நாராயணமேனோனின் சித்திரயோகம் பற்றிய ஆய்வு (நிரூபணம்) ஆசானின் திறனாய்வுகளில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்" (டி. தேவதாஸ், சி. நாச்சிமுத்து, 1990 அ:88) என அடிக்குறிப்பைச் சேர்த்துள்ளனர்.

2. பொருள்விளக்கம் தருவன

தருமொழிச் சொல்லுக்கு இணையான சொல் பெறுமொழியில் இல்லாதபோது அவற்றை அப்படியே மொழிபெயர்ப்பில் பயன்படுத்திவிட்டு அதன் பொருளை அடிக்குறிப்பில் தந்துள்ளமையை இவ்வகையில் அடக்கலாம். சான்றுகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. "வக்கீலன்மார், திருமுல்ப்பாடன்மார் முதலாய சப்தங்ஙளில் வக்கீல்மார், திருமுல்ப்பாடுமார் எந்நொக்கெ உச்சரிக்குந்நது விஷமமாகயால் 'அன்' எந்ந புல்லிம்க ப்ரத்யம் சேர்த்திரிக்குந்நு (வக்கீலன்மார், திருமுல்ப்பாடன்மார் முதலான சொற்களை வக்கீல்மார், திருமுல்ப்பாடுமார் என்றெல்லாம் உச்சரிப்பது கடினமாகையால் 'அன்' என்ற ஆண்பால் விகுதியைச் சேர்த்திருக்கின்றனர்)."

(இராஜராஜவர்மா, 1988:117)

என்பதை

"வக்கீலன்மார், திருமுல்ப்பாடன்மார் முதலிய சொற்களை வக்கீல்மார், திருமுல்ப்பாடுமார் என ஒலிப்பது இடர்படுமாகலின் 'அன்' என்ற ஆண்பால் விகுதி சேர்க்கப்படுகிறது"

(இளையபெருமாள், 1977:138)

என மொழிபெயர்த்துவிட்டு "திருமுல்ப்பாடன்மார்" என்பதற்கு விளக்கமாக "திருமுல்ப்பாடு கேரளத்திலுள்ள ஒரு க்ஷத்திரியசாதி" (இளையபெருமாள், 1977:138) என அடிக்குறிப்பிட்டுள்ளார்.

2. "'ம' ப்ரஸித்தீகரணங்ஙள் சுட்டுக்கரிக்கப்பெட்டப்போள் அதினனுகூலமாயும் ப்ரதிகூலமாயும் தாராளம் அபிப்ராயங்ஙள் பத்ராதிபர்க்குள்ள கத்துகளுடெ

ரூபத்தில் ப்ரத்யக்ஷப்பெடுகயுண்டாயி ('ம' வெளியீடுகள் சுட்டெரிக்கப்பட்டபோது அதற்கு ஆதரவாகவும் எதிராகவும் ஏராளம் கருத்துக்கள் ஆசிரியர் கடிதங்களின் வடிவில் வெளிவந்தன)."

(பெஞ்சமின், 1988:11-12)

என்பதை

"'ம' வெளியீடுகளைத் தீக்கொளுத்தியபோது அதற்கு ஆதரவாகவும் எதிராகவும் வாசகர் கடிதங்களின் வடிவில் ஏராளமான கருத்துக்கள் வெளிவந்தன".

(டி. தேவதாஸ், சி. நாச்சிமுத்து, 1990:2)

என மொழிபெயர்த்துவிட்டு "'ம' வெளியீடுகள் என்பன பெருவாரியான மக்களைக் கவருகிறநோக்கில் வெளியிடப்படும் இதழ்களாகும். மங்களம், மனோரம்மா, மனோராஜ்யம் முதலியன இதிலடங்கும். இவ்விதழ்களின் பெயரின் முதலெழுத்துக் களைக் கொண்டே 'ம' வெளியீடுகள் என்ற பெயர் ஏற்பட்டது. தமிழில் வெளி வரும் தினமலர் வாரமலர், ராணி, தேவி, குமுதம், குங்குமம் போன்றவை இவை" (டி. தேவதாஸ், சி. நாச்சிமுத்து, 1990:6) என அடிக்குறிப்பிட்டுள்ளனர்.

3. <u>ஒத்த கருத்துக்களைக் குறிப்பன</u>

தருமொழிவடிவத்தை மொழிபெயர்த்துவிட்டு அதற்கு இணையான கருத்துக்கள் வேறு நூல்களில் காணப்படின் அவற்றை அடிக்குறிப்பாகத் தந்துள்ளமையை இவ்வகையில் அடக்கலாம். சான்றாக,

"முற்றுவினகள்க்கு ஸம்ஸ்க்றுதத்திலில்லாத்ததாய லிம்கபேதம் ஒந்நு விஶேஷஉஷால் உண்டு" (வினை முற்றுகளுக்கு வடமொழியில் இல்லாத பால்வேறுபாடு ஒன்று சிறப்பாக உண்டு)."

(இராஜராஜவர்மா, 1988:9)

என்பதை

"முற்றுவினைகளில் ஸம்ஸ்கிருதத்தில் இல்லாத விகுதிவேறுபாடு திராவிட மொழிகளில் சிறப்பாக உள்ளது".

(இணையபெருமாள், 1977:14)

என மொழிபெயர்த்துவிட்டு "திணைபால் உணர்த்தும் விகுதி தெய்வமொழிக்கு இல்லை (பிர.49)" (இளையபெருமாள், 1977:14) என அடிக்குறிப்பைச் சேர்த்துள்ளதைக் குறிப்பிடலாம்.

4. <u>தருமொழிவடிவத்தின் திட்டவட்டமான பொருளைக் குறிப்பன</u>

தருமொழிவடிவத்தை அப்படியே மொழிபெயர்த்துவிட்டுஅடிக்குறிப்புகளின் மூலம் அதன் நேரடிப் பொருளைச் சுட்டிக்காட்டுதலை இவ்வகையில் அடக்கலாம். சான்றாக,

ஸ்வரம் வ்யஞ்ஜனத்தோடு சேரும்போள் உள்ளது ஸ்வரவ்யஞ்ஜனசந்தி (உயிர் மெய்யோடு சேரும்போது ஏற்படுவது உயிர்மெய்புணர்ச்சி)"

(இராஜராஜவர்மா, 1988:84)

என்பதை

"உயிர் மெய்யோடு புணரும்போது அமைவது உயிர் மெய்புணர்ச்சி"

(இளையபெருமாள், 1977:101)

என மொழிபெயர்த்துவிட்டு, தமிழில் உயிர்மெய் என்ற எழுத்துப்பாகுபாடு இருப்பதைக் கருத்தில் கொண்டு "உயிர்மெய்யன்று, உயிரோடு மெய்புணரும் புணர்ச்சி" (இளையபெருமாள், 1977:101) என அடிக்குறிப்பிட்டுள்ளதைக் குறிப்பிடலாம்.

5. <u>மூலநூலாசிரியரின் கருத்தை மறுப்பன</u>

தருமொழி ஆசிரியரின் கருத்தை அப்படியே மொழிபெயர்த்துவிட்டு அதனை மறுத்துக்கூறும் நோக்கில் அடிக்குறிப்பிட்டுள்ளமையை இவ்வகையில் அடக்கலாம். சான்றுகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1."உதாத்தாதிஸ்வரபேதம் திராவிடத்தில் ஒரிக்கலும் உண்டாயிருந்நில்ல (உதாத்தம் முதலான சுரவேறுபாடு திராவிட மொழிகளில் ஒரு போதும் காணப்படவில்லை)"

(இராஜராஜவர்மா, 1988:10)

என்பதை

"உதாத்தம் முதலிய சுரபேதம் திராவிட மொழிகளில் ஒருக்காலும் இருந்ததில்லை".

(இளையபெருமாள், 1977:14)

என மொழிபெயர்த்துவிட்டு அதற்குரிய மறுப்புக்கருத்தை "எடுத்தல், படுத்தல், நலிதல் ஆகிய சுரபேதங்கள் (தொல், எழுத்து, 441) உரையாசிரியர்களால் குறிக்கப்படுகின்றன" (இளையபெருமாள், 1977:14) என அடிக்குறிப் பாக்கியுள்ளார்.

3. "பதிற்றுப்பத்தில் ப்றலம்பிச்சிருந்ந ப்றபுக்கன்மாரும் ராஜாக்கன்மாரும் மருமக்கத்தாயம் அனுஷ்டிச்சிருந்நவராணெந்நு அக்றந்தத்தில் தன்னெ ப்றதிபாதிச்சிட்டுண்டு (பதிற்றுப்பத்தில் புகழப்பட்டிருக்கிற பிரபுக்களும் அரசர்களும் மருமக்கள்தாயத்தை ஏற்றுக்கொண்டிருந்தவர் தானென்று அந்நூலிலேயே கூறப்பட்டுள்ளது)."

(இராஜராஜவர்மா, 1988:14-15)

என்பதை

"பதிற்றுப்பத்தில் புகழப்படும் வள்ளல்களும் அரசர்களும் மருமக்கள் தாயம் அனுசரித்ததாக அந்நூலிலேயே கூறப்பட்டுள்ளது"

(இளையபெருமாள், 1977:18)

என மொழிபெயர்த்துவிட்டு, அதற்குரிய மறுப்புக்கருத்தை "பேராசிரியர் மு. இராகவையங்கார் முதலியோர் இக்கருத்தை மறுத்துப் பதிற்றுப்பத்தில் கூறப்படுவது மக்கள் வழியே என நிறுவுகின்றனர்' (இளையபெருமாள், 1977:18) என அடிக்குறிப்பில் சேர்த்துள்ளார்.

6. மூலநூலில் உள்ள தவற்றைக்காட்டுவன

தருமொழிவடிவத்தை அப்படியே மொழிபெயர்த்துவிட்டு அதிலுள்ள தவறுக ளைச் சுட்டிக்காட்டும் நோக்கில் அடிக்குறிப்பிட்டுள்ளமையை இவ்வகையில் அடக்கலாம்.

சான்றுகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. "தொல்காப்பியம் எந்ந தமிழ்க்றந்தப்றகாரம் ஸம்ஸ்க்றுதத்தில் கேரளம் எந்நு பறஞ்ஞுவருந்ந சேரராஜ்யத்திநு வேணாடு, பூழிநாடு, கற்கநாடு, சீதநாடு, குட்டநாடு, குடநாடு, மலயமநாடு எந்நு ஏழுபாகங்ஙள் உண்டாயிருந்நு (தொல்காப்பியம் என்ற தமிழ்நூல்படி சமஸ்கிருதத்தில் கேரளம் என்று சொல்லப்பட்டுவரும் சேரநாட்டிற்கு வேணாடு, பூழிநாடு, கற்கநாடு, சீதநாடு, குட்டநாடு, குடநாடு, மலயமநாடு என்று ஏழு பகுதிகள் இருந்தன)."

(இராஜராஜவர்மா, 1988:2)

என்பதை

"வடமொழியில் கேரளம் என்று சொல்லப்பட்டுவரும் சேரநாட்டில் தொல்காப்பியம் என்ற தமிழ்இலக்கணப்படி வேணாடு, பூழிநாடு, கற்கநாடு, சீதநாடு, குட்டநாடு, குடநாடு, மலயமாநாடு என்ற ஏழுபகுதிகள் இருந்தன".

(இளையபெருமாள், 1977:5)

என மொழிபெயர்த்துவிட்டு மூலவடிவத்தில் காணப்படும் தவற்றைச் சுட்டிக்காட்டும் முகமாக, "தொல்காப்பியத்தில் (சொல்.400) 'பன்னிரு நிலத்தும்' எனவே குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பெயர்களெல்லாம் உரையாசிரியர்கள் குறிப்பிடுவன" (இளையபெருமாள், 1977:5) என அடிக்குறிப்பிட்டுள்ளார்.

2. "அ, இ, எ எந்ந விவேக ஸர்வநாமங்ஙள்க்கு சுட்டெழுத்து எந்நு தமிழர் பேர்செய்திரிக்குந்நு (அ,இ,எ என்ற சுட்டுப்பதிற்பெயர்களுக்குச் சுட்டெழுத்து என்ற தமிழர் பெயரிட்டிருக்கிறார்கள்)"

(இராஜராஜவர்மா, 1988:90)

என்பதை

"அ,இ,எ என்ற சுட்டுப்பெயர்களுக்கு சுட்டெழுத்து என்று தமிழில் பெய ரிடப்பட்டிருக்கிறது"

(இளையபெருமாள், 1977:107)

என மொழிபெயர்த்துள்ளதோடு "எகரம் சுட்டெழுத்தன்று வினா எழுத்து" (இளையபெருமாள், 1977:107) என மூலவடிவத்தில் காணப்படும் தவற்றைச் சுட்டிக்காட்டி அடிக்குறிப்பை அமைத்துள்ளார்.

மொழிபெயர்ப்பின்போது சிறப்பாக அடிக்குறிப்பை அமைத்தவர் என்ற பெருமைக் குரியவராக பேராசிரியர் மா. இளையபெருமாளைக் குறிப்பிட லாம். மேலும் கி. நாச்சிமுத்து, டி. தேவதாஸ் ஆகியவர்களும் தேவைக்கேற்ப அடிக்குறிப்புகளைப் பயன்படுத்தி மொழிபெயர்ப்பை அமைத்துள்ளவர். இவை அனைத்தும் எதிர்கால மொழிபெயர்ப்பாளர் மாதிரியாகக் கொள்ளத்தக்கனவா கும்.

6. குறைகள்

மலையாளத்திலிருந்து தமிழில் புனைகதையல்லாத உரைநடை இலக்கியங்களை அவற்றின் கருத்தில் அடிப்படையில் பெரும்பாலும் சமமான இணைகளால் மொழி மாற்றியுள்ளனர். ஆனால் ஒருசிலவிடங்களில் மொழிபெயர்ப்பு தருமொழி வடிவத் திலிருந்து மாறுபட்டுச் செல்வதாகவும் உள்ளது. இவற்றை 1. கருத்துக்களை மிகுதியாகச் சேர்த்திருத்தல், 2. கருத்துக்களை நீக்கியிருத்தல், 3. தவறுபட மொழிபெயர்த்திருத்தல் என வகைப்படுத்திவிளக்கலாம்.

1. கருத்துக்களை மிகுதியாகச் சேர்த்திருத்தல்/கருத்துக்களைத் தெளிவுபடுத்தியிருத்தல்

தருமொழிவடிவத்தில் காணப்படுவதைவிடவும் கருத்துக்களை மிகுதியாகச்சேர்த்து பெறுமொழிவடிவத்தைத் தெளிவுபடுத்தி அமைத்துள்ளமையை இவ்வகையில் அடக்கலாம். சான்றாக,

"அசோக சாஸனங்களில் தக்ஷிணேந்த்யயிலெ ராஜ்யங்ஙளுடெ கூட்டத்தில் கேரளத்தெப்பற்றி ப்ரத்யேகம் ஸூசிப்பிச்சிரிக்குந்நு (அசோகருடைய கல்வெட்டுகளில் தென்னிந்திய நாடுகளின் வரிசையில் கேரளத்தைப்பற்றிச் சிறப்பித்து சொல்லப்பட்டுள்ளது)".

(பரமேசுவரன் நாயர், 1989:1)

என்பதை இராமகோபிநாதன்

"அசோகருடைய கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் தென்னிந்திய நாடுகளின் வரிசையில் கேரளம் சிறப்பிடம் பெறுகிறது"

(இராமகோபிநாதன், 1984:1)

என மொழிபெயர்த்துள்ளார். இங்கு "குறிப்பிடப்பட்டிருக்கும்" என்ற பொருட் கூறை மிகுதியாகச் சேர்த்துக் கருத்தை தெளிவுபடுத்தியுள்ளார்.

2. கருத்துக்களை நீக்கியிருத்தல்

தருமொழிவடிவத்தில் காணப்படும் கருத்துக்கள் சிலவற்றை நீக்கிவிட்டு பெறு மொழிவடிவத்தை அமைத்தலை இவ்வகையில் அடக்கலாம். சான்றாக,

1. "வளரெ ப்ராசீனமாய காலம் முதல்க்கே கேரளம் விதேச வாணிஜ்யத்தில் மிகச்சுநிந்நிருந்நு. ஈஜிப்த், அறேப்ய, சைன, பாபிலோண், றோம் முதலாய புராதனகாலத்தெ எல்லா ப்ரதான ராஜ்யங்ஙளும் கேரளவுமாயி வாணிஜ்யபரமாய ஸம்பர்க்கம் புலர்த்திவந்நு (மிகப் பழங்காலம் முதலே கேரளம் அயல்நாட்டு வாணிபத்தில் தலைசிறந்து விளங்கியது. எகிப்து, அரேபிய, சைனா, பாபிலோன், ரோம் முதலான பழங்காலத்திலுள்ள எல்லா முக்கிய நாடுகளும் கேரளத்தோடு வாணிகநோக்கிலான உறவைக் கொண்டிருந்தன)".

(பரமேசுவரன் நாயர், 1989:1)

என்பதை இராமகோபிநாதன்

"மிகப்பழைய காலத்திலிருந்தே கேரளம் வாணிபத் துறையில் மேம்பாடு அடைந்திருந்தது. பழங்காலத்தில் சிறப்பெய்தியிருந்த நாடுகளான எகிப்து, அரேபியா, சீனா, பாபிலோனியா முதலிய நாடுகள் யாவும் கேரளநாட்டுடன் வாணிப உறவைப் பெருக்கி வந்திருக்கின்றன"

(இராமகோபிநாதன், 1984:1)

என மொழிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இங்கு "விதேச வாணிஜ்யத்தில்" என்பதை "வாணிபத்துறையில்" என மொழிபெயர்த்து அயல்நாட்டு வாணிபம் பற்றிய குறிப்பை நீக்கியுள்ளார். மேலும் கேரளத்தோடு வாணிக உறவு கொண்டிருந்த நாடுகளின் பட்டியலில் இருந்து ரோமை நீக்கியுள்ளார்.

3. தவறுபட மொழிபெயர்த்திருத்தல்

தருமொழிவடிவத்தின் அமைப்பிலிருந்து விலகிப் பெறுமொழிவடிவத்தைத் தவறுதோன்றும்படியாக மொழிபெயர்த்துள்ளமையை இவ்வகையில் அடக்கலாம். மலையாளத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள புனைகதையல்லாத உரைநடை இலக்கியங்களின் மொழிபெயர்ப்புகள் பெரும்பாலும் கருத்தளவில் சமமானதாகவே உள்ளன. இருப்பினும் பி.கெ. பரமேசுவரன் நாயரின் மலையாள இலக்கியவரலாறு" என்ற நூலில் காணப்படும் சான்றுச்செய்யுள்களுக்கு இராமகோபிநாதன் செய்துள்ள ஒலிபெயர்ப்பில் ஒருசில குறைகளும் காணப்படுகின்றன. சான்றாக,

"ஒருத்தரெக்கொண்டுபகாரமில்லென்
நொரிக்கலும் தோழி நினைக்காலாகா
உருட்டி வைக்கும் பித்ரு பிண்டமுண்மா
நொரிக்கலக்காகனெ வேணமல்லோ"

(பரமேசுவரன் நாயர்,1989:32)

என்பதை இராமகோபிநாதன்

"ஒருத்தரைக் கொண்டு பகாரமில்லெந்
நொரிக்கலும் தோழி நினய்க்கொலாகாண்
உருட்டி வெய்க்கும் பித்ரு பிண்முன்பா
நொரிய்க்க லக்காகனெ வேணமல்லோ"

(இராமகோபிநாதன், 1984:35)

என ஒலிபெயர்த்துள்ளதைக் குறிப்பிடலாம். இதில் "ஒருத்தரெ" என்பதை "ஒருத்தரை" எனவும், 'நினைக்காலாகாண்' என்பதில் உள்ள இடை அகரத்தை ஒகரமாக்கி 'நினய்க் கொலாகாண்' எனவும் 'வைக்கும்' என்பதில் முதல் அகரத்தை எகரமாக்கி 'வெய்க்கும்' எனவும், 'முண்மா' என்பதில் ஈற்று மகரத்தைப் பகரமாக்கி 'முண்பா' எனவும் தருமொழி வடிவத்திலிருந்து விலகி ஒலிமாற்றம் செய்துள்ளார். இத்தகைய குறைகளை மொழிபெயர்ப்பாளர்கள் தவிர்த்திருக்க வேண்டும்.

தொகுப்புரை
----

1. மலையாளத்திலிருந்து தமிழில் இலக்கணம், திறனாய்வு, வரலாறு, சமயம் போன்ற துறைகளைச்சார்ந்த புனைகதையல்லாத உரைநடை இலக்கியங்கள் மொழிபெயர்ப்பாகியுள்ளன. இவற்றின் மொழிபெயர்ப்பின் தன்மைகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. இலக்கணம், திறனாய்வு, வரலாறு ஆகிய வகைகளைச் சார்ந்த இலக்கியங்களுக்கு செய்யப்பட்டுள்ள மொழிபெயர்ப்புகள் மூலத்திற்கு சமமானதாகவும் தருமொழிவடிவத்தில் காணப்படும் கருத்தை அப்படியே பெறுமொழியில் மாற்றித்தந்துள்ளனவாகவும் உள்ளன. ஆனால் மலையாள இலக்கியவரலாற்றிற்கு இராமகோபிநாதன் செய்துள்ள மொழிபெயர்ப்பு பெறுமொழிக்கேற்ப நடையமைப்பைப் பெற்றதாக உள்ளது.

2. புனைகதையல்லாத உரைநடை இலக்கியங்களில் குறிப்பாக கேரள பாணியத்தில் காணப்படும் கலைச்சொற்களை மா. இளையபெருமாள் நேரடி இணைகளாலும், கடன் மொழிபெயர்ப்பாகவும், ஒலிபெயர்ப்பு செய்தும், மொழிமாற்றியுள்ளார். மேலும் சொற்களின் ஒரு பகுதியை ஒலிபெயர்த்தும் மற்றொரு பகுதியை மொழிபெயர்த்தும் கலவைவடிவாக அமைத்துள்ள கலைச்சொற்களும் இளையபெருமாளின் மொழிபெயர்ப்பில் காணப்படுகின்றன.

3. தருமொழிவடிவத்தின் மொழிநடையை விரிவாக்குதல், செறிவாக்குதல், மாற்றிணைகளைப் பயன்படுத்துதல், சொற்களின் வரிசைமுறையை மாற்றுதல், வாக்கியங்களை ஒன்றாக இணைத்தல், வாக்கியங்களை வெவ்வேறாகப் பிரித்தல், எதிர் இணைகளைப் பயன்படுத்துதல் போன்ற வெவ்வேறு நிலைகளில் மாற்றிப் பெறுமொழி வடிவத்தை அமைத்துள்ளனர்.

4. புனைகதையல்லாத உரைநடை இலக்கிய மொழிபெயர்ப்புகளில் தருமொழிவடிவத்தின் கருத்துக்களை விளக்க பயன்படுத்தியுள்ள அடிக்குறிப்புகள் பெயர் விளக்கம் தருதல், பொருள் விளக்கம் தருதல், ஒத்த கருத்துக்களைக் குறித்தல், தருமொழிவடிவத்தின் திட்டவட்டமான பொருளைத்தருதல், மூல நூலாசிரியரின் கருத்தை மறுத்தல், தருமொழிவடிவத்திலுள்ள தவற்றைச் சுட்டுதல் போன்ற தன்மைகளைப் பெற்றவையாக உள்ளன.

5. இம்மொழிபெயர்ப்புகளில் கருத்துக்களைச்சேர்த்திருத்தல், கருத்துக்களை நீக்கியிருத்தல், தவறுபட மொழிபெயர்த்திருத்தல் போன்ற குறைகளும் காணப்படுகின்றன.

2. மலையாளத்திலிருந்து தமிழுக்கு புனைகதையல்லாத உரைநடை இலக்கியங்களை மொழிபெயர்ப்பு செய்வதுபற்றியப் பரிந்துரைகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. உரைநடை இலக்கிய வளர்ச்சி மேனாட்டாரின் வருகையைத் தொடர்ந்து தான் தமிழைப்போலவே மலையாளத்திலும் ஏற்படத்தொடங்கியது. இருப்பினும் அறிவியல் இலக்கியத்துறையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி மலையாளத்தில் இன்னும் ஏற்படவில்லை. ஆயினும் மேனாட்டுப் பாணியிலான திறனாய்வு இலக்கியங்கள் மிகுதியாக வளர்ந்துள்ளன. மேலும் இசங்களின் தாக்கத்தாலான திறனாய்வு இலக்கியங்களும் மிகுதியாக உள்ளன. இவற்றில் சிலவற்றையாவது மொழி பெயர்ப்பது தமிழ் இலக்கிய வளர்ச்சியிலும் சிந்தனைப்போக்குகளிலும் புத்தாக்கமாக அமையும்.

2. மலையாளத்திலிருந்து தமிழில் புனைகதையல்லாத உரைநடை இலக்கியங்களின் மொழிபெயர்ப்புப்பணியில் இலக்கண நூல்கள் தவிர பிற அனைத்தும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளன. இவை இன்னும் பரவலாக பிற துறைகளிலும் செய்யப்படுமானால் நூல் உருவாக்கத்தில் தமிழின் நிலையை ஒப்பீட்டு நோக்கில் சரிவர மதிப்பீடு செய்ய முடியும்.

முடிவுரை

முடிவுரை

0. தமிழில் மொழிபெயர்ப்புப்பணி மிகப்பழங்காலத்திலிருந்தே நடைபெற்றுவருகிறது. இதனால் பிறமொழி நூல்கள் பல தமிழ்வடிவம் பெற்றுள்ளன. இவற்றில் "தமிழ் மொழிபெயர்ப்புகள்: மலையாளத்திலிருந்து தமிழுக்குச் செய்யப்பட்ட மொழிபெயர்ப்புகள் பற்றிய சிறப்பாய்வு" என்னும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வு மொழிபெயர்ப்புக் கொள்கைகள், தமிழ்மொழிபெயர்ப்பின் வரலாறு, மலையாளமும் தமிழும், மலையாளத்திலிருந்து தமிழுக்குச் செய்யப்பட்ட கவிதை, புனைகதை, புனைகதையல்லாத உரைநடை ஆகிய மொழிபெயர்ப்புகளின் மதிப்பீடு என்ற நிலைகளில் அமைந்துள்ளது. இதன்மூலம் பெற்ற உண்மைகளை 1. முடிவுகள், 2. தமிழ்மொழிபெயர்ப்பின் வளர்ச்சிக்கான பரிந்துரைகள் என வகைப்படுத்தலாம்.

1. முடிவுகள்

மொழிபெயர்ப்பு பற்றி மூன்று பகுதிகளாக அமைந்த இவ்வாய்வின் மூலம் பெற்ற முடிவுகளை பின்வருமாறு வரிசைப்படுத்தலாம்.

1. பகுதி - ஒன்று

1. மொழிபெயர்ப்புகள் மூலத்தின் வடிவம், கருத்து ஆகியவைகளுடன் அதன் உணர்வோட்டத்தையும் பெற்றதாய் அமையவேண்டும்.

2. மொழிபெயர்ப்பின் வகைவேறுபாடுகளை வரையறை செய்வது எளிய ஒன்றல்ல. ஏனெனில் அவை மொழிபெயர்ப்பைச் செய்கின்ற முறையைப் பொறுத் தும், மொழிபெயர்ப்பின் தேவையைப் பொறுத்தும் மாறுபட்டு அமைபவை ஆகும்.

3. மொழிபெயர்ப்புக் கோட்பாடுகளைத் தமிழில் மரபிலக்கண நூலாரும், மேனாட்டில் மொழியியலாரும் உருவாக்கியுள்ளனர். அவற்றில் தமிழில் மொழி பெயர்ப்பு முறை பண்டைக்காலத்தில் பிறமொழிச் சொற்களையும் கருத்துக்களை யும் கடனாகப் பயன்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டும், இடைக்காலத்தில் புராணங்கள், காப்பியங்கள் போன்றவற்றை தொகுத்தல், விரித்தல், தொகை விரித்தல், சார்ந்தமைத்தல் போன்ற நிலைகளின்படியும், வேதம், ஆகமம், நியாயம், தர்க்கம் போன்ற நூல்களை நேரடிப்பெயர்ப்பாக அமைத்தலை அடிப்படையாகக்கொண்டும் அமைந்தன. ஆனால் மேனாட்டு மொழிபெயர்ப்புமுறை பண்டைக்காலத்தில் கருத்துக்கும் நடைக்கும் சிறப்பு கொடுத்து மொழிபெயர்ப்பை அமைத்தலை அடிப்படையாகக்கொண்டும், தற்காலத்தில் பெறுமொழிவாசகர்களின் உணர்வு வெளிப்பாட்டைக் கருத்தில் கொண்டு மொழிபெயர்ப்பை அமைத்தலை அடிப் படையாகக் கொண்டும் அமைந்துள்ளன. மேனாட்டாரின் தற்கால மொழி பெயர்ப்பு முறை தற்பொழுது தமிழிலும் பின்பற்றப்பட்டு வருகிறது.

4. மொழிபெயர்ப்பை பெறுமொழி வாசகர்களின் புரிதலைக் கருத்தில் கொண்டு சொல்லைவிட அதுவரும் சூழலுக்கும் நேரிணைகளைவிட மாற்றிணைகளுக்கும் எழுத்துமொழியைவிட பேச்சுமொழிக்கும், மரபுச்சொற்களைவிட சமகாலசொற் களுக்கும் முன்னுரிமை கொடுத்து அமைக்கவேண்டும். ஆனால் மொழிபெயர்ப்பு என்பது எளிதில் புரியக்கூடியதாக மட்டுமல்லாமல் மூலத்தில் காணப்படும் சிறப் பாற்றலை மீட்டுத்தருவதாயும் அமையவேண்டும்.

